2

46.

உ

சிவமயம்.

சைவாகம மிருபத்தெட்டினுள்

உச-வது,

சந்தாந சர்வோத்தமத்தின்

உபபேதம் பதினொன்றினுள்

அ-வது,

# சிவதருமோத்தரம்

வடமொழியினின்றும்

மறைஞானசம்பந்தநாயனார்

மொழிபெயர்த்தது

---

இதற்குரையுடன்

திரிசிரபுரம் புத்தக வியாபாரம்

ம-ா-ா-ஸ்ரீ,

சு. சுப்பராயபிள்ளையவர்கள்

---

திருமயிலை வித்வான்

சண்முகம்பிள்ளை அவர்களைக் கொண்டு

பார்வையிட்டு,

பு. அப்பாசாமிமுதலியாரது

சென்னை

மீனாட்சியம்மைகலாநிதி

அச்சுக்கூடத்திற் பதிப்பித்தனர்.

1888



தாயுமானசுவாமி மலையென்றும் வழங்குகிற செவ்வந்தீஸ்வரர் மலை.

# விளம்பரம்.

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில் ☞ தக்ஷிணகயிலாயம் திரிசிராமலை, திருச்சிராபுரம், திருச்சிராப்பள்ளி என்னும் பல நாமங்களையுடைய ☞ திருசிராமலைபுராணம் என்னும் செவ்வந்தி புராணம் வெகுகாலமாய் அச்சிடாமலும் நூல் இடைக்காமல் மறைவுபட்டிருந்ததினால் அதை இப்போது ஷை யூர் மாதுருபூதேஸ்வரர் இடப்பாகம்பெற்ற சுகந்தகுந்தளநாயகியம்மனென்னும் ஸ்ரீ மட்டுவார்குழலம்பாளம்மனென்றும் இத்திருநாமம் பெற்ற ஷை அம்மனுடைய அனுக்கிரகத்தால் சென்னை சிந்தாதிரிப்பேட்டை சாமிநாயக்கர் வீதி (கக) வது, நெம்பர் வீட்டில் ஷை ஸ்ரீ மட்டுவார்குழலம்பாளம்மன் பேரால் அச்சுக்கூடம் வைத்து விருத்தியுண்டாகி வருகிற இவ்வச்சுக்கூடத் தலைவராயும், ஷை யூரிலும் தஞ்சாவூர் கருவூரிலும் புத்தகக்கடை வைத்திருக்கும் தி. சபாபதிபிள்ளையவர்களால் வித்துவாம்சர்களைக் கொண்டு பிழைகளைத் திருத்தி நல்ல காகிதமெழுத்துகளுடன் ஷை செவ்வந்தி புராணமும் திருமூலர் திருமந்திர மூவாயிரமும் அச்சிட்டிருப்பதால் அதுவும் இந்தச் சிவதருமோத்தரமும் ம-ா-ா-ஸ்ரீ, ஆறுமுக நாவலரவர்களாலும், ம-ா-ா-ஸ்ரீ, புஷ்பரதசெட்டியாரவர்களாலும் அச்சிட்ட புஸ்தகங்களும் மற்ற பலவித தமிழ் தெலுங்கு கிரந்தம் பாடசாலைக் குபயோகமுள்ள புஸ்தகங்களும் ஷை யூர்களில் ஷையார் கடைகளில் விலை சகாயமாய் வாங்கிக் கொள்ளலாம்.

சர்வசித்து ௵<br>
தைமீ 7௳

இப்படிக்கி<br>
திருசிரபுரம். புத்தகக்கடை<br>
☞ க. சுப்பராயப்பிள்ளை.

| இயல். | இயலின் பெயர் | கவியின் எண். |
| --- | --- | --- |
| க வது | பரமதருமா தியியல் | ௫௨. |
| உ வது | சிவஞானதானவியல் | அகூ. |
| ௩ வது | ஜீவகையாகவியல் | கூ௪. |
| ௪ வது | பலவிசிட்டகாரணவியல் | ௬க. |
| ரு வது | சிவதருமவியல் | கூரு. |
| ௬ வது | பாவவியல் | ௱எ. |
| எ வது | சுவர்க்கநரகவியல் | உஉ௪. |
| அ வது | செனனமரணவியல் | ௱க. |
| கூ வது | சுவர்க்கநரகசேடவியல் | ௪கூ. |
| ௰ வது | சிவஞானயோகவியல் | ௱உஅ. |
| ௰க வது | பரிகாரவியல் | ௱௬. |
| ௰உ வது | கோபுரவியல் | உஉஅ. |
| | ஆக இயல் ௰உ - க்குக் கவி | ௲உ௱அ. |

உ
சிவமயம்.



# செய்யுளகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| | உாயடு | அதற்குமேலுறு | ருகூஅ | அமலைக்கு | உருய |
| ...றுறு | ாகூச | அதற்குமேற்றவ | ருகூஅ | அயனொரு | உஉக |
| ...ரி | கூகூ | அதனடுவே | ருரு | அயிங்கிதை | கூரு |
| ...ட | உஎக | அதன்கீழ்க் | ாஎடு | அயுதமியம் | ருஉரு |
| ...வ் | உஎடு | அதன்கீழ்வீம | ாஎடு | அய்வகை | ருடு |
| ...மா | சருரு | அதன்மீதுபது | ருஎச | அரக்கனுங் | உயஅ |
| ...தெ | ாகூடு | அதன்மீதுரசா | ருஎக | அரசன்செ | ாயஅ |
| ...முறு | ாஎக | அதன்மேலே | ருஎஉ | அரசன்ற | ாஉஎ |
| ...மெ | ருஅய | அதி மாயா | உஅஅ | அரவமாதி | கூக |
| ...கிமு | குஉ | அதீகோர | ாஎரு | அரவிறைன் | அருஅ |
| ...ங்கியத | உாயக | அதிதாரவ | ாகூஉ | அராறுதி | சாயரு |
| ...அங்கியா | உஎச | அதிபாகங் | ாஎரு | அரன்றி | ாயஉ |
| ...புங்கியிறு | ருருடு | அதிபாதக | ருாஉ | அரிகசிரமு | ாயஉ |
| அசேதன | உடுரு | அதிபாதகமு | ாசய | அரிச்சிக்க | ருடுய |
| அச்சமின் | ாருச | அதிபாதகரு | ாயரு | அரிதுமா | ாகூஅ |
| அஞ்சியா | ருரு | அத்தகைய | ருஅரு | அரித்திட | ருசய |
| அஞ்சினனே | ருாஎ | அத்தத்தினை | ாருரு | அரிந்தரிந்தேய | ாகூக |
| அஞ்சுவர்பு | உஉடு | அத்திசையிலெ | சாரு | அரிந்தரிந்தேயு | ாஅரு |
| அஞ்சுவாறு | உருகூ | அத்திசையிற் | சாஅ | அரியஞான | உரு |
| அடங்குமே | உருச | அத்துவித | உகடு | அரியமாவி | ாகூஎ |
| அடியகல | ...ச | அநாதியேய | உடுஎ | அரியயன் | டுகூ |
| அடைந்திடு | உஅஎ | அந்தணர்க்கை | ருயஉ | அரிவையர் | கூஅ |
| அடைவர் | ாரு... | ...ந்தணர்தங் | ருசஉ | அருகிருந்தவர் | உஅச |
| அட்ட தவு | உா... | ...ந்தணன் | உ...ரு | அருக்கலைத் | உசரு |
| அட் ட ஆல | ருக... | அந்தந்தன் | சருச | அருங்கன | ருஉரு |
| ...டமா | ... | அந்தமுறி | ருஅ | அருத்தமீ | சருச |
| ...டவை | | அந்தரத்தி | உஅடு | அருத்திய | அய |
| ...ணியார் | ...ரு | அந்தரம் | உஎரு | அருத்துக | எஎ |
| ...னியுற | ...ச | அந்தியவி | ாரு | அருந்திய | சருச |
| ...ஞுக்க | ...க | அப்பாலைக் | உ | அருந்தின | ருஉய |
| ...ஞுவினு | ...எ | அப்பாலேமு | ாஎஉ | அருந்தினர் | ாஅஅ |
| | ...எ | அப்புரியின் | ருஎடு | அருந்தினனே | ருஉஉ |
| | உய | அமரருமஞ | யஎ | அருந்திடிறு | உகச |
| | ருகூஅ | அமலவரனரு | யக | அருந்துகவா | ருாயக |
| | டுஉ | அமலனிறை | உஎஅ | அருந்துயரக் | உாச |
| | ககூஎ | அமலனுரு | கூச | அருந்துயரடை | உஉஅ |
| | சஉகூ | அமலனையுங் | ாஅகூ | அருமறையவாற | ... |

சிவமயம்.

# முகவுரை.

க. வேதப் பொருள்களை மயக்கமறவிளக்கும் சைவாகமங்க[ள்] உஅ. அவை ஆகௌகப் பிரகாரமென்றும் பிரதிசம்ஹிதாப்பிரகாரமென்றும் இரண்டு வகையாய்க் கூறப்படும்.

உ. காமிகமுதல் சுப்ரபேதம் வரைப்பத்தாகமங்களு[ம்] ... தமான ஆகௌகப் பிரகாரம்.

ங. விஜயாதிவாதுளாந்தம் பதினெட்டும் ருத்ரபே[த] ... பிரதிசம்ஹிதாப்பிரகாரம்.

ச. ஆக ஆகமங்கள் உஅ - இவற்றின் விரிவை சித்தா[ந்தசா]ராவளி முதலிய நூற்களிற் காண்க.

ரு. இதில் ஈசானமுகத்திற் றோன்றி வரிசைக்கிரமத்த[ில்] உச - வதாயும், ருத்திரபேதமாயும், விளங்கப்படுவது சந்தான ச[ர்]வோத்தமம். அது இலிங்கார்த்திக்ஷம், சாத்தியக்ஷம், சங்கிரதந்[தி]ரம், மஹேஹாஸ்வர ஆகமம், அசங்கியாதந்திரம், அநிலாகமம், தவந்துவாகமம் சிவதர்மோத்தரம், வாயப்புரோக்தம், திவ்யப் புரோக்தம், ஈசாந்நியம் என கக - பிரிவைகளையுடையது.

சா. இவற்றுள் அ - வது சிவதருமோத்தரம் குமாரஸ்வாமியார் அகத்தியர் வினவிப சிவதருமத்திற்கு உத்தரமாய் கூறப்பட்டதால் சிவதருமோத்தரமெனக் கூறப்பட்டது.

எ. இதிற் பதிபசுபாச விலக்கண[ங்களை]யும், சா[ம]ய ... திபாத விலக்கணங்களையும் சாலோகாதிபத வி... [ல]க்கணங்களையும் கூ[று]கின்றது.

அ. இதை சைவ சமயாசார அநுஷ்[டா]... [ன]ர்கள் சிந்தி[க்க] வேண்டியது அவசியம்.! அவசியம்!! அவ[சியம்]...

---

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அருமறையவர் திரு | ௱௪௭ | அறைந்தாமமல | ௫௰ | ஆக்கைசடந்த | ௨௫௯ |
| அருமறையா | ௭௯ | அறைந்திடுவர் | ௱௯௧ | ஆக்கைசடமாரு | ௨௯௭ |
| அருவருப்பை | ௨௱௰௪ | அற்சனைக்கு | ௨௧ | ஆக்கைதனிலோ | ௨௯௰ |
| அளாத்தொறுக்கு | ௱௭௮ | அற்பாயுநர | ௰௫ | ஆக்கைதானிலை | ௱௯௯ |
| அர்ச்சனை | ௨௧ | அற்புதனம | ௯௫ | ஆக்கைநோயென | ௬௰ |
| அலற்பிறப் | ௨௫௬ | அற்புதனுமாரி | ௬௬ | ஆக்கையாவோ | ௫௭ |
| அலைகடனஞ்ச | ௨௪ | அற்றவர்கள் | ௱௭௬ | ஆக்கையிற்பி | ௨௬௮ |
| அலைபுனலத | ௭௬ | அற்றழியவா | ௬௪௭ | ஆக்கையிற்று | ௨௬௧ |
| அல்லதுபுத்த | ௬௬ | அற்றறிவு | ௬௬௮ | ஆக்கையினுவி | ௨௯௧ |
| அவனியின் | ௮௬ | அற்றைநசிக்க | ௬௭ | ஆக்கையினைச்சி | ௨௫௯ |
| அவையவத்துங் | ௨௭௭ | அற்றைநசியவ் | ௬௮ | ஆக்கையினையிய | ௨௯௪ |
| அவையவமனை | ௨௪௰ | அற்றைவாரத் | ௪௬௧ | ஆக்கையினையை | ௨௯௯ |
| அழகாய | ௬௯௨ | அனகாரன | ௪௨௬ | ஆக்கையுந்து | ௨௫௮ |
| அழகுறவே | ௬௭ | அனகனச்சு | ௭௨ | ஆக்கையுமாக் | ௨௭௮ |
| அழலுமிழ் | ௱௭௭ | அனலொழுகு | ௱௯௰ | ஆக்கையை | ௨௨௪ |
| அழலொழுகு | ௱௮௬ | அனுதிமல | ௬௪௰ | ஆசகலவிரு | ௩௱௰ |
| அழியாத | ௱௬௬ | அனுதியேயமலன்ற | ௨௯௧ | ஆசாணுக்கரு | ௪௧ |
| அழியுமா | ௱௯௯ | அன்றறமாதி | ௨௪௯ | ஆசிலர்தம | ௨௯௯ |
| அழிவிலாவர | ௨௨௧ | அன்னதான | ௱௪௮ | ஆசைதானிரு | ௨௬௧ |
| அழுகையுங் | ௱௰ | அன்னமதனி | ௱௪௯ | ஆசைதானு | ௭௰ |
| அழுக்கினை | ௯௭ | அன்னமதனை | ௱௫௧ | ஆசைமாசற | ௩௬௨ |
| அழுக்குளமே | ௬௨௧ | அன்னமாக்கை | ௱௫௧ | ஆசைமுதலா | ௯௯ |
| அழுத்திடுவர் | ௱௮௬ | அன்னமுதக | ௱௫௨ | ஆசையதனுட் | ௱௰௫ |
| அளறுறு | ௱௫௭ | அன்னமுமுத | ௱௪௬ | ஆடுகநீரினை | ௬௱௬ |
| அறக்கொடி | ௱௭௮ | அன்னியம் | ௬௬௧ | ஆடையுமொ | ௨௨௪ |
| அறவுருத்தம் | ௱௭௮ | அன்னியர் | ௱௮௯ | ஆட்டிடுகபச் | ௬௫௧ |
| அறிகமுனிவ | ௱௪௬ | அன்னியன் | ௱௯ | ஆட்டிடுகவப | ௬௫௧ |
| அறிந்திடுக | ௬௱௬ | அன்னைதன் | ௨௨௬ | ஆட்டிப்பான் | ௪௱௰௮ |
| அறிந்துமனை | ௱௨௰ | அன்னையருந் | ௨௱௰ | ஆட்டிமஞ்ச | ௪௱௰௭ |
| அறிந்துமொரு | ௬௱௰௭ | | | ஆதரவே | ௯ |
| அறிவழிந்து | ௬௨௬ | ஆகமங்க | ௬௮௧ | ஆதலாற்செ | ௱௬௧ |
| அறிவிலனைய | ௬௬௬ | ஆக்கடன்னையரும் | ௪௱௰௮ | ஆதலாற்பசு | ௪௨௪ |
| அறிவுவலி | ௬௮௪ | ஆக்கடனையரும்பி | ௱௬௨ | ஆதலாற்புத்த | ௪௬௬ |
| அறிவென்பார் | ௨௫௯ | ஆக்கடன்னையல | ௪௱௰௯ | ஆதலானெ | ௰௯ |
| அறிவை | ௱௨௭ | ஆக்கடன்னையிய | ௪௱௰௨ | ஆதலான்முனி | ௮௪ |
| அறுத்தொறு | ௱௮௪ | ஆக்கண்முத்தி | ௪௬௨ | ஆதனம்பது | ௨௭௰ |
| அறுமாசை | ௨௮௯ | ஆக்களனையு | ௱௰௯ | ஆதிசனிலோ | ௰௧ |
| அறைந்தகரு | ௬௨ | ஆக்களல்ல | ௪௱௰௯ | ஆதிநடுவந்த | ௪ |
| அறைந்தவதி | ௱௪௨ | ஆக்கவெல்லை | ௪௨௮ | ஆதிநாதன | ௨௱௧ |
| அறைந்தவிவ | ௱௰௨ | ஆக்கனக்க | ௪௨௪ | ஆதியமலன் | ௱௰௮ |
| அறைந்தன | ௰௭ | ஆக்கள்சேரி | ௱௨௯ | ஆதியலச் | ௰௫ |
| அறைந்தாஞ்சொ | ௬௭௬ | ஆக்கியரன் | ௬௨௭ | ஆதியறை | ௪௫ |
| அறைந்தாகம | ௱௰௭ | ஆக்குவது | ௬௬௬ | ஆதியுமந்த | ௪௱௬ |

# அகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஆதுலருற்றி | ௱௯௪ | இத்தகையேபுத்த | ௪௧ | இறந்தே | ௨௱௰ |
| ஆயனும் | ௨௨௧ | இத்தகையேபுரி | ௪௧ | இறவாதிரு | ௱௨௮ |
| ஆடாமமறை | ௨௮௨ | இத்தகையேமரு | ௪௰ | இறைவனி | ௪௨ |
| ஆயிரங்க | ௨௨௧ | இத்தகையோர் | ௪௱௭ | இனிமுனி | ௯௩ |
| ஆயுங்கொற் | ௫௮௫ | இந்நாட்டு | ௨௱ | இனையகடு | ௱௮௩ |
| ஆயுதவருட | ௱௯௧ | இந்துரன் | ௪௫௫ | இனையபுரி | ௫௯௮ |
| ஆயவயுத | ௫௮௫ | இந்தப்பாரத | ௱௯௮ | இனையயோ | ௱௯௭ |
| ஆயுவுஞ்ச | ௨௨௧ | இந்தமுறை | ௱௰௪ | இன்பமே | ௯௯ |
| ஆரக்கன்று | ௪௨௫ | இந்தவகை | ௫௯ | இன்னய | ௫௯௪ |
| ஆரியனும் | ௪௫௬ | இந்தவாறு | ௪௫௩ | இன்னுழை | ௫௯௪ |
| ஆரியனே | ௨௬௮ | இந்தவிதி | ௪௯ | ——— | |
| ஆருயிரனே | ௨௰ | இந்தவீணை | ௭௯ | ஈங்குனை | ௫௮௪ |
| ஆருயிரின | ௫௩௨ | இந்தியவி | ௨௭௯ | ஈசர் திருவாலயத்துமி | |
| ஆருயிர்வே | ௩௭ | இந்திரமே | ௫௮௰ | | ௱௮௬ |
| ஆலவனத் | ௫ | இந்திரனேமு | ௫௭௪ | ஈசர் திருவாலயத்துமெ | |
| ஆலயத்தை | ௱௫௫ | இந்திரன்பு | ௨௧௮ | | ௱௯௰ |
| ஆவினுக்கு | ௱௨௯ | இந்திரன்மு | ௨௧௭ | ஈசனேவ | ௪௫௧ |
| ஆவினைத்த | ௱௫௧ | இமகிரிக்கு | ௫௮௧ | ஈசன்றுனு | ௫௧ |
| ஆவுரிஞ்சு | ௪௱௰௯ | இமத்தில் | ௪௱௰௯ | ஈடிலார் | ௱௫௰ |
| ஆறறு | ௨௱௫ | இமையகிரி | ௫௮௧ | ஈடுபெற்ற | ௪௨௨ |
| ஆழிலொன் | ௱௫௩ | இம்முறை | ௨௨௭ | ஈடுபெற்றி | ௨௱௨ |
| ஆழிசூடின | ௱௪௨ | இம்மை | ௨௪௧ | ஈட்டினர் | ௨௫௭ |
| ஆற்றிடை | ௨௮௫ | இயக்கினுட | ௨௭௭ | ஈட்டினோர் | ௱௨௯ |
| ஆனிடை | ௨௫ | இயங்கிற் | ௯௧ | ஈட்டிமிந் | ௱௫௮ |
| ——— | | இயன்றனவியற்றிஞரு | | ஈயந்தன் | ௱௫௭ |
| இக்கெனவே | ௨௮௭ | மற் | ௱௧ | ஈயுமவர் | ௱௯௪ |
| இங்குமின் | ௪௱௰௪ | இயன்றனவியற்றிஞரு | | ஈரிலக்க | ௫௯௬ |
| இசைத்தவி | ௫௯௧ | மன் | ௯௯ | ஈரும்வா | ௱௯௯ |
| இடபமூருன | ௪௨௧ | இரக்கமா | ௮௯ | ஈறைந்தா | ௪௯ |
| இடபவி | ௱௪௧ | இரவிமதி | ௱௯௩ | ——— | |
| இடையிடை | ௫௬௮ | இரவியை | ௪௱ | உக்கொழி | ௨௬௨ |
| இடையினு | ௨௮௬ | இருட்டெடலை | ௨௯௨ | உச்சரிக்க | ௫௪௯ |
| இட்டிகாதி | ௪௱௰௪ | இருபதுநா | ௫௯௨ | உச்சரித்தே | ௫௩௰ |
| இணையிலி | ௱௮௮ | இருப்பர்க | ௱௨ | உச்சிமுகமீ | ௫௩௪ |
| இத்தகைத்த | ௪௨௬ | இருப்பழற் | ௱௮௱ | உச்சியில | ௮௭ |
| இத்தகைத்தபல | ௪௨௧ | இருவிதந் | ௪௨௪ | உடலூறு | ௫௪௩ |
| இத்தகைத்தபலத் | ௪௨௭ | இருவினையா | ௪௫௯ | உடைப்பான | ௱௨௭ |
| இத்தகைத்தவி | ௱௫௬ | இருவினையு | ௨௩௩ | உடையாரிடை | ௭௰ |
| இத்தகைமை | ௱௩௬ | இருஞலகி | ௰௨ | உடையார்வி | ௪௱௨ |
| இத்தகையத | ௫௭௩ | இருளபுழுதி | ௱௭௯ | உடைவர்கள் | ௱௩௮ |
| இத்தகையவா | ௫௪ | இல்லமுமு | ௱௪௬ | உண்டிடுவர் | ௫௮௨ |
| இத்தகையவித | ௪௱௪ | இவர்சிவ | ௯௮ | உண்டொரொ | ௱௯ |
| இத்தகையவிமா | ௫௮ | இளைத்தவா | ௪௨௨ | உண்ணவற | ௱௰௭ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| உன்னாவு | ாகூகூ | உற்றகாரிய | ாஉகூ | எண்ணியா | ாருகூ |
| உண்மைமொ | கூகூகூ | உற்றசிறை | உகூகூ | எண்ணிரண் | உாரு |
| உண்மையிறு | உஅக | உற்றநோயு | உஎச | எண்ணுகபிர | உகூரு |
| உதகமதனை | ாருக | உற்றபசி | ாரும | எண்ணுகயோசனை | கூஅஎ |
| உதவினர | ாசகூ | உற்றபெற்ற | சஉம | எண்ணுகயோசனை | கூஅகூ |
| உதிக்கும் | உாகூ | உற்றவர்கள் | ாஎக | எதிருந்தாமு | ாமரு |
| உத்தமகூரர் | கூ | உற்றவர்தீ | ாரு | எத்தொகை | கூரு |
| உத்தமத்த | சாமரு | உற்றவாசை | சஉகூ | எய்தற்கரிய | கூரு |
| உத்தமனா | ாஅகூ | உற்றவிடு | ாகூச | எல்லையை | உகூஎ |
| உத்தமமொ | ாசஎ | உற்றவுடற் | உாமகூ | எழிலுமார் | கூஎ |
| உத்தமமோ | ாஎ | உற்றுண்ப | ாசகூ | எழுதாதபு | கூரு |
| உத்தரத்தி | கூஎகூ | உற்றிடினு | உஎச | எழுநீவுமெ | கூகூக |
| உமையாள் | ருாஉ | உற்றிடுமு | உஅச | எழுதுகொ | கூருஅ |
| உயரந்தா | கூகூஎ | உற்றிடுவ ருரைத்த துயர | | எழுதாருயிர | கூகூஉ |
| உயிரொளி | உகூக | னைத்தினையுமு | ாஅகூ | எளியனை | உசரு |
| உயிர்க்கு | அஉ | உற்றிடுவ ருரைத்ததுயர | | எறிந்தருந் | ாஅகூ |
| உருகியபி | ாஅஉ | னைத்தினையுமொ | ாஅகூ | எற்றியிட | ாஅஅ |
| உருக்குத | உருகூ | உற்றிடுவொ | ாகூரு | எற்றுபுரு | ாகூஅ |
| உருத்திரன் | உகஎ | உற்றிடுவர் | ாஅஎ | எனக்குண் | சகூஅ |
| உருவருவெ | உருஉ | உற்றிடுவார் | கூஅச | எனத்துதி | உம |
| உருவிறைலு | சாாகூ | உன்னதத்தெ | கூஅம | எனவேயி | ாஉஅ |
| உரைத்தபுரிசை | ருக | உன்னத்தக்க | ாகூம | என்வினை | உகூச |
| உரைத்தபுரிமி | கூஎம | உன்னலன் | எஉ | என்றழல் | ாகூரு |
| உரைத்தபெ | ாஎஎ | உன்னிடுக | கூாரு | என்றனைநீ | கூசஉ |
| உரைத்தரு | கூசகூ | உன்னிறைரு | சகூஉ | என்றிசைத்த | கூகூகூ |
| உரைத்தவித | கூகூகூ | உன்னுவார் | ாஅம | என்றியம | ாஎச |
| உரைத்தவிப்பா | அக | —— | | என்றினிய | கூ |
| உரைத்தவிப்பு | ாக | ஊடவிரு | உகூகூ | என்றினைய | ாஎக |
| உரைத்தனங் | கூஉ | ஊட்டினோர் | சஉஎ | என்றுகரு | எக |
| உரையாதே | கூாமச | ஊற்றிவொக் | ாகூச | என்றுசிவஞானவ | கூா |
| உரையிற் | ாகூக | ஊறுபடிற் | கூஉஅ | என்றுசிவஞானவி | ருஎ |
| உலகவிய | ாஉகூ | ஊறுறவுட | ாகூம | என்றுசிவதி | ாசம |
| உலகினிற் | எஅ | ஊனமற்ற | சஉம | என்றுசுர | சகூஎ |
| உலகுளார் | உருகூ | ஊன்றியே | உஎகூ | என்றுதரு | ாரு |
| உலைவர்க | ாருகூ | —— | | என்றுதிவி | உாக |
| உள்ளுறச் | உகூச | எங்கள்கு | உசக | என்றுபய | கூஉ |
| உறவினுக் | ாகூக | எடுத்ததோ | உருரு | என்றுபர | உகூ |
| உறவுமாயு | உகூஅ | எட்டுமிரண்டு | கூாஅ | என்றுபரி | கூகூக |
| உறைந்தே | கூகூ | எட்டெனப்ப | ாச | என்றுபிற | உகூகூ |
| உற்பலகமலத்தோ | மகூ | எண்ணரிய | கூகூகூ | என்றுமிய | சஅ |
| உற்பலகமலமூ | மஅ | எண்ணிடுகவதற்க | கூஅஎ | என்றுமிறை | உாக |
| உற்பவத்து | உஅம | எண்ணிடுகெவதற்கப்பாற் | | என்றுமுனிச | கூ |
| உற்பவவேலை | உகூகூ | சா | கூஅஅ | என்றுமுனிவி | எ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| என்றவினை | ௨௪௯ | ஒவ்வொன்றே | ௯௫௬ | கண்ணிலா. | ௨௪௨ |
| என்றென்றெ | ௨௱௰௪ | ஒழிவறவு | ௮௨ | கண்ணிவா | ௪௱௰௯ |
| என்னுமித்தொ | ௱௯௮ | ஒழுக்கிடு | ௱௮௧ | கதலியெ | ௱௰௧ |
| என்னுமிங்கா | ௱௰ | ஒழுக்குடை | ௱௯௫ | கந்தமறல் | ௨௧௮ |
| ——— | | ஒழுக்குவார் | ௱௮௰ | கம்பைசலி | ௪௨ |
| ஏகதேச | ௨௯௨ | ஒளித்துங் | ௱௯௧ | கயக்கவே | ௯௮ |
| ஏகமன்றி | ௨௯௪ | ஒளிமணி | ௱௪௭ | கயலாரி | ௱௭ |
| ஏகனருள் | ௫௯௪ | ஒளியபதுமரா | ௬௭ | கரந்திரி | ௨௭௰ |
| ஏந்திழைக்கு | ௯௱௰௧ | ஒளியினை | ௱௪௫ | கரப்பில்லா | ௯௰ |
| ஏந்திளந் | ௱௯௯ | ஒற்றியூர் | ௯௰ | கரமதனி | ௱௮௧ |
| ஏவலருளெ | ௱௯௬ | ——— | | கரிசசிறி | ௱௨௨ |
| ஏவல்பெற்று | ௱௫௯ | ஓங்கியவ | ௭௪ | கரிபரிமு | ௨௨௫ |
| ஏற்கவிரண்டு | ௪௪ | ஓட்டத்தி | ௪௱௰௧ | கரியவரு | ௯௫௫ |
| ——— | | ஓதநமனு | ௱௭௯ | கருக்கிய | ௧௩௧ |
| ஐந்துபூத | ௪௨௮ | ஓதனமொ | ௨௪௨ | கருத்துடனே | ௨௯௬ |
| ஐயமற | ௰௯ | ஓதுவார்க்கி | ௨௬ | கருப்பாச | ௨௱௰௪ |
| ஐவகையாக | ௨௪௰ | ஓதுவார்வே | ௪௱௪ | கருப்பை | ௨௨௨ |
| ——— | | ஓதுவிப்பவ | ௯௰ | கருமமும் | ௨௨௮ |
| ஒடுங்கமன | ௯௱௧ | ஓமென்னும் | ௰௨ | கருமமென் | ௫௧ |
| ஒட்டகமுறு | ௱௯௰ | ஓரயதஞ் | ௯௪௯ | கருமயோக | ௪௯ |
| ஒப்பரியவ | ௯௨ | ஓரவமுக்கினை | ௬௬௪ | கருமிகட் | ௭௫ |
| ஒப்பரியன் | ௯௯௯ | ஓரிலக்கம் | ௯௬௬ | கருவிலுள | ௨௪௰ |
| ஒப்பிலமலன் | ௬௨ | ஓரிலக்கமே | ௯௬௭ | கருவிலுரு | ௱௫௪ |
| ஒப்பிலாவொ | ௨௮ | ——— | | கழலெனை | ௱௬ |
| ஒப்பிலியனுதிமுத் | ௨௫௫ | கங்கைசெ | ௯௧௧ | கழிந்தவி | ௯௫௯ |
| ஒப்பிலியனுதிமுத்தனே தியகா | ௨௫௪ | கங்கைத | ௫௮ | களத்தினிற் | ௨௪௫ |
| | | கங்கைநதி | ௯௯௯ | களைக்கண் | ௱௬௨ |
| ஒப்பிலியனுதிமுத்தனே தியபனு | ௱௰௧ | கங்கைமு | ௯௭௯ | கற்புளார் | ௨௪௫ |
| | | கடகரிதொ | ௧௫௯ | கற்றினங் | ௪௱௰௫ |
| ஒப்பிலியனுதிமுத்தனே தியவேதத்து | ௨௯ | கடல்விட | ௭௯ | கனகமத | ௪௭ |
| | | கடுகியப | ௧௬௧ | கனகமார் | ௯௰ |
| ஒப்பிலியனுதிமுத்தனே திய வேதமா | ௱௰௧ | கடுகியவ | ௧௬௰ | கனகமொ | ௯௯௭ |
| | | கடுவெயி | ௨௭௫ | கனலனைய | ௱௯௰ |
| ஒப்பில்போ | ௪௨௰ | கட்டியை | ௮௬ | கன்றவெம | ௱௭௨ |
| ஒருகுடிப்பி | ௨௪௧ | கட்டிடு | ௧௯௧ | கன்றியகாலனு | ௨௧௯ |
| ஒருநிறைய | ௱௯௨ | கட்டுவை | ௧௪௪ | கன்றியகாலனை | ௱௪௰ |
| ஒருபஃதே | ௨௱௰௯ | கண்டகமு | ௱௫௭ | கன்னத்து | ௱௬௫ |
| ஒருபாலரி | ௪௱௧ | கண்டகரோ | ௱௯௯ | கன்னிகை | ௯௱௨௧ |
| ஒருபாலுட | ௪௱௧ | கண்டத்து | ௱௬௯ | ——— | |
| ஒருமைய | ௨௨௯ | கண்டனி | ௨௪௯ | காக்கிலா | ௪௱௰௮ |
| ஒருவனிரண் | ௨௫௨ | கண்டனுக் | ௪௱௭ | காடவண்ட | ௪௨௧ |
| ஒருவனுடல் | ௯௱௭ | கண்டிவி | ௬௧ | காட்டியிற் | ௨௫௪ |
| ஒருவனே | ௯௧ | கண்டையு | ௯௯ | காட்டுமுன் | ௮௯ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| காணூர்ம | ௬௬ | கூர்த்ததிப | ௱௩௪ | சாலியின் | ௮௰ |
| காதலித் | ௮௮ | கூர்மவுரு | ௱௭௭ | சாலையா | ௪௧௭ |
| காந்தனி | ௨௱௯ | ——— | | சாற்றிடுக | ௩௨௬ |
| காமாங் | ௯௮ | கேட்டுளார் | ௨௧ | சாற்றியிடு | ௩௯௰ |
| காமனுக் | ௨௧௯ | ——— | | ——— | |
| காழுறு | ௭௧ | கைத்தலத் | ௨௮௨ | சிங்கமுமு | ௧௫௯ |
| காயசுத்தி | ௱௰௪ | ——— | | சித்தத்து | ௧௬௨ |
| காய்ந்த | ௪௨௧ | கொடுக்குஞ் | ௯௰ | சித்தமுந் | ௧௮௰ |
| காரகன் | ௨௬௪ | கொடுத்துச்ச | ௪௨௰ | சித்திரகு | ௧௫௫ |
| காலமுமி | ௱௫௬ | கொடுத்துத்த | ௧௨௬ | சித்திரந | ௧௭௰ |
| காலமே | ௪௩௮ | கொடுமரா | ௧௩௧ | சிந்தைசெ | ௨௭ |
| காலனையு | ௫௮ | கொத்துலா | ௪௧௩ | சிரத்தைற | ௧௯௧ |
| காலையும | ௨௨௪ | கொழுநன் | ௧௨௨ | சிரமேக | ௨௱௯ |
| காழிமூவலை | ௯௧ | கொற்றவை | ௪௯௪ | சிலரோசெ | ௪௱௨ |
| ——— | | கொன்றுன் | ௧௧௬ | சிலரேண | ௨௮௯ |
| கிட்டியே | ௱௯௭ | ——— | | சிலரோயொ | ௪௱௧ |
| கிருமிகள் | ௨௱௫ | கோட்டந் | ௩௪௮ | சிலைாக்க | ௯௬௩ |
| ——— | | கோதனங் | ௯௧ | சிலைத்தொ | ௧௬௧ |
| குங்குமத்தி | ௪௱௮ | கோபத்தா | ௩௪௨ | சிலையினீரி | ௧௩௰ |
| குசைநுதி | ௨௮௨ | கோமய | ௰௮ | சிவலிங்க | ௩௩௧ |
| குடகடற்கு | ௩௮௨ | கோரமது | ௧௭௫ | சிவனற் | ௫௪ |
| குட்டவுடற் | ௨௱௰௬ | கோவினைத்து | ௨௪௪ | சிவனைப்பூ | ௫௬ |
| குணதிசை | ௩௭௬ | கோவினையு | ௧௪௬ | சிவனையி | ௧௰௩ |
| குணிதசத | ௩௬௫ | ——— | | சிவன்றன | ௨௮௯ |
| குணிதநியு | ௩௬௫ | சங்கமாதி | ௧௩௭ | சிறக்கச் | ௫௧ |
| குதமுந்தோ | ௨௱௰ | சங்கரனடி | ௩௮ | சிறந்ததேசத்து | ௪௩௧ |
| குமரன்வா | ௪௩௩ | சங்கரனை | ௯௫௩ | சிறந்ததேசமு | ௯௨ |
| குய்யத்தி | ௱௬௪ | சங்கைதீ | ௪௩௭ | சிறந்தநற் | ௭௪ |
| குரத்தினு | ௪௱௰௧ | சடாத்தினி | ௪௧௨ | சிறந்தபர | ௬௮ |
| குரவனை | ௱௮௭ | சத்திபெறுதோ | ௪௰ | சிறந்துசெ | ௫௫ |
| குரவனப | ௱௪௬ | சத்தியை | ௱௨ | சிறப்புறவே | ௩௪௬ |
| குரவன்ற | ௫௩ | சத்திரந்த | ௧௩௭ | சிற்றுயிர் | ௨௨௨ |
| குழவிபயந் | ௨௱௰௫ | சத்திரமு | ௧௪௪ | சினத்தினு | ௯௭ |
| குற்றமுடை | ௱௨௬ | சந்தணமு | ௰௯ | சின்மயனை | ௨ |
| குற்றிழன் | ௪௱௰௫ | சந்தபே | ௨௧ | ——— | |
| ——— | | சமர்தனி | ௨௨௮ | சீதளநீரு | ௰௯ |
| கூடியவ | ௩௩௮ | சயித்திர | ௩௭௭ | சீரியருஞ் | ௪ |
| கூடியெடு | ௩௩௩ | சரங்கள் | ௧௫௮ | ——— | |
| கூடுதலே | ௨௯௨ | சராசர | ௨௭௨ | சுக்கிலம | ௨௱௮ |
| கூட்டிடு | ௱௮௬ | சலமென்னும் | ௨௪௫ | சுடர்மூன் | ௪௱௮ |
| கூட்டியே | ௨௪௭ | ——— | | சுத்தவொளி | ௪௱௫ |
| கூரிதாய | ௱௮௧ | சாகமூத | ௩௯௰ | சுரிகுழலா | ௩௭௧ |
| கூரிருணெழி | ௱௫௮ | சாந்திடு | ௪௰ | சுற்றத்தவ | ௧௨௪ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| குக்கவுரு | ௨௧௨ |
| — | |
| செக்கிடை | ௧௮௧ |
| செங்கமல | ௬௮௬ |
| செந்தமிழி | ௬௱ |
| செந்தழலி | ௬௨௭ |
| செப்பியவ | ௪௱௯ |
| செப்பியவி | ௱ |
| செப்பியவொ | ௨௨ |
| செம்பினிற் | ௨௫௭ |
| செம்மை | ௧௯௮ |
| செய்கவே | ௪௧௯ |
| செய்தவெ | ௧௭௧ |
| செய்தார் | ௫௪ |
| செய்துசி | ௯௰ |
| செய்தும | ௪௬௧ |
| செல்லுறு | ௨௪௪ |
| செறித்து | ௯௰ |
| செறிந்து | ௮௯ |
| — | |
| சேர்ந்திடு | ௬௫௮ |
| சேர்வரா | ௪௨௨ |
| — | |
| சொக்கிடு | ௧௬௧ |
| சொல்லி | ௪௧௯ |
| சொற்றவி | ௨௪௬ |
| — | |
| சோகிக்கு | ௧௭௯ |
| சோரனு | ௧௬௯ |
| சோரன் | ௧௬௯ |
| — | |
| தக்கசிவ | ௯ |
| தக்கனுஞ்சு | ௨௧௧ |
| தக்கனுமி | ௨௨௰ |
| தக்கார் | ௧௯௫ |
| தடவரையின | ௬௭௫ |
| தடவரையின் | ௬௭௮ |
| தடுத்ததண | ௬௧ |
| தண்டரள | ௬௬ |
| தண்டுமிளி | ௧௯௧ |
| தத்துறப | ௧௪௪ |
| தந்தத்தி | ௧௮௧ |
| தந்தைபா | ௨௪௭ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| தபதிகாரு | ௧௬௫ |
| தமக்கபரா | ௨௨ |
| தமலமற்றிட | ௨௬௫ |
| தமலமோக | ௭௬ |
| தம்மனைய | ௭௭ |
| தரப்பிறர் | ௬௪௯ |
| தரித்துடை | ௬௯௮ |
| தருக்கடனை | ௧௨௪ |
| தருநிழலொ | ௨௯௫ |
| தருமர்தி | ௧௫௨ |
| தருமமண | ௧௨௨ |
| தரைக்குக்கி | ௬௧௯ |
| தரைக்குமே | ௬௯௪ |
| தரைத்தலத் | ௬௯௬ |
| தரைத்தலமு | ௬௯௪ |
| தரையினை | ௱௫ |
| தலத்துழல் | ௭௮ |
| தவசினை | ௧௪௪ |
| தழைத்த | ௪௱௰௮ |
| தனத்தினை | ௨௬௰ |
| தனமிகு | ௧௯௰ |
| தனித்திரு | ௧௬௨ |
| தன்னது | ௨௫௬ |
| தன்னுற்ச | ௧௨௫ |
| தன்னிற்ற | ௧௬௪ |
| தன்னின் | ௨௧ |
| தன்னுடல | ௨௧௪ |
| — | |
| தாக்கிடினே | ௬௬௪ |
| தாங்கினனே | ௬௪௫ |
| தாரகன்ற | ௱௰ |
| தாருகன்கா | ௨௨௰ |
| தானியவித | ௨௱௯ |
| — | |
| திகழும்வெ | ௪௨௯ |
| திணமேயு | ௪௨௨ |
| திதியினுதா | ௨௯௯ |
| திரனுறு | ௨௬௰ |
| திருந்திய | ௯௯ |
| திருப்பதி | ௪௨௫ |
| திருமகளே | ௪௧௧ |
| திருமாலும் | ௧ |
| திருவளையி | ௪௪௯ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| திருவருவந்தெளி | ௬௫௫ |
| திருவருவந்தெளி | ௬௫௪ |
| திருவருவமி | ௬௫௯ |
| திருவருவுக் | ௬௬௰ |
| திருவெலை | ௭௫ |
| திலத்தினை | ௨௨௪ |
| தினகரரு | ௱ |
| தினமோலா | ௨௱௧ |
| — | |
| தீக்கையி | ௬௬௰ |
| தீண்டபா | ௪௧௪ |
| தீதுகதினை | ௨௫௧ |
| தீர்த்தமார் | ௯௰ |
| — | |
| துக்கம்பி | ௧௨௫ |
| துடியிடை | ௨௨௬ |
| துண்டப்பு | ௧௯௪ |
| துயக்கந் | ௯௭ |
| — | |
| தூபக்தன்னை | ௪௧௯ |
| தூலமேரு | ௱௧ |
| — | |
| தெண்டமி | ௬௯௪ |
| தெண்ணீரா | ௬௨௫ |
| தெத்தியோ | ௪௨௭ |
| தெரிப்பரு | ௱ |
| தெளிபளிங் | ௱௨ |
| தென்றிசை | ௬௮௫ |
| — | |
| தேக்குநீர் | ௧௬௰ |
| தேசனுக்கு | ௪௬௫ |
| தேசிகற்க்கு | ௧௮௫ |
| தேசிகன் | ௬௨௯ |
| தேசுறசு | ௭௯ |
| தேமொழி | ௬௫௯ |
| தேவர்கண் | ௧௪௫ |
| தேவர்மு | ௧௪௧ |
| தேவனது | ௬௨௰ |
| தேறலருந் | ௧௨௫ |
| தேன்வடி | ௬௨௫ |
| — | |
| தொகையாலி | ௧௭௫ |
| தொகையிரு | ௧௭௪ |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| தொலைந்த | ௪௨௫ | நுண்ணிய | ௨௯௨ | பரிந்துபா | ௪௨௫ |
| தொழிலினை | ௨௯௯ | —— | | பரிப்பித்தா | ௪௨௨ |
| —— | | நேசற்றவ | ௧௯௨ | பரிமிசைக் | ௨௨௭ |
| தோழன்ற | ௨௰௯ | —— | | பரியகம் | ௧௫௭ |
| தோற்றிடு | ௨௱௭ | நோக்கினுட் | ௨௱௭ | பரியசுவி | ௧௭௮ |
| —— | | நோக்குமோ | ௨௧௧ | பரியாது | ௪௧௫ |
| நகையடனி | ௨௮௫ | —— | | பரிவுடைய | ௧௮௪ |
| நச்சிலைவ | ௭௰ | பகர்ந்தன | ௮௫ | பருகினர் | ௪௧௫ |
| நடலைவாழ் | ௫௯௨ | பக்குவாச | ௨௱௯ | பருவமறங் | ௫௯ |
| நண்ணிப்பா | ௪௨௮ | பசியுறப்ப | ௨௧௯ | பருவமுற்றவ | ௨௮ |
| நக்ஷதசுப | ௪௱௯ | பஞ்சகபா | ௧௧௫ | பருவமுற்றிய | ௨௭ |
| நரைதிரை | ௨௨௮ | பஞ்சவித | ௧௮௮ | பலதுயர | ௧௭௮ |
| நளனது | ௨௧௮ | படிசேர் | ௪௱௨ | பலயிரண் | ௫௫௫ |
| நறவனை | ௫௭௭ | படைபிடித் | ௫௪௫ | பலமொன்று | ௫௪௮ |
| —— | | பட்டினை | ௧௪௪ | பலியதனை | ௫௯ |
| நாசியின | ௨௭௰ | பணிவார் | ௫௯ | பவுதிகனே | ௫௪௯ |
| நாடரிய | ௭ | பண்டைவா | ௪௧௭ | பழகிப்ப | ௪௧ |
| நாடியள | ௨௧௨ | பண்ணைன்ப | ௯௫ | பழுதறுபா | ௮௧ |
| நாண்முன்றி | ௫௧௮ | பண்ணினர்ம | ௨௪௧ | பழுதறவி | ௮௫ |
| நாத்தழும் | ௪௨௯ | பண்ணினர்மு | ௨௪௮ | பழுதேப | ௧௯௫ |
| நாயினுக்கு | ௨௧௯ | பண்ணினனே | ௫௫௭ | பறைநதவ | ௨௧௧ |
| நாவிற்று | ௧௯௪ | பதத்தறைவ | ௧௮௪ | பற்றிப்பர | ௯௧ |
| —— | | பதவிதாய் | ௨௯௮ | பனியினு | ௨௨௪ |
| நிசிவேலை | ௫௧௨ | பதிகர்தாம | ௨௱ | பன்முறைற | ௨௪௮ |
| நிட்டூரதர | ௧௫௯ | பத்தர்கா | ௪௫௨ | பன்னிரு | ௨௱௭ |
| நிக்ஷதி | ௧௧௪ | பரதாரந் | ௫௧௪ | —— | |
| நிரையமி | ௫௯௯ | பரமசிவம | ௪௪௫ | பாங்குளான் | ௨௫௮ |
| நிலையொரு | ௱௪ | பரமசிவஞெ | ௫௫௨ | பாண்டத்தி | ௫௨௪ |
| நிறுத்திட | ௨௧௧ | பரமசிவன்ப | ௨௯௧ | பாதமுறப்ப | ௱௧௧ |
| நிறுத்திடு | ௧௮௪ | பரமசிவன்றி | ௪௰ | பாதலத்தின் | ௫௭௫ |
| நிறைந்து | ௨௰ | பரமதரும | ௪௫௯ | பாதளக்கு | ௨௱௪ |
| நினைத்தந | ௨௫ | பரமமெய் | ௨௯௭ | பாதளப்பெ | ௫௭௫ |
| நினைவார் | ௯௫ | பரமர்திருவாய் | ௪௪ | பாதுகையு | ௧௪௫ |
| நின்னதடி | ௫ | பரமர்திருவாலை | ௧௨௪ | பாத்திரமத | ௮௭ |
| —— | | பரமஞெங் | ௨௪௨ | பாத்திரமல் | ௮௭ |
| நீக்குவானு | ௧௫௰ | பரமனை | ௨௮௫ | பாத்திரமாக்கி | ௮௯ |
| நீக்குவான் | ௨௯௯ | பரமன்மொ | ௪௯ | பாத்திரமாவான் | ௭௫ |
| நீங்கினரி | ௨௭௧ | பரமன்றிருமு | ௧௧௫ | பாத்திராபா | ௮௭ |
| நீடியமனை | ௨௪௯ | பரமன்றிருவா | ௪௫ | பாம்பழல் | ௨௫௰ |
| நீடும்பொ | ௯௮ | பராபரனை | ௫௨ | பாம்பெண | ௨௨௰ |
| நீத்துமுன் | ௧௫௨ | பரிகாரங்கி | ௫௱௪ | பாம்பெண்மு | ௨௫௯ |
| நீலகிரிவ | ௫௮௨ | பரிகாரந்தி | ௫௯௰ | பாரதமுந | ௫௭௧ |
| —— | | பரிகாரவி | ௫௯௰ | பாரியாரு | ௯௯ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| பாரிவையப் | ௨௯௰ |
| பார்த்தவரி | ௨௯௫ |
| பார்த்தவன் | ௩௱௧ |
| பார்த்திபனுங்கா | ௰௪ |
| பார்த்திபனுமே | ௨௯௫ |
| பார்த்திவரு | ௩௩௩ |
| பாலைநெய் | ௱௩௭ |
| பாவகாரி | ௪௨௧ |
| பாவஞ்செய்பா | ௱௯௯ |
| பாவஞ்செய்யப்ப | ௱௩௩ |
| பாவபேதம் | ௱௯௯ |
| பாவெனும் | ௭௯ |
| பானமுமு | ௱௪௮ |
| ——— | |
| பிணக்கந் | ௱௩௯ |
| பிணிமூப்பு | ௩௪௭ |
| பிணைவிழி | ௩௯௯ |
| பிரமசாரி | ௪௨௫ |
| பிரிந்திடவே | ௱௮௫ |
| பிறப்பிலி | ௭௩ |
| பிறர்பொரு | ௱௩௭ |
| பின்னுமவர்த | ௱௮௪ |
| பின்னுமவரொரி | ௱௮௫ |
| ——— | |
| புடமிருப்பு | ௩௯௯ |
| புண்ணியப | ௱௫௩ |
| புண்ணியபா | ௨௱௫ |
| புண்ணியர் | ௨௩௯ |
| புதுவிளை | ௪௱ |
| புத்தகத்தினை | ௪௩௫ |
| புத்தகத்தை | ௪௨ |
| புத்தகாங்க | ௪௩ |
| புந்தியை | ௱௫ |
| புரிகசிவ | ௩௪௧ |
| புரிகபரம | ௪௫ |
| புரிந்தவர் | ௨௱௰௯ |
| புரிந்தன் | ௩௱௰௫ |
| புரிந்தார் | ௯௩ |
| புரிந்துளார் | ௱௮ |
| புலிமுனி | ௯௩ |
| புலையரானி | ௪௨௩ |
| புலையரோ | ௪௨௪ |
| புலையனே. | ௨௪௩ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| புன்புலைச்சி | ௩௱௰௯ |
| ——— | |
| பூசனைக்குப | ௮௨ |
| பூசிடுகநீ | ௩௱௪௧ |
| பூசித்துப் | ௩௯ |
| பூணர்முலை | ௱௨௭ |
| பூதலத்துள | ௩௨ |
| பூதிபூடணன் | ௱௪௧ |
| பூபதியுதான் | ௰௪ |
| பூமலிபொழி | ௱௪௫ |
| பூமியையு | ௱௪௮ |
| பூர்வவாய் | ௪௱௰௫ |
| ——— | |
| பெருநோயே | ௨௯௩ |
| பெருதற்கரி | ௱௨௰ |
| பெற்றமை | ௨௭௩ |
| பெற்றூர் | ௭௧ |
| பெற்றிடுஞ்செ | ௨௨௭ |
| பெற்றிடும்பா | ௨௱௭ |
| பெற்றுமந் | ௱௯௮ |
| ——— | |
| பேசியநூல | ௱௯ |
| பேசுநூலி | ௪௩௫ |
| பேசுமூல | ௪௨௯ |
| பேதமுமுற | ௱௭௪ |
| பேதமேலே | ௨௯௩ |
| ——— | |
| பொதியமா | ௩௯௨ |
| பொத்தையு | ௨௯௯ |
| பொய்யினை | ௱௮௨ |
| பொரித்தந | ௮௰ |
| பொருணசை | ௩௩௨ |
| பொருதவன் | ௨௪௯ |
| பொருந்தும | ௩௭௰ |
| பொருந்துவ | ௪௨ |
| பொருவில்கு | ௱௰௫ |
| பொருவில்பொ | ௱௰௩ |
| பொருளரி | ௮௯ |
| பொருளெனு | ௨௮௯ |
| பொல்லாத | ௨௱௰௩ |
| பொழிலினை | ௱௪௫ |
| பொற்கடத் | ௨௱௰௪ |
| பொன்னிற | ௪௱௪ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| பொன்னை | ௱௫௰ |
| பொன்மய | ௩௯௯ |
| பொன்னுரு | ௩௮௪ |
| ——— | |
| போகத்தை | ௨௭௨ |
| போகமுடிவிற்பு | ௫௰ |
| போகமுடிவின்ம | ௪௭ |
| போதகனுமு | ௰௪ |
| ——— | |
| மகவினை | ௧ |
| மங்கலவங் | ௨௭௧ |
| மங்கையர் | ௱௭௨ |
| மணியின் | ௪௯ |
| மண்டலத் | ௨௯௰ |
| மண்டனக்காயிரகோடிய ண்டமு | ௩௯௫ |
| மண்டனக்காயிரங்கோடி யண்டமே | ௩௯௫ |
| மண்டனின் | ௱௫௪ |
| மண்ணளை | ௩௪௧ |
| மண்ணினு | ௨௩௧ |
| மண்புனல | ௱௪ |
| மயிலனை | ௩௭௧ |
| மரித்தழு | ௩௱௰ |
| மரிப்பதின | ௨௩௰ |
| மருத்துவனு | ௨௯௩ |
| மருந்தைச் | ௯௪ |
| மருவியுற்றனை | ௨௩௫ |
| மலத்தினுட் | ௨௩௮ |
| மலத்தினும | ௨௯௭ |
| மலத்தைவ | ௨௪ |
| மவினராய் | ௮௩ |
| மலைக்குமக | ௧ |
| மறத்தருட் | ௱௭௯ |
| மறையோர் | ௱௨௰ |
| மற்றவரு | ௱௭௨ |
| மற்றவனு | ௱௮௫ |
| மற்றுமுள்ள | ௯௫ |
| மற்றுளவி | ௱௪௮ |
| மற்றைறமு | ௩௯ |
| மற்றையநர | ௮௪ |
| மற்றையநற் | ௩௮௫ |
| மற்றையமி | ௨௨௯ |

| செய்யுள். | பக்கம். |
| --- | --- |
| மந்தொருவன் | ௱௮௭ |
| மனத்திறல் | ௮௪ |
| மனத்துமயலு | ௨௱௰௫ |
| மனத்தைய | ௨௮௬ |
| மனநிலையொ | ௨௭௰ |
| மனமுருகவி | ௱௮௮ |
| மனுகுலத்து | ௬௮௯ |
| மாணுவுன | ௱௨௧ |
| மாதவர்க் | ௪௨௭ |
| மாதவனக | ௫ |
| மாலயன் | ௨௫௰ |
| மாறுமலா | ௨௱௬ |
| மானதமந் | ௨௮௪ |
| மானினங் | ௨௨௫ |
| மிக்கசாதி | ௱௬௬ |
| மிருதியின் | ௨௪௮ |
| மிருத்திய | ௨௨௯ |
| முகவாயுற | ௱௯௫ |
| முடியநாளு | ௪௱௰௭ |
| முதற்பக்க | ௬௱௰௮ |
| முத்தத்துற | ௱௯௪ |
| முத்தனே | ௪௱௪ |
| முத்திபெற் | ௨௬௬ |
| முந்தியபி | ௨௭௨ |
| முருகனே | ௬௯௨ |
| முளைத்தக | ௱௪௬ |
| முற்றக்காலமுரு | ௨௱௧ |
| முற்றக்காலமுமு | ௪௬௰ |
| முற்றக்காலமுறை | ௪௨௭ |
| முற்றவத்தா | ௨௧ |
| முற்றுமுட | ௨௱௰௨ |
| முற்றும்வி | ௬௱௪ |
| முற்றவர் | ௨௬௭ |
| முனிவரதருமபேத மொழிந்தனம்பலங்கண் | ௱௮ |
| முனிவர தருமபேதமொழிந்தனபலமு | ௯௯ |
| முனிவரனே | ௰ |
| முன்னையந | ௨௬௭ |

| செய்யுள். | பக்கம். |
| --- | --- |
| மூத்திரத்தை | ௨௱௰௯ |
| மூரிவல்லா | ௨௯௪ |
| மெய்யனைவி | ௮௫ |
| மெய்யினையு | ௮௮ |
| மெய்யுணர் | ௪௬௨ |
| மேருநிக | ௱௯௮ |
| மேருவினை | ௬௭௭ |
| மேலயபா | ௬௯௧ |
| மேலையசி | ௱௬ |
| மேலையாரிட | ௪௬௭ |
| மைத்திகழ் | ௱௫௫ |
| மைந்தர் | ௱௬௮ |
| மையலறு | ௪௪ |
| மையனீக் | ௬௱௧ |
| மையனைய | ௱௯௭ |
| மோசகனு | ௨௯௭ |
| யாதனையு | ௱௯௬ |
| யோசனையா | ௬௯௭ |
| வஞ்சகமன | ௨௬௮ |
| வடபாகத் | ௬௭௮ |
| வடவனா | ௨௱௨ |
| வதைத்தவனேநா | ௬௪௪ |
| வதைத்தவனேம | ௬௪௪ |
| வத்திரத்தி | ௬௱௰௭ |
| வந்திடுக | ௱௭௧ |
| வருந்திடுதா | ௨௨௯ |
| வருந்தமே | ௱௬ |
| வலஞ்செய்தா | ௪௱௰௬ |
| வலஞ்செய்து | ௬௯ |
| வனத்தின் | ௪௨௫ |
| வாக்கதனை | ௱௯௧ |
| வாக்கிறை | ௨௫௰ |
| வாக்கினு | ௨௮௮ |
| வாக்குனா | ௬௫௭ |
| வாடாவன | ௱௭ |
| வாயுவா | ௨௭௪ |

| செய்யுள். | பக்கம். |
| --- | --- |
| வாயுவினு | ௨௭௫ |
| வாயுவைச் | ௨௭௫ |
| வாழ்க்கை | ௬௫௯ |
| வானமதனை | ௯௯ |
| வானவரும் | ௬ |
| வானவர் | ௯௨ |
| விகரானம் | ௱௭௯ |
| விசையுறு | ௨௭௯ |
| விடக்கினை | ௨௨௬ |
| விடமழமுறு | ௱௫௭ |
| விடுத்துல | ௭௭ |
| விடுத்துவா | ௪௬௰ |
| விடைத்துத் | ௱௨௧ |
| விடையின் | ௱௬௨ |
| விட்டிடா | ௨௪௭ |
| விட்டிடும் | ௨௨௯ |
| விட்டுநின்ற | ௱௯௭ |
| விட்டுமுன் | ௪௬௬ |
| விட்டைமிக் | ௱௮௧ |
| விண்டவர்கண்மு | ௨௯௮ |
| விண்டவர்கள்வே | ௱௯௭ |
| விண்டனுய | ௨௯௭ |
| விண்ணுளார் | ௱௬௯ |
| விதமேப | ௪௱௨ |
| விதவெனப் | ௨௭ |
| விதிதிகழ் | ௪௬௯ |
| விதித்தவு | ௬௬௯ |
| விதித்திறத் | ௱௮௨ |
| விதிநான் | ௫௬ |
| வித்தகனற் | ௱௯௬ |
| வியங்கமு | ௨௨௯ |
| விரித்தமு | ௱௯௮ |
| விருத்தர் | ௬௭ |
| விருந்தினை | ௨௪௨ |
| விலக்கிய | ௬௱௰௬ |
| விழைவாமி | ௯௪ |
| விழைவின | ௯௯ |
| விளக்கினு | ௨௫௭ |
| விறலிடப | ௱௮௫ |
| விற்றவன் | ௱௭ |
| வினைகளு | ௨௮௫ |

# அகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| வீரமுமுன | ௱௫௯ | வெள்ளிபட் | உ௪௯ | வேதமாதிர | ௱௯௨ |
| வீரியமுமா | உ௱௰௯ | வெறுத்துவ | ௱௯௩ | வேதமாதிரா | ௪௮௨ |
| வீற்றிருக்கு | ௪௱௯ | வெறுப்பான் | ௱௰௭ | வேதாவுங் | ௪௱௰ |
| | | | | வேதிக்குஞ் | ௱௭௮ |
| வெண்பொடி | ௯௱௨௪ | வேதகனே | உ௯௯ | வேரறப்ப | உ௯௨ |
| வெந்தழலே | ௱௭௯ | வேதத்திறை | ௱௬௨ | வேலைதோறு | ௱௯௫ |
| வெந்துயர் | ௱௭௯ | வேதநிந்த | உ௭௭ | | |
| வெய்யவினை | ௱௭௰ | வேதநீதியை | உ௱ | வைத்தவர | உ௱௰ |
| வெருளவிரு | ௱௮௫ | வேதநீதிவி | ௱௯௯ | | |

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவதருமோத்தரவுரை.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

விநாயகர்வணக்கம்.

- கலிநிலைத்துறை.

மலைக்குமகள் பெற்றமக னைக்கயமு கத்தனைம னத்தெழுதியான்
அலற்பிணிபி றப்பறவ ணுக்களைய கத்தியமு னிக்கருளினான்
உலப்பில்கரு ணைக்கடலு ருத்திரனு ருத்தனிலு தித்தகுமரன்
* இலக்குமிய லைக்கலியி ளைக்கவுமு ரைப்பனுல கிட்டமுறவே.

என்பது. யான், மலையரையன் மகள்பெற்ற மைந்தனாகிய யானை முகத்தையுடைய விநாயகனை மனத்திலே தியானித்து வற்றாத கிருபாசமுத்திரமாகிய உருத்திரனது திருமேனியிற் றோன்றிய பிள்ளையார் தமதருளினா லான்மாக்களுக் காணவாதியாலுண்டான பிறவிநோய் தீர்த்தற்பொருட்டு அகத்திய முனிவருக் குபதேசித்த சிவதருமோத்திரத்தைக் கலிவலிகெடவும் உலகங் கதிபெறவு முரைக்கின்றே னென்றவாறு.—யானென்னு மெழுவாயுரைப்பலென்னு மல்லீற்றுத்தன்மை யொருமைவினை முற்றொடு முடிந்தது. அணுக்களை யென்னுமையுருபு. ஈண்டு நான்கனுருபாய் மயங்கிற்று.

### சிவபெருமான் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருமாலும் போதினனுந் தேவருமா முனிவருமே
செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லைமணி மன்றுடன்
மகிழ்வான் றன்னை
உருவாகித் தானுயிர்கட் குருவாக்கி யளித்தடக்கி
யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி பணிந்துளத்திற்
பேணு வாமே.

* இலக்கல் - விளக்கல் - ஈண்டுபதேசப் பொருட்டாய் நின்றது.

எ-து. நாரணனும் பிரமனுந் தேவரு முனிவரு நெருங்கி நின்று துதிசெய மணநிறைந்த சோலைகள் சூழுந் தில்லைமணி மன்றின்க ணின்று நிருத்தஞ்செய்ய மகிழ்வோனுமாய்த் தானே திருமேனிதரித்து ஆன்மாக்களைச் சிருட்டித்துத் திதித்துச் சங்கரித்து அனுக்கிரகஞ்செய்யும்பெருமானுமாய் அனாதிமல முத்தனுமாயிருக்கிற சிவனை யவனது சீபாதகமலத்தில் யாம் வணங்கி யெமதுள்ளத்தில் தியானிப்பாம். எ-று. ஓகாரம்-அசைநிலை. (க)

சின்மயனைச் சிவனைமல வலிதொலைய விஞ்ஞான
கலர்க்குஞ் செப்புஞ்
* சொன்மயனைத் தகளிலியைத் துலையிலியைப் புலியரவுஞ்
சுரர்க்கோப் பாரும்
பொன்மயனும் புகழவருள் புரிவானை யனைத்துயிரும்
பொருந்திப் பேத
மின்மையனைப் பதம்பணிவா ரெணியவர மெணியபடி
யெய்து வாரே.

எ-து. ஞான மயனுமாய் மலவலிகெடப் பிரணவர் முதலிய † விஞ்ஞானகலர்க்கு மருளிச்செய்த திவ்யாகமத்தை வடிவாயுடையனுமாய் மலரகிதனுமா யொப்பிலாதவனுமாய் வியாக்கிரபாத பதஞ்சலிகளுந் தேவர்களுக்கொப்பாகிய தில்லைமூவாயிரவரு மிரணியவன்ம மகாராசரும் பணிய வவர்களுக் கனுக்கிரகஞ் செய்வோனுமாய்ச் சருவான்மாக்களிடத்து மிரண்டற வியாபித்துப் பேதமற்றிருப்போனுமா யிருக்கிற சிவனை யவனது சீபாதகமலத்திற் பணியுமவர்கள் கருதின வரத்தைக் கருதினபடியே பொருந்துவர்கள் எ-று.

விஞ்ஞானகலர்க்குமென்ற வும்மையால் மண்டலர் முதலிய பிரளயாகலர்க்கு மென்பதுங்கொள்க. (உ)

## சத்தி வணக்கம்.

‡ அப்பாலைக் கப்பாலைக் கப்பாலா யறிவரிய
வமலை தன்னை

---

* சொல்லென்ப தாகுபெயரா யாகமத்தை யுணர்த்திற்று.

† விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னு மூவகை யான்மபேதங்களையுந் தத்துவப்பிரகாசம். ௯௭-ம் பாட்டிற் கண்டுகொள்க.

‡ "மெய்ப்பால்வெண்ணீ றணிந்த மேனியானை வெண்பளிங்கி னுட்பதித்த சோதியானை, யொப்பானை யொப்பிலா வொருவன்றன்னை யுத்தமனை நித்திலத்தை யுலகமெல்லாம், வைப்பானைக் களைவானை வருவிப்பானை வல்வினையேன் மனத்தகத்தே மன்னினானை, யப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை யாரூரிற் கண்டடியே னயர்த்தவாறே." என்று ஆளுடையவரசு அருளிச்செய்ததனு மறிக.

யப்பாலுந் தானாகித் தொழிலைந்து மியற்றாதே
    யியற்று வாளை
முப்போது மலர் தூவி முடிசாய்த்து மனத்தகத்து
    மூன்னு வாளைத்
தப்பாதே பிறப்பறுக்குஞ் சிவகாம சவுந்தரியைப்
    பணிவாந் தாண்மூன்.

எ-து. மாயை பெருமாயை யெனக் கூறிய விரண்டினுக்கு மப்பா லா யான்மாக்க ளறிதற்கரிதாய் மலமில்லாத சிவசத்தியுமாய்ச் சருவ வியா பியுமாய் ஐந்தொழிலுந் தான் செய்யாமல் தன்சந்நிதி மாத்திரத்திலே காரி யப்படுத்துமவளுமாய்த் தனது ஸ்ரீபாதங்களின் மூன்றுகாலங்களு மலர்களைத் தூவி யிதய கமலத்திற் றியானித்து வணங்கு மடியவர் பிறப்பை நிச்சயமா யறுப்பவளுமாகிய சிவகாம சவுந்தரியை ஸ்ரீபாத கமலம் பணிவாம். எ-று. ()

## காரைக்காலம்மை முதலாயினோர் வணக்கம்.

ஆலவனத் தமலனடங் கண்டுவந்த காரைக்கா
    லம்மை தன்னைப்
பாலருந்தி யுமைமுலையிற் பதிகவிதம் பலபகர்ந்த
    பாலன் றன்னைச்
சூலையினைச் சிவனருளாற் றுடைத்தானைத் தடுத்தாண்டான்
    றோழன் றன்னை
மாலைமணி வாசகனை மற்றையடி யனையுமடி
    வணங்கு வாமே.

எ-து. திருவாலங் காடென்னுந் திருப்பதியின்கண் பரமசிவன் முஞ்சிகேசமுனி கார்க்கோடராகிய நாகராசரிவர்களுக்குத் திருநடஞ்செ ய்யு மூலதாண்டவத்தைத் தெரிசித்துச் சந்தோஷித்த காரைக்காலம்மைய யுஞ், சீகாழியிற் றிருநிலைநாயகியார் திருமுலைப்பாலை யமுதுசெய்ததனாற் றிருஞானமுண்டாய்ப் பல சந்தத்தாற் றிருப்பதிகங்களை யருளிச்செய்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும், வீரட்டேசுர னருளினாலே சூலைநோ ய் நீங்கிய திருநாவுக்கரசரையுந், தடுத்தாட்கொள்ளுஞ் சிவனுக்குத் தோழ ரான சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், இரத்னமாலைபோன்ற வாசகத்தை யுடைய வாதவூராளியையும் சண்டேசுரர் முதலாகிய பத்தர்களையு மவர்கள் ஸ்ரீபாதத்தில் வணக்கஞ் செய்வாம். எ-று. (௧)

## வாழ்த்து.

வானவரும் பூசுரரு மாதவருங் கோதனமு மன்னி வாழ்க
கானமதி னடமாடி யடியார்க்கும் பதமருத்துங் கருணை யாரும்

ஊனமற வோங்கிடுக வுலகிதனின் மனுமுறையா லோம்பு மன்னர்
தானவினை யொடுதழைக திங்கடோறு மும்மாரி பொழிக தானே.

எ-து. வெளி. சூத்திரம், 'வெளிப்படுசொல்லே கிளத்தல் வேண்டா வெளிப்பட வாராகிளத்தல் வேண்டும்' என்பதனாலறிக, சூ-'கடவுளு முனிவரும் பசுவும் பார்ப்பாரு மரசருமறையு நாடுமென்ப' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனா ராதலா லிக்கருத்தே பற்றி யிவ்வாசிரியரும் வாழ்த்துக்கூறிய தென்றறிக. (௫)

## அவையடக்கம்.

சீரியருஞ் சீரியனை யல்லானைத் தனச்சிறுமை செப்பு வாரோ
யாரியரு மாரியனை யல்லானைக் குலப்பழுது மறைவ ரேயோ
வீரியரும் வீரியனை யல்லானை வலியின்மை விளம்பு வாரோ
கூரியருங் கூரியனை யல்லானைச் சொற்றவறுங் கூறு வாரோ.

எ-து. உடையாருமில்லானை சிறுமையுடையனென்று சொல்லுவர்களோ, குலப்பெருமை யுடையார் அங்ஙனமில்லாதவர்களைக் குலப்பழுதுஞ் சொல்லுவர்களோ, வெற்றிப்பாட்டினையுடைய சூரர்களும் அங்ஙனமில்லாத கோழையனை யேழையென்று சொல்லுவர்களோ, ஆகலின் பஞ்சவிலக்கண முதலியவற்றைக் கற்றுக் கூறிய அறிவுடையார் அங்ஙன மில்லாத வெம்போல்வார் சொன்ன சொல்லுக்குங் குற்றஞ் சொல்லுவர்களோ சொல்லார்கள் எ-று.

ஆரியர் அறிவுடையோர். ஏகார-ஒகாரங்கள் ஈண்டெதிர்மறைக்கண் வந்தன. சூ. "அவையடக்கியலேயரிறபத்தெரியின்; வல்லுநர்கூறி வகுத்தனர் கொண்மினென், றெல்லாமாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் என்க. (௬)

இந்நூற் சிறப்பும் வரலாறுந் தொகுத் துணர்த்துகின்றார்.

ஆதிநடு வந்தமிலா னமலனுயிர்க் கழுக்கறுக்க
வறைந்த வாய்மை
வேதமுத லுணர்ந்தகுகன் விரைமலர்த்தா ளகத்தியன்றான்
வியந்து போற்றிப்
போதகனை யனைத்துயிர்க்கும் புலமாக்கு நெறிபுகலா
யென்னக் கந்தன்
ஓதியருள் சிவதருமோத் தரநூலைத் தொகைசெய்து
முறைப்பா மோர்ந்தே.

எ-து. யாம், முதனடு வீறில்லாத நின்மலனாகிய சிவனுயிர்களுக்கு ஆணவ முதலிய பாசங்களை யறுக்கும்பொருட்டு அருளிச்செய்த வேதாகம

முதலிய வுண்மைஞானத்தையுணர்ந்த பிள்ளையார் மணம்பொருந்திய செந்தாமரைபோன்ற சீபாதங்களைவணங்கி ஞானசாரியனே சருவான்மாக்களுக்கு மறிவுண்டா மார்க்கத்தைத் அருளிச்செய்ய வேண்டுமென்று அகத்தியன் விண்ணப்பஞ் செய்யப் பிள்ளையார் அருளிச்செய்த சிவதருமோத்தரமென்னுஞ் சிவாகமத்தை யுற்றுநோக்கித் தொகுத்துத் தமிழாற் சொல்லாநின்றேம். எ-று.

தொகைசெய்து மென்றவும்மையால், வகுத்துமென வருவித்துரைக்கப்பட்டது. அகமாகிய விந்திய பருப்பதத்தைக் கீழ்ப்படுத்துகையால் அகத்தியனெனப் பெயராயிற்று. சூ. "வினையினீங்கி விளங்கியவறிவின், முனைவன் கண்டது முதனூலாகும்" என முன்னூலைப்பார்த்து மொழிபெயர்த் துரைக்கையாலிது வழிநூலெனப் பெயர்பெறும். சூ. "வழியெனப்படுவ ததன் வழித்தாகு, மதுவே தானுமீரிருவகைத்தே, தொகுத்தல் விரித்தல் தொகைவிரிமொழி பெயர்ப்பெனத் தகுநூல் யாப்பீ ரிரண்டென்ப" என்பதனுள் இஃது தொகை வகையென் றறிக. ஆக்கியோன்பெயரை முதற்கட் கூறாது நூற்பெயரைக் கூறிய தென்னுதலிற்றோ வெனின்; எல்லாரும் பிரமாணமாக வங்கீகரிக்க வேண்டுகையாலென்க. ஆக்கியோன்பெயர் முதலியன வருமாறு; ஆக்கியோன்பெயர், மறைஞான சம்பந்தநாயனார். வழி, சிவாகமத்தின்வழி. எல்லை, தமிழ்வழங்கும் நிலம். நூற்பெயர், முதனூலாற் பெற்றபெயர், யாப்பு, தொகைவகை. நுதலியபொருள், சிவதருமம் சிவஞானதான முதலாயின. கேட்போர், அவர்மாணாக்கர். பயன், வீடுபேறு என்றறிக. (எ)

கயிலாயத்திலிருக்கும் பிள்ளையாரை யகத்தியர் வணக்கஞ்செய்து வினவு முறையைவகுத்து எழு செய்யுளா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

மாதவ னகத்தியன் மலைக்குமகள் பெற்ற
போதகனை வெள்ளிமய மாகிய பொருப்பின்
வேதமுணர் சண்முகனை வித்தகனை யுற்றே
பாதமலர் முன்றுதி விதத்தொடு பணிந்தே.

எ-து. மகத்தாகிய தவத்தினையுடைய அகத்தியர் வெள்ளிமயமாகிய கயிலைமலையின்கட் சென்று மலையரையன் மகள் பயந்தவுபதேச குருவனாய் வேதத்தையுணர்ந்த வறுமுகனாகிய பிள்ளையாரைப் பலவிதமாகிய துதிகளினாலெதிர்பணிந்து எ-று. ஏகாரம் ஈற்றசை. (அ)

நின்னதடி கண்டிடினு நீசர்வினை நீங்கிப்
பொன்னுலக மெய்தியத னன்பொருள் புணர்ந்தே
இன்னிசை யிருக்குமொழி யந்தணர்க ளென்னப்
பின்னவை யென்னறவன் மற்றையவர் பேறே.

எ-து. பொல்லாத சாதியிற்றோன்றிய நீசரேயாயினுந் தேவரீர் சிபாதத்தைக் கண்டார்களாயின் றீவினை நீங்கிச் சுவர்க்கத்தினையடைந்து ஆண்டுண்டாகிய நல்லபோகங்களையனுபவித்து அது தொலைந்தவாறே பூமியின்கண் இனியவோசையையுடைய இருக்குமுதலிய மறைமொழிகளை அதிகரிக்கும் பிராமணராய் வந்து பிறப்பர். ஆகலின் நற்குலத் துள்ளோராய்வந்து நினது திருவடிகளைத்தெரிசித்தால் அவர்களடையும் பலனெங்ஙனஞ் சொல்லுகேன். எ-று. (௧)

என்றினிய வாய்மைக ளியம்பியிறை கூற
அன்றுமை தனக்ககில நீதியு மறிந்தாய்
இன்றுயிர் தனக்குறுதி நீயரு ளெனக்கே
ஒன்றியரு ணின்றமையி றுன்றெனபிர வோனே.

எ-து. மகா பலத்தையுடையவரே முன்னாள் பார்வதியார்க்குப் பரமேசுரன் திவ்வியாகமங்களை யருளிச்செய்ய வப்பொழு தெல்லாவற்றையுங் கேட்டறிந்தீர் தேவரீர் சிவனது கிருபையுடன் பொருந்தியிருக்கையாலிப்பொழுதுயிர்க் குறுதியான நூலையெனக்கு அருளிச்செய்வீர். எ-று. (௰)

என்றுமுனி சண்முகனை யேசறவு பேசி
நின்றுபினு மாதரவு நீடநிறை கூட
அன்றுவினவுந் திறமனைத்தையு மதித்தே
யின்றறைவல் பாசவிரு ளீடற விளைத்தே.

எ-து. அகத்தியமுனிவர் இப்படியே கருதிப் பிள்ளையாரைத் தோத்திரஞ்செய்து நின்று பின்பு சிரத்தை மேன்மேலும் வளர்ந்து செல்ல அறிவு நிலைபெற்று வணக்கத்துடன் பொருந்தி யன்றுவினவிய திறமெ[illegible]வற்றையும் விசாரித்து ஆன்மாக்கட்குப் பாசவிருண் [illegible] கெடும்படிக்கு இப்பொழுது சொல்லா நின்றேன். எ-று. (௰௧)

உத்தம சுரர்க்கதிப னுனவினை யோட்டும்
வித்தக விசாகமயில் வாகனவின் மேவும்
புத்தியொடு முத்திதரு போதகபு லாலுண்
சத்திதர யான்வினவல் கேட்டுவிடை சாற்றாய்.

எ-து. வெளி. (௰௨)

தக்கசிவ தன்மநெறி தன்னுளரி தாய
மிக்கசிவ தன்மநெறி யாதுவிப ரீதம்
உக்குணர் வுதித்திட வுணர்க்குமுனை யாதோ
நக்கனடி யர்ச்சனையும் யாதிவை நவிற்றாய்.

எ-து. தகுதிப்பாட்டினையுடைய சிவ புண்ணியங்களுக்குட் பிறரறிதற் கரிதாய மிக்க பலனைக் கொடுக்கும் சிவதன்மத்தின் முறைமையாது?

வாக்கியங்க ளனேகமுளவாயினும் ஐயந் திரிபின்றி மெய்யுணர்வுதோன்றுதலினும் வாக்கியம் யாது? சிவனது திருவடியிற் பூசைசெய்யு முறைமை யாது? இவைகளெல்லா மெனக்கு அருளிச்செய். எ-று. (௰௩)

நாடரிய ஞானதர தானமு நவிற்றாய்
பீடுபெறு பேதமுமெ னக்குமுறை பேசாய்
ஈடுபெற வீயுமுறை யீபவ ரேற்பார்
கூடுபய னாதிய வனைத்துமுறை கூறாய்.

எ-து. ஆன்மாக்க ளறிதற்கரிய விசிட்டமான சிவஞான தானவிதியையும், பெருமையினையுடைய ஞானதானஞ் செய்யு மதற்கு மண்டபம் அதிவாதம் பூசைமுதலிய விதியையும், பெருமைபொருந்தத் தானங்கொடுக்கும் விதியையும், அதனைக்கொடுக்கு மவர்கள் வாங்குமவர்க ளடையும் பலனையும் இவைகளெல்லா மெனக்கடைவாக அருளிச்செய். எ-று.

அனைத்து மென்பதனாற் கன்மயாக முதலிய ஐவகை யாகத்தையும், பல விசிட்டகாரணத்தையுஞ், சிவதரும பேதத்தையும், பாவவினைத் திறத்தையும், ஆன்மாக்கள் சுவர்க்க நரகங்களையடையு முறைமையையும், அவர்கள் சனன மரணப்பட் டுலகத்திற் றுயருறு முறைமையையும், நகரத்தில் வினைப்பயனை யனுபவித்துச் சேடமாய் அதற்கேற்ற அடையாளத்தைப் பூமியின்கண் வந்து பொருந்து முறைமையையுஞ், சிவஞானயோகத்தின் முறைமையையும், நித்தியமுதலிய கன்மலோபத்துக்குப் பரிகாரஞ் செய்து அதனைத் தீர்க்கு முறைமையையும், பசுக்கணிற்குஞ் சிவலோகத்தின் வனத்தையும் உணர்த்தியதென்றறிக. இதனைப் பரமதருமோபதேசமென்னுஞ் செய்யுளாற் பின்னர் முடித்துக் கூறப்படு மாண்டுக் காண்க. (௰௪)

மேற்பிள்ளையார் திருவாக் குணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

என்றுமுனி வினவுதலு மிரக்க மெய்தி
யெழிலுடைய குமரன்றா ளிணையி லீசன்
துன்றுகழ லடிநினைந்து துயக்க நீங்கச்
சொல்லுவங்கேண் முனிவனே துகளிலீசன்
அன்றருள்செய் சிவதருமோத் தரமெ னாலி
னறமதனை யறிந்துசில ரதனை யாக்கிச்
சென்றணையச் சிவபுரியைத் தெருண்டு தம்மைச்
சிவனடியைச் சிலரடைய மலமுந் தேய்த்தே.

எ-து.. அகத்தியமுனிவர் இவ்வாறு வினவியவளவி லழகினையுடைய பிள்ளையார் கிருபையோடு ஒப்பிலாத சிவனது நெருங்கிய வீரக்கழ

வினையுடைய போதங்களைத் தியானஞ்செய்து பின்பு முனிவரனே நின்மல னாகிய சிவன் பக்குவான்மாக்களிற் சில சிவதருமங்களை யறிந்தனுட்டித்த தனாற் சிவலோகத்தை யடையவும், அதிபக்குவரிற் சிவ ஞானத்தினாலே யாணவ முதலிய வாதையைப் போக்கித் தற்சொரூப தெரிசனப்பட்டுத் தனது திருவடியையடையவும், சிருட்டிகாலத்திற் சிவனருளிச்செய்த காமிகமுதலிய திவ்யாகம மிருபத்தெட்டினுட் சந்தான சருவோத்தமமென்னு மூலாகமத்தி னுபபேதமாகிய ஈசானம், சிவதருமம், சிவதருமோத்தரம், திவ்யப் புரோக்தம் குபேரமெனக் கூறப்பட்ட வைந்தனுட் சிவதருமோத்தரமென்னு முபாகமத்தை ஐயந்திரிபு நீங்கச் சொல்கின்றோம் கேள். எ-று.

மலமுமென்ற வும்மையாற் கன்மமாயை யென்பனவும் கொள்க. ஏகாரம்- ஈற்றசை. இஃதுபபேத மென்பதனை *ஆகமத்திற் சருவோத்தமத் துபபேதமெனப் பின்னர்க் கூறுகின்றார்.

சூ. "வணக்கமதிகார மென்றிரண்டுஞ் சொல்லச் - சிறப்பென்னும் பாயிரமாஞ்சீர்," என்று "ஆயிரமுகத்தா லகன்றதாயினும்-பாயிரமில்லது பனுவலன்றே" என்றுங் கூறலின் பாயிரமுரைத்து நூலுரைத்தன்மரபென்க. யாதானுமோர் நூற்குப் பொருளுரைக்குங்கால் காண்டிகை வகையானு முரைவகையானு முரைக்கப்பெறும். ஈண்டிந்நூற்குக் கூறியதியாதெனின்; சூ. "சூத்திரத்துப் பொருளன்றியு மியாப்புறவின்றி யமையாதியல்பவை யெல்லாமொன்ற வுரைப்பதுரையெனப்படுமே," "பொழிப்பேயகலநுட்ப மெச்சமென்றப்பா னான்கேயுரைக்குறுப்பாகும். பொழிப்பேபொருளை யொருப்படுத்துரைத்தல். விரித்துரைதானே யகலமென்ப. நுட்பமப்பொருட்கேற்பவுணர்த்தல் அடுத்தபொருளா யகன்றுநிற்பதனை யெடுத்துரைப்பதுவேயெச்சமாகும்." என்றதனாற் பொழிப்பென்பது, தொகுத்துணர்த்தல், அகலமெது விரித்துணர்த்தல், நுட்பமென்பது கடாவிடைகூறல், எச்சமென்பது கடாவறத் துணிந்தபொருள். இதனானே ஒரோவழியாற் சிறப்புப்பாயிரங் கூறியதென்றறிக. (௰௫)

பாயிரமுற்றிற்று.

சிவமயம்.

## முதலாவது

# பரமதருமாதியியல்.

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின், பரமதருமமாகிய சிரத்தை முதலிய விதியைக்கூறுகின்றாராகலிற் பரமதருமாதியியலென்னும் பெயர்த்து. சூ. "இயலேசாயலுந் தமிழ்நடையுமாகும்" என்பதனா லிதனைத் தமிழ் நடையாற் கூறுதலானியலென்றார்.

மேலித்தலைச் செய்யுளென்னுதலிற்றோ வெனின்
நிறுத்தமுறையானே சிவதருமத்துக்கு மூலஞ்
சிரத்தையென்று உணர்த்துத னுதலிற்று.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆதரவே பரமான வறமதாகு
　　மாதிநடு வந்தமிவற் றனைத்து மாகு
மாதரவற் றவரீகை யறமேயாகா
　　தாதலினா லாதரவே மூல மாகு
மாதரவே பிரகிருதி யான்மாவீச
　　னெனும்பொருளை மறிவிக்கு மமலன் றாளை
மாதரவே யடைவிக்கு மாதலாலே
　　யனைத்தினுக்கு மாதரவே மூல மாமே.

எ-து. வெளி. சிரத்தைக்குப் பரியாயப்பெயர். பத்தியெனவும், பாவமெனவும், பரமப் பிரீதியெனவும், சிவதர்மத்தி னுருப்பாடெனவும், பிரதி பத்தியெனவும் ஐந்து விதப்படும். அவைகளை யாண்டாண்டு வந்துழி வந்துழிக்காண்க. ஆதரவு எ-து. சிரத்தை. (௧௬)

மேலதனை வற்புறுத்தி யுணர்த்துகின்றார்.

மகவினையா லாகத்தின் வருத்தந்தன்னான்
　　மாநிதியான் மற்றுமுள பொருள்க ளாலுந்
தகைபெறுவா னவாலுங் காதலின்றேற்
　　சாதிக்கப் படுவதல தருமந் தானே
யுவகையுற வாதரவாற் சிறிதேதேனு
　　முதவியிடு மறமதனாற் பெரிதுண் டாகு
மகநெகலு மாதரவே யரியபேறென்
　　றறியாதா ரென்பெறுவ ரன்றோ வன்றே.

எ-து. யாகாதி கன்மத்தினாலே யாதல், கிருச்சிர சாந்திராயண முதலியவற்றாற் சரீரத்தை வாடுதல் செய்தாதல், மிகுந்த திரவியத்தாலாதல், நவரத்னமுதலிய பொருள்களினாலாதல், சிரத்தையில்லாத விடத்துத் தகைமைப் பாட்டையுடைய தேவர்களாலுஞ் சிவதர்மங்கள் சாதிக்கப் படுவதல்ல, யாதொருவர் சிரத்தையுடனே யற்ப மேதாயினுந் தானஞ் செய்யி னதனாலே மிகுந்த பலத்தைக் கொடுக்குந் தர்மமுண்டாம். ஆதலான் மனமகிழ்ச்சியுடைய வாதரவே பெறற்கரிய பேறென் றறியமாட்டாதார் என்ன பலத்தை யடையப்போகிறார்கள் ஐயோ ஐயோ. எ-று.

வானவராலும் பெறற் கரியதெனவே யேனையோராலுஞ் சாதிக்கப் பெறாதென்பதாம். எகாரம்-ஈற்றசை. அன்றோ வன்றோ எ-து. இரக்கத்தின் கண் வந்த குறிப்பு. (௰௭)

சிவவாக்கியத்தினது விசிட்ட முணர்த்துகிறார்.

முனிவரனே சிவதரும மூலஞ்சொன்னோ
மொழிந்திடுவம் வாக்கியங்கேண் மோகம் போகப்
புனிதமுற மனமொருமைப் புந்திதானும்
பொய்யகல மெய்யகலப் பொள்ள லாக்கைத்
துனிதொலையத் தனையிணையில் சோதிபாதஞ்
சூடியிடச் சிரம்படர்ந்து தொடர்ந்து நின்ற
வினைவிளிய விழைவுறவே கேட்பார்தங்கள்
விளக்கெனமெய்ப் பொருளையது விளக்க வுள்ளே.

எ-து. முனிகளுக்குட் சிறப்பினை யுடையவனே சிவதர்மத்துக்குச் சிரத்தைதானே மூலமென்று சொன்னோம், சிவனருளிச்செய்த சிவவாக்கியத்தை யாசையுடன் கேட்போருடைய சுகதுக்கங்கண் முற்றுதலாலுண்டாகி மோகங் கெடவும், மனங்கவராது நிச்சயிப்பிக்கும் புத்தியுமென்னவே யந்தக்கரணங்கள் சுத்திபெறவும், பொய்யானதுஅவனைப் பொருந்தாமல் விட்டுப்போகவும், மெய்யானது அவரிடத்திற் பொருந்தியெங்கும் பரம்பவும், நவத்துவாரத்தினையுடைய சரீரத்தை யெடுக்குந் துக்கமொழியவும், தனக்கொப்பொருவரு மில்லாத சிவனது சிபாதத்தைத் தலையிற்றரிக்கவும், பிரவாகா னாதியாய செனனங்கடோறும் தொடர்கின்ற கன்ம க்ஷயம் பிறக்கவும், விளக்கானது விசுவத்திற் பதார்த்தங்களை விளக்குவதுபோலப் பக்குவான்மாக்களுடைய விதயகமலத்திற் பதி பதார்த்தமுதலிய பொருள்களை விளக்கவும், அந்தச் சிவவாக்கியத்தைச் சொல்லாநின்றோ மதனைக் கேள். எ-று. (௰௮)

கபிலர் பதஞ்சலி முதலாயினோர் வாக்கியங்கள் பிரமாணமன்றோ வெனின் அவர் மலத்தோடு கூடினவராதலி னவர் வாகியம் ஆப்தமானபிரமாணமன்று. அற்றாகலி சருவஞ்ஞனான சிவனது திரு

குருபரனு மோங்காரப் பொருளேயென்று
கொண்டாரே மும்மலமும் விண்டார் தாமே.

எ-து. பூமியின்க ணந்தகாரங்கெட வுலவுகின்ற வாதித்தனில்லையாயிற் கண்ணானது தனக்கென வொளியுண்டாயினும் பொருளொடு பொருந்திக் காணமாட்டாது. அதுபோல வொப்பில்லாத சூக்கும பஞ்சாக்கரமாகிய வோங்காரம் பிரமன்முதலாயினோரை யதிட்டித்துக்கொண்டு மனமுதலியவற்றை * அகரமுதலிய வக்கரங்களைக் கொண்டு காரியப்படுத்தாவிடத்து ஆன்மாக்கள் கருவி கரணங்களுடன் கூடியிருந்தார்களாயினும், அந்தக் கருவி கரணங்கள் சீவியாதாதலால் ஆன்மாக்களுக் காணவ விருளை நீக்கி யெக்காலு மறிவை விளங்கப்பண்ணும் பரமசிவன் றிருவாக்கை உபதேசிக்கு ஞானாசாரியனு மந்தப் பிரணவத்தின் பொருளேயென் றுட்கொண்டவர்களே மலமாயா கன்மங்களை நீங்கினவர். எ-று. (௨௨)

முதற்கட் டொகுத்துப்போந்த ஆசிரியர் சிவதர்மம் பரி
பாலன மாகையின் பொருட்டரசனுக்குபதேசிக்கு
மியல்பு மவனது சிறப்பு முணர்த்துகின்றார்.

ஐயமற விபரீத மதுவுமீச னருண்மொழியை
யாராய்ந்த வனகனாசான்
வையகமு முய்யவுணர்ச் சைவதன்ம மன்னவனுக்
களிக்கவவன் மருவு நீதி
யெய்தியிடு முலகச்ச மெய்தலறு மெல்லோரு
மிருபயனு மெய்த லாலே
சைவநெறி தனையனையற் களித்த வாசான்
சகத்தினுக்குந் தேசிகனே சாற்றுங் காலே.

எ-று. சிவனருளிச்செய்த வேதாகமங்களை யையந் திரிபற வுணர்ந்து பாவமில்லாத ஆசிரியரானவரும், உலகத்திலுள்ள வான்மாக்க ளீடேறும்படி கருதிச் சிவதர்மங்களை விசாரித்து அரசனுக்குப் போதிக்க, அந்தவரசன் சாமபேததான தண்டமென்னு நீதியைப் பொருந்தி நடப்பான், அவனீதி வழி நடக்கவே யுலகத்திலுள்ள வான்மாக்களு நீதிவழி நடவாதோரைத் தண்டிப்பனென்னும் பயம்பொருந்தி யறத்தின்க ணொழுகுவர், அங்ஙன நீதிவழி நடக்கு மரசனு மான்மாக்களும் புத்தி முத்திகளை யடைதலால் அர

* அவ்வுட னுவ்வுமவ்வு மனம்புத்தி யாங்காரங்கள்
செவ்விய விந்துநாதஞ் சித்தமோ டுள்ளமாகு
மொவ்வெனு மெழுத்தாமைந்து முணர்வுதித் தொடுங்குமாறு
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும்,
என்பதனா லறிக.

சிவஞான சித்தியார். ௯-ம் சூத்திரம். ௫-ம் கவி.

சனுக்குச் சிவதீக்கையைச் செய்து சிவதர்மத்தின் வழி நிறுவின வாசிரியன் மகிமையைச் சொல்லு மிடத்தவனே யுலகத்துக்கெல்லா மாசிரியன். எ-று.

வையகமு மென்ற வும்மையா லரசனு மென வறிக. அச்சமெய்தலாலு மென்ற வும்மையா லியல்பானும் பத்தியானு மெனவறிக. (௨௩)

அந்த வரசன் உலகத்துள்ளோரை நீதிவழி நடத்துமுறை
யுணர்த்துகின்றார்.

பூபதியு நான்முறையிற் புவியுளோரைப்
புரிவிக்க வழுவாது புரிந்தார் தாமும்
பூபதியைச் சிவனெனவே புந்திசெய்வர்
பொருந்திடுவர் தன்மார்த்த காமம் பூமேற்
பூபதியு மித்தகையே புரிவார் தம்பாற்
பொருள்கொள்க வொருகூறு புவிக்கைந் தாக்கிப்
பூபதியை நிரயத்திற் பொருந்துந்தீயார்
பொருளவரை முறைநிறுவிற் பொருந்தா னங்கே.

எ-து. அரசன் பூமியின்க ணுள்ள வான்மாக்களை மனுநீதி வழியே யவரவர் சாதிக்கொத்த அறங்களைச் செய்விக்கக்கடவன், அங்ஙன முறைபிறழா தறங்களைச் செய்த வான்மாக்களு மந்த வரசனைச் சிவனென்றே புத்தி பண்ணக் கடவர்கள், அப்படி புத்திபண்ணினோர்க ளிந்தப் பூமியிலே தானே யறம் பொரு ளின்பங்களைப் பெறுவர்கள். அரசனு மிந்த மனுநான்முறையே யொழுகு மவரிடத்துப் பொருளை யாறு கூறாக்கிக் குடிகளுக் கைந்துகூறுந் தனக்கொரு கூறாகக் கொள்ளக்கடவன். அறநெறியி னொழுகாத தீவினை யோர்பாற் கொள்ளும்பொரு ளரசனை நரகத்தில் விழும்படி செலுத்து மாதலாற் பொருளனைத்துங் கொள்ளக் கருதாம லந்தத் தீவினை யோரைக் குற்றத்துக்குத் தக்க தண்டஞ்செய்து வாங்கி யறநெறியி னிறுத்துவனாயி னவ்வரச னரகினை யடையான். எ-று. (௨௪)

குரவ னரசனுக்குத் தர்மபுத்தி வருவிக்கு முபாயமு
மந்தக் குரவனுக் கிவன் செய்யுங் கைம்மாறு
வேறில்லை யென்பது முணர்த்து
கின்றார்.

பார்த்திபனுங் காமத்திற் பொருளிற்சாலப்
பற்றுடைய னெனிற்குரவன் பரிவு கூர்ந்து
தீர்த்திடுக மந்திரந்தா லவடாதித்
திறந்திலுமே யறத்தினவன் சிந்தை செல்லப்
பார்த்திடுக பர்யோகம் பின்புநல்கப்
பராயோக மளித்துவினைப் பகைசா ராமற்

வாக்கே போக மோக்ஷங்களைக் கொடுக்கு
மென் றுணர்த்துகின்றார்.

அமலவா னருளியசொல் வாக்கியமே யஃறா
னருந்தத்தா லக்கரத்தா லதிக மற்பஞ்
சமலருரை யதுபோல விபரீதஞ் சிறிதுஞ்
சாற்றாதே யுள்ளபடி சாற்றுஞ் சாற்று
மமலனையு மணுக்களையு மண்ட பேத
மனைத்தினையு மறிவிக்கு மாத லாலே
பவமொருவு நெறிதன்னைப் பயக்கும் போகம்
பாலிக்குந் தானமுதற் பகர்த லாலே.

எ-து. மலரகிதனாகிய சிவனருளிச்செய்த திருவாக்கே விசிட்டமான வாக்கியம், அந்த வாக்கியமானது எழுத்தினாற் சுருக்கமும் பொருளினாற் பெருமையுமாயிருக்கும், அஃதன்றி இராகத் துவேஷத்துடனே கூடிய வான்மாக்கள் வசனம்போல விபரீதஞ் சிறிதுஞ்சொல்லாம லுள்ளபடியே சொல்லும், அஃதன்றிப் பதியையு மான்மாக்களையும் பாசமாகிய வண்டபேதமனைத்தினையு மறிவிக்கும். இதில் தானம் யாகமுதலியவற்றைச் சொல்லுகையாலே போகத்தையுங் கொடுக்கும், அந்தப் போகம் பொசித்துத் தொலைந்த பின்னர்ச் சனன மரணப்பட்டுழலாமற் பரமமான மோக்ஷத்தையுங் கொடுக்கும். எ-று.

உள்ளபடியே சொல்லுவ தியாதெனின். கூ. பா-கணிதத்து மந்திரத்துங் காண்க. கசடின்மை, என்பதுபோல மற்றெல்லாம் எனவறிக. வாக்கியமாவது * ஆகாம்க்ஷை முதலிய விலக்கண முடையது. (௰க)

இங்ஙனஞ் சிவவாக்கியப் பிரமாணங்கூறி அதனுட் சொல்லும்
மந்திரத்தின் விசிட்டமான மந்திர மிதென் றுணர்த்துகிறார்.

ஆதிதனி லோமென்னும் பதமதாக
வந்தமதிற் சிவாயவொலி யணைந்து நிற்க
வோதியவா றெழுத்தினையு முடைத்தேயித்த
வோமென்னும் பதப்பொருடா னுயிர்கட் கெல்லாம்
போதகனாய்ப் பொருவிலியாய் நிற்குமீசன்
புனிதனவன் சததிவிதமைந்து மற்றை

* ஆகாம்க்ஷை, யோக்கியதை, சந்நிதி இம்மூன்றும், வாக்கியப்பொருளுணர்ச்சிக்கேது, ஆகாம்க்ஷை. எ-து. அவாய்நிலை, யோக்கியதை, எ-து. தகுதி, சந்நிதி, எ-து. அண்மை, அவாய்நிலை, ஒருபதம் தன்னை முடிப்பதொருபதமில்லாத வழிமுடிவு பெறாது நிற்றல், தகுதி, பொருட்கு வாதையின்மை, அண்மை பதங்களை யொருதொடராக விரையக்கூறுதல், இவற்றின் விரிவெல்லாந் தருக்கசங்கிரகவுரையிற் காண்க.

யேதமிலா வஞ்செழுத்தின் பொருளே யெண்ணி
யிருபயனு முயிரடையு மிவற்று லென்றும்.

எ-து. அந்தச் சிவவாக்கியத்துட் கூறிய பஞ்சாக்கரம் ஆதியிலே ஓமென்னும் பதமும் அந்தத்திலே சிவாயவென்னும் பதமும், நடுவின் நம வென்னும் பதமுமிற்க, உச்சரிக்கின்ற வாறக்கரத்தையு முடையதாம். இந்த ஓமென்னும் பதத்தின் பொருளை விசாரிக்கிற் சருவான்மாக்களுக்கு மறிவை விளக்குமவனைத் தனக்கொப்பொருவரு மில்லாதவனைச் சருவ வியாபியாய் வாச்சியார்த்தமாயிருக்கிற சிவன் குற்றமில்லாத மற்ற வஞ்செழுத்தின்பொருள், அந்தச் சிவனுடைய வீசானமுதலிய சத்திகளைந்துமாம்; இந்தப் பதங்களாலே யந்தப் பொருள்களைக் கருதி யுச்சரிக்கி லான்மாக்களெந்தக் காலமும் போக மோக்ஷங்க ளிரண்டையு மடைவர். எ-று. (உ௰)

அந்தப் பிரணவத்தின் மகிமை யுணர்த்துகின்றார்.

ஓமென்னும் பதமதனில் வேதமாதி
யுற்பவிக்கு மாலவித்தி னுதிக்கு மாபோ
லோமென்னும் பதமதனை யுரைத்தார் தாமே
யோதினர்கள் வேதாதி யுரைக ளெல்லா
மோமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே
யுணர்ந்தாரும் வேதாதி பொருளை கூற
வோமென்னும் பதமொழித்தஞ் செழுத்துமாதர்க்
கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்க லாமே.

எ-து. ஆலம் வித்திலே நின்றுஞ் சாகோப சாகைகள் தோன்று மாறுபோல, ஓமென்னும் பதத்திலே வேதமுதலாய நூல்களெல்லாந் தோன்றும் ஆகையால் ஓமென்னும் பதத்தை யுச்சரித்தவர்களே வேதமுதலாய நூல்களெல்லா மோதினவர்கள். அந்தக் கரணங்க ளொருமிக்க, வோமென்னும் பதத்தினின்ற பொருளாகிய சிவத்தை யறிந்தவர்களே வேதமுதலாகிய நூல்களிற் சொல்லும் பொருள்களெவையு முணர்ந்தவர்கள் ஆதலாற் பார்ப்பார் முதலிய நாலுவன்னத்துண் மாதருஞ் சற்சூத்திரரு மந்தவேதமாதாவாகிய பிரணவத்தை நீக்கிநின்ற வஞ்செழுத்தையுமே யுச்சரிக்கலாம். எ-று. (உக)

இதுவுமது.

இருளுலகி லறவுலவு பிரவியின்றே
யிசையாது பொருளொடுகண் ணொளியுண் டேனும்
பொருவரிய வோங்காரப் பொருளொன்றின்றேற்
பொறியிலங்கா தனைத்துயிர்க்கும் பொறியுண் டேனு
மருளதனை யணுக்களுக்கு மாற்றியென்று
மதியருளும் பரமசிவன் வாக்கைக் கூறுங்

புகழ்முதலால்-என்பதனல் - மக்கள் சுற்றமென்னுங் காதலாலும் அரையன் முதலியோர் பயத்தாலும் மாறுகோளாலுமென வறிக. (௨௮)

சிவபூசைக்கு வேண்டு முபயோகங்களுக்குட் டலைமை
யாகிய பஞ்ச கௌவியத்தின் முறைமை
உணர்த்துகின்றார்.

வேறு.

அறைந்தன மமலன் வாக்கை யானிடை யாறுஞ்சொல்வாஞ்
சிறந்தறி சிவபூசைக்குத் தேடரும் பொருள்களென்றே
யிறந்தவ ரொன்போ டாமை யீண்டெழின் மார்பிற் பூண்டு
புறம்புனத் தாடிபொற்றாள் புரிந்துமா தவபோ தத்தில்.

எ-து. மிகுந்த தவத்தினை யுடையானே சிவனது திருவாக்கின் மகிமையைச்சொன்னோம். மேற்பசுவின்க ணுளவாகிய கௌவியங்க ளாயினையுஞ் சொல்லா நின்றோம், இவற்றைச் சங்காரகாலத்தி விறந்துபோன அரியயன் முதலானோ ரொலும்புட னாமையோட்டையு மெழில்வாய்ந்தமார்பின்க ணணிந்து சுடலையின்க ணாடுகின்ற சிவனது பொற்பாதத்தை விரும்பிச் செய்யுஞ் சிவார்ச்சனைக்குத் தேடு மரியபொருளென்று நின்னறிவின்கட் சிறப்பினோடு மறியக்கடவை. எ-று. (௨௯)

அமரரு மசுரர்தாமு மமிழ்துணக் கருதி வெற்பைத்
தமதுயர் வலத்தாற் றூங்கிக் கடைந்தபாற் கடலிற் றங்கிப்
பவமுறு மரியதேனுப் * பஞ்சகம் பரமனாலே
யவன்முடிக் கருகமான வாறுமவ் வைந்தினமே.

எ-று. தேவர்களு மசுரர்களு மமிர்தா முண்ண விரும்பித் தங்களுடைய வதி பலத்தினாலே மந்தரகிரியை மத்தாக வெடுத்து வாசுகி யென்னுங் கயிற்றாற் கடையப்பட்ட திருப்பாற்கடலினின்றுஞ் சிவனருளினாலே, நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை யெனக்கூறியவைவகைப்பசுவுந் தோன்றிப் பின்பு பூமியின்கண்ணே சிவபூசையின்பொருட்டு யாகாதி கன்மங்களின் பொருட்டு முதித்தன, அந்த வைந்தும் பசுவின்கட் சிவனது திருமுடிக் குரிமையான கோசலங், கோமயம், பால், தயிர், நெய், கோரோசனையாகிய † கௌவியங்களாறும். எ-று. (௩௰)

இதுவமது.

உத்தம ரோசனைந்த முனைத்திடு மாறு மோரின்
வித்தகப் பொருள்கள் வேண்டும் பலத்தினை விளக்கு மென்று

* பஞ்சகம்-ஐந்தின் கூட்டம்.

† கௌவியம்-பசுவின்க ணுண்டாயது.

மத்தனை யமலன் றன்னை யாதரிப் பாரு மார
வித்திறத் திசையத் தோன்றும் பொருள்களு மியம்புவாமே.

எ-து. பான்முதற் கோரோசனை யீருகவுரைத்தவாறினையு மாராயிற் சுத்தமாகிய பொருள்களே, செகத்பிதாவாகிய சிவனை யர்ச்சிக்கு மவர்களுக்கும் புசிக்க வவரவர் விரும்பிய போகங்களை யெக்காலமு முண்டாக்கும். இப்படிக் கூறப்பட்ட கௌவியங்களாறினும் பொருந்தி நின்று தோன்றும் பொருள்களையு மேற்சொல்லுவாம். எ-று.

கோரோசனை ரோசனை யெனத் தலைக்குறைக்கப்பட்டது. கோசலத்துக்குத் திருவுண்டாகையாலுங், கோமயத்துக்கு வியாதிபோகையாலும், நெய்க்கியாவராலு மிக்க பூச்சிய முண்டாகையாலும், கோரோசனைக்கு வயது அதிக முண்டாகையாலும் வேண்டும் பலத்தினை யெனச் சிறப்பித்தார். (௯௧)

மேற் கூறியவற்றைச் சத்காரியமாக விசாரித் துணர்த்துகிறார்.

கோமய மதனில் வில்வங் குறுமுறி கூடத் தோன்றும்
பூமக ளந்த வில்வம் புரிந்ததிற் பொருந்து மாற்றாற்
றுமமார் வில்வந் தானுஞ் சீபல மென்றே சாற்று
நாமமும் புணரு மீசர் திருமுடிக் கணியெந் நாளும்.

எ-து. கோமயத்தினின்றும் வில்வந் தளிருடன் றோன்றும். அந்த வில்வத்தைத் திருமகள் விரும்பியதன்கண் ணிருக்கு முறையாலே மாலையாகக் கட்டப்படும். இந்த வில்வஞ் சீபலமென்னும் பெயர்பெற்றுச் சிவனது திருமுடிக் கெக்காலமு மணிதற் குரியதாய் விளங்கும். எ-று.

மற்றுமுள்ள புட்பசாதிகளைப் போலக் காலகற்பனையின்றி யெக்காலமுஞ் சாத்துதற் குரித்தாகையா னெந்நாளு மெனச் சிறப்பித்தார். (௯௨)

இதுவுமது.

உற்பல கமல மூலம் பின்பதி லுதிக்கு நீரிற்
பொற்புறு குங்குலியம் பொலிந்தெழும் புரிய யாரு
மற்புதன் றனக்கு மற்றை யனைவர்க்கு முணவ தாகக்
கற்புறு செந்நெல் பாலிற் கதிரொடு கலந்து தோன்றும்.

எ-து. வில்வந்தோன்றிய பின்னர் நீலோற்பலக் கிழங்குந் தாமரைக்கிழங்கு மந்தக் கோமயத்தின்க ணுண்டாம். கோசலத்தினின்று மெழின் மிக்க குங்கிலியமான தெல்லாரும் விரும்ப விளங்கித் தோன்றும். பாலினின்றுஞ் சிவனுக்கு மற்றுந் தேவ, மானிடர் முதலிய யாவர்க்கு முணவாகிய செஞ்சாலி முதலிய சாலிபேதங்கள் கதிரோடு பொருந்தி யுற்பவிக்கும். எ-று. (௯௩)

காரதகுரா வனுக்கிவன்செய் கைம்மாறுண்டோ
காசினியும் பொருளனைத்துங் கைம்மா றன்றே.

எ-து. அரசன் காம விகாரத்திலுந் தனத்தேடுவதிலு மிருந்த வாசையுடையனாகிற் குரவனரசனுக் கிப்படி பொல்லாத புத்திவந்ததே யென்றிரங்கி அது போம்படி மந்திர வாதத்தாலும், மருந்து முதலியவற்றாலும், தீர்த்து அவ்வேந்தனது மனமறத்தின்கட் செல்லும்வண்ண முணர்த்திப் பின்பு மேலான ஞான போகங்களை யுபதேசித் திரட்சிக்கக் கடவன், அங்ஙன ஞான யோகத்தை யளித்து வினைப்பகை யேறுவண்ண மிரக்ஷித்த வாசிரியனுக் குலகமு முலகத்தி லுண்டான பொருள்களுங் கைம்மாறல்லவே யாதலாலவற் கனையன்செய்யும் பிரதியுபகாரமில்லை. எ-று.

ஓகாரம் வினாவின்கண் வந்தது. ஒளடதாதி யென்பதனை மணியுமெனக் கூட்டுக. (உ௫)

வேதாகமங்களின் முறைமையு மவற்றை யுணராதார்
பயன்பெறாமையு முணர்த்துகின்றார்.

அற்பாயு ளார்க்கென்றே யமலன்வேத
மாதிதனைத் தொகுத்தறைந்தா னப்கி லாது
நிற்பாருஞ் சிலர்நில்லாக் குரம்பைதன்னை
நிலையெனவே கருதியவப் பசுநூ றன்னைக்
கற்பாருஞ் சிலரமலன் கழறும்வாக்கைக்
கருதாதே யவனதடிக் கமலந் தன்னைப்
பொறற்பாருங் கருணையினன் மற்றைநூலாற்
பொருந்துதலு மரிதுமலம் போக்க லாலும்.

எ-து. நின்மலனாகிய சதாசிவ தேவ நாயனார் பாதகண்டத்தி லிருக்கு மானிடர்க்கு வாணா ளற்பமென்று வேதாகமங்களைச் சுருக்கித் தமது பஞ்சவத்திரத்தாற் காமிகாதி திவ்யாகமங்களையும் அருளிச் செய்தார், இப்படிச் சுருங்கச் சொல்லி யிருக்கவும் அதனையோதி யதன் பொருளை யறியாம லிருப்பாருஞ் சிலருளர், நீர்க்குமிழிபோல நிலையில்லாத சரீரத்தை நிலையென்று கருதிப் பிறப் பிறப்புக் கேதுவாகிய பொல்லாத பசுநூலையே பொருளென்று கற்பாருஞ் சிலருளர். ஆதலாற் சிவன் அருளிச்செய்த வேதாகமங்களைப் பொலிவுபெற் றிருக்கிற திருவருளினாலே யாராயாது அதற்கன்னியமான பசுநூலை யாராய்வதனாற் சிவனது திருவடித் தாமரைகளை யடைதலு மும்மலங்களை நீக்கலு மரிது. எ-று. (உசு)

பதி முதலிய பதார்த்தமூன்றியென் றுணர்த்துகின்றார்.

ஆதியல செம்பினுக்குக் களிம்புதானு
மாராயி லதற்கதுவு மனாதி யாகு

மாதியல மூலமல மணுக்கட்கெல்லா
　　மாணவமு மாருயிர்கட் கனாதியாகு
மாதியல பசுபாச மரிக்கவல்ல
　　வமலனுமா ருயிர்களுமே யனாதியாகு
மாதியல வுலகத்தை யடக்கித்தன்பா
　　லாக்குவதும் வினையுமுயிர்க் கனாதியாமே.

எ-து. செம்பினுக்குக் களிம்பு மாதியல்ல, அதனை விசாரிக்குமிடத்து அனாதியே. அதுபோல ஆன்மாக்களுக் கெல்லா மாணவமு மொருகாலத்தி லுண்டாய தன்று. அதுவும், வியாபியாயிருக்கின்ற வுயிர்களுக்கு அனாதியே. பக்குவான்மாக்க ளுடைய பாசத்துக்கு வயிரியாயுள்ள சிவனு மான்மாக்களு மாதியல்ல வனாதியே. தன்னிடத்திலே நின்றும் வியாத்தியாத்மிகமாக வுலகத்தை யுண்டாக்கி மீளவுஞ் சத்தியாத்மிகமாகத் தன்னிடத்திற் காரிய வுருவங்களை யொடுக்கு மிருவித மாயையு மாதியல்ல; வனாதியே. கன்மமு மாதியல்ல செனனந்தோறுந் தொடர்ந்து தொடர்ந்து வருகையாற் பிரவாகானாதியாயே வரும் எ-று. (உஎ)

ஆதி யென்பது. ஒருகாலத் துண்டாயது, அனாதியென்பது சகசம்,

அந்தச் சிவ வாக்கியத்தைப் பக்குவான்மாவுக் குணர்த்தாது
　　அபக்குவர்க் குணர்த்திற் குற்ற முணர்த்துகின்றார்.

போதகனு மும்மலமும் போக்கித்தன்னாட்
　　பொருவரிய பரம்பொருளைப் புணர வெண்ணு
மாதவனுக் கறைகவிறை யமலன்வாக்கை
　　மற்றையவர்க் கறையற்க மனத்துக் கெட்டா
வாதியருள் வாக்கியத்தை யருத்தந்தன்னை
　　யருநிதியாற் புகழ்முதலா லயர்த்துங் கூறிற்
பாதகனே போதகனு மவர்களோடும்
　　பற்றிடுவ னெரிநிரைய மங்கார் பற்றே.

எ-து. ஆணவ முதலிய மலங்களை நீக்கித் தன்னிடத்தில் வியாத்தியினாலே யன்னியமாய் நிற்கும் ஒப்பில்லாத சிவனை யடைதற்கு விரும்பும் பெரிய தவத்தினையுடைய மாணாக்கர்க் காசிரியன் கருத்தாவாகிய சிவனது திருவாக்கை யுபதேசிக்க, அல்லாத அபக்குவர்க் குணர்த்தக்கடவ னல்லன். அவர்களுக்கு மனோவாக்குக் கெட்டாத சிவனருளிச்செய்த திவ்யாகம வாக்கியத்தைத்தான் அதிற் சொல்லும் பொருளைத் தான் ஐசுவரிய நிமித்தமாகவும் புகழ்முதலிய நிமித்தமாகவு மறந்து முரைப்பானாயி னந்தப்போதகனு மிருந்த பாவான்மாவேயா யந்த மாணாக்கரோடே தானு மெரிவாய் நிரையத்தை யடைவன். அதினின்று மவர்களைக் கரையேற்றுவார் யார். எ - று. (உஅ)

இருவுமது.

சந்தன முதலா யுள்ள மங்கலந் ததியி னாகு
மந்தரத் தமரருண்ணு மமிழ்தமு நவநீ தத்தாஞ்
சிந்தையார் சித்திபேதஞ் சிறக்கரோ சனையுஞ் செய்யு
மந்திவான் வண்ணன் மேனிக் கருகமிவ் வாறு மாமே.

எ-து. தயிரினிடத்தே சந்தனமுதலிய மங்கல பதார்த்தங்கள் தோன்றும். வெண்ணெயினின்றும் விண்ணினுள்ள தேவர்களருந்து மமிர்தமுண்டாம். கோரோசனை யாவரும் விரும்பிய சித்திபேதங்களைத் தலைமை பெறத் தோற்றுவிக்கும். இங்ஙனங் கூறியவாறுஞ் செக்கர் வானம்போன்ற நிறத்தையுடைய சிவனது திருமேனியி லாட்டிப் பணிதற் குரியனவாம் எ-று. (௧௪)

சந்தனமுதலா வென்பதனால், அகில், குங்கும முதலியன கொள்ளக்கிடந்தன, நவநீதம்-வெண்ணெய்.

நிறுத்த முறையானே சிவனை யவைகளா லர்ச்சிக்கு முறை
யுணர்த்துகின்றார்.

ஆதலா னெய்யாற் பாலா லாமில மற்று மற்றுங்
கோதறு ததியினாலுங் குழகனன் முடிமே லாட்டிச்
சீதம தகன்ற நீராற் றிளைப்புற வாட்டிச் சேர்ந்த
வாதர வதனா லாட்டி யாமல காதி யாவும்.

எ-து. வெளி, இதனுள், ஆமிலமென்பது, புளிப்பு. மற்றுங் கோதறுததி எ-து. பால்காயாம லுறைவது, சிண்டு நாறுவது முதலிய குற்றங்களில்லாத தயிர். சீதமகன்றநீர், இளஞ்சூடான வெந்நீர். ஆமலகாதியென்பதனால், நெல்லிக்காப்பு, மாக்காப்பு, மஞ்சட் காப்பு முதலியனவாம். யாவு மென்பதனால், இளநீர், பஞ்சாமிர்த முதலாயின கொள்க. (௧௫)

இச்செய்யுண் முதல் எனத் துதியியம்பு மென்னுஞ் செய்யுளீறாகக்
* குளகமாக உணர்த்துகின்றார்.

சீதள நீரு மாட்டித் திகழ்திரு மேனி யீரம்
போதம தாக வாடை யிணைத்தரி தாகப் பெற்ற
கோதில்கோ ரோச னாதி குங்குமக் குழம்புங் கூட்டிக்
காதலால் வில்வந் தன்னைக் கசடறக் கண்ணாற் கண்டே.

எ-து. வெளி, கண்ணாலே புழுக்கடியறப் பார்த்து என்று கொள்க. (௧௬)

* 'குளகம் பலபாட்டொரு வினைகொள்ளும்.' என்று தண்டியாசிரியர் கூறலானு மறிக.

உற்பல கமலத் தோடு மூவகையாற் சாத்தி செய்யாற்
குற்குலு வதனாற் றூபங் கொடுத்தொளி கொடுத்தா னெய்யாற்
பொற்புறு பாய தானம் புளிப்புறு ததியின் போனஞ்
சர்க்கரை தேனெய்கூட்டிச் சமைத்தவோ தனமுந் தாமே.

எ-து. வெளி. இதனுள், உற்பயிம் செங்கழுநீர். குற்குலு-குங்கிலியம். ஒளி-தீபம், பாயதானம்-பாலன்னம். (௧௭)

நிறைந்துறை நேயத் தோடு நிவேதனஞ் செய்க மற்றுஞ்
சிறந்துள வுபசா ரங்கள் செய்துசெய் முறைக டம்மிற்
குறைந்துள வனைய மீச பொறுத்தரு ளென்று கூறித்
திறம்பல வலமுஞ் செய்து தெண்டெனப் பணித்து சேர்த்தே.

எ-து. வெளி. இதனுள், உபசாரமென்றூர், பஞ்சோபசாரம், தசோபசாரம்-சோடசோபசார மென்பனபற்றி. (௧௮)

அண்டங்க ளனைத்துமாக்கு மலர்மிசை யயனே போற்றி
யண்டங்க ளனைத்துங் காக்கு மரியெனு மதிப போற்றி
யண்டங்க ளனைத்து மாற்று மதிபல வரனே போற்றி
யண்டத்தின் பேதந் தப்பா லனுதியே யமல போற்றி.

எ-து.- வெளி. (௧௯)

ஆருயி ரனைத்து மீன்ற வன்னையே யத்தா போற்றி
யாருயி ரனைத்து நீங்கா வரும்பெரும் பொருளே போற்றி
யாயிர்ப் பந்தபாச மறுத்தரு * ளதுல போற்றி
யாருயிர்க் கமிழ்தமான வன்பனே போற்றி போற்றி.

எ-து. வெளி. ஈன்றல், ஆன்மாக்க ளநாதியுமாய் நித்தியமுமாகையால் விஞ்ஞானகலருட் டலைமையாய அணுச்சதாசிவர் முதலாயினார்க்குத் தனுவாதிகளைக் கொடுத்தலென்றறிக, அமிழ்தமான அன்பனென்பது, அமிர்தம்போ லினிமை செய்யு மன்பனெனப் பொருள் கொள்க. (௨௰)
* அதுலம்-சமானமின்மை.

ஏனைத்துதி யியம்பும் பத்தர்க் கிட்டமிம் மையினுஞ் செய்வன்
றனக்குயர்ந் தாரொத் தாரை யிலன்சிவன் சகளத் தூற்று
ளினைத்தருச் சனைசெய் தூய்ய நேயர்க ளாத லாலே
வினைப்பகை வெல்வார் செய்க வருச்சனை விதியி னாலே.

எ-து. வெளி. மேற்கூறிய வினையெச்சங்க ளெல்லா மியம்புமென்னும் பெயரெச்ச வினையொடு முடிந்தன. இம்மையினுமென்ற வும்மை,

* அதுலம்-சமானமின்மை.

மறுமையும் விளக்கி நின்றது. இச்செய்யுள் யாவர்க்குந் தோன்றாது நிட்களனுப் நின்ற சிவன், சகளீகரித்து அடியவர்பொருட்டுத் தியானுதிகளுக்கு எளியனுவன். ஆதலாற் பிறவித்துயர நீங்கவேண்டினோர் அருச்சனைசெய்து பிழைக்கவெனப் புத்தி கூறியதாயிற்று. (௬௧)

சிவபூசைசெய்வாரும் அதற்குப் பத்தியுடன் ஏவல்செய்வோரும் பெறும்பய னுணர்த்துகின்றார்.

முற்றவத் தாலே பூசை முற்றிய பத்தர் மூவேழ்
சுற்றமுஞ் சுவர்க்க மெய்தத் துன்னுதற் கரிதே யாய
வற்புத னுலகந் தன்னைத் தாமடைந் திருப்ப ரன்பாற்
சொற்பணி செய்தார் தாமுந் தூரிசறு நெறியி னலே.

எ-து. முற்பிறப்பிற் செய்த புண்ணிய பலத்தினலே விருப்பத்துடன் சிவபூசைசெய்த வன்பராயினோர் தங்குலத்திலுள்ள மூவேழ் சுற்றமுந் தேவலோகத்திற் செல்லத் தாம் பிறராலணுகுதற் கரிய சிவலோகத்தைச் சேர்ந்திருப்பர். அதற்கன்பினலே ஏவற்றொழில் செய்தோர்களும்; பிறவித் துயர்தீர்க்கு நன்னெறியாகிய ஞானத்தொடுகூடிச் சிவலோகத்தையடைவர். எ-று.

அடைந்திருப்பரென்பது, இடைநிலைத் தீவகம், மூவேழ் சுற்றம் எ-து, மாதுர் வர்க்கம் எ-பிதுர்வர்க்கம். எ-தன்வர்க்கம். எ. ஆக உயக.(௬௨)

அருச்சனைக்கு உபயோகமான தருக்கண் முதலியவும் அருச்சனையைத் தெரிசித்தோர் பெறும்பலனு முணர்த்துகின்றார்.

அர்ச்சனைக் குபயோ கங்க ளாகிய தருக்க ளாதி
கற்புறு சிவலோ கத்தைக் கலப்பதே திண்ணங் கண்டோ
ரற்புதன் பூசை தன்னை யருவினை யறுவ ரன்பாற்
றற்பரன் பூசை கண்டோர் சிவபுர மதனைச் சார்வார்.

எ-து. வெளி. (௬௩)

மேலதனைக் கேட்டோர் விரும்பினோர் அடையும் பலனுணர்த்துகின்றார்.

கேட்டுளார் மகிழச் சொல்வார் கிடைக்குமோ வெமக்கு மென்று
வேட்டுளா ருபகா ரங்கள் விளைத்துளா ரிவரு மெய்ய
னாட்டுளார் பிறக்கி லிம்மண் ணையக ராவ ராகித்
தேட்டுளார் சிவதன் மங்கள் வாதனை திகழ்த லாலே.

எ-து. சிவார்ச்சனையின் பெருமையைக் கேட்டோர்; கேட்போருள்ளமகிழ அதனைச் சொல்வோர், நமக்கு மிப்படி சிவார்ச்சனை செய்யும்பேறு கிடைக்குமோவென்று விரும்பினோர், சிவபூசைக்கு உபகரணங்கள்

கொடுத்துள்ளோர், இவர்களெல்லாருஞ் சிவலோகத்திற் சென்றமவர்க ளாம். அங்ஙனஞ் சிவலோகத்திலுள்ள போகங்களை யனுபவித்து மீண்டும் பூமியிலே தோற்றி இந்த உலகமெல்லாந் தானே யாளு நீதிவேந்தராய்த் தோன்றுவர். தோன்றிய முற்பிறப்பிற் கேட்டல் வேட்ட லுபசரித் தலாகிய நல்லவாதனை விளங்குகையினாலே சிவதர்மங்களையே விருப்பத்து டன்றேடிச் செய்வார்கள். எ-று.

இவருமென்னு மும்மை இறந்தது தழீஇயது. பிறக்கில் என்றமை யாற் சிவலோக போகத்தை விரும்பாமையாற் புசித்தவர்க ளாண்டிருந்து தானே பரிபக்குவராய்ப் பரகதியடைவரென்பது விளக்கி நின்றது. (சச)

இங்கிதையே பரமமான தர்மமென் றுணர்த்துகின்றார்.

தமக்கப ராத பேதஞ் சநுமுறச் சாதித் தார்க்கு
மிமைப்பொழு தெனினுந் துன்ப மியற்றிடா வினிமை தன்னை
யமைத்துறா விதமி தென்றே யறைந்திடு மதனை யாதி
சமைப்பதே தலைமை யான தருமமென் றறிக தக்கார்.

எ-து. வேதாகம நூல்கள், தமக்கு யாதாமொருவர் வேறுவேறாக வெண்ணிறந்த குற்றஞ்செய்யினு மவர்களுக் கொருகாற் கண்ணிமை கொட்டு மளவாயினுந் துக்கத்தைச் செய்யாம னன்மையே செய்யு மின்பத்தையே பொருளாகப்படுத்தி யிதுவாயிருக்கு மிதமாவதென்று சொல்லா நிற்கும். ஆகையினாலே யந்த நன்மையை முற்படச்செய்தலே மேலான அறமென்று தகுதியை யுடையோ ரறியக்கடவர். எ-று.

அமைத்துச் சொல்லுமெனக் கூட்டுக. (சரு)

சிவதர்மத்தின் விசிட்ட முணர்த்துகின்றார்.

செப்பிய வொப்பி லாத சிவதரு மங்க டம்மைத்
தப்பற நினைப்போம் யாமுஞ் சந்திக டோறும் யாரு
மிப்படி யெண்ணு வார்முன் னீட்டிய வினைக ளோட்டி
யொப்பிலா வுமையாள் பாகன் புரத்தினி துறைவ ரன்றே.

எ-து. அகத்தியனே இங்ஙனங் கூறிய நிகரில்லாத சிவதர்மங்களை நாமுங் காலை, உச்சி, மாலை என்னு முப்போதுந் தப்பாம னினைப்போம், எம்போலிப்படி கருதுவார் யாவரு முற்சனனங்களி லார்ச்சித்த பாவங்களைப் போக்கி இணையிலாத வுமையை யொருபாகத்திலேயுடைய சிவனது உலகத்திற் போகங்களைப் புசித்திருப்பர். எ-று.

யாமுமென்னு மும்மை மற்றுள்ள தேவர்க ளிருடிகண் முதலாயி னாருமெனக் குறிக்க நின்றது. (சசு)

வேதத்துள்ளு மிச்சிவ தர்மமே சிறப்பென் றுணர்த்துகின்றார்.

ஒப்பிலி யனாதி முத்த னோதிய வேதத் துள்ளுஞ்
செப்பிய சிவதன் மங்கள் சிறந்தனே ரியவே தேறுந்
தப்பிலாப் பலத்தி னாலே தடவரை நிகர சான்றோர்
வைப்பென விவற்றைக் கொள்வர் மகற்பல வாஞ்சை யாலே.

எ-து. தனக்கு ஒப்பாரு மில்லானாய் அனாதியே நின்மலனாயிருக்கிற சிவனருளிச்செய்த வேதத்தினு மிச்சிவதர்மங்களே தலைமையையுடையன வாய திருக்குமங்களா யிருப்பனவென்று தெளியப்படும்படி யதிசூக்குமங்க ளாயிருப்பினுந் தப்பாமற் றோற்றுவிக்கும் பலத்தினாலே மகமேருவைப் போலப் பெருத்திருப்பன, ஆதலினறிவுடையோர் மகத்தான பலங்களினு ள்ள விருப்பத்தாலே யவையிற்றைத்தரு மிந்தச் சிவதர்மங்களே யென்று அதனைச் சேமிக்கும் பொருள்போலக் கைக்கொள்வர். எ-று.

* மகற்பலம் வடமொழிச் சிதைவு. (சுஎ)

முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுபர மானதரு மாதிக ளிசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-து. வேடர்மகளாகிய வள்ளிநாயகிக்குத் தண்ணளிசெய்து மகிழுங் குமாரக்கடவுள் குணாதீதனான சிவனைத் தியானஞ்செய்து பஞ்சேந்திரியங்களையும்வென்று கொடிய கர்மங்கள் கெடும்படித் தவத்தின்கணின்ற அகத்தியமாமுனியறியும் வண்ணம் பரமமான சிவதர்மங்களிப்படியென்று அருளிச்செய்தான். எ-று. (சுஅ)

கூ. "சருக்கமுடிவினு மிலம்பகமுடிவினும், விருத்தமுடையது வேறிசைப்பாவே". என்னும் இலக்கணத்தாற் சிவத்துதி யியமகத்தாலுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆனிடை யைந்தினை யாடினனே யம்பர மன்றினு மாடினனே
கானிடை வேடனு மானவனே காசியென் மாநக ரானவனே
வானிடை முப்புர மாற்றினனே வார்சடை மேல்வரு மாற்றினனே
யானெனு மாசுமி லாதவனே யேனைய மாசுமி லாதவனே.

எ-து. பசுவினிடத் துண்டாகிய பான்முதலிய கௌவியங்களைந்தி யு மாடாநின்றவனே, ஞானம்பரமென்னும் பொதுவினடம் பண்ணின

வனே. விசையன் தபோபலத்தை யளத்தற் பொருட்டுக் காட்டகத்து வேடவடிவு கொண்டவனே, காசியென்னும் பெரிய திருப்பதியையுடையவனே, பூமி, யந்தரிக்ஷ மாகாசமென்னு மூவிடத்துண்டாகிய முப்புரத்தை யெரித் தொழித்தவனே, நீண்ட சடையின்மே லாயிரமுகத்தோடு வந்திழியுங் கங்கையாற்றினை யுடையானே, யானென்பதற்குக் காரணமான வாணவ விருளில்லாத ஞானநித்தனே, மற்றுமுள்ள மாயாகர்மங்களுமில்லாதவனே. எ-று. (௯

இதுவுமது.

அலைகட னஞ்ச மருந்தினனே யாணவ நோய்க்கு மருந்தினனே
தலைகல னாகத் தரித்தவனே சார்ந்தவர் பாசத் தரித்தவனே
சிலைசிலை யாக்கிய தெள்ளியனே திம்பரைக் காய்ந்துள தெள்ளியனே
விலையிலி யானவெண் ணீற்றினனே விபரித மற்றவெண் ணீற்றி
[னே

எ-து. தேவர்களாலே மந்தரகிரியை மத்தாக்கிக் கடையுமிடத்து அ
கின்ற சமுத்திரத்திலெழுந்த விடத்தையுண்டவனே, ஆணவமுதலிய பி
க்கு மருந்தாயிருப்பவனே, அயன் சென்னியை யாபரணமாகப் பூண
னே, திருவடி நிழலைப் பலகாற் றினைத்தோருடைய பாசங்களை யறுத்
னே, மகமேருவை வில்லாக்கின வலியையுடையோனே, தாரகன் தாரு
க்ஷன், வித்தியுன்மாலி என்னும் கொடியவரை யெரித்தவனே, விலை
லாத தவளநிறத்தையுடைய திருநீற்றை யணிபவனே, ஐயந் திரிபில்ல
வேதாந்தத்து முடிவாயுள்ளவனே. எ-று. (௰)

எண் எ-து. உரையென்னு மளவை என்க.

குமரக்கடவுள் திருவாக்கின்பெருமை கூறுகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மலத்தை நவல்வினை தனைமண வலியை
வதைக்க வல்லநன் மதியினை யுதவுந்
தலக்க வெண்பிறை யணிசடை முடியன்
றனைப்ப தந்தொழு மடியவர் துணைவன்
மலைக்கு நன்மகண் மதிநுதல் கணவன்
மலர்ப்ப தம்பெறு முறவினு நிறுவு
மலக்க ணண்டர்க ளறவொரு காமுன்
னமைத்த சண்முக னருளிய மொழியே.

எ-து. தேவர்க ளசுரர் செய்யும் வாதையா லடைந்த மனக்கல
தீரும்படி யவர்களை திரோ யொருதிருக்கை யமைத்தருளிய சண்முகனெ
னுந் திருநாமத்தையுடையான் அருளிச்செய்த திருமொழி யான்மாக்க

குச் சகசமான வாணவ மலத்தினையும் வலியினையுடைய கன்மத்தையு மாயாகாரியமான மனமுதலிய வந்தக்கரணங்களின் வல்லபத்தினையுங் கெடுக்கவல்ல நல்லஅறிவினைக் கொடுக்கும். அஃதன்றி விட்டுவிளங்கும் வெள்ளிய விளம்பிறையினை யணியுஞ் சடாமகுடத்தை யுடையானுமாய்த் தனது பாதங்களிரண்டினையும் வணங்கும் அடியவர்களுக் குயிர்த்துணைவனுமாய்ப் பர்வதராச புத்திரியான பிறைபோலு நெற்றியையுடைய உமாதேவிக்கு நாயகனு மாயிருக்கும் சிவனது பாதமலர்களைப் பெறும் ஐக்கியத்தினை நிறுத்தும். எ-று. (௩க)

அகத்தியனை வணங்கென்று மனத்தினுக்குணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நினைத்த நன்பலவெளியதின் முடியு
 நெருக்கி யண்டர்கள் முனிவர்கள் பணியுந்
தனத்த னந்தன தனதன தனவென்
 சதிக்கி சைந்திட நடமிடு சதுரன்
முனைத்தெ ழுந்தவர் புரமொரு நொடியின்
 முருக்கி வென்றவ னருளிய மொழிக
ளனைத்தை யுந்தரு மருமுனி யனக்
 னகத்தி யன்றிரு வடிநினை மனமே.

எ-து. நெஞ்சமே இந்தியங்களை முனியுமவனைப் பாவமில்லாதவனுமாயிருக்கும் அகத்தியனது திருவடிகளை நினைக்கக்கடவை. நினைத்தா னீயெண்ணிய நல்ல காரியங்களெல்லா மெளிதாகவே முடியும். அஃதன்றித் தேவர்களு மிருடிகளு நெருங்கி நின்று வணங்கத் தனத்தனந் தனதன தனதனவென்னும் இராகதாள வொத்துக் கேற்ப ஆனந்த நிருத்தத்தைச் செய்பவனும் பகைத்தெழும் தீயோர் முப்புரங்களையு மொரு கணப்பொழுதின்கண் எரித்தழித்த வெற்றியை யுடையானுமாகிய சிவனருளிச்செய்த திவ்வியாகமங்க ளனைத்தையும் அறிவிக்கும். எ-று.

முடியும், தரும் என்பன-முற்றுவினைகள். (௩௨)

## முதலாவது பரமதருமாதியியல்

முற்றிற்று.

சிவமயம்.

## இரண்டாவது.

# சிவஞானதான வியல்.

மேலிவ்வோத்தென்ன பெயர்த்தோவெனி னிறுத்தமுறையானே, சிவதரும
முதலியவற்றை மேலையோத்தினுட் கூறி, அச்சிவதருமத்தை
உணர்த்துவிக்கும் சிவஞான தானத்தியைக் கூறுகையானே
சிவஞான தானதி இயலென்னும் பெயர்த்து.
* அச்சிவஞானம்பரஞானமெனவும்,
அபரஞான மெனவும் இருவிதமாம். இதனுள் பரஞானமாவது,
சிவனோடிரண்டற்று அபேத ரூபமாயிருப்பது. அபரஞானமாவது,
காமிகமுதலிய திவ்வியாகமங்களென்றறிக. இத்தலைச் செய்யு
ளென்னுதலிற்றோவெனி னீதலியற்கை கூறுவாமென்
றாசிரியர் கருதியவாறுணர்த்துதனுதலிற்று.

கலிவிருத்தம்.

அரிய ஞானத்தை யையமு மையலும்
பிரிய வேரொளி யாகிய பெற்றியைப்
பருவ முற்றவர் பாலுப தேசிக
னுருகி யோத வுரைப்பது மோதுவாம்.

எ-து. போதகாசாரியன் ஆன்மாக்களிடத்து வைத்த நேயத்தாற் றன்னுள்ளமுருகி ஐயந் திரிபாகிய விருணீங்குதற் கழகிய தீபமாய் விளங்குமியல்பினை யுடைத்தாய்ப் பிறருணர்தற் கரிதாயிருக்கும் ஞானசாத்திரத்தை யுணரும்படி பக்குவரான மாணாக்கரிடத் துபதேசிக்கு முறையுஞ்சொல்கின்றோம். எ-று.

ஐயம் என்பது ஒன்றோ விரண்டோ வெனக் கருதல், மையல் அல்லது திரிபென்பது முன்னர் ஒன்றென்று துணிந் திரண் டென்பதும், இரண்டென்று துணிந் தொன்றென்பது மென்க. இவற்றை வடநூலார் சந்தேக விபரீத மென்ப. ஐயமு மையலும் பிரிய என்பதனை எரொளிக் கடையாக்குக. உரைப்பது மென்றவும்மை கேட்கு முறையுங் கூறுவதும் விளக்கலினெச்சவும்மை என்க.

* ஞானம் பரஞானம், அபரஞானமென் றிருவகை என்பதை உமாபத சிவாசாரியரும் "உயர்ஞான மிரண்டாமாரு மலமகல வகலாத மன்னுபோதத், திருவருளோன் றென்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே" எனச் சிவப்பிரகாசத்தும் அருளிச்செய்தலானுமறிக.

பிள்ளையா ரகத்தியனை விளித்துச் சிவஞான விசிட்ட முணர்த்த வதனை இரண்டு செய்யுளால் உணர்த்துகின்றார்.

சிந்தை செய்க வகத்திய தீவினைப்
பந்த மும்பசு பாசமு மாயையு
மந்த மாயையி னாக்கிய வாக்கையு
நைந்து போகநல் லார்க்கு நாக்கரோ.

எ-து. அகத்தியனே பக்குவான்மாக்களுக்குச சஞ்சித மாகாமிய மான கன்மபேதமும், பசுத்துவமென்னும் பெயரினையுடைய வாணவ பந்தமும், மாயா பந்தமும், அந்த மாயையினா லுண்டாகிய தேகாதி பந்தமுங் கெடும்படி நீ சிந்தைசெய். எ-று. அரோ அசை. (௨)

விதமெ வனப்படுந் தாதுவின் வித்தையி
னுதைய முமுயிர் கட்குயி ராகிய
பதித னக்குரு வம்மது பக்குவர்
மதித னக்கு விளக்கென வாய்த்ததே.

எ-து. விதக் ஞானமென்னும் வடமொழித் தாதுவினின்றுந் தோற்றிய ஞானப் பிரகாசமும் அந்த ஞா[illegible]மே யான்மாக்களுக்குப் பிராணனுமாயிருக்குஞ் சிவனுக்குத் திருமேனி[illegible], அந்த ஞானந்தானே பரிபாகத்தையுடைய வான்மாக்கள் புத்திக்குத் தீபம்போலப் பிரகாசிக்குந் தன்மையுடையது மாதலினீ அதனையறி. எ-று.

அது வென்பதனை யீரிடத்துங் கூட்டுக. பதிதனக்கு உருவமென்பது பரஞானத்தையுணர்த்திய தென்றறிக. ஏகாரம் ஈற்றசை. (௩)

ஆசிரியன் மாணாக்கற்கு ஞானசாத்திரத்தை யுபதேசிக்கு முறைமை யுணர்த்துகின்றார்.

பருவ முற்றிய பாவக மோர்ந்தபின்
னுருகி யோதுக வோதரு முண்மையை
மருவி வாய்வரு பாடையின் வல்லவர்க்
கரிய வாரியத் தானு மறைகவே.

எ-து. ஆசிரியன் நான்கு சாதியினுமுள்ளோர் பாற் பருவமுதிர்ச்சியினாலே யுண்டாம் பத்தி சிரத்தை முதலியவற்றை யறிந்து பின்னர் தன்னுளளங் கசிந்து அபக்குவர்க்குச் சொல்லப்படாத ஞானசாத்திரத்தை உபதேசிக்க. அஃதெவ்வாற்றா னெனின் பதினெண் பூமியினுள்ளாரும் பயின்று வசனிக்கும் பாஷா பேதங்களுள் யாதேனுமொரு பாஷை வல்லோர்க்கு அந்தப் பாஷையினாலும் வடமொழி வல்லோர்க்குப் பெறுதற்கரிய வடமொழியினாலு முபதேசிக்கக் கடவன். எ-று.

ஆரியத்தானு மென்ற வும்மையாற் பிராகிருதம், சவுரசேனி, மாகதம், பைசாசம், சூளிகாபைசாசி, அவப்பிரங்கிசம், தேசி என்பனவமையும்.

இப்படி உபதேசஞ்செய்யு மாசிரியனை மாணாக்கன் சிவனெனச்
சிந்திக்கு முறைமையை உணர்த்துகின்றார்.

ஒப்பி லாவொரு வன்சிவ னேதிய
வொப்பி லாவுணர் தன்னை யுணர்த்தகத்
தொப்பி லாவுணர் வாக்கிடு முத்தம
னொப்பி லாவா னேயென வோர்கவே.

எ-து. வெளி. இதனுளொப்பிலா வுணர்வாக்கிடு முத்தமனென்றார், இணையில்லாத ஞானத்தை யுண்டாக்கிய வாசிரியன் என்பதுகருதி. (௯)

பக்குவனுக்கும் அபக்குவனுக்கும் ஞானநூலுணர்த்திய வாசிரிய
ரடையும் பலமுணர்த்துகின்றார்.

பருவ முற்றவர் பாலுப தேசிகன்
பரம னுக்குள வெண்குணம் பற்றுவன்
பருவ மற்றவர் பாலுப தேசிகன்
நரகி டைப்படி வானெடு நாளரோ.

எ-து. வெளி. எண்குணமாவன சருவக்கியனாதல், நிறைந்திருத்தல், ஆனந்தாகிருதி, சுதந்திரதை,! எப்போது மிளையாத சத்தி, அளவில்லாத சத்தி, நிராமயமாயிருக்கை, எப்போதுஞ் சுத்தனாயிருக்கை என்றறிக. ஆளுடைய அரசும், "மாறுமாற்றத் திருத்தாண்டகம்," நாவார நம்பனையே பாடப்பெற்றோ நாணற்றார் நள்ளாமே விள்ளப்பெற்றோ, மாலுமென் றமையாள்வா னமரர் நாத னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட, தேவாதிதேவன்சிவ னென்சிந்தை சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றானேவந்து, கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங் குணமாகக் கொள்ளோமெண் குணத்துளோமே" என்றும், தனித்திருக்குறுந்தொகை, "எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழில்; லெட்டுவான்குணத்தீசனெம்மான்றனை, யெட்டுமூர்த்தியு மெம்மிறையெம்முளே, யெட்டு மூர்த்தியு மெம்மு ளொடுங்குமே" என்றும், ஆளுடைய நம்பிகளும் திருக்கானாட்டுமுள்ளூர் பண்கொல்லிக்கௌவாணம், "இரும்புயர்ந்த மூவிலையசூலத்தினனை யிறையவனை மறையவனை யெண்குணத்தினனைச், சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ்சூடுஞ் சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை, யரும்புயர்ந்த வரவிந்தத் தணிமலர்க் ளேறியன்னங் கள்விளையாடு மகன்றுறையினருகே, கரும்புயர்ந்து பெருஞ்செந்நெ னெருங்கிவிளை கழனிக் கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழுதேனே" என்றும்; "முடிவிலாற்றலை தன்வயத்தனை முற்றுணர்ச்சியைபேருணர், மடிவிலாட்சியை தூயமேனியை மற்றிபற்றை யுணர்ச்சியைப், படிவிலாவியல்பாக நீங்கிய பாசநோயை வரம்பி

வின், புடையை யுன்னடியேங்க ளென்று முனக்கடைக்கல மையனே, என்றுங் காஞ்சிபுராணத்துங் கூறியவாற்றானு முணர்க. (௬)

* அபக்குவ ரிலக்கணத்தை மூன்று செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஓது வார்க்கிடை யூறுரைப் பாரவர்
வாத பாடணர் வாக்கை மறப்பவர்
வேத மாதிய வோதி விடுப்பவர்
சாதி யாற்றணி யாரெனச் சாற்றுவார்.

எ-து. ஆசிரியனிடத்தே யாகமமாதிகளை யோது மாணுக்கர்க் கோதுவியாமல் விக்கினஞ்சொல்லுமவரும், ஒருவன் சொல்லாத வார்த்தையைச் சொன்னானென்றவருடன் சொல்லுமவரும், அவர் சொன்ன பொருளைத் தரியாமலுடனே மறக்குமவரும், வேதமுதலியவைகளை யோதியவற்றைப் பலகாலும் பயிற்றாது விட்டவர்களும், அந்தணர் முதலிய நாற்குலத்தோரன்றி யிழிகுலத்தோரென்று சொல்லப்படுமவரும். எ-று. (௭)

தன்னின் மிக்கநற் சாதியிற் றோன்றினர்
இன்ன தன்மைய ரென்றறி யப்படார்
பன்னு நூலின் பயன்முறை பற்றிலார்
சொன்ன சொற்பினுஞ் சோர்வுறச் சொல்லுவார்.

எ-து. தத்தம்வருணத்துக் குயர்ந்த சாதியிற் பிறந்தவர்களும் இன்னசாதியென் றறியப்படாதாரும், ஆசிரியரிடத்திற் கேட்ட நூலின் பயனைத் தரிக்கமாட்டாதாரும், அவரிடத்திற்கேட்ட பொருளை யதன்வழி சொல்லாமற் றவறச் சொல்லுமவரும். எ-று. (௮)

சந்த பேதமுந் தானறி யாரென
விந்த வாறிசைத் தாரெழு வாயினர்
நிந்தை செய்துட னீக்கப் படுமவர்
மந்த ராமவர் தம்மை மதித்துமே.

எ-து. வடமொழி தமிழ்மொழியாகிய விருவகைச் சந்தபேதங்களை யறியாதாரும், அகங்காரத்தாலே தம்மைப் பெருமையாக வெண்ணுபவரும், மந்த புத்தியா யுள்ளாருமென விந்தமுறையிற் சொல்லப்படுமவர் முதலாயினு ரெல்லாரும், அபக்குவரென நிந்தித்தக்கணமே தள்ளப்படுபவர். எ-று.

எழுவாயின ரென்பதனால், ஆசிரியர் சொன்ன அருத்தமிருக்கத் தானொன்றைக் கற்பித்துக்கொண்டு சொல்லுமவன், எட்டி விருந்தவாறு சொல்லாமல் வேறொன்றாகச் சொல்லுமவன், தன்னுடைய சித்தாந்தத்துக்கு விரோதமாகச் சொல்லுமவன், இவர்கண் முதலாயினாரென் றறிக, சந்தபேதமாவன, பஃறொடை வெண்பா.

* ஒத்தமைந்த சந்தப் பொதுப்பெயராய்த் துறைப்பி, னுத்தமதிய த்தமத்திம, மொத்தநிலை, நன்னிலைகாயத் திரியுட னுண்டி, யனுட்டுப்பொ டுபருதிபந்தி-வனுப்புச்-சயதி யதிசயதி சக்குவரி மற்றையதி-சக்குவரி யாடி யதியாடி-திருதி-யதிதிருதியோடு கிருதி பிரகிருதி-யாகிருதிவிக்கிரு தி சங்கிருதி-மேலும்-அபிகிருதி யுற்கிருதியா மெழுத்தாலென்று - ரிருப தின்மேலாறு மிவை என்றார். வீரசோழியமுடையார், இவ் வடமொழிச் சந்தம் வன்ன விருத்தமெனவு மாத்திராவிருத்தமெனவு மிருவகை.

அபக்குவர்க்குப் பொருண்முதலிய வாசையினன்
ஞானநூல் கூறிற் குற்றமென்
றுணர்த்துகிறார்.

ஓது விப்பவ னெப்பிலி கற்புரை
பூத லப்பொரு ளைப்பொரு ளென்றெணி
யாத னைப்படு வன்னா கத்திழிந்
தாத னுக்கவண் மிக்குற வாரன்றே.

எ-து. தனக்கொப் பொருவருமில்லாதான் திவ்யாகம முதலியவற் றைப் பூமியிலுள்ள தனதானியந்துகின் முதலிய பொருள்களைப் பொருளா கக் கருதிப் பொருளாசையா லோதுவிக்குமாசிரிய னரகத்தின் கண்விழு ந்து மிக்க வேதனை யுறுவான், அப்படிப்பட்ட வறிவில்லாதவனுக் கவ்விட த்தி லுதவுவா ராரையோ. எ-று. (ய)

பக்குவர்க்கு அதனைப் போதித்த போதகன் பெருமையை
யுணர்த்துகின்றார்.

ஆக்கை நோயென வஞ்சினர்க் கற்புதன்
வாக்கை யோது மதிதிகழ் மாதவ
னோக்க மூன்றுடை நோன்மையன் வான்பிணி
போக்கு வாரவ னன்றிப் புவியுளார்.

* வீரசோழியம் யாப்பதிகாரம் கூ-ம் கவி.

கலித்துறை.

இருவிதஞ் சந்த மிவற்றொன் றெழுத்தா லிலங்கு மற்றை
யொருவித மாத்திரை யாலே யொளிரு மொளிருமிது
பொரு வரிதாகிய வாரியத்துண்டு பொதிய மென்னும்
அருவரை மாதவன் கூறுந் தமிழுக் கருகமன்றே. என்றும்,

அருக மருந்தமிழ்க் காரியத் தும்மெழுத் தானுதித்து
வருகின்ற சந்த விதமென் றுணத்தின் மதித்திடுக
வொருவனை யெல்லா வுயிர்க்கு முயிரா யொருவலில்லா
திருமலன் றன்னைப் பதம்பணிந் தேத்திடு நேயர்களே. என்றும்,
ஆன்றோர் கூறலானு மறிக.

எ-து. சரீரத்தை வெறுப்பினும் பிணியென் றஞ்சிய மாணாக்கர்க்கதிசயனான சிவனது வாக்கியத்தை யுபதேசிக்கின்ற வறிவினால் விளங்கும் பெரிய தவத்தினையுடைய போதகாசிரியன் மூன்று கண்களையும் ஞானவலியினையு முடைய தக்ஷிணாமூர்த்தி யுவனே யன்றிப் பூமியின்கட் பிறவிப் பெரும்பிணியைப் போக்குமவர் யாவர். எ-று. யார்-ஆர் என மரீஇயது.

இதுவுமது.

ஈசன் ஞான மிவனிடத் தேயந்துயிர்ப்
பாசந் தன்னைப் பறிப்பன் பழுதகல்
வாச கஞ்சொல்வன் மற்றிவன் றன்புகழ்
பேச வாரெவர் பேசரும் பெற்றியால்.

எ-து. பரமசிவனு மிந்த ஞானாசாரியனை யதிட்டித்துக்கொண்டு ஆன்மாக்களுடைய பாசங்களைத் தீக்கையினாலே சேதித்துப் பின்பு குற்றமில்லாத ஞானத்தை யுபதேசிப்பான். இந்த ஞானாசாரியன் புகழானது யாவராலு மளவிட் டுரைத்தற்கரிய முறைமையை யுடைத்தாகையா லெவர்தா னதனைச் சொல்ல வல்லவர். எ-று.

பறிப்ப னென்பது, முற்றெச்சம், மற்று உரையசை. (௩௨)

மேலெய்தியது விலக்கிக் கொடுப்போன் முறையுங் கொள்வோன் முறையுங் கூறுகின்றார்.

தடுத்த தன்னியன் பாற்கொள்க சாத்திரங்
கொடுக்குந் தேசிகன் றங்குலத் தில்லையே
லடுத்த வன்னிய னேயரு கன்றெழிற்
கொடுக்கொ ணாபர மார்த்தங் கொடுப்பதே.

எ-து. அந்தணரானோர் ஞானகாண்டத்தை யருளிச்செய்யு மாசிரியன் தன் சாதியின்கணில்லா விடத்திற் றம்மிற் கீழாகிய வரையரிடத்திற் கேட்கப்பெறும். அவனுந் தன்சாதியின்க ணில்லாவிடத்து வசியனிடத்திற் கேட்கப்பெறும். சூத்திரன் தன் சாதியினுந் தனக்குயர்ந்த சாதியினுங் கேட்கலாம். அரையன்முதன் மூவரு மவரவர்க்கடுத்த மேற்குலத்தோர்க்குக் கருமோபதேசங் கொடுக்கப் பெறா. ஞானோபதேசங் கொடுத்தலே யுரித்தாம். எ-று.

தங்குலத்தில்லையே யென்பதனாற் றத்தங் குலத்திற் பெறுதலே சிறப்புடைத்து என்றதென்க.

ஏகாரம் தேற்றம். சனகன் அரையனா யிருக்கவுஞ், சுகர்முதலிய பிரமரிஷிகளுக்கு ஞானத்தைப் போதிக்கையாலும், விதுரர் நாலாம் வருணமாயிருக்க ஞானத்தைத் துருவாசருக்குப் போதிக்கையாலுங் கூறியதென்றறிக.

உரைத்தாமென்ற லென்னுந் தந்திர வுத்தியாற் சிவஞானத்தை
யுபதேசிக்கு முறைமை யுணர்த்தி மேலதனை யெழுதிய
புத்தகத்தைத் தானஞ்செய்யு முறைமை
யுணர்த்துகின்றார்.

வேறு.

ஒப்பரிய வசனமல னுரைத்தவுரை யுதவுமுறை
செப்பினமெய்த் தவசிறந்த சிவஞான கோசத்தை
யப்பரிசே யருந்தவர்க்கு மடைவிக்கு மடைவினையுஞ்
செப்புவங்கே ளீந்தார்க்கு மிரந்தார்க்குஞ் சிறப்புறவே.

இ-ள். சத்தியமான தவமுடையவனே, தனக்கொப்பொருவருமில்லாத சிவனருளிச்செய்த திவ்யாகமத்தை யாசிரியன் மாணாக்கர்க் குபதேசிக்கு முறைமையைச் சொன்னோம், மேற்சிறப்பினையுடைய சிவாகமங்களை வரைந்த திருமுறையைப் பக்குவரா யுள்ள அரிய தவத்தினையுடையார்க்கு முதவு முறைமையினையு, மீவோர்க்கு மிரப்போர்க்கு மித்தானமே சிறப்புடைத்தென்னும் வண்ணஞ் சொல்கின்றோங் கேள். எ-று.

அருந்தவர்க்கு மென்ற வும்மை ஆசிரியர்க்குமென, எச்சவும்மையாயிற்று.

சிவஞானகோசதானஞ் செய்வோர் சிவன் முதலாயினாரை
யருச்சிக்கு முறை யுணர்த்துகின்றார்.

பராபரனை முதற்பூசை பண்ணிடுக வதன்பின்பு
பராபரனுக் கொத்தபர ஞானத்தைப் பரிவுறவே
பராபரனைப் போதிக்கும் பரஞானம் பாலிக்கும்
பராபரனைத் தேசிகனை யதன்பின்பு பகர்விதியால்.

எ-து. சிவஞான கோசத்தைத் தானஞ்செய்வோன் முதற்கட் பராசத்திக்கு மேலான சிவனை யருச்சனை செய்யக்கடவன், அதற்குப்பின்பந்தச்சிவனுக்கு நிகரான பரசத்தி ஞானமான திருமுறையை யன்பினோடே யருச்சனை செய்யக் கடவன், அதன்பின்பு சிவனை யறிவிக்கு மேலான சிவஞானத்தை யுபதேசிக்கும் பராபரனா யிருந்துள்ள வாசிரியனை யாகமத்திற் சொல்லிய குருபூசாப் பிரகாரத்திலே; பூசிக்கக் கடவன். எ-று.

பூசை பண்ணிடுக வென்பதனையும் விதியால் என்பதனையும் யாண்டும் வருவிக்க. (௰௫)

வித்யாதானஞ் செய்தற்குமண்டப விதியுணர்த்துகின்றார்.

பூதலத்து ளவலங்கள் பொருந்தாது குணம்பொருந்து
மாதலத்து ளெண்முழந்தால் வகுக்கமுறை மண்டபத்தை
யீதியற்ற வரிதெனினோன் முழத்தாலு மியற்றிடுக
கோதொழித்த நாற்கோணம் வட்டமுமாங் கூறியதே:

எ-து. பூமியின்கண் அவலமெனக் கூறிய அதம பூமியைப் பொருந்தாமல் அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கேற்ற வன்ன கந்த ரசங்களைத் தனித்தனியே யறிந்தந்தப் பூமியின்கண் வித்யா மண்டபத்தை யெட்டு முழத்தினாலே விதிவழி செய்க. இங்ஙனஞ் செய்யக்கூடாத விடத்து நான்கு முழத்தினேனும் செய்யக்கடவன். இந்த மண்டபஞ் செய்யுமிடத்துக் குற்றமற்ற சதுரசிரமாகவும், வட்டமாகவும் செய்யலாம். எ-று.

சதுரசிரம் பிறப்பிக்குமிடத்து நான்கு திக்கிலு மற்சியமாகக் கவராயங்கொண்டு பிறப்பித்து அதிற் சதுரசிரம் பிறப்பியாவிடத்து வாய்க்கப் பெருதாதலாற் கோதொழித்த தென்றதென்க. (௰௬)

இதுவு மது.

அதனடுவே யம்புயத்தை வண்சுதையா லமைத்திடுக
விதனயலே மற்றுமுள வலங்கார மியற்றிடுக
விதமுறவே யிதன்மீது விரித்திடுக விரைமலருஞ்
சிதநிறத்த நவவறுவை யதன்மீது சேர்த்துகவே.

எ-து. அந்த மண்டபத்தி னடுவே யழகிய மாப்பொடி முதலிய வெள்ளையினாலே யெட்டிதழ்த் தாமரையை யிடுக. இந்தப்பதுமத்தின் பக்கங்களிலே மற்றுள்ள வல்லிமுதலிய வலங்காரங்களைச் செய்க. இப்படி யலங்கரித்த பதுமத்தின்மேல் பலவகையான மணமுள்ள பூக்களையும் பரப்பி யதன்மேல் வெண்ணிறத்தை யுடைய கோடிப்பரிவட்டம் விரிக்கக் கடவன். எ-று. (௰௭)

இதுவுமது.

துண்டாள நிரைவிரவு தம்பங்க ளொருநான்கு
கொண்டதனு ணாற்றிசையுங் குறிபெறவே நிறுவிடுக
வெண்டாள விதானத்தை விரித்திடுக மீதுறவே
யொண்டாள மாலைகளுங் கந்துகமு மொழுக்குகவே.

எ-து. முத்துக்களை யொழுங்குபெற வழுத்திச்செய்த தூண்கணான்கினையும், மண்டபத்துக் கேற்பக்கொண்டு அந்த மண்டபத்தின் நாற்றிசையும் அழகுபெற நாட்டுக. அதன்மேற் பொருந்தும்படி முத்துமேற்கட்டியையுங் கட்டி யொள்ளிய முத்துமாலைகளையும், முத்துப் பந்தினையும், கொடுங்கையிற் கட்டித் தூக்குக. எ-று. (௰௮)

இதுவுமது.

கண்டையுடன் சாமரையுங் கட்டிடுக பட்டிகையுந்
துண்ட *மதி புற்புதம்போற் றர்ப்பணங்க டுலக்கிடுக [க
திண்டிகழ்கும் போதகத்தைத் திசைநான்குஞ் செறித்திடு
புண்டரிக வலர்தன்வாய்ப் பொருத்துகவங் குரம்புரிந்தே.

எ-து. கண்டையாகிய மணியையும், சாமரையையும், பலவகையான பட்டுப் புடைவையையும், கொய்சுகட்டுக. அர்த்த சந்திரனைப்போன்ற பிறையையும், நீர்க்குமிழிபோன்ற தட்டையையும், பொலிவினையுடைய கண்ணாடிகளையும், விளங்கும்படி கட்டுக. திண்மை விளங்கிய சலம் பூரித்த சாந்தி கும்பங்களை நாலுதிசையிலுந் தாபிக்க. முதற்கண் அங்குரார்ப்பணஞ்செய்து பின்பு அந்தச் சாந்தி கும்பங்கண்மேற் றாமரைப்பூக்களைச் சாத்தக்கடவன். எ-று. (௰௧)

சிவஞான கோசத்துக்குச் சிங்காதனமு மியந்திரபீடமும்
இயற்றுமுறைமை உணர்த்துகின்றார்.

அணியுறவே யரிபரிக்கு மாதனத்தை யாக்கிடுக
மணியுறவே மதகரியின் கோட்டாலு யற்றிதுதான்
பணவரிதேற் சந்தனத்தும் பண்ணிடுக வியந்திரத்தைத்
திணமருவு மதகரியின் கோட்டாலுஞ் சிறப்புறவே.

எ-து. † விசுவகன்மிய முதலியவற்றிற்கூறிய பதுமமுதலிய வாதனபேதத்திற் சிங்கங்க ளழகுபெறத் தாங்கு மாதனமாகிய சிங்காதனத்தை நவரத்தினங்களு மிட்டழுத்தி மதம்பொருந்திய யானைக்கொம்பினாலே செய்க. இந்தச் சிங்காதனம் பண்ணக்கூடாதாயிற் சந்தனமரத்தினாலும் திண்ணிய யானைக்கோட்டினாலு மியந்திர பீடத்தைச் செய்க. எ-று.

மற்று வினைமாற்றின் கண்ணது. திணம் திண்மை. கோட்டாலுமென்ற வும்மையா லாதனங்க ளிரண்டும் பொன், வெள்ளி, செம்பு, பித்தளைகளி னாலும், சந்தன முதலிய மரங்களினாலும் செய்தலுமா மென்க. எந்திரபீடஞ் செய்யுமிடத்து முற்கூறியவற்றுள் இயன்ற தொன்றைப் பதினெட்டங்குல நீளமும், இரண்டங்குலச் சுற்றுப்பருமையு முருண்டதாதல், சதுரசிரமாயாதல் நாலுதண்டத்தை யுண்டாக்கி அதனுனிகளிற் றாமரை முகிழாகப்பண்ணி யதனடுவே துவாரமிட் டதனடுவிற் கயிறுகோத்து எந்திரபீடஞ் செய்க. அல்ல திருபத்துநா லங்குல நீளந் தண்டத்தி னுயரமு மதிற் பாதிவிசால தண்டங்களுங் கொண்டு செய்க. (௨௰)

இங்ஙனங் கூறிய வாதனமுந் திருமுறையு மண்டபத்தில் வைக்கு
முறை யுணர்த்துகின்றார்.

இத்தகைய வாதனத்தை யிலங்குமணிப் பந்தரிடை
வைத்தறுவை கந்தமல ரதன்மீதே மலிவிக்க
வித்தகன்வே தகனுதி விளம்பியவாய் மொழியெழுதும்
புத்தகமு மதன்மீது வைத்திடுக புணர்வுறவே.

* மதி-புற்புதம், என்பன வுவமவாகுபெயர்.
† விசுவகன்மியம். சிற்பநூல்.

எ-து. இத் தகைமையோடு கூடிய சிங்காதன பீடமாதல் எந்திர பீடமாதல் விளங்கும் அழகிய பந்தலினடுவே வைத்ததின்மேலே பரிவட்டமும் விரித்து மணமுள்ள பூக்களுநிறைக்க. அதன்மேலே சுத்தனுமாயான்மாக்களுக் கறிவிப்பானுமாயிருக்கின்ற சிவனருளிச்செய்த சிவாகமத்தை எழுதும் வெள்ளேட்டுத் திருமுறையைப் பொருந்தும்படிவைக்க. எ-று.

எழுதும் புத்தகமுமென்ற உம்மையானெழுதின புத்தகமுமென்பதூஉமாம். (உக)

மேலதனைப் பூசைசெய்யுமுறை யுணர்த்துகின்றார்.

எழுதாத புத்தகத்தி னிருந்தியசொற் புத்தகத்தைப்
பழுதாகா ரோசனையைக் குங்குமத்தைப் பாளிதத்தை
யழகாகப் பூசிடுக வலர்மாலை தனையணிக
வழுவாத மகிழ்வுறவே சாத்திடுக வத்திரமும்.

எ-து. * அலேகத்தின் மேலேவைத்திருக்கிற சிவாகமங்களெழுதிய திருமுறையிலே குற்றமற்ற கோரோசனையையும் குங்குமத்தையும் கற்பூரத்தையும் அழகுபெறப் பூசிப் பூமாலையணிந்து தவறற்ற அன்பினோடு பரிவட்டமுஞ் சாத்துக. எ-று. (உஉ)

இதுவுமது.

எத்தொகைய கறியமிர்தின் விதமுளநல் லினிமையுற
வத்தொகைய விதத்துடனே நிவேதிக்க வமிர்தினையும்
பத்திபெறு தீபமுடன் பஞ்சவித தூபத்தை
யுய்த்திடுக மற்றுமுள வுபசார முறையுறவே.

எ-து. வெள்ளி. நாழியரிசிக்கு ஒருபலங் கறி. (உரு)

மேல்நிறுத்த முறையானே ஐவகைத் தூபமும்
வகுத் துணர்த்துகின்றார்.

அய்வகைய தூபங்க ளாவனதாங் குந்துருக்கந்
துய்யபசுங் கற்பூரந் துன்னியகா ரகில்வெண்மை
செய்தியசந் தனமினிய குற்குலுவு மெனவறிக
செய்யதனுற் றிருவிளக்கைக் காபிலத்தா னிகழ்த்துகவே.

எ-து. ஐவகைத் தூபங்களாவன, குந்துருக்கமும், கூடன் கற்பூரமும், வயிரம்பெற்ற அகிலும், வெண்மையான சந்தனமும், இனிமை செய்யுங் குருஞ்சீதாரியும் என்றறிக. சந்நிதியிலிடுந் திருவிளக்கைக் கபிலைப் பசுவினெய்யினாலேயிடுக. எ-று.

கபிலையைக் காபிலமென்றார். (உச)

* அலேகம்-வெள்ளேடு.

அதனை வலம்வந்து வணக்கஞ்செய்யுமுறை உணர்த்துகின்றார்.

வலஞ்செய்து தண்டதனை மானவிதி வழிதழுவத்
தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமத் திருகன்னந்
துலங்குமுகம் வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி
ரிலங்குசிரங் காமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே.

எ-து. வெளி. (௨௫)

குருபூசை யுணர்த்துகின்றார்.

இந்தவகை சிவஞான பூசையினை யியற்றியுடன்
கந்தமலர்ப் பூங்கோயி லதற்கயலே கடிதமைக்க
வந்தமலர்ப் பந்தரிடைத் தேசிகனை யருச்சிக்க
பந்தமறுத் தருள்வானைப் பரமனெனப் பாவித்தே.

எ-து. வெளி. சிவனுஞ் சிவஞானமுங் குருவுந் தம்மிலொக்குமோ வென்னிற் சிவனுக்கு யாதொரு மகிமையுண்டு அஃதச் சிவனிடத்திற் றோன்றிய சிவஞானத்துக்கு மப்படியே. அந்தக் சிவஞானத்துக்கு யாதொரு மகிமையுண்டு அதனை அங்ஙனம் அறிவிக்கு மாசிரியர்க்கும் அப்படியே. அஃதெக்காரணத்தா லெனிற் சிவஞசாரிய மூர்த்தமாயிருந்து ஆன்மாக்கள் பாசத்தைத் தகித்துச் சிவஞானத்தைப் பிரகாசிப்பிக்கையாற் சிவன் முதலிய மூவருக்கும் பூசைசெய்த பலமொக்குமென் றறிக. (௨௬)

ஆசிரியனிடத் தனுமதம் பெறுமுறையும் மேற்செய்யுங் கருமமு மூன்றுசெய்யுளாற் குளகமாக உணர்த்துகின்றார்.

பூசித்துப் பரமசிவன் பூசனையைப் போலுளத்து
ளேசற்று வலஞ்செய்து பணிந்துகுவித் திருகாமுந்
தேசுற்ற தேசிகனை சிவஞான தானவினை
யாசற்று நிறைவேற வனுமதஞ்செய் கெனவறைந்தே.

எ-து. வெளி. ஏசறவு-மனமுதலிய விகாரங்களை யகற்றுதல். ஆசு-குற்றம். (௨௭)

அற்புதனு மாரியன்ற னனுமதிபெற் றறன்மூழ்கிப்
பொற்புடைய வெண்கலிங்கம் புனைந்தணிந்து வெண்ணீறுந்
தற்பானை யுண்ணினைந்து தாணியிசைப் பணிந்தெழுந்து
சொற்பதவா சகமுறையைத் துயக்கறவே விரித்துடனே.

எ-து. வெளி. அற்புதன்-அதிசயன். விரித்தல்-சேமநீக்குதல். (௨௮)

மற்றைமுறை யதுதன்னில் விணாககவி யொருநான்கென்
றுற்றமுறை தனையொடுக்க வுவகையுற வொருமையுட

னற்புதனைத் தேசிகனை யருத்திடுக வன்றி
கற்புடைய விரதியர்க்கும் வேதியர்க்குங் களிப்புறவே.

எ-து. வெளி. விரதியர்-பிரமசாரி - உம்மையாற் சந்நியாசியையுந் தழீஇயினர். (௨௧)

* பூரிபோசன முணர்த்துகின்றார்.

விருத்தர்சிறு பணர்பாலர் மிடியாடு பிணியாள
ரொருத்தரையு மற்றார்க ளனைத்தா ரெனுமிவர்க்கு
மருத்திடுக வுறவினுட னதன்பின்றா னருந்திடுக
† பிருத்தியரை யதன்பின்பு பேணிடுக பிறரையுமே.

எ-து. கிழவர், பேராசையுடையவர், சிறுபிள்ளைகள், தரித்திரர், நோயானல் வாதைப்படுபவர், அனதர் குருடர் என்றிங்ஙனங் கூறப்பட்டவெல்லோர்க்கும் அன்னாதிகளைப் புசிப்பிக்க. அதன்பின்பு தானும் தாய்தந்தை சுற்றத்தோடு தானும் புசிக்க. அதன்பின்பு தன்னடிமையையும் அக்காலத்திலே வந்த அதிதியையும் இன்னொன்று வரையாமற் புசிப்பிக்க. எ-று.

பலியிடு முறையு மதிவாதனமு முணர்த்துகின்றார்.

அற்றைநிசிக் கணபலியை யமைத்திடுக துயிலினையும்
பற்றிடுக பிரமசாரி யல்லாதார் பற்றொழிக
மற்றையநாண் முதல்யாம மண்டபத்தை யிருமுழத்திற்
கற்புறவே யமைத்திடுக காண்பார்கண் களித்திடவே.

எ-து. அற்றையிரவு உருத்திரகண முதற்கேத்திர பாலனீறாயுள்ள கணங்கட்குப் பலியிட்டுப் பின்பு பிரமசாரியாயி னுறக்கஞ் செய்க. இல்வாழ்வானாயி னுறங்கா தொழிக. மற்றைநாண் முதற்சாமத்தி லிரண்டுமுழ நீளத்திலு மவ்வள வகலத்திலு மொரு மண்டபத்தை விதிப்படி காணுமவர்கண் மகிழ்ச்சியெய்தச் செய்க. எ-று. (௩௧)

பின்புமோர் விதியாற் சரசுவதி பீடவிதியையுஞ்
சிவஞானத்தைப் பூசைசெய்யும் விதியையு முணர்த்துகின்றார்.

அழகுறவே சரத்தாலு மமைத்தவியந் திரபீடத்
தெழிலுடைய புத்தகத்தை யிருத்தியருச் சனையியற்றிப்
பழுதறுநா கரநந்தி முதலிபியைப் பயின்றுவலா
னெழுதிடுக படித்திடினு மருச்சனைதா னித்தகைத்தே.

எ-து. முற்கூறிய மண்டபத்தின்கண் நாணற்கழி முதலிய வற்றானழகுபொருந்த விதிப்படி செய்த சரசுவதி பீடத்திலுறப் பழுதினையுடைய

* பூரி – ஈண்டு – மிகுதிப்பொருட்டு.
† பிருத்தியர் – அடிமைகள்.

* மாதிருகையாகிய திருமுறையை யெழுந்தருளப்பண்ணிப் பூசைசெய்து குற்றமற்ற நந்திநாகரந் தேவநாகர முதலாய வெழுத்துக்களை யெழுதித் தீர்ந்தவனே யெழுதக்கடவன், அதனை நாடோறும் படிக்கும்போது மிந்த முறைமையிற் பூசைசெய்து படிக்க. எ-று.

முதலிபி யென்றதனால் வடமொழி தெலுங்கு முதலாயின படித்திடினு மெனப் போதரலால்உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை என்க.

மேற்செய்யுங் கன்ம முணர்த்துகின்றார்.

அந்தமுறி ஞபவசியா யமலனடி யருச்சிக்க
செந்தழலை யோம்பிடுக திருமுறையை யருச்சிக்க
பந்தனையை யறுத்தருளைப் பாலிக்குங் குருபானைச்
சிந்தைமகிழ்ந் தருச்சனையைச் செய்திடுக சிறப்புறவே.

எ-து. எழுதிமுடிந்த வளவின் வித்யாதானஞ் செய்பவன் நிராகாரியாயிருந்து சிவபூசையு மக்கினி காரியமுஞ் செய்து அங்ஙனமெழுதிய திருமுறையைச் சாந்தி கும்பந் தாபித்திருக்கு மணடபத்திற் பூங்கோயிலின்கண் வைத்துப் பூசைசெய்து ஆணவமுதலிய பாசபந்தத்தை வேரறுத்துத் திருவருளைக் கொடுக்கும் ஞானசாரியனையுள்ள மகிழ்ச்சியினாலே விசேடபூசைசெய்க. எ-று. (௩௩)

இதுவுமது.

அற்றன்றநிசி யவ்விடத்து வேதாதி யரவத்தான்
மற்றுமுள பாடலினு ஞடகத்தின் வசியாலுஞ்
செற்றிடுக துயிலதனைத் தினகரனைத் தெரிசித்தே
சிற்பமுறத் தேரதனைச் சிறப்பிக்க விதிதெருண்டே.

எ-து. அற்றையிரவில் அப்பூங்கோயிலின் முன்னே வேதாகமபுராணவொலிகளினாலும், பிராகிருதம், திராவிட முதலிய பாடல்களினாலும், ஆன்மாக்களை வசிகரிக்குங் கூத்துகளாலும் உறக்கத்தினைப்போக்கி விழித்திருக்கக்கடவன். மற்றைநாட் காலமே சிற்பநூல் விதியை யாராய்ந்து பண்ணப்பட்ட தேரினை யலங்கரிக்க. எ-று.

நாடகமெனப் பொதுப்படக் கூறினமை வெண்பா,
சங்கர ஞடிய தாண்டவமு மாங்குமையா
ளிங்கிதத்தா லாடு மிலாச்சியமும்—பொங்குதிரை
யாழிப் புவியி லகமும் புறவரியுஞ்
சூழுநட நாலென்று சொல்.” என்பதனாலறிக. (௩௪)

இதுவுமது.

இந்நகைய விமானத்து ளிறையறையு மொழியெழுதும்
புத்தகத்தை புணர்வித்துப் பூசனையைப் புரிந்திடுக

* மாதிருகை-மாதா

பத்தியுட னசாலே பரிப்பிக்கப் பலர்பரவ
வத்தனம ராலயத்து ணகர்வலஞ்செய் தாக்குகவே.

எ-து. இச் சிறப்பினையுடைய புட்பக விமானத்திற் சிவனருளிச் செய்த சிவாகமத்தை யெழுந்தருளப்பண்ணிப் பூசைசெய்து அன்பினோடு நாராகிய சிபாதக்காரராற் றூங்கச்செய் தெல்லாருந் துதிசெய்ய நகரை வலமாக வெழுந்தருளப் பண்ணுவித்துச்; சிவனெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலிற் கொண்டு சென்றந்த விமானத்தைத் திருமுறையுடனிருத்துக. எ-று.

மேல்வேறு மோர்விதி யுணர்த்துகின்றார்.

அல்லதுபுத் தகமதனை யானைமுடி மிசையமைத்து
நல்லநகர் வலம்வருக நகரத்தார் நாட்டாரும்
வெல்லையறு வையும்வீக்கி விழைவுடனே புடையடைய
மல்கமிகு மங்கலங்கள் வணங்கிமுனே செலமன்னன்.

எ-து. வெளி. வெல்லையறுவை. வெள்ளைப் புடைவை. அறுவையுமென்ற வும்மையானே பாகுசிலையாபரண முதலியவைகளுங் கொள்க. வீக்குதல். தரித்தல். (௯௮)

இதுவுமது.

பலியதனைத் திசைதோறும் பண்ணிடுக பார்த்திபனு
நிலவணியுஞ் சடைமுடியார் மாபூசை நிகழ்த்திடுக
கொலைமுதனு மொழித்திடுக நிகளாதி குறைத்திடுக
மலைவிலிக்கு மாபூசை மனைதோறும் வகுக்கவமோ

எ-து. அக்காலத்திலே வீதியிற் றிக்குவிதிக்குக்களி லிந்திரன் முதலிய தேவர் பலியை யாசாரியரா லிடுவிக்க. அரசனுந் தன் திரவியத்தாற் சிவபூசையை விசேடமாகச் செய்வித்துக் கொலை, களவு கட் காம முதலிய தொழில்களையுந் தவிர்த்து நெறிமுறையி னில்லாதோரைத் தண்டித்தற் பொருட்டுத் தானிடுவித்த விலங்கு தொழுமுதலிய வற்றிற் கிடக்குமவரையும் விட்டு மகமேருவை வில்லாகவுடைய சிவனுக் கில்லங்கடோறும் விசேடபூசை செய்யும்படி கற்பிக்க. எ-று. (௯௯)

இதுவுமது

பருவமுறுங் காலத்தின் முதமதனைப் பரமனுக்கு
மருவுவிக்க விதிமுறையே வரதனமர் திருவெல்லை
விரைவுடனே விரவியமர் விமானத்துட் புத்தகத்தைப்
பரிவுறவே பருச்சிக்க சயவொலியும் பரந்தெழவே.

எ-து. திருவிழா நடக்க விதித்தகாலத்தன்றிச் சிவஞானதானங்களாகச் சிவனுக்குத் திருவுள்ள மகிழ வொருநாளெழுந்தருளப் பண்ணுவித்து வேண்டுவார் வேண்டி யாங்கு பயக்கு மந்தச் சிவனெழுந்தருளி யிருக்கும்

திருவெல்லையை வினாவினேடு வலம்வந்து சந்நிதியிலிருக்கும் விமானத்தி லெழுந்தருளியிருக்கும் சிவஞானகோசத்தைச் சயசய வென்னு முழக்கந் திசையெங்கும் விரிந்தெழத் தம்முள்ளத்தி லன்புண்டாகப் பூசைசெய்க. எ-று.

முதம்-சந்தோஷம். இது வடமொழி. (ருஅ)

இதுவுமது.

பரமசிவன் றிருமுன்னே தேசிகனைப் பணிந்தெழுந்து
திருமுறையை நிவேதிக்க திறல்வேந்தன் முதலோர்க்கும்
வரமுறவே யோரியலை யதுதன்னுண் மதித்தறைக
வுரைவிதியுங் காமமும் வழுவறவே யுணர்ந்தோனே.

எ-து. சிவஞானதானஞ் செய்பவன், முன்னர் அர்ச்சித்த திருமுறையை மேலான சிவ சந்நிதியி லெழுந்தருளப்பண்ணி வந்த வாசிரியனை வணங்கி யெழுந்திருந்தவர் கையிற்றானஞ்செய்யக் கடவன். பின்பு பதச்சேதம், பதப்பொருள், விக்கிரகம், வாக்கியயோசனை, சங்கை யுத்தரமாகிய வுரைசோ லைந்தினையும், பூபாளி பைரவி முதலிய கானபேதத்தையுங், குற்றமற வறிந்த வாசாரிய ரந்த வாகமத்தி லொரு படலத்தை யரையன் முதலாயினோர்க்கு நன்மையுண்டாக்கும் பொருட்டுப் படித் ததன்பொருளை யுணர்த்துக. எ-று. (ருகூ)

சிவஞானத்தைச் சாதகர் முதலானோர்க்குத் தானஞ்செய்யுமுறையும்
அதனை வேந்தன் முதலானோரு மகளிருஞ் செய்தற்கோர்
சிறப்புவிதியு முணர்த்துகின்றார்.

இத்தகையே யருந்தவர்க்கு மிபொழுதி லியற்றிடுக
புத்தகத்தின் பூசனையைப் புரவலர்மற் றனைவருந்தம்
வித்தமது கொண்டிந்த விதியதனை விளைவிக்க
பத்தியினாற் பயில்விக்க தேசிகனாற் பாவையரும்.

எ-து. அருந்தவராகிய சாதகர்க்கும், புத்திரர்க்குஞ், சிவஞானதானஞ் செய்யுங் காலீண்டுக் கூறியபடியே அதனைப் பூசைசெய்து கொடுக்கக்கடவன். வேந்தரு மற்றுமுள்ளாரு நெறிமுறையாலீட்டிய தத்தம் பொருள்கொண்டிந்தச் சிவஞானதான விதியை அன்பினாற் செய்விக்கக்கடவர்கள். நான்கு வருணத்தின் மகளிராயுள்ளாருந் தானஞ்செய்யாது ஆசாரியனாலே செய்விக்க. எ-று. (சம)

சாந்தி கும்பப் புரோக்கண முணர்த்துகின்றார்.

சாந்திபெறு தோயத்தைச் சமைத்தகுரு பான்றானும்
வேந்தனது முடிவிரவத் தெளித்திடுக விழைவுறவே
சேர்ந்தவர்க ளனைவர்க்குந் தெளித்திடுக தெளித்ததனாற்
றேய்ந்தழியு மவரவர்தந் தீயவினைத் திறலழிந்தே.

எ-து. ஆசிரியன் வித்தியாமண்டபத்திற்குறித்த சாந்தி கும்பசலத்தைக்கொண் டரசனது சென்னியிலு மவ்விடத்து வந்து சேவித்த மெய்யடிய ரெல்லார்க்கும் விருப்பத்துடனே தெளிக்கக்கடவன். அங்ஙனந் தெளித்த நன்மையினு லவ்ரவர்செய்த கொடிய பாவங்களின் வலியழிந்து கெடும். எ-று. (௪௧)

ஆசிரியர்க்குப் பூசை யனையர்முதலாயினோர் செய்யுந்திற முணர்த்துகின்றார்.

ஆசானுக் கருச்சித்து முதலளிக்க வடைசைவ
னாசாதி மற்றையருந் தமக்கியன்ற தொகைசெய்க
தேசாரப் பூசையினைப் பூசுரர்க்கு நிகழ்த்திடுக
வீசான னடியார்க்கு மாதுலர்க்கு மிரக்குத்தால்.

எ-து. வெளி. (௪௨)

இந்த வித்தியாதானத்தா லுலகு பெறும்பய னுணர்த்துகின்றார்.

இத்தகையே புரிந்திடிலோ ரிடையூறும் புவிக்கில்லை
வத்தனையே யுளநன்மை வகையனைத்தும் புகழ்மல்கு
குத்திரருங் குலைந்தகல்வர் கொடுவினையு மடுபிணியு
நைத்தழியு மழைபொழியுந் திங்கடொறு நலமுறவே.

எ-து. வித்தியாதானத்தை யிப்படியே செய்வாராயி னுலகத்துக்கு இடையூறுகள் சிறிதேனுமில்லையாம், ஆக்கமுமின்பத்திறங்க ளனைத்து முளவாம். கீர்த்தியும் பெருகும். கள்வராயினாருந் தாமே நடுங்கி யொளிப்பார். கொடியபாவமும் வருத்தாநின்றநோயுந் தேய்ந்து கெடும். நன்மைபொருந்தும்படி மாதந்தோறு மழையும் பொழியாநிற்கும். எ-று. (௪௩)

மேலதனைத் தானஞ்செய்தாரடையும் பலமுணர்த்துகின்றார்.

இத்தகையே புத்தகத்தை யீந்தாரு மெழுத்தொன்றற்
கத்தனமர் புரத்துறைவ ராயிரமா கற்பமுற
முத்தனைய முறுவனகை முளைத்தபிறை வளைத்தநுதற்
றத்தையன மொழிமடவார் தங்கியதேர்த் தானத்தே.

எ-து. இம் முறைமையிற் சிவஞானத்தைத் தானஞ் செய்தாரு முத்துப்போன்ற நகையினையு மாகாயத்தின்கட் டோன்றிய விளம்பிறை போன்று வளைந்திருக்கு நெற்றியினையுங் கிளியின் சொல்லைப்போன்ற மொழியினையு முடைய வரமாதர்கள் சூழ்ந்திருக்கும் விமானத்திலேறிச் சென்று ஓரெழுத்துக்காயிரம் பிரமகற்பஞ் சிவலோகத்தி லிருப்பர். எ-று.

எறிச்சென்று என்னும் வினையெச்சம் விரித்துக்கொள்க. ஈந்தாருமென்னு மும்மை யிறந்தது தழீஇயது. (௪௪)

சிவஞானகோசத்தைச் சேமஞ்செய்தோர் முதலாயினார் பலமுணர்த்துகின்றார்.

புத்தகத்தைப் புரந்தாரும் தாய்தந்தை புத்திரருஞ்
சித்தமகிழ் வுறவேவற் செய்தார்க ளனுமிவரு
மத்தனமர் சிவலோக மடைவார்க ளமருலக
முத்தொகைய சுற்றத்தார் முற்றினர்முன் னற்றவமே.

எ-து. சிவாகமத் திருமுறையைக் காக்குமவருஞ் சிவஞானதானஞ் செய்தார் தாய் தந்தையரு மக்களு முள்ளமகிழ்ச்சி பொருந்த வேவல் செய்தாருமெனக் கூறிய விவரெல்லாருஞ் சிவலோகத்தினை யடைவர். முற்பிறப்பி னல்ல தபோபலத்தா லிப்பிறப்பிற் சிவனதானஞ் செய்தார் மூவேழ் சுற்றத்தினருந் தேவலோகத்தை யடைந்திருப்பர். எ-று. (௬௫)

சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

பொருந்துவர்முற் பகர்ந்தபலம் புகழாடிப் பூரணையிற்
புரிந்தவருஞ் சிவஞான புத்தகத்தைப் பூசனையைத்
திருந்துமலர்ப் பந்தரிடைச் சிறப்புறவே வைசகியிற்
புரிந்தவரும் பூரணையிற் சிவஞான பூசனையே.

எ-து. வெளி. (௬௬)

சிவாகமங்களெழுதும் அலேகங்கள் கொடுப்பார் பெறும்பய னுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இறைவ னிணையில் வாய்மொழியை யெழுத விதழா
 லிசைமுறையைப்
பெறுவ மென்னு மாதரவு பெற்றார் தமக்குப்
 பெறுவித்தா
ரறையுங் கழலா னமலனமர் புறத்தி னதனி
 னிதழொன்றற்
குறைவ ருகமோ ராயிரமு முறவே யுவகை
 யதுபெறவே.

எ-து. வெளி. இதழ். சிதாளிதாலமுதலியன. (௬௭)

கம்பைமுதலியவு மெந்திரபீடமுங் கொடுப்பார் பெறும்பய னுணர்த்துகின்றார்.

கம்பை கவின தெழுத்தாணி கயிறுங் கொடுப்போர்
 மையிணையு

நம்பிக் கொடுப்போர் முன்னவின்ற பலத்திற் பாதி
நலம்பெறுவர்
கொம்பி னுலு மதகரியின் கோணைச் சரத்தின்
கோலானுங்
தம்பா லுவகை யுறப்பீடஞ் சமைத்தே யளிப்பா
ரவர்தாமும்.

எ-று. தேக்கு உசிலை முதலிய மரங்களாற் செய்யப்பட்ட கம்பையும், விதிப்படி யழகுநிறைந்த வெழுத்தாணியையும், பட்டுநூன் முதலியவற்று விருபத்தேழிழையாற் செய்யப்பட்ட கயிற்றையுங் கொடுப்பாரும், மைக் காப்பினைவிரும்பிக் கொடுப்பாரும், யானைத்தந்தத்தினானுஞ் செவ்விய நாணைக்கழியினானு மெந்திரபீடத்தைச் செய்து தமதுள்ளமகிழ்ச்சியுற்றுக் கொடுப்பாருஞ், சிவஞானதானஞ் செய்வார்க்கு முற்கூறிய பலத்திலே பாதி நலமாகப் பெறுவர். எ-று.

கவினுமெழுத்தாணியெனச் சிறப்பித்ததனால் எஃகினாலே பதினறங்குல நீளங்கொண் டதினடுவே எறும்பினிடைபோன்ற கணையுமாகச் செய்த நாராசமெனக் கொள்க. (௪௮)

திருமுறைக்கு வேண்டு முபயோகங்கள் கொடுப்பா ரடையும்
பல னுணர்த்துகின்றார்.

புத்த காங்க மேதேனும் புரிவோ டீவார் புனைபோர்பா
லத்த னமருஞ் சிவலோகத் தமர்வர் போக மனைத்தினொடும்
வத்திராதி விதானந்த மகிழ்ந்தே யீவா ரிழையொன்றற்
குய்த்தே யுகமோ ராயிரமு முறவே யுறைவ ருவப்புடனே.

எ-து. திருமுறையைச் சேர்த்தற் கங்கமான சலாகை தமருசி சிவுளி யாதொன்றையேனும் பெரியோர்பால் விருப்பத்துடன் கொடுப்பவர் சிவலோகத்திற் சென்று சகல போகங்களுடனுங் கூடி வாழ்ந்திருப்பர். அதற்குச் சாத்தும் பரிவட்ட முதன்மேற்கட்டி யீறாக வுள்ளனவற்றை மகிழ்ந்து கொடுப்பா ரிழையொன்றற் காயிரம் யுகமுங்குறையாமலகமகிழ்ச்சியுடன் சிவலோகத்திலிருப்பர். எ-று.

வத்திராதி யென்றதனா லங்குரக் காற்பாளங் தூக்கன் முதலியவுங் கொள்க. (௪௯)

ஒப்பின் முடித்தலாற் சிவாகமத்தை யோது ஞாதாக்களுக்கு
வத்திரதானஞ் செய்பவர் பெறும்பய
னுணர்த்துகின்றார்.

பரமன் திருவாய் மொழியதனைப் பயிற்றும் பரம யோகிதனக்
குருகி யாடை யுகப்புறவே யுதவு மவர்தா முள்ளளவும்

பொருவில் பரம சிவஞான கோசம் புரிவோ ருந்தபல
மருவு வார்க ளவரன்றே பத்த ராவார் வரதனுக்கே.

எ-து. வெளி. கோசம். எது. பலபண்டமு மிருக்குமிடம். அது போல அறம் பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் விரிந்திருத்தலான் சிவஞானகோசமென் றாகமத்துக்குப் பெயராயது. (௫௰)

மேலவர்க் கன்னமுதலியவை யுதவினர் பெறும்பய
னுணர்த்துகின்றார்.

பரமர் திருவாய் மொழியதனைப் பயிற்றும் பரம யோகிகளுக்
குருகி யவாகட் கன்னதி யைந்து வருட முதவிடுவார்
பொருவில் பரம சிவஞான கோசம் புரிவோ ருந்தபல
மருவு வார்க ளவரன்றே பத்த ராவார் வரதனுக்கே.

எ-து. வெளி. * உவப்பினு முயர்வினு மென்றதனாற் பரமனென வீன் டொருமைப்பால் பன்மைப் பாலாயிற்று என்க. (௫௧)

இவரன்றி யெவரேனுஞ் சிவாகமங்களை யாராயுமவர்க்
கன்னமுதலியவை யுதவினர் பெறும்பயனுணர்த்துகின்றார்.

மைய லறுக்கும் வாக்கியத்தை வாக்காற் பயிற்றி மனத்தானு
மைய மறவே யாராய்ந்தார்க் கன்ன மாடை ரிப்பாருஞ்
செய்ய சடையார் சிவபுரத்தைச் செறிவார் சிறுவ ரிறுதியரும்
வைய முண்டான் வைகுண்ட மூவேழ் சுற்ற மருவிடவே.

எ-து. மாயையினல்வரு மயக்க விகற்பங்களையும் சிவாகமங்களை யாசிரியன்பால் நாவினலேபயின் றையந்திரிபற மனத்தினலு மாராய்வார்க் கன்னமுந் துகிலுங் கொடுப்பவர் தந்தைமுதன் மைந்தர் வரையாயுள்ளா ரிருபத்தொரு சுற்றமுமுலக முண்ட திருமாலெழுந்தருளியிருக்கும் வைகுண்டத்தின்மேவத் தாம் சிவந்த சடையினையுடைய தம்பிரானெ ழுந்தருளியிருக்குஞ் சிவபுரத்தை யடையாநிற்பர். எ-று. (௫௨)

சிவாகமங்கள் பயிற்றுமவர்க்கோர் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

எற்க விரண்டு முழத்தானு மெல்லை கோலி யதனடுவே [யாற்
கூர்த்த நான்கு கோணமலராற் கொள்க வட்டம் வெண்சுதை
சீர்த்த வெண்டா மரையதனிற் சிறக்க வெழுதி யதன்மீது
பார்க்க வினிய திருமுறையைப் பரிக்க பீடத் தொடுபரிந்தே.

எ-து. சிவாகமங்களை யோதுவான் இரண்டு முழத்தினல் விதிபொருந்த வோரெல்லையை வளைத் தவ்வெல்லையினடுவே நாற்கோணமாதல்,

* உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ்செறலினு, மிழிப்பினும்பா லிணை யிழுக்கினுமியல்பே' என்றார் நன்னூலாரும். பொதுவியல் சூ-௨௰௮

வட்டமாதல், ஒருவேதிகைகொண்டு அதன்கண் வெள்ளிய சாந்துப்பொடியினாலே யழகிய வெண்டாமரையைப் பொலிவுபெற வெழுதி அதன்மேற் காணுந்தோறும் மகிழ்ச்சிதருந் திருமுறையை யொருபீடத்தோ டன்பினா லெழுந்தருளப்பண்ணுக. எ-று.

கோணம் வட்டமென்பன ஆகுபெயராய் வேதிகைக்காயிற்று. (௩௩)

இதுவுமது.

மற்று முள்ள மங்களங்கள் வகுக்க வாதன் றிருவாக்கைக்
கற்க வளவில் காதலுடன் கற்பார் தமக்குங் கற்பிக்க
சொற்கள் கேட்க விரும்பினர்க்குஞ் சொல்லி முடிக்க முடிவளவிற்
கற்பார் பரம காரணர்க்கும் புரிக பூசை களிப்புடனே.

எ-து. அச்சிவாகமத்தைச் சூழ நான்கு பருதியைவைத்துக் கந்தபுட்பத்தா லருச்சனைசெய்து ஆசிரியன் கிழக்குமுகமாயிருந்து சிவாகமத்தை யளவில்லாத வாஞ்சையினா லோதக்கடவன். தன்னிடத் தோதுவாரையும் வடக்குமுகமாகவைத் தோதுவிக்கக்கடவன். தானோதிய சிவாகமங்களைக் கேட்க விரும்பு மாணவர்க்கு அத்திசையை நோக்கிவைத்துப் பதச்சேதமுதலிய வைந்துறுப்புட னக்நூற்குப் பொருளுரைத்து முடிக்க. இப்படியே யவ்வாகமத்தை யோராசிரியர்பா லோதிமுடிந்துள்ளளவிற் கற்போர் *உபாதான காரணங்களுக்கெல்லா மேலாயிருக்கும் சிவனுக்குள்ள மகிழ்ச்சியுடன் பூசைசெய்க. எ-று. (௩௪)

இதுவுமது.

புரிக பரம சிவஞான பூசை நசையாற் றேசிகர்க்கும்
பரம ஞான யோகர்க்கும் பரிவு பெருகப் பதமுதலு
முருகி யிசைய வூட்டிடுக வுவகை யவர்க்கு முறவுளத்துட்
பொருவில் பரம புத்தகத்தைப் பொருத்தும் வலத்தைப் பொருந்து
[தற்கே.

எ-து. பின்னர் மேலான சிவஞானபூசையை அன்பினாற்செய்து ஒப்பிலாத சிவஞானதானஞ் செய்யும் பலன்றனக் கெய்தும் வண்ணமோதுவித்த வாசிரியருக்கும் மேலான ஞானயோகிகளுக்கும் அன்பு பெருகாநிற்ப வுருகி வேண்டியபடியே யன்னமுதலியவைகளையும் அவர்க் குள்ளக்களிப் புண்டாக வமுது செய்விக்கக்கடவன். எ-று.
பதம் - உண்டி. (௩௫)

மேலதனை யோதுவார் முதலாயினார், பெறும் பயனை
இரண்டுசெய்யுளாற் குளகமாக உணர்த்துகின்றார்.

ஆதி யறைந்த வாகமத்திற் சந்த மொன்றே வதன்பாதி
யோது வார்க ளோதுவிப்பா ருரையை விரிப்பா ருரைகேட்பார்

* உபாதானகாரணம்-துணைக்காரணம்.

போத முறவே சிந்திக்கப் புரிவார் துணிவார் பொருளினையும்
பேத மறவே யெழுதிடுவா ரெழுது விப்பா ரிவரெல்லாம்.

எ-து. சிவனருளிச்செய்த சிவாகமத்திற் சுலோக மொன்றாயினும், அதனுட் பாதியாயினும், ஓதுவாரும், அதனை மாணாக்கர்க்குப் படிப்பிப்பாரும், அதன் பொருளை விரித்துச் சொல்வாரும், விரித் ததன் பொருளுரைக் கக் கேட்பாரும், அங்ஙனங் கேட்டபொருளை யறிவிலழுந்தச் சிந்திப்பாரும், அதற்கிதுவே பொருளென்று துணிவாரும், அதனைப் பிழைபடாம லெழுதுவாரும், அதனைப் பொருள்கொடுத் தெழுதுவிப்பாரும், இங்ஙனங் கூறிய விவர்களனைவரும். எ-று.

சந்தம்-சுலோகம்-ஓகாரம்-எதிர்மறை. (௬௬)

மணியின் பேத மனைத்தினையு மகிழ்ச்சி யுடனே மண்முழுதுந்
துணிவு பெறவே நால்வேதந் துயக்கின் றவே யாறங்க [ங்
மெணிய மறையோர்க் கிந்தபல மியைந்தா ரியவின் பொருளெல்லா
கணிய கருத்தார் பலமதுதான் கற்றா ராலுங் கணிப்பரிதே.

எ-து. முற்கூறிய வனைவரும் உலகிலுள்ள நவரத்திநங்க ளெல்லாவற்றையும், பூலோகமெல்லாவற்றையும் ஐயந்திரிபறவும், பொருளறு திப்பாடுபெறவு நால்வேதமு மாறங்கமு முணர்ந்த அந்தணர்க்கு மகிழ்ச்சியோடுகொடுத்த பலத்தைப் பெற்றவரோ யாவராதலால் ஒருபடலத்தின்பொருளெல்லாம் உணர்ந்தவுள்ளத்தை யுடையார் பெறும்பலத்தைச் சகலகலையுங்கற்ற பெரியோராலு மளவிடற்கரிது. எ-று.

நால் வேதமாவன- சூ. "இருக்கேஎசுவேசாமமதர்வணங்-தருக்கினைப் போக்கும் வேதநான்கே". ஆறங்கமாவன, சூ. "சந்தஞ்சோதிடஞ் சிக்கை கற்பங்-தந்த நிருத்தம் வியாகரணமென் றிவை - எந்தையங்கமா றெனவே யெண்ணுக". எண்ணியவென்பது எணியவென்றும் - கண்ணியவென்பது- கணியவென்றும் விகாரப்பட்டன. (௬௭)

மேற் *கடுத்தமுதலாயின உதவுவார் பெறும்பயனுணர்த்துகின்றார்.

பரமன் மொழியை யெழுதச்சி பன்ன மதனுற் சினத்தா
லுரிய கடுத்தஞ் சமைத்தளிப்பா ருதவு வாருய் பலகையினை
யரிய விதழி னலேகத்தை யளித்தா ரனைய ரவர்தாமும்
பொருவி லமலன் புரத்துறைவர் போகம் பலவும் புணர்ந்தாங்கே.

எ-து. பரமேசுர னருளிச்செய்த சிவாகமங்களை யெழுதுதற்கு அசினமாகிய மான்றோலினாலேனும் சீலையினாலேனும் கடுத்தத்தை யுண்டாக்கிய

* கடுத்தம்-தோல்முதலியவற்றாற் சேர்த்தபுத்தகம்.

தற் கிரண்டுபுறமுஞ் சிபன்னமாகிய குமிழமரத்தினாற் கம்பையாகச்சேர்த்து பச்சையிட் டொட்டிக் கொடுப்பாருந் தேக்குமாமுதலியவற்றாற் செய்த * வட்டிகைப் பலகைகொடுப்பாரும், பெறற்கரிய பனையோலையாற் சேர்த் தவலேகத்தைக் கொடுத்தவரோ டொப்பர். இங்ஙனங் கடுத்தமுதலிய வற்றைக் கொடுத்தாரு மொப்பிலாத சிவ னெழுந்தருளியிருக்குஞ் சிவபுரத்தி லுண்டாகிய நானா போகங்களையும் பெற்று வாழ்வர். எ-று.

ஆல்-அசை. அவர்தாமு மென்ற வும்மை யிறந்தது தழீஇயது. ஆங்கு அசைநிலை. எழுதவென்பதனு லெழுத்தாணியா லெழுதப்படாமையி னெழுதுதற் பொருட்டுச் செப்புச் சட்டியிலே வேப்பம் பிசினிட்டு நீர்வார்த் தூற வைத்துக் கடுநெல்லி, தான்றி, களிப்பாக்குக், காசுக்கட்டி யிவைகளை யங் நீர்வார்த் தனைத் துலர்த்திப் பின்பதனை வேப்பங்கடனை கொண் டந்நீர் வார்த்தனைத் துலர்த்திப் பின்பு மவ்வண்ணம் வேப்பங்கடனையாற் செய்ப ஞ்ச நீர்வார்த்தனைத் துண்டைபண்ணி யெழுதும்பொழுது நீர்வார்த் தனை த்து நாணற்கழியைத் தூரிகைக் கோலாக்கி யெழுதுக. (கஅ)

சிவஞான கோசதானஞ் செய்தார் சிவலோகத்திற் போகம்
புசித்துத் தொலைந்தவாறே பூமியின்கண் வந்து
பெறும்பய னுணர்த்துகின்றார்.

போக முடிவின் மனுநீதி புரக்கும் புவிவேந் தருமாவர்
யோக மறநால் வேதமுணர் முந்நூன் மார்ப ரொலமுளைத்துப்
பாக முறவே மூலமலம் பாம ணடிக்கண் பருமாவர்
மாகர் பெறுதற் கரியசிவன் மலர்த்தா ளிணையை மருவுதற்கே.

எ-து. சிவஞான கோசதானஞ் செய்தார், சிவபுரத்திலிருந்து போகங்களைப் புசித்துத் தொலைந்துள்ளளவிற் பூமியின்கண் மனுநூன்முறையே காக்கு மரசனாயும் பிறப்பர். பின்னர்த் தேவர்களாலும் பெறற்கரிய பரமேசுரனுடைய தாமரை மலர்போன்ற விரண்டு சீபாதங்களை யடைதற்பொருட் டையந்திரிபின்றி நான்குவேதங்களையு மாராயு மந்தணரொனத் தோன்றி யாணவமல பரிபாகம் பிறக்க நாடோறுஞ் சிவனது சீபாதத்தை வணக்கஞ்செய்தற்கு நேயமுடையவருமாவர். எ-று. உம்மை-எண். (ககூ)

முற்கூறிய சிவஞானகோச மெழுந்தருளப் பண்ணுதற் காலய
முதலாயின வுண்டாக்கு முறைமை யுணர்த்துகின்றார்.

கனக மதனாற் பெட்ட கத்தைக் கற்போ டமைக்க கலக்கமணி
புனைக வெள்ளி செம்பாலும் புரிக வேறும் பொருட்கிசைய
வனைக ஞான வாலயநூல் வழியாற் சிலையா தியின் மகிழ்வாற்
றனையொப் பரிய வரிப ரிக்கும் பீட மதனுட் சமைக்கவே.

* வட்டிகைப்பலகை-சித்திரப்பலகை.

எ-து. அந்த ஞானகோச மெழுந்தருளப் பண்ணுதற்குச் சிலைமுத லியவற்றா லாலயத்தை விதிவழியுள்ள மகிழ்வோடுசெய் தந்த வாலயத்து ணடுவே தனக்குநிகரில்லாத சிங்கங்கள் தாங்குமொரு பீடத்தினைச் செய்தி ருத்தி யதன்மேற் புத்தக மெழுந்தருளப்பண்ணும் பெட்டகத்தைப் பொன் னினாற்செய்து நவரத்னமிட் டிழைத்தாதல், வெள்ளி, செம்பு, மற்றுமுள்ள தாதுக்களாலாதல், தத்தம் செல்வத்துக்கேற்ப விதிவழிசெய்க எ-று.

அரோ-அசை. விதிவழியாவது-மூன்றுமுழமுதன் முப்பத்துமூன்று முழ மீறாக வித்தியாமண்டபத்தின் அகலமும் நீள மைம்பதுமுழ மீறா கவுந் தனக்கும்பொருந்தக் கொண்டதனைப் * பிராசாதமாதல்-மண்டபமா தல் செய்விக்க என்பது. சிலையாதி யென்பதனாற் செங்கன் மரமுதலிய னவு மமையும். சிங்காதன மேழங்குலந் தொடுத் திவ்விரண்டங் குலமாக வேற்றி யேற்றி முப்பத்திரண் டங்குலமீறாக † ஆயாமம் பொருந்தக்கொ ண்டு சதுரசிரமாய் தாசிரமாதற் பொருத்தம் வாய்க்க அவ்விதிவழி செய்க. பெட்டகஞ்சமைத்தற்கு மா, பலா, மகிழ், அத்தி, முருக்கு, இவற்றினுவி யன்ற தொன்றை மூவிரற் கனப்பலகையாக்கி முப்பத்தாறங்குல வகலமு மதின் மும்மடங்கு நீளமு மகலத்துக்கொத்த வுயரமுங்கொண்டு பெட்டி யாகப்பண்ணி யதிலொரு புறத்திலே கதவுந் தாழு மிட்டிசைகளி லிருப்பு ப்பாளங்கட்டிப் பன்னிரண்டங்குல வுயரத்தில் நாலுகாலமைத்துப் பெட் டியிற்கீழே தைப்பதென்க. நூல்வழியென்பது நடுநிலைத்திவகமாக்கி முற் றுங் கூட்டுக. (சஎ)

இதுவுமது.

அணியார் கனகப் பெட்ட கத்தை யரியா தனத்தின் மிசையமைக்க
பணியா பரணன் பகர்மொழியைப் பதிக்க வதனுட் பாங்குறவே
தணியாக் காத லுடன்பூசை சமைக்க விதியிற் றவறாதே
யுணர்வு முணர்ந்த வுயர்ந்தோர்க்கு முவகை யுறவே யுதவுகவே.

எ-து. முன்னர்க் கூறிய சிங்காதனத்தின்மே லழகுநிறைந்த பொ ன்முதலிய வற்றாற் செய்யப்பட்ட பெட்டகத்தினைவைத் ததனுள்ளே பா ம்பினைப் பூணாக வணிந்த பரமேசுர னருளிச்செய்த சிவாகமத் திருமுறை யை யெழில்பெற வெழுந்தருளப் பண்ணி யமையா வன்புடன் விதிமுறை தப்பாமற் பூசைசெய்து கற்றுணர்ந்த பெரியோர்க்கு முள்ள மகிழ்ச்சியோ டுண்டியைக் கொடுக்க. எ-று.

உயர்ந்தோர்க்கு மென்னு மும்மையா லிழிந்தோர்க்கு மென்பது மமையும். அமைக்க-பதிக்க வென்பன முற்றெச்சம். (சஅ)

இதுவுமது

என்று மியற்றி யிடையாக மீக நிதியு மிருநிலனும்
பொன்று முடல மெனவுணர்ந்து பொருவி லரிய பொருடன்னை

* பிராசாதம்,-கோயில். † ஆயாமம்,-உயரம்.

யொன்றக் கருது முளமுடையா ருப்ப வைய மொப்பிலுரை
நின்று நிலைமை யுடையோர்பா னெறியை யறிய நிகழ்த்திடவே.

எ-து. யாக்கை நிலையுத லின்மையா லழியுமென்றறிந் திந்த யாக்கை யிருக்கையிற்றனே யொப்பின்றி யொருவரானும் பெறற்கரிய சிவமாகிய பொருளை யடையக்கருது முள்ளமுடையோ ருலகமெல்லாம் பிழைக்கும்பொருட் டந்த ஞானவாலயத்தி லிருக்குஞ் சிவஞான கோசத்துக்கென்றும் பூசை நடத்துதற்குஞ் சிவாகமங்களை யெடுத்ததனிற் கூறு முத்திமார்க்கங்களை யாராய்தற்கு மந்தமார்க்கங்களை யனுட்டித்தற்கு நிகரில்லாத வசனத்தின் வழி நின்று நிலைபெறுந்தன்மை யுடையோர்பாற் றனராசியும் பூமியுங் கொடுக்க. எ-று.

ஈண்டுக்கருது முளமுடையா ரென்பதனை யெழுவாயாக்கிப் பொருளுரைக்க. யாகமெனினும் பூசையெனினு மொக்கும். (௬௨)

சிவாகமங்களினது சீர்ணோத்தாரண விதியுணர்த்துகின்றார்.

பழகிப் பழுது பலவிரவிற் பாமர் திருவாய் மொழியிதழும்
வழுவற் றெழுத வல்லாரால் வரைவித் தெழுதி மையிணையு
மழகுற் றதனை யருச்சிக்க வாசான் பழைய வதுதன்னை
யழலிற் புரிக வாகுதியை யானெய் யுடனே யமல னுக்கே.

எ-து. ஆசிரியர் தம்பிரானார் திருவாக்கினால் அருளிச்செய்த சிவாமத் திருமுறைபழகி ஏடுகள் பலவு முரிதலெனிதலெழுத்துத் தெரியாமை முதலிய குற்றங்கள் பொருந்திற் பிழையற எழுதவல்லாரால் எழுதுவித்து மைக்காப்புஞ் சாத்தி அழகமைந்த வத்திருமுறையை அருச்சனைசெய்யக் கடவன், பின்பு பழகிப்போன திருமுறையை நின்மலனாகிய சிவனுக்குப் பசுவினெய்யிற் றோய்த்துச் சிவாக்கினியி லோமஞ்செய்க. எ-று.

மையெழுதல்-இடுதற் பொருண்மேலது. (௬௩)

மேலதற்கு ஞானவாலய முதலாக விங்ஙனங் கூறியவற்றைச்
செய்தார் பெறும்பயன் உணர்த்துகின்றார்.

இந்த விதியி லியற்றி னர்கண் மூவேழ் சுற்றத்
தொடுமிறைவ
னந்த வுலக மடைந்தட்ட குணத்தொ டமர்வ
ரவ்விடத்துஞ்
சிந்தைக் கரிய சிவனடியைத் தினைத்தே யிருப்பர்
சிவமாவர்
வந்து பிறப்பர் போகத்தின் மகிழ்ச்சி யாங்கே
வைத்தாரே.

எ-து. இங்ஙனங் கூறியவாறு சிவஞானத்துக் காலயமுதலியவற்றைச் செய்தார் இருபத்தொரு வர்க்கத்தவரோடு சிவனெழுந்தருளிய சிவ

லோகத்தை அடைந்து முழுதுணர் ஞானமுதலிய வெண்குணங்களோடுங் கூடியிருப்பர். அவ்விடத்துஞ் சிறந்த போகங்களி லழுந்தாமே மனத்துக்கெட்டாத சிவனது திருவடியி னிட்டைபுரிந் திருப்பார். மகாசங்கார காலத்தே பரமமான முத்தியையடைவர், அஃதன்றி யாண்டுச் சிறந்த போகங்களில் விருப்பத்தை யுற்றே, மீண்டும் பூமியின்கண் வந்து பிறப்பர். எ-று.

அங்ஙனம் பூமியின்கண்வந்து பிறந்தாரடையும் பல
மீதென் றுணர்த்துகின்றார்.

போக முடிவிற் புவிதன்னிற் பிறந்து புரந்து புவியெல்லா
மோக மறவே மறைநான்கு முறையி னுணர்ந்து முனிந்துடல
மேக னிறைவ னிணையடியை யிரண்டற் றொளிரு மெழின்ஞான
யோக மடைந்து சிவமாவ ரூன மனைத்து மொழிந்திடவே.

எ-து. சிவலோகத்தி லிருக்குஞான்று போகத்தை விரும்பினோர், அப்போகம் புசித்துத் தொலைந்த வளவிற் பூமியின்க ணரையருய்த்தோன்றி யுலகமுழுதுங் காக்குந் தலைமையெய்திப் பின்னர் ஐயந்திரிபற நாலுவேதங்களையும் உள்ளபடியே யாராய்ந்து சரீரமும் பொருளள்ளவென்று துறந்து தனிமுதலாய் நிற்கும் பரமேசுரன் திருவடியிணையை வேறறவிளங்கு மழகினையுடைய ஞானயோகத்தைப் பொருந்தி மலமாயாகன்மங்களெல்லாங்கெடும்படி சிவத்தோடு கலப்பர். எ-று.

ஞானம். எ-து. சிவஞானம். அதனைக்கலத்தல், ஞானயோகம். இரண்டற் றொளிருமெழிலென்பதனை ஞானத்துக் கடையாக்கிப் பொருளுணர்க்க. திருவடியே ஞானமாதலாற் றிருவடியை யிரண்டற்றொளிரு ஞானமென்றார். உடலுமென்ற உம்மையாற் செல்வமு முனிந்தெனக் கொள்க.

இங்ஙனம் ஞானவாலயஞ் செய்யும் விதிகூறிமேற் சிவாச்சிரமஞ்
செய்யும் விதியுமுணர்த்துகின்றார்.

அறைந்தா மமல னருண்மொழியை யறையு முறையு
மதன்விதமுஞ்
சிறந்த வெல்லைச் சிவாச்சிரமஞ் செய்யு முறையுஞ்
செப்பிடுவா
னிறைந்த புகழு நிகரற்ற போக விதமு
நிலவாழ்வை
மறந்து பிறவா வரந்தானுங் கற்பார் தமக்கும்
வாய்ப்பதற்கே.

எ-து. நின்மலனாகிய சிவனருளிச்செய்த சிவாகமத்தை மாணாக்கர்க்கு உபதேசிக்கு மியல்பினையுடைய சிவஞான தானத்தையு மதன் விதத்தையும் அந்தவியலைக் கற்போர்க்கு உலகமெல்லா நிறைந்து நிற்குங் கீர்த்தியும் ஒப்பில்லாத போகபேதங்களும் பூமியில்வாழுஞ்செயலை அவமதித்து

நினையா தொழிதலைப்பெற் றொருஞான்றும் பிறவாத முத்தியும் உண்டாகும் பொருட்டுச் சொன்னேம். மேற்சிறந்த வெல்லையினையுடைய சிவாச்சிரமஞ் செய்யும் விதியையும் உனக்குச் சொல்வோம். என்-று.

இதனுளிரண் டெழுவாயும் இரண்டு பயனிலையுங் கூட்டுக. கற்பார் தமக்கு மென்றவும்மையாற் கேட்பார்க்குமெனக் கொள்ளக் கிடந்தது.

மேலதனை விரித்துணர்த்துகின்றார்.

சிறக்கச் செய்க திருவெல்லை செறியப் புடையே
 திருமதிலும்
புறத்தே யெழிலார் பொழிறனைப் புரிசை யதனைப்
 புடையடைய
நிறைத்த மலர்ப்பூம் பொழிற்புறத்து நிறைநீர்த் தடங்க
 ளதன்புடையே
பிறக்க வினைய கோபுரத்தைப் பிரியாப் புரிசை
 பெறுந்தகவே.

என்-று. அழகிய வெல்லையின்கணடுவே சிவாச்சிரமஞ் செய்தற் கெல்லையை நியமித்ததனைச்சூழ ஐந்துமுழவுயரத்தில் ஒருதிருமதிலும் அதனைச் சூழப் புறத்தெல்லையிலே அழகுநிறைந்த பூந்தோப்பினையு மதன்புறத்திலே நீராணிறைந்த பொய்கைகளையு மதைச்சூழ மலைபோன்ற கோபுரத்தைவிட்டு நீங்காத திருமதிலையுஞ் சிறக்கும்படி செய்க. என்-று. (௬௭)

பிறங்கல் வலித்து நின்றது.

இதுவுமது.

உரைத்த புரிசை யுண்ணுளா மொப்பி லயல
 லுரைத்தவுரை
தரித்தும் விரித்துந் தங்கார்க்குந் தாழா நிலையை
 தலைமையவ
ரிருக்குங் கழக மண்டபமு மியற்றி யிடுக
 வெழிலுறவே
யரிக்கு மரிக்கு மயன்றனக்கு மரியா னடியே
 யுடைவாரே.

என்-று. மாலும் பிறந்திறக்கும் பிரமனும் தேடுதற்கரிய சிவனது சிபாதத்தை அடையக் கருதுவார் முன்னர்க்கூறிய முதலாவரணத்துக்கு நடுவாக நியமித்த வெல்லையிலே திருமடத்தினை மூன்று நிலமாக்வெடுத்ததன்மேலே நிகரில்லாத நின்மலனாகிய சிவனருளிச்செய்த சிவாகமங்களைத் தம்முள்ளத்தின்கட் *டாரணைபண்ணியு மவற்றின் பொருளைத் தக்

* தாரணை - தரித்தல்.

ளார்க்கு விரித்துக்கூறிய மேலாய நிலைமையையுடைய பெரியோர் எழுந்தருளியிருக்குங் கல்வி பயில்கின்ற கழகமண்டபத்தையும் அழகுபெறச் செய்க. எ-று.

கழகமண்டபமு மென்னு மும்மையால், முதனில மிரண்டாநில மூன்றுநிலங்களிலே குகைகள், செபந், தியானஞ்செய்யுந் தலங்களுஞ் செய்கவெனக் கொள்க. (௬அ)

இதுவுமது.

அதற்கு மீதாம் பஞ்சமத்தை யமைக்க வமலற்
 காலயத்தைக்
குதர்க்க பேத மனைத்தினையுங் குறைத்தே குறையா
 மதிகொடுக்கும்
பதத்தைப் பகர்ந்த பரமனுக்குப் பாச வினைக்கும்
 பகைவனுக்கு
நதத்தைக் கடந்த நமபனுக்கு நாடற் கரிய
 நாதனுக்கே.

எ-து. முன்னர்க்கூறிய கல்வி பயில்கின்ற களத்துக்குமேலான ஐந்தாவது நிலத்தினை யான்மாக்கள் பாசவினைக்குப் பகைவனுமாய் நாதசத்துவங்கடந்தவனுமா யாவராலுங் காணொணாத கர்த்தாவுமாய் கல்லாலின்கீழ் எழுந்தருளியிருந்து தேவர் இருடிகளுக் கெல்லாம் குதர்க்க முதலிய குற்றங்களை நீக்கி நிறைந்த ஞானத்தையுதவும் வேதாகமங்களை உபதேசித்த தக்ஷிணாமூர்த்தமாகிய சிவனுக் காலயமாகச் செய்க. எ-று.

பாசவினைக்கு மென்றவும்மையால் ஆணவத்துக்கு மென்பதூஉந் தழீஇன்றது. நாதம் குறுகும்வழி குறுகியது. (௬௯)

இங்ஙனங்கூறிய சிவாச்சிரமத்தைச் சூழ * வபிமுகங்களாப்
பாகசாலை முதலிய வெட்டினையும் † விலோமமாக் கட்டுமுறை
உணர்த்துகின்றார்.

அங்கி முதற்றென் றிசையந்தத் தடுகை மனைசத்
 திரசாலை
பொங்கு தழலைப் புரிசாலை புனும் பணியும்
 பேணுமிடஞ்
கங்கை தணிக்குங் கொட்டாரஞ் சமைக்க குடநீர்
 சுமந்துறையு
லிங்கு வேண்டும் பொருளதித்தி யெவலோரு
 மெய்திடும்ம.

* அபிமுகம்-நேர்முகம்.
† விலோமம்-முறைபிறழ்தல், அஃதாவது, அப்பிரதக்ஷணம்.

எ-து. அக்கினி திசைமுதற் றென்றிசை யீருகக்கொண்டு அக்கினி திசையிலே திருமடைப்பள்ளியுங், கிழக்கே சத்திரசாலையும், ஈசான திசையிலே சிவபூசையு மக்கினி காரியமுஞ் செய்யும் யாகசாலையும், வடக்கே திருவாபரணமுதலியன சேமிக்கும் பொற்பண்டாரமும், வாயு திசையிலே எண்ணைக்கடந்த பெரிய நெற்சேருக்கு மேற்கே திருமஞ்சனம் வைக்கு முறையுளும், நிருதி திசையிலே சமித்துத் தர்ப்பைப்புல்லு விறகு ஆயுதங்கள் வைக்கு முறையுளும், தெற்கில் இம்மடத்துக்கு வேண்டு மாதனங், கட்டில், பாதுகை முதலியவைகளிருத்தற் கிடமும், அதிதிகள், பரிசாரகரிருத்தற்கிடமும், செய்க. எ-று.

உறையுள் என்பதனை, குடநீரொண்பதற்கு மிடமெனக்கூட்டுக. எய்திடமென்பதனை வேண்டும் பொருள்வைத்தற் கிடமுமெனக் கூட்டுக. எய்திடமென்பதனை வேண்டும்பொருள் வைத்தற் கிடமுமெனக் கூட்டுக, உம்மையெண். சமைக்கவென்னும் வியங்கோள் வினைமுற்று, நடுநிலைத் தீபமாயனைத்திற்கும் பயனிலையாயிற்று. (௭௰)

இவ்வண்ண மியற்றிய மடத்தின்கண் தக்ஷிணாமூர்த்தத்தைத் தாபிக்குந் திறமுணர்த்துகின்றார்.

விதிநூன் முறையே யதிவா சவினையு மற்றை
வினையினைத்தும்
பதியாம் பரமன் றனக்கிசையப் பண்ணி யிடுக
பரிவுடனே
நிதியுங் கொடுக்க நிலனுடனே நிகழ வென்று
நிறைபூசை
துதியுஞ் செய்க தோன்றாத துணையைப் பணிக
துகளறவே.

எ-து. தக்ஷிணாமூர்த்தத்தைச் சிலை முதலியவற்றாற் றிருமேனிகொண்டு பதியாகிய வந்தத் தக்ஷிணாமூர்த்தித் தம்பிரானார்க் கேற்கும்படி சிவாகமங்களில் விதித்த வண்ணம் திவாதகன்மமு மற்றுமுள்ள பிரதிட்டா கன்மங்களும் பத்தியினாற் செய்து ஐந்தாநிலத்திற் றாபித்து எந்தக்காலத்திலு மகாபூசை நடக்கும்வண்ணம் விளைநிலங்களும், பொன்முதலிய நிதிகளும் கொடுத்துத் தங்களிடத்துண்டாகிய வாணவமுதலிய குற்றமறும்படி யாவர்க்குந் தோன்றாம லவரவருள்ளத்து னிற்குந் துணைவனைத் தோத்திரமுஞ்செய்து வணங்க. எ-று.

இசையவென்று சிறப்பித்ததனாற் சிலாபேத மல்லாதவைகளுக்குக் கண்ணாடியி லதிவாதனஞ் செய்கவென்றுணர்க. (௭௧)

அந்த வாசிரியர்க்கும் மற்றுமுள்ளார்க்கு முபகரிக்குந் திறம் உணர்த்துகின்றார்.

குரவன் றனக்கு நிதிமுதலுங் கொடுத்துக் குன்றக்
குணமொழுக்கம்

விரத முடைய வேதியர்க்கும் விழைவாற் பதமு
மிசைவிக்க
பரம னடியா ரவர்தமக்கும் பங்கு காலர்
பாலருடல்
விரவு நோயர் விழியிழந்தார் விருத்தர் தமக்கும்
விருப்புறவே.

எ-து. பிரதிட்டை செய்தபலந் தனக்கெய்தும்வண்ண மவ்வாசிரியர்க்குந் தனம், துகில்முதலியவை கொடுத்து ஒருகாலுங் குறைவுபடாத குண மொழுக்கம் விரத மிவைகளை யுடைய பிராமணர்க்குஞ் சிவனடியாரான மாகேசுரர்க்கும், முடவர், சிறுபிள்ளைகள், சரீரத்திலே நோயையுடையவர்கள், குருடர், விருத்தத்தன்மையோர் இவர்க்குமன்னம் விரும்பும்படி யாதரவினாலே புசிப்பிக்க. எ-று. (எ௨)

சிவபுரஞ்செய்தார் பெறும்பய னுணர்த்துகின்றார்.

செய்தார் சிறக்கச் சிவபுரத்தைச் சிற்ப வுரையிற
றிகழ்விதியா
லெய்தார் பிறப்பிற் சிவலோக மெய்திப் போக
மினிதருந்தி
வெய்தாம் வினையு மாணவமும் வியா மாயை
யொடும்விடவே
மெய்யாம் பரம வித்தையுற விமலன் கமலம்
விரவுவரே.

எ-து. பூமியின்கண் விளங்கும் சிற்ப சாத்திரத்தின் விதியினாற் சிவபுரத்தைச் சிறக்கும் வண்ணஞ் செய்தார் மீண்டும் பூமியின்கண் பிறவாமற் சிவலோகத்தை யடைந்தினிதாய போகங்களை யருந்திப் பின் கெடாத மாயையோடு கொடிதாயகன்மமு மாணவமும்விட்டு நீங்க மேலாகிய சத்தியஞானமுண்டாக நின்மலனாகிய சிவனது சீபாத தாமரையை யடைவர். எ-று.

இச்செய்யுளிற் சிவாச்சிரமத்தைச் சிவபுரமெனக்கூறிய தென்னெனிற், சிவாச்சிரமமுஞ், சிவதலமு, மடமுந், திருக்கோயிலு மொக்குமென்பதனாலெனக் கொள்க. ஆகலின் மேல்வருஞ் சிவனற்புரி யென்னுஞ் செய்யுண் முதலிய செய்யுளெல்லாஞ் சிவாச்சிரமத்தோடு சிவத்தலங்களையுந் தழுவக் கூறுகின்றா ரவற்றினையு மாண்டாண்டு பிரித்துப்பயன் கொள்க. (எ௩)

சிவபுரஞ் செய்த தச்சன் முதலாயினாராகிய வுயர் திணையு மதற்குபகரணமாகிய வஃறிணையு மடையும் பலமுணர்த்துகின்றார்.

சிவனற் புரியைச் சென்றடைவர் சிந்தை மகிழச்
சிவபுரிசெய்

நவதி முதலோர் தருமுதலுஞ் சாரும் பூணி
யொடுமற்றும்
புவலோக கத்தின் மிசைப்புகுவர் பொருள்கொண் டேவல்
புரிந்தாருங்
கவரா வொருமைக் கருத்துறினே கணிகை யவருங்
களிப்புறவே.

எ-து. கண்டோருள்ள மகிழும் வண்ணஞ் சிவபுரியைச் செய்த சிற்பிமுதலானோருஞ், சிவபுரிசெய்தற்குபகரணமான மரஞ் சிறுசெடி முதலியனவுஞ் செங்கல், கல், முதலியன பூட்டிவருதற்கமைந்த எருதுகடாவினுடன் மற்றுமுபயோகமானவைகளு நல்ல சிவபுரத்தைச் சென்று பொருந்துவர். மனம்வேறுபடா தேவற்றொழில் செய்யவுஞ் செய்விக்கவும் பெற்றோமென்னு மொருமைப்பாடுள்ள கருத்துண்டாமேயாயிற் கூலிவாங்கி யேவல் செய்தவர்களு முருத்திரகணிகைமார்களு மகிழ்ச்சி யமையப் பூலோகத்துக்கு மேலாகிய புவலோகத்திற் சென்று போகம் புசித்திருப்பர். எ-று.

தவதிமுதலோரென்பதனால், எற்று நூல் பிடிப்பார் முதலானோருமமைக. தருமுதலுமென்பதனாற் சிலையுமெனக் கொள்ளக்கிடந்தது. பூணியொடு மற்றுமென்பதனால். ஒட்டகமுதலியவுங் கொள்க. கணிகையருமென்றவும்மையாற் றேவதாதிகளு மென்பதமைக. உருத்திரகணிகை முதல் குறைந்து நின்றது. (எச)

அச்சிவபுரத்துட் சனனமுதலிய வடைந்தோர்
பெறும்பய னுணர்த்துகின்றார்.

சிறந்து செறிவர் சிவபுரத்தைத் தெரிதற் கரிய
சிவனகருட்
பிறந்தார் பிறழா நிலைமையினைப் பிரியா தொருமைப்
பெருமையுட
னுறைந்தா ருறையு மவர்க்கனமு முதவு வார்க
ளுறையுள்ளு
மிறந்தா ரிறக்க வேண்ணுநர்க ளென்னு மிவர்க
ளெல்லோரும்.

எ-து. அளவைகளா னளவிடற்கரிய சிவனகருட் பிறந்தவரு நின்ற நிலைதவறாத வொருமைப்பாட்டின் பெருமையுட னுறைந்தாரு மச்சிவபுரத்தி லிருப்போர்க் கன்னமு மில்லமுங் கொடுத்தாரு மத்தலத்தின் மரித்தாரு மத்தலத்திலுடல்விட வேண்டுமென்று கருதினாருமாகக் கூறிய விவரெல்லாரும் யாவருக்கு மேலோராந் தலைமையெய்திச் சிவலோகத்தை யடைவர். எ-று. (எரு)

மேலதனைப் பணியுமவர் முதலியோர் பெரும்பயன்
உணர்த்துகின்றார்.

பணிவார் பரவிப் பரமேசன் பதிக டம்மைப்
பணிதற்கே
துணிவார் வழியிற் றுணைச்செல்வார் தொடர்ந்து கூடித்
தொழுவாரென்
றெணியா ரிவர்க ளெல்லோரு மிறைதன் புரத்தி
லிருப்பதற்கே
யணியா ரவல வினையனைத்து மறுப்பார் சமனைக்
கறுப்பாரே.

எ-து. யார்க்கு மேலாய சிவனெழுந்தருளி யிருக்குந் திருப்பதிக ளைத் துதித்து வணங்குபவர், வணங்குதற்கு நியமித்தவர், வணங்கச்செல் வோர்க்கு வழியின்கட் டுணையாகச் செல்லுபவர், உடன் சென்றவருடன் கூடிப் பணியுமவரென் றெண்ணப்பட்டா ரிவரெல்லாரும் சிவலோகத்திலே யிருந்து வாழ்வதற்குரியார். அவர்களே தீவினை முழுதும் போக்குவர். அவ ர்களே தங்கள் பால்வருமியமனைக் கோபிப்பவர். எ-று. (எசு)

அச்சிவத்தலங்களிற் சென்று சிவபூசை முதலாயின செய்தார்
பெறும்பயனு மதிலிருக்குந் தபோதனர்கள் சரீரத்திற்
பிணிகளை மருந்து முதலியவற்று லொழிக்குமவர்
பெறும்பயனு முணர்த்துகின்றார்.

சிவனைப் பூசை செய்விப்பார் சிவனற் புரியைச்
சென்றடைவ
ர[illegible]வத் தறிவிக்கு மாசா ரியனை
[illegible]
தவ்வாத் [illegible] [illegible]நனையுந் தணிப்பார் தாமுந்
தனித்[illegible]
யெவரிப் பிணி[illegible] [illegible]ளைப்பா ரிளைப்புக்
கிளைப்பாரும்[illegible]

எ-து. சிவனையு மவரவ[illegible] [illegible]ட்டா யந்தச் சிவனை யறிவி க்கு மாசிரியனையுஞ் சாதகர் முதலிய வ[illegible]ரையும் பூசை செய்விப்பாருந் தபோதனரை வருத்தும் பிணிகளை மருந்து [illegible]தலியவற்[illegible]ணீக்குபவருஞ், சிவத்தலங்களை வணங்கு நிமித்தமா யவ்விடத்தில் [illegible]யாய்த் தனித்து விட்டோமே யிதனை யெவரழிப்பரென்று வருந்து[illegible]ராயுள்ளார் வரு த்தத்தைக் கண்டு துக்கிப்பவருஞ், சிவலோகத்தைச் [illegible]ன்று பொருந்து வர். எ-று.

பிணிதனையு மென்ற வும்மையாற் பசிகுளிர்தணிப்பாரு மென்ப தூஉங் கொள்க. (எஎ)

மேற்சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

ஆக்கை யாலோ தனத்தா லு மருமோ யதனை
யருந் தவர்க்குப்
போக்கு விப்பா ரவர் தாமும் பொருந்திப் போகஞ்
சிவபுரிய
ணிக்கிப் பிறந்து நிலமிசையே நில்லா துடல
மெனநினைந்து
நோக்கற் கரிய பரமசிவ னென்று ளடைவர்
நோயறவே.

எ-து. அரிய தபோதனர்க்கு எய்திய நீங்குதற்கரிய நோயைத் தம் காயத்தொழில்களினாலு மன்னத்தினாலுந் தாமேனு மொருவனைக் கொண்டேனும் போக்குவிப்பாருஞ், சிவலோகத்திற் சென்றிருந்து போகங்களைத்துய்த்து அது தொலைந்தவாறே பூமியின்கண் வந்து பிறந்து யாக்கை நிலையுதலின்மை யென்றுணர்ந்து தம்மை யநாதியே தொடர்ந்துவரு மாணவமுதலிய பிணிகணீங்கும்வண்ணம் பாவரானு நாடுதற்கரிய பரமசிவனது வலியினையுடைய சிபாதங்களை யடைவர். எ-று.

ஓதனத்தினாலுமென்ற வும்மையால், அவடதத்தினாலு மென்பதூஉமமைக. (௭௮)

கலிவிருத்தம்.

என்றுசிவ ஞானவித் தானமுமி சைத்தால்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நீர்க்குணை னினைந்தே.

எ-து. வெளி. (௭௯)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆருயிர் வேமொன் வாயவனே யாரண மோதிய
வாயவனே
சாரணர் நாடிய சற்பொருளே தன்மொழிந் தின்மைய
சற்பொருளே
பூரண னாகிப் பொருவிலியே புரமவை மாளப்
பொருவிலியே
யாரு மெனு ந விடத்தினனே யருந்திய வால
விடத்தினனே.

எ-து. எவ்வுயிர்க்கு மூலமாயிருந்தவனே ஈசானமொழிந்த தற்புருட முதலிய நான்கு திருமுகத்தானு நான்குவேதங்களைய மோதினவனே, திக

பர் தியானஞ்செய்யப்படும் கல்ல மூர்த்தியே, தானேயன்றி வேறின்றி விள ங்கு முண்மைப் பொருளே, எல்லா வான்மாக்களிடத்தும் பரிபூரணமா யொப்பில்லா திருப்பவனே, தாருகன், தாருகாக்ஷன், வித்தியுன்மாலி யென்னு மூவர் புரங்களையும் பொருதழித்த வில்லையுடையவனே, யாவராலு மெண்ணுதற்கரிய நாதத்துவங்கடந்தவனே, ஆலகாலவிடத்தை யமுதாக வருந்தினவனே. எ-று. (௮௰)

கட்டளைக்கலிப்பா.

கங்கை தன்னைச் சடையிற் கரந்தனே கரிசு போக்கிடு
மஞ்சக்கரத்தனே
மங்க முப்புரஞ் செய்தவை வாளியே மதித்த மூவரை
யங்குறவாளியே
சிங்கந் தன்னை யுரித்திடுந் தீரனே செனன சாகரத்
தேற்றிடுந் தீரனே
யங்கந் தன்னினு மாசை யறுக்கவே யம்ம வாணவ
மாசை யறுக்கவே.

எ-து. கங்கையை யுலகமழியாவண்ணஞ் சடையின்க ணொளித்தவனே, ஆன்மாக்கள் செய்த பாவத்தைப் போக்குஞ் சாமர்த்தியத்தையுடைய பஞ்சாக்கரத்தை யுடையவனே, முப்புரங்களும் பொடியாய்ப் போகக்கூரிய வம்பினாலே யெய்தவனே, தன்னையே யுண்டென்றிருந்த நந்தி மாகாளர் வாணாசுரனாகிய மூவரையு மவ்விடத்துறவாகக் கொண்டவனே, இருடிகளாபிசாரத்திற் றோன்றிய சிங்கத்தைக்கொன் றதன்றோலையுரித்தணியுந் தீரனே, செனன மரணமாகிய கடலிலே கிடந்தழுந்து மென்னையேற்றுதற்குக் கரையாயிருந்தவனே, சரீரத்திலுண்டாகிய விருப்பத்தைப் போக்கவே யாணவமல பாசமாகிய குற்றத்தைச் சோதித் தான்மாக்களை முத்தியடைவிப்பாயாக. எ-று.—அம்ம-எ-து-உரையசை. (௮௧)

கலிநிலைத்துறை.

காலனை யுருளக் கால்கொடு கடுகிக் கழல்பேணும்
பாலனை யருளிப் பாசம தகலப் பரிவோடு
மாலத னிழலுற் றாசனை முனிவர்க் கருள்வாய்மைச்
சீலனை துணையைத் தோறு முகனைச் செறிவாமே.

எ-து. எமனை யுருளும்படி கால்கொண்டுதைத்து அத்திருவடிகளை விரும்பி அருச்சனைசெய்யு மார்க்கண்டருக்கருள்புரிந் தான்மாக்கட்குப் பாசங்கணீங்கும்வண்ணங் கல்லாலநிழலின்கணன்பினோடெழுந்தருளி யிருந்து சனகர் முதலிய நால்வர்க் குண்மையான நான்கு வேதங்களையு மருளிச்செய்த சீலமமைந்த சிவனது வாக்கியங்களை யாராய்ந்த வாறுமுகத்தினையுடைய பிள்ளையாரை யுறவுகொள்வோம். எ-று. (௮௨)

அரியய னறிதற் கரியனை யமரர்க் கமிர்தீயக்
கருகிய கடுமுற் பருகிய கருணைக் கடலானைப்
பரமனை யரவக் கரையனை விரவப் பரிவானைப்
பொருகழல் புணரப் பொதிமலை முனிசொற் புகல்வாமே.

எ-து. திருமாலு நான்முகனு மறியவொண்ணாதவனும், தேவர்கட் கமிர்தங் கொடுக்கும் பொருட்டுக் கருநிறங்கொண்ட விடத்தை முன் னுண்ட வருட்கடல்போல்பவனும் யாவர்க்கு மேலாயவனும் பாம்பினை யுஞ் சங்குமணிவடத்தையுந் திருவரையி லணிபவனும் யாவரேனுந் தன் னையடைந்த போதவர்க்கன்பு செய்பவனுமான சிவனது ஒசையுள்ள வீரக் கழலினை யணிந்த சிபாதங்களை யடைதற்குப் பொதியமலையின் கண்வா ழு மகத்தியமுனிவன் விளக்கிய தமிழ்மொழியை யாம் துதிப்பாம். எ-று.

இரண்டாவது

சிவஞானதானவியல் முற்றிற்று.

மூன்றாவது

## ஐவகையாகவியல்.

இவ்வோத்தென்னுதலிற் றோவெனின் ஐவகை யாகத்தின் பகுதியையுணர்த் துதனுதலிற்று. இங்ஙனஞ் சிவஞானதான வியலைக் கூறியதன் பின்னர் இவ்வியலைக் கூறியதெற்றுக்கெனின் கரும யாக முதலிய ஐவகையினும் ஞானயாகமே சிறப்புடைத்தென்று உணர்த்தமையா லதன்பின்னர் வைக்கப் பட்டதென்க.

இத்தலைச் செய்யுளென்னுதலிற்றோ வெனின் ஐவகையாகத்தைத் தொகுத்து உணர்த்துதனுதலிற்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கரும மென்று தவமென்று கற்பாற் பயின்மந் திரமென்று
பரிவால் வருபா வனையென்று பரம ஞான மகமென்று
தெரியு மகமோ ரைந்தினையுஞ் சிறந்த விவற்றின் பலத்தினையும்
பரம யோகர் நிலையுடனே பரிவான் முனிவ பகர்வாமே.

எ-து. முனிவரனே கன்மயாகமென்றுந் தபோயாகமென்று மூப தேசிக்கிற மந்திரத்தினாற் பயில்கின்ற செபயாகமென்று மாதாவினால

ருந் தியானயாகமென்று மேலான ஞானயாகமென்று மிப்படியாராயுமை வகையாகத் தினையுமிவற்றின் சிறப்புடைய பலத்தினையு மேலான சிவயோகிகள் நிலையோடு நின்மேல் வைத்தவன்பினால் யாம் சொல்கின்றே மதனைக் கேட்பாயாக எ-று. (௧)

மேற்கூறுகுத்த ஐவகையாகத்தினுட் கருமயாக முதலிய
மூன்றனையும் விரித்துணர்த்துகின்றார்.

செய்து சிறக்கச் சிவபூசை செந்தீ வளர்க்கை முதல்கரும
மெய்ய வுடலம் விரதத்தை நவிற்ற லாதி தவஞ்செபமும்
மையப் பயிற்றல் பிறர்செவியிற் படாது பயிற்றன் மந்திரத்தை
மைய லகல மனத்தாலும் வகுக்கை யெனமூ வகைத்தாமே.

எ-து. கன்மயாகமாவது நூல்விதியாற் பூசாங்கமாகப் புனன்மூழ்கிச் சிறப்புடன் சிவார்ச்சனைபண்ணி யக்கினிகாரிய முதலியன செய்தல், தவயாகமாவது உடல் வாடச்சாந்திராயண முதலிய விரதங்களை யனுட்டித்தல், செபயாகமாவது மந்திரங்களைப் பிறர்செவிக்குக் கேட்கவுச்சரித்தலும் பிறர்செவிக்குக் கேளாமல் மெள்ள வுச்சரித்தலு மயக்கமொழியும்படி மானதமாக வுச்சரித்தலுமென மூவகையினையுடைத்தாம். எ-று.

மந்திரயாகமெனினுஞ், செபயாகமெனினு மிழுக்கா. (௨)

இங்ஙனங் கூறிய செபயாகஞ் செய்யு முறையு மவற்றின் பலன்
மிகுதியுங்குறைவு மூன்று செய்யுளா னுணர்த்துகின்றார்.

செறித்து வடந்தர்ச் சனிமீதே செபிக்க வொலியைச்
சேட்டையினற
செறித்து வடமத் திமைதன்னிற் செபிக்க மந்தஞ்
சேட்டையினற
செறித்து வடத்தை யநாமிகையிற் செபிக்க மனத்தைச்
சேட்டையினற்
குறிப்பிற் குறைந்த பலமந்த மதனி லொலியுங்
குறைந்தபலம்.

எ-து. பிறர்க்குக் கேட்க வுச்சரிக்கு மந்திரத்தை யொலியாகச் செபிக்குங்காற் செபவடத்தைத் தர்ச்சனிமீதேவைத்துப் பெருவிரலாற்றள்ளிச் செபஞ்செய்க. பிறர்க்குக் கேளாமற் றனக்குக் கேட்க வுச்சரிக்கு மந்திரத்தை மந்தவொலியாகச் செபிக்குங்காற் செபவடத்தை மத்திமை விரலின்கட் சேர்த்துப் பெருவிரலாற் றள்ளிச் செபஞ்செய்க. செவிப்புலனாகாதுச்சரிக்கு மந்திரத்தை மானதமாகச் செபிக்குங்காற் செபவடத்தை யநாமிகையின்கட் சேர்த்துப் பெருவிரலாற்றள்ளிச் செபஞ்செய்க. ஆராயுங்கான்மானதமாகவுச்சரிப்பதைப் பற்ற மந்தமாகவுச்சரிப்பது தாழ்ந்த பலமதனைப்பற்ற வொலியாகவுச்சரிப்பது குறைந்தபலம். எ-று. (௩)

கண்டி விசிட்டங் குசைக்கிரந்தி கனிட்டங் கமல மதிற்கனிட்டம்
புண்ட ரீக மணியதனிற் படிக மணிபுத் திரதீபி
யுண்டைச் சங்க மிறைவிர லு முணரி லொன் றுக் கொன் றானம்
விண்டார் போக விருப்பங்கை மேலே மறிக்க மாலையெல்லாம்.

எ-து. செபமாலை யைவற்றினு முருத்திராக்கமே சிறப்புடைத்து. அதற்குத் தர்ப்பையைப் பவித்திரமுடிச்சாக முடிந்தமாலை கீழாம். அதற்குத் தாமரை மணிவடந் தாழ்ந்த பலம். அதற்குப் படிகக் கல்லினுற் கடைந்த மணி தாழ்ந்த பலம். புத்திரதீபிவடமுங் கடைந்துருட்டிய சங்குமணிவடமுமிறையும் விரலுமாராயி னொன் றுக்கொன்று பலங்குறையும். போகத்தின் கண் விருப்பு நீங்கிய துறவிகள் கண்டிமாலைமுதன்மாலையெல்லாங் கையினுன் மேனோக்கித் தள்ளிச் செபிக்க. எ-று. (௪)

இயங்கிற் பிராண னிடைநாடி யிருமூன் றெழுத்து மியம்பிடுக
நயந்தார் போக மதுகயந்தார் வலது நாடி தனினவில்க
வியங்கிற் பிராணன் சுழுனைவழி யிரண்டு மடைவா ரியம்பிடுக
முயங்க விளையார் மூலையினையை வலது நாடி மூளத்தெனினே.

எ-து. போகத்தை யடைய விரும்பினோர் பிராணவாயுவான திடையென்னு நாடியிலே நடக்கிற் பிரணவத்தோடு கூடிய மூலமந்திரமான ஆறெழுத்தையு முச்சரிக்கக் கடவர். அதனை வெறுத்தார் பிங்கலை நாடியின்கட் பிராணவாயுவியங்கி லாறெழுத்தையு முச்சரிக்கக்கடவர். புத்தி முத்தி யிரண்டினையும் விரும்பினோர் சுழுமுனை நாடியில் பிராணவாயுவான தியங்கிலந்த வாறெழுத்து முச்சரிக்கக்கடவர். பிராணவாயு பிங்கலையில் தோன்றியியங்குகிற காலத்தி விளையாராகிய மடவாரது மூலைத்துணையினையும் புணரக்கடவர். எ - று. சுழுனை யென்பது வடசொற் சிதைவு.

மாதரைக்கூடும் விதி யீண்டுக் கூறியது மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாமோவெனின் அப்பின் முடித்தலென்னுந் தந்திரவத்தியாற் கூறுவதனாற் குற்றமின்மை தெளிக. (௫)

பற்றிப் பரமன் றிருவுருவைப் பரிவா லொருமைப் படவுள்ள
மற்றோர் பொருளின் மனம்பற்று வண்ணந் திண்ண முறமயக்
மற்றே தொடர்ந்த விச்சின்ன மடையா வற்வு பாவனைநீ
யொற்றே யொழுகு மிறைவன்பா லற்றே யஃதென் றெண்ணுகவே.

மேனிறுத்த முறையானே தியானயாகஞ் செய்யுமுறை
யுணர்த்துகின்றார்.

எ-து. தியானயாகம் மனம் வேறொரு விடயங்களினும் பொருந்தாவண்ணந் தாரணையினிறுத்தியஞ் ஞானவிகற்பமற்று உள்ளம் சதாசிவமுதலிய விக்கிரகங்களிலொன்றை யன்பினுல் நினைந்து அத்தியானத்தி லிடை

விடாது கலந்து நிற்றல். அஃதெத்தன்மைத் தெனின் ஆற்றுநீ ரிடையறா தொழுகு மத்தன்மைத்தென் றுணர்க. எ-று. (௪)

மேனிறுத்த முறையானே ஞானயாகத்தின் சிறப் புணர்த்துகின்றார்.

ஒப்பி லமலன் றனையுணர்த்து முறைமை யோத லோதுவித்தல்
செப்பும் பொருளைத் திரிவறத் தெளிதல் பிறரைத் தெளிவிக்கை
தப்பா ததனை மனத்தகத்தே தரிக்கை யெனவுங் காணாநாம்
வைப்பா யருந்தா மருந்தாகிச் சிறந்த ஞான மகவினையே.

எ-து. இணையில்லாத நின்மலனான சிவனை யறிவிக்குஞ் சிவாகமங்களைத் தானோதுதலும் பிறரை யோதுவித்தலு மவற்றிற் சொல்லும் பொருளையந் திரிபறத்தான் றெளிதலும் பிறரைத்தெளிவித்தலும். அந்தப்பொருளை நாடோறு மறவாது மனத்தின்கட்டரிக்கையுமென வைந்துவிதமாம். இதுவே பக்குவான்மாக்களுக்கு வைப்புமாய், அபக்குவரா லருந்தவொண்ணாத மருந்துமாய் நின்றதலைமைபெற்ற ஞானயாகத் தொழிலாவது எ-று.

தேவாரம்.

'கற்றல்கேட்டலுடையார் பெரியார் கழலையாற் றொழுதேத்த' எனவும், 'கல்லாதார்காண்டற்கரியானை' எனவும், 'கல்லாநெஞ்சி னில்லானீசன் சொல்லாதாரோ டல்லோமே' எனவும், கூறியருளிய திருக்கடைப்பானு முணர்க. ஆகலினிதனையே சிறப்பாகக் கூறவேண்டிற்று.

ஐவகையாகங்க ளொன்றுக்கொன்று சிறப்புடைத்தென்பதூஉ மடையும்பல மின்னதகைத்தென்பதூஉ முணர்த்துகின்றார்.

அறைந்த கரும யாகமுத லைந்து மொன்றுக் கொன்றதிகஞ்
சிறந்த பலமும் போகவிதஞ் சிந்தை செய்த பயனெல்லா
மறைந்து தீய வினைமாய்கை வாத னுருவ மெனவடிவ
மிறந்தும் பிறந்து மிளையாதே யிருக்கை யென்னு மிவையைந்தாம்.

எ-து. முற்கூறிய கன்மயாகமுதலிய ஐவகையாகமு மொன்றுக்கொன்று பலன்களதிகமாயிருக்கும். அஃதெவ்வாறெனின், கன்மயாகத்துக்குப் போகவிதமுந் தபோயாகத்துக்குச் சிந்திதமனோரத சித்திகளு மந்திரயாகத்துக்குக் கொடியகன்மங்களாற்பவியாது கெடுதலுந் தியானயாகத்துக்குச் சிவனது திருவடிவேபோல வடிவமுண்டாதலும் ஞானயாகத்துக்குச் சனனமரணங்களெய்தி யிளையாமற் சாயுச்சியம் பெற்றிருக்கையுமெனக் கூறிய விவ்வைந்து மொன்றுக்கொன்றதிக பலன்களாம். எ-று.

அஃதெங்ஙன மெனிற் கன்மயாகத்தைப் பற்றத் தபோயாகம் பதின்மடங்கதிகம். அதனைப்பற்ற மந்திரயாகம் பதின்மடங்கதிகம். அதனைப்பற்றத் தியானயாக நூறுமடங்கதிகம். அதனைப்பற்ற ஞானயாகமளவில்லாத பலத்தைக்கொடுக்குமாதலால், ஞானயாகமே சிறந்ததென்றறிக. (௮)

மேனிறத்திமுறையானே பரமயோகர் நிலை
யுணர்த்துகின்றார்.

அஞ்சி யாசை முதலாய பல பேத
மனைத்தினையுந்
அஞ்சிப் பிறக்குந் தொழிற்கிளைத்துத் தோன்றாத் துணைவ
னடித்தூங்கும
விஞ்சைக் குகையுள் வீற்றிருப்பர் பரம யோக
விரதியர்மெய்ந்
நெஞ்சத் திவரை நினைப்பாரை நிரந்த வினையு
நீங்கிடுமே.

எ-து. காமக்குரோத முதலிய அக்கபேதங்களனைத்தினுக்கு நடுங்கி யிறந்து பிறக்குந் தொழிலுக்கு வருந்தியவை நீங்கும் வண்ணம், அபக்குவர்க்குத் தோன்றாத் துணைவனான சிவனது திருவடியிலே நிலைபெறுதற்குக் காரணமான ஞானமாகிய குகையில் வீற்றிருப்பர், மேலாய யோகநிலைபெற்ற தபோதனர். இவர் திருமேனியை யுள்ளத்தின்க ணினைப்பவரைத்தொடர்ந்த கன்மங்களும் விட்டு நீங்கும். எ-று.

வினையுமென்ற வும்மையானே மாயை முதலாயினவுங் கொள்க, இதனைச் 'செடிகொ ணோயினடையார் திறம்பார் வருதீமையும் திருவாஞ்சியத்தடிகள் பாதமடைந்தா ரடைந்தா ரடியார்களே,' என்னுந் தேவாரத்தானு முணர்க.

மேலவரை வழிபாடு செய்யின் வரும் பல
னுணர்த்துகின்றார்.

புரிந்தார் பரம ஞானி களைப் பூசை நசையாற் புகழுறவே
பிரிந்தா ருடலைப் பிரியாதே பெருமா னுலகம் பெற்றிருப்பர்
நிரந்த கற்ப சதகியுத நிகழ வதன்பி னெடுமால்வாழ்
பரந்த வுலக மதுபற்றி யிருப்பர் விருப்பாற் பாங்குறவே.

எ-து. அன்பினால் மேலான ஞானிகளை யருச்சனை செய்தார் பூமியின்கட் டமக்குக் கீர்த்தி நிலைபெறவுளதாற்றன்னிய வடம்பினை நீங்கிச் சிவலோகத்தினையடைந்ததனை விட்டு நீங்காமற் கோடி கற்பஞ் செல்லுமளவு முறைகுவர், ஆண்டுப் போகம் துய்த்துத் தொலைந்த வாறே நாரணன் வாழும் விரிந்தவுலகின்கணடைந்தன்பினாலே யக்கடவுள் சமீபமாக வாழ்வர். எ-று. (௯)

இதுவுமது.

உறைந்தே யொழிந்த வுலகத்து மோங்கும் போக விதமுண்டு
பிறந்தே புவியிற் பிறழாதே பெரியோ னடியைப் பேணுதலுஞ்

சிறந்தே யவனுஞ் சிவஞான யோகந் தெருட்டத் தெருண்டடனு
பிறந்தே யினையி லிறைவனுட னிரண்டறத் திருப்ப ரின்புறவே.

எ-து. அங்ஙனம், நாரணனுலகத்திற் போகம்துய்த்துத் தொலைந்த வாறே யதனையல்லாத பிரமலோக மிந்திரலோகங் கந்தருவலோக மியக்க லோக மிவற்றினு மடைவே யதிற் றிருந்து ஆண்டாண்டுள்ள போகபோதங்க ளைத் துய்த்துத் தொலைந்தவாறே பூமியின்க ணுத்தமசாதியிற் றோன்றி முன்விட்ட குறையினாலே யுள்ளம் வேறுபடாமற் பெரிய ஞானாசிரியன் திருவடியை யடைந்து வழிபாடுசெய்துள்ளவா றந்த வாசிரியனுந் தன் னுள்ளமகிழ்ந்து சிவஞானயோகத்தை யறிவிக்கத் தாமறிந்து ஞானநிட்டை யை யடைந்து பின்பத் தேகத்தைவிட்டு நீங்கினவாறே தனக்கு நிகரில் லாத சிவனுடன் வேறறக்கலந்து சிவானந்தானுபவ மனுபவித்திருப்பர். எ-று

ஞானநிட்டையை யுடையார்கள் விடயங்களி லொழுகினு
மவற்றி னழுந்தாரென் றன்றோ
சிறப்புணர்த்துகின்றார்.

அமல னுருவ மறிந்தார்கள் விடய பேதத் தடைந்தாலுங்
கமலத் தமரு நீர்போலக் கலப்ப தில்லைக் கருதுங்காற்
றமலத் தினையுந் தடுப்பார்கள் சமைக்க பூசை யவர்தமக்கே
விமல னவரை விடலின்றிச் செய்நார் சிறப்பை விரும்புவனே.

எ-து. நின்மலனான சிவனது சுபாவ சொரூபத்தை யுணர்ந்த ஞா தாக்கள் விடயவிதங்களைப் பொருந்தினாலு மதனை யாராயு மிடத்த வர்கள் தாமரையிலையிற் றங்கிய நீரதிற் றோய்வின்றி நின்றாற்போல, அந்த விடயங்களி லழுந்தார்கள், தமது ஆணவமல முதலியவற்றை யும் போக்குவர். ஆதலா லந்தஞானிகளுக்கே பூசைசெய்யக்கடவர். அஃதெக்கா ரணத்தாலெனின், மலரகிதனான சிவனுந்தச் சிவஞானிகளைவிட்டு நீங்கா தவர்களிடமாக நின்று செய்தார் செய்த பூசைகளைத் தானே விரும்பி யேற் றுக்கொள்ளுதலால். எ-று.

அடைந்தானு மென்னு மும்மையடையாமையை விளக்கின்ற
தாகலின்-எ திர்மறை. (௯௨)

பணியறநிற்றலாற் சிவஞானிகளிடத்து வினையேறாமைக்குத்
திட்டாந்தமு மவரைப் புகழ்த லிகழ்தல் செய்தா
ரடையும் பலனு முணர்த்துகின்றார்.

மருந்தைச் சிறந்த மந்திரத்தை வல்லார் விடத்தை மாந்திடினும்
வருந்தார் தமது செயன்மாள வாதன் பொருவில் வலியுணர்ந்தார்
பொருந்தார் பாவ புண்ணியங்கள் புரிந்தே யிவரைப் புகழ்ந்தாரும்
பிரிந்தே யிகழ்ந்து பேசுநரு மிவர்தம் வினையைப் பெறுவாரே.

எ-து. அவுடதத்தையு மேலான மந்திரத்தையும் வல்லவர், நஞ்சினைப்புசித்தாரேனு மதனால் வருந்துதலுறார், அதுபோல வொப்பில்லாத சிவனுடைய ஞானத்தையுணர்ந்த சிவஞானிகளும், எல்லாம் சிவன்செயலென்றும் தம்செயன்மாண் டிருக்கையானே யவர்கள் புண்ணியபாவங்களைச் செய்து மதனால்வருஞ் சுகதுக்கத்தை யடைத்திலர். அச்சிவஞானிகளைப் புகழ்ந்தாரும் வேறுபட் டிகழ்ந்தாருமாகிய விவர்கள் தமக்குரிய வினைப்பயன்களையும் துய்ப்பர். எ-று. (௰௫)

ஒத்துப்புறனடை முதலிய வைந்தனுண் முற்கூறிய செய்யுளைக்
குறித்துச் சூத்திரப்புறனடை யுணர்த்துகின்றார்.

பண்ணுனன் பாம சிவஞானி பாவ விதமும் பயிற்றிடினு
முண்ணுன் பலமு மெனப்பனுவ லுரைக்கு மதனு லொருதலையே
நண்ணேந் துயர மெனப்பெரியோர் நவையு மியற்றி னசையாலே
மண்ணே ரவல மாசுரையை மாற்றி யிடவே வல்லாரார்.

எ-து. மேலான சிவஞானி பாவபேதங்களைச் செய்யான். அங்ஙனம் செய்யினு மந்தத் தீவினைப் பயன்களை யனுபவியானென்று சிவாகமங்கள் சொல்லும் ஆகையினால் சிவஞானி பாவவிதஞ் செய்யாமையுஞ்செய்யி னஃதுண்ணுமையு நிச்சயமேயாம். அச் சிவஞானிகளாவார் நாம் துயரத்தைப் பொருந்துவதில்லையே யெனக்கருதித் தம் மனவிருப்பினாற் காம முதலிய குற்றங்களைச் செய்யினவற்று லவர்க்குத் தீவினை யெய்தாதேனும் பூமியின் கண்மிகப் பொல்லாத வசைதோன்று மதனைப் புறங்கூறுது மாற்றுதற்கு வல்லவர் யாவர். எ-று. ஏகாரம் தேற்றம்.

இயற்றினவெனவே யியற்றாமையும் விளக்கி நின்றது. (௰௬)

ஞானநிட்டையை யுடையா ரதனைவிட்டுக் கிரியைகளை யனுட்டிக்கி
னவர் பரதத்துவத்தை யறிந்தவரல்லரென் றுணர்த்துகின்றார்.

எய்தற் கரிய பரம்பரனை யிசைந்தார் கருமத் திசையார்கள்
செய்யிற் கருமஞ் சிறந்தபொருள் செறிந்தா ரல்லர் செழுங்கனிதங்
கையிற் புகலுங் களைந்தவலக் காயைக் கவரக் கருதினரார்
வையத் தொளிகொண் மணியகற்றி வழுவாஞ் சிலையார் மகிழ்வாரே

எ-து. யாவரானும் பொருந்துதற் கரிய சிவனைக்கூடி ஞேயத்தழுந்துவார் கிரியையினைச் செய்தற்கிசையார். அதனை யனுட்டித்தாரேனு மேலானபொருளாகிய சிவத்துடன்கூடி நிட்டையை யடைந்தவராகார். ஞானயோகிகள் ஞேயத்தழுந்தினும் அதனோடு கிரியையு நிகழ்த்தாரோவெனின் யாரே தங்கையின்கட் கொழுவிய வாழை முதலியவற்றின் கனிகளெய்தினதனை நுகராது விடுத்துச் சுவையில்லாக் காயினைக் கைக்கொண்டு நுகர விரும்புவர். அஃதன்றி வையத்தின் கண்ணொளி யமைந்த பதுமராக முதலிய இரத்தினங்கள் வந்தெய்தி னவற்றினைக் கொள்ளாது யாரே விடுத்துப் புல்லிய கல்லினைக் கைக்கொண்டு மகிழ்வர். எ-று.

கனிபெற்ரூர் காய்விரும்பாத தன்மைபோன்று மணிபெற்ரூர் சிலை விரும்பாத தன்மைபோன்றும் ஞானம்பெற்ரூர் கிரியை விரும்பாரென விளக்கி நின்றது என்க. (௰௫)

ஞேயத்தைப் பெறவேண்டினூர்க்குக் காமமுதலிய குற்றங்கள்
அணுகாவென்ப துணர்த்துகின்ரூர்.

ஆசை முதலா மாசனைத்து மறுத்தே யுடலும் வெறுத்தரிய
தேசன் சிவன்பொற் பாதமலர் செறிந்தார் பிறப்பை மறந்தார்கள்
பேசற் கரிய பெருமையினைப் பெற்ரூ ரல்லர் கற்ரூலு
மாசு மலிந்த வாசையினூன் மயங்கித் தியங்கு மானிடரே.

எ-து. காமமுதலிய குற்றமனைத்தினையுங் கெடுத்து யாக்கையையும் வெறுத்துப் பிறரால் அறிதற்கரிய ஞானப்பிரகாசனூகிய சிவன் பொன்போன்ற சிபாதங்களைப் பற்றினவரே சனன மரணத்தையொழிந்தவர். அங்ஙனஞ் செய்யாதழுக்கு மிக்க விராகத்தினூலே யுள்ள மயங்கி வருந்துபவர் பெருநூல்களைக் கற்ரூோனுஞ் சொல்லுதற்கரிய பிறவி நீக்கம்பெரூர். எ-று.

பிறவி யறுதலே பெருமை தருவதாகலின் அதனைப் பெருமையென்றுபசரித்துக் கூறினூர். இதனைச் சிறப்பீனுமென்பதில் பரிமேலழகர் கூறலானுமறிக. (௰௬)

சருவ வியாபியாயிருக்கிற சிவன் பக்குவான்மாக்களுக்கல்ல
தறியப்படானென் றுணர்த்துகின்ரூர்.

காணூர் மலத்தாற் கண்ணிழந்தார் கலந்தே யெங்கு நிறைந்தானைச்
சேணூ ரிரவி தனைக்காணூர் சிறந்த விழியை யிழந்தாருங்
கோணூ கினையும் பூணெனவே கொண்டா னடியைக் கண்டார்கண்
மாணூ மூல மலவலியை மாய்த்தா ரவன்றன் வலியாலே.

எ-து. கட்புலனையிழந்து நிற்பவர் ஆகாயத்தின்க ணின்றெங்கும் பரம்பும் சூரியனைக் காணூத வாறுபோல வாணவமலத்தினூலே யறிவாகிய கண்ணிழந்தவர் எங்குங்கலந்து நிறைந்து நிற்கும் சிவனைக் காணூர். அற்றேல் இப்படிக் காணப்படாத சிவனைக் கண்டவர் யாவரெனின் அந்தச் சிவனது சத்தியினூல் தம்மை மறைத்திருக்கும் பொல்லாத மூலமலமாகிய வாணவமல சத்தியைக் கெடுத்து ஞானக்கண் பெற்றவர்களே வளைந்த நாகத்தை யாபரணமாகப் பூண்ட சிவன் சிபாதங்களைக் கண்டவர். எ-று. (௰௭)

அச்சிவஞானிகள் எஞ்ஞான்றும் ஞேயத்தைவிட்டு நீங்கார்
என்பதுணர்த்துகின்ரூர்.

வான மதனை நீங்காது வாயு விரைந்து
மதனைப்போன்

ஞான மயனை நீங்கார்கண் ஞானத் தவரு
நடுக்கத்துந்
தேனின் மொழியா ரிணைத்தோளைத் திளைக்கும் பொழுதுஞ்
சினஞ்செறிய
வூனத் தினரை யுவர்த்தொறுக்கும் பொழுதும் யாதா
மொருபொழுதும்.

எ-து. வாயு எங்குமோடியுந் தனக்காதாரமாகிய ஆகாயத்தைவிட்டு நீங்காது. அதுபோன்று சிவஞானிகளுந் தமக்கச்சமுண்டாங் காலத்துந் தேன் போலுஞ் சொல்லினையுடைய மடவார் திரண்ட தோளிணைகலந் தனுபவிக்கும்பொழுதுங் கோபமேலிடத் தமக்குக் குற்றஞ்செய்தாரை வெறுத்துத் தண்டிக்கும்போது மற்று மெக்காலத்தும் ஞானசொரூபியா யிருக்கிற சிவனைவிட்டு நீங்கார். எ-று. (௬௮)

சிவஞானிகண் முதலாயினோர்க்குச் சிவன்றோன்றி நிற்கு
முறைமை யுணர்த்துகின்றார்.

துயக்கந் துடைத்த ஞானிகட்குத் தோன்று மெங்குந்
துகளில்லான்
மயக்க மறுத்த யோகர்க்கு மருவு மிதய
மலர்மீதே
பயக்கும் பலத்தைப் பாவகனிற் பார்ப்பார் தமக்குப்
பாங்குறவே
நயக்கு முருவின் மற்றையவர் நாட வுறைவ
னூடோறும்.

எ-து. நின்மலனான சிவன் விடயங்களிலே அறிவு வேறுபடுந் தன்மையையொழித்த ஞானிகளுக் கெவ்விடத்துந் தோன்றி நிற்பன். அஞ்ஞானத்தைக் கெடுத்த யோகநிலையுடையார்க் கவருடைய மனக்கமலத்திற் றோன்றுவன். அந்தணர்க்குக் காருகபத்திய மாகவனீயந் தக்கணாக்கினியெனக் கூறப்பட்ட மூவகையக்கினியினிடத்தே தோன்றி யவர்விரும்பிய பலனைக் கொடுப்பன். மற்றுமுள்ள வான்மாக்க ளெஞ்ஞான்றுந் தரிசித்தற்குச சிவலிங்கமுதலிய நயந்த திருவுருவங்களிலே எழுந்தருளியிருப்பன். எ-று.

ஞானநிலையுயர்பும் கன்மநிலையிழிபும் உணர்த்துகின்றார்.

ஒளிய பதும ராகங்கை யுடையார்க் குவகை
யலதுண்டோ
தெளிய யோக சித்தர்க்குஞ் சிறப்போ யலது
செலவுண்டோ

புளிய சிலையைப் பொறுத்தார்க்குப் பொருளோ சிறிது
துயர்பெரிது
தெளிவு பெரிது பலஞ்சிறிது நிரந்த கரும
நிலையார்க்கே.

எ-து. ஒளியினையுடைய மாணிக்கத்தைக் கைக்கொண்டார்க்கு மகிழ்ச்சியேயன்றித் துயருண்டோ, அதுபோலத் தெளிவினையுடைய ஞானயோகஞ் சித்தித்தார்க்கு 'மின்பமேயன்றித் துன்பமுண்டோ, புல்லியநிறத்தையுடைய வம்மிக்கல் முதலியவற்றைச் சுமந்தார்க்கு விலையாலெய்தும் பொருளோ அற்பம். அதனைச்சுமக்குந் துயரமோ மிகுதியாம். அதுபோலப் பூசை, சபம், தியானமெனப் பரந்த கன்மநிலையி னிற்பார்க்குப் பெறும்பல மற்பம். அடையுந் துயரம் பெரிது. எ-று.

உண்டோ என்புழி ஓகாரம் எதிர்மறை. செல்லலென்பது விகாரப்பட்டு நின்றது. புல்லியவென்பது புளியவென லகாரம் ளகாரமாயது, சித்தர் என்றது ஞானிகளெனக் கொள்க. (உ0)

மேலந்த ஞானிகளெழுந்தருளியிருக்கு மெல்லையின்
சிறப்பு முணர்த்துகின்றார்.

சிறந்த பரம சிவனுருவந் தெருண்ட பரம சிவஞானி
யுறைந்த வெல்லை விற்கோடி யளவும் பாவ மொழிந்தவிடு
நிறைந்த கங்கை நிகழிடத்து னீங்கு மயுத மாறளவு
மறைந்த வளவி னருத்தத்து ளகலும் பாவ மரன்புரிக்கே.

எ-து. சிறப்பினையுடைய பரமசிவ சொரூபத்தையுணர்ந்த மேலான சிவஞானி யெழுந்தருளியிருக்கு மெல்லைக்குக் கோடி விற்கிடையளவும் நீரால் நிறைந்த கங்கைநதிவிளங்கு மெல்லைக்கு அறுபதினாயிரம் விற்கிடையளவுஞ் சிவாலயத் தெல்லைக்கு முப்பதினாயிரம் விற்கிடையளவும் பாவமெய்தாதகலும். எ-று. (உக)

சிவஞானிகள் சிறப்பு முணர்த்துகின்றார்.

நீடும் பொருளொன் றுண்டெனவே நெஞ்ச மதனு ணிச்சயித்தார்
ஆடு முதக மாதீர்த்த மவனி தலத்தி லனைவர்க்குங்
கூடு மெல்லை சிவபூமி கொடிய வினைகள் கெடநினைவார்
தேடி யவரை யருச்சிக்க சிந்தை செய்க சிறப்புறவே.

எ-து. நிலைபெற்று நிற்கும் பதியென்னும் பொருளொன் றுண்டென் றுள்ளத்தி னிச்சயித்த பெரியவர்களாடும் புனல் பூமியிலுள்ளார் யாவர்க்குங் கங்கைமுதலிய பெரிய தீர்த்தங்களாம். அன்னோர் பொருந்து மெல்லையே சிவத்தலமாம். கொடுமையாகிய பாவங்கணீங்க வெண்ணுபவ ரந்தஞானிகளைத்தேடி நன்றாகப் பூசிக்கவும் அவர்கள் திருவுருவைத் தியானம்பண்ணவுங் கடவர். எ-று.

ஞானந்திரா லோக்கிய துல்லபமென்பதாற் றேடியவுரை அருச்சிக்கவெனச் சிறப்பித்தார். (௨௨)

ஒருபாயகிட்டை இரண்டுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

அகத்திற் புரிவா ரருச்சனையை யரிய பலத்தை யடைந்திடுவர்
சகத்திற் புரிவார் சங்கரனைச் சார்வ ரதனிற் றணியபல
மகத்து ளேவல் புரிவார்க்கு மதிக பலமே யனாயன்பாற்
சகத்தி னேவல் புரிவார்க்கு மதனிற் சிறுமை சார்ந்திடுமே.

எ-து. வேந்தன் மனையகத்தினேவல்செய்பவர்களுக் கவ்வேந்தனிடத்தில் நின்றும் அதிக பலனெய்தும் அதற்குப் புறத்திலேவல் செய்வார்க்கதற்குக் கீழாயபலனெய்தும் அதுபோலச் சிவனைத் தம்முள்ளத்தி லருச்சனைசெய்பவர் மேலாய பலத்தினைப் பெறுவர் புறம்பே அருச்சனைசெய்பவ ரதிற்றாழ்ந்த பலத்தையடைவர். எ-று. (௨௩)

பாரி யாரும் பயிலாத பக்க மனையுட் பத்தாவைச்
சேர வவனு மவடனக்குச் சித்தக் களிப்புஞ் செய்திடுவ
னேரி லானை நின்மலனை நெஞ்சு ணினைக்கி லவர்க்கவனும்
பூரித் திடுவன் போகவிதம் பொல்லா மலமும் போக்குவனே.

எ-து. மனைக்கிழத்தி செல்லாதவெல்லையி னடுத்த பள்ளியறையிற்றன் கணவனை யணுக அக்கணவனு மவட்கு மனமகிழ்ச்சியையுஞ் செய்வ னதுபோலத் தனக்கொப்பில்லாத மலரகிதனாகிய சிவனை மனக்கமலத்தில் தியானிக்கி லவர்க்கிச் சரீராந்தத்திலே சிவனும்சிறந்த போகபேதங்களை நிறைத்துப் புசித்துத் தொலைந்தவாறே தீமையான வாணவமலத்தினையு நீக்கி முத்தியைக் கொடுப்பன். எ-று.

சித்தக்களிப்பு மென்னு மும்மையாலுடை பூண் முதலியவற்றையுமளித்தல் கருதிநின்றது. மலமுமென்ற வும்மையான் மாயை கன்மங்களையுமெனக்கொள்க, பக்கமென்பது வடமொழித்திரிபா யிடமென்னும் பொருட்டாய் நின்றது. (௨௪)

இன்னுமோ ருபாயநிட்டை யுணர்த்துகின்றார்.

ஈரைந் தாய திசைநடுவே யியம மாதி மலர்கொண்டே
யார்வங் கூரப் பூசனையை யமலர்க் கியற்று மவர்தாமும்
பேரன் புடைய பெருமானு ருலகிற் போகம் பெரிதருந்திச்
சாரும் பிறப்பிற் சிவஞானஞ் சார்ந்து சிவன்றாள் சார்வாரே.

எ-து. தேகத்திலுள்ள பத்துத்திக்கு நடுவாகிய மனத்தி லயிமிசைமுதலிய மலர்கொண்டு நின்மலனை சிவனுக்குப் பூசையை யுள்ளன்பு பெருகும்வண்ணஞ் செய்பவரு மான்மாக்க ளிடத்திலே பெருங்கருணையையுடைய சிவனது உலகத்திற் சென்று மிருந்த போகங்களைப் புசித்துத்

தொலைந்தவாறே பூமியின்கண் வந்துஎடுத்த சனனத்திலே சிவஞானத்தைப் பெற்றுச் சிவனது சீபாதத்தை யடைவர். எ-று. அயிம்சை-கொல்லாமை.

சிவஞானத்தைப் பெறவேண்டுமென விரும்புவா ரெய்தும்பல
னுணர்த்துகின்றார்

நச்சி யெவருஞ் சிவஞான நம்ப னமரும் புரிநண்ணித்
துய்ச்சே போக விதந்தொலைவிற் றோன்றிப் புவியிற் றுரிசழியக்
கச்சே புனிய காயத்தைக் களைகண் டமது கணிற்கண்டு
விச்சை தனக்கும் விச்சாய விமலன் கமலம் விரவுவரே.

எ-து. யாவரேனுஞ் சிவஞானத்தைப் பெறவேண்டுமென்று விரும்பினவர், சிவலோகத்திற்சென் றங்குள்ள போகபேதங்களைப் புசித்துமுடிந்தவாறே பூமியின்கண்வந்து பிறந்து துன்பங்கள் கெடும்படி புல்லிய யாக்கையினை வெறுத்துக் களைகணாகிய சிவனைத் தம்முடைய ஞானக்கண்ணால் தரிசித்து ஞானத்துக்கும் வித்தான சிவனது சீபாதங்களை வேறறக்கலந்திருப்பர். எ-று.

விச்சை-ஞானம். விச்சு-வித்து. (உசு)

அந்த ஞானவேட்கை மூவகையென்று மவற்றாற்பெறும்பய
னிஃதென்று மூன்று செய்யுளா னுணர்த்துகின்றார்.

ஆசை தானு மூன்றுவித மறியி னவையுங் கனிட்டாந்தம்
பேசுங் கனிட்ட வாதரவு பெற்றார் மூன்று பிறப்படைந்து
தேசார் ஞான யோகத்தைச் செறிவர் பரம தேசிகனாற்
பாசம் பிரியப் பரமான வின்ப வெள்ளம் பருகுவரே.

எ-து. ஆராயுமிடத்து அவ்வாசை உத்தமம் மத்திமங் கனிட்டமென மூவகைப்படும். அதிற் பிற்கனிட்டவாதரவு பெற்றவர் மூன்று சனனம் பிறந்து மூன்றாஞ் சனனத்தில் பரகுருவினருளினாலாணவமுதலிய பாசங்க ணீங்க வொளிபரம்பிய ஞானயோகத்தைப்பெற்று மேலாகிய வானந்த வெள்ளத்தினை யனுபவிப்பர். எ-று. தான்-அசை. (உஎ)

உடையா ரிடைவே னுளத்தமல னுலக மதனை யுகப்புறவே
யடைவா ரவனி தலத்திரண்டு பிறப்பு மவல வுடலதனை
விடுவார் பரம சிவஞானி விளைத்த கருணை வெள்ளத்திற்
படிவார் பரம சிவன்பாதம் பரிப்பார் பசுநோ யரிப்பாரே.

எ-து. சிவஞானத்தில் மத்திமமான வாதரவு உள்ளத்தின்க ணுடையவர் மேன்மையுண்டாகச் சிவலோகத்தின்க ணடைந்து பின்பு பூமியின்க ணிரண்டு சனனம் பிறந் திரண்டாஞ் சனனத்தில் துக்கமாகிய தேகவிருப்பினைவிட்டுப் பரமசிவஞானியான வாசிரியன் வைத்த கிருபைக்கடலிலே

படிந்து மேலாகிய சிவனது சீபாதங்களைத் தமதுள்ளத்தின்கட் டரித் தாணவநோயை நீக்கி முத்தியடைவர். எ-று. வேண்—விருப்பு. (உஅ)

பெற்றார் பெரிய வாதரவு பெருமா னுலக மதுபெற்றே
மற்றோ ருடல மண்ணுலகில் வாய்க்க மனத்தின் மயக்கினையு
மற்றே யமல வொளிவெளியை யறிந்தே பிறிந்தே யவ்வுடலம்
பெற்றே பிரியாப் பெரும்பொருளைப் பிரியா ரழியாப் பேரின்பம்.

எ-து. சிவஞானத்தி லுத்தமமான வாதரவுபெற்றவர் சிவலோகத்தை யடைந்து மீண்டும் பூமியின்கட் பிறிதொரு சரீரமெடுத் தங்ஙனமெடுத்த வச்சரீரத்திலே யுள்ளத்தில் விருப்புவெறுப்புகளையுமொழித்து நின்மலமான ஞானவெளியினை யுணர்ந்து பின்னரந்தச் சரீரத்தையு நீங்கித் தன்னை நீங்காது நிறைந்துநிற்கும் பரமசிவத்தினைப் பெற்றழியாத பேரானந்த நீங்காதனுபவிப்பார். எ-று. (உகூ)

கலிவிருத்தம்.

என்றுகரு மாதிய மகத்திற மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை யைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-து. வெளி. (௩௰)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காமுறு வானையுங் கண்ணினனே காமனைக் காய்தழற்
  கண்ணினனே
நாமமு மாயிரம் பெற்றவனே நான்முகன் றன்னையும்
  பெற்றவனே
யேமமு மென்றனக் கானவனே யேனமு மெய்சிலைக்
  கானவனே
தேமொழி யாளொரு பாலினனே சிறுவனுக் கன்றருள்
  பாலினனே.

எ-து. தன்னை விரும்புகின்றவரையு மடிமைகொண் டருளக் கருதினவனே, காமனையெரித்த நெருப்புக் கண்ணையுடையவனே, ஆயிரந்திருநாமத்தையுடையவனே, நான்குமுகத்தையுடைய பிரமனைச் சிருட்டித்தவனே, எனக்கின்பமுமா யிருப்பவனே, பன்றியையு மெய்கின்ற வில்லையுடைய வேடனாயினவனே, தேன்போலு மொழியினையுடைய வுமையாளை யொருபாகத்தி லுடையவனே, சிறியகுழந்தையான வுபமன்னிய பகவானுக்கு முன்னாள் கொடுத்த திருப்பாற்கடலை யுடையவனே. எ-று.

காமுறுவாரையு மென்ற வும்மை யுள்ளபடி யுணர்வாரையேயன்றி யெனா அவாய்நிற்றலி னெதிரது தழீஇய எச்சவும்மை. நாமமுமென்னு மும்மைமுற்று. நான்முகன்றன்னையு மென்னு மும்மை நாரணனையுமென வெதிரது தழீஇயிற்று. ஏமமுமென்னு மும்மை யெனக் குயிரான பசுரூபியாயிருத்தலே யன்றியென எதிரது தழீஇயிற்று. ஏனமுமென்னு மும்மையிழிவு சிறப்பு. (௯௧)

உன்னலன் வேள்வி யுடைத்தவனே யுற்றது ணுடை-
யுடைத்தவனே
கன்னியர் தங்களைக் காதலனே காமுறு வாரையுங்
காதலனே
பொன்னன மேனி பொறுத்தவனே புன்மைய வென்பொய்
பொறுத்தவனே
யென்னெனும் புன்மை யிலாதவனே யாதெனும் புன்மை
யிலாதவனே.

எ-து. தன்னையேநினையாத தக்கன்யாகத்தையழித்தவனே, பலதுணியாலுஞ் சேர்ந்த கந்தையை யுடையாகத் தரிக்குந் தபோதனனே, மதுராபுரியின்கண் வணிகர்குலத்துக் கன்னிகைகளுக்குக் கணவனு யுள்ளவனே, தன்னை விரும்புமடியாரை விரும்புகின்றவனே, தானிட்களனுயிருந்தும் அடியவர் பொருட்டுப் பொன்போன்ற திருமேனியைத் தரித்தவனே, பொல்லாதவெனது வஞ்சனையைப் பொறுத்தருளினவனே, எனைத்தென்னும் புறப்பற்றில்லாதவனே, யாதென்னு மகப்பற்றில்லையான ஞானுதித்தனே. எ-று.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அனக னச்சுத னாது ருத்திர னழக னட்ட திண் புயவீரன்
பனிவ ரைக்குநன் மகட னக்குளம் பரிவு பட்டிடம் பருள்பாகன்
றினக ரற்குமுன் பலையி றுத்தவன் சிரம றுத்தவ னலரோனைப்[மே
புனித னற்புதன் புதல்வ னற்பதம் புணர்வி ருப்பொடும் புகழ்வா

எ-து. பாவமில்லாதவனுமா யழிவில்லாதவனுமாய்ச் சங்காரகருத்தாவுமா யான்மாக்கள் துன்பத்தைப் போக்குவானுமாய்ச் சவுந்தரியனுமாய்த் திண்ணிய வெட்டுத் தோள்களையுடைய வலியுடையானுமா யிமவானுக்கு நல்ல மகளாகிய பார்வதிபாற் காதல்கொண்டு திருமேனியிற் பாதியருளினவனுமாய் முன்னுட் டக்கன்யாகத்தில் சூரியனது பல்லை யுதிர்த்தவனுமாய்ப் பதுமாசனத்திலிருக்கும் பிரமனது தலையை யரிந்தவனுமாய் நித்தியசுத்தனுமா யதிசயமுள்ளவனுமா யிருக்கும் சிவனுடைய புதல்வனுகிய பிள்ளையாருடைய நல்ல சீபாதங்களைக் கூடுமாசையோடுந் துதிசெய்வாம். எ-று. (௯௨)

தமல மோகமுந் தவிர வேயருந் தவரு மாதவன் முதலோரும்
விமல விரசன் முகரு காசரண் விடலை காவெனுந் துதியாளு
மமல னுதிசன் முகன தாள்பணிந் தகில நீதியு மறிவான்வண்
கமல னுன்முகன் மதலை மாதவன் கருணை யான்மலங் களைவாமே.

எ-து. ஒருவராலுஞ் செயற்கரிய தவத்தினையுடைய விருடிகளு மருக்கன்முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களுந் தம்முடைய வாணவமலத்தால் வருமறியாமை முதலாயின நீங்கும்வண்ண நின்று மலமில்லாதவனே யந்தமலசத்தியைக் கெடுக்கும் வலியை யுடையவனே யாறுமுகத்தையுடையவனே குகனே குறமகளை மணஞ்செய்து கானிலிருப்பவனே நீயே புகலிடமெம்மைக் காத்தருளென்று துதிக்குந் தோத்திரத்தைக் கைக்கொள்ளு மமலனுமாய் எவற்றிற்கு முதல்வனுமான பிள்ளையாருடைய சீபாதமலரைப் பணிந் தெல்லாப்பொருளையு மறிந்தோனு மழகிய தாமரைத்தவிசினையுடைய நான்முகனுக்குப் புத்திரனுமாகிய வகத்தியமுனிவன் றருளினால் மலமாயா கன்மங்களைப் போக்குவாம். எ-று.

மலமோகமு மென்ற வும்மையால் மதமுதலிய ஆணவகாரியம் ஆறுமெனக் கொள்ளக்கிடந்தவாறறிக. ஆதவன் முதலோரொன்பதனை "கால்வேறியற்கைப் பதினொரு மூவரோ" டென்புழி நச்சினார்க்கினியர் கூறலானுமுணர்க. (நச)

மூன்றாவது

ஐவகையாகவியல் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது,

# பல விசிட்ட காரண வியல்.

மேலிவ்வோத் தென்னுதலிற்றோ வெனின் முற்கூறிய கன்ம யாகாதி பலன்கள் அதிகமாதற்குக் காரணமான தேச கால முதலிய வற்றை உணர்த்திற் றாகலிற் பல விசிட்ட காரண வியலென்னும் பெயர்த்து. இத்தலைச் செய்யு ளென்னுதலிற்றோஎனின் பொதுமையாக அறத்தினைச் சொல்வான் றொடங்கி அகத்தியனைப் பிள்ளையார் விளித்தனுதலிற்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பிறப்பிலி பேத மில்லி பேணுவார் தம்மை யென்று
மறப்பிலி மலர்த்தாண் மன்னு மனத்துற வுறவே வைத்துச்

சிறப்புறு தேச மாதி செப்புவ முனிவ கேட்க
வறத்தினைப் புரிந்தார்க் காக வரும்பய னதிக மாகும்

எ-து. முனிவரனே தனக்கு உற்பத்தியில்லானும்எவற்றினும் அந்நியமின்றி இருப்பானும்த் தன்னை விரும்புமடியவரை எஞ்ஞான்று மறப்பில்லானும்நின்ற சிவனது தாமரைமலர்போன்ற சீபாதங்களை மனத்தின்கணிலைபெற விருத்தி யுத்தமமான தேசமுதலியவற்றை உனக்குச் சொல்கின்றேம், அதனையறிவாயாக. அதன்வழி யறஞ்செய்வார்க்கு உண்டாம்பயன் இவ்வுலகத்தின்கணன்றிச் சுவர்க்கத்தின் கண்ணும் அதிகமாகப் பலிக்கும். எ-று. (க)

மேனிறுத்த முறையானே தொகுத்தவற்றைத் தலை
தடுமாற்றமென்னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகின்றார்.

சிறந்த நற்றேசக் தன்னிற் றேடருங் காலங் கூட
மறந்திடா விதியி னோடே வாய்ந்தவா தரவு கூர
வறந்தனை யறிந்த வாய்மைப் பாத்திர மாவா னங்கைச்
செறிந்திடச் செய்த வற்ப முலகினும் பெருகுந் திண்ணம்.

எ-து. உத்தமமாகிய காசிமுதலாகிய புண்ணியத் தலங்களிலே தேடுதற்கு அரிதாகிய கிரகணமுதலிய புண்ணியகாலங்கள் பொருந்த வழுவாத விதியொடு பொருந்திய வாதரவுபெருக, அறமுதலியவற்றை உணர்ந்த சற்பாத்திரமானவன் கையிற் பொருந்தும் வண்ணம் உபகரித்தபொருள் சிறிதேனு மவ்வுலகினும் பெரிதாமிதுசத்தியம். எ-று.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிப் பொருளதென்பதனை 'அறத்தான் வருவதே யின்ப' மென்புழிப் பரிமேலழகரும் கூறலானுமுணர்க. (உ)

முன்னைச்செய்யுளிற் றொகுத்துக்கூறினா ரிச்செய்யுளி
லதன்பயன் சிறப்பித்துணர்த்துகின்றார்.

ஓங்கிய வதனைச் செய்த வுத்தமர் சிவலோ கத்துட்
டாங்கியே போக பேதம் பிரளய சமையந் தன்னி
னீங்கரும் பொருளைக் கண்டு நிறையுற வொருமை நோக்
தூங்குவ ரின்பந் தோன்றத் துகண்மலஞ் சோரு மன்றே.

எ-து. பயனானுயர்ந்த அவ்வற்பமாய நன்மையை ஞானிகள் பாற் செய்த பெரியார் சிவலோகத்திற் சென்றாங்குள்ள போகவகைகளை யெய்திப் பின்னர்ச்சங்காரகாலத்திற பொல்லாத மலத்தை நீங்கித் தம்மைவிட்டு நீங்காத சிவத்தைத் தரிசித்துக் கடல் அலையற் றடங்கினாற் போன்றுள்ளத்தின்கண்ணமைவு எய்த ஐக்கியபாவத்துடனே னந்தானுபவமுண்டாக நிலைபெற்றிருப்பர். எ-று. (ங)

ஐவகையாகத்தோர்க்குதவும் பலத்துக்குக்
காலவரையறையுணர்த்துகின்றார்.

கருமிகட் கீகை நிற்குங் கலந்தொரு பிறப்பிற் கற்ற
பெரியராந் தவத்தோர்க் கீகை பிறப்பொரு நூறு நிற்கு
மரியமந் திரத்தார்க் கீகை யாயிரம் பிறப்பு நிற்கு
முரியயோ கிக்கு ஞானிக் கூழியே ரூழி நிற்கும்.

எ-து. கன்மயாகமுதலிய ஐவகை யாகத்தோர்க்குங் கொடுத்தது அடைவே ஒருசனனம், நூறுசனனம், ஆயிரஞ்சனனம், பிரமகற்பம், மகாசங்காரகாலமளவும் நின்று போகவகைகளைக் கொடுக்கும். எ-று.

யோகிக்கூழியெனவும், ஞானிக்குப் பேரூழியெனவும் மாற்றுக, போகவகையென்பது, எஞ்சிநின்றது. (ஈ)

தேசமுதலியவற்றிற் றானமுதலிய கன்மங்களைச் செய்யி னதிக
பலந்தருமென்ப துணர்த்துகின்றார்.

திருவெலி லெழுவா யான காரணஞ் சிறக்க வீகை
யெரியினை யோம்ப லீசற் காலய மியற்ற லென்றும்
பரிவுறப் பூசைபண்ண லெனுமிவை நான்கும் பாங்கார்
தருமமே யிவற்றால் வேண்டும் பலமெலாந் தழைத்துச் சாரும்.

எ-து. புண்ணியதேச முதலாகக் காலமுஞ் சிரத்தையும், பாத்திரமுமாகிய பல விசிட்டகாரணங்கள் சிறப்பொடு பொருந்த வவ்விடங்களிற் றானஞ்செய்தலும், அக்கினிகாரியஞ்செய்தலுஞ், சிவனுக் காலய முண்டாக்கலு, மெஞ்ஞான்று மன்புபொருந்த வருச்சனைசெய்தலு மென்னு மித்தொழில்க ணான்குஞ் சிவபுண்ணியங்களுட் டலைமையாய், இதனாற் றாம் வேண்டிய போகங்களெல்லா மிகவுமெய்தும் எ-று. (ஞ)

சற்பாத்திர விசிட்ட முணர்த்துகின்றார்.

பாத்திர மாவான் பாவப் படுகடற் பட்டார் தம்மைத்
தீர்த்தம லேசன் வாழும் புரமெனுந் தீரஞ் சேர்ப்பன்
கூர்த்தமெய்ஞ் ஞான மென்னுங் கரத்தினைக் கொடுத்தே மற்றோர்
தீர்த்திட வல்லார் கைதா னில்லவர்க் குண்டோ செய்கை.

எ-து. சற்பாத்திரமானவன், பாவமாகிய ஒலியெழுகடலினழுந்துவார்க்குச் சத்தியஞானமாகிய கையினைக்கொடுத்துப் பாவப்படுகடலினையொழித்து மலரகிதனான சிவன்வாழுஞ் சிவலோகமென்னுங் கரையையடைவிப்பன். ஞானக்கையுடையா னன்றிப் பாவப்படுகடலை யொழித்தெடுத்தற்கு மற்றையோர் யார்தான் வல்லவர், பிறருமெடுக்க வல்லவரொன்னிற் கையிலாதார்க்குத் தொழிலுண்டோ, அதுபோல சற்பாத்திரமல்லாதான், பாவப்படுகடலினின்று மெடுக்கமாட்டான். எ-று.

தமக்கு என்புழி நான்காவது இரண்டாவதாக மயங்கிற்று. (சு)

ஆன்மாக்களை ஞானிகளே கரையேற்றுவ ரவரொழிய
அஞ்ஞானிகள் கரையேற்றமாட்டா ரென்ப
துணர்த்துகின்றார்.

அலைபுன லதனு ளாழ்ந்த சிலைமரப் புணையா னன்றிச்
சிலையினாற் றீரந் தன்னைச் சேர்வதூஉ மில்லைத் தேரிற்
றொலைவிலாப் பாவப் பௌவச் சுழியிடைச் சுழல்வார் தம்மை
நிலைமையா ரன்றித்தீயார் நீக்கிவான் கரையி னீட்டார்.

எ-து. அலையெறியும் பெருநீரினுள் வீழ்ந்தமிழ்ந்திய கல்லைக் கரையேற்ற விசாரிக்கின் மரத்தாற்கட்டிய தெப்பத்தினான்றிக் கல்லினாலாகிய தெப்பத்தினா னாகாதவாறுபோன்று தொலையாப் பாவக்கடலிற் சுழியாகிய சனன மரணங்களிற் சுழலும் ஆன்மாக்களைச் சற்பாத்திரமாகிய ஞானிகளே, கரையேற்றுவ தன்றி அசற்பாத்திரமானோர் அக்கடலினின்றுஞ் சுவர்க்கமாகிய கரையில் ஏற்றமாட்டார். எ-று.

முற்கூறிய ஞானக்கையென்பதற் கேற்க நீட்டற்றொழில் கொடுத்தனரென்க. (எ)

பாத்திரமென்னுஞ் சொற்குப் பொருளுணர்த்துகின்றார்.

பாவெனும் பதத்தி னர்த்தம் பாவமென் கடலிற் பட்டார்
தேவனற் பதமென் றீரத் திருத்துவான் றிரத்தி னர்த்தம்
பாவமென் கடற்பட் டாரைப் பரமர்தம் பதமென் பாரத்
தேவியே யிருத்து வானே பாத்திர மென்னப் பட்டான்.

எ-து. பாவென்னும் பதப்பொருள், பாவமாகிய கடலினமிழ்ந்தினோன்றும், திரமென்னும் பதப்பொருள், சிவனது நல்ல சீபாதகமலமாகிய கரையிற்பொருந்தும் வண்ணஞ் செலுத்தி யிருத்துபவனே பாத்திரமென்று சொல்லப்பட்டான். எ-று. (அ)

அந்தச் சற்பாத்திரமாயுள்ளார்க்குப் பிச்சையிட்டார்
பெறும்பயனுணர்த்துகின்றார்.

அருமறை யாய்ந்த கோடி யந்தணர்க் கருந்த வாய்த்த
தருமமுஞ் சிறிதே யென்னத் தழைத்திடுந் தம்மை யோர்ந்த
வொருமைய போகர் தங்கை யுதவிய யிச்சை யுள்ளுநன்
பிரியவே பெறுவ ரின்பம் பிச்சையைப் பெறுவித் தாரே.

எ-து. நான்குவேதங்களையு மாராய்ந்த கோடிபிராமணர்க் கறுசுவையோடு புசிப்பித்த புண்ணியமு மற்பமென்னும் வண்ண மான்ம சொரூபத்தைத் தரிசித்த வொருமைப் பாட்டினையுடைய சிவயோகிகளுக் கிட்ட வொருபிடிபிச்சை மிக்கதிகமாம், ஆதலானவர்க்குப் பிச்சையைப் பெறும்வண்ண மிட்டார்மனக் குற்றமாகிய வாணவாதிகணீங்கிப் பேரின்ப மெய்துவர். எ-று. (கூ)

சிவயோகிகளை யமுது செய்வித்தது சிவனுக்கேயா
மென்பதுணர்த்துகின்றார்.

அருத்துக வமலன் றன்னை யகத்துணர்ந் தவரை யன்னங்
கருத்திருந் தவர்க்குத் செய்த பூசனை கடவுள் கொள்வ
னொருத்தனுக் குபசா ரங்க ளுடலிடை யுலகர் செய்வர்
பிரித்துட னுயிரைப் பேணும் பெற்றியை யாரோ பெற்றார்.

எ-து. நின்மலனாகிய சிவனை யுள்ளுயிராகத் தம்முள்ளத்தின்கணு ணர்ந்த சிவயோகிகளுக் கன்னத்தை யருத்துவிக்கக் கடவன். அங்ஙனமவர்க்குச் செய்த பூசையைச் சிவன் அவர்களுள்ளத்தின்க ணிருந்துகொண்டருளுவன். அஃதெங்ஙனமெனி னுலகத்தினுள்ளார் ஒருவனுக்குச் சந்தன மலர் முதலிய வுபசாரங்களை யவனது சரீரத்தின்கட் செய்யவே யவனுயிர்க்குச் செய்ததாம் அதுபோன்று சிவயோகிகளுக்குச் செய்தது சிவனுக்கேயாம் உடலிற் செய்வதொழிந்துயிரின்பாற் செய்யாரோவெனி னுலகத்திலெவர்தா முடம்பினை நீக்கி யுயிரைக்கண் டுபகரிக்கு முறைமை பெற்றவர். எ-து. (ய)

மேலவர்க்குப் பிதிர்த்திவசங்களிலே யருத்துவித்தா
ரடையும்பல முணர்த்துகின்றார்.

விடுத்துல கமலன் றன்னை விரும்பிய விதுலர்க் கன்னங்
கொடுத்தவ ரன்பு கூரப் பிதிர்க்களைக் குறித்த நாளி
லெடுத்தெழு மூன்று சுற்றங் கீழ்க்கிடந் திளையா தென்று
நடத்தொழி னம்ப னுட்டி விருத்தியே யிருப்பர் நம்பால்.

எ-து. பிதிர்க்களை நோக்கிய திவசங்களி லுலகவாஞ்சையை யொழித்து நின்மலனாகிய சிவனை விரும்பி நின்ற வொப்பில்லாத தபோதனர்க் கன்பு பெருகவமுது செய்வித்தார் தம்முடைய விருபத்தொரு சுற்றத்தையு நரகத்தின்பாற் கிடந்துவருந்தாம லெடுத்தெக்காலுந் திருநடத் தொழிலினையுடைய சிவன் வாழுஞ் சிவலோகத்தின்கணிருத்தித் தாமும் விருப்பத்தினாலே சிவசாமீப்பியம் பெறுவர். எ-று.

விதுலம். ஒப்பின்மை. நம்பு விரும்பு. (யக)

அவர்க்கிட்டபிச்சையினது சிறப்புணர்த்துகின்றார்.

தம்மனை யடைந்த யோகர் தமதடி பணிந்து தாமு
மெம்மையே யாளு மீச னிவனென விட்ட பிச்சை
வெம்மைய நாகந் தன்னில் வீழ்ந்ததங் குலத்தை மீட்டு
மெய்ம்மையே சிவலோ கத்து ளிருத்திடும் வியப்பென் வேறே.

எ-து- ஒரோவொருவர் தம்மனையின்க ணெழுந்தருளிய சிவயோகிகள் திருவடிமலர்களைத் தாமுமெதிர்சென்று வணங்கி யெம்மையடிமைகொ

ண்டருளும் பரமசிவனே யென்றிட்ட பிச்சை கொடியநரகத்திலே வீழ்ந்த தன்குலத்தினரை யெல்லா மதனினின்று மீளச்செய்து சிவலோகத்தின் கண் வைக்கும். இது சத்தியம் வேறுவியந்து கூறுவ தியாது. எ-று.

தாமுமென்ற வும்மையாற் றம்மைந்தர் மனைவியருமென்பதூஉங் கொள்ளக்கிடந்ததென்க. (௰உ)

இல்வாழ்வார்க்குத் தொழிலினாற் பாவங்கள் வருமுறைமையு மவை தீருமுறைமையு முணர்த்துகின்றார்.

உலகினிற் பாவ பேத முண்டுழ வாதி யைந்தா
லலகிடன் முதலைந் தாலு மவ்வினை யறுமெம் மாதிக்
கிலகிய வெரிக்கு நூலை யிசைத்தருள் குரவர்க்கென்று
நிலைமைய தவர்க்குப் பூசை நித்தலு நிகழ்த்து வார்க்கே.

எ-து. புறம்பே செய்யு முழவு முதலிய தொழிலைந்தினானு மனையகத்திற் செய்யுமலகிடன் முதலிய தொழிலைந்தினானும்பாவபேதங்கள் புவியின்கணுளவாம். சிவனுக்கும் விளங்கா நின்ற வக்கினிக்குஞ் சிவஞானலையுபதேசித்தருளு மாசிரியர்க்கு மெக்காலமு நிலைபெற்ற தபோதனர்க்கும் பூசையை நித்தியமுஞ் செய்வார்க்கு முற்கூறிய பாவங்களொருமற் கெடும். எ-று. (௰௩)

உண்டியால்வருமுயர்வு மிழிவு முணர்த்துகின்றார்.

அட்டவை தன்னைச் சொன்ன நால்வரு மருந்த வன்பா
லிட்டுமிக் கதனை யுண்கை யமிர்தமீ யாதே யுண்கை
கட்டமுங் கடுவு மாவி கழிந்தவூன் காயந் தானு
மொட்டியே யுடலிற் றோன்றும் புழுவுமென் றொழிக வோர்ந்தே.

எ-து. ஒரோவொருவர் தமக்குச் சமைத்த வன்னத்தை முற்கூறிய சிவன் முதலிய நால்வருமமுது செய்ய வன்பினாற் கொடுத்தந்தச் சேடத்தைப் புசிக்கை அமிர்தம் புசிப்பதனோடொக்கும். இந்நால்வர்க்கு முதவாம லுண்பது, மலமும், விடமுமுயிர் நீங்கிய காயமான பிணமுமுடலிற் பொருந்தித்தோன்றும் புழுவு முண்பதொக்குமென்றவற்றை யுணர்ந்து அவர்களுக்கிடாம லுண்பதொழியக் கடவர். எ-று. (௰௪)

முன்னைச் செய்யுளிலுழவு முதலியவைந்தென்று மலகிடன் முதலைந்தென்றுந் தொகுத்தா ரதனை வகுத்துணர்த்துகின்றார்.

தலைத்துழல் கூலி வேலை சந்தையிற் கொண்டு விற்கை
குலைத்தசொற் கூட்டுங் கோபஞ் சத்தியங் கூற லுள்ளு
மலக்கிடன் மெழுக லங்கி யாக்கனீ ரரிசி யென்றே
யிலக்கியத் தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவ மீட்டும்.

எ-து. புறம்பே சென்று நிலத்தின்க ணுழுதலுங் கூலிகொண்டு வேலைசெய்தலுஞ் சந்தையிற் கொண்டு விற்று நாய்குலைத்தாற்போன்ற சொல்லையுண்டாக்குங் கோபமும் பொய்யுரைத்தலு மில்லத்தின்க ணிருந் தலகிடலு மெழுகலு நெருப்பு மூட்டலுந் தண்ணீரொடுத்தலு மரிசிகுற்றலு மென்று நூல்களிற் கூறுந் தொழில்கள் பத்துந் தமக்கென்று கருதிச் செய்யிற் பாவங்கள் வரும். எ-று.

இத்தொழில்களால் வரும் பாவம் யாதெனிற், புருடரானோருழவுத் தொழில் செய்யுங்காற் செந்துக்கண் மரிக்கையு முழுமெருதுக்கு வருத்த முதலிய குற்றமு முளவாகும், கூலிவேலை செய்யுங்காலத்தவ் வேலைத்தொழிற்றிருந்தச் செய்யாமையும் வேலைக்கழப்பும் வெட்டல் கொத்தலிற் கொலை யுமற்றுமுள்ள குற்றமு முளவாகும், கொண்டுவிற்கு மிடத்துப் பிறர் பொருளேறக் கோடலுந் தம்பொருள் குறையக்கொடுத்தலும், பொய்யுரைத்தலு முதலிய குற்றமு முளவாகும்; கோபம்வருங்காற் பிறர்க்கின்னாமையுந் தமக் குணர்வுகேடும், வன்சொற் சொல்லுதன் முதலிய குற்றமு முளவாகும், அசத்தியங் கூறுங்காற் பிறர்க்கிடுக்கணும், பகையு, மச்சமும், பழியுமுதலிய குற்றமு முளவாகும், மகளிரலகிடன் முதலிய வைந்தொழிற் கண்ணுஞ் செந்துக்கள் மரிக்குங் குற்றமு முளவாகுமென்றுணர்க, (௰௫)

அக்குற்றங் கெடுதற்கோர் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

நேசுறு சிவாதி பூசைக் கெனவிவை தன்னைச் செய்யி
னாசமாம் பாவ பேதந் தம்மையே நாடிச் செய்யிற்
பாசமாய் நரக பேதப் படுகுழிப் படுத்தி யென்று
மூசல்போ லுழல்வித் தாக்குந் துயரினுக் களவு முண்டோ.

எ-து. இப்பத்துத் தொழிலினையும் புகழான் மிக்க சிவன் முதலிய நால்வர் பூசையின் பொருட்டுச் செய்வாராயின் அத்தொழிலினானே வரும் பாவவிதங்கள் கெடும் அவற்றைத் தம்மையே குறித்துச்செய்வாராயினவை கள் கன்ம பாசமுமாய் நரகவகைகளான படுகுழியிலே விழுவித்தங்கோடிங் கோடுழலு மூசலைப் போன்றெஞ்ஞான்றுஞ் சனனமரணங்களில் சுழன்று திரியச்செய்தவற்றினா லுண்டாக்குந் துயரினுக்கோ ரெல்லையுளதோ. எ-று.

ஓகாரம், எதிர்மறைக்கண் வந்தது. (௰௬)

மேன்முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகின்றார்.

இந்தவி னைந்தி னாலு மேறிய பாவ மாறச்
சிந்தனை செய்தார் மற்றுஞ் செறிந்ததி வினையுந் தீர்க்கப்
புந்திசெய் தார்க டாமுஞ் சிவாதியைப் புரிசு பூசை
நைந்தறும் பாவம் வாய்க்கு நலங்களு நவிற்றுவாமே.

எ-து. இப்பத்துத்தொழிலினு முண்டாய பாவங்கணீங்கும்வண்
ணங் கருதினரு மிவற்றானன்றிப் பிறவாற்றானும் பொருந்திய பாவங்க
ளொழிக்கும் வண்ணங் கருதினருஞ் சிவன் முதலாய நால்வரையும் பூசை
பண்ணக்கடவர் அங்ஙனமவரைப் பூசைபண்ணிற் பாவங்களெல்லாந் தேய்
ந்து கெடுமேலதனாலுண்டாம் பயன்களுஞ் சொல்வாம், எ-று. (௰௭)

சிவன் முதலாயினோர்க் கன்ன முதலிய கொடுத்தார் சிவலோக
த்தி லெய்தி யிருக்குங் காலவரையறையுணர்த்துகின்றார்.

அருத்திய வவிழி னேக மமலனை முதலோர்க் கன்பா
லிருத்திடுஞ் சிவலோ கத்தின் வருடா யிரமு மேயப்
பொருத்திய வன்பர் தம்மைப் பொருந்திடிற் பருப்பு நெய்யு
முனைத்தவவ் வருடந் தன்னிற் றசகுண மோங்கு மாங்கே.

எ-து. சிவன் முதலிய நால்வரையும் அன்பினானே யமுதுசெய்வி
த்த அவிழ்களிலோ ரவிழ், ஆயிரம்வருடஞ் சிவலோகத்திலிருக்கும்படி வை
க்கும், அந்த அவிழுடனே பருப்பு, நெய்யும், பொருந்துமாயி னங்ஙனமரு
த்துவித்த அன்பர் தம்மை முற்கூறிய வருடத்திற் பதின்மடங்காகிய பதி
னாயிரம் வருடஞ் சிவலோகத்தி லதிகமாக விருத்தும். எ-று.அவிழ் அன்னம்.

இதுவுமது.

பொரித்தநற் கறியும் புல்கிற் றசதச குணிதம் போனந்
தரித்தசாட் டியமே யென்னிற் சததச குணமுஞ் சாரும்
பரித்தநற் கந்த பத்தஞ் சதசத குணமும் பற்று
மிரத்தநற் சாலி யன்ன நியுதமே யெண்ணி லேன்றும்.

எ-து. முன்னர்க்கூறிய பருப்பு நெய்களுடன் நல்ல பொரிக்கறியுங்
கூடுமாயின்முன் ஓரவிழுக்குக் கூறிய வருடத்தின் நூறுமடங்கான நூறா
யிரம்வருடஞ் சிவலோகத்திலிருத்தும், அவர்களுக்கு நிவேதிக்கு மன்னமறு
பது நாளில் விளைந்த நெல்லின தன்னமாயின், முன் ஓரவிழுக்குக் கூறிய
வருடத்திலாயிரமடங்கான பத்துநூறாயிரம் வருடஞ் சிவலோகத்திற் பொ
ருந்தவைக்கும். நன்மைபொருந்திய புழுகுசம்பா நெல்லின தன்னமாயின்,
முன் ஓரவிழுக்குக்கூறிய வருடத்திற் பதினாயிரமடங்கான கோடிவரு
டஞ் சிவலோகத்திற் பொருந்தும் வண்ணமிருத்தும், நல்ல செஞ்சாலி நெ
ல்லினன்னமாயின், முன் ஓரவிழுக்குக்கூறிய வருடத்தி னூறாயிரமடங்
காய பத்துக்கோடி வருடஞ் சிவலோகத்தி லிருத்தும். எ-று.

ஏகாரம், தேற்றம், உரைத்த வவ்வருடமென்பதுஞ் சிவலோகமென்
பதும் அதிகாரத்தான், யாண்டும் வருவித் துரைத்துக்கொள்க. சாட்டியம்-
அறுபதாங் குறுவை. கந்தபத்தம்—புழுகு சம்பாநெல். (௰௯)

இதுவுமது.

சாலியின் விசிட்ட ராச சாலியாற் சமைத்த வன்ன
மேலைய பலத்தின் மிக்க தசகுணம் விளைக்கு மீண்டுங்

கோலிய பலங்க ளேறுங் கொழுவிய நெய்யுங் கூடி
மேலவே கறியுங் கூடி மேற்றமுன் னிசைத்த வாற்றும்.

எ-து. செஞ்சாலி நெல்லினு மதிகமான விராசசாலி நெல்லினாற் சமைத்த வமுதாயின் முற்கூறிய பலத்தினுமிக்க பதின்மடங்கு பலத்தினைவிளைக்கும். எனவே முற்கூறிய பத்துக்கோடியிற் பதின்மடங்கான நூறுகோடி வருடஞ் சிவலோகத்திலே யிருத்துமென்றும். அந்த அன்னங்களில் நல்ல நெய்யுங் கூடுமாயின் மீட்டுமந்தந்த வன்னங்கட்குச் சொன்ன பலனை விரட்டிக்கும். அவற்றினோடு பொருந்தக் கறியுங்கூடுமாயின் அந்தந்தக் கறிக்கு மந்தந்தவன்னங்கட்கு முற்கூறிய பலத்தினது வரையறையின்படி இரட்டிக்கும். எ-று. (உ௰)

சிவவிரதராகிய தபோதனரை யருத்துவிப்பார்க் கெய்தும் பலனுணர்த்துகின்றார்.

பழுதறு பாய தாதி பலவித விரத பாகங்
கொழுவிய கனியின் பேதங் குளகிரு தாதி கூடு
முழுமண மோத காதி முன்னையி னதிக முற்றும்
விழுமிய பலத்தை வேண்டி விரதரை மிசைவித் தார்க்கே.

எ-து. விசிட்டமாகிய பலன்களை விரும்பிக் குற்றமற்ற பாயசமுதலாகிய குளான்னம், திலான்னம், பருப்புப்போன மிவைகளையும் பலவயையாகிய விராசசாலி யன்னமுதலிய விரத பாகங்களையுங் கொழுவிய வாழைக்கனி, பலாக்கனி, மாங்கனி முதலிய கனியின் வகைகளையுஞ், சருக்கரை, நெய்முதலியவை கூட்டிச் சமைக்கு நிறைந்த மணத்தையுடைய சுகியன் முதலாகிய பணியாரவகைகளையுங் கூட்டிச் சிவவிரதங்களைச்செய்யுந் தபோதனர்களை அமுது செய்வித்தார்க் கவைகளே முற்கூறிய பலத்தினு மதிகமாகிய பலன்களை விளைக்கும். எ-று.

கூ 'செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத்தலும் வழக்கினுளுரித்தே' என்பதனாற் கருமப்பொருளைக் கருத்தாவாகக் கூறியதென்க. (உக)

சிவயோகிகளை யருத்துவிப்பா ரெய்தும் பலனுணர்த்துகின்றார்.

உரைத்தவிப் பாக பேத முயிர்க்குயி ருணர்ந்தார் தம்மை
யருத்தினர் சிராத்தத் தன்பா லமுங்கிய மூவேழ் சுற்ற
மிருத்தினர் சிவலோ கத்தி னெண்ணிய படியே தாங்கள்
கருத்தினுட் களிப்பும் பொங்கப் புதல்வனைப் பெற்றே காண்பார்.

எ-து. முற்கூறிய விப்பாகவகைகளை யுயிர்க்குயிராகிய சிவனைத் தரிசித்த சிவயோகிகட்குச் சிரார்த்த காலங்களில் அன்பினோடு மமுது செய்

விப்பார் தாம் பூமியின்க ணிருக்கவு நரகத்தின்கட் டுயருறுகின்ற விருபத் தொரு சுற்றத்தையுமெடுத்துச் சிவலோகத்தில் வைத்தோராவரஃதேயும ன்றித் தம்முள்ளத்தி னினைந்தபடி சற்புத்திரனையும் பெற்று மனமகிழ்ச்சி யும் பெருகக் கண்டிருப்பர். எ-று. (௨௨)

இதுவுமது.

உயிர்க்குயி ராகி நின்ற வொருவனை யுணர்ந்த யோகி
பயிக்கமுங் கொளவென் றெண்ணிப் பரிந்தவர் மனைமுன் பற்ற
வுயப்பெறு வோமென் றெண்ணி யவர்குலத் துள்ளா ராங்கே
பெயர்த்தடி நடமுஞ் செய்வர் பாடுவர் களிப்பும் பெற்றே.

எ-து. உயிர்க்குயிராய் நிற்குஞ் சிவனைத் தரிசித்த சிவயோகி பிச்சை கொள்ளக்கடவோ மென்றெண்ணிப் பத்த சனங்களுடைய மனையின் முன் பொருந்தவக்கணத்தில் தானே யவர் குலத்திலுள்ளோராகிய விருபத் தொருவர்க்கும் யாமினி நரகத்தி னின்றுங் கரையேறுவோமென்று நினைந் தவ்விடத்தில் தானே மனமகிழ்ச்சியும் பெற்றுக் கால்பெயர்த்துக் கூத்து மாடி யதற்கேற்கப்பாடா நிற்பர். எ-து.

நடமுமென்ற வும்மையாற் கையாற்றட்டமு மிட்டென்பதூஉங் கொள்க. (௨௩)

அச்சிவயோகிக்குச் செய்யும் பூசையைச் சிவனு மற்று
முள்ள தேவர்கள் பிதிர்க்களுந் தமக்கெனக்
கொள்வதொன் றுணர்த்துகின்றார்.

ஒழிவற வுறைந்து நின்ற வொருவனை யுணர்ந்த யோகிக்
கழகுறச் செய்த பூசை யரனலு மயனு மாலு
மெழின்மிகு தேவர் தாமு மெமக்கெனக் கொள்வ தொன்றும்
பிழைகெடப் பிதிர்க்க டாமு மெமக்கெனக் கொள்வர் பெற்றே.

எ-து. வெளி. (௨௪)

சிவயோகி பூசைக்கு வினியோகப்படும் பொருள்கள் பெறும்
பயனு மேவல்செய்தார் நினைப்பார் பெறும்
பயனு முணர்த்துகின்றார்.

பூசனைக் குபயோ கங்கள் பொருவிலி புரத்தைப் புல்கு
மீசனை யுணர்ந்த யோகர்க் கிறைஞ்சியே யேவல் செய்தார்
நேசமு நிறைய நெஞ்சி னினைத்தவர் தாமு நீக்கி
பாசினைச் சிவலோ கத்தி னரும்பய னருந்து வாரே.

எ-து. சிவனைத் தரிசித்த சிவயோகிகளைப் பூசை செய்தற் குபயோக ப்படுஞ் சந்தனமர முதலிய எண்வகைக் கந்தமுங் கோட்டுப்பூ முதலியநால் வகைப்பூக்களு நென்முதலியவையு மொப்பில்லாச் சிவபுரத்தைச் சென்ற

டையுமவரை வணங்கி யவரேவிய பணிவிடை செய்தாரு முள்ளத்திலன்பு நிறையும்படி யவரைத் தியானஞ் செய்தாருந் தம்மைத் துயர் செய்யுந் தீவினைக்குற்றங்களை யொழித்துச் சிவலோகத்திற் சென்று பெறற்கரிய போகங்களைப் பெற்றனுபவிப்பர். எ-று. (௨௫)

தபோதனரையுமதிதிகளையுஞ் சிவனெனக் கண்டு வணங்கு முறைமை யுணர்த்துகின்றார்.

அவனியின் மனிதர் செய்கை யறிவமென் றமலன் றானே
தமதொரு முருவந் தன்னைத் தரித்துவந் தானென் றெண்ணி
யவர்களுக் ககத்தின் வந்த வதிதியர்க் கன்பு கூரச்
சுவைமொழி சொல்லிப் பூசை தொடங்கியே முடிக்க சூழ்ந்தே.

எ-து. பூமியின் மானிடர் வழிபாட்டினை யறியக் கடவோமென்று நின்மலனாகிய சிவன் றானே தபோதனராகத் திருமேனி கொண்டெய்தினனென்று கருதி அத்தபோதனர்க்கு, மற்றுந் தம்மனையி வந்தவதிதிகட்கு மன்பு பெருகும் வண்ண மின்சொற் கூறியவர்களுக்குப் பாத்தியம் ஆசமனம், அர்க்கிய மலர் முதலியவற்றினாற் பூசை செய்யத் தொடங்கி மற்றை யுபசாரங்களும் விதிப்படி செய்து முடிக்கக் கடவன். எ-று. (௨௬)

இதுவுமது.

மலினராய் வந்தா ரேனும் வடிவொடு வந்தா ரேனு
நிலைமையி னீங்கா ரேனு நீங்கிய நிலைய ரேனு
மலைவறு மன்பர்க் காதிக் கவர்களுக் கமைக்க பூசை
புலையுடற் பொறையைப் போக்கப் பொருந்திய திருந்தியாரே.

எ-து. ஈனமாகிய வுடற்சுமை யொழித்தற்கு விரும்பிய திருத்தத்தை யுடையார், தம்மனையி னழுக்குமெய்யொடு கூடி யிழிகுலத்தினராய் வந்தாரேனும், பரிசுத்தராய் வேடப்பொலிவொடு நற்குலத்தினராய் வந்தாரேனுந், தாம் நிற்குநிலைமையினின்றும் வழுவாதாராய் வந்தாரேனும், அந்நிலைமையி னீங்கிய விரதபங்கராய் வந்தாரேனும், அவர்கள் ஆதியாகியசிவனுக்கு நிலைபெற்ற அன்பராயின் அவர்க்குப் பூசை செய்யக் கடவர். எ-று.

சிவஞானிகட்குக் குற்றஞ் சொல்லுபவர் முதலியோர்க்கு வருந் தீமை யுணர்த்துகின்றா.

காட்டுமுள் ளொளியைக் கண்ட கண்ணனைக் கயந்து சொல்லக்
கேட்டவர் கேட்பித் தார்கள் கெழுமின ருடன்பட் டார்முன்
மூட்டுநொன்ற வைந்து மூடருங் கூடி மூழ்கி
மீட்டிடு வாரு மின்றி யெரிநிரை யத்துள் * வேவார்.

எ-து. ஆன்மாக்கட் கெல்லாம் அந்தரியாமியாய் நின் றெப்பொருளையுந் தெரிவிக்குந் தீபமாகிய சிவனைத் தரிசித்த ஞானக்கண்ணுடையா

னையொருவ னிந்தித்துச் சொல்லுமிடத்தி லதனைக் கேட்டிருந்தவரும், பிறரைக்கேட்பித்தவரு, நிந்தைசொன்னவரு, மதற்குடன்பட்டவரு, நிந்திக்கும்படி முதற்கணேவினவரு மாகிய இவ்வைந்துமூடருமொக்க வெரிவாய் நிரயத்தில் அமிழ்ந்தி யெடுப்பாருமின்றி வேவர். எ-று.

வேவார் என்னும் பொருவினை யீண்டுடன்பாட்டின்கண் வந்தது.

இதுவுமது

மனத்தினல் வடிவு தன்னல் வழுக்கிய சழக்கர் தாமு
மினத்தொடு மிணங்கி வேவ வெரிநிர யத்தை யெய்தி
யெனைத்துள காலந் தானு மென்றுளத் தேங்கி யெய்ப்பர்
தனக்கப் லுறவி லானைத் தவறுவ ரொன்றே தாமே.

எ-து. மனத்தினனுங் காயத்தினனுஞ் சிவஞானிக்குங் குற்றமிழைத்த நீதிகெட்டவருந், தம்மினமா யுள்ளவரோடுங் கூடி யெரிவாய் நிரயத்தை யடைந்து வேவர். இங்ஙனமனுபவித்துத் தொலையுங்கால மெவ்வளவுள்ளவோ வென்று மனமேங்கி வருந்துவ ராகையாற் றனக் குறவும் பகையுமில்லாச் சிவஞானிகளை யேன்றே தவறுரைப்பர். எ-று. (உக)

இதுவு மது.

மற்றைய நாக பேத மனைத்தினு மயங்கி மூவேழ்
சுற்றமுஞ் சுழலத் தாமுங் கூடியே துயங்கி வீழ்வ
ரெற்றுவ ரியம தூத ரெமக்குற வாரு மில்லை
யுற்றவித் துயரந் தன்னை யொழிக்கவென் றழிவ ருள்ளம்.

எ-து. அத்தீயோர் முற்கூறிய வெரிவாய் நிரயமே யன்றி மற்ற நிரயவகை யெல்லாவற்றினுந் தங்குலத்தி னிருபத்தொரு சுற்றமுங் கூடி யுள்ளம் அமைரக்கலங்கி யுணர்வு கெட்டு வீழா நிற்பர், அங்ஙனம் வீழ்ந்து அத்துயரம் பொருமனிரயத்தி னின்றுங் கரையேறுந்தோறு மெமதூதர்கணின்றடித்தடித்து மீளவுந் தள்ளுவர், அதனலித் துயரத்தை யொழிப்பதற்குறவாவா ரொருவரு மிலர்; இதற்கென் செய்வோமென்று மனமுஞ் சலிப்பர். எ-று. (கூ)

சிவஞானிக் கிடர்செய்யி னிரயத்துன்ப மெய்து மாதலா
லவரை வழிபட்டுய்கவென் றுணர்த்துகின்றார்.

ஆதலான் முனிவர் தம்மை யவமதி செய்யா தஞ்சிப்
பூதலத் தோர்கள் பூவாற் புனலினற் பரிவு பொங்கப்
பாதபூ சனையும் பண்ணிப் பணிந்தவர் பணியுஞ் செய்து
நாதனே யிவர்க ளென்று நாடுக வுளத்தெந் நாளும்.

எ-து. பொறிபுலன்களை முனிந்த சிவஞானிகட் கிடர்செய்யின் நிரயத் துன்பமே வருமாகையா லுலகினுள்ளார் அம்முனிவரை நிந்தியாமற்

பயந்து அன்புபெருக நீரினாலும், பூவினாலு மவர் திருவடிகளைப் பூசனை செய்து அவரேவிய பணிவிடையுஞ் செய்து எக்காலமுந் தம்முள்ளத்திற் சிவனே யிவர்களென்று சிந்திக்கக் கடவர். எ-று. (௯௧)

அசற்பாத்திர மாவாரின்னரென்ப துணர்த்துகின்றார்.

பகர்ந்தன முனிவ மெய்ம்மைப் பாத்திர விசிட்டந் தன்னைச்
சகந்தவ ரென்னக் கோலஞ் சமைந்துதற் பரனைச் சாரா
ரகந்தனிற் பிறப்பு மஞ்சா ரவசபாத் திரங்க ளென்றே
யிகழ்ந்திடு மிதுவுங் கேணீ யினியுனக் கியம்ப யாமே.

எ-து. அகத்திய முனிவனே முன்னஞ் சற்பாத்திர விசிட்டத்தைச் சொன்னோம். இனி அசற்பாத்திர மாவதியாதெனி னுலகத்தவ ரிவர் பெரிய தபோதனரென்று சொல்லுமாறு வேடத்தைத் தரித்துச் சுட்டுணர்வுக் கெட்டாச் சிவனை யடையாதவருமா யுள்ளத்திற் சனனமரணத்துக்குப்பயப்படாதவரு மாவார் யார் அவரே யசற்பாத்திரங்க ளென்று வேதாகமங்களி கழாநிற்கு மிவ்வசற்பாத்திரத்திற் செய்த தானம் விளைக்குந் தீமையு மினியுனக்கியாஞ் சொல்கின்றோ மதனைக் கேட்பாயாக. எ-று. (௯௨)

அவர்க்குக் கொடுத்த தானம் பலன்கொடாம லழியு
மென்ப துணர்த்துகின்றார்.

மெய்யனை விழைந்து பாசப் பகையினை வென்று யாமு
முய்யவே வேண்டு மென்னு முள்ளம திழந்து நின்ற
பொய்யரைப் புரிந்த பூசை பலத்தினைப் பொருந்துமோ தான்
செய்தது மவர்க்குப் பச்சை மட்கல நீரோ தேரின்.

எ-து. சத்திய சொரூபனாகிய சிவனை விரும்பி யாணவ முதலிய பாசப்பகையினை வென்று முத்தராக யாமுங் கரையேற வேண்டு மென்னுங் கருத்தை விட்டு நின்ற வசத்தியர்க்குச் செய்த பூசனை நல்வினைப் பயனைக் கொடுக்க மாட்டாது. அதனை யாராயுங்கால் அவ்வசற் பாத்திரத்துக்குச் செய்த தானம் பசுமட்கலத்தில் விட்ட நீர்போல நில்லாதுடனே யழியும். எ-று. (௯௩)

தான் எ-து. அசைநிலை.

இதுவுமது.

பழுதறு வித்தே யேனு முவரிடைப் பயிரே யாகா
வழலிடை யன்றி நீற்றி னாகுதி பலத்தை யாக்கா
விழைவிலா வலியை மேவு மெல்லிய லின்ப மேவா
வழுவுறு மவர்க்கே யீகை வாத்தினைச் செயுமோ மாட்டா.

எ-து. குற்றமற்ற நல்லவித்தேனு முவர் நிலத்தில் விதைத்தால் பயிராக மாட்டாதது போலும். அக்கினியின் கண்ணேயன்றிச் சாம்பலின்

கட் பெய்த வாகுதி பலத்தைக் கொடுக்கமாட்டாதது போலும் விரும்பு தற்குரிமையில்லா அலியினைப் புணரும்பெண் புணர்ச்சியின்பத்தைப்பெறாதது போலுங் குற்றம் அமைந்த அசற்பாத்திரமா யுள்ளார்க்குக் கொடுத்த தானமும் பலத்தினைக் கொடுக்குமோ கொடுக்காது. எ-று. (௯௪)

சற்பாத்திரங் கரையேற்றுமென்றும் அசற்பாத்திரங் கரையேற்றா
தென்று முவமைமுகத்தா னுணர்த்துகின்றார்.

பாத்திர மாக்கிக் கட்டி யிரும்பினைப் பண்ட மேற்றி
யாற்றிடை யியக்க வெண்ணு மடையினை யடையு மாங்கே
பாத்திர மீந்தா னோடுஞ் சிவபுரப் பாசம் பற்றும்
பாத்திர மல்லான் கட்டி யிரும்பெனப் பாசம் பற்றான்.

எ-து. யாரோனு மொருவ ரிருப்புக் கட்டியினைத் தோணியாகச் செய்து அதில் பலபண்டமு மேற்றி யாற்றில் விடும்போது தாமெண்ணிய கரையினைச் சேரும். அப்படியே சற்பாத்திரமுந், தன்பாற் றானஞ் செய்தானையுங் கொண்டு சிவபுரமாகிய கரையைக் சேரும். கட்டியான விரும்புடன் பண்டத்தையுங் கட்டி யாற்றில் விட்டால் விட்ட வெல்லையிலே யமிழ்ந்திக் கரையடைய மாட்டாதது போல, அசற்பாத்திரனுந் தன்பாற்றானஞ் செய்தானைக் கரை யடைவிக்க மாட்டாமல் தானுஞ் சிவபுரமாகியகரையை யடையான். எ-று.

அடை, எ-து. கரை. (௯௫)

பாத்திரம் அபாத்திரமான இருவரும் நரரா யிருக்க வதி
லொருவர்க் கொருவ ருயர்வு தாழ்வுமாய் நன்மை
தீமையைத் தருமா றென்னையென வினவ,
அதற்கோர் விடை யுணர்த்துகின்றார்.

கட்டியைக் கனலிற் காய்ச்சிக் கம்பிய னலமு மாக்க
விட்டநற் பண்ட மேற்றுப் புனன்மிசை யியங்கு மெற்றே
யொட்டிய குரவ னேது மொருபொரு ளுணர்ந்தா ரற்றே
கட்டியைக் கடுப்பர் காட்டுங் கடவுளை யுணராக் கையர்.

எ-து. கொல்ல னிருப்புக் கட்டியை நெருப்பிற் காய்ச்சித் தோணியாகச் செய்ய வது தன்கணிட்ட நல்ல பண்டங்களையுங் கொண்டு நீரின்மேலோடும். அஃதெவ்வாறோ அவ்வாறே சிவனோடு இரண்டற நின்ற வாசிரியன் தீக்ஷாசுத்தனுக்கி யுபதேசிக்க வொப்பிலாச் சிவத்தை யுணர்ந்த ஞானிகள், தமக் கீந்தானைப் பிறவிக்கடலி னின்றுங் கரையை யடைவிப்பர், ஆசிரியரா லெப்பொருளையுங் காட்டுஞ் சிவனை யுணராத அஞ்ஞானிகள் பணிப்படாத விருப்புக் கட்டியை யொப்பர். எ-று. (௯௬)

மேலுமோர் வகையாற் பாத்திரமென்பாரை
யுணர்த்துகின்றார்.

பாத்திரா பாத்தி ரத்தைப் பகாதுரு குதலே பற்றிக்
கூர்த்தவா தரவி னாலே கொடுப்பவர்க் கவர்க டாமும்
பாத்திரங் குருடர் பங்கு பாலகர் மிடியர் நோயர்
மூத்தவர் கிருப ணாதி யிவர்களு மிரக்க முற்றில்.

எ-து. இவர் பாத்திரம் இவர் அபாத்திரம் என்றிரட்டுறக் கருதா மலுள்ள நெகிழ்ச்சியாய் மிக்க வாதரவுண்டாக வரையாமற் கொடுப்பவர்க் கியாவரிடத்திலு மிரக்க மேலிடுமாயின், முற்கூறிய வசற்பாத்திரங்களுங் குருடர், முடவர் சிறு குழந்தைகள், தரித்திரர், நோயாளிகள், வயோதிகர், பேராசையுடையார் முதலிய வின்னோரும் பாத்திரமேயாம். எ-று. (௩௭)

இதுவுமது.

உச்சியி லணைவா ரெல்லா முத்தம ரென்றே யெண்ணி
யர்ச்சனை புரிக வன்பா லவலவு னாக்கை தன்னைக்
கைச்சம லேசன் வாழுங் கடிநக ரடைவா மென்னு
மிச்சையி னியைந்தா ரெல்லா மெண்ணிய யாவு மேயும்.

எ-து. துக்கத்தை விளைக்கும் பொல்லா வுடம்பினை வெறுத்து நின் மலனாகிய சிவனெழுந்தருளியிருக்குஞ் சிறப்பினையுடைய சிவலோகத்தை யடைவா மென்னு மாசையொடு பொருந்தின ரெல்லாரும் உச்சிக் காலத்தில் பசித்து வந்தோ ரியாவரையும் பாத்திரங்க ளென்றே யெண்ணி யவர் களையன்பின ருச்சனைசெய் தன்ன முதலிய கொடுக்கக்கடவர். அங்ஙனஞ் செய்யிற் றம்மனத்தின்க ணினைத்த பலன்க ளெல்லாங் கை கூடும். எ-று.

ஈகையாள ரிலக்கண முணர்த்துகின்றார்.

பாத்திர மல்லார் செய்கை யதனையும் பகர்ந்தாம் பண்பு
வாய்த்ததா தாக்க ளாவார் தகைமையும் வகுத்துச் சொல்வா
மோர்த்துண ருதாரந் தாழ்ச்சி யுறவனு கம்பங் கோபந்
தீர்த்திட லென்னு மைந்து முடையரே சிறந்தார் தேரின்.

எ-து. முனிவரனே யசற்பாத்திரமானா ரிலக்கணத்தையுஞ் சொன் னோம். இனி நற்குணம் அமைந்த தாதாக்கள் மேன்மையும் பிரித்துச் சொல் கின்றோ மதனை யாராய்ந் தறியக்கடவை யங்ஙனமவர் முறைமையை யாரா யிற் கொடை, வணக்கம், உறவு, அருள், பொறை யென்று சொல்லப்ப ட்ட இவ்வைங் குணமு முடையவரோ தாதாக்களாவர். எ-று. (௩௯)

சிவஞானிக்கீயுந் தன்மை யுணர்த்துகின்றார்.

பாத்திர மதனுண் மிக்க பாத்திரம் பரம ஞானி
தீர்த்தவா சையினு லியா யெனவவன் செப்பா னன்றே

கூர்த்தவா தாவி னாலே யவன்புடை குறுகிக் கொண்ணீ
நீர்த்தனே யென்று மீவான் பலத்தினைத் தெரிக்க லாமே.

எ-து. பாத்திரமென்பன வற்றுள் விசிட்டமான பாத்திரஞ் சிவஞானியே. அவன் பொருண்மேலுள்ள வாசையை யொழித்தமையால் யார்பாலேனுஞ் சென்றிந்தப் பொருளை யெனக்கீயக் கடவை யென்று சொல்லானாதலால் நன்மையே மிருந்த சிரத்தையினாலே யச் சிவஞானி யெழுந்தருளி யிருக்கு மெல்லையிலே சென்று சுத்தனே யடியேன் றரும் பொருளை நீ கொள்ளக்கடவை யென்று சொல்லியுங் கொடுக்குந் தாதாவின் பலத்தை யளவிடலாமோ. எ-று. (௪௰)

மெய்ஞ்ஞானியும் அஞ்ஞானியு மேற்குந் திறத்தினால் வரும்
பயனும் பயனின்மையு முணர்த்துகின்றார்.

மெய்யினை யுணர்ந்த ஞானி வேணவா விடுத்தா னேனு
முய்யவே பிறரு முன்னி யவர்கொடை யுவப்ப னோராக்
கையர்க டம்மைத் தாமே காதலித் திரப்ப ரந்தப்
பொய்யர்கைப் புகுத்தி னார்கள் பொருளினை யிழந்தார் போட்டே.

எ-து. உண்மைப்பொருளைத் தரிசித்த சிவஞானி யானவன், பொருண்மேலுள்ள வாசையை விட்டானேனுந் தன்போன் மற்றுள்ளவரும் பரகதியடைய வேண்டுமென்று எண்ணி யந்தத் தாதாக்கள் செய்யுந் தானத்தை விரும்பிக் கொள்வன். உண்மைப்பொருளைத் தரிசியாத அஞ்ஞானிகள், தாதாவானவன் கதியடைய வேண்டுமென்று விரும்பாமல் தம்முடைய போசனார்த்தத்தை விரும்பித் தானத்தினை யேற்பா ராதலா லந்த அஞ்ஞானிகள் கையிலே தானஞ் செய்தவர்கள் தம் பொருளினை யவமே போட்டிழந்தவராவர். எ-று.

தாம், எ-து. அசைநிலை. (௪௧)

தாதாவானவன் சுவர்க்க மடைதற் கிண்டோர் சிறப்பு
விதி யுணர்த்துகின்றார்.

காதலித் தீவார் வானைக் கலப்பது மவர்கை காட்டு
மாதலால் வானஞ் சேர வாதர வுடையா ரஞ்சிப்
பாதபூ சனையும் பண்ணிப் பகர்ந்துசற் கார பாடை
யோதன மாதி யீக வதிதிகட் குறவி னோடே.

எ-து. அறத்தை விரும்பித் தானஞ் செய்பவர், சுவர்க்கத்தை யடையுமுறைமையைக் காண்ப தெங்ஙன மெனின் அவர் கொடுக்குங் காலத்து மேலாகச் செல்லுங் கைதானே யவர் சுவர்க்கத்தின்மேற் செல்லு முறைமையைக் காட்டும். ஆகையினாலே சுவர்க்கத்தை யடைய வேண்டு மென்னும் விருப்பத்தை யுடையவ ரிரப்போரொன் றிகழாம லதிதிகட்குப் பயந்து

பாதார்ச்சனையுஞ் செய்து நல்வார்த்தையுஞ் சொல்லி யன்ன முதலானவ ற்றை யன்பினோடு கொடுக்கக்கடவர். எ-று. (௪௨)

தரித்திரர்க்குக் கொடாதான் சிறப்புடைய
னல்லனென் றுணர்த்துகின்றார்.

செறிந்துநா வென்று நின்ற மிடியனைச் சிறிய னாக்கி
யுறைந்துளான் பெரிய னெங்க னென்றுளத் தாகஞ் செய்வான்
சிறந்ததா தாவே யல்லன் செட்டிவன் செய்கை யெல்லா
மிறந்திடுந் தருமமேற்கு மிடியரு மின்றே செங்கும்.

எ-து. தன்னைக்கிட்டி யெனக்கீயக்கடவை யென்று சொல்லி யினி வரவினோடு நிற்குந் தரித்திரனை, இவனற்பனென் றெண்ணிச் செல்வத்தை யுடைய பெரியவனெங்கே யிருக்கின்றானென்று எண்ணியவற்குக் கொடுத் தற்குத் தன்னுள்ளத்தின்கண் விசாரிப்பவன், அருளான்மிக்க தாதாவேயா வான். இவன் கொடுக்குங்கொடையெல்லாம், அவன்பாற் றனக்குமோ ருதி யங்கருதிய செட்டாகும். இங்ஙனஞ் செல்வனையிகழ்ந்து மிடியனைச் சிறப் பித்ததென்னெனின், எங்குஞ்சென்றிரக்கு மிடியரு மில்லையாயின் ஏற்பா ற்றுத் தருமமுலகினில்லாது நாசமாமாதலாற் றரித்திரர்க்கே தானஞ்செ ய்யக்கடவன். எ-று. (௪௩)

அதற்குமேலுமோர் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

பொருளரி தாகிற் கேட்பார்க் கின்சொலு மரிதோ போந்தால்
விளைவுட னெழுகை யோடல் வியந்தெதிர் கொள்கை பீடத்
துரிமையி னிருத்தல் பாத பூசனை யுவப்புச் செய்கை
பிரிபொழு துடனே செல்கை யெனுமிவை யேழும் பேறே.

எ-து. தன்பால் வந்துகேட்டு இரப்பவர்க்குக் கொடுக்கும் பொரு ளில்லையாயி னவர்க்குச்சொல்லு நல்லவார்த்தையுமில்லாததோ ஆகையால் நல்வார்த்தையேனுஞ் சொல்லக்கடவன். தன்பாற் பெரியவர்கள் வந்தகால த்து விரைவினோடெழுந்திருக்கை, ஓடிச்செல்லல், கண்டவுட னெழுந்த ருளப்பெற்றதே யெனக் கொண்டாடி யெதிர்கொளல், அவரிருப்பதற் குரிமையுடைய வாதனத் திருத்தல், பாதத்தி லருச்சிக்கை, இன்றல்லவோ என்மனை சுத்தமாயிற்றென்றவரை யுயர்த்திப் புகழ்தல், அவர்களெழுந்த ருளும் பொழுது பதினாறடி குறையாமற் சென்று வழிவிடுகை யெனக் கூறுமிவ்வகை யேழுமுத்தியடைதற்குக் காரணமாம். எ-று.

ஓகாரம், ஒழியிசைக்கண் வந்தது, போந்தாலென்னும் வினைக்கு எழுவாய் விரிக்க. (௪௪)

தாதாவு மவன்கையி லேற்றானு மடையும்பல
முணர்த்துகின்றார்.

இரக்கமா தரவு கூர வீபவன் கையி லேற்று
னிருப்பனை யீந்தா னோடு மீசன துலக மெய்தி

பிரக்குமா தாவி லான்கை யேற்றவ னீந்தா ரோடு
மிருப்பனே நிரயந் தன்னு ளெண்ணிமுன் வினையை யெய்த்தே.

எ-து. அருளு மாதரவும் பெருகக் கொடுக்குந் தாதாவின் கையி லேற்றவன் அந்தத் தாதாவினோடே சிவலோகத்திலே சென்றிருப்பன். அருளுமாதரவு மில்லாத தாதாவின் கையி லேற்றவன், அந்தத் தாதாவி னோடு நிரயத்தின்கட் சென்று முன் செய்த பாவத்தை விசாரித்து வாடி யிருப்பான். எ-று. (௪௫)

மேற்புண்ணியத்தலங்களை யெடுத் தேழுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

கொடுக்குஞ் செய்கையர் தம்மையுங் கூறினம்
விடுக்குஞ் செய்கையர் தம்மையும் வெண்ணிற
விடைக்கும் பாகன் விமலன் விரும்பிய
விடத்தை யுமிசைப் பாமினி யாமரோ.

எ-து. தாதாக்கள் முறைமையையும் அப்படியல்லாதவர்முறைமை யையும்வகுத்துச்சொன்னோம். மேல் வெள்ளைநிறத்தையுடைய விடபத்தை ச்செலுத்துவோனுமாய் நின்மலனுமான சிவனே விரும்பி யெழுந்தருளியிரு க்கும் புண்ணியத்தலங்களையுந் தொகுத்து யாம் சொல்கின்றோம். எ-று.

விடைக்குப்பாக னென்பது விடைக்கும் பாகனெனல் மெலிக்கும் வழிமெலித்தல் பெற்றது. அரோ அசை. (௪௬)

தீர்த்த மார்சிவ காசி திகழ்குருக்
கேத்தி ரம்பிர யாகை கிளரலர்
பூத்த புட்கர ணைகி புனிதர்க
ளார்த்த கங்கை யலைகட லாதியும்.

எ - து. வெளி. (௪௭)

காப்பி லாநைமி சாரணி யங்கவின்
பருப்ப தம்வேத பர்ப்பதங் கோகன்னம்
அரத்த மேனி யரியா மம்பையும்
விருத்த வேதியர் வெண்ணெயும் பெண்ணையும்.

எ - து. வெளி. (௪௮)

ஒற்றி யூர்திரு வோத்தூர் விளைவய
லொற்றி யூர லுயர்புகழ் வான்மியூர்
வெற்றி யூர்திருப் பாசூர் விரிஞ்சையுங்
கற்று முற்றினர் காரி வனையுமே.

எ - து. வெளி. (௪௯)

கனக மார்முக விக்கனா காஞ்சிநல்
லனக ராமுது குன்றரு ணாசலம்
முனிவர் சேர்குட மூக்கிடை மாமரு
துனரு முத்தணு ரூர்புலி யூருமே.

எ - து. வெளி. (௫௰)

காழி மூவலை யாறுமெதன் கண்டியூர்
வீழி வேத வனந்திரு விற்குடி
வாழை மல்கு வலஞ்சுழி வாஞ்சியந்
தாழை நீடுவெண் காடுசாய்க் காடுமே.

எ - து. வெளி. (௫௧)

எழிலு மார்பாங் குன்றிரா மீச்சுரம்
பொழிலு மார்மது ராபுரி பூவணம்
அழகு மாருநெல் வேலியஞ் சைக்களங்
குழகன் புக்கொளி யூர்கொலிக் குன்றமே.

எ - து. வெளி. (௫௨)

கோத னங்கள் குவிந்த விடங்களு
மாத போதனர் வாழு மடங்களு
மீதில் வேட்கையர்க் கேய்விட மின்னுமுண்
டோது வாங்கால பேதமு மோர்கவே.

எ-து. இங்ஙனங் கூறிய புண்ணியத் தலங்களும், பசுக்கள் திரண்ட வெல்லைகளும் தபோதனர்க ளெழுந்தருளி யிருக்குந் திருமடங்களு மிது போன்ற தானஞ் செய்கிறதிலே விருப்பத்தை யுடையோர்க்குப் பலனதிகமாதற்குப் பொருந்திய தலங்க ளின்னமு முளவாம். முறைமையாலே யினிக் காலபேதங்களையுஞ் சொல்கின்றே மவைகளை யறிவாயாக. எ-று.

காலவிசிட்ட முணர்த்துகின்றார்.

அரவ மாதிந்தன் றன்னை யடர்ந்திட
விரவும் வேலையும் வெண்மதி தன்னையு
மிருமை யான வயனமு மீபவர்க்
குரிய வேலைகண் மற்றுமுண் டோர்கவே.

எ-து. வெளி—இருமையான வயனம், தைமாதப் பிறப்பு, ஆடிமாதப் பிறப்பு மற்றுமுண் டென்பதனால், சித்திரைவிசு, ஐப்பசிவிசு, அமாவாசை, பூரணை, திருவாதிரை, விதிபாதயோக முதலாயின வென்க. (௫௩)

ஆதரவின் விசிட்ட முணர்த்துகின்றார்.

உரைத்த னங்கால பேதமு மோர்கவுட்
சிரத்தை தன்னையுஞ் செப்புவஞ் சிந்தையுட்
பரித்த மெய்ம்மைப் பரமப் பிரீதியே
குருத்த பத்தியு மற்றதன் கூற்றரோ

எ-து. இங்ஙனங் காலவகைகளுஞ் சொன்னோம். மேலுள்ளத்தில் உண்டான வாதரவையும் அதன் பரியாயத்தையுஞ், சொல்கின்றோ மதனை யறிவாயாக. ஆதரவானது, தம்முள்ளத்தின்க ணுண்மையோடு கூடிய மேலாகிய மகிழ்ச்சி யெனவும், பெருத்த வன்பு எனவு மற்றுமுள்ள பரியாயப் பெயரினையும் பெறும். எ-று.

மற்றென்பது சுட்டி யதற்கின மென்பதனா லதற்கினமாகிய சிவதருமம் பாவமாதி யென்னு மூன்று மந்த வாதரவுக்குப் பரியாயப்பெயரொன் றறிக. அரோ — அசை. (௫௫)

மேன் முடிந்தது முடித்த லென்னுந் தந்திர
வுத்தியா லுணர்த்துகின்றார்.

சிறந்த தேசமுங் காலமுஞ் சிந்தையுட்
பிறந்த காதலும் பெற்றவர் நற்றவர்க்
கறைந்த நூல்விதி யர்ச்சனை யாக்குக
நிறைந்து வானென வேபல நீடுமே.

எ-து. உத்தமமாகிய காசி முதலிய தேசமுங், கிரகணங்கண் முதலிய புண்ணிய காலமும், உள்ளத்திற் பொருந்திய மகிழ்ச்சி முதலாகிய வாதரவும், அடையப் பெற்றவர் நல்ல தவத்தினை யுடைய சற்பாத்திரங்களுக்கு வேதாகமங்களிற் சொன்ன விதிப்படியே யர்ச்சனை செய்து தானஞ் செய்யக் கடவர். அங்ஙனமவர்களுக்குச் செய்த தானபலன்க ளாகாசம் போல விசாலமாய்ப் பெருகி யழியாம னிலைபெறும். எ-று. (௫௬)

கவிநிலைத்துறை.

என்று பயன் மேன்மைதரு காரண மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்ய வினைநைய
நின்றமுனி யன்றுரை நிர்க்குண னினைந்தே.

எ - து. வெளி. (௫௭)

சிவத்துதியுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வானவர் நாட்டரு மாதவனே மானவி ருட்டறு
மாதவனே

கானமர் வேடனு மானவனே கடிதென வேசெலு
மானவனே
யேனமு மானவ னெண்ணலனே யெம்முளத் தாக்கிடு
மெண்ணலனே
யூனமர் வெண்டலை யுண்டவனே யுத்தமர் நெஞ்சகத்
துண்டவனே.

எ-து. மாலயன்முதலாயுள்ள தேவர்கள் அறிதற்கரிய பெரிய தபோதனனே, ஆன்மாக்களுக் கியானெனதென்னு மபிமானமாகிய வந்தகாரத்தை யொழித்தற்குக் காரணமான ஞான சூரியனே, அருச்சுனனுக் கனுக்கிரகஞ் செய்தற் பொருட்டுக் காட்டி லுறையும் வேடுவனாய் வந்தவனே, விரைந்து செல்லு மிடபத்தை யுடையவனே, வராக ரூபியுமான திருமாலா லறியப் படாதவனே, யெம்முடைய வுள்ளத்தி லுண்டாக்கு முழுதுணர்வு முதலாகிய வெண்குணத்தையு முடையவனே, குற்றம் பொருந்திய பிரம கபாலத்திற் பிச்சையேற் றுண்டவனே, உத்தமரான சிவஞானிக ளுள்ளத்தி லனவரதமும் விளங்கா நின்றவனே. எ-று. (௩௮)

இதுவுமது.

புலிமுனி பூசை பரிந்தவனே புகழ்நட மன்று புரிந்தவனே
பலிதரு வார்க்கித பாடணனே பாங்கிலர் வாய்க்கித பாடணனே
பல்லறப் போதக வாரியனே பவிர்சடைத் தாங்கிய வாரியனே
மலைசிலை யாக்கிய வன்மையனே வந்து மரிப்பன வன்மையனே.

எ-து. வியாக்கிரபாத மகாமுனி செய்த பூசையை விரும்பினவனே, யாவரும் புகழ்கின்ற திருநடத்தை ஞானாகாசத்திற் செய்தவனே, தாருகா வனத்திற் பிச்சைகொண்டு வந்திடுமாதர்க் கின்சொலைச் சொல்லுவோனே, உரிமையில்லாத அபக்குவரிடத்திற் சாருவாக முதலிய கொடுஞ் சொல்லைச் சொல்லுவோனே, பக்குவான்மாக்களுக்குப் பிறவித் துன்பங்கள் கெட வேதாகமங்களைப் போதிக்கு ஞானாசாரியனே, யொளி விடுகின்ற சடா மகுடத்திற் றரித்த புனலை யுடையவனே, மகமேருவை வில்லாக்கிய வலியை யுடையவனே,ஆன்மாக்களைப்போ லுலகின்கட் பிறந்திறக்குந் தன்மை யில்லாதவனே. எ-று.

கிதபாடணம் என்பது தீயசொல், இதுவடமொழி. (௩௯)

குமரன்றுதி யுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

நினைவார்வினை நனிபோயறு நிலநீள்கதி ரவன்முற்
பனிபோவது மெனவேபசு பதியோதிய பனுவல்

புனிதான்வின வியகாணனி மொழிவாய்மையன் முனியா
தெனையாளுடை யறமாமுக னெழிலாரடி யிணையே.

எ-து. பசுபதியாகிய சிவனருளிச் செய்த வேதாகமங்களை யகத்திய முனிவன் வினவிய காலத்து மிகவும் விடை கூறுந் திருவாக்கினை யுடையவனும், அபராதியான வெள்ளைக் கோபியாமே அடிமையா யாண்டுகொண்டருளுந் தன்மையை யுடைய வழகியவாறு முகத்தினை யுடைய பிள்ளையார் அழகு நிறைந்த திருவடியிணையைத் தியானம் செய்கின்றவருடைய கன்மம், பூமியின்கணுயர்ந்த சூரியன் முன்பனிகெடுவதுபோல் மிகவு நீங்கிமீள வழுண்டாகாது, அழியும். எ-று. (௬௰)

அகத்தியன்றுதி யுணர்த்துகின்றார்.

விழைவாமிரு வினையாயின விடவுமிருள் கெடவும்
வழுவாகிய மலமாசுடன் மாவேர்வலி யறவு
உழையார்கர முடையான்மழு வுடையானடி யுறவும்
புழையார்கர மதமாமலி பொதிமாமுனி புகழே.

எ-து. உட்டுளைவாய்ந்த துதிக்கையையுடைய மதயானைகள் நிறைந்த பொதியமலையில் வசிக்கு மகத்திய முனிவனுடைய தோத்திரத்தை யிருவினைகள்விட்டு நீங்கவும் ஆணவவிருள் வலிகெடவும், ஈனமாகிய அழுக்குமிக்க வுடம்பாகிய விருட்சத்துக்கு வேராகிய மாயாசத்தி கெடவும் மானு மழுவுமேந்திய கைகளையுடைய சிவன் ஸ்ரீபாதங்களைப் பொருந்தவும் விரும்புவாம். எ-று புகழ் விழைவாமெனக்கூட்டுக. (௬௧)

நான்காவது
பலவிசிட்டகாரணவியலுரை
முற்றிற்று

உ

கடவுள் துணை.

# ஐந்தாவது

# சிவதருமவியல்.

மேலிவ்வோத்தென் னுதலிற்றோ வெனின் ஒத்து நுதலியதூஉ மோத்தினது
பெயருரைக்கவே விளங்கும். ஆயி னிவ்வோத்தென்ன பெயர்த்தோ
வெனின் புண்ணியத்துட் டலைமையாகிய சிவதருமவிய
லென்னும் பெயர்த்து. இதனு ளித்தலைச் செய்யு
ளென் னுதலிற்றோ வெனின் முன்
மொழிந்து கோடலை யுணர்த்துத
னுதலிற்று.

இனிமுனி வரனே யீச னியம்பிய தரும மெல்லாந்
துனிநனி தொலையச் சொல்வாந் துணிபிணி யுடலைத் தொட்டே
முனிவினை யின்றி நின்ற மூடரு மீடு கூடி
யெனையுடை யீச னூரும் புரந்தினி திருக்க வேய்ந்தே.

எ-து. முனிவரின்மிக்க வகத்தியனே யுள்ளத்தை யீர்க்கில்லாதா ருந், தவவலிமிக்கு என்னை யடிமையாகக் கொண்ட சிவனது சிவலோகத் திற்சென்று மகிழ்ச்சியோ டிருக்கும் வண்ணஞ் சிவனருளிச்செய்த சிவத ருமமெல்லாவற்றையு மிக வையந்திரிபற மேற்சொல்கின்றோம், அதனைக் கேட்பாயாக. எ-று. முனிவு-முயற்சி. ஈடு-வலி. (க)

முற்கூறிய சிவதரும நிலைநின் றுபகரிக்கு முறை
யுணர்த்துகின்றார்.

அற்புத னமலன் கூறு மறம்பல வயிமி சாதி
கற்பொடுங் கலந்து நானு பலந்தினைக் கருது வார்க்குந்
தற்பர னருளி னாலே தருவன வனந்த கால
நிற்பன தொன்று தொட்டே யன்பனை நீங்காப் பாங்கால்.

எ-து. கண்டவர்க்கு அதிசயம் விளைப்பானாய் நின்மலனாயிருக்கிற சிவனருளிச்செய்த வறங்கள் பலவுமுள, அவற்றுட் கொல்லாமை முதலிய சிவதருமங்கள் பத்தும், எல்லாத்தருமத்துக்கு மேலாகிச் செய்தவனைப்ப ற்றி நிற்குங் கற்பின் றன்மையொடும் பொருந்திச் சிவனருளினால் பலவ கையாகிய பலனை விரும்பினவர்க்கு விரும்பினவாறே கொடுக்கும். அதுவும ன்றித் தம்மையியற்று மன்பனை நீங்கா வுரிமையினால் பிரவாகானாதியாய்த் தொன்றுதொட் டெண்ணிறந்தகால மழகுபெற நிலைபெற்று நிற்பனவாம்.

அந்த அயிமிசாதியை வகுத்துணர்த்துகின்றார்.

அயிங்கிசை பொறையே மெய்மை யறைதலே யரிய நாணே
யுயர்ந்தவா தரவே யுள்ள மொடுக்கலே கொடுக்கை தானே
வியந்தவர்ச் சனையே மெய்யூன் வெறுத்துறு தவமே மேனி
நயந்தபா வனையே யென்னத் தசமிவை நன்றெந் நாளும்.

எ-து. கொல்லாமையும், பொறையும், மெய்மொழியும், பெறற்கரிய நாணமாகிய பழிபாவத்துக் கஞ்சுதலும், புண்ணியங்களில் மிகுந்த ஆதரவும், உள்ளமுதலியவற்றை யொடுக்கு மடக்கமுடைமையும், கொடையும், யாவரும் வியந்து சொல்லுஞ் சிவார்ச்சனையும், ஊனிறைந்த சரீரத்தை வெறுத்துச் செய்யுந் தவமும், சதாசிவாதி விக்கிரகங்களை விரும்பிய தியானமும் ஆகத்தருமங்கள் பத்தாம். இத்தருமங்கள் எக்காலமு நன்மையே தருவனவாம். எ-று. (௩)

முற்கூறியவற்றுள் - தமக்கியன்ற அளவு செய்தவரும்
அவை முழுதுஞ் செய்தவரும் பெறும்பய
னுணர்த்துகின்றார்.

இயன்றன வியற்றி னொருமனைத்தையு மியற்றி னோரும்
பயன்பல சிவலோ கத்திற் பற்றுவர் தத்தம் பாங்கா
னயந்தவர் போக மங்கு நண்ணுவர் திண்ண மண்ணைக்
கயந்தவர் போகங் காட்டுங் கடவுளை யடைவர் கண்டே.

எ-து. வெளி. (௪)

முதற் றொகுத்தவற்றைச் சிறப்பித் துணர்த்துகின்றார்.

இன்பமே யங்குத் தங்கி யிருப்பவர் தமக்கு மெள்ளுந்
துன்பமே தொடர்வ தில்லை துளங்கிளம் பிறையுஞ் சூடு
மின்பொலி சடையன் வேந்தன் விளைந்தநல் வினையாற் சேர்ந்த
வன்பர்க ளெல்வ ரல்லார் தம்பல மருந்து வாரே.

எ-து. அச் சிவலோகத்திலே போகத்தைப் புசித்திருப்பவர்க்கு மின்பமே யொழிய விகழுந் துன்பந் தொடர்வதில்லை. விளங்கும் இளம்பிறையணியுமின் பொலிந்த சடாமகுடத்தை யுடைய கருத்தாவைத் தாம் செய்த நல்வினையாலே யடைந்த முத்தர்கள் கிருத்திய கருத்தாக்களாகவே மாட்டார்கள். தமது சிற்சத்தி யின்பத்தையே திளைத்திருப்பார். எ-று.

பிறையுமென்ற வும்மை இறந்தது தழீஇயது. (௫)

சிவபூசைக்கு விசேடவிதி யுணர்த்துகின்றார்.

முனிவர தரும பேத மொழிந்தனம் பலமு முன்னி
யினிவர மில்லா தாருமியற்றிடும் பூசை யாவு

முனையுனா செய்வா ரோர்நீ யொளிர்சடை முடியி னூரும்
பனகமு மதியும் வைத்த பரனடி நினைந்து பாற்கசல்.

எ-து. முனிவரனே கொல்லாமை முதலிய கருமங்களும், அவற்றின் பலனுஞ் சொன்னோம்; மேற் சிறப்பில்லாதவருஞ் செய்யும் பூசையுங் காலமுந் தேவயோனி யட்டகத்திற் பெறும்பயனு மிவையெல்லா முனக்கு வரையறை செய்து சொல்கின்றோம்; அவற்றை நீ விளங்கும் சடாமகுடத்திலே யூருந்தொழில் செய்யும் பாம்பையு மிளம்பிறையையும் பகைதவிர்த்தணிந்த சிவனது சீபாதத்தை நினைந்தொருமைப் பாட்டினோடு மறிவாயாக. எ-று.

உனையென்னு மிரண்டனுருபு நான்கனுருபாக மயங்கிற்று. (க)

குற்றத்தொடு கூடி யொருநாண் முதலொன்பது நாள்
வரையும் சிவபூசை செய்தவ ரதற் குறி
த்தாகப் பெறும் பயனை யொன்பது
செய்யுளா லுணர்த்துகின்றார்.

அழுக்கினை யறுக்க வல்ல ரல்லரா யாகந் தன்னி
விழுக்குடை யவரு மீச னிணையடிக் கொருநா ளிட்ட
பழுப்பிலை பாங்கி னாலே பற்றிய பைசா சத்தை
யழுக்குமுன் விதத்தெ தயுண்டு களிப்புற வுறைவ ருன்னே.

எ-து. சரீரத்தின் அசுசியை நீராடன் முதலியவற்றாற் போக்கமாட்டாதவருமா யழுக்காடை யுடுப்பவருமாகிய மலினர்களும், ஒருநாள் சிவனது சீபாதங்களில் கொம்பினு முதிர்ந்த பழுப்பிலைகொண் டருச்சித்த நன்மையினால் பேயின் தன்மையை யடைந்தா சின மாமிசத்தைப் புசித்து தன்ன மகிழ்ச்சி மேலிடப் பைசாச புவனத்திலிருப்பார்கள். எ-று.

ஈண்டுக்கூறிய பைசாசம் புத்தி தத்துவத்திற் பைசாசயோனி யென்றறிக. உழுக்குமூன் கழியுமுனென்று கூறுவாருமுளர். உள் எ-து இடம்.

சினத்தினாற் சிவந்த கண்ணர் சிறப்புறு வினையுந் தீர்த்து
மனத்தினா லிரண்டு வார மலர்சிவ னடியின் வைக்கிற்
றனக்கிணை யில்லா தாரு மவர்தமைச் சாரச் செய்வன்
றுனைதமி தழு மரக்கர் தொக்க புரத்தினுட் டுளக்கந் தீரார்.

எ-து. கோபத்தினாற்சிவந்த விழியினையுடையவராகி விசிட்டமான நல்வினையையுஞ் செய்யாத மனத்தவர்கள் இரண்டுநாள் சிவனது சீபாதத்தில் மலர்களைக் கொண்டு பூசை செய்தாற் றனக்கு நிகரில்லாத சிவனும் அவர்களை விரைவில் ன்றேந்து சஞ்சரிக்கு மிராக்கதர் திரண்டிருக்கு முலகத்திலிருக்கும்படி வைப்பான். அவாக ளொரன்றுக்குபயமுமில்லார்கள். எ-று.

கயக்கவே தக்க வூனுங் கலந்தனுங் கடியர் தாமும்
வியக்கவே தக்க வீசன் விரைமல ரடியின் மீது
பயக்கவே பலமு மூன்று பகலருச் சனையைப் பண்ணி
வியக்கர்த முலகந் தன்னி லிருந்தவ னவரை யெல்லாம்.

எ-து. வெறுக்கத்தக்க புலாலையு மடிசிலோடு கூட்டி நுகருந் தீயவர்களுங், கண்டவரா லதிசயிக்கத்தக்க சிவனது நறுநாற்றத்தை யுடைய தாமரைமலர்போன்ற சீபாதத்தின்கண் மேன்மைதரும்படி மாங்கனி முதலிய கனிகளைக்கொண்டு மூன்றுநாள் பூசைசெய்யி னச்சிவ னவர்களையெல்லா மியக்கருலகத்தின்க ணிருக்கும்படி செய்வான். எ-று.

உம்மை யிழிவின்கண் வந்தது, ஏகாரங்கள்-அசைநிலை. (௯)

காயங் கற்று ரல்லர் பாதமுங் களிப்புக்கூத்
தாமரன் முன்னே நின்று தட்டமு மிட்டுக் கையாற்
பாமர பறியா ரேனும் பாட்டொரு நான்கு பாடி
னேமமு மிசைய வாழ்வர் காந்திரு வத்தை யெய்ந்தே.

எ-து. கானவித்தையும், பரதநூல் விதிப்படி செய்யுங் கூத்துமப யின்றறியாதவர்களும், நான்குநாள் பூசைசெய்து சிவசந்நிதியில் நின்று உள்ளக்களிப்பு மிகக் கூத்துமாடி கையாற்கொட்டுதலுஞ்செய்து கீதத்தையும் பாடி வணங்கினால், அவர்கள் காந்திருவலோகத்தை யடைந்து இன்பமுண்டாக வாழ்வார்கள். எ-று.

நாள் - நான்கென்றது - எண்ணதிகாரப்பட்டமையால் வருவித்தது எனக.

(ய)

இவர்சிவ பூசை பண்ணு மியல்பின ரென்று தம்மைப்
புவிதலம் புகழ வேண்டிப் பூசனை புரிந் தார் தாமும்
அவனரு ளடியி லஞ்சு தினமலர் வரி னாலுந்
திவிதலை போக பேதந் திளைப்பரிந் திரனைச் சேர்ந்தே.

எ-து. இவர் சிவபூசைசெய்யும் பெருமையை யுடையவரென்று தம்மைப் பூதலத்திலுள்ளவர் கொண்டாடும்படி அச்சிவனது சீபாதங்களில் அஞ்சுநாள் மலர் முதலியவற்றால் பூசைசெய்தவர்களும், அயிந்திரபுவனத்தைச்சேர்ந்து சுவர்க்கத்திலுள்ள போகவகைகளைத் துய்ப்பார்கள். எ-று.

உம்மை யிழியுசிறப்பு. திவி-சுவர்க்கலோகம். அயிந்திரம்-இந்திர சம்பந்தம்.

(யக)

அரிவையர் போகந் தன்னி லாதர வுடைய ராகிப்
பரமனைப் பரிவாற் பூசை யறுதினம் பண்ணி னாரும்
விரவிய சோம லோகம் வேண்டிய படியே தாங்கண்
முருகவிழ் குழலார் தம்மை யின்புற முயங்கு வாரே.

எ-து. மடவாரோடு கூடி யநுபவிக்கும் போகத்தி லாசையுடைய வராய் மேலானசிவனை யாறுநாள் அன்பினோடு பூசைசெய்தவர்களுஞ், சோம சம்பந்தமான சௌமியபுவனத்தையடைந்துதாங்கள் விரும்பியபடியே மண ம்விரிந்த அளகத்தையுடைய மடவாரை யின்பமுறும்படி கூடியாண் டநு பவித்திருப்பார்கள். எ-று. (௰௨)

விழைவின ராகிப் போக விதந்தனில் விமலன் றன்னை
யெழுதின மருச்சித் தாரு மிருப்பர்கள் விருப்பமெய்தி
வழுவறு போக பேத மருவிட வொருவ வின்றி
பிழையறு பிரசை வேந்தன் பெரும்பதி யதனைப் பெற்றே.

எ-து. பலவகையான போகங்களில் விருப்பத்தை யுடையவராய் அநாதிமலமுத்தனை சிவனை யேழுநாள் பூசைபண்ணினவர்களுங் குற்ற மற்ற பிராசேசுரமென்னும் பெரியபுவனத் தடைந்து நல்ல போகவகைகளு ண்டாக விருப்பத்தோடு பொருந்தியதனை நீங்கா திருப்பார்கள். எ-று. பிரா சேசுரம்-பிரசாபதியுலகு. (௰௩)

திருந்திய வேத காயத் திரியினாற் றினமோ ரெட்டும்
அரன்பத மருச்சித் தாரு மலரினு லார்வங் கூரப்
பொருந்தியே பிரம லோகம் போகமே தங்க ளெல்லாம்
அருந்தியே யிருப்பர் தங்க ளாசையு மகல வாங்கே.

எ-று. வேதகாயத்திரியினால் சிவனது பாதங்களை யெட்டுநாள ருச்சித்தவர்களும் ஆசைபெருகப் பிராமியபுவனத்தை யடைந்து ஆங்கு ள்ள போகவகைகளெல்லாந் தங்களிடத்துண்டாகிய வாசைதீரப் புசித்திரு ப்பார்கள். எ-று.

ஏகாரங்கள் அசைநிலை. பிராமியம்-பிரமலோகம். இவ்வெட்டும் புத் திதத்துவத்திற் புண்ணியாட்டகமென் றுணர்க. (௰௪)

ஒருவனே மூவரொன் றுமொன்பது தினமு மன்பாற்
பரமனை யருச்சித் தாரும் பாம்பணைப் பள்ளி வள்ளல்
புரமது பொருந்தி வாழ்வர் போகமே தங்கள் பொங்க
வரியன யாவு மில்லை யவர்தமக் கமல னாலே.

எ-து. பிரம விஷ்ணுக்களைப் பசுவர்க்கமென்று கொள்ளாமற் பதி யாகிய சிவனோடு கூட்டி மும்மூர்த்திகளையு மொரு கடவுளென்று சமபுத்தி பண்ணி மேலாகிய சிவனை யுள்ளன்பினு லொன்பதுநா ளருச்சனை செய்வா ர்களானால் அவர்கள் நின்மலனாகிய சிவனருளினா லாவணையிலே துயிலுந் திருமாலினுடைய குணதத்துவத்தில் வைகுண்ட புவனத்தை யடைந் தாங் குள்ள போகவகைகள் பெருக அவைகளை நுகர்ந்து வாழ்வார்கள், அவ்விடத் தவர்களுக்குப் பெறற்கரிய பொருள்க ளொன்றுமே யில்லை. எ-று.

இச்செய்யு ளனவும் குற்றத்தோடு கூடிச் செய்தவர்கள் பூசையின் பயனுணர்த்தியவாறு கண்டுகொள்க. (௫௫)

மேற் குற்றமறப் பூசை செய்தவர்க்கே சிவலோக
மெய்துமென்ப துணர்த்துகின்றார்.

செப்பிய விதற்கு மீது சிவபுர மதனைச் சேர்வர்
ஒப்பிலா வொருவன் றன்னை யொருமையி னுணர்ச்சி கூடத்
தப்பறப் புரிந்த பூசைத் தவோதனர் தாமு மாங்கண்
ஒப்பய னரிய தாக வியம்புவ தெளிய தேதும்.

எ-து. இங்ஙனங் கூறிய வைகுண்ட புவனத்துக்கு மேல் சிவபுரம் விளங்கா நிற்கும், அச் சிவலோகத்தைச் சிவனே கடவுளென் றொருமைப் பாடு பொருந்திய வறிவு மேலிட்டுத் தனக்கு நிகரில்லாத சிவனை நாளுதிக மற வருச்சனை செய்யுந் தவத்தை யுடையவர்களே யடைவார்கள், அவர்களு க்கவ்விடத்தி லெந்தப் போகந்தான் பெறற்கரியதாகச் சொல்வோ மாகையா லெல்லாப்போகமு மெளிதாகவே வரும். எ-று. (௫௬)

அச் சிவலோகத்தின் சிறப் புணர்த்துகின்றார்.

தினகா ருதய கோடித் தேசெனத் திகழ்ந்த தோர்கள்
இணையிலன் றனக்கு மெண்ணே யிகழ்ந்தெழி லிசைய நிற்கும்
மனநினை வதனில் வேண்டு மகிழ்ச்சியும் வாய்க்கச் செய்யுந்
தனைநிக ரில்லி தங்கும் புரிவளஞ் சாற்ற லாமே.

எ-து. கோடி சூரிய ருதயஞ் செய்தாற் போலப் பிரகாசிக்கின்ற விமானங்க ளிங்வளவென் றளவிடு மளவைக் கடங் கழகு பொருந்த வெங் குநெருங்கி நிற்குஞ் சிவபுரமானது அவ்விடத் திருப்பவர்கள் மனநினைவில் விரும்பிய சுகபோகங்களையும் வாய்க்கும் வண்ண முண்டாக்கு மாகையினால் தனக்கு நிகரில்லாத சிவனெழுந்தருளியிருக்குஞ் சிவபுரத்தின் வளப்பத்தை யொருவராலு மளவிட்டுச் சொல்லப்படாது. எ-று. ஏகாரம்-எதிர்மறை. ( )

சிவனெழுந்தருளி யிருக்குந் திருப்பதியில் உடல் நீங்கிய வான்மவர்க்கங்கள்
சிவலோக மடையு மென்றாற் சிவனையன்போடு கூடிப்
பூசைசெய்தவர்கள் சிவலோகமடைவது
சொல்லவேண்டாமே யென்ப
துணர்த்துகின்றார்.

தெரிப்பருந் தேவ தேவன் றிருப்பதி வட்டந் தன்னின்
மரித்திடுஞ் சாச ரங்கள் சிவபுர மதனுள் வாழு
மருச்சனை புரிந்த மற்றை யன்பர்க ளடைந்து வாழ்கை
தெரித்திட வேண்டு மேயோ தெருண்டகற் சிந்தை யார்க்கே.

எ-து. வெளி. வேண்டுமேயோ என்புழி ஏ-தேற்றம், ஓ-வினா.

கண்டு பாவித்துப் பூசை செய்தவர்கள் பெறும்பய
னுணர்த்துகின்றார்.

உண்டொரொண் பொருளென் றுள்ளத் தோர்கிலார் அாமு மோர்ந்த
பண்டிதர் பணியக் கண்டு பணிந்திடிற் பரம லென்னிற்
றண்டார ளங்கள் போலுந் தாரகா தேசந் தன்னில்
எண்டிகழ் நாலேழ் கோடி யிரதமே தந்து ளேய்வார்.

எ-து. சடசித்துக்க ளொல்லாவற்றினையு மியக்கு மொரு ஒள்ளிய கடவுளுண்டென்று தம்முள்ளத்தின்க ணறியாத மூடர்களும், அப்பொருளை யுண்டென்றுணர்ந்த ஞாதாக்கள்வணக்கங்கண்டு தாமும் வணங்கினும், பரம வென்று துதிப்பினும் அவர்கள் குளிர்ச்சியையுடைய முத்துக்கள்போலு மொளி யமைந்த நக்ஷத்திர பதத்தில் மதிக்கத்தக்க இருபத்தெட்டுக்கோடி விமானங்கள் சூழ அதனுடே பொருந்தி வாழ்வார்கள். எ-று. (௰௯)

சிவதருமங்களைத் தமக்கியன்றவளவுசெய்தவர்கள்
பெறும்பய னுணர்த்துகின்றார்.

இயன்றன வியற்றி நூரு மற்றைய புரத்தி லேய்ந்து
பயன்றனைப் பயின்று மீண்டு பாரிடைப் பிறந்து பாங்கான்
முயன்றருந் தவத்தை மூவா முதல்வனை யகத்துண் முன்னி
யயன்றனைப் பயந்த வாதி யான்புரி யடை வரன்றே.

எ-று. தமக்கியன்ற அளவு சிவதருமங்களைச் செய்தவர்களும், வைகுண்ட முதலிய கீழுள்ள பதங்களிற் போகத்தைக் கிரமமாகப் பொருந்தி யங்கங்குள்ளது புசித்துத்தொலைந்தவாறே மீண்டும் பூமியில் வந்து பிறந்து முதிராமலென்று மொருதன்மையா யிருக்குஞ் சிவனை யுள்ளத்திலே கருதிச் செய்தற்கரிய தவத்தை யொருமைப் பாடுடன் செய்து பின்பு நான்முகனைப் படைத்த முதல்வனாகிய சிவனது சிவலோகத்தை யடைவார்கள் எ-று.

இங்ஙனங் கூறிய சிவலோகத்தின் மேலு மூன்று புவன
முண்டென்று தொகுத் துணர்த்துகின்றார்.

உமைத்தவிப் புரத்தின் மீதும் புரமொரு மூன்றுண் டோர்க
தூரித்தவேற் குமான் றங்குந் தானமொன் றதற்கு மீது
பரித்தபைங் கிள்ளைச் செங்கைப் பாவைதன் பதியொன் றப்பாற்
றெரிப்பருந் தேசா ரீசன் சிவபுரஞ் செப்பா மொப்பே.

எ-து. முற்கூறிய விச்சிவலோகத்தின் மேலு மூன்று லோகமுண்டு. அவைகளை யறிவராக. அவையாவையெனிற் கையில் வேலை யேந்தும் குமாரக்கடவு ளெழுந்தருளி யிருக்கும் புவனமொன்று; அதற்குமேல் பச்சைக்கிளியைச் சிவந்தகையிற் பிடித்த உமாதேவி புவனமொன்று; அதற்குமே

ளவிறந்த பிரகாசத்தோடு கூடி யிருக்குஞ் சிவனது மகா சிவலோகமொன்று. அதற்கொப்பொன்றுமே யில்லாமையால் வேறொன்றை யொப்புச் சொல்லோம். எ-று. (௨௧)

அவற்றுண் முற்கூறிய கந்தபுவனஞ் சத்திபுவன மிரண்டினையு மடைபவர்க ளின்னவரென விரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

சத்தியைத் திரிசூ லத்தைத் தரித்தபொற் கரத்தி னானை
வித்தகன் றன்னைப் பொன்னை யொத்தொளிர் மேனி யானை
முத்தனை முளைத்த வாறு முகத்தனை முதல்வன் றன்னை
மொய்த்தகண் மயிலின் மேலே முருகனை முன்னு வாரே

எ-து. வெளி. (௨௨)

இருப்பர்கள் குமரன் வாழு மெல்லையி லெல்லை யில்லா
விருப்புறப் போக பேத மேவிட விதற்கு மீதே
யிருப்பர்க ளுமையைத் தங்கள் கருத்தினு ளிருத்தி னார்கள்
பொருப்பெழு மருக்கர் கோடி நிறமெனப் புந்தி செய்தே.

எ-து. முற்கூறிய சிறப்பினையுடைய குமாரக்கடவுளைத் தியானஞ் செய்பவர்கள் அக்குமரன் வாழும் புவனத்திலே சென்று தாங்கள் விரும்பிய படியே யளவிறந்த போகங்க ளெல்லாம் அனுபவித் திருப்பார்கள். உமாமகேசுவரியை யுதயகிரியி னுதிக்குங் கோடி சூரியப் பிரகாசம்போலத் தியானஞ்செய்து தம்முள்ளத்தில் வைத்தவர்கள் அக் கந்தலோகத்துக்கு மேலான உமாபுவனத்தி லிருந்து வாழ்வார்கள். எ-து. (௨௩)

மேனிறுத்த முறையானே மகா சிவலோகத்தின்கணுறைபவர்க ளின்னவரென வுணர்த்துகின்றார்.

தெளிபளிங் கனைய மேனி திரிநய னங்கைத் தங்கு
மொளிவளர் சூல மாலை யுதாரகை யபய வங்கை
நளிசடை யுடைய நாத னடியிணை யகத்து ணச்சி
யுளினரு மவனை யொப்பச் சிவபுரத் துறைவ ருய்ந்தே.

எ-து. அழுக்கற்று நின்மலமான படிகம்போன்ற திருமேனியையு மூன்று கண்களையு மொளி வளரும் சூலமுஞ் சபமாலையும் பொருந்து மேற் கைகளிரண்டினையும், வரதமும் அபயமும் பொருந்திய கீழ் கைகளிரண்டினையும், பெருமித மமைந்த சடாமகுடத்தினையு முடைய சிவனது சிபாதங்களை யுள்ளத்தில் விரும்பித் தியானிப்பவர்களு மச்சிவனுக்கு நிகராகச் சாரூபம் பெற்று மகிழ்ச்சி யடைந்து மகா சிவலோகத்தி லிருப்பார்கள். உளினரு மென்ற வும்மையால் வணங்குவோர்களு மென்பதூஉங் கொள்க. (௨௪)

மகா சிவலோகத்தை யடைந்தவர்கள் மீண்டு மிப்புவியில்.
இனிப் பிறவா முத்தியை யடைவாரென்
றுணர்த்துகின்றார்.

மேலைய சிவலோ கத்துள் விரவின ரொருமை மேவி
ஞாலமு மடையார் ஞால விறுதியை நாச மாக்குங்
காலமு மணைய வுள்ளக் கறுப்பினை யறுத்தாக் காட்டு
‡ மூலபண்டாரந்தன்னை முகந்துகந் திருப்பர் முத்தர்.

எ-து. மேலாகிய விச்சிவலோகத்தினை அடைந்தவர்க ளவ்விடத்திலேதானே ஞானயோகத்தி லொருமைப்பாட்டைப் பெற்று மீண்டுமிப்புவியிலினிப் பிறவாதவராய்ச் சிவாதிபிருதிவியந்தமாகிய எல்லாவற்றினையு நசிப்பிக்குஞ் சங்காரகாலம் வரும்பொழுது தம்முள்ளத்திற் கரியவிருளான வாணவமுதலிய பாசங்களையொழித்துச் சிவனுலேகாண்பிக்கு மூலபண்டாரமாகிய ஞானானந்த சுவானுபவத்தைப் பொருந்தித் தலைமைபெற்று முத்தரா யிருப்பார்கள். எ-று.

சிவாதி பிருதிவி யந்தமாகிய எல்லாவற்றினையு மென்றது, பூதம்-௫. புலன்-௫. ஞானேந்திரியம்-௫. கருமேந்திரியம்-௫. அந்தக்கரணம்-௪. ஆக ஆத்துமதத்துவம் ௨௰௪. காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை ஆக வித்தியாதத்துவம்-௭. சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆகச் சிவதத்துவம் ௫. என்பனவற்றை யென்க.

மூலபண்டாரமாகிய ஞானானந்த சுவானுபவ மென்றது‡ 'மூலபண்டாரம்வழங்குகின்றான் வந்துமுந்துமினே' என்று ஆளுடையவடிக ளருளிச்செய்ததனானு முணர்க. (௨௫)

மேன்மாட் டெறிந்தொழுகவென்னுந் தந்திர வுத்தியாற் பைசாச
முதலாயினோர்க்குச் சித்தி பேதங்களை
யுணர்த்துகின்றார்.

அந்திய வியலி னுக்கு மயலய லியலின் யோக
பந்தியைப் பகர்வா மெட்டுச் சித்தியும் பரிவு கூர
விந்தநல் லியலி னுள்ளு மெட்டெனப் பட்ட சித்தி
முந்தியே பைசா சாதிக் குறுமுறை மொழிவா மோர்ந்தே.

எ-து. ஈற்றினின்ற கோபுர வியலுக்கு மதற்கயலாகிய புரிகாரவியலுக்கு மயலான சிவஞானயோக வியலிலே யட்டாங்கயோக வொழுங்கி

‡ திருவாசகம் திருப்பாண்டிப்பதிகம்.
காலமுண்டாகவேகாதல்செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர் நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன் னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்து முந்துமினே.

லையு மதனேனுண்டாகு மட்டமா சித்தியிலேயும் விரும்ப விரும்படி சொல்லுவோம். அஃதன்றி கன்மையமைத்தவிச் சிவதருமவிதனுள்ளும் பைசாசமுதலிய புவனங்களி லுள்ளோர்க் கெட்டுச் சித்திகளு மேதிமேதி யுருமுறையை யாராய்ந்து சொல்கின்றோம். எ-று. (௨௬)

பைசா சாதிகளுக்குச் சித்திகள் குணங்களேறிக் குறைந்து இருக்கு முறைமை கூறுஞ் செய்யுளா லுணர்த்துகின்றார்.

கட்டெனப் பட்ட சித்தி யிரைக்கிடும் பைசா சாதி
யிட்டர்கள் சேரு மெல்லை சிவபுர மீறாகி தன்னி
லொட்டிய குணமு மேன்மே லுயர்ந்துயர் தொழுகு மோரின்
விட்டொளிர் குணத்தின் மேன்மை விளங்கிட விளம்புவாமே.

எ-து. புத்தி தத்துவத்திற் பொருந்திய தேவயோனிகளாகிய பைசாச முதலிய புவனத்தை யெய்தி யுயர்ந்தவர்கள் சேரு மெலாகிய சிவலோக மீறாகிய பதங்களி லெட்டுச் சித்தியு மதனோடு கூடிய குணங்களு மொருபுவனத்தி லிருப்பவனைப் பற்ற வொருபுவனத்தி லிருப்பவர்க்கு மேன்மேலு மதிகமதிகமா யுண்டாகும். அஃதெங்ஙனமெனில், பைசாசபுவனத்தி லிருப்பவர்க் கெண்குணமு, மிராக்கத புவனத்திருப்பவர்க்குப் பதினாறு குணமும், இயக்கபுவனத்திருப்பவர்க் கிருபத்திநான்கு குணமும், கந்தருவ புவனத்தி லிருப்பவர்க்கு முப்பத்திரண்டு குணமும், இந்திர புவனத்தி லிருப்பவர்க்கு நாற்பது குணமும், சௌமிய புவனத்தி லிருப்பவர்க்கு நாற்பத்தெட்டுக் குணமும், பிராசேசுர புவனத்தி லிருப்பவர்க்கு ஐம்பத்தாறு குணமும், பிரமிய புவனத்தி லிருப்பவர்க்கு அறுபத்துநான்கு குணமும், அவ்வாறு சிவலோக மீறாகிய பதங்களி லிருப்பவர்க்கு மேதி மேதி வரும், அதனை விளங்கவாராயின் விட்டு விளங்குகின்ற குணத்தின் விசிட்டத்தை மேற்சொல்கின்றோம். எ-று. (௨௭)

திருமான் முதலாயினவர்கட்குக் குணங்களேறிக் குறைந்து இருக்கு முறை புணர்த்துகின்றார்.

மண்புன லனல்கால் வான மனமகங் காரம் புத்தி
பொன்குண மூல மென்னு மொன்பதும் விசேடித் தோங்கிக்
கண்கம லத்த மலைக் கலந்துனே விளக்கு மொட்டே
வண்கம லக்கோ னுள்ளே மருவியே விளக்கு மன்றே.

எ-து. பிருதிவி முதலிய வைந்து மனமகங்காரம் புத்தியு மொன்றிய குணத்துக் குபாதானமாகிய பிரகிருதியு மெனக் கூறப்படுமிவ் வொன்பது தத்துவங்களுஞ் செந்தாமரைக் கண்ணையுடைய நாராயணனை யெய்தி புவனிதயத்தினுள்ளே மிகவுஞ் செறிந்து நின் றதனை விளக்கி நிற்கும்.

குணநீங்கலாகி நின்ற வெட்டுத் தத்துவங்களே யழகிய தாமரை மலரி லிருப்பவனாகிய நான்முகனுடைய விதயத்தி லெய்தி நின்றறிவை விள க்கும். எ-று. (௨௮)

புந்தியை யல்லா வெல்லாம் பொருந்திய பிரச வேந்தன்
சிந்தையைத் தெருட்டு மிந்தத் திறத்தினிற் கீழுந் தேர்க
முந்தியே யிருந்தார் பேற்றை முற்றிய வினையி னாலே
பிந்தியே செறிந்தார் தாமு மகிழ்வுறப் பெறுவ ரன்றே.

எ-து. புத்தி தத்துவ மல்லாமல் கீழ் நின்ற வேழுந் தம்மைப் புணர்ந்த பிராசேசனது சித்தத்தை யெய்தி நின் றறிவை விளக்கும், இப்படியே கீழுள்ளபுவனத்தவர்களுக்கு மடைவிலொவ்வொரு தத்துவங்குன்றாது நின் றறிவை விளக்குமென் றுராயக் கடவை ; இப்பதங்களில் முற்காலத்திலே சென்றிருப்பவர்கள் பெறும் பயன்களைப் பூமியிற் செய்த நல்வினையினால் பின்பு சென்றடைபவர்களு முள்ள மகிழ் வுண்டாகப் பெறுவார்கள். எ-று.

சிவனைக் குறித்துச் செய்தது பழுது போகாது பலத்தை
விளக்கு மென்றும், பலத்தைக் கொடுப்பவன்
சிவனே யென்று முவமைமுகத்தா
லுணர்த்துகின்றார்.

தரையினை யிலக்க தாக வெறிந்தகற் றவறு தற்றே
யானையுங் குறித்துச் செய்த வினைபழு தாகா தற்றே
பரமனுஞ் செய்தார் செய்திப் பலத்தினைக் கொடுப்பன் பாங்காற்
குருலகு வென்னும் பேதம் வினைதொறுங் குறித்துக் கொண்டே.

எ-து. வெளி. இதனுள் குரு லகு என்பன அதிகம் அற்பம் எனக் குறிக்கநின்ற வடசொற்கள். (௩௰)

மேன்முடிந்தது முடித்த லென்னுந் தந்திர வுத்
தியா லுணர்த்துகின்றார்.

வேறு.

என்றுதரு மத்தொடு பலத்திற மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை யைந்ய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-து. வெளி. (௩௧)

மேற் சிவத்துதி யுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உற்றவர் தீவினை யோட்டினனே யுண்பலி தேர்தலை
யோட்டினனே

யெற்று புனற்சடை யேற்றினனே யிடைக் கொல்லைவெள்
ளேற்றினனே
கற்றவ ருக்கறங் காட்டினனே கடுகட மாடிடு
காட்டினனே
பற்றின வர்க்கருள் பாட்டினனே பாங்கில வென்னையும்
பாட்டினனே.

எ-து. தன்னை யடைந்தவர்களுடைய கொடிய பாவங்களைத் தொடர்பறக் கெடுத்தவனே, தலையோட்டில் உண்ணுதற்குரிய பிச்சையை யங்கங்கேசென்று தேடுகின்றவனே, அலையெறிகின்றகங்கையாற்றை அழகியசடையின்க ணேற்றி முடித்தவனே, முல்லை நிலத்தின்கணுள்ள வலியினையுடைய வெண்மையாகிய விடபத்தையுடையவனே, ஈன்பாற் கற்றவராகிய சனகர் முதலானவர்கட் கறமுதலிய நான்கினையு மறிவித்தவனே, சங்கார நிருத்தத்தைச் செய்யுஞ் சுடலையை யுடையவனே, எப்பொருளையுந் துறந்து தன்னைப் பற்றி நிற்பவர்கட்கு முத்தியையருளும் பெருமையை யுடையவனே, பாடுதற் குரியவனல்லாத என்னையும் பாடுவித்து அப்பாட்டினைக் கொண்டருளினவனே. எ-று. (௯௨)

இதுவுமது.

கழலென நாகமுங் கட்டினனே கண்ணின் விழித்தடுங்
கட்டினனே
மழலைநல் வீணையின் வாசகனே மயலெனக் கற்றிடும்
வாசகனே
தழைமயிற் சாயலோர் பாலினனே சாலத் தழைத்தகொம்
பாலினனே
மிழலையு மூரென மேவினனே வெம்புர மெய்தடு
மேவினனே.

எ-து. சிபாதங்களிலே வீரக்கழல் போலப் பாம்பினையு மணிந்தவனே, பக்குவான்மாக்களைத் திருக்கடைக் கண்ணு ணோக்கியவர்கள் பாசத்தைச் சேதிப்பவனே, தெளியாத சொல்லையுடைய நல்ல வீணையினொலியை யுடையவனே, எனக்கு மனமயக்க மறுத்தற்குக்காரணமா யிருக்கின்றசிவாகம வாக்கியங்களை யுடையவனே, தோகை மயில் போலுஞ் சாயலை யுடைய வுமாதேவியை யொருபாகத்தி லுடையவனே, மிகவுந் தழைத்த கொம்புகளையுடைய கல்லாலின்னிழலை யுடையவனே, திருவீழி மிழலையையுந் திருப்பதியாக வுடையவனே, கொடிய முப்புரத்தினை யெய்து நீறுக்கு மம்பினையுடையவனே. எ-று. (௯௩)

மேற் குமரன்றுதி யுணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வாடா வனமுலை தோடார் சுரிகுழல் வாளார் விழியிணை யுமைபாக
னூடா வயனரி தேடா வடிமுடி யோரா தயர்வுற வருளீசன்
காடே யிடமென நாடா நடநவில் காதார் குழையின னடிசேர்தற்
கீடா ரிருவினை கூடா வகைதரு மோரா றறுமுக னியனூலே.

எ-து. அழகமைந்த பிள்ளையா ரருளிச் செய்த விந்நூல், தளராத வழகை யுடைய முலையினையும், பூக்கணிறைந்த சுருண்ட வளகத்தினையும், வாள்போன்ற இரண்டு விழியினையு முடைய வுமாதேவியை இடப்பாகத்திலே யுடையவனும் அயனு மரியுந் தம்மில் மாறுபட் டடியு முடியுந் தேடிக்காணமாட்டாது மயங்கி நிற்க அவர்கட் கனுக்கிரகஞ் செய்யு மிறைவனுஞ் சங்கார காலத்திற் சுடுகாடே யிடமாகக் கருதித் திருநடனஞ் செய்யுங் காதின்க ணணிந்த சங்கக் குழையை யுடையவனுமாகிய சிவனுடைய சீபாதங்களையாமடைவதற்கு,வலியமைந்த இருவினைகளு மேறாத வண்ணம் ஞானத்தைத் தரும். எ-று. (௩௪)

அகத்தியன் றுதி யுணர்த்துகின்றார்.

கயலா ரிணைவிழி யிழையா ரிணைமுலை கலவா வவரொடு
களியாரோ
யயலா ரவரிவ ரயலா ரவரொனு மறியா மையுநனி
யறுவாரோ
வியலார் கயிலைநன் மலைவாழ் விமலன விரையார் மலரடி
விழைவாரோ
புயலார் வளமுறு பொதிமா மலைமுனி புகழே விழைவொடு
புகல்வாரோ.

எ-து. எந்நாளு மேகங்க ணிறைந்த வளமை யமைந்த பொதிய மலையிலே வாழும் அகத்திய முனிவனது கீர்த்தியை யாசையினாலே துதிப்பவர்கள்,கயல்போன்ற இரண்டுகண்ணினையுடைய மடவார்கள் முலையிணைகளைப் புணர்ந்தவர்களோடு மனமகிழார்கள், அஃதன்றி யவர்கள் நமக் கன்னியரிவர் நமக்கன்னியர்களல்லவென்று கருதுமஞ்ஞானத்தை மிகவுமொழிப்பார்கள். அஃதன்றியும் விசாலம் அமைந்த நல்ல கயிலை மலையில் வாழு நின்மலனாகிய சிவனது மணம் பொருந்திய சீபாத மலரையும் விரும்புந் தன்மை யுடைவர்களாவார்கள். எ-று.

விழைவொடு புகல்வா ரென்பதனை யெழுவாயாக்கி யேனைய மூன்றினையும் பயனிலையாகக் கொள்க. ஏகாரங்கள் அசைநிலை. (௩௫)

ஐந்தாவது

சிவதருமவியல் முற்றிற்று.

ஆறாவது

# பாவவியல்.

மேலிவ்வோத்தென் னுதலிற்றோ வெனின் ஒத்து நுதலியதூஉ
மோத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயி னிவ்
வோத்தென்ன பெயர்த்தோ வெனி னிரய
மெய்துகின்றவர்க ளியற்றும் பாவ
வகைகளைக் கூறிற்
றாகலாற் பாவவிய லென்னும் பெயர்த்து. இதனுளித்தலைச்
செய்யுளென் னுதலிற்றோவெனி னின்னதுரைப்பா
மென முன்மொழிந்து கோடலை
உணர்த்துத னுதலிற்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முனிவா தரும பேத மொழிந்தனம் பலங்கண் முற்று
முனிநிர யத்தை யெய்வா ரியற்றிடும் பாவ பேத
முனையுரை செய்வா மோர்நீ யுடலிரு வாயி னுருக்
துனிவினைத் துரிசு நீங்கக் கேட்டிடுஞ் சூழ்ச்சி யார்க்கும்.

எ-து. இருடிகளின் மிக்கவனாகிய அகத்தியனே, முன்னையியலுட் சிவதரும வகைகளையு மவற்றினா லுண்டாகும் பலன்களையு மெல்லாஞ் சொன்னோம். மேலிந்த வியலினையும் யூகித்துக் கேட்குங் கருத்தினை யுடையவர்களுக்கு, மனம் வாக்குக் காயங்களினா லுண்டாகும் பொல்லாத தீவினைத்துயர நீங்கும் வண்ண நரக மெய்துகிறவர்கள் செய்யும் பாவ வகைகளை யுனக்குச் சொல்லுகின்றோம், அதனை நீ கேட்பாயாக. எ-று.

உன்னையென்னு மிரண்ட னுருபு நான்க னுருபாய் மயங்கிநின்றது.

பாவஞ் செய்பவர்க ளின்னவரென்பதூஉ மப்பாவ வகையித்
துணைத்தென்பதூஉ முணர்த்துகின்றார்.

புரிந்துளார் பாவ முன்னும் புக்குமா நிரய மீண்டு
மிருந்தவா தனையி னாலே யியற்றுவர் பாவம் பின்னும்
விரிந்திடு மனேக கோடி விதமுறப் பாவ மெல்லாந்
தெரிந்திடிற் றால மாதி திரிவித மாகிச் சேரும்.

எ-து. முற்சனனத்திலும் பாவத்தைச் செய்தவர்கள் நரகத்திற் புகுந் தனுபவித்துத் திரும்பவு மந்த வாசனையின் பலத்தினால் பூமியிற் பிறந்து பின்னும் பாவத்தையே செய்துவருவார்கள், அப்பாவ வகைகளை விரி

த்தா லனேககோடியாகவிரியும். அதனைத் தொகுத்தறிந்தால் தூலமுதன் மூவ (௨)
கையாகிப் பொருந்தும். எ-று.

தூலமாதி யிவையென்பதூஉ மவற்றுட்டேல கன்மமே யீண்
டுக் கூறுவதூஉ மென்ப துணர்த்துகின்றார்

தூலமே சூக்கந் தானே சூக்கும தரமே யென்றிங்
கேலவே மூன்று கூறு மிவற்றினுட் டேலந் தன்னைக்
கோலியே தொகுத்திந் நூலிற் கூறுவ மஃதுங் கூறின்
மாலுறு மனமே வாக்கே வடிவமே யெனவு மூன்றாம்.

எ-து. முற்கூறிய பாவவகை தூல மென்றுஞ் சூக்கும மென்றுஞ் சூக்குமதரமென்றும் இவ்விடத்து மூன்றுவகையாய்ப் பொருந்தும். இம்மூன்றினுள்ளுந் தூலபேதத்தையே யமைத்துத் தொகுத்து இந்தநூலிற் சொல்லுகின்றோம். அதனை யறியுமிடத்து மயக்கம் அமைந்த மனத்தாலும் வாக்காலுங் காயத்தாலும் வருவன வென மூவகையாகும். எ-று.

முதலடியினு நான்காமடியினு முள்ள ஏகாரங்கள் எண்ணின் கண் (௩)
ணும் ஏனையவை அசைநிலைக் கண்ணும் வந்தன.

மூதற்கட் டொகுத்துப் போந்தமனாதிகண் மூன்று மொவ்
வொன்று நந்நான்கு வகையா மென்பதூஉ மவை
கொடுக்கும் பயனிஃதென்பதூஉ
முணர்த்துகின்றார்.

பேசிய தூல பேதந் தனித்தனி நான்கு பேத
மூசமுந் நான்கு பேதமுற்றுமம் மூன்று மின்னு
மாசிலோ ரறியும் வேலை விரிந்திடு மனேக மாக
நாசமா நரக பேதத் துயரினைக் கொடுக்கு நாளின்.

எ-து. முன்னே கூறிய தூலபேத மென்னு மனோவாக்குக் காயங்களொவ்வொன்று நாலுவகையாம். அவற்றைத் தொகைகாணப் பன்னிரண்டு வகையாகமுடியும். அந்தமனாதிகண் மூன்றுங் குற்றமற்ற பெரியவர்களாராய்ச்சி செய்யுமிடத்திலின்னமு மனேக வகையாக விரியும். அங்ஙனம் விரியும், பாவபலம் நரகவகைகளில் ஆன்மாக்களுக்குத் துக்கத்தை விளைத் (௪)
தனுபவித்துத் தொலைந்தவாறே தாம் நசிக்கும். எ-று.

நிறுத்த முறையானே மனத்தினுண்டாம் பாவவகைக
ணான்கு மிவையென்ப துணர்த்துகின்றார்.

அன்னியன் மனையா டன்னை யணையுமா தரவு கூர
வுன்னு நலயலார் தங்க ளுடைமையுங் கொள்ள வுன்னல்
பின்னையு மவர் தம் பண்டம் பிழையுறு விக்கப் பேணல்
என்னுமிம் மூன்றுங் கொல்ல வெண்ணலு மனத்தினீட[illegible]ம்.

எ-து. பிறனொருவனுடைய மனைவியைக் கூடவேண்டுமென்னு மாசையாலதற்கேற்ற செய்கைகளை நினைத்தலும், பிறருடைய வுடைமையைத் தாமெடுத்துக் கொள்ளுவதற்கு விசாரித்தலும், அவர்களுடைய வுடைமையைச் சேதமாக்க விசாரித்தலும், பிறிதோருயிரைக் கொல்ல நினைத்தலும் ஆகிய நான்கு மனத்தினு லுண்டாம் பாவவகைகளாம். (௫)

வாக்கினாலியற்றும் பாவங்க ணான்குங் காயத்தினா லியற்றும்
பாவங்க ணான்கு மிவையென்பதூஉம் பின்னரு
மனுதிகளா லதிபாதக முதலானவை விரியு
மென்பதூஉ மிரண்டுசெய்யுளால்
உணர்த்துகின்றார்.

அழுகையுங் கோளும் பொய்யு மயலப வாதந் தானும்
வழுவிய வாக்கின் பேத மற்றையான் மனையா டோளைத்
தழுவுத றமித்துக் கோறல் சராசர பேதந் தன்னைப்
பழிபடு பண்ட முண்கை பார்பொரு ளதனைப் பற்றல்.

எ-து. அகாரணத்தா லழுகையும், கோட் சொல்லும் பொய்யுரைத்தலும், பிறன்பழி கூறலுமாகிய விந்நான்கும் வாக்கினால் வரும் பாவவகைகளாம். பிறனொருவன் மனைவியைப் புணர்தலும், நடப்பனவு நிற்பனவுமாகிய உயிரின் வகைகளை யடித்துக் கொல்லுதலும், நல்லவர்களா னிந்திக்கப்படு முணவுகளை யுண்ணுதலும், பிறர் பொருளைக் கவர்தலும். எ-று. (௬)

என்னுமிந் நான்குங் காயத் திட்டிய பாவ பேதம்
பன்னிரு பேத மாக மனுதியைப் பகர்ந்தா மின்னு
மன்னிய மனுதி மூன்று மவினதி பாத காதி
யென்னவே விரியு நோய்தி னவற்றையு மியம்பு வாமே.

எ-து. இவ்வாறு முன்னேகூறிய கன்ம நான்குங் காயத்தினால் வரும் பாவவகையாம். இவ்வாறே மனம்வாக்குக்காயங்களால்வருந் தூல பாவ வகைகளைப் பன்னிரண்டு வகையாகச் சொன்னோம், அஃதன்றி யின்னமு நிலைபெற்ற மனுதிகள் மூவகையாலு மழுக்கினையுடைய வதிபாதக முதலிய பாவங்க ளுண்டாகும் வண்ணம் விரியும் அவற்றையுஞ் சுருக்கமாகச் சொல்லுகின்றோம். எ-று.

ஆதியென்பதனால் மகா பாதகமு முபபாதகங்களு மவற்றினது துல்லியங்களுமெனக் கொள்ளக் கிடந்தன. (௭)

முதற்கட் டொகுத்தவற்று ளதிபாதக மீதென்ப
துணர்த்துகின்றார்.

தாரகன் றன்னைச் சாதத் தடங்கடற் றளர்வார் தம்மைப்
பாரகன் றனையும் பாரும் படைத்தவன் றனையும் பாங்காற்

காரகன் றன்னை வாங்குங் கடவுளைக் கயந்த நெஞ்சர்
நாரகர் மீளு நாளும் பிறிதிய னிற்று வாமே.

எ-து. பிறவியாகிய பெரிய கடலி லமிழ்ந்தி ருந்து கின்றவர்களை அக்கடலி னின்றுங் கடப்பிப்பவனும், உலகத்தைத் தாங்குகின்ற மாயனையும் யோனிபேதங்களையு மன்றிப் பிருதிவி முதலிய பஞ்சபூத தாலகாரியங்களையுஞ் சிருட்டிக்கின்ற நான்முகனையு முறைவழுவாம லுண்டாக்குங் காரண சொரூபனும், அவர்க ளிருவரையு மீண்டுந் தன்னிடத்தி லொடுக்குஞ் சங்கார கருத்தாவுமாகிய சிவனை நிந்தனைசெய் திகழ்ந்த மனத்தினை யுடைய அதிபாதகர்கள் நரகத்தி னெந்நாலங் கிடப்பார்கள், அதினின்றும் அவர்கள் திரும்புங் காலத்தை வரையறுத்து இவ்வியலுக் கயலான சுவர்க்க நரக வியலின்கட் சொல்லுகின்றோம். எ-று.

தாரகன் கடப்பிப்போன், பாரகன் தாங்குபவன், காரகன் பண்ணுமவன், நாரகர் நரகத்திற் கிடக்கு மவர்கள். (அ)

இதுவுமது.

ஒப்பிலி யநாதி முத்த னோதிய வேத மாதிக்
கொப்புயர் புரைப்பார் நிந்தை யுரைப்பவ ருன்னு வாரும்
வெப்பரி நிரயந் தன்னுள் வீழ்ந்துவெந் துருகி வீயா
ரெப்பொழு தேறு வாமென் றிளைத்திளைத் தேங்குவாரே.

எ-து. தனக்கு நிகரில்லாதவனு யநாதிமல முத்தனுமான சிவனருளிச் செய்த வேதாமகங்களுக் கொப்பாகவும், அதற்க திகமாகவும் பிறிதொரு நூலைச் சொல்லுகின்றவர்களும், அவ்வேதாகமங்களை நிந்தை சொல்லுகின்றவர்களும், நிந்தையை மனத்தில் நினைக்கின்றவர்களும், வெம்மையையுடைய எரிவாய்நரகத்தில் வீழ்ந்து உடம்பெல்லாம் வெந் துநெலாமுருகி யிங்ஙனந் துயருறவு மவ்யாதனு சரீரத்தினின்று நீங்காதவர்களா யிந்நரகத்தினின்று மெக்காலத்திலே கரையேறுவோ மென்று வாடிவாடி யேக்கமுமடைவார்கள். எ-று.

வீயாமை - உயிர்விடாமை. (க)

இதுவுமது.

ஒப்பிலி யநாதி முத்த னோதிய பனுவ லோர்ந்து
தப்பறச் சாற்று மாசான் றன்னையு மிகழ்ந்து சாற்றில்
வெப்பெரி நிரயந் தன்னில் வீழ்ந்துவெந் துருகி வீயா
ரெப்பொழு தேறு வாமென் றிளைத்திளைத் தேங்கு வாரே.

எ-து. தனக்கு நிகரில்லாத அநாதிமல முத்தனாகிய சிவனருளிச்செய்த வேதாகமங்களை யாராய்ந்து ஐயந்திரிபற உபதேசிக்கு மாசிரியனையுமவமதித்து நிந்தை சொல்லுவார்களானால் அவர்களும் வெம்மையையுடைய

எரிவாய்நிரயத்தில் வீழ்ந்து முன்னேகூறிய துயரையு மடைவார்கள். எ-று.

ஆசான்றன்னையு மென்னுமும்மை, சாதகரையும் விளக்கிநின்றது. ()

இதுவுமது

அரன்றிர வியத்தை யாசா னரும்பொரு ளதனை யார்க்கும்
பரம்பரன் பகர்ந்த வாக்கைப் பரித்தபுத் தகத்தைப் பற்றிக்
கரந்தவர் முன்னஞ் சொன்ன கரிசர்க ளொருமூ வர்க்கும்
வரும்பல முடையர் பாவ மனைத்தையு மருவி னாரே.

எ-து. சிவத்திரவியத்தினையும், குருத்திரவியத்தினையும், யாவர்க்குமேலாகிய சிவனருளிச் செய்த திருவாக்கினை யெழுதிய திருமுறையையும் விரும்பிக் களவுசெய்தவர்கள் முன்னேசொல்லிய சிவநிந்தகர் வேதநிந்தகர் குருநிந்தகராகிய மூவருக்கும் வருகிற தீவினைப் பயன்களை யுடையவர்களாவார்கள். அஃதன்றியு மெல்லாப் பாவங்களையுஞ் செய்தவர்களு மாவார்கள்.

அதிபாதகஞ் சொல்லி முடித்து அதிபாதக துல்லிய
பேதஞ் சொல்லத் தொடங்கினார்.

வேறு.

அறைந்த விவர்க ளனைவர்களு மதிபா தகரோ யெனவறிக
சிறந்த வினையே தீவினையு ளதிபா தகந்தா னெனத்தெளிக
நிறைந்த துயரோ நெடுநாளே யிதனிற் பலமு மெனநினைக
பிறந்த வதிபா தகபேதந் தனையு மினியாம் பேசுவமே.

எ-து. இங்ஙனங்கூறிப்போந்தசிவநிந்தகர்கள்முதலாகிய இவர்களெல்லாரு மதிபாதகர்களென் றறிவாயாக; இதுதீமையாகிய பாவங்களுள் அதிகோர பாவமென் றறியக்கடவை. இதனாலேயிருந்த துயரமு மனுபவிக்குங் காலமு நெடுங்காலமென் றறியக்கடவை. இதன் கூறாகிய அதிபாதக பேதத்தையு மேற் சொல்லுகின்றோம். எ-று.

அதிபாதகரோ சிறந்த வினையே யென்னு மேகார மிரண்டுந் தேற்றத்தின்கண்ணும், நிறைந்த துயரோ நெடுநாளே யென்னு மேகார மிரண்டு மெண்ணின்கண்ணும் வந்தன.

(௰௨)

அதிபாதக துல்லிய பேதத்தைப் பத்துச் செய்
யுட்களா லுணர்த்துகின்றார்.

அரிக சிரமுஞ் சிவதனத்தை யபகா ரகனை யஃதரிந்
லரிவித் திடுக விருநிதிய மளித்தும் வலியா ரவராலே
யரிதே லஃது மப்புரிவிட் டகல்க வகலா துறைவாரே
லரியா ரதியா தகத்தவனுக் கொப்பார் நிரயத் தெய்ப்பாரே.

எ-து. சிவத்திரவியத்தை யபகரித்தவனைத் தலையைச் சேதிக்கக்கடவர். அவனைத் தன்னாற் செய்ய வலியில்லையானால் மிக்கபொருளைக்கொ

டுத்தானாலும் பலமுடையவர்களாலே சேதிப்பிக்கக் கடவர். அதுவுங் கூடாதானால் அத்தலத்தை விட்டு வேறொரு தேசத்திற் செல்லக்கடவர். அங்ஙன மறுதேசத்திற் செல்லாமல் அவ்வூரி லதற் கனுமதித் திருப்பார்களானால் அவர்களே யிவ்வதிபாதகஞ் செய்தவனுக் கொத்தவராய் நரகத்தில்வீழ்ந் தி யிளைப்பார்கள். எ-று.

சிரமுமென்ற வும்மையாற் கரமுதலியவுறுப்புக்களுங் கொள்க. (௰௧)

சிவனை யிகழுஞ் சிறியானை யனையர் சிவனைப் பூசனையை
புவனை யுறவே கண்களிக்க வுருகிப் பரவா தமுல்வாரும்
அவனைச் சிவன்று வருச்சகனை யன்பு செய்யா தகல்வாரும்
புவனத் ததிபன் பவனத்து ணியமத் தலைது புகுவாரும்.

எ-து. சிவனையும், அவனது அருச்சனையையு முள்ள மகிழ்ச்சி பொருந்தும் வண்ணங் கண்களிக்கக்கண் டதனான் மனநெகிழ்ந்து துதி செய்யா திருப்பவர்களும், அச்சிவனையு மவனையருச்சிக்கும் பூசகனையும் பத்தி பண்ணாதுவிட்டு நீங்குவோர்களும், இருநூற்றிருபத்துநான்கு புவனத்துக்கு மதிபனாகிய சிவனெழுந்தருளி யிருக்குந் திருக்கோயிலில் ஆசார நியமங்களோடு செல்லாமல் அநாசாரங்களோடு புகுகின்றவர்களுஞ் சிவனை நிந்திக்கு மற்பராகிய வதிபாதகரை யொப்பாவார்கள். எ-று. (௰௨)

பரமன் றிருமுன் னமுன்முன்னும் பரம குரவன் றிருமுன்னும்
ஒருமை யுறவே வறுமையினு முதவா தவருஞ் சிறுதேதும்
அரிது பொருடான் பசியையு மரிதோ வதது மரிதாகிற்
றிரணை மதனைத் திருமுன்னே மாற்ற லரிதோ செயலாலே.

எ-து. சிவ சந்நிதியிலும், சிவாக்கினியின் முன்னும், மேலான ஞானாசிரியனது சந்நிதியிலும், தமக்கு வறுமையெய்திய காலத்திலும் ஏதேனுஞ் சிறிது தமக்கியன்ற அளவு ஒருமைப்பாடு பொருந்தக் கொடாதவர்களும், அப்படி கொடுத்தற்குப் பொருளரிதானால் பச்சிலையுங் கிடையாதோ. அதுவுங் கூடாதானா லவர்கள் சந்நிதியிற் கிடக்குஞ் செற்றையைக் கருத்துடனே திருவலகு முதலியவற்றாற் போக்குதலுமரிதோ அரிதல்லவே. ஆகையால் இதனு ளொன்றைச் செய்யாதவர்களுஞ் சிவநிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

ஓகாரம் எதிர்மறை. (௰௩)

பொருவில் பொருளைப் புணர்ந்தானை யல்லா வெல்லாம் பூரணையி
லிரவி யுடனே யிளமதிய மிசையும் பொழுது மினையிலெயு
மெரியு மியலுங் குருபானு மிருக்கு மிடத்தை யகலிட்டு
வினைவின் விதந்தான் மெழுகிட்டு விதியாற் பூசை புரியாரும்.

எ-து. தனக்குநிகரில்லாத சிவத்தைக்கூடி நிட்டைபுரியுஞ் சிவஞானிகளல்லாதவர்க ளெல்லாரும் பூரணையிலும், சூரியனோடு கலைசேர்ந்த வின

ம்பிறை பொருந்துங் காலமாகிய அமாவாசையிலும், ஒப்பில்லாத சிவனுஞ் சிவாக்கினியுஞ் சிவாகமமு மேலாகிய வாசிரியனு மெழுந்தருளி யிருக்குந் தலங்களைத் திருவலகிட்டு மெழுகிச் சந்தன முதலிய சுகந்த வர்க்கங்களினல் விதிப்படி யருச்சனை செய்யாதவர்களுஞ் சிவ நிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

(௧௬)

இந்த முறையி லியற்றரு மியற்றி நியதி யிழந்தாரும்
பந்த மான பசுபாசப் பகையைக் கெடுக்கும் பரம்பரனைச்
சிந்தைக் கரிய சிவமுதலைத் துயக்க மறவே தெருண்டாரை
நிந்தை நிகழ்த்து நிறையில்லாக் கல்லாப் பொல்லா நீசருமே.

எ-து. இங்ஙனங் கூறிப்போந்த திறத்தவர்களன்றி யாசிரியரால் சங்கற்பித்தனுட்டித்துவரும் விரதங்களை விட்டவர்களும், ஆன்மாக்களிடத் தநாதிசம்பந்தமான வாணவபாசமாகிய பகையைப் போக்கும் பரம்பரனு யவர்க்கு மனத்துக் கெட்டாத சிவமாகிய முதலைத் தம்முடைய அஞ்ஞான நீங்கும்படி யுணர்ந்த ஞானிகளை நிந்திக்கு நிறையில்லாத அறநூல்களைக் கல்லாத பொல்லாத அற்பர்களுஞ் சிவநிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

சிவனை யிகழுஞ் சிறியாரை யனையாரொன்பதனை யெவ்விடத்தும் வருவித்துரைக்க.

(௰௭)

நிந்தை நிகரின் ஞானத்தை நிகழ்த்து மவரை நிகர்ப்பார்தஞ்
சிந்தை திகழ வருச்சனையைச் செய்யா தறநூ றினைப்பாரு
மிந்த வியலை யெழுதினரு மிதனைப் பிறருக் கிசைப்பாரும்
வந்து பொருவில் வாய்மொழியை மதிப்பா ரவரு மனத்தாலே.

எ-து. தம்முடைய அறிவு விளங்கும் வண்ணம் ஒப்பில்லாத சிவவாக்கியமாகிய அறநூல்களை மலர்முதலியவற்றாற் பூசை செய்யாமற் படிப்பவர்களும், எழுதுவோர்களும், பிறருக்குப் பாடஞ்சொல்லுவோர்களும், மனத்தாற் சிந்தனை பண்ணுவோர்களும் சிவஞான நிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

அருச்சனை செய்யா தென்பதனை முழுதுங் கூட்டுக.

(௰௮)

காய சுத்தி பண்ணா துகற்பிப் பாருங் கற்பாருந்
தேய சுத்தி செய்யா து சிவஞா னத்தைச் சிந்தனைசெய்
தாயு மவரு மவர்தம்மை யடைந்து துயக்க மறவெண்ணி
வாய்மைப் பொருளை மதிப்பாருங் கற்பார் தாமும் வரமுறவே.

எ-து. சிவஞானத்தை நீராடல் முதலியவற்றாற் சரீரசுத்தி செய்யாமற் படிப்பிப்பவர்களும், படிப்பவர்களும், அதனைத் திருமெழுக்கு முதலியவற்றாற் சுத்தி செய்யாத தலத்திலிருந்து சிந்தித் தாராய்கிறவர்களும், அங்ஙன மாராய்கிறவர்களைச் சேர்ந்து தனக்கையந் திரிபறும்படி கருதியுண்மை

யாகிய சிவாகமப்பொருளைக் கேட்பவர்களும், நன்றாகப் படிப்பவர்களுஞ், சிவஞான நிந்தகருக்கொப்பாவார்கள். எ-று.

தேயமென்றது வடமொழிச்சிதைவு. (௰௯)

ஆசை யதனாற் சிவகோச மதனைப் பொருளுக் களிப்போரும்
தேசி லவல தேசத்திற் சிறந்த முறையைச் செற்பாரும்
பாசப் பகைவன் பகர்மொழியைப் பயிலா தயனூல் பயில்வாரும்
ஏசற் றரன்வாக் கியற்றாரு மேதை யகத்து ளிருக்கவுமே.

எ-து. பொருள்மேல் வைத்த வாஞ்சையினாலே சிவாகமத் திருமுறையை விற்பவர்களும், பரிசுத்த மில்லாத அசுத்தபூமியிலே யதனை வைப்பவர்களும், ஆன்மாக்கள் பாசத்துக்குச் சத்துருவான சிவன் அருளிச் செய்த வேதாகமங்களைக் கல்லாம லந்நியமான பசுநூல்களைக் கற்பவர்களும், தம்முள்ளத்தின் மிகுந்த புத்தியுண்டாயிருக்கவுங் குற்றமற்ற சிவநூலை மேன்மேலும் விரிவாய்க் கல்லா திருப்பவர்களும் சிவஞான நிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

ஏசற்ற என்னும் பெயரெச்சத் தகரவீறு தொக்கப்பட்டது. நிந்தை நிகரின் ஞானத்தை நிகழ்த்து மவனை நிகர்ப்பா ரென்பதனை யெவ்விடத்துங் கூட்டுக. (உ௰)

பொருவில் குரவ னிந்தனையைப் புரிந்தா ரவனைப்
புனைவார்கள்
பரிவா லவனை யருச்சனையைப் பண்ணா தறநூல்
பயில்வாரு
முருகிப் பணியை யுஞற்றாரு முஞற்று மவனை
யொழிப்பாரு
திருவாய் மொழியைத் தினைத்திறைஞ்சிச் சிறந்த துதிகள்
செய்யாரும்.

எ-து. நேசத்தினாலே யாசிரியனைப் பூசை செய்யாமற் புண்ணிய நூலைப் படிப்பவர்களும், உள்ளமுருகி யவர்கள் பணிவிடையைச் செய்யாதவர்களும், அங்ஙனம் பணிவிடை செய்பவர்களைக் கலைத்து விலக்குவோர்களும், அந்த வாசிரியர் திருவாக்கினாற் கூறு மாகம வசனங்களை நன்றாகக் கேட்டு மகிழ்ந்து அவர்களை மேலானதோத்திரங்கள் செய்து வணங்காதவர்களும் குருநிந்தகருக் கொப்பாவார்கள். எ-று. (உ௧)

எதிருத் தாமு மிசைப்பாரு மினைத்த பருவ மெனவெண்ணிப்
பிதிரு மவரு மெதிரியாற் பிழைவந் தறினும் பிணியுறினும்
புதல்வர் தமையு மனைதனையும் பொருந்துஞ் சுற்றத் தவர்தமையும்
பதரோ வென்ன வவமதியைப் பண்ணு மவரும் பரிவறவே.

எ-து. ஆசிரியனேவிய பணிவிடையைச் செய்யாமலவருட னெதிருத்தரஞ் சொல்லுகிறவர்களும், அவர்களுக்கு வறுமை யுண்டான காலத்திலே அவர்களைப் பாதுகாவாமலிகழ்ந்து போவோர்களும், அவர் ஞாதிமுதலிய எதிர்வாதிகளாலே பயசயப்பட்டாலும் வியாதிகளைப் பொருந்தினுலுஞ் சயித்துக் காவாமல்விட்டு நீங்குவோர்களுங், குருபுத்திரனையுங் குருமனைவியையுங் குருவினோடு சம்பந்தமான சுற்றத்தவர்களையு மிரக்கமற்று நொய்தாகக் கருதியிகழ்ச்சி செய்தவர்களுங்குருநிந்தகருக் கொப்பாவார்கள். எ-று.

பொருவில்குரவ னித்தனையைப் புரிந்தாரவரைப் புணர்வார்க ளென்பதனை யீண்டும் வருவிக்க. (௨௨)

இங்ஙன மதிபாதக துல்லியரை யுணர்த்தி மேல் மகா பாதகரை யுணர்த்துகின்றார்.

அதிபா தகருங் கனியார்க ளிவரோன் றதிமா பாதகரைப்
பொதிமா முனிவ கினிவினையப் புந்திசெய்த புகன்றிடுவா
மதியால் வதன வாய்தன்றன் மனின முடைய வடிவதனு
லுறய மான பாவங்கள் கேட்பார் தமக்கு மொழிந்திடவே.

எ-து. பொதியமலையி லிருக்கு மகத்திய முனிவனே யிக்காலங் கூறிய திறத்தவரொல்லா மதிபாதகருக் கடுக்கேனென் றறியக்கடவாய் இத்திறத்தினைக் கேட்பவர்களுக்கு மனத்தினாலு முரைத்தின்கண்ணுள்ள வாக்கினாலு மழுக்கினை யுடைய காயத்தினாலு முண்டாகிய பாவங்களெல்லாமொழியும் வண்ண மிப்போதுனக்கு மகா பாதகரைச் சொல்லுகின்றே மதனை விரைவியிற் புத்திபண்ணிக் கேட்பாயாக. எ-று.

கேட்போர்க்கு மென்ற வும்மை படிப்பவர் முதலியோர்க்கு மெனவுங் கொள்ளக்கிடந்தது. (௨௩)

பஞ்சபாதக ரிவரென்ப துணர்த்துகின்றார்.

கொன்றான் மறையோன் றனைமதுவைக் குடித்த மறையோன்
    சோரத்தாற்
சென்றே பிறர்செம் பொனைக்கொண்டான் றினைத்தான்
    குரவன் றேவிதனை
நின்றா னிவரோ டெனைவவர் மாபா தகரோ
    நிரயத்துட்
சென்றார் வினையச் செல்லுற மீளு நாளுஞ்
    சிலவலவே.

எ-து. பிராமணனை வதைத்தவனும், மதுபானம் பண்ணின பிராமணனும், பிறருடைய திரவியத்தைக் களவினாற் சென்றெடுத்துக் கொண்டவனும், ஆசிரியன் மனைவியைப் புணர்ந்தவனும், இங்ஙனங் கூறிய நால்வ

ரோ டிணங்கித் திரிபவனுமாகிய விவர்கள் ஐவருமகா பாதகர்களாகும், அவர்களே வருத்தமுறும்படி விரைவிலே நரகத்திற்சென் றடைந்தவர்களாவார்கள். அதினின்று கரையேறு நாளுஞ் சிலவல்ல. நெடுங்காலஞ் செல்லும். எ-று. (உ௪)

மேன்மகாபாதக துல்லியரை யுணர்த்துகின்றார்.

அறைந்தா மகபா தகமதனுக் கணிய தணிய பாதகமுஞ்
சிறந்த பொதியிற் சிவமுனிவ தெரிப்பாம் விரையத் தெளிந்திடுக
மறந்து புரிந்த வல்வினையு மறவா தியன்ற வல்வினையு
மிறந்து பிறக்க வினியவினை யிதனை யுணர விசைந்தார்க்கே.

எ-து. மேலாகிய பொதியமலையிலிருக்கு நன்மைபொருந்திய அகத்தியமுனிவனே மகாபாதகரைச் சொன்னோம். மேலிதற்கடுத்த துல்லிய பாவவகைகளையுஞ் சொல்லுகின்றோம். இதனையறிய விரும்பினவர்க் கறிந்து செய்த தீவினையுமறியாது செய்த தீவினையுங்கெட்டு நல்வினையுண்டாம்படி நீ யிதனை விரைவிலே கேட்டுத் தெளியக்கடவை. எ-று. (உ௫)

மகா பாதகதுல்லியருட் பிரமகத்தி பண்ணினவருக் கொத்தாரை மூன்று செய்யுளா லுணர்த்துகின்றார்.

வெறுப்பான் மிகுத்த கோபத்தால் வேட்கை மிகையால்
வெருட்சியினால்
ஒறுப்பா முரையந் தணர்க்குரைப்பா னொப்பான் பிரமக்
கொலையர்க்கே
யறப்பே ரறிவே யுளமெனவே தன்னை மதிக்கு
மறிவிலியுந்
சிறப்பாங் குரவ னொடுவிருத்தஞ் செய்யு மறியாச்
சிறுவனுமே.

எ-று. வேண்டாமையாலாதல், மிக்க கோபத்தாலாதல், திரவிய முதலிய வாசைமிகுதியாலாதல், அச்சத்தாலாதல், பிராமணரைப் பொறுத்தற்கரிய கொடுஞ் சொற்களைச் சொல்லுவோனும், மிகவும் பேரறிவுடையோனியானென்று தன்னை உயர்வாகவெண்ணும் அறிவில்லாதவனும், மேலான ஆசிரிய ரோடு விரோதம் பண்ணிக்கொள்ளும் அறிவில்லாத அற்பனும் பிரமகத்தி பண்ணினவனுக்கு நிகராவார்கள். எ-று. (உ௬)

உண்ணா வறன்மேற் செலுமாக்க ளினையுந் தடுத்தே
யொறுப்பானு
நண்ணி யிரப்பத் தருவனென நயந்து கூறி
யவர்வரவி
னெண்ணா மிழந்து தரும்பொருளை யிலையே யெனவு
மிசைப்பானுங்

தன்மை யுரைபைத் தகுதியரைச் சாற்று மவனுஞ்
சபைநடுவே.

எ-து. தண்ணீருள்ளவிடத்திற் குடிக்கச்செல்லும் பசுக்களையுமறித்துத் தண்ணீர் குடியாதவண்ணம் வாதைபண்ணுகிறவனும் தம்மிடத்தில் வந்தொருபொருளை இரந்தபோது தருகிறேனென்று நேர்ந்து முன்னே கூறிப் பின்பவர் தம்வீட்டில் வந்தபோது அக்கருத்தை விட்டு உமக்குத்தரும் பொருளும்யாமுடையோ மல்லவென்று சொல்லுகிறவனும், அறிவான் மிக்கவனைச் சபை நடுவே இழிவான வசனங்களைச் சொல்கிறவனும் பிரமகத்தி பண்ணினவனுக்கு நிகராவார்கள். எ-று.

ஆக்களினையுமென்னு மும்மை மற்றுள்ள விலங்கு, புட்களையுமென விளக்க வந்தது. மேல்வருஞ் செய்யுளிற் பிரமக்கொலையர்க் கிணையென்பதை இச்செய்யுளோடுங் கூட்டியுரைக்க. (உ௭)

அரசன் செவியிற் பிறர்குறைரையை யறிவிப் பவனு
மந்தணர்க்கும்
பாசு பாணி முதலோர்க்கும் பாங்கா நிலனைப்
பறிப்பானு
மொருவும் வகையை யுரைப்பானு மதனுள் விளைவை
யுண்பானும்
பிரம கொலையர்க் கிணைமதுவைப் பிதற் கிணையும்
பேசுவமே.

எ-து. பிறர்குற்றங்களை அரசன் செவியிற்சொல்லி அறிவிப்பவனும், பிராமணர்க்கும், மழுவைக் கையிலேந்துஞ் சிவன்முதலாயுள்ள கடவுளர்க்கும், உரிமையான பூமியைக் கட்டிக்கொள்வானும், அந்நிலம் அவர்களுக்காகாமற் போம்வண்ணஞ் சூட்சி சொல்லுகிறவனும், அந்நிலத்திற் போகங்களை எடுத்துக்கொண் டுண்பவனும், பிரமகத்தி பண்ணினவர்க் கொப்பாவார்கள். மதுபானம் பணணினவர்க் கொப்பாரையுமேற்சொல்லுகின்றோம். எ-று. (உ௮)

மகா பாதகத் துல்லியருண் மதுபானம் பண்ணினவர்களுக் கொப்பா
ரையும் பொன்றிருடினவருக் கொப்பாரையு நான்கு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஆதி யமல னருளாள னநக னருள்செ யாகத்தை
யோதி யதனை யொழிப்பானு மொளிசே ரழலை யோம்பானு
மாதா வுடனும் பிதாவுடனு மாறு யவர்சொன் மறுப்பானு
மோதா வுரையை யுரைத்தானெனன் றுற்றே நடுவா யுரைப்பானும்.

எ-து. எவற்றிற்கு முதல்வனுமாய் நின்மலனுமா யான்மாக்களிடத்திலே இரக்கத்தை யுடையவனுமாய்ப் பாவமில்லாதவனுமாயிருக்கிற சிவன

ருளிச்செய்த ஆகமத்தையோதி அதனை யிடையிலே விட்டவனும், ஒளி பொருந்திய வக்கினிகாரிய நாடோறுஞ் செய்துவந்து பின்பதனை யிழந்தவனும் மாதாபிதாவுடனும் விரோதித்து அவர் கூறிய சொற்களை மறுப்பவனும் ஒருவன் சொல்லாதவார்த்தையைச் சொன்னானென்று சபையில் வந்து நடுச்சொல்வோனும். எ-று. (உக)

தோழன் றனக்குத் துயரத்தைத் துய்ப்பிப் பவனுந்
துரிசறுக்கு
மேழை பாக னடியாரை யிடரைச் செயவு
மிசைந்தானும்
பாழென் றறநூல் பழித்தபொருள் பண்ட மெனக்கொண்
டுண்டானும்
வாழும் வனத்தா மாக்களையும் வருத்து மவனு
மயனுறவே.

எ - து. வெளி.

ஆமாக்கள் பசு மான் மரை முதலிய விலங்கினங்கள். ஆமாக்களையு மென்னு மும்மை பறவைகளையுமென விளக்கிநின்றது. (ஙம)

ஆக்க ளணையு மார்க்கத்தி லடவி யதனு ளரும்பதியுட்
பார்க்குண் மதித்த பட்டினத்தும் பழுதீத யழலைப் படுப்பானு
நீக்கு மதுவை யுண்டானை நிகரோ வறியார் நிதிமுதலுங்
காக்கு மனையோ கரிபரிதேர் கவினார் மணியுங் கவர்ந்தானும்.

எ-து. பசுக்கணிற்குங் கொட்டகை வாசலினும், வனங்களினு மரிய சிவத்தானங்களினும் பூமியுண் மதித்துச் சொல்லப்பட்ட பட்டினங்களினு மொருகாரணமின்றித் தீயை வைப்பவனு மிவர்களெல்லாம் அறநூலிலாகா தென்று நீக்கு மதுபானம் பண்ணினவருக்கு ஒப்பாவார்கள். வறியவராயுள்ளவருடைமை முதலாயினவுங் காவல் பெற்றிருக்கு மனைமாத்திரமோ யானை, குதிரை, தேரிவைகளையு மழகுநிறைந்த ரத்தினத்தையுங் கரந்து கொண்டவனும். எ-று.

வறியோர் நிதிமுதலு மென்னு மும்மையாற் பெரியோர் நிதிமுதலு மென்றநூஉங் கொள்க. (ஙச)

கதலி யெழுவாய் கரும்பீறுவாய் கந்த மலிசந் தன முயர்ந்த
பொதியி லகில்குங் குமமாதி புனைய வினிய துகிலாதி
பதமே பாணி பயில்வனவும் பற்றி னானும் பழுதறவே
பிதமாங் கனகந் தனைச்சோர்விற் பெற்றாற் கிணையே பேசுங்கால்.

எ-து. வாழைமுதல் கரும்பீறா யிருக்கிற உண்டிப் பொருள்களு மணமிக்க சந்தனமும் பொதியமலையி லோங்கி வளர்ந்த அகில் குங்கும முதலிய சுகந்தப் பொருள்களு முடுத்தற் கினியவாடை முதலியனவுங் கா

விலும் தையிலு மணியப்பட்ட வாபரண மாயுதங்களுமான விவற்றையு டையோர் வருந்தும் வண்ணம் அபகரித்தவனுஞ் சொல்லுமிடத்துச் சிவந்த நிறத்தையுடைய பொன்னைக் களவினு லெடுத்தவனுக்கு ஒப்பாவார்கள். எ-று.

பீதம் பிதமெனக் குறுகும்வழி குறுகிற்று. (கஉ)

மகா பாதக துல்லியருட் குரு மனைவியைப் புணர்ந்தவருக்
கொப்பானை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

பெறுதற் கரிய பாத்திரத்தைப் பெற்றும் பெற்ற
கன்னிகையைச்
செறிவித் திடுதல் செய்யானுஞ் சிறந்த புதல்வன்
மனைவியொடு
மறிவிற் பரிந்தா னகத்திணொடும் பகினி யுடனு
மணைந்தானும்
பொறையிற் பயந்த புதல்வியொடும் புலைச்சி யுடனும்
புணர்ந்தானும்.

எ - து. வெளி.

அறிவிற் பரிந்தான், தோழன். பகினி, உடன்பிறந்தாள். (கங)

அறிந்து மனையா ளவலத்தை யவளைத் துறவா
தணைவானுஞ்
சிறந்த குரவன் மனைவியொடுஞ் செறிந்தார்க் கிணையே
செப்பியவிந்
திறந்தான் மகபா தகமதனிற் சிறுமைத் தானுற்
பாதகமென்
றறைந்தா மிதனுக் கணித்தான வுபபா தகமு
மினியறைவாம்.

எ-து. தன்மனைவியானவள் பிறர்முகம் பார்க்கும் குற்றத்தைக் கண்டு மவளைத் தள்ளிவையாமல் கூடுகிறவனும், இவர்களெல்லாரு மேலாகிய குருவின் மனைவியோடு கூடினவர்களுக்கு ஒப்பாவார்கள், இங்ஙனஞ் சொல்லிய கூறுபாடுகளெல்லா மகாபாதகத்துக்குத் துல்லியமாயிருக்கும், ஆகையினாலே யிவற்றிற்குப் பாதகமென்று பேர்கொடுத்துச் சொன்னோம், மேலிதற்கடுத்த வுபபாதகத்தையுஞ் சொல்லுகின்றோம். எ-து. (கச)

முற்கூறிய வுபபாதகத்தை விரித்துணர்த்துகின்றார்
இச்செய்யுண் முதல் எனவே யிசைத்தவென்னுஞ் செய்யுளீறாக
விருபத்தொரு செய்யுளு மொருதொடர்க்குளகம்.

மறையோர்க் கெனவே வைத்தபொருண் மதியா ததனை
யெளவினனும்

நிறையார் பெரியோர் நிதியதனை நிரந்து கவர்ந்த
நிலையிலியும்
பிறரா லதனுக் கிடையூறு பேணு மவனும்
பெருங்குலமு
மறிவு மருளு முடையமெனு மகந்தை யுடைய
வவலனுமே.

எ-து. பிராமணர்களுக்கென்று நியமித்துவைத்த பொருளை யவனை யவமதித் தெடுத்துக்கொண்டவனும், வேதாகமங்களின் வழியேற்றக் குறைச்சலில்லாமல் நின்ற நிலைமையான் மிக்கவரான நல்லவர்கள் திரவியத்தைக் கலந்தபகரித்த நிலையில்லாதவனும், பிறராலே யவர்களுடைய திரவியத்துக் கிடையூறு விளைப்பவனு மெல்லாரிலும் பெரியசாதியு மறிவு மிரக்கமும்யாமே யுடையோமென்னு மகங்காரத்தை யுடைய பொல்லாதவனும், எ-று.

விடைத்துத் தவரை வெகுள்வானும் விடம்ப முளத்துள்
விரவினவு
மிடுக்கண் கெடுத்த வினியானை யெண்ணு வவலத்
தின்னியனும்
தடுக்கத் தரியா வாசையுடன் போக விதத்தைத்
தரிப்பானுங்
கொடுக்கச் சிறிதுங் குறியாது கொள்ளுங் கருத்தே
யுள்ளானும்.

எ-து. தவசிகளைக் கடிகிக் கோபிப்பவனு முள்ளம் பிறிதொன்று யிருக்கப் பிறர்மதிக்க விரத முதலியவற்றைச் செய்ய விரும்பினவனுந் தனக்குவந்த விடையூறுகளை நீக்கின நல்லவர்களை யவமதித்த பொல்லாத கன்னெஞ்சனுந் தடைபடாத வாசை மிகுதியினாலே போகவகைகளை யனுபவிப்பவனு மற்பமு மொருவருக்குக் கொடுக்க எண்ணமல் பிறர்கையி லுள்ளவற்றை வாங்குங் கருத்தையுடையவனும். எ-று.

விடம்பம் உள்ளொன்று புறம்பொன்று. (௩௮)

மாணு வளர்த்த வஞ்சகனும் வயிர முடைய
மனத்தினனும்
பூணூர் முலையை மணஞ்செய்து புணர்ந்தா னிருக்கப்
புலனிழந்த
பாணூர் மொழியைப் பைங்கிளியைப் பணைத்தோ ளிணையைப்
பயின்றகனு
மேலுமொன்னு பிரண்டிணையுங் கண்ணு வென்னு
வெளியனுமே.

எ-து. உள்ளத்தி லமைவுபடாத வஞ்சனையை யுடையவனு மொருவனொரு குற்றஞ்செய்தா லதனை யக்கணமே மறவாம லெந்நாளு நினைத்திருக்கு மாச்சரியத்தையுடைய வுள்ளத்தை யுடையவனு மொருத்தியைக் கலியாணஞ் செய்து அவளுடைய வாபரணமணிந்த முலைகளைக்கூடியகணவனிருக்கவு மந்த விசையமைந்த மொழியை யுடையவளாகிய பசுங்கிளிக் கொப்பானவளுடைய மூங்கில்போன்ற தோளிணையில் அறிவில்லாமல் புணர்ந்து பெருமை நாணென்னு மிரண்டையுந் தனக்குக் கண்ணாக விசாரித்தறியாத வேழையும். எ-று. (௬௭)

கொழுநன் றனையே தெய்வமெனக் குறித்துத் தரும
நெறிகோணு
தொழுகும் விரத வுத்தமியை நொய்ய ளெனவே
யுளத்துன்னு
மிழுதை தானு மிவளெளிய ளென்றே யவட
னிணைத்தோளைத்
தழுவக் கருதுந் தண்ணியனுங் கண்ணற் புணர்ச்சி
தரிப்பானும்.

எ-து. வெளி. (௬௮)

கரிசு சிறிதுங் கருதாத கவினார் மரபிற்
கன்னிகையைத்
துரிசு முடைய ளிவளென்று சொல்லு மவலத்
துர்ச்சனனு
மொருவன் சிவனுண் டென்றுணர்ந்த பனவன் றனைத்தேர்ந்
துதவாதே
பரிவு மறிவு முடையனைமற் றொருவற் குதவும்
பழியினனும்.

எ-து. வெளி. பனவன் பிரமசாரி. (௬௯)

தரும மணமே பிரமாதி நான்குந் தலைமை
யிடைமணந்தா
ளொருவ னொருத்தி யெனுமிவர்த மொப்பிற் பரிவுற்
றுறும்புணர்ச்சி
கருதிற் கடைமூன் றசுரமுன் கடையென் றவற்றைக்
கழியாதே
விரைய விழைந்து புணர்ந்தறத்தை விதித்த மொழியை
விடுத்தாரும்.

எ-து. பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தைவமாகிய இல்லறத்திற்குரிய மணநான்கு முத்தமம், நாயகனு நாயகியுமான விருவருந் தம்மன

ப்பொருத்தத்தா லன்புற்றுப் புணருங் காந்தருவப் புணர்ச்சியிடையாகிய மணமாம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய மூன்றுமாராய்ந்தால் கடையாகிய மணமாம், இவற்றுட் கடையென்று கூறிய ஆசுரமண முதலியவற்றை நீக்காம லாசைமிகுதியினாலே விரும்பி விரைவிலே வேட்டுப் புணர்ந்தில்லறநெறியை விதித்துக் கூறிய வேதாகம வசனத்தை விட்டவரும். எ-று.

காந்தருவமுதலிய மூன்று மத்திமமெனவும், பைசாசமதமமெனவுங் கூறுவாருமுளர். சூ, பிரமம் பிராசாபத்தியமாரிடங், தைவங்காந்தருவ மசுரமிராக்கதம், பைசாசமென வேதத்தெண்வகைமணமே. பிரமங்கன்னியைப் பெருங்கலனணிந்தே, பிரமசாரியா யிருப்பானொருவனுக், குரிய வன்னிமுன்னுதவுதன்மருவும். மருவுபிராசாபத்தியமகட்கோடற், குரியகோத்திரத்தார் மகளுதவென, விருமுதுகுரவருமியைந்தேயீதல். ஈயுமாரிடமாவுமானேறும், வாங்கித்தீமுன்னர் மகள்வழங்குதலே. வழங்குதெய்வம் வேள்வியாசாரியற்கு, முழங்குதீமுனமகட்கொடைமுறையே, முறைமையாழினிறைகந்திருவ, மொப்புப்பற்றுந் தப்பிலவாகித், தாமேகூடுந் தகுதியதாகும். ஆகுமாசுரஞ் செருவில்லேற்றியுந், திரிபன்றியினைத் தெரிவுறவெய்து, மின்னனபிறவும் பன்னியசெய்துங், கன்னியைமன்னுதல் துன்னுமென்ப. துன்னுமிராக்கதஞ் சுரிகுழற்பேதையைத், தன்னிற்பெறாதுந் தமரிற்பெறாதும், வலிதிற்கோடன் மரபுகாட்டும், காட்டுபைசாசங் களித்தார் துயின்றோர், மாட்டுப்புணரும் புணர்ச்சியின்மாண்பே, என்றாராகலின் எண்வகைமணங்களையு மிவ்வகையாற்காண்க. (௪௰)

உலக வியல்பை யொழிந்தாரை யுதவீர் பொருளென்
றுரைப்பானு
நிலைமை தளரிற் றாங்காதே நீங்கும பாங்கி
லடியானுஞ்
சலமில் சகியைத் தணப்பானுஞ் சாற்றிப் பழுதுஞ்
சலஞ்செய்து
கொலையைப் புரியுங் கொடியானுங் குணத்தார் தமையுங்
கொதிப்பாலே.

எ-து. உலகவியாபார நீங்கி நிட்டைபுரியுந் தபோதனரை யெனக்குக் காசுந் தூசுந் தரக்கடவீரென்று கேட்பவனுந், தங்கருத்தனுக்கு நிலைகுலையவந்தவிடத்து நின்று பாதுகாக்காமல் விட்டுப்போகும் நன்மையில்லாதவடியவனும், நிலைமை பிழைபட வந்தவிடத்து வன்மமில்லாத தோழனை நீக்கிவிடுகிறவனும், நற்குணமுடையவனையுங் கோபத்தினால் குற்றமுஞ் சொல்லிவன்மித்துக் கொலைத்தொழிலைச் செய்யுந் தீயவனும், எ-று.

நிலைமைதளரினென்பதனைச் சலமில்சகியை யென்பதனொடுங் கூட்டுக. குணத்தார்தமையுமென்னு மும்மை சிறப்பு. (௪௧)

சுற்றத் தவரைத் துடைப்பானுஞ் சுகிர்தத் தவரைத்
துணிப்பானும்
பற்றிப் பசுவைப் படுப்பானும் பதியைக் கொலைசெய்
பழியினனு
மற்றை வசியர் வடிவினையு மாயோ டனையும்
வதைப்பானுஞ்
செற்றத் தழுவர் தங்களையுஞ் செருக்கிச் சினத்துச்
செகுப்பானும்.

எ-து. உறவின் முறையாரையும் புண்ணியவான்களையும் பசுக்களையும் நார்க்கெல்லா மிறைவனாகிய அரசனையும் அவர்க்கடுத்த செட்டிகளையும் வேளாளர்களையும் மடவாரையும் மதத்துக்கோபித்துவதைப்பவனும். எ-று.

தருக்க டமையுந் தனக்குன்னித் தறிக்கு மவனுந்
தருக்காலே
பொருந்த வுயிர்கட் குயிராய வொப்பில் பரம
னுறையுமலை
விருக்ஷ விடப மவைதனையும் விடைத்தே யொடிக்கும்
வினையினனு
மருங்கொண் மலரைத் தனக்கெனவே பறிக்கு மவல
வலியனுமே.

எ-து. மரங்களைத் தனக்கென்று குறித்து மதத்தினாலே வெட்டுகின்றவனும், எகனுமுயிர்க்குயிருமாகிய நிகரில்லாச் சிவபிரா னெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலினிற்கு மரங்களிற் கொம்புகளையுஞ் சினைக்கொடிக்குந் தீவினையுடையவனும், நந்தவனத்தில் உண்டாகிய மணம் அமைந்த பூக்களைத்தனக்கென்று குறித்துப் பறிக்கும் பொல்லாதவிடும்பனும். எ-று. (௪௧)

பரமர் திருவா லயமதனிற் பணிசெய் பவரைப்
பசுவதனை
யரிய செந்நெ லவைமுதலு மபகா ரகனு
மவமதியாற்
றருக வென்று பொருளல்லார் தங்கைப் பொருளைத்
திரிப்பானு
மரனை யருச்சித் ததன்பலத்தைப் பிறர்க்குப் பொருளுக்
களிப்பானும்

எ-து. சிவாலயங்களிற் பணிவிடை செய்பவர்களையும், பசுக்களையும், பெறுதற்கரிய செஞ்சாலி நெல்லினையு முழுந்து பயறு முதலாகிய தானியங்களையும் திருடிக்கொள்பவனும், பயனற்றவரான அநாதாக்கள் கையிற்

பொருளைப் புத்திரன் கேட்டிலு னெனக்குத் தாக்கட விரொன்று கேட்டேற் பனுஞ் சிவனைப் பூசித்ததனு லுள்ள பலத்தைத் திரவியத்துக்காகப் பிறர்க்குக் கொடுப்பவனும். எ-று. (௪௪)

துக்கம் பிரியச் சுகமடையத் துணிவ ருலக ரவருள்ளுந்
துக்கம் பிரியச் சுகமதனைத் துய்ப்பார் சிலரோ சிலர்தாமே
துக்கம் பிரியார் சுகம்பிரிவர் துணிந்த விரண்டு திறத்தார்க்கும்
புக்க வினைபுண் ணியபாவ மெனவே துணியாப் பூசுரரும்.

எ-து. உலகத்திலுள்ளவரெல்லாருந் தமக்குத் துக்கங்க ணீங்கவுஞ் சுகங்களுண்டாகவும் எண்ணுவார்கள், அவர்களுள்ளே சிலர் துக்கங்க ணீங்கச்சுகங்களை யனுபவிப்பார்கள். சிலர் சுகத்தை நீங்கித் துக்கத்தை யனுபவிப்பார்கள், ஆகையாலிவ் விருவகையோருக்குஞ் சுகதுக்க மனுபவிக்குங் காரண முன் செய்த புண்ணிய பாவங்களேயென் றுறுதிகூறாத பிராமணர்களும். எ-று. (௪௫)

தன்னாற் சமைந்த தடாகத்தைத் தருக்க ளதனைத்
    தாரத்தைப்
பொன்னை யனைய புத்திரரைப் பொருட்குக் கொடுக்கும்
    புல்லியனு
நன்றே னுடையார் தனத்தினை நயந்து கொள்ளு
    நலமிலியும்
உன்னைப் பரிப்ப லெனப்பரி யுடைமை தனைக்கொண்
    டொழிப்பானும்.

எ-து. தன்னாலுண்டாகிய குளங்களையும், வாவிகளையும், மரங்களையுந், தன்மனைவியையும், பொன்போன்ற தன் மைந்தர்களையும், பொருளுக்குவிற்கு மீனனும், நல்ல விரதசீலரா யுள்ளவர்கள் திரவியத்தை விரும்பியபகரிக்குந் தீயவனும், நின்னுடைமையைப் பல்கும் வண்ணம் பெருக்கியுன்னைக் காப்பேனென்று தன்மனைவி சீதனமுதலிய கைப்பொருள்களை வாங்கிக்கொண்டு காவாமல் விடுவோனும். எ-று. (௪௬)

தேற வருந்துந் தேமொழியைத் திளைக்கு மறிவில்
    சிறியானும்
வேறு சிலர்கைப் பொருடன்னை விரும்பித் தருவ
    லெனவாங்கிப்
பேறு மவர்க்குப் பிழைப்பானும் பேணுஞ் செட்டிலும்
    பிறர்தம்பாற்
கூறிக் கொடுத்து விருத்தியினைக் கொண்டே யருந்துங்
    கொடியனுமே.

எ-து. மதுபானம் செய்யுந் தேன்போலு மொழியை யுடையவளைப் புணரு மறிவில்லாத வற்பனும், பிறிது சிலர் கைப்பொருளை யிச்சித்துத் தருவனென்று வாங்கி யப்பொருளையுங் கொடாமற் பிழைசெய்பவனும், யாவராலும் விரும்பப்பட்ட செஞ்சாலிமுதலிய நெல்லினைப் பிறரிடத்து வட்டிக்குக்கொடுத்து அந்த ஆதியங்கொண்டு புசிக்குந் தீயவனும். எ-று

குற்ற முடையான் வினைதணிக்கக் கொடுக்கும் பொருளைக்
கொள்வானும்
விற்கத் தகுதி யல்லாத வன்னு திகளை
விற்பானுங்
கற்பால் வசிய முதற்செய்து கனகங் கொளளுங்
கரிசினனு
நிற்பார் நியமத் திவனெனவே நிகழ்த்தத் தொடங்கு
நியதியனும்.

எ-து. யாதேனுமொரு குற்றத்தையுடையவன் தான்செய்தபாவந் தணியும்படி கொடுக்குந்தானத்தை யேற்பவனும், விற்பதற்குரிமையல்லாத வன்னமுதலாயினவற்றை விற்பவனும், மந்திரநூல் விதியினாலே * வசிய மாகருஷண முதலிய வறுவகையினைச் செய்து பிறர்பொருள்களை வாங்கும் பொல்லாதவனும் நீதிவழி நடப்பவ னிவனென்று பிறர் புகழும்வண்ணம் பாவித்துத் தொடுத்து நடத்து நியமமுடையவனும். எ-று. (௪௮)

கொடுத்துத் தனத்தை வேதமுதல் கொள்ளுமவனும்
பொருள்கொண்டு
படிப்பிப் பவனும் படிமத்தைப் பரித்தே யொழிக்கும்
பாங்கிலியுந்
திடத்தை யிழந்து தரிசனங்க ளனைத்து மதித்துத்
திரிவானும்
அடுத்த சமயத் தபற்பசுநூல் வழியென் றதுகற்
றறிவானும்.

எ-து. திரவியங்கொடுத்து வேதம் வேதாங்கமுதலிய நூற்களைப் படிப்பவனும், பொருள்வாங்கிப் படிப்பிப்பவனும், யாதேனுமொரு விரதத்தை யனுட்டித்து அதை யிடையிலே விடுகிற திடமில்லாதவனுஞ் சைவசித்தாந்த நிலையே மேலான நிலையென்னு முறுதியைவிட்டு மற்றுள்ள சமய தரிசனங்க ளெல்லாவற்றையு மேலாக மதித்து நடப்பவனுந் தானின்றசமையத்துக் கந்நியமான பசுநூலை முத்திநெறியென்று எண்ணிப்படித்து ஆராய்கிறவனும். எ-று. (௪௯)

* வசியம், ஆகருஷணம், மோகனம், தம்பனம், உச்சாடனம், மாரணம்.

அறிவை யளிக்கு மதுவன்றி யவலத் தருக்க
மறைவானு
மறுவில்வடிவ வானவரை வன்னி யதனை
மந்திரத்தைப்
பெறுவித் தருளும் பெரியோனைப் பேணா தொழிந்து
பிழைப்பானு
மறையோர் தமையும் பசுவினையு மாமாத் தெனவெண்
மனிதரையும்.

எ-து. ஞானத்தையுண்டாக்குந் தருக்கத்தைப் பேசுவதன்றிக் குதர்க்கத்தைப் பேசுகிறவனுங் குற்றமற்ற வடிவினையுடைய தேவர்க ளக்கினி மந்திரங்களிவற்றை யாராதனைசெய்யக் கற்பித்தருளு மாசிரியனையும் பிராமணரையும் பசுக்களையு மிகவு மகத்துக்க ளென்னப்பட்ட பெரியோர்களையும் பத்திசெய்யாமல் விட்டு அவர்களுக்குத் தீமைசெய்பவனும். எ-று.

மகாமகத்தென்னும் வடமொழி சிதைந்து நின்றது. (௯௰)

அரசன் றனையு மபவாத மறையு மவனு மவன்முன்னு
முரிய வினையைப் பிதிர்தேவர்க் குதவாதவனு மொழுங்கிலியும்
பரம சிவனு மறநெறியும் பாவ விதமும் பரபதமு
நரக விதமு மிலையென்றே நவிற்று மவனு நாடோறும்.

எ-து. அரசனையு மவன்முன்னேயும் பழிச்சொல் சொல்பவனும் பிதிர்க்களுக்குந் தேவர்களுக்குந் தான் செய்தற்குரிய கர்மமான சிராத்தந் தர்ப்பண முதலியவற்றைச் செய்யாதவனு மொழுக்கமில்லாதவனு மேலான சிவனு நன்னெறியாகிய புண்ணியமும் பாவவகையு மேலாகிய சுவர்க்கநரக வகையுமில்லையென்று நித்தலுஞ் சொல்லுகிற நாத்திகனும். எ-று.

அரசன்றனையு மென்னுமும்மை, மற்றுமுள்ளோரையு மென்றறிக, அவன்முன்னு மென்னுமும்மை அவனைக்காணாவிடத்து மென்றறிக.

பூணார் முலையைப் பகற்பொழுதிற் புணரு மவனும் பூரணையி
ஞெணா தறலின் மைதுனத்தைப் பசுவின் பகத்தி னயப்பானு
மாணா னவ்த மாசியத்து மயர்த்தும் பெரியோர் கருத்தாலும்
பேணா விருது மதிபகத்துப் பேட்பாற் புணரும் பேதையுமே.

எ-து. ஆபரணம் பூண்ட முலையினை யுடையவளைப் பகற்காலத்திலும் பூரணை முதலியவற்றினுந் தண்ணீரினுள்ளுங் கூசாமற் புணர்கிறவனும் பசுக்களின் யோனியிலும் ஆணாகப்பிறந்தோர் வாயினும்மைதுனத்தை விரும்புகிறவனு மறந்தும் பெரியோர்கண் மனத்தினாலும் விரும்பாத தாரமானவளை யாசையாற் புணரு மறிவில்லாதவனும். எ-று. (௯௨)

உடைப்பா னவனு முவகையுடன் பிரியா துறையு
முறவினையுங்

கெடுப்பா னவனுங் கிளர்சமயங் கிளப்பா னவனுங் கொடுங்கிளவி
புடைப்பா னவனும் புனற்கரையைக் கூட்டத் தடமும் புலனிழந்து
துடைப்பா னவனுந் துணையான தேவர் விமானந் துயக்குறவே.

எ-து. மகிழ்ச்சியோடும் பிரிவின்றி யிருக்கு நட்புடையவனை விரோதத்தால் வேறுக்குகிறவனு மோங்கிய சமணன் முதலிய புறச்சமையத்தவரை நிலைகேடுசெய்கிறவனும் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லுகிறவனுங் குளங்கரையையுங் கிணற்றங்கரையையும் வெட்டி யிடித்துப் போடுகிறவனும் அறிவுகெட்டு அஞ்ஞான மேலிடும்படி தமக்குத் துணையான தேவர்க ளிருக்குங் கோயில்களைப் பிடுங்குகிறவனும். எ-று. (௫௩)

இறவா திருக்கச் செயுமருந்தே யெனினு மதனை யில்லகத்துத்
துறவா திருந்தா ரனைவரொடுந் துய்த்தல் கடனே துயக்குறுப்
பிறர்சொல் பழியும் பேணாதே பெரியோர் தமக்கு நாணாதே
சிறிது மிரக்கஞ் செய்யாதே தானே யருந்துஞ் சிதடனுமே.

எ-து. சாவாத மூவாமருந்தே யானாலும் அதைத் தம்வீட்டில் விடப்படா திருந்தார் எல்லாரும் பகுந்துண்பதே முறைமை. அங்ஙனஞ்செய்யாமல் ஆசை மிகுதியால் அறிவு மயங்கிப் பிறராற் சொல்லும் பழிச்சொல்லையும் பாதுகாவாமற் பெரியோர்களுக்கு மருத்துவியாமற் புசிக்கிறோமே யென்று கூசாமற் சற்றுமிரக்கமுஞ் செய்யாமற் றானொருவனாகவே யிருந்து புசிக்குங் குணக்கேடனும். எ-று. (௫௪)

எனவே யிசைத்த வித்தொகையி லெண்ணு மிவர்க ளெல்லோரு
முனமே மொழிந்த பாதகத்திற் றணிய வுபபா தகமுற்றும்
வினையா ரிணைவேல் விழியாரு மிவற்றைப் புரியில் வேறல்லா
ரினியா முனிவ விதற்கிளைய பாவ விதமு மியம்புவமே.

எ-து. என்றுகூறிய வித்தொகையில் எண்ணு மிவர்களெல்லாரும் இவற்றிற்கு முன்னாகச் சொன்ன பாதகத்துக்குத் தண்ணிதான பாதகத்தைச்செய்யுங் கர்மிகளான உபபாதகராம். வேல்போன்ற இரண்டு விழிகளையுடைய மடவார்களு முற்கூறிய பாதகங்களைச் செய்தால் அவர்களும் வேறுகாரா யதிபாதகமுதலிய பெயரினைப் பெறுவார்கள். அகத்தியமுனிவனே மேலிந்த உபபாதகத்துக்குத் தண்ணிதான பாவவகையையு முனக்குச் சொல்லுகின்றோம் அதனைக் கேட்பாயாக. எ-று. (௫௫)

முற்கூறிய உபபாதகத்துக்குத் தண்ணிதான பாவவகைகளை விரித்துணர்த்துகின்றார்.

இச்செய்யுள் முதல் என்னுமித்தொகை யாவருமென்னுஞ் செய்யுளீறாக நாற்பத்தொருசெய்யுளும் ஒருதொடர்க் குளகம்.

கலிவிருத்தம்.

ஆவி னுக்கு மருமறை யாறங்க
நாவி னர்க்குந்தன் னாயக னுக்குமெய்த்
தாப தர்க்குஞ் சகிக்குந் தகைமைய
காவி நேர்விழிக் கன்னிகை யார்க்குமே. (௫௬)

உற்ற காரியத் தூறாக டம்மையு
முற்று வானு முகிழ்த்த மகிழ்ச்சியைத்
துற்று வார்தமைக் கண்டு துயக்குறும்
பற்றி லானும் பாருருப் பற்றியும்.

என்பன, பசுவுக்கும் நான்கு வேதங்களு மாறங்கமும் பயிலுகின்றநாவினையுடைய பிராமணருக்குந் தன்னுடைய ஆண்டவனுக்கும் வேடங்கட்டி நடிப்பதல்லாமல் உண்மையான தபோதனருக்குந் தன்தோழனுக்கும் அழகினையுடைய நீலோற்பல மலர்போன்ற கண்களையுடைய கன்னிகைகளுக்கும் உற்ற காரியங்களில் இடையூறுகளையுஞ் செய்கிறவனும், நல்வினையாலுண்டாகிய செல்வத்தை அனுபவிப்பவரையும் பிறருடைய ரூபலாவண்யங் கண்டு பொறாமலறிவு வருந்தும் அன்பில்லாதவனும். எ-று. (௫௭)

ஈட்டி னார்தனந் தன்னை யிறைக்குறக்
காட்டி னானுங் கருதிய கையனும்
பாட்டி னானுநற் பாவையர் தூடண
நாட்டி னானு நார்க்கு நவையுமே.

எ-து. நல்லமுயற்சியால் சம்பாதித்தவர் அடக்கப்பொருளை அரசனுக்குக் காட்டினவனும் அப்பொருளை இவ்வளவோவென்று நினைத்து மனம்புழுங்கிய ஈனனும் நற்குண நற்செய்கைகளையுடைய மாதர்களிடத்தில் தூஷிக்கத்தக்க பாட்டுகளைப் பாடுகிறவனுங் குணவான்களிடத்தில் குற்றத்தைக் கற்பிப்பவனும். எ-று. (௫௮)

இச்செய்யுள் முதலாக நீக்குவானு மலசல நித்தலுமென்னுஞ் செய்யுளீறாகநான்கு செய்யுளும் ஒருதொடர்.

ஆக்கள் சேரிடத் தாகுதிச் சாலையுட்
டேக்கு நீர்த்தடந் தேர்திகழ் வீதியுள்
வேர்க்க னுந்தருச் சாயையில் வெற்பினிற்
பூக்கி ளர்ந்த பொழிலின் புடையுமே. (௫௯)

சிலையி னீரிற் சிக்கதையிற் றேவர்த
மேலையின் மார்க்கத்தி லில்லத்தி லீமத்திற்
றொலைவி லாததூர் வாதியிற் றும்பையி
னிலைமை மாதவர் நீடு நிலத்துமே.

சிகதை என்பது மணற்குன்று.

உன்னத் தக்க தலத்தி லுவர்தனிற்
செங்கெ லாதிய செய்யிற் சிறப்புறு
வன்மி காதியிற் குண்டு வனத்தினுட்
டன்னைத் தானிகர் கோமயக் தன்னினும். (௬௩)

நீக்கு வாறு மலசல நீத்தலு
மாக்கி னன்மது பான நயந்துறு
மூர்க்க னுமுழ வாதி வினோதமு
மார்க்கும் வினைனு மாடிடு மற்பனும்.

என்பன, முன்னைச் செய்யுட்களிற் கூறிய அந்தந்த வெல்லைகளில் மல சலங்களை விடுகிறவனும் காடோறும் மதுபானத்தை நாவினால் விரும்பிப் பருகும் அறிவில்லாதவனுந் தந்துமி முதலிய வாத்தியங்கள் கீதங்கள் கூத்துக்களிவற்றை விரும்பும் அவத்தனும் கூத்துகளை யாடுகின்ற சிறியவனும். எ-று. (௬௪)

தேக்கு நீர்விளை யாடுஞ் சிறியனு
மார்க்கு நெஞ்சத் தவர்தமக் கந்தரம்
பார்க்கும் பாங்கிலி தானும் பவர்செறு
மார்க்கந் தன்னைத் தடுக்கும் வலியனும்.

எ-து. நிறைநீரிலே நீந்திவிளையாடுகிற அற்பனும் புலன்வழி போகாமன் மனத்தை நிறுத்தும் பெரியோர்களுக்குக் குற்றத்தைத்தேடு நீதியில்லாதவனும் யாவரு நடக்கும்வழியை முள்முதலியவற்றால் அடைத்து விலக்கும் இரக்கமில்லாதவனும். எ-று. (௬௫)

ஈடி லார்மனை யாதிய வெல்லையைப்
பாடி லாரெனப் பற்றும் படிறனுங்
கூட மான கருமமுங் கூறிடு
மூட னும்மத னைச்செயு மூர்க்கனும்.

எ-து. பலமில்லாமல் இளைத்தவர்கள் மனைமுதலாகிய பூமியை அவர்கள்தற்கு உரியவரல்லவென்று கைக்கொள்ளும் வஞ்சகனும் ஒருவருஞ் சொல்லாமன் மறைக்கத்தக்க காரியங்களைச் சொல்லும் அஞ்ஞானியும் அந்தக் காரியங்களைப் பிறர்காணச் செய்யும் அறிவில்லாதவனும். எ-று. (௬௬)

ஒளித்து நின்று பகைவனை யூறுசெய்
வெளிற்ற னுங்கன்னக் கோலொடு மிண்டனுந்
தெளித்த சொல்லை வழக்கிடைச் செப்பிடா
தொளித்த சொல்லை நிகழ்த்திடு நீசனும்.

எ-து. தன்சத்துருவை ஒளித்துநின்று கொல்லுஞ் சேவகப் பாடில்லாவதனுங் கன்னக்கோலெடுத்துப் பழகும் இடும்பனுமிருவர் தம்முண் மாறுகொண்டு வழக்கில்வந் தேறியவிடத்து மனுநூன்முறையே ஆராய்ந்து தியிட்ட சொல்லை வழக்கிற் சொல்லாமல் வாரம்பற்றி யோரமாகச்சொல்லும் புலையனும். எ-று. (௬௫)

கொடுமை ராதியைப் பண்ணிடுங் கோணனுங்
கொடுமை ராதியைக் கொள்ளுங் கொடியனு
மடியர் பாலிரங் காத வவலனு
மடியர் தம்மை யொறுத்திடு மற்பனும்.

எ-து. வில்முதலிய வாயுதங்களைப்பண்ணு நீதிக்கேடனும், வில் முதலிய ஆயுதங்களை விலைகொடுத்துக் கொள்ளுந் தீயவனுந், தன்னடியாரிடத்தில் இரக்கமில்லாத பொல்லாதவனும் அவ்வடியாரைக் கடிந்து நோயிக்குஞ் சிறியோனும். எ-று. (௬௬)

ஆவி னைத்தமிப் பானுமல் லுற
நாவி னற்பொய் நவிற்று நரகனுங்
கூவ வந்தது கேட்குங் கொடியனுங்
காவ லர்க்கப ராதக் கருத்தனும்.

எ-து. பசுக்களை வருத்தமுறும்படி அடிப்பவனும் நாவினு லசத்தியஞ்சொல்லு நாகத்துக்கு உரியவனும் அதைச் சொல்லுமிடத்துச் சென்று கேட்கும் பொல்லாதவனுந் தன் கருத்தனுக்குக் குற்றஞ்செய்யு மனமுடையவனும். எ-று. (௬எ)

உறவி னுக்கப ராதியு மூனுடற்
பிறவி வேரினைப் பீழும் பெருவலி
யறிவ னுக்குநல் லாரிய னுக்கலர்
புறனு ரைக்கு மவலப் புலையனும்.

எ-து. சுற்றத்தாருக்குத் தீங்குசெய்கிறவனுந் தசைமைபொருந்திய உடம்பினை யெடுப்பதற்கு மூலமாகிய வாணவத்தைக்களைந்து பிடுங்கு மிகுந்த திடமான அறிவினை யுடையவனையு நல்ல வாசிரியனையும் பழிச்சொல் சொல்லுந் தீமையையுடைய கன்மசண்டாளனும். எ-று. (௬அ)

சொக்கி டுந்தொழில் வல்ல துரிசனு
முக்கு நோயுற வோட்டு மருந்தினைப்

பொக்கம் பேசிக் கொடுக்கும் புலையனுந்
தக்க தாய்தந்தை வாட்டந் தணித்திடான். (௬௯)
தனித்தி ருந்துணுந் தண்ணிய கண்ணனு
முனித்த போதனர் தம்மைமுன் னூட்டிடான்
றுனித்த வாதுலர் துக்கந் துடைத்திடான்
பனித்த தாதர் பசியும் பறித்திடான்.

இவ்விரண்டு செய்யுளும் ஒருதொடர், பொருண் முதலியவற்றைக்கவரும் விருப்பத்தினாலே பிறரிடம் சொக்குப்போடுந் தொழிலில் வல்ல தூர்ச்சனனும் பிணிகெடும்படி நீக்கு மருந்திதுவென்று பொய்சொல்லி மருந்தல்லாத மருந்தைக் கொடுக்கும் பொல்லாதவனுந் தகுதியையுடைய மாதாபிதாக்கள் பசியைப் போக்காமல் இந்தியங்களைக் கோபிக்குந் தன்மையையுடைய தபோதனர்களை முந்தப் புசிப்பிக்காமலும் வறுமையால் வருந்துந் தரித்திரர்கள் பசித்துயரத்தைப் போக்காமலும் பசியினாலுலர்ந்த நல்லடிமைகள் பசியுநீக்காமலும் தானே தனித்திருந்து புசிக்கும் அற்பவறிவினை யுடையோனும். எ-று. (௭௰)

நீத்து முன்னைய வேத நெறியினைப்
பேர்த்து நின்ற பிராவிரச் சியனுந்
தீர்த்த னாவா னாதிசி னைதந்திடப்
பார்த்த பண்பி லவலப் படிறனும்.

எ-து. முற்காலத்திலுள்ள வேதாகமங்களிற் சொல்லிய சந்நியாசமார்க்கத்தின் வழியே யனுட்டியாமற்றானே ஒரு மார்க்கங் கற்பித்து நடக்குஞ் சந்நியாசியுஞ் சுத்தனாகிய சிவபிரானுடைய திருமதிண் முதலானவற்றை இடியவிட் டிரக்கமில்லாயல் பார்த்திருக்கும் நன்மையில்லாத தீமையையுடைய வஞ்சகனும். எ-று. (௭௧)

ஆக்க டம்மை யரும்பிணி வந்துறி
னோக்கி யேயத னோவுதன் னோவெனக்
காக்கி லானுங் கனத்தை யிளைத்தமெய்ச்
சேக்கண் மீது செறிக்குஞ் சிறியனும்.

எ-து. பசுக்களைப் பொறுத்தற்கரிய வியாதிகள் பொருந்திய வயிற்றைப் பார்த்தவற்றின் பிணியைத் தனக்குவந்த பிணிபோல நினைத்துப் பரிகாரஞ் செய்யாதவனும், உடலிளைத்து நிற்கும் எருதுகள்மேல் பொதிமுதலிய மிகுந்த பாரங்களை எற்று மற்பனும். எ-று. (௭௨)

விடையின் பீசத்தை வெய்ய வினைஞரா
னுடையச் செய்விக்கு மூனனும் வந்தையி
னிடையிற் பார மெடுத்து மிழுதையு
மிடபந் தன்னி லெடுத்து மிழுக்கனும்.

எ-து. எருதுகளினுடைய பீசத்தைக் கொடிய தொழிலினையுடைய சேமாறிகளா லுடையும்படி செய்விக்கும் பொல்லாதவனும், மலட்டுப் பசுவின் முதுகிற் பொதிகளை எடுக்கச்செய்யும் அறிவில்லாதவனும் இடபங்களிலே பொதிகளை யெடுக்கச்செய்யும் ஈனனும். எ-று. (௭௩)

வருந்து மேபதம் வைப்பின் மரிக்குமே
பொருந்து மண்ணிற் புழுக்களு மென்றுளம்
வருந்தி யேபத மெல்லென வைத்திடா
தருந்த வத்தைப் பிரிந்த வரக்கனும்.

எ-து. யாருக்கும் இடமாகப் பொருந்தும் பூமியி லடிவைக்குங்கால் புழுக்களும், எறும்பு முதலியவைகளும் வருந்தி நோமென்றுஞ் சாமென்று நினைந்து மனநொந்து அடியை மெத்தென வையாத வ[illegible]ய் கொல்லாத விரதத்தை விட்ட இராட்சதனுக் கொப்பானவனும். எ-று. (௭௪)

உண்ண வூனை விரும்பி யுயிர்க்கொலை
யெண்ணு வான்கொலை கண்டிரங் கான்கொலை
பண்ணு வானைத் தடுத்துப் பகர்கிலா
னண்ணு வானிவ ரோடெறு நால்வரும். (௭௫)

எ-து. வெளி.

மிக்க சாதியுட் டோன்றியும் வேதியர்
துக்கந் துய்த்திடச் செய்யுந் துரிசனுந்
தக்க தென்று மதுமணஞ் சார்தருந்
திக்கி னாசி செலுத்துஞ் சிறியனும்.

எ-து. உத்தமமான நல்ல குலத்திற் பிறந்தும் அக்குலத்துக்கேற்கப் பாதுகாவாமற் பிராமணர்களைத் துன்பமனுபவிக்கும்படி செய்யும் பொல்லாதவனும், கள்முதலிய நாற்றம்வந்து வீசுந்திசையில் அதை நல்லதென்று மூக்கினா லுகந்துகொள்ளும் ஈனனும். எ-று. (௭௬)

பாவஞ் செய்யப் பயமில் படிறனும்
ஏவஞ் செய்ய விளைப்பி லிழுதையுந்
தேவர் தம்மைக் குறித்துத் திகழ்விதி
மேவ யாகஞ்செய் யாத்தன வேந்தனும்.

எ-து. பாவஞ்செய்வதற்குப் பயப்படாத வஞ்சகனும், பிறருக்கு என்றும் பொல்லாங்கு செய்வதற்கு இளையாத மூடனுந், தேவர்களை நோக்கி அசுவமேதமுதலிய யாகங்களை விளங்கும் விதிமுறை யாகச் செய்யாத மிக்க திரவியத்தையுடைய இராசாவும். எ-று. (௭௭)

- எவ்வம்-என்பது திரிந்துநின்றது.

ஆல யத்தை யமலனுக் காதிக்குங்
கோவி னேமிலைக் கூவிளந் தண்ணறு

மாலை சூட்டவும் வல்லமு மல்லமுக்
கால மும்மென நோவறுங் கல்லனும்.

எ-து. யாம் நின்மலனாகிய சிவபிரானுக்குத் திருக்கோயிலைத் தான் கட்டினோமில்லை; அல்லாமல் குளிர்ச்சியுடைத்தாகிய மணம் அமைந்த வில்வமாலை முதலியவற்றைத் திரிகாலமுஞ் சிவபிரானுடைய திருமுடியிலேசாத்தவுஞ் சமர்த்துடையோமு மல்லவென்று மனத்தில் நோவில்லாத கன்னெஞ்சமுடையவனும். எ-று. (௭௮)

கூர்த்த தீபனங் கூடக் குறுகினர்க்
கார்த்தெ திர்ந்தழை யாத வவலனு
மூத்து ளார்பிணி முற்றினர் பற்றிலர்
பார்த்த போது பரிவில் படிறனும்.

எ-து. மிகுந்த பசிகொண்டு வந்தணுகினவருக்கு எதிரேசென்று நல்ல வார்த்தைசொல்லி யழைத்து அன்னமிடாத பொல்லாதவனும், வயோதிகர், வியாதியாளர், மிடியரிவர்கள் தன்னை வந்து கண்டபோதானாலும் அவர்கண்மேல் இரக்கமில்லாத பொல்லாதவனும். எ-று. (௭௯)

தன்னிற் றண்ணிய னேவலைத் தக்கதென்
றுன்னிச் செய்யு மறிவில வூனனு
மென்னெ னாதசங் காக்கு மெளியனுந்
துன்னு மாயிடங் காக்குந் தொழிலனும்.

எ-து. தனக்குக் கீழானவனேவலை நல்லதென்று எண்ணிச் செய்யும் அறிவில்லாத குற்றமுடையவனும் ஆடு, எருமை இவைகளைக் காத்ததினால் வரும் பயன் யாதென்று எண்ணாமல் மேய்க்கு மொய்யவனும். எ-று. (௮௰)

அச்ச மின்றி யருவினைக் காடகத்
திச்சை யால்வருந் துன்பமு மெண்ணிடான்
முச்சி யேமரக் கோவை முயற்சியாற்
நைச்சி டாது கடல்செலுங் கல்லனும்.

எ-து. தன வாஞ்சையினாலே பொறுத்தற்கரிய பாவத்துக்கு அஞ்சாமல் ஆழ்ந்த கடலினடுவே காற்றுமுதலிய பொருந்திற் கப்பல்கவிழ்ந்து மரிப்போமென்னுந் துக்கமும் எண்ணாமல் முயற்சி மிகுதியாலே கப்பலைப் பண்ணி அதிலேறுவதை வெறுத்திடாமற் கடலோடுங் கன்னெஞ்சனும். எ-று.

மரத்தாற் கோத்ததினாலே மரக்கோவையெனக் கப்பற்கோர் காரணப் பெயராயிற்று.

(௮௧)

அகத்திற் பண்பறுத் தாடகத் தாசையான்
முகத்திற் பண்பை முகிழ்த்த விதத்துடன்

சகத்திற் காளையர் தம்மை மயக்குவார்க்
குகப்புச் செய்தவ டோள்புண ருனனும்.

எ-து. உள்ளத்தில் அன்பை ஒழித்துப் பொருளாசையினன் முகத்திற் கண்மலர்ச்சியைத் தோற்றுவித்து இராக வகையினாலே பூமியில் இளைஞராயுள்ளவரை மோகிப்பிக்கும் வேசைகளுக்குச் சந்தோஷத்தைச் செய்து அவர்கள் தோளிணையைக் கூடுந் தீமையுடையவனும். எ-று. (௮௨)

தபதி காருகன் கொல்லன் றனமனர்க்
குபக ரிப்பனென் றெட்டின னூன்வலி
யபக ரிக்கும் பிணியறுப் பானொடு
மிவருங் கூலி யருங்கப டெய்திடின்

எ-து. சிற்பாசாரியு, மீரங்கொல்லியுங், கொல்லனு, மரசர்களுக்குத் திரவியங்களை ஆதாயமாக்கிக் கொடுப்பேனென்று இராசகாரியம் விசாரிக்கப் பொருந்தினவனுஞ், சரீரபலத்தைக் கெடுக்கும் வியாதியைத் தீர்க்கும் மருத்துவனுங், கூலியாளருமாகிய இவர்களாறுபேருந், தத்தஞ் செய்தொழில்களிலே வஞ்சகஞ் செய்வாராகு லவர்களும். எ-று. (௮௩)

வேலை தோறும் வினைசெய வேண்டியே
கூலி யென்றிரை மெய்க்குக் கொடுத்திடான்
சால வுண்ணுஞ் சழக்கனுந் தாமத
வேலை மூவைந்திற் பின்னு ணும் விணனும்.

எ-து. காலந்தோறும் அததற்கேற்ற சற்கருமங்கள் செய்யும்பொருட்டுத் தன் சரீரத்துக்குக் கூலியென்று உணவைக் கொடாம லுணவுச் சுவை விருப்பத்தினாலே புருஷாகாரத்துக்குமேல், மிகவுமுண்ணும் பொல்லாத மனத்தையுடையவனும், இராத்திரிகாலம் பதினைந்து நாழிகைக்கு மேற் புசிக்கு மில்வாழ்பவனாகிய வவத்தனும். எ-று.

மூவைந்தென்று - அர்த்தயாமத்தைக் குறிக்கையால், அர்த்தயாமம் பதினொன்றேகாலுக்கு மேலெனச் சொல்லவும்படும். எனவே ஒருசாமத்துக்குள்ளே புசித்தல் சிறப்பெனக் கொள்க. (௮௪)

ஆறி லொன்று கடமைகொள் ளாததி
னேற வேகொளு மீடி லிறைவனு
மூறு செய்திடு வானு முலகினை
வேறு வேறுதன் னேவல் விதத்தினும்.

எ-து. ஆறிலொரு கடைமைகொள்ளாமலதற்கு அதிகமாகக் கொள்ளு நன்மையில்லாத அரசனும், தன்னேவல் வகையினால் சேனைகளாயுள்ளவரையும், அதிகாரிகளையுங் கள்வரையுங்கொண்டு தேசத்துக்குப் பலவகையாகத் தீங்குசெய்விக்குங் கொடுங்கோன் மன்னவனும். எ-று. (௮௫)

இத்த னைத்து விறைவ னிருநிதி
னைத்தி டாது கவரக் கருதிய
சித்த மேவிடச் சென்றிரந் தேகொளும்
பொய்த்த வம்புரி பூசுரன் றானுமே.

எ-து. முன்னே கூறிய விக்கொடுமைகளோடு கூடியகொடுங்கோன் மன்னவனுடைய திரவியத்தை யாகாதென்று வெறுக்காமல் அதை வாங்க எண்ணுமாசை மிகுதியினாலே அவனிடத்திற் சென்றிரந்து கேட்டு வாங்கும் பொய்த்தவஞ் செய்கின்ற பிராமணனும். எ-று. (அசு)

சோரன் றன்னைத் துயக்க மனத்தினாற்
சோர னன்றென நீக்குந் துரிசனுஞ்
சோர [illegible]ல்லினைச் சூட்சி யிழப்பினாற்
சோர னென்று துணிந்திடுந் துட்டனும்.

எ-து. யூகமற்ற மனத்தினாலே கள்ளனைக் கள்ளனல்லவென்று விடும்பொல்லாத அரசனும், ஆராய்ந்து விசாரியாத அறிவில்லாமையாற் கள்ளனல்லாதவனைக் கள்ளனென்று ஆக்கினைசெய்யுங் கொடுங்கோன் மன்னவனும். எ-று. (அஎ)

சோர னுக்குத் துணைசெலுந் துட்டனுஞ்
சோர வித்தைகள் சொல்லுந் துரிசனுஞ்
சோர னைச்சோர னென்றறிந் துந்தானுஞ்
சோர னுமவ னைச்சுளி யானுமே.

எ-து. கள்ளன் றிருடுமிடத்தில் அவனுக்குத் துணைப்போன தீயவனும், அவனுக்குக் களவுநூல்களை உபதேசிக்கும் பொல்லாதவனும், கள்ளனைக் கள்ளனென்றறிந்தும் அவனோடு சிநேகஞ் செய்யுங் கள்ளனும், அவனைக்கண்டா லித்தொழில் நீசெய்யவேண்டாமென்று கோபிக்காதவனும். எ-று.

சோர வித்தைகளாவன—மந்திரந் தெய்வமருந்தே நிமித்தந் தந்திரமிடனே காலங்கருவியென் றெண்விதமாயிருக்கும்; இதனைச் சிலப்பதிகார முதலிய நூல்களிற் காண்க. (அஅ)

ஏந்தி ளந்தடங் கொங்கையை யின்புறுங்
காந்த னீங்கவக் காரிகை தோளிணை
தோய்ந்த சோரனைத் தொட்டுத் துயர்செயா
வேந்த னும்மனைச் சோரனில் வேறலன்.

எ-து. ஆபரணங்கள் பூண்டு இளமைத் தன்மையையுடைய பெரிய முலையினையுடையவளைக் கூடி மனமகிழுங் கணவன் பிரிந்தகாலத்தில் அவளுடைய தோளிணையைப் புணர்ந்த கள்ளனைப் பிடித்துத் தண்டனை செய்யாத அரசனும் பிறர் மனையில் செல்லுங் கள்ளனில் வேறாகமாட்டானாகையாலந்தஅரசனும். எ-று. (அஅ)

பாலை நெய்யைப் பலத்தைத் திலத்தினைச்
சாலி யாதியன் றதிவைத் தண்புனன்
மூல மாதி முதிரை யிறுதியைச்
சேலை யோடுபட் டாடை திருடனும்.

எ-து. வெளி. மூலம்-கிழங்கு, முதிரை-துவரை. (௧௰)

பரிய கம்பளந் தன்னையும் பாசமும்
வரிய வூனு மதுவுந் தயிலமுந்
திரண மீறு செறிந்தசில் பண்டமுங்
காமு றப்பற்றிக் கொண்டிடுங் கள்வனும்.

எ-து. வெளி, பாசம்-கயிறு, வரியவூன்-ஆகாதென்றவரைத்தவூன்.

சத்தி ரந்தனைப் பாதுகை தன்னையும்
வித்த ரித்திடும் பாயின் விதத்தையுங்
கொத்து லாமலர்க் கூடையும் பேழையு
மத்த முட்டி யெடுக்கு மவலனும்.

எ-து. வெளி, கொத்துலாமலர்க்கூடை – திருப்பூங்கூடை, அத்தம்--கை. (௧௨)

சங்க மாதி சலத்திற் சனித்தவும்
வங்க மாதி மரத்தின் வகுத்தவு
மங்க லத்த மழலை முழவமு
மங்கை யாற்பற்றிக் கொள்ளு மவலனும்.

எ-து. சங்குமுதலாக நீரிற் பிறந்துள்ளனவுங், கப்பன்முதலாக மரத்தினாற்செய்துள்ளனவு, மங்கலவாத்தியமாகிய மழலைச்சொல்லையுடைய மத்தளமுந் திருடுமெவத்தனும். எ-று. (௧௩)

ஈயந் தன்னை யிரும்பினைச் செம்பினைத்
தேய னுந்திர புத்தனைச் செங்கலை
மாய வாழ்க்கையர் தங்கண் மனையினு
மேயு மேதா மெடுக்கு மிழுதையும்.

எ-து. வெளி. தேயன்-திருடன். திரபு-பித்தளை. இவைகள் வடமொழி. (௧௪)

பிறர்பொ ருட்கடு கிற்பிள வாயினு
மறைய நின்றத னைக்கொளும் வஞ்சனு
நிறைய றக்கொள வெண்ணிடு நெஞ்சனு
மறையு மாதனு மன்னியர்க் காகவே.

எ-து. பிறருக்குரிய பொருள்களைக் கடுகிற் பாதியானாலு மவர்கள் காணாதபடி சென்று திருடுங் கள்ளனும், உத்தமமான நிறையென்னுங்குணநீங்கப் பிறர்பொருளைக் கைக்கொள்ள விசாரிக்கு மனத்தை யுடையவனும், ஒருவன் பொருளைப் பிறருக்காகும்படி சொல்லு மறிவில்லாதவனும். எ-று. (௯௫)

என்னு மித்தொகை யாவரு மீங்கியற்
பன்னு பாவக் கடலிடைப் பட்டுளா
ரின்ன பேதத் துரிசு மியற்றிடிற்
பின்னு வார்குழற் பேதையர் தாமுமே.

எ-து. இவ்வாறு சொல்லப்பட்ட இப்பாவ வகையின் தொகையிலுள்ளவரெல்லாரு மிவ்விடத்தி லிவ்வியலிலே விதித்த வுபபாதகத்திற் றண்ணிய பாவமாகிய கடலின்க ணமிழ்ந்தும் பாவிகளாவார்கள், பின்னற்றொழில் அமைந்த நீண்ட வளகபாரத்தையுடைய பெண்களு முன்னே கூறிய விப்பாவவகைகளாகிய தீமைகளைச் செய்வார்களானா லத்தன்மை யுடைய பாவிகளாவார்கள். எ-று.

பாவக்கடலிடைப்பட்டுளார் எ-து. நடுநிலைத்தீபகம். (௯௬)

மேலேயதிபாதகீ முதலிய கர்மங்களைச் செய்தவர்கள் பெறும்பய னுணர்த்துகின்றார்.

ஈட்டு மிந்த வினைத்தொகை யாவையு
மீட்டி டும்படி வெய்ய நமன்றமர்
காட்டி டுந்துய ராக்கை கலந்துபோய்
வாட்டு மாநிர யத்துள் வதிவரே

எ-து. அதிபாதகர் முதலா னவர்க ளிப்படி செய்யு மிவ்வதிபாதக முதலிய கர்ம பலங்க ளெல்லாவற்றையு மொழிக்கும்படி கொடிய எமதூதர்களுண்டாக்குந் துன்பவுடம்பாகிய யாதனா சரீர மடைந்துசென்று துக்கத்தைக் கொடுக்கு நரகத்திலே யிருப்பார்கள். எ-று. (௯௭)

மனிதரோ யல்லாமல் தீமைசெய்த விலங்கு பறவைகளு நரகமடையுமென்ப துணர்த்துகின்றார்.

மைந்தர் மாதரு மற்றை யலியுமோ
பந்த பாச விலங்கும் பறவையு
முந்த வாக்கை யிதுவென முன்னுறு
மந்த வாக்கை யடைந்தகன் றாழுமே.

எ-து. ஆடவராயுள்ளவர் பெண்டிராயுள்ளவர் அலியாயாயுள்ளவர் மாத்திரமோ நரகத்தி லழுந்துவது, அவர்களை யல்லாத பாசபந்தத்தையுடைய மிருகங்களும் பறவைகளு முந்தவுண்டாகிய வுடம்புபோலெதிர்

வரும் யாதனுசரீரங்களையடைந்து பூமியிலெடுத்த வச்சினின்றுநீங்கி நரகத்திலழுந்துவார்கள். எ-று. (௯௮)

முன்னே அதிபாதக முதலிய பாவபலங்களைக் கொடுப்பவன்
எமனென்றுஞ் சிவபத்தர்கள் செய்த பாவபலங்களை
யாசிரியன் பிராயச்சித்தத்தாற் போக்குவா
னென்று முணர்த்துகின்றார்.

விண்ணு ளார்நரர் மற்றை விலங்குமே
பண்ணு பாவ பலத்தைக் கொடுப்பவன்
றிண்ண மேயமன் றேசிகன் றீர்த்திடும்
பண்ணிற் பாவ விதஞ்சிவ பத்தரும்.

எ-து. தேவர்களும், மனிதர்களும், இவர்களல்லாத மிருகங்களும், செய்யுந் தீவினைப்பயனை யவைகளுக்குக் கொடுப்பவன் எமராசன், சிவபத்தியுள்ளவர்கள் பாவவகைகளைச் செய்வார்களாகில் அப் பாவபலன்களை யாசிரியன் பிராயச்சித்த சாந்திகளாலே போக்கிவிடுவானிது நிச்சயம். எ-று.

திண்ணமென்பதனை யிருபாலுங் கூட்டுக. (௯௯)

வெளியாகப் பாவஞ்செய்த ஆன்மாக்களை அரசன் தண்டிப்
பான் அவனாற் றண்டிக்கப்படாதவர்களை யெமனே
தண்டிப்பானென் றுணர்த்துகின்றார்.

பிணக்கந் தன்னையும் பெற்றவர் தம்மிடைக்
கணக்கி லாரையுங் கள்வர்க டம்மையும்
வணக்கு வான்மன்னன் மற்றையர் தங்களை
யிணக்கு வானர கத்து ளியமனே.

எ-து. ஒருவருக்கொருவர் வழக்கிலே மாறுபாட்டைப் பெற்று வந்தவிடத்தி லழிவழக்குடையவரையும் திருடர் முதலானவர்களையுந் தண்டித்து நிறுத்துகின்றவ னரசனே, அவனாற் றண்டிக்கப்படாதவரையு மாசிரியராற் பிராயச்சித்தப் படாதவரையு நரகத்திலே செலுத்தித் தண்டிப்பவனெமராசன். எ-று. (௱)

இந்தப் பாவங்கள் தீர்த்துக் கொள்வதற்குப் பரிகாரஞ்
செய்துகொள்ளுமா றுணர்த்துகின்றார்.

ஆத லாற்செய்த தீங்கை யறுத்திட
வேத மாதி விதியும் விளங்கிய
போத கன்பதம் போற்ற வவன்செயும்
வாதி யாத பிரத்திய வாயமே.

எ-து. தீவினை செய்தவர்களுக்கு நரகமும் அந்நரகத்திலே செலுத்துமொரு எமராசனு முண்டாகையினாலே, ஆன்மாக்கள் தாந்தாஞ்செய்த

பாவங்களை யொழிக்கும் பொருட்டு வேதமுதலிய நூல்களிற் சொன்ன விதிகளையுமறிந்த வாசிரியனுடைய திருவடியை வணங்குவார்களானு லாசிரியனுமவ் வான்மாக்களைத் தீவினைகள் வருத்தாமைக்குக் காரணமான பரிகாரத்தைச் செய்து தீர்ப்பான். எ-று. (௱௧)

மேன்முடிந்தது முடித்துணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அதிபா தகமு மதிற்பிரிவு மவல மகபா தகமைந்துங்
கதிர மகபா தகந்தன்னிற் கனிட்ட மான பாதகமு
மதனிற் றணிய வதற்கணிய வுபபா தகமு மதற்கணிய
வதனிற் றணிய பல்பாவ விதமுந் தொகைசெய் தறைந்தாமே.

எ-து. அதிபாதகமும் அவ்வதிபாதக வகையுந் துன்பத்தை விளைக்கும் பஞ்சமா பாதகமுஞ் சொல்லப்பட்ட அப் பஞ்சமாபாதகத்திற்றண்ணிமையான பாதகமு மப் பாதகத்திற் றண்ணிமையுடைய வாய்தற்கடுத்த வுபபாதகமு மவ் வுபபாதகத்துக் கடுத்திருப்பனவையா யதனிலுந்தண்ணிதான பலவகையான பாவவகைகளையு மிவ்வியலில்தொகுத்துச்சொன்னோமிதனை முனிவனே யறிவாயாக. எ-று.

கதிரம், வடமொழி. (௱௨)

கலிவிருத்தம்.

என்றுசிவ நிந்தையெழு வாய்வினை யிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுலனைந் தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-து. வெளி. (௱௩)

சிவத்துதி யுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கன்றிய காலனைக் காய்ந்தவனே கரிசினைப் போக்கிருக்
காய்ந்தவனே
வென்றிவில் வேடனை விட்டினனே விரும்படி யார்க்கருள்
விட்டினனே
யன்றிரு வர்க்கரி தாயவனே யண்டமு மாக்கிய
தாயவனே
யொன்றிய வெங்கணு முற்றவனே யுணர்ந்தன னுன்னையு
முற்றவனே.

எ-று. மார்க்கண்டனைக் கோபித்து அடைந்த எமனைச் சங்கரித்தவனே; ஆன்மாக்களுடைய அஞ்ஞானத்தை நீக்கும் வேதத்தை முனிவர்க்கறி

யும்படி சொன்னவனே ; வெற்றியமைந்த கருப்பு வில்லினை யுடைய வேளாகிய காமனைக் கொன்றவனே, தன்னை விரும்பு மடியவர்களுக்குக் கொடுக்கு முத்தியை யுடையவனே, அடியு முடியுந் தேடியகாலத்தில் அரிபிரமர் இருவர்களுக்குங் காண்பதற்கு அரிதாக நின்றவனே ; அண்டங்களை உண்டாக்கிய வுலகமாதாவானவனே, எப்பொருளுந் தானொருவனென்று சொல்லும்படி யெவ்விடத்தும் வியாப்தியினால் வேறறப்பொருந்தி நின்றவனே, எவரெவ ரிருவினை செய்ய நினைக்கு நினைவையு முயிர்க்குயிரா யிருந்தவரவர் நினைக்கு முன்னே யறிந்தவனாகிய தவத்தவனே. எ-று.

அண்டமு மென்னு மும்மை பிண்டமு மெனவுங் கொள்ளக்கிடந்தது. (௱௪)

இதுவுமது.

இடுபலி கொண்டுணி யென்பவனே யிருவினை தீர்த்திடு மென்பவ
னடநவி லுந்தொழி னல்லவனே நாசமு மாமய லல்லவனே [னே
மடலவிழ் கொன்றைய மாலையனே வந்தனை யாஞ்செயு மாலயனே
படிதனிற் காசிப் பதியவனே பல்லுயிர்க் கெல்லாம் பதியவனே.

எ-து. இருடி பத்தினிகள் மனைகள்தோறு மிடும் பலியைப் பெற்றுண்பவனென்று யாவராலுஞ் சொல்லப்படுபவனே, நல்வினை தீவினை யிரண்டையு நீக்கு மென்னுடைய விறைவனே, பஞ்சகிருத்தியமாகிய நிருத்தம்பயிலு நல்ல தொழிலை யுடையவனே, பிறப்பிறப்பினை யடையும் பிரமனல்லாதவனே ; இதழ் விரியும் கொன்றைமாலையை யுடையவனே, யாம் ஆராதனை செய்யுந் திருக்கோயிலில் உள்ளவனே, பூமியினிலைபெற்றிருக்கும் காசிப்பதியை யுடையவனே, எல்லா வான்மாக்களுக்குங் கருத்தாவானவனே. எ-று. (௱௫)

பிள்ளையார் துதி யுணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பூதி பூடணன் வேத பாடணன் பூளை சூடினன் காளி யூடின
னாதி நாயகன் பேதை நாயக னுமை பூணினன் வாய்மை பேணினன்
போதன் மாதவ னாடி நேடவும் பூண வேணயங் காணொ ணாவரன்
காதன் மாமக னாறு மாமுகன் காசில் வாசகம் பேசு வாமரோ.

எ-து. திருநீற்றையே யாபரணமாகத் தரிப்பவனும் வேதத்தையருளிச் செய்தவனும், பூளை மலரை அழகியசடையில் முடித்தவனும் காளியுடனே வாதுசெய்தவனும், ஆதிகருத்தாவும், உமைக்குக் கணவனும், ஆமையோட்டை யாபரணமாக வணிந்தவனும், வேதாகமங்களைப் பாதுகாப்பவனும், தாமரைமலரில் உறையும் பிரமனும், திருமாலுந் தம்முண் மாறுபட்டு தேடவு மவர்கள் கண்ணிற் பொருந்தும்படி நிலைமை பொருந்திய தன்மையைக் காணவொண்ணாதவனுமான சிவபிரானுடைய குமாரனாகிய பிள்ளையார் குற்றமற்ற திருவாக்கைப் புகழா நின்றோம். எ-று. (௱௬)

மேலகத்திய துதி உணர்த்துகின்றார்.

ஆறு சூடின னீறு மாடின னால நீழலன் மூல ஞாழல
னேற தேறினன் கீறு கூறைய னீறி லாதவன் றேறி லாதவன்
மாறி லாவரன் வேறி லாவரன் வாய்மை பேசினன் றீமை கூசினன்
கூறு மாகமந் தேறு மாதவன் கோயி லாவதென் கோவு நாவுமே.

எ-து. கங்கையைத் தரித்தவனும் திருநீற்றைத் திருமேனியெங்கும் பூசவோனும் கல்லாலின்கீழ் இருப்பவனு மாங்கூரில் ஞாழல்முதலின் அடியிலே யிருப்பவனும் இடபத்தி லேறுபவனும் கிழிக்கப்பட்டகோவணவாடையை யுடையவனும் நாசமில்லாதவனும் ஆராயின் எவற்றையும் விளக்கும் ஞானதித்தியனும் வணங்கினவர்களுக்கு மாறாத வரத்தைக் கொடுப்பவனும் எவற்றிற்கும் அந்நியமாகாமற் கலந்து நிற்குஞ் சங்கார கருத்தாவும் உண்மைப் பொருளை உபதேசிக்கும் ஆசிரியனும் தன்னையடைந்த ஆன்மாக்களுக்குத் தீமைசெய்ய நாணுவோனுமான சிவபிரான் அருளிச்செய்த சிவாகமத்தை யுள்ளபடி அறிந்த பெரிய தபோதனனாகிய அகத்திய முனிவனுக்கு என்கண்ணு நாவுமே எழுந்தருளியிருக்குந் திருக்கோயில். எ-று. கோ எ-து. கண். (௱௭)

ஆறாவது பாவவியல்

முற்றும்.

## ஏழாவது,

## சுவர்க்கநரகவியல்.

மேலிவ்வோத் தென்னுதலிற்றோ வெனின் ஒத்து நுதலியதூஉ மோத்தினது பெயருரைக்கவே விளங்கும். ஆயினிவ் வோத்தென்ன பெயர்த்தோவெனின் முன்னை யியல்களிற் கூறப்பட்ட புண்ணிய பாவங்களைச்செய்தவர்களடையுஞ்சுவர்க்கநரகங்களின் திறத்தை யுணர்த்திற்றாகலாற் சுவர்க்க நரகவிய லென்னும் பெயர்த்து. இதனுளித்தலைச் செய்யுள் இரண்டுமென்னுதலிற்றோ வெனின் இவ்வியலிற் கூறுந் திறத்தைத் தொகுத்து உணர்த்துதனுதலிற்று.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அறைந்த வதிபா தகமாதி யடைந்தா ரியம னுலகதனைச்
செறிந்து சிவந்த விழிகண்டு சித்தங் கலங்கிச் செயலழிந்து
பிறிந்து புணர்ந்து பிலவழியைப் பிடித்துத் தூத ரடித்தெறிய
மறிந்து நிரயக் குழிவீழ்ந்து வருந்தும் விதத்தை வகுப்பதன்முன்.

அறிக முனிவ வறம்புரிந்தா ரவரு மியம னுலகதனை
நெறியிற் றரும பலநிகழ நீடு மகிழ்ச்சி கூடியிடச்
செறியு முறையு மவர்க்கவனுஞ் செய்யுஞ் சிறப்புந் துறக்கத்தி
னுறையு முறையுந் தொகைசெய்தே யுரைப்பா முலகு முவப்புறவே

இவையிரண்டுமொருதொடர். முன்னை இயலிலே கூறிய அதிபாதக முதலிய பாவவகைகளைச் செய்தவர்கள் எமலோகத்திற் சென்று எமராசன் கோபத்தினால் சிவந்த கண்ணினைக்கண்டு மனங்கலங்கிச் செயலற்றுச் சுவர்க்கத்துக்குப்போம் வழியைவிட்டு நரகத்துக்குப்போம் பிலத்துவாரத்தையடைந்து தம்மைப் பிடித்துக்கொண்டு செல்லும் யமதூதர்கள் அடித்தெடுத்தெறியத் தலைகீழாய் நரகக்குழியில் விழுந்து வருந்தும் வகைகளை வகுத்துச் சொல்வதற்கு முன்னே புண்ணியங்களைச் செய்தவர்களும் எமலோகத்தின் முறையாலே புண்ணிய பலன்கள் வந்து பொருந்துகையினால் நிலைபெற்ற மனமகிழ்ச்சியாகச் சென்றடையு முறைமையையும் அவர்களுக்கந்த எமராசன் செய்யுஞ் சிறப்பும் அவர்கள் சுவர்க்கத்தில் இருக்கு முறைமையையுந் தொகுத்து உலகத்துக்கு மேன்மை உண்டாகச் சொல்லுகின்றோம் அதனை மலையமுனிவனே யறியக்கடவை. எ-று. (௨)

யாக்கை நிலையில்லாமை உணர்த்துகின்றார்.

முளைத்த கருவு மழவுருவு முதிரா வுருவு முதிர்ந்தமையா
விளைத்த வடிவு மெனுமிவற்றி னிருந்த வுயிர்கள் வினைபிறழும்
வளைத்த தூதர் வதைசெய்ய மற்றோ ருடலம் பற்றிமுனம்
விளைத்த செய்திப் பலம்விளைய வியம புரியை விரவிடுமே.

எ-து. கர்ப்பகோளகையிற் பதிந்த கர்ப்பமும் பாலகவடிவமு முதிராத தருணவடிவமு மூப்படைந்த தன்மையினால் மெலிந்த விருத்தவடிவமுமாகிய இந்தச் சரீரங்களிற் பொருந்திய ஆன்மாக்களூழ்வினை தொலைந்த வளவில் வந்து சூழ்ந்து எமதூதர்கள் வதைக்க இப்பூத சரீரத்தை விட்டு யாதனா சரீரத்தையடைந்து அவ்விடத்தின் முன்னாட்செய்த கர்மபலம் பொருந்த அதையனுபவிக்கும் பொருட்டு எமலோகத்தை யடைவார்கள். எ-று. (௩)

மேனிறுத்த முறையானே யறம்புரிந்தவர்கள் எமலோகத்தை
யடையு முறைமை யுணர்த்துவான் றொடங்கி
யதனுட் பாதுகை யுதவினவ ரடையு
முறைமை யுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

பாதுகை யுதவினர் பனவரு முறவே
வாதமு மனபரி வாவழி யுகையா
வேதரி யதுவென வெளிதுற வெவையும்
போதக ரிவரென யமபுரி புகுவார்.

எ-து. அந்தணர்கள் பெறும்படி செருப்பு மரவடியிவைகளைக் கொடுத்தவர்கள், வேகத்திஞல் வாயுவையொத்த குதிரை, வழியில்வந்து பொருந்த வதிலேறி நடத்தி யிவர்களுக்கரிய பொருள் யாதென்று சொல்லும்படி யெப்பொருளுங் கைவந்து பொருந்தி யறிவுடையவர்களிவர்களென்று சொல்லும்படி யெமலோகத்தை யடைவார்கள். எ-று. (௪)

குடைதானம் பண்ணினவர்களடையும்பல
முணர்த்துகின்றார்.

சத்திர முதவினர் தகைமையர் பெறவே
மொய்த்தெழு முகினிழல் வழியுற முறையா
லெத்தொகை யினியன வவையெளி துறவே
சித்தமு மகிழ்வுற யமபுரி செறிவார்.

எ-து. வெளி. சத்திரம், குடை. (௫)

வஸ்த்ரதானஞ் செய்தவர்களடையுமுறைமை
யுணர்த்துகின்றார்.

பட்டினை யுதவினர் பனவரு முறவே
தொட்டிட வினியன துகிற்புனை வடிவோ
டிட்டம துறுபயன் வழியெளி துறவே
சிட்டரு மிவரென யமபுரி செறிவார்.

எ-து. வெளி. சிட்டர்-பெரியோர். (௬)

மெத்தை தானஞ்செய்தவர்களடையு முறைமை
யுணர்த்துகின்றார்.

தவிசினை யுதவினர் தகைமையர் பெறவே
புவி தனி லரியது பொருவினை யரிது
சிவிகையு முறவதன் மிசைவழி திகழ்வா
ரிவர்மிகு தவரென யமபுரி யிசைவார்.

எ-து. வெளி. தவிசு-மெத்தை, சிவிகை-பல்லக்கு. (௭)

அசுவதானம் பண்ணினவர்களடையுமுறைமை
யுணர்த்துகின்றார்.

தத்துறு பரியினை யுதவிய தகையோ
ரத்தகு பரிமிசை யுழகுற வழியே
யெத்தொகை யினியன வவையெளி துறவே
சித்தரு மிவரென யமபுரி செறிவார்.

எ-து. வெளி. சித்தர்-சித்தியையுடையோர். (௮)

கட்டில் தானம் பண்ணினவர்களடையு முறைமை
யுணர்த்துகின்றார்.

கட்டிலை யதனையு முதவினர் கவினு
ரிட்டம துறுமஃ தெனவழி யிடையே

கிட்டிய வுதவொடு கெழுமிய வழகாற்
கிட்டரு மிவமொன யமபுரி செறிவார்.

எ-து. வெளி. கட்டுவை, கட்டில். (௯)

சாலை தோப்பு வைத்தவர்க ளடையு முறைமை
யுணர்த்துகின்றார்.

பொழிலினை நிறுவிய பொருவரு புகழோர்
நிழலுறு பொழில்வழி நிறைமல ருறவே
விழைவினி லினியன வெவையவை மிகவே
யழகிய ரிவமொன யமபுரி யடைவார்

எ-து. வெளி. பொருவரு, ஒப்பில்லாதது. விழைவு, விருப்பு. (௰)

திருநந்தவனம் வைத்தவர்க ளடையு முறைமை
யுணர்த்துகின்றார்.

பூமலி பொழிலினை நிறுவிய புகழோர்
தேமல ரிரதமு முறவணி செறிவா
ரேமமு மிசைவர்கள் வழியிடை யெளிதே
நாமலி புகழொடு நடுவனை யடைவார்.

எ-து. வெளி. இதனுள் அணி-அலங்காரம். ஏமம்-இன்பம். நடுவன் ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்களை ஏற்றக்குறைச்ச லில்லாமலறிந்து தீவினைக்கீடாக நரகவேதனை செய்தலால் நடுவனென்று எமனுக்குக் காரணப் பெயராயிற்றெனக. (௰௧)

தேவர்கள் முதலானவர்களுக்குப் பணிவிடை செய்தவர்க
ளடையு முறைமை உணர்த்துகின்றார்.

தேவர்கண் முதலியர் பணிசெய வருவோர்
ஓவிய மனமட வாரிய ருழையே
மேவிட வழியிடை மிருகளி யுறவே
நாவணி புகழொடு நடுவனை யடைவார்

எ-து. வெளி. ஓவியம்-சித்திரப்பாவை. உழை-பக்கம். (௰௨)

முன்னேகூறிய தேவர்கண் முதலானவர்கள் சந்நிதியிற் றிருவிளக்
கிட்டவர்கள் அடையுமுறைமை உணர்த்துகிறார்

ஒளியினை யவருற வுதவிய வவருந்
தெளிதரு திருவுரு வடைவர்க டிசைசேர்
மளினமு மறவழி மருவுவர் மதியோ
ரளியுள ரிவமொன நடுவனை யடைவார்

எ-து. முன்னேகூறிய அத்தேவர்கள் முதலானவர்கள் சந்நிதியிற் பொருந்தத் தீபத்தினை யிட்டவர்களு மனத்துக்கு எப்பொருளையுந் தெளிவித்த

ற்குக் காரணமாயிருக்கிற அழகிய வடிவைப்பெற்றந்த வடிவிலொளியினால் திக்குகளிலுண்டாகிய இருளுமோட நல்லவழியிலேசென்று இவர்கள் சிவ பிரானருளுள்ளவர்களென்று தம்மை அறிவுடையவர்கள் புகழ எமராசனை யடைவார்கள். எ-று.

மலினம் மளினமென லகாரம் ளகாரமாக மயங்கிற்று. (௰௩)

அதிதிகளுக்கு மனை கொடுத்தவர்கள் அடையுமுறைமை உணர்த்துகின்றார்.

இல்லமு முதவின ரெவரவர் வரலே
நல்லக மருவிய வழியிடை நடவா
வெல்லையில் வளமுற மகிழ்வுற வெளிதே
வில்லியு மிவரென யமனுழை விழைவார்.

எ-று. வெளி. வில்லி, காமராசன். உழை, இடம். (௰௪)

கோதானம் பண்ணினவர்கள் அடையுமுறைமை உணர்த்துகின்றார்.

கோவினை யுதவினர் குலமறை யவர்கைப்
பூவணி யிரதமு முறவது புகுவார்
தூவிய மனமுட னாவிய ருடனே
மேவரு மிவரென யமபுரி செறிவார்.

எ-து. வெளி. அணி-அழகு. (௰௫)

அன்னதானஞ் செய்தவர்கள் அடையுமுறைமை உணர்த்துகின்றார்.

அன்னமு முதவின ரருமறை யவர்பாற்
றன்னிக ரில்லன முறவழி தனினும்
பன்னிய வகைதனை யுணுமுறை பயிலா
நன்னய ரிவரென நமனவை யடைவார்.

எ-து. வெளி. அன்னமென்பது இடைக்குறைந்து நின்றது. பன்னியது-சொல்லியது. நன்னயர்-நல்லவறிவினை யுடையவர்கள். (௰௬)

வியாதியாளர்களுக்கு அவுடததானஞ் செய்தவர்கள் அடையு முறைமை உணர்த்துகின்றார்.

உதவின ரவுடத முறுபிணி யினர்கைத்
திதமுறு முருவமு முறவழி செறிவார்
இதமித மெனவவை யெளிமையி னுறவே
மதனனு மிவரென யமனுழை மகிழ்வார்.

எ-து. வெளி. திதம்-நிலை. (௰௭)

குருபணிவிடை செய்தவர்கள் அடையு முறைமை உணர்த்துகின்றார்.

குரவனை பணிபுரி குணமுடை யவர்முன்
மருமல ரிரதமும் வரவழி யெதிரே

திறமுற வதனமர் தெரிவைய ருடனே
பொருவில ரிவரென யமபுரி புகுவார்.

எ-து. வெளி. திறமுற-நிலைபெற. (௰௮)

அந்தணர்களுக்குப் பாதம்விளக்கினவர்க ளடையுமுறைமை
உணர்த்துகின்றார்.

அருமறை யவர்திரு வடியிணை யதனிற
பரிவொடு குளிர்புனல் பயில்வினை யவருந்
தருவமர் குளிர்நிழல் வழிபெறு தகையே
பொருவில ரிவரென யமபுரி புகுவார்.

எ-து. வெளி. (௰௯)

அந்தணர்களிடத்துச்சொன்னம் இரத்னமுதலானவைகளைத்
தானஞ்செய்தவர்கள் அடையுமுறைமை
உணர்த்துகின்றார்.

ஒளிமணி யுதவினர் கனகமு மொருமைத்
தெளிதிகழ் மறையவர் திகழ்கர மதனிற்
றொளையில் கனகநல் வரைவழி துதையா
வளியுள ரிவரென நடுவணை யடைவார்.

எ-து. வெளி. துலை-ஒப்பு, தொலையெனு லகாரம் ளகாரமாக மயங்கிற்று. துதைதல் நெருங்குதல். (௨௰)

பெரியோர்களுக்குப் பாதம் வருடினவர்களுடைய முறைமை
உணர்த்துகின்றார்.

உத்தம ரொருமைய வுணர்வின ரடியொடு
கைத்தல முறைமுறை வருடிய கருணையர்
தத்துறு பரிமிசை யழகது தகவே
சித்தச னிவரென யமபுரி செறிவார்.

எ-து. வெளி. சித்தசன்-காமன். (௨௧)

அந்தணர்களுக்குத் தேரினைத் தானம்பண்ணினவர்கள்
அடையுமுறைமை உணர்த்துகின்றார்.

அருமறை யவருற விரதமு மருளினர்
மருமல ரிரதமுன் வரவழி யிடையே
திரமுற வதனமர் தெரிவைய ருடனே
பொருவில ரிவரென யமபுரி புகுவார்.

எ-து. வெளி. (௨௨)

பூமி தானம்பண்ணினவர்கள் அடையுமுறைமை
உணர்த்துகின்றார்.

பூமியை யுதவிய பொருவரு புகழோர்
தாமுறு மினியன வழிபெறு தகையே
காமினி யவரொடு களியுற வளவா
நாமலி புகழொடு நடுவினை யடைவார்.

எ-து. வெளி காமினி-தத்தமனத்துக் கொத்த தெய்வமகளிர். (௨௩)

முன்னேகூறிய வந்தணர்களுக்கே அல்லாமல் யாவர்களுக்கும் அன்னபான
முதவினவர்கள் அடையுமுறைமை உணர்த்துகின்றார்.

பானமு முதவினர் பரிவொடு பலவித
போனமு முதவினர் புரிதரு முறையே
தானினி துறவவை தமையறு பவியா
மேனய ரிவரென யமனுழை விழைவார்.

எ-து. வெளி, மேனயர்-மேலான அறிவினையுடையவர்கள். (௨௪)

ஈண்டுக் கூறியதேயல்லாமல் மற்றுமுள்ள தானங்கள் பண்ணினவர்கள்
அடையு முறைமைக்கு மோர்பொதுவிதி
உணர்த்துகின்றார்.

மற்றுள வினைநல மருவின ரவரும்
பற்றுவர் வழிதனின் முறைபெறு பலமுந்
துற்றுவர் துயரிலர் துரிசறு நெறிசேர்
நற்றவ ரிவரென நடுவினை யடைவார்.

எ-து. வெளி. துரிசு-குற்றம். துற்றுதல்-அனுபவித்தல். (௨௫)

முன்னேகூறிய தானங்களெல்லாவற்றினுள்ளும் அன்னதானமே சிறந்த
தானமென்பதற்கு ஓர் சிறப்புவிதி உணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அன்ன தான மனைத்தவற்று ளதிக பலமே யருந்தினருக்
கின்னல் கெடுக்கு மப்பொழுதே யின்பந் தனையு மிசைவிக்கு
மன்னு முடலுள் வலியதனுன் மாறில் பொருளே யஃததனை
யென்னி லுவமை யிதற்கில்லை மண்ணின்கண்ணே யெவ்விடத்தும்.

எ-து. முன்னேகூறிய தானவகைகள் எல்லாவற்றினுள்ளும் அன்ன
தானமே யதிகமான பலன்களைக் கொடுக்கும், அவ்வன்னத்தைப் புசித்தவனு
க்கு அக்கணத்திலேதானே பசித்துயரத்தைப் போக்கும் அதுவல்லாமல் சுக
த்தையும் விளைக்குஞ் சரீரத்திலுண்டாகிய பலமும் நிலைபெறுமாகையால்
அவ்வன்னமே ஒப்பில்லாத பொருளுமாகும். ஆகையா லிதற்கு உவமை
யை விசாரித்தாற் பூமியின் மாத்திரமோ எவ்வுலகத்திலுமில்லை. எ-று.

அன்னமே சரீரமெடுப்பதற்குக் காரணமாகுமென்பதூஉம்
அன்னமே படைத்தளித் தழிக்குமென்பதூஉம்
உணர்த்துகின்றார்.

அன்ன மதனி லாமுதிர மதனாற் றசையா மதனாலே
மன்னு மலின சுக்கில்மு மலின மதனாற் கருவாகு
மன்ன மின்றே லுயிர்வாழு மாக்கை விரைய வழிந்தகலு
மன்ன மதுவே யுடறன்னை யாக்கு நிறுத்து மழித்திடுமே.

எ-து. அன்னத்தினின்றும் இரத்த முண்டாகும், அந்த இரத்தத்தினால் தசையுண்டாகும். அத்தசையினால் அழுக்காகிய சுக்கிலம் நிலைபெறும். அச்சுக்கிலத்தினால் கர்ப்பந்தரித்துச் சரீரமுண்டாகும், முன்னே கூறியவற்றிற்கெல்லாம் பரம்பரையினால் காரணமாயிருக்கும், அன்னமில்லையானால் உயிரிருந்துவாழு முடம்பு சடுதியிலே அழிந்துபோகும். ஆகையால் அவ்வன்னமே உடம்பையுண்டாக்கும், அதுவல்லாமல் தானே யுணவாய்நின்று அவ்வுடம்பையும் காக்கும், தானில்லையானால் அவ்வுடம்பையு மழிக்கும். எ-று.

பசிநோ யுற்றவர்களுக்கு அந்நோ யன்னத்தினா லல்லாமல்
பிறிதொன்றினாலுந் தீராதென்பதூஉம் யாவருக்கும் அன்னமே
ஆதாரமென்பதூஉ முணர்த்துகின்றார்.

உற்றான் பசியைக் கனகத்தா லொளிசேர் மணியா
லொண்டொடியான்
மற்று முளநல் வளனாலு மாற்ற வலனோ
வலன்வயினுட்
கொர்ப்பந் தனக்கும் பாலனுக்குங் கிளர்ந்த தருணன்
றனக்குமுட
லொற்க முடைய விருத்தனுக்கு முண்டோ நிலையோ
தனமொழித்தே

எ-து. வெளி. ஒற்கம்-மெலிவு. (உஅ)

முன்னேகூறிய மானிடர்களே யல்லாமல் தேவர்கள் முதலியோர்
விரும்புவது அன்னமேயென்பதூஉம் அதுவே
பசிநோய்க்கு மருந்தென்பதூஉ முணர்த்துகின்றார்.

தேவர் முனிவர் தானவருந் தினைப்ப ருணவைத் திதிவிரும்பி
யாவ ருணவை விரும்பாதா ரிடர்சே ருடலுண் முந்நூற்றெட்
டோவா நோயுண் டவற்றுள்ளும் பசிநோய் கொடிய தறிதனுக்
காவா வென்றே யருளாள னருத்து மருந்தே தனமன்றே.

எ-து. தேவர்களும் இருடிகளும் அசுரர்களும் தங்கள் தங்கள் சரீரமழியாமல் நிற்கவேண்டி யன்னமாதியான வுணவை யருந்துவார்கள், ஆகை

யால் உலகத்தில் எவர்கள் அன்னத்தை விரும்பாமல் விட்டார்கள், அதுவல்லாமல் துக்கத்துக்குக் காரணமாகப் பொருந்திய வுடம்பின் தொடர்ச்சிவிடாத முந்நூற்றெட்டு வியாதிகளுண்டாம். அவற்றுள்ளும் பசிநோயே மிகவும் பொல்லாதது, அப்பசிநோயை ஒருவர் அடைந்தால் அருளினையுடையவரன்றோ வென்றிரங்கி யதற்குக் கொடுக்கு மருந்தாவதும் அந்த வன்னமேயாம். எ-று.

அன்றெனினவியாமென்றுருகும் என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

மேலே யன்னதானஞ் செய்பவர்களே பிராணதானஞ் செய்பவர்களாமென் றுணர்த்துகின்றார்.

உற்ற பசிநோய்க் கனமருந்தை யதவு வாரு மிலராகி
லற்ற துயிரு மவ்வுடலுங் கன்ன மளிப்பா ரவருண்டேற்
பெற்ற துயிரு மவ்வுடலம் பெறுமவ் வுயிருந் தருமாதி
சொற்றவை யீவா னுயிரீவான் றரும முதலுந் துயக்கறவே.

எ-து. யாரேனுமொருவர் கொண்ட பசிநோய்க்கு அன்னமாகிய மருந்தைக் கொடுக்குந் தாதாக்களு மில்லையானால் அவ் வுடம்புக்கு உயிருமில்லை பாய்விடும், அன்னதானஞ் செய்பவர்களுண்டானாற் பசிநோய் நீங்கி யவ்வுடம்பு உயிரைப்பெற்று வாழும், அவ்வுயிரு மறமுதலிய நான்கையுஞ் செய்யப் பெறுமாகையால் அன்னதானஞ் செய்பவன் பிராணதானஞ் செய்பவனும், அதுவே யல்லாமல் விபரீதமற வறம் பொரு ளின்பம் வீடென்னு நான்கினையுந் தானஞ் செய்தவனுமாம். எ-று.

சோறு-குறுகும்வழி குறுகிற்று, ஈவானென்பதனைத் தருமமுதலுமென்பதனோடுங் கூட்டுக.

(௯௰)

அன்னதானஞ் செய்பவர்களிம்மை மறுமைப் பயன்களை யடைவ ரென்பதூஉந் தபோதனர்க் கன்னதானஞ் செய்பவர்கள் தவப்பயன் பேர்பாதியாக நிற்பரென்பதூஉ முணர்த்துகின்றார்.

பொன்னை மணியைப் புனையிழையை மற்றும் விரும்பும் பொருளினையு
மன்ன மளிப்பா ரிங்கடைவ ரங்குந் தாம்வேண்டியவடைவ
ரன்ன மதனை யருந்தவரை யருந்தினார்களவர் பலத்திற்
றன்னு வார்க ளொருபாதி யவர்தா மொருபாற் றன்னுவரே.

எ-து. அன்னதானஞ் செய்பவர்கள் இவ்வுலகத்திலே தானே பொன்னையும் இரத்தினங்களையும் அணியுமாபரணங்களையு முடைய மாதர்களையு மற்

றுந் தாம் வேண்டிய பதார்த்தங்களையும் பெறுவார்கள். அத்தேவலோகத்திலும் தாம்வேண்டிய போகங்களைப் பெறுவார்கள். அரிய தபோதனர்களை யன்னத்தைப் புசிப்பித்தவர்கள் அவர்கள் செய்த தபோபலத்திலொருபாதி பெறுவார்கள், அத்தபோதனர்கள் மற்ற வொருபாதியே பெறுவார்கள். எ-று. (௬௧)

சரீரத்துக்கு மதனுற்செய்யு மறமுதலியவற்றிற்கு மன்னமே
மேலாகிய காரணமென் றுணர்த்துகின்றார்.

அன்ன மாக்கை தனையாக்கு மதனு லறமுன் னூனாவாகு
மன்ன மதனு லனைத்திலுக்கு மதிக காண மதனுலே
யன்ன மதனுக் கொப்பான காண மில்லை யாயுங்கா
லன்னை யான காரணமும் புநல்வர்க் குளதோ வகலிடத்தே.

எ-து. அன்னஞ் சரீரத்தை யுண்டாக்கும். அச்சரீரத்தினுல் அறமுதலிய நான்கு முண்டாகும். அதனு லெவற்றிற்கும் அவ்வன்னத்தானே மேலாகிய காரணம் ஆகையால் விசாரிக்குமிடத்தில் அன்னத்துக்கு நப்பாகிய காரண மொன்றுமில்லை. அது எவ்வாறெனில் பூமியிற் பிள்ளைகளுக்கு மாதாவை யொப்பான காரணமு முண்டோ ஆகையாற் சரீரமுண்டாவதற்கன்னமு மாதாவுமே முதற்காரணமாகும். எ-று.

காரணமென்பது குறுகும்வழி குறுகிற்று. (௬௨)

அன்னமே சிருட்டி முதலிய காரியகருத்தாக்கண்
மூவருமாகுமென் றுணர்த்துகின்றார்.

அன்ன மதனை யுலகனைத்து மாக்கு மயனென்
றறையுமறை
மன்னு முலகந் தனைக்காக்கு மாய னெனவு
மதித்துரைக்குஞ்
சொன்ன வுலக மனைத்தினையுந் துடைக்கு மாறு
மெனச்சொல்லு
மின்ன முறையா லெவற்றினுக்கு மின்னீத முதலென்
றெவ்வுறுநவே.

எ-து. வெளி. முதல்-காரணம். (௬௩)

உதகத்துக் கெய்தியதோர் சிறப்புவிதியு மன்னம் உதக
மிரண்டையுந் தானஞ் செய்தலே யதிக பலந்
தருமென்பது முணர்த்துகின்றார்.

உதக மதனை யுயிரெல்லா முண்ணா விரும்பு மதனுலே
யுதகந் தனக்கு மொப்பான பொருள்வே றில்லை யுலகத்து
ளுதக மன்ன மெனுமிரண்டு முயிரா யொப்பு மதனுலே
யுதக மன்ன மெனுமிரண்டு முதனிற் பரம பலமுளதே

எ-து. வெளி. ஓம்புதல்-காத்தல். (௬௪)

இங்ஙனஞ் சிறப்பித்த அன்னதான முதலாகிய விசிட்ட தானங்களெட்டும் மற்றுமுள்ள தானமுஞ் செய்தவர்கள், எமலோகத்தினை யடைந்து பின்னே சுவர்க்கத்தை யடைவார்க ளென்பதுணர்த்துகின்றார்.

அன்ன முதக மாவசுவ மாடை குடைகட் டிலையசின
மென்னு மிவைக ளிருநான்கு மீயிற் பிரேத பதியிரங்குஞ்
சொன்ன படியே மற்றுமுள தானம் புரிவார் துயரகலத்
துன்னு வார்க ளியமபுரி யதன்பின் னடைவர் துறக்கமுமே.

எ-து. அன்னமும், தண்ணீரும், யானையும், குதிரையும், துகிலுங், குடையும், படுக்கைக் கட்டிலும், புலித்தோன் முதலிய வாதனமும் என்னும் இவ்வெட்டு விசிட்ட தானங்களையுஞ் செய்தவர்கள் எமராசன் அனுக்கிரகத்தை பண்ணும்படி செல்வார்கள் இங்கே சொன்னபடி மற்றுமுள்ள தானங்களையுஞ் செய்பவர்கள் தங்கள் துக்கமெல்லாம் விட்டு நீங்க எமலோகத்தை யடைவார்கள், அதற்குப் பின்பு அங்ஙனங் கூறிய விருவகையான தானஞ் செய்தவர்களும் அவனேவலினாற் சுவர்க்கலோகத்தையு மடைவார்கள். எ-று. (௬௫)

மேனிறுத்த முறையானே யறம் புரிந்தவர்களுக்கு எமராசன் செய்யுஞ் சிறப்பை மூன்று செய்யுள்களாற் குளகமாக வுணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தரும நீதியர்க டரும ராசபுரி யடைய வேதரும
ராசனும்
விரைய வேயவரை யெதிர்கொ ளாவரவு வினவி யேகருணை
விழைவினொ
லரிய வாதனமு மருளி யேயுதக விதியு மாதிரடு
வந்தமு
மொருமை யோடவர்த முளமு மோகையுற வுதவி யேமதுர
வுரையுமே.

எ-து. வெளி.

அரியவாதனம்-சிங்காதனம், உதகவிதி, பாத்தியம், ஆசமனம், அர்க்கியம், என்பவை, ஆதிநடு வந்தம், பாதமுகஞ் சிரசு என்பவைகள். (௬௬)

வேத மாதிதனி லோது நீதிபல மேவி னீரொருமை மேதையா
லாத லானுமைய லாது தேடினரு மாருயிர்க் குறுதி யாவரோ

நாத கிதநவின் மாதர் சூழநட மாட வேறுசிலர் நாண்மலர்ப்
போது சேரிசத மேறி யேகிடிது போமி னீரமரர் போகமே.

எ-து. வெளி. மேதை-அறிவு, போகந்தருமிடத்தைப் போகமென்
றது பொருளாகு பெயர். (௬௭)

எண்ணி யாதொருப லத்தை நீரறமி யற்றி னீர்தவறு மின்றியே
நண்ணி யேயதனை விண்ணின் மீதனுப வித்து நாளுமது மாளமுன்
பண்ணி யேயுடைய பாவ லேசமது பாற வேமெமது பாலணைந்
துண்மி னீர்நரக யாதனைப்பலமு மென்ற வர்க்கருளு நாயபனே.

எ-து. வெளி. லேசம்-சிறிது. (௬௮)

மேலவர்கள் சுவர்க்கத்தை யடையுமுறைமை
யுணர்த்துகின்றார்.

ஏவல் பெற்றுநம னைத்த ணந்திரத மேறி யேயறிவு தேறியே
தேவர் பெற்றதிவி தேச முற்றதுல போக முற்றுமுறை சேரவே
மேவி யிட்டமுற வேயி ருப்பரிடர் மேவு தற்கரியர் மெய்மையே
பாவ முற்றினர்கள் பாத ளக்குழியி லேத மேயினிமை பற்றுமே.

எ-று. இப்படி எமராச னேவலைப் பெற்றுப் பின்னே யவனை நீங்
கிப் புட்பக விமானத்திலேறி யறிவு தெளிந்து தேவர்கள் பெற்று வாழுஞ்
சுவர்க்கலோகத்தினையடைந்து ஒப்பில்லாதபோகங்களைமுழுதும் புண்ணிய
ங்களைச் செய்தமுறையே வந்து பொருந்தவ வற்றினைப் பெறறுத் தாந்தா
மிச்சித்த பொருள்களும் வந்து கைகூட விருந்து வாழ்வார்கள், அதுவல்லா
மல் துன்பங்க ளொன்றையும் பொருந்தார்கள். இது சத்தியமே. தேவலோக
த்தில் துன்பமெய்தாதோ வெனிற் பாவஞ்செய்தவர்கள் அடையு நரகக்கு
ழியிலே துன்பம் புண்ணியஞ் செய்தவர்க ளடையுஞ் சுவர்க்க வின்பத்திற்
பொருந்துமோ பொருந்தாது. எ-று.

சுவர்க்க பூமியில் துன்பமெய்தினு லதுவு நரக பூமியாய் விடுமென்
பதுபற்றி 'ஏதமே யினிமைபற்றுமே' யென வினவினர். (௬௯)

இனிப் புண்ணியஞ் செய்தவர்க ளடையும் பயனைக்
கூறி மேற்பாவஞ் செய்தவர்க ளடையும்
பய னுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

புண்ணிய பலங்க டம்மைப் புகன்றனம் புவியிற் பாவம்
பண்ணினர் பலமுஞ் சொல்வாம் பருப்பத முனிவ கேணீ
திண்ணியர் பாவ பேதந் தீர்ந்தவர் சிலனு முன்னெடன்
றெண்ணிய வச்ச மெய்தக் கேட்டிடும் போதோ வென்றும்.

எ-து. பொதிய மலையி லிருக்கு மகத்தியனே இப்படி புண்ணியஞ் செய்தவர்க ளடையும் பலங்களைச் சொன்னோம், மேலிந்தப் பூமியிற் பாவஞ் செய்தவர்க ளடையும் பயனையும் திடசித்தமுடையவராய்ப் பாவவகைகளையு நீங்கிச் சிவனையு முண்டென்று கருதினவர் கேட்குங் காலமே யல்லாம லெக்காலமு மச்சமடையும்படி சொல்லுகின்றோ மதனை நீகேட்பாயாக. எ-று.

ஓகாரம் பிரிநிலையில் வந்தது. (௬௧)

பாவஞ்செய்த ஆன்மாக்க ளெல்லாம் எமலோகத்தை யடையு
முறைமைக்கோர் பொதுவிதி யுணர்த்துகின்றார்.

கருவினு ளுயிரு மற்றைக் காயபே தங்க டம்மின்
மருவிய வுயிருந் தொல்லை வல்வினை மாய வச்சம்
பெருகிட மோகந் துன்பம் பிரிந்துடல் பிரியும் போதிற்
றருமுட றாங்கித் தூதர் செலுத்திட யமனிசாரும்.

எ-து. கர்ப்பத்திலிருக்கு முயிரும் அதல்லாமல் மிருகவகைகள் முதலிய யோனிபேதங்களி லிருக்கு மான்மாக்களும் முன்னுள்ள பிராரத்த கர்மந் தொலைந்தவாறே பயமு மோகமுந் துயரமு மேலிட்டு நிற்கும்படி யெடுத்த வுடம்பினின்று நீங்கி யப்படி நீங்குங் காலத்தி லுண்டாகும் யாதனா சரீரத்தை யெடுத்து எமதூதர்கள் செலுத்த எமலோகத்தை யடைவார்கள். எ-று.

அச்சம்-எமதூதராலடையு நடுக்கம். மோகம்-புத்திரமித்திராதிகளை விட்டுப் போகின்றோமேயென் றெண்ணுமாசை. துன்பம்-மரணவேதனை.

மேருமலையின் றென்பாலான வைவசுதமென்னும் எமலோகம் பூமிக்கு
மே லித்தனை யோசனை தூரதித்தி லிருக்குமென்னு மெல்
லையு நல்வினை தீவினை யுடையவர்கட்கு
அது அமையுந் தூரமுமாமா று
முணர்த்துகின்றார்.

மண்டனின் மேரு வென்னு மலைதனிற் றென்பால் வார்ந்த
வெண்டிக ழெண்பத் தாறு யிரமெனும் யோச னுந்தந்
தண்டமுந் தரித்த கையன் றங்கிய யமனி சாருந்
துண்டர்க டமக்குத் தூர மணித்தறந் துன்னி னோர்க்கே.

எ-து. எண்ணத்தக்க எண்பத்தாறுயிரம் யோசனையளவு பூமிக்கு மேல் நீண்டு மேருவென்னும் மலைக்குத் தென்புறத்திசையில் தண்டாயுதத்தைத் தரிக்கும் எமராசனிருந்து வாழும் யமனியென்னும் படைவீடு பொருந்தும். அது பாவிகளுக் கதிதூரமாயும் புண்ணியவான்களுக்குச் சமீபமாயுந் தோன்றும். எ-று.

ஐந்தாவதன் இல்லுருபு - நான்கனுருபாக மயங்கிற்று. (௬௨)

நிருத்தமுறையால் தீவினைசெய்தவர்கள் எமலோகத்தையடையு
முறைமை உணர்த்துவான் றொடங்குகின்றார்.

சித்திர குத்தன் சீவன் செய்தியின் றிறங்க ளெல்லாம்
புத்தியி னொருமை செய்து புகன்றிடச் சமனும் போக்க
வொத்துயிர் கவருந் தூதர் வழியிடை யொறுக்க வொல்கிச்
சித்தமுங் கலுழ்ந்து தீயார் செல்கைமுன் செப்பு வாமே.

எ-து. சித்திரகுத்தனென்னுங் கணக்கன், ஆன்மாக்கள் செய்த கர்மவகைக ளெல்லாவற்றினையுந் தன்னுடைய அறிவினால் நிச்சயித்து இவரிவர் செய்த கர்மமிதுவென்றுசொல்ல அதனைக்கேட்டு எமராசனுமேவுகிறபடியினாற்சென்று பொருந்தி உயிரை வாங்குகின்ற எமதூதர்கள் பூமியிலிருந்து கொண்டுவரும்வழியிலே மிக்கதுயர்செய்ய உள்ளமெலிந்து அழுது தீவினையுடையவர்கள் சொல்லு முறைமையை முதற்கட் சொல்லுகின்றோம். எ-று.
கலுழ்ந்து-என்பதற்கு, கலங்கியெனினுமாம். (௪௫)

மேலே தீவினையுடையவர்களை எமலோக மடைவிப்பிக்கும்
எமதூதர்களுடைய இயல்பினை நான்கு செய்யுளால்
உணர்த்துகின்றார்.

கலிச்சந்தவிருத்தம்.

மைத்திகழ் தரு வரையினைநிகர் வடிவுடையவர் வலியார்
மெய்த்திகழ்தரு மரணமுமுளர் விடவரவன வினையார்
குத்திரவினை பலவுடையவர் குணமிலவல கொடியார்
இத்தகைமைய ரியமனதுரை வழிவிலக்குத லிலரே.

எ-து. எமதூதர்கள், கருமை விளங்குகின்ற வஞ்சன பருவதத்தையொத்த சரீரத்தையு மிகுந்த பலங்களையுஞ் சரீரத்தில் விளங்குகின்ற வச்சிராங்கிகளையும் விடத்தை உமிழ்கின்ற பாம்பினையொத்த தீமைத்தொழிலினையும் வஞ்சனைத் தொழில் பலவற்றையும் பாவிகளிடத்து நன்மையில்லாது தீமைகளையே வல்லகொடுமையினையும் உடையவர்களாயிருப்பார்கள். இத்தன்மையையுடைய தூதர்கள் எமராசனுடைய சொல்லின்வழியைத்தப்பமாட்டார்கள். எ-று.

குத்திரவினை தாமாக முன்னில்லாது வேறொன்றை யேதுவாக்கிக் கோறல். (௪௬)

வீரமுமுளர் வெகுளியுமுளர் விரைதலுமுள ருடலத்
தீரமுமுளர் சினமுதலிய செறுநெறியினர் திருமுன்
னீரமுமுள ரெரியுமிழ்விழி யிருமையுமுள ரிகலிற்
கூரமுமுளர் கொடுபடையினு முயிருணவல கொடியார்.

எ-து. வீரத்தையுந் தீவினையோர் மேல்வைத்த கோபத்தையும் எமராசனேவிய கருமங்களில் மனமடியாது செல்லும் விரைவினையும், அழி

யாத வச்சிரயாக்கையையும் சினமுதலியவற்றைக் கெடுக்கு நன்னெறியையுடைய தபோதனர்கள் சந்நிதியில் இரக்கத்தையும் நெருப்பைச் சொரிகின்ற இரண்டு விழியின்றன்மையையும் பகைத்தவர்களிடத்தில் கொடுமையே செய்யுந் தொழிலையுந் தாமெடுக்கும் ஆயுதங்களைப் பற்றவுமுயிரினை உண்ணவல்ல தீமையையும் உடையவர்களா யிருப்பார்கள். எ-று. (௩௫)

காலமிது வெனவறிகுநர் கருமமுமிவை யெனவுஞ்
சூலமுமொரு கரமருவினர் சுழல்வலையமு மொருகைப்
பாலனரனெனுமறிவறு பதர்மனிதர்கள் பயமுற்
றோலமிட வுடலினைவிட வுயிர்கவர்வினை யுடையார்.

எ-து. முன்னே கூறிய அத்தூதர்கள் அவரவர்களுக் கமைத்த காலம் இதுவென்றும் அவரவர்கள் செய்த கர்மங்க ளிவையென்று மறியவல்லவர்களுமாய் ஒருகையிலே சூலமு மொருகையிலே சுழலுகின்ற பாசக் கயிறும் பொருந்தினவருமாய்ச் சங்கார கருத்தாவாகிய அரனே யுலகபரி பாலனனென் றுணரு மறிவில்லாத பதரையொத்த மானிடர்கள் பயப்பட் டலற வுயிரான துடம்பைவிட்டு நீங்க அவ்வுயிரினை வாங்குங் கொலைத்தொழிலையுடையவர்களுமா யிருப்பார்கள். எ-று.

பாலனன்-காப்போன். (௩௬)

நிட்டுர தரர் நினைவழியவு நிலையில்சில ருடலைக்
கட்டிவர்முது குறவலிமலி கயிறுறவிரு கரமும்
பிட்டுதிரமு மொழுகிடவிடர் பெருகிடவல றிடவும்
வெட்டிவருயர் விணிலலமர விசிறுவர றவெடியார்.

எ-து. நிட்டூரத்தையு மிகவும் வெடித்த சொல்லையு முடையவர்களாகிய எமதூதர்கள் தம்மைக் கண்டவுடனே அறிவழிந்துபோகா நிற்கவும் விடாமலொரு நிலையுமில்லாத சில பாவிக ளுடம்பை திருப்பி மடக்கி வளைத்து முதுகிற் பொருந்த விரண்டு கையையு முரமிகுந்த கயிற்றினாற் சேர்த்துக்கட்டி யுடம்பெல்லாம் பிளந்து இரத்தத்தாரையொழுகவுந் துக்கம் பெருகவும் வாய்கிடந்தலறவும் வெட்டி,உயர்ந்த ஆகாசத்திற் சுழலவெடுத்து வீசுவார்கள். எ-று. (௩௭)

இப்படிசொல்லிய எமதூதர்களால் பாவஞ் செய்தவர்கள் எம
லோகத்துக்குப் போம் பொல்லாத வழியை யடை
வார்களென் றுணர்த்துகின்றார்.

இத்தகைமைய வியமனபட ரிடைவிடலில வலியாற்
குத்திரர்குண மறுசிறுமையர் கொடியனவினை யுடையார்
நைத்துளமுட னடலையுமுற நயவியதுணை யறவே
சித்திரமிகு துயருறுவழி செறிவர்கள்பிறி வறவே.

எ-து. இக்குணங்களோடு பொருந்தும் எமதூதர்கள் நீங்காத வலிமையினால் வஞ்சகர்களுமாய் நற்குணமில்லாத வற்ப புத்தியை யுடையவர்களுமாய்க், கொடுமையை யுடையனவாகிய தீவினைகளையுடைய பாவிகள் உள்ளமெலிந்து துன்பமுமேலிட நலம்பொருந்திய துணையுமற்றுப்பலவகையாக மிகுந்த துயரம் பொருந்திய வழியில் நீங்காதடைவார்கள். எ-று. (சஅ)

அவ்வழியிலுள்ள துயரத்தைப் பதின்ஞன்கு செய்யுளா லுணர்த்துகின்றார்.

கலிநிலைத்துறை.

கண்டக முறுநெறி செறிசிலீ கரிசர்கள் கதறு
விண்டிட விரைவினர் விடுமுறை யறிகிலர் விழுவார்
திண்டிகழ் சிலைநுதி செறிநெறி குறுகிய சிறியார்
பிண்டிட விணைபடி பிழையுற விழுவர்கள் பிழையார்.

எ-து. தாந்தாஞ்செய்த பாவத்தினால் பெருமுட்களடர்ந்த வழியிலே எமபுரிக்குச் செல்லுஞ் சில பாவிகள் அம்முட்கள் காலிலே தைக்க வலறிச் செல்லுவார்கள். செல்லும்போ தந்த முட்களைப் பிடுங்கிப் போட்டுச் செல்லு முறைமையை யறியாமலே வீழ்ந்து கிடப்பார்கள், பிழை யமைந்த சில சிறியார்கள் திண்ணிமையான கூரிய கற்கள் பரந்த வழியி லணுகிய க்கற்களிரண்டு காலிலுஞ் சிதையும்படி தைப்பதனாலே நிலத்தில் வீழ்வார்கள். எ-று. (சகூ)

அளறுறு நெறியிடை யடியுற விடுமுறை யறியா
ருளமறு கிடவுட னடலையு முறவீவி யொழிவார்
பளமுறு நெறிசிலர் படர்வர்க ளிடர்பல படவே
பிளவுற வுடன்முழு தரிகுசை நுதிவழி பிரியார்.

எ-து. சிலபாவிகள், சேறுபரந்த வழியில் அடிவைக்க வச்சேறு காலினின்றும் விடுமுறையைக் காணமல் மனஞ் சுழலச் சரீரந் துக்கத்தை யடையத் தங்கள் பலமுங் கெடுவார்கள், சிலர் ஆழ்ந்த பள்ளங்கள் பொருந்திய வழியில் துக்கங்கள் பலவு முண்டாகச் செல்வார்கள், சில ருடம்பெல்லாம் பிளக்க வரியுங் கூரிய வாயினையுடைய நாணற்டல் பொருந்திய வழியை நீங்காமல் செல்லுவார்கள். எ-று.

நடலை-துன்பம். (ருய)

விடமமு முறுதடம் விரவிய கலர்சில மெலிவார்
தடவரை யிடைநடை தவர்வுற வுறவறு தமியார்
பொடியறு தழல்வழி புகுதுவர் நிலையிலர் புலியார்
படுகுழி விடமமு மடைவர்கள் சிலரிடர் படவே.

எ-து. சிலபாவிகள், செவ்வையான வழியில்லாமல் வஞ்சனை மிகுந்தவழியிற் சென்றதனற் றுக்கத்தை யடைவார்கள், சிலர் பெரிய மலைவழி

யிற்சென் றேற்ற பிறக்கங்களிலே நடைகூடாமற் கால்தளரத் தமக்கோருறவு மில்லாத தனியராய் நிற்பார்கள், சிலர் தமக்கொரு நிலையு மில்லாதவராய்ப் பொடி மூடாதெரியு நெருப்போடு பொருந்திய வழியிற் புகுவார்கள், சிலர் படுகுழி முதலிய வஞ்சனைகள் அமைந்த வழியிலே சென்று துக்கத்தை யடைவார்கள். எ-று.

விஷமம் விடமமெனத்திரிந்தது. தமி-தனி புல்லியாதொன்பது இடைக்குறைந்து நின்றது. (௫௧)

சரநிகர் சகலமு முறுநெறி செறிசில தமியார்
வெருவுவ ரழனிகர் வியன்மணல் விடைவழி விழுவார்
நிரைமுளை நிறுவிய நெறியிடை யடிகளர் நிலையார்
பருவர லுறுவர்கண் முளைமுளு முறுநெறி படர்வார்.

எ-து. சிலர்அம்புபோலறுக்கு மோடுஞ்சல்லியும் பரந்தவழிலேபோய் தமக்கொரு துணையுமில்லாமல் அந்தவழி தொலையாமையினாலே நடுங்குவார்கள், சிலர் நெருப்பினையொத்த சுடுமணல் பரந்த வழியிலேபோய்ச் சூடுபொறுக்காமல் விழுவார்கள், சிலர் ஒழுங்குபட வசிகளைநிறுத்தியவழியிலேபோய் அந்த வசிகள் காலிலேதைக்க அதனாற் போகமாட்டாமல் அடிதளருநிலையையுடையராவார்கள். சிலர் மூங்கிலின் முட்கள் பரந்தவழியிலேபோயவற்றினாற் றுன்பமடைவார்கள். எ-று.

நெறி-வழி. வசி-வாள். (௫௨)

கூரிரு ணெறிசெறி கொடுமையர் சிலர்நிலை குலைவார்
காரய வலிதொடர் கனலனல் வழியிடை கலுழ்வா
ராரழல் வனநெறி யடைகுநர் சிலர்நினை வழிவார்
தீரவு மறிகில ரழனிகர் சிலைசெறி சிறியார்.

எ-து. சிலர் மிகுந்த இருள்பரந்த வழியிலேபோய் வெளிகாணமலே நிலையழிவார்கள், சிலர் தீயொழுகக் காய்ச்சிய கரிய விருப்புச்சங்கிலி பின்னிக்கிடக்கும் வழியிலேபோய் அடியிடமாட்டாமல் அழுவார்கள். சிலர் தீக்காட்டையுடைய வழியிலேபோய் அந்தக் காட்டுத் தீயிற்பட்டு அறிவழிந்துநிற்பார்கள். சிலர் நெருப்பைப்போலச் சுடுகின்ற கற்கள்பொருந்தியவழியிலேபோய் அதை நீங்கும் வகையுந் தெரியாமலே மயங்கி நிற்பார்கள். எ-று. (௫௩)

உடைவர்கள் பனிநனி யுறுநெறி யதுதனை யுறுவார்
மிடறள வுறுமணல் விரவிய கலர்சிலர் மெலிவார்
சுடரன துளிமழை சொரிவழி தனிநிலை தொலைவார்
வடிவற மயலுற வறளியி னழல்வச மறுவார்.

எ-து. சிலர் பனிமிகவும் பொருந்திய வழியிலடைந்து பனியினாலே உள்ளமுடைவார்கள். சிலர் கழுத்தள வமிழ்த்து மணல்பரந்த வழியி

லேபோய் வருந்துவார்கள். சிலர் நெருப்புப்போன்ற துளியினையுடைய மழைபெய்யும் வழியிற்போய் அதனால் நிலையழிவார்கள், சிலர் வறளிநெருப்புப் பொருந்திய வழியிலேபோய் தம்மேனிகெடக் கலக்கமுண்டாகத் தமதுசரீரத்தின் வலிகெடுவார்கள். எ-று. (௫௪)

சிங்கமு முறுநெறி செறிவின ரறிவிலர் செயலுந்
தங்கிய புலிவன மடைகுநர் நிலையிலர் தளர்வார்
வெங்கொலை மிருகமு முடலட வொருவழி விழுவார்
விங்கிட மசகமு முடலினை கிளைவினை விடுவார்.

எ-து. சிலர் சிங்கங்கள் பொருந்திய வழியிலேபோய் அவைகள் பாய்தனாலே செயலும் அறிவுமில்லாமன் மயங்குவார்கள். சிலர் புலிகள் நெருங்கிய காட்டு வழிகளிற்போய் அதனாலே தஞ்செயல்கெட்டு வருந்துவார்கள். சிலர் மற்றுமுள்ள வெவ்விய கொலைசெய்யு மிருகங்களுந் தம்முடம்பை யழிக்கப் பிறிதொரு வழியிலேபோய்க் கலங்கிவிழுவார்கள். சிலர் பிறிதொருவழியிலேபோய்ப் பெருங்கொசுக்க ளுடம்பைத் தொளைக்க வருந்தித் தம்மறிவொழிவார்கள். எ-று. (௫௫)

உளைவர்க ளுடல்குடை கிருமிக ளுறுநெறி யுறுவார்
செளுகையு முடலட வொருவழி யறிவிலர் செறிவார்
தொளையுற வுடலடு சிறுபற வைகளொடு சுழல்வார்
விளைவற விடவர வடர்வழி யயருற விழுவார்.

எ-து. சிலர் உடம்பைக் குடையும் புழுக்கள் நெருங்கிய வழியிலேபோய் வருந்துவார்கள். சிலர் பிறிதொரு வழியிலேபோய் அட்டைகள்வந் துடம்பைக் கடிக்கவதனாலே அறிவும்போய் மயங்குவார்கள். சிலர் பிறிதொருவழியிலேபோய் உடம்பைத் தொளைக்குஞ் சிறிய பறவைகள் பலவற்றினாலுங் கொத்துண்டுங் கடியுண்டுஞ் சுழலுவார்கள். சிலர் பிறிதொரு வழியிலேபோய் நல்வினை விளைவில்லாமையாலே விஷத்தையுமிழும் பெரும்பாம்புகள் வந்து கடிக்க அதனாலே சோர்வடைந்து விழுவார்கள். எ-று. (௫௬)

கடகரி தொடர்வழி யழுதழு தயர்வொடு கலுழ்வார்
உடலட வுளியமு மொருவழி கிளைவினை யொழிவார்
இடபமு மடர்வழி யிடர்பல படுவர்க ளெளியார்
திடமுடை மயிடமு மடர்வழி யழிவர்கள் செயலோ.

எ-து. சிலர் மதம்பட்ட யானைகள்பாயும் வழியிலேபோயந்த யானைகள் பாய்தலினாலே யழுதழுது சோர்வினோடு கலங்குவார்கள், சிலர் பிறிதொரு வழியிலே போய்க் கரடிகள்வந் துடம்பைக் கவ்வ அதனா லறிவு நீங்குவார்கள். சில ரிடபங்க ணெருங்கிய வழியிலே போய் அவற்றினாற் றுன்பங்கள் பலவும் பட்டவற்றினைத் தடுக்க மாட்டாம லெளியராய் நிற்பார்கள்

சிலர் வலியினை யுடைய காட்டெருமைகள் பாயும் வழியிலே போய்ச் செய லொன்றேனு மின்றி வழிவது மனமு மழிவார்கள். எ-று.

ஓகாரம்-ஒழியிசைக்கண் வந்தது. (ருஎ)

ஒட்டக முறுநெறி யுடல்வினை கெடநினை வொழிவார்
நிட்டுர மகளிரு மடர்வழி யழிவது நினைவோ
வெட்டிய நிசிசரர் மிடைவழி யுடன்வினை விடுவார்
தொட்டிட விறலுறு பிணிபல வயர்வொடு சுழல்வார்.

எ-து. சிலர் ஒட்டகங்கள் மிகுந்த வழியிலேபோ யுடம்பின் செயல் கெட்ட வறிவழிவார்கள், சிலர் கொடுமையைச் செய்யு மிடாகினிகளாகிய குராமகளிர் நெருங்கிய வழியிலேபோ யவர்கள் செய்யுந் துயரினு லறிவொன்றேனு மின்றி வழிவது செயலுமழிவார்கள், சிலர் கொடுமையான இராட்சதர் நெருங்கிய வழியிலேபோ யுடம்பின்செய லழிவார்கள், சிலர்பிறிதொரு வழியில் வலி யமைந்த வியாதிகள்பலவும்வந்து பிடிக்கச்சோர்வினுலே யுழல்வார்கள். எ-று.

வெட்டிமை-கொடுமை. (ருஅ)

ஊறுற வுடலிடை யுணர்விலர் சரமழை யுறவே
கூறுற வுடல்பல குலிசம துறுமழை கொளவே
நீறுற வுடல்கெட வொருவழி யழிவது நினைவோ
தேறிய வழன்மழை பலபல முறையொடு தெறவே.

எ-து. சிலர் பிறிதொரு வழியிலேபோ யுடம்பி விடையூறு பொருந்த வம்புமாரிசொரிய வறிவுகெடுவார்கள், சிலர் பிறிதொரு வழியிலேபோ யுடம்பு பலவாகத் துணிக்கும் வச்சிராயுதங்களாகிய பெருமழை சொரியவதனு லறிவழிவார்கள், சிலர் பிறிதொரு வழியிலே போய்ப் பிரகாசிக்கும் நெருப்பு மழைகள் பலபல வகையாகப்பெய்து சுடுகையினுலே யுடம்பு வெந்து நீறுக வறிவுமாத்திரமோ வழிவது செயலுமழிவார்கள். எ-று (ருகூ)

கடுகிய வனிலனு முறுநெறி தூகளொடு கலுழ்வார்
பொடிமழை பொழிவழி நிலையற வலமொடு புகுவார்
உடல்பிள வொருவழி மழைபொழி சிலையுற வுளைவா
ரிடிவிழ விழுமினு மிடருற நிலவுத லிலரோ.

எ-து. சிலர் தூளோடு பொருந்தி விரைந்து வரும் பெருங்காற்றடிக்கும் வழியிலே போய்க் கலங்குவார்கள், சிலர் துளிமழை சொரியும் வழியிலே போய்க் நிலையற்றுத் துயரமாய்ப் போவார்கள், சிலர் பிறிதொரு வழியிலேபோ யுடம்பு பிண்டுபோகும்படி கன்மழை பொழிவதனுல் வருந்துவார்கள், சிலர் பிறிதொரு வழியிலேபோ யிடியுமின்னலும் விழ வவற்றினுலே துயரமடைந்து தாமறிவோடு பிரகாசிப்பதுபோய் நிலையழிவார்கள். எ-று.

ஆயுத வருடமு மொருவழி யுடலினை யரியக்
காய்தன லினைநிகர் கடுவறல் சுடவுடல் கலுழ்வார்
ஒய்வர்கள் குளிர்பனி யனிலனு முறுவழி யுளைவார்
எய்வர்க ளினையன விடர்பல வழியுறு மெளியார்.

எ-து. சிலர், பிறிதொரு வழியிலே போயாயுத மழையாக விழுந்து டம்பைத் துண்டிக்கவு மெரியும் நெருப்புக்கொத்த நச்சுநீர் மழை விழுந்து டம்பைச் சுடவு மாற்றுமற் கலங்கிச்சோர்ந்து விழுவார்கள், சிலர் குளிர்ந்த பனியும் பனிக்காற்றும் பொருந்திய வழியிலேபோ யவற்றினால், மிகவும் வருத்த மடைவார்கள், இப்படிசொல்லிய வழியிலே போகும் நல்வினை வலியி ல்லாதவர்களித்தன்மை யுள்ளனவாகிய துயரங்கள் பலவற்றையு மனுபவி ப்பார்கள். எ-று. (௧௧)

கடுகிய பசியுற வொருவழி யறிவிலர் கலுழ்வார்
விடுமுறை யறிகிலர் விரவிய கொடுமைய வினையர்
இடர்படு வதுமுனை வினையென வுளமதி லெணுவார்
திடமுடை யமபடர் வலிசெய வழியொடு செறிவார்.

எ-து. சிலர் பிறிதொரு வழியிலேபோய் மிகுந்த பசிமேலிட்ட வுத லறிவின்றி யப்பசி தீருமுறைமையை யறியாதவராய்க் கலங்குவார்கள், இப்படி பொருந்திய தீமையை யுடைய பாவிகள் யாமித் துயரப்படுவது முன்செய்த பாவமென்று தம்முள்ளத்தில் விசாரிப்பார்கள், அப்பாவிகளெ ல்லா மிகுந்த பலத்தினையுடைய எமதூதர்கள் வன்மை செய்யத்துயரம டைந்து எமலோகத்துக்குப் போகும் வழியிலே போவார்கள். எ-று.

அத்தீவினை யுடையோரை எமதூதர்கள் கொண்டு போகும் முறை மையைப் பதினாறு செய்யுளா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

சிலரைத் தொடரிற் செறிவித் தயிற்
றலையைத் தரையிற் றகவைத் துயரவா
னெல்லையிற் சரணந் திணிவைத் திகவா
வலைனுற் றலறக் கொடுபோ யடைவார்.

எ-து. எமதூதர்கள், சில தீவினையுடையோரைச் சாலி விருப்புச்சங் லி பூட்டித் தலையை நிலத்தில் வைத்துச் சங்கிலியினோடு பொருந்திய காலி ரண்டையு முயர்ந்த வாகாசத்திலாக்கி யுள்ளத்தி லிரக்கமு மின்றிந்து அவர் கள் துயரமடைந்து கிடத்தலறும்படி யிழுத்துக்கொண்டுபோ யெமலோகத் தையடைவார்கள். எ-று. (௧௨)

எமதூதரொன்னு மெழுவாரை வருவிக்க,
உலையிற் கொடியா ருமிக் குடையார்
நிலையத் துறுவார் தமைநீட் டிரமே

தரையிற் கவிழத் தடமார் முகமு
மரையக் கொடுபோ யடைவித் திடுவார்.

எ-து. கொடிய சொல்லையு மிகுந்த வலியையுஞ் சிறு கண்மையையு முடையவர்களா யிருக்கிற எமதூதர்கள் நரகத்திற் போவோராகிய சில தீவினை யுடையோரை நிலத்திற் பெரிய மார்பு முகமுங் கவிழத் தள்ளி யவ் வுறுப்புகள் நிலத்தோடு தேய்ப்புண்ண விழுத்துக்கொண்டுபோ யெமலோகத்தையடைவார்கள். எ-று. (௬௪)

நேசற் றவரோ நிலையற் றவரைத்
தேசற் றவரைச் சிலரைச்செறியப்
பாசத் துடலம் பறியப் பதறிக்
கோசத் தமுறக் கொடுபோ யடைவார்.

எ-து. சற்று மான்மாக்களிடத் திரக்கமில்லாத எமதூதர்கள் தரும மார்க்கத்தி னில்லாதவருமாய் மறுமைப்புக ழில்லாதவர்களுமாகிய சில தீவினையுடையோரைப் பாசக் கயிற்றினு லிறுக்கிக்கட்டி யுடம்பு வருந்துவதனு லே பதறித் துடித்துக் கோவென் றலறுஞ் சத்தந் திசைகளெங்குமெழக் கொண்டுபோ யெமலோகத்தை யடைவார்கள். எ-று.

செறிதல்-கட்டழுந்துதல். பரிதல்-வருந்துதல். (௬௫)

சித்தத் துருகா தவரைத் திறலார்
மத்தக் களிறே யனையார் வலியா
ரத்தந் தமரங் குசமுள் ளதனுற்
கொத்திக் குளமுங் கொடுபோ யடைவார்.

எ-து. தருமத்தின் மன முருகாத சில தீவினையுடையோர்களை, வெற்றி நிறைந்த மதயானைக் கொத்தவர்களாகிய திகபலத்தையு முடைய எமதூதர்களானோர் தமது கையிலிருக்குங் குடாரியி னுனியினுல் நெற்றியையுங்கொத்தி யிழுத்துக்கொண்டுபோ யெமலோகத்தை யடைவார்கள். எ-று.

குளம்-நெற்றி. குளமுமென்னுமும்மை மற்றுள வுறுப்புகளுமெனக் கொள்ளக்கிடந்தது. (௬௬)

கனைகண் ணிலரைக் களவுள் ளவரைத்
தளரும் படிவெஞ் சமனுர் தமரோ
யுளைவுள் ளுறவு முடல்பின் ளுறவு
முளைமுள் வனமே கொடுபோய் முனிவார்.

எ-து. கொடிய எமதூதர்களாயினேர் ஆன்மாக்களிடத் திரக்கமில்லாதவரையுங் கள்வரையும் வருந்தும் வண்ணம் அவர்களுள்ளத்திற் றுயரமுண்டாகவு முடம்பு பிண்டுபிண்டு போகவு முங்கின்முட் காட்டிலே யீர்த்துக் கொண்டு போய்க் கோபிப்பார்கள். எ-று. (௬௭)

பழூதே டகர்வார் பயில்பா வியனைக்
குழையா தவனைக் குளிர்வாய் மொழியே
விழையா தவனைக் கடிதே நவியஞ்
ரழல்சேர் வழியே கொடுபோ யடைவார்.

எ-து. எமதூதராயினோர், கோட்சொல்லுதல் முதலிய பாவஞ்செய் தவர்களையுந் தருமத்தின்மனநெகிழ்ச்சியில்லாதவனையும் பெரியோர்கள் குளிர்ந்த திருவாக்கை விரும்பாதவர்களையுஞ் சடுதியிலே நிறைந்து மிகவுந் தீப்பாய்ந்த வழியிற் கொண்டுபோ யெமலோகத்தை யடைவார்கள். எ-று. (௬௮)

அத்தத் திளையு மடரக் கடிதே
பொத்திப் புறமே கயிறும் புகவே
துத்தத் தலறத் துவளத் துவளக்
குத்திச் சிலரைக் கொடுபோ யடைவார்.

எ-து. எமதூதராயினோர், சில பாவிகளை யிரண்டு கைகையு முதுகுப் புறத்து வாங்கித் தோளோடுதோள் சந்திக்கக் கூட்டிப் பாசக் கயிற்றினலழுந்தக்கட்டி யவர்களலற வயிற்றிற் குலுங்கக் குலுங்கக் குத்திக்கொண்டுபோ யெமலோகத்தை யடைவார்கள். எ-று.

துத்தம்-வயிறு. (௬௯)

சிலரைக் காமுஞ் செறிவித் ததனைத்
தனையத் தொடருந் தழலைப் புரையு
முளையைச் செறிவித் ததிரா முனியா
வனையக் கடிதே சமனூ ருறுவார்

எ-து. எமதூதர்கள், சில தீவினை யுடையோரை யிரண்டு கையையுங் கூட்டி யந்தக் கைகளிற் சங்கிலியும் பூணவிட் டுள்ளங்கைகளினூடு நெருப்புப் போன்ற முளையையுங் கடாவி யதட்டி யவர்கள் வருந்தும்படி கோபித்துச் சடுதியி லெமலோகத்திற் கொண்டு போவார்கள். எ-று. (௭௰)

கண்டத் துறவே கயிறுஞ் சிலரைக்
கொண்டெய்த் தலறப் புகுவார் கொடியார்
துண்டப் பிறைபோற் சுழல்வாள் பிடரிற்
புண்டைத் தலறச் சமனூர் புகுவார்.

எ-து. கொடிய எமதூதர்கள், சில பாவிகளைப் பாசக்கயிறு கழுத்திவிறுகப் பூட்டி யவர்கள் வருந்தி யலறும்படி யிழுத்துக்கொண்டு போவார்கள்; சிலரை யிளம்பிறைபோல் வளைந்த கொடுவாளாற் பிடரியிலே புண்படத் தைத் தலறும்படி வெட்டி யெமபுரியிற் கொண்டுபோவார்கள். எ-று.

சுண்டுச்சுழல். என்பது வளைவின்மேற்று. (௭௧)

நாவிற் றொளையா நடுவே முளையு
மேவக் கயிறும் விரவப் பணியே
நோவித் தலறச் சிலரொய் யவரைப்
பாவப் பலமுற் றெல்லையே படர்வார்.

எ-து. எமதூதராயினோர், சில பாவிகளை நாவினைத் தொளைத்து நடுவே முளையுங் கடாவி யதனோடு பொருந்தக் கயிறுங் கோத்து வருந்தச் செய்து அவர்க ளலறும்படி தீவினைப்பயன் பலிக்கு மெல்லையாகிய எமலோகத்திற் கொண்டுபோவார்கள். எ-று.

பண்ணி யென்பதிடைக் குறைந்து நின்றது. (௭௨)

குய்யத் திடையே கயிறுங் கொளுவா
வையத் துயரம் பலவு நவிலா
மையற் படவே மனமுஞ் சிலரைத்
தெய்வச் சமனூர் புரியைச் செறிவார்.

எ-து. எமதூதர்கள் சில பாவிகளைக் கோசத்திற் கயிறு கொளுவியிட்டல் வருந்தவு மனமயங்கவுந் துயரங்கள் பலவுமுண்டாக்கித் தங்கள் தெய்வமான எமராசனது நகரத்தை யடைவார்கள். எ-று. (௭௩)

துண்டப் புடையிற் றொளைசெய் ததனிற்
கண்டிக் கயிறுங் கடிதே யடைவார்
புண்டைத் துறவே கவுளும் புகுவார்
கொண்டக் கணமே சிலரைக் கொடியார்.

எ-து. கொடுமையை யுடைய எமதூதர்கள் சிலபாவிகளை மூக்கின் புறத்திற் றொளைத் ததிலே பாசக்கயிற்றையுங் கோத்துக் கட்டிச் சடுதியிற் கொண்டுபோவார்கள், சில பாவிகளைக் கதுப்பிலே புண்பொருந்தத் தொளைத்துக் கயிறு பூட்டி யிழுத்துக்கொண் டக்கணத்திலே எமலோகத்திற் புகுவார்கள். எ-று.

கட்டி யென்பது மெலிக்கும்வழி மெலிந்தது. (௭௪)

முத்தத் துறவே தொளையு முளையுங்
கொத்திச் சிலரைக் கொடுபோ யடைவார்
சித்தத் தயர்வுஞ் செறியச் சிலரைத்
தித்தத் தொடரிற் சமனூர் தொடர்வார்.

எ-து. எமதூதர்கள் சிலபாவிகளை யுதடுகளிற் றொளையுண்டாக முளையையும் அடித்திழுத்துக்கொண்டு போவார்கள். சில பாவிகளை மனத்திற் சோர்வுண்டாக வயிற்றிலே கட்டிய கயிற்றினு டிழுத்துக்கொண் டெமலோகத்திற் போவார்கள். எ-று. (௭௫)

கன்னத் தொளையிற் கயிறுஞ் செறியா
வென்னித் துயர்தா னெனநொந் தழவே
துன்னப் படுநற் றுணையு மறவே
தென்னற் றிசையிற் புரியைச் செறிவார்.

எ-து. சில பாவிகளை யிரண்டு செவித் துவாரங்களிலு முருளக் கயிற்றைக் கோத் தித்துயர மெந்தப் பாவத்தால் வந்ததோ வென்று வருந் தியழவும் அதைநீக்குதற்கோர் சுற்றுணையு மற்றொழியவுங் கொண்டுபோய்த் தென்றிசையிலுண்டாகிய நல்ல எமலோகத்தி லடைவார்கள். எ-று. (௭௬)

முகவா யுறவே கயிறும் முனியத்
தகவோ வெனநொந் தழுவார் தமையே
யகமும் புறமு மழியக் கொடுபோ
யிகமு மறிவா னுழையே யிசைவார்.

எ-து. எமதூதர்கள் கீழ்வாய்ப் புறத்திலே கயிறு பொருந்தக் கோத்து வருத்தும்பொழு திதுமுறைமையோ வென்று வருந்தியழுஞ் சில பாவிகளை யுள்ளமு முடலு மழியக்கொண்டுபோ யிம்மை மறுமை யிரண்டிலு மான்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை யிதென்றுப் பிறித்தறியுந் தன்மையை யுடையவனாகிய எமராசனருகே யடைவார்கள். எ-று. (௭௭)

அங்கத் தெவையு மழியச் சிலரைப்
பங்கித் தடைவார் பயிலத் துயரும்
பொங்கப் புலைநீர் புகர்வாண் முதல்கொண்
டோங்கித் தடிவார் சமனூ ருறுவார்.

எ-து. எமதூதர்கள் சில பாவிகளைச் சரீரத்திலுள்ள வுறுப் பெல்லாஞ் சிதையும்படி யறுத்தறுத்துக்கொண்டு போவார்கள். சில பாவிகளைத் துன்ப மென்மேலு முண்டாக விரத்தம் பெருகப் புகரினை யுடைய வாள் முதலிய வாயுதங்களைக் கொண்டு ஓங்கி வெட்டுவார்கள். இப்படி வழியிற் பெருந்துயரங்கள் உண்டாக்கி யெமபுரியிற் கொண்டடைவார்கள். எ-று.

புலைநீர்-இரத்தம். புகர்-தோய்ல்வாய்ப் பாலெழுந்ததோர் நிறம். ஓங்கி என்பது குறுகும்வழி குறுகிற்று. (௭௮)

தக்கார் வரவிற் றவறே புரிவார்
நெக்கார் வமிலார் நிலையே துமிலா
ருக்கே வழியிற் றுயர்வந் துறவே
புக்கார் வினையத் தருமன் புரியே.

இப்படி எமதூதர்கள் கொண்டு போகப் பாவஞ் செய்தவர்க
ளெமபுரத்தை யடைவதொன் றுணர்த்துகின்றார்.

எ-து. தம்மிடத்திற் பெரியோர்கள் வருங்காலத்தி லெதிர் கொள்ளல், பணிதல் முதலாயினவைகளைச் செய்யா திகழ்ந்தவர்களும் யாவரிடத்து மனநெகிழ்ந் தன்புசெய்யாதவர்களுமா யதனாற் றமக்கொரு நிலையில்லாதவ

ர்களுமான பாவிகள் செல்லும் வழியி லெமதூதரா லிப்படி. யாங்கண் மேன்மேலும் வந்து பொருந்துதலினு லுள்ளமழிந்து சடுதியி லெமலோகத்திற் புகுவார்கள். (எக)

இப்படி தீவினை யுடையோரைக் கொண்டுபோகும் எமதூதர்கள்
எமராசன் முன்சென்று அறிவிக்கு முறைமையுமினிமேல்
இவர்களைச் செய்யுந்திறம் யாதென்றுவினவு
முறைமையு மிரண்டு செய்யுளால்
உணர்த்துகின்றார்:

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அழியாத வாண்மையின ரகலாத வாய்மையின ரதிபாத
காதி யறிவார்
வழியாத நாகுசலர் மலிமாசு மேவினரை மறவாத
மாண றிவினர்
ஒழியாத வூசலென வுழல்வார்கள் பூதலமு மொழியாத
வாவி யுடையார்
பழியாத பான்மையரை வழுவாத தூதுவர்கள் பதியாத
மீது பணியா.

எ-து. ஒருகாலுங் கெடாத வாண்மையையும் எமராசன் சொல்லிய வாக்கைத் தப்பாமற் செய்யுந் தகைமைப் பாட்டையு மதிபாதக முதலிய பாவவகைகளைச் செய்பவர்களை யுள்ளபடி யறியுந் தன்மையையு மதற்குச் சொன்ன நெறியிலே யவர்கள் வாதனை பண்ணுந் தெள்ளிமையையும் பாவங்கள் செய்தவர்களை மறவாத மாட்சிமைப்பட்ட வறிவினையுமென்றும் ஆட்டொழியாத வூசல்போலப் பூமியிற்போ யான்மாக்களைக் கொண்டுவருந் தன்மையையு முடம்பி விறவாத வுயிரையுடைய நித்தியத்தையுஞ் சின்முதலாயினவர்களை யிகழாத நல்வினைப் பகுதியுடையோரை வருத்தாது விட்டு நீங்குமறிவினையு முடைய எமதூதர்கள் தம்மிறைவனாகிய எமராசன் பாதங்களில்வணங்கி. எ-று.

வாதனை-மிகுந்தவருத்தம். பூதலமுமென்ற வும்மையால் எமலோகமுமெனவறிக. (அ௰)

பாவஞ்செய் பாவியர்கள் பாலெய்மை மேவவுன
பாசங்கை மேவ வெளிதே
யேவஞ்செய் தார்வினைய வேவந்து ளார்வழியி
லேலுண்டு ளார்செ ரிதுமே
நோவங்கு ளார்பரம நோமெங்கு ளாரிவர்க
ளூறங்கு வாய்மை நுவலார்

தேவென்செய் வாயினியெ ன்றேவென்று கூறுவர்கள்
சேடுஞ்செய் வானு மெணியே.

எ-து. சுவாமி பாவஞ்செய்த தீவினை யுடையோர்களிடத்து நீவெங்களையே வுதவினாலு மும்முடைய பாச மெங்கள் கையில் பொருந்துவதனாலுங் குற்றங்களைச் செய்தவர்க ளெளிதாகவே சடுதியில் வந்தார்கள் இவர்கள் மிகவும் வழியிலே வாதை யடைந்தார்கள், அதனா லவ்விடத்தில் மிகவும் வருத்தத்தை யுடையவர்களானார்கள். இவர்கள் வேதாகமங்களிற் சொன்னவழி நடவாதவர்க ளாகையினால் காலபாசத்தினின்றுந் தப்புதற் கெங்கே மேலாகிய வலியுள்ளவராவார்கள் இனி யிவர்களை யாது தண்டனை செய்வோமென்று விண்ணப்பஞ் செய்வார்கள். எ-று.

எவ்வம் எவமென விகாரமாயிற்று. நோல்-வலி. தூதுவர்களென்னு மெழுவாய் கூறுவர்களென்னும் பயனிலையோடு முடிந்தது. (௮௧)

முற்கூறிய தீவினையுடையோர் வந்து எமராசனைக்
கண்டவளவி லுண்டாவதோர் நடுக்க
முணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

விண்டவர்கள் வேதநெறி வெய்யவினை தன்னைக்
கொண்டவர்கள் வஞ்சனைய நெஞ்சினர் கொதிக்குந்
தண்டதர னைச்சமனை நச்சரவு தன்னைக்
கண்டனரெ னக்கலுழ்வர் கண்டிடு கணத்தே.

எ-து. வேதாகம வழியிலே நடவாம லதனை யிகழ்ந்தவர்களும் கொடிய தீவினைச் செயல்களைப் பொருளென் றுட்கொண்டவர்களுமாகிய வஞ்சகம் பொருந்திய சிந்தையையுடைய பாவிகள் தண்டத்தைத் தரித்து கோபாக்கினியே பொங்கும் எமராசனைக் கண்டவளவிலே நஞ்சை உமிழும் பெரும்பாம்பினைக் கண்டவர்கள்போலக் கலங்குவார்கள். எ-று. கலுழ்தல்-கலக்கம்.

எமராசன் தன்மையையும் அவனைக்கண்டவர்கள் மனம்வேறுபடுந்
தன்மையையு மையனைய மேனியனென்னுஞ் செய்யுள்
முதல் ஏவலரு ளெங்கள் பெருமா னென்னுஞ்செய்யு
ளீறாக வொருதொடராக வுணர்த்துகின்றார்.

மையனைய மேனியனை வாய்ந்தவரு மூன்று
கையுடை யனைக்கடி யனைக்கடிய ருள்ள
நையவுமிழ் வெய்யவழ லுட்டமுடை யானைத்
துய்யபிறை போலெயி றுறச்சுளி முகத்தே.

எ-து. அஞ்சனம் போன்ற திருமேனியையும் வலியமைந்த பதினெட்டுக் கைகளையு மதிகோரத்தையுந் தூய்மையு மமைந்த விளம்பிறை

யைப்போன்ற பற்றுகள்தோன்றச் சிறுமுகத்திற் றீவினையுடையவர்களு ள்ளமழியச் சொரியும் வெவ்விய வக்கினி விழிகளையு முடையனாய். எ-று.

எற்றுபுரு வத்தினனை யிடுடைய மேனி
பற்றிமுக மீதுபெறு பங்கியுடையானை
முற்றுமயிர் பெற்றமுக முற்றதர வோட்ட
நிற்றலற வுற்றபுர ணத்தினனை நேரோ.

எ-று. நெற்றியின்மீதேறும் புருவங்களையும், வலியையுடைய வுடம்பிற் றோன்றிய மேனோக்கிய முகங்களாய் நிற்கு முரோம பங்கிகளையும், நிறைந்த மீசையமைந்த முகத்தோடு கூடிக் கீழுதடு மேலுதடு நேரோநிற்குந் தன்மையின்றித் துடிக்குந் தன்மையையு முற்றிருப்பவனாய். எ-று. (௮௪)

மேருநிக ருன்னதனை வீறுடைய தண்டந்
தாரகனை மற்றைய தழற்படை யனைத்துங்
காரனைய மேதிமிசை காணவரு வானை
யேருடைய செய்யவுடை யாடையனை யென்றும்.

எ-று. மகமேருபோன்ற வுயரத்தினையும், வெற்றியை யுடையதண்டாயுதமு மற்றுமுள்ள நெருப்புப்போன்ற வாயுதங்களு முழுதுந் தரித்திருக்குந் தன்மையினையும், யாவருங் காணக்கரிய மேகம்போன்ற கடாவின் மேல் வருஞ் சிறப்பினையு மென்று மழகுபொருந்திய சிவந்த பரிவட்டத்தையே தரித்திருக்கு மியல்பினையு முடையவனாய். எ-று. (௮௫)

செம்மைபெறு மாலையது சேர்முடியி னானை
வெம்மையிடி யன்னகுரல் வீறுமுடை யானை
விம்முகட லோடுலக னைத்தையும் விழுங்கச்
சம்மத னெனத்தகு வனைத்தனை தடுத்தே,

எ-று. செந்நிறம் அமைந்த மாலைகளைச்சூடிய திருமுடியையும், வெவ்விய விடிபோன்ற குரலின் மேம்பாட்டினையு, முழங்குங் கடலினோடு உலகங்க ளெல்லாவற்றையும் காவல்கொடுத்து விழுங்குதற்கு விருப்பமுடையவன்போன்ற தன்மையையு முடையவனாய். எ-று (௮௬)

விரித்தமுகின் மேனிய மிருத்தியு மிருக்கக்
கருக்கிய நிறத்தினொடு காலனு மிருக்க
நெரித்தபுரு வத்தினுட னந்தகனு நீடப்
பரித்தகொடு மைத்தொழில்செய் மாரியுமோர் பாலே.

எ-று பரந்த மேகம்போன்ற வடிவினையுடைய மிருத்தியு மொருபக்கத்திலிருக்கக், கரிய நிறத்தினோடு கூடிய காலனு மொருபக்கத்திலிருக்க நறிட்ட புருவத்தொடு கூடிய வந்தகனு மொருபக்கத்தி னிலைபெறக், கொடுமைபொருந்திய தொழிலைச் செய்யும் மாரியு மொருபக்கத்தி லிருக்க, அத

னடுவே வீற்றிருக்குந் தொழிலைச்செய்யும் மாரியு மொரு பக்கத்திலிருக்க, அதனடுவே வீற்றிருக்குந் தேவனுய். எ-று.

விரித்த-என்பது வலிக்கும்வலி வலித்தல்பெற்றது. நீட-என்பதனை மாரியொடுங் கூட்டுக. ஓர்பாலென்பது-கடைநிலைத்தீவகம்-வீற்றிருப்பானு யென்னு மெச்சம்-வருவித்துரைக்க. (அஎ)

கருக்கிய நிறத்தினர்கள் கண்டவர்க ளஞ்ச
நெரித்தவுரு நெற்றியர்க ணிட்டுர ராட்டர்
தரித்திடு கரத்தினர்கள் சத்திதிரி சூலம்
விரித்துடைய பாசமழ லங்குசமும் வேறே.

எ-து. கண்டவர்கள் நடுங்கும்படி கரியநிறத்தினையுஞ் சுளித்தவடிவினையுடைய நெற்றியினையுங் கொடுமையினையு மெவர்களையுஞ் சஞ்சலப்படுத்துங் குணத்தினையும் வேலுமூவிலைச் சூலமு நெடிய பாசக்கயிறு மழல் போன்ற தோட்டியு மற்றுமுள்ளனவும். எ-று. (அஅ)

தண்டுமிளிர் வாளொளிகொள் சக்கரமு மிக்க
வெண்டிகழுப் வாளியினை தூணியெழி லார்கோ
தண்டமிவை மற்றைய தழற்படை யனைத்து
மண்டுதொழில் வீரதர தூதரவர் வந்தே.

எ-து. தண்டாயுதமும் விளங்கும்வாளு மொளியமைந்த சக்கரமும் பேரழகு விளங்கும் அம்புகளும் அவற்றினைச் சேர்க்கப்பட்ட அம்பறாத் தூணியும் அழகுநிறைந்த வில்லும் மற்றுமுள்ள வக்கினிபோன்ற வாயுதங்க ளெல்லாவற்றையுந் தாங்குங் கையினையுடையர்களா யவ்வவ் வாயுதங்களைப் பயிற்றுந் தொழிலின் மிக்க வீரமுடையவரான தூதுவர்கள் வந்து. எ-று. (அகூ)

எவலரு ளெங்கள்பெரு மானென விருக்குந்
தேவனை விதித்திற மதித்தொருமை செப்பு
நாவனை நமன்றனை நடுக்கமொடு கண்டார்
மேவலர்க ளென்னமனம் வேறுபடு வாரே.

எ-து. முன்னேகூறிய திறத்தினையுடைய எமதூதர்கள் வந்தெம்முடைய சுவாமி, யாங்கள் செய்யுங் குற்றேவலருள்வா யென்று விண்ணப்பஞ்செய்ய வீற்றிருக்குங் கடவுளாய்ச் சிவபிரானருளிச்செய்த விதித்திறத்தை யேகாக்கிர புத்திசெய்து அவ்விதிப்படியே தண்டங்கள் செய்யச் சொல்லு நாவினையுடையவனுகிய எமராசனை யச்சத்தோடுங் கண்ட பாவிகள், அவ்வெமராசனுக்குச் சத்துருக்கள்போல, அவன் மனத்துக்கு வேறுபடுவார்கள். எ-று. (கூ0)

எமராச னப் பாவிகளைக் கோபிக்குந் திறமுணர்த்துகின்றார்.

வெறுத்தவரை நல்வினையை வெய்யவினை தன்னைச்
செறித்தவரை நோக்கியழல் சிந்தவிழி சித்தந்

கறுத்துமிக நச்சர வெனக்கடு வெனத்தா
னுறுக்குவ னறத்தளர் வுறக்கடி தொறுத்தே.

எ-து. எமராச னல்ல புண்ணியங்களைச் செய்யாது விட்டுக் கொடியபாவங்களைச்செய்ய விரும்பிய பாதகனைத் தன் கண்களில் நின்று நெருப்புப் புறப்படப்பார்த் துள்ளம்வெகுண்டு நஞ்சினை யுமிழும் பாம்புகள்போலவும் ஆலகால விடம்போலவுஞ் சீறி யவர்கள் தளரும்படி மிகவுங்கோபித் தருளுவான். எ-று. (௧௧)

பாவிகளாயினோ ரந்த எமராசனையே யன்றிச் சித்திரகுத்தனையுங்
கண்டால் நடுங்குவரென்ப துணர்த்துகின்றார்.

வெய்யவினை தன்னையும் விதிப்படி விளைந்த
துய்யவினை தன்னையு மதித்தொருமை சொல்லு
மெய்யுடைய சித்திரகல் குத்தனையும் விறுக்
கையபாவ ரஞ்சுவர வன்விழிகள் கண்டே.

எ-து. அந்தப்பாவிகள், சிவபிரா னருளிச்செய்த வேதாகமங்களிற் கற்பித்த முறையே யவரவர்க் குண்டாகிய கொடியபாவத்தையுந் தூய்மையையுடைய புண்ணியத்தையு மறிந்துள்ளபடியே சொல்லுஞ் சத்தியவாக்கினையுடைய நல்ல சித்திரகுத்தனையும் வேறுபட்டவனுடைய விழிகளைக் கண்டு நடுங்குவார்கள். எ-று.

வீற்று-என்பது விகாரப்பட்டு நின்றது. சூ. 'வீற்றும்பேதமும் விள்ளலுந் திரிபும் வேற்றுமையுங் கொள்ப வேறுபடற்பொருட்டே' என்பதனுமுணர்க. (௧௨)

சித்திரகுத்தன் அவரவர் செய்த பாவங்களை யெடுத்துக் கூறியத்தீவினை
யுடையார் நரகத்திலடைவதற் கொருப்படுமாறு அறிவித்தலையு
மேலந்த எமராசனு மெடுத்துக்கூறு முறைமையையும் இச்
செய்யுள் முதலகன்ற வெமதாதமொன்னுஞ்
செய்யுள்வரையு மொருதொடராக
வுணர்த்துகின்றார்.

சித்திரகல் குத்தனெதி ருற்றவரை நோக்கிப்
பொய்த்திறம தித்தவர்கள் போதுகமு னைநீர்
மத்தகளி றன்னவலி யானுமெளி யார்தம்
வித்தமுதல் கொண்டவர் தமக்கிடர் விளைத்தீர்.

எ-து. நல்ல சித்திரகுத்தன், தனக்கெதிரே நின்ற பாவிகளைப் பார்த்துப் பாவ வகைகளைப் பொருளென்று எண்ணினவர்களே வாருங்கள் நீங்கள் முன்னாள் மதயானையை யொத்த பலத்தினால் எளியரா யுள்ளவர்களுடைய திரவிய முதலானவற்றை யபகரித்துக் கொண்டு அவர்களுக்குத் துக்கத்தை யுண்டாக்கினீர்கள். எ-று. (௧௩)

அங்கமுறு மேன்மையழ காலுமய லார்த
மங்கையர்க டோள்புணரு மாதரவு வைத்தி
ரிங்கிவைக ளும்மையணை யாதகல்வ தெங்ஙன்
சங்கையுறு மின்னிரய முற்றுட றளர்ந்தே.

எ-று. அங்ஙனம் பிறர்பொருள் கைக்கொண்டதல்லாமல், உமதுசரீரத்திற் பொருந்திய அதிக அழகினாலே பிறருடைய மனைவியர்கள் தோளிணையணையும் வாஞ்சையும் பொருந்திய நீங்கள் இப்படிகூறிய தீவினைகளுங்களுடன்கூடி நில்லாமலெங்கே போகுமாகையா லப்பாவங்கள் தீரும்படி நரகத்திலே சென்றதனு லுடலிளைத்துத் துக்கத்தை யனுபவிக்கக் கடவீர்கள். எ-று.

அழகாலுமென்ற வும்மையாற்றனமிகுதியாலுமென்றுணர்க. சங்கை வருத்தம். (௬௪)

உற்றவர்கள் வெய்யநிர யத்துயரை யோரி
லற்றவர்க ளுயவினை யல்லதறு மாறென்
குற்றமதனைக்குணமெ னப்பெரிது கொண்டீர்
துய்த்தவிங னஞ்சிலெங னீங்கும்வினை சொல்லீர்.

எ-து. ஆராய்ந்து பார்க்குமிடத்துக் கொடிய நரகத்திற்றுன்பத்தை யனுபவித்தவர்களே பொல்லாத பாவங்களை யொழிந்தோ ராவார்கள், அப்படி நரகத்தை யனுபவியாமற் பாவங்களொழியுமா றெப்படி. தீமைகளையே நன்மைமிகவு முட்கொண்டவர்களே நீங்கள் நரக மனுபவித்தற் கிவ்விடத்திலே யென்று பயப்படுவீர்களானுற் செய்தபாவ மெப்படிநீங்குமெனக்கதனைச் சொல்லக்கடவீர்கள். எ-று.

துய்த்தல்—அனுபவித்தல். (௬௫)

என்றினைய வாசக மவர்க்குற விசைப்பன்
கன்றியம னுஞ்சிறிய ளாக்கடிது நோக்கி
யன்றுமனு நீதிமுறை யாவையு மயர்த்தி
ரின்றுநிர யத்துற விளைப்பதெ னிசைப்பீர்

எ-து. என்றித் தன்மையையுடைய நீதி வசனங்களைச் சித்திரகுத்தன் அந்தத் தீவினையுடையோர்க்குப் பொருந்தச் சொல்லாநிற்பான். பின்பு எமராசனும் வெகுண்டு அந்தப்பாவிகளைக் கொடுமையாகப் பார்த்து முன்னொணீங்கள் மனுநெறி முறைமை யெல்லாமறந்து பாவங்களையே செய்தீர்கள் இப்போது நரகத்திற் செல்லுதற்கு மனமழ்வதென்னதனைச் சொல்லக்கடவீர். எ-று. (௬௬)

வந்திடுக மண்ணுலகை மாண்டதிறன் மன்னர்
வெந்துயர மேயுயிர்க ளுக்குற விளைத்தி

ரொந்தமுறை யாலுமிந னேனுமது பரலே
வந்துதவி யானதுசொ லீர்பொருண் மதித்தீர்.

எ-து. பூலோகத்தினையாண்ட வெற்றிப்பாட்டினையுடைய அரசர்களே, வருவீராக, நீங்கள் திரவியத்தை விரும்பி யாண்மாக்களுக்குத் துன்பங்களுறும்படி கொடுமையே செய்தீர்கள், அங்ஙனஞ் செய்தவுமிடத்திலெவ்வகையிலேயாயினு மீண்டுவந் துதவியான தெதுதா னதனைச் சொல்லக்கடவீர். எ-று. (௧௭)

மங்கையர்க ளெங்குளர்கள் மற்றையவர் தாமு
மெங்குளர்சொ லீர்புரவி யானைரத யான
மிங்குவர யாமறிய மேபகைமை யெற்றும்
பொங்குபடை யெங்கொழிய விங்கெளிது போந்தீர்.

எ-து. உங்களுடைய வந்தப்புரத்திலே நீங்க ளினியாக வெண்ணியிருந்த மடவார்க ளெங்கே யிருக்கிறார்கள், மற்றுமுள்ள சுற்றத்தவரு மெங்கே யிருக்கிறார்கள், அதனைச் சொல்லக்கடவீர்; நீங்களாண்ட குதிரையுமானையு மேறிய சிவிகையு மிவ்விடத் துங்களுட னொக்கவர யாம் கண்டதில்லையே, சத்துருக்களைச் சங்கரிக்கு நிறைந்த சேனை யெப்படி விட்டுப்போகத் தனித்து நீங்களிங்கே யெளிதாகவந்தீர்கள். எ-று. எகாரம்-இகழ்ச்சி.

கன்றவெம தூதர்கசி வுற்றுமது காவ
லொன்றுமற நீர்தனிமை யோடிஙனு முற்றீ
ரின்றுநிர யத்தினு ளிருந்தவு மிருந்தீ
ரென்றவர்க ளச்சமுற வேபல விசைப்பான்.

எ-து. நீங்களெம்முடைய தூதர்கள் கோபிக்கையால் வருத்தமுற்றும்முடைய வாசற் காவலாயுள்ள தொன்றுந் தாங்காமற்போகத் தனிமையோடு மிவ்விடத்தில் வந்தீர்கள், இப்போது நரகத்தி லிருத்தவு மிருக்கின்றீர்களென்று அவர்கள்அச்சமுறும்படி பலவசனங்களையுஞ்சொல்வான். எ-று.

இப்படியே யவர்கள் சொல்ல வப்பாவிகள் நிற்குந்திறமீனவும்
எமராசன் கண்டு சண்டமகாசண்டனுக்குக்
சொல்லுந்திற முணர்த்துகின்றார்.

மற்றவரு முன்னமுள வல்வினைக ளெல்லா
முற்றுணர்வி னிற்பருமை யற்றுள நடுங்கா
வற்றெருழிய மற்றிவ ரகத்திற மனைத்து
மெற்றிடுக சண்டமக சண்டகடி தென்றே.

எ-து. இப்படி சித்திரகுத்தனும் எமராசனு மொப்பச் சொல்ல அக்கொடுங்கோன் மன்னருந் தாமுன்னாள்செய்த கொடுவினைக ளெல்லாந் தம்மறிவில் தோன்றிச் சொல்லுதற்கோர் உத்தரமுமற்று மனநடுங்கி நிற்பா

ர்கள். மீளவும் எமராசன் சண்டமக சண்டரே இவர்கள் செய்த பாவவகைக ளெல்லாம் அனுபவித்துத் தொலையும்படி சடுதியில் அடிக்கக்கடவீர்கள் என்று சொல்லுவான். எ-று. அகம்-பாவம். (௰)

எமராசன்கூற மகசண்டன் முதலாயினோர் அக்கொடுங்கோல்
மன்னரைத் தண்டிக்குந் திறமுணர்த்துகின்றார்.

ஓதகம னுற்றமக சண்டனெழு வாயர்
காதியவர் பாதமிரு கைகொடு பிடித்தே
பேதமுற வேசுழல் பெறுத்திடுவர் விண்ணின்
மீதெறிவர் பற்றிடுவ ரொற்றிட விரைந்தே.

எ-து. இப்படி எமராசன் அருளிச்செய்ய வவ்விடத்தினிற்கு மகசண்டன் முதலானோர் அக்கொடுங்கோன் மன்னருடைய கால்களை இரண்டு கையினாலும் வாரிப்பிடித்து அடித்தவர்கள் மனங்கலக்கமுறும்படி சுழற்றி ஆகாயத்தி லெறிவார்கள். மீளவும் அவர்களை எரிதழற் கல்லி லடிக்கும் பொருட்டு சடுதியி லேற்றுக்கொள்வார்கள். எ-று.

மேலவர்படுந்திறம் உணர்த்துகின்றார்.

வெந்தழலை யன்னசிலை மீதுகடி தெற்றிச்
சிந்தவுடல் செங்குருதி சேறுபெற வூற
நொந்தறவு நோலறுவர் நொய்யவினை செய்தார்
மந்தமர மெந்தவித மெற்றவுறை யுற்றே.

எ-து. பொல்லாத வினையைச்செய்த வேந்தர்களை வெவ்விய வெரிதழற் கல்லிற் சடுதியி லடிக்குங்காலத்து அவர்களுடம்பு சிதறவுஞ் சேறுபதியும்படி சிவந்த விரத்தம் புறப்படவு மிகவுநொந்து தமது வலி கெடுவார்கள் அஃதெப்படியெனில், இளந்தளிரையுடைய விளமரத்தைக் கல்லின்மேலடித்தா லெப்படி சிதறிப்போமோ வப்படிச்சிதற வருத்துவார்கள். எ-று. நோல்-வலி. (௰௨)

அவர்களை நரகத்திலிடுந் திறத்தை யிரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

அற்றவர்கள் சிந்தனையை யாகமது தன்னி
லுற்றுலவ மாருதமு முண்ணினைவு தன்னைப்
பெற்றிடலு மற்றவர்க டீவினைய பேத
மற்றகல வுய்த்திடுக தாழ்தல வழற்கே.

எ-து. இப்படி யடிபட்டுச் சிந்தை யழிந்து மூர்ச்சித்துக் கிடக்கும் வேந்தர்கள் தம்முடைய சரீரத்தில் தென்றற்காற்று வந்துவீச வதனாலுள்ளுணர்வு பெற்ற மாத்திரத்திலே யிவர்கள் செய்த பாவங்க ளொழிந்துபோம்படி பாதாளலோகத்தின் கீழாகிய வெரிவாய் நரகத்திலே போகக்கடவீர்கள். எ-று. (௰௩)

என்றியம ரேறுமுரை கொண்டவரை யெல்லா
மன்றியடு தூதர்கொடு சென்றவனி யின்கீ
ழொன்றியவொ ரேழ்தல மொழித்தபுரி யின்கீழ்
நின்றநிர யத்திடை நிறுத்துவ ரொறுத்தே.

எ-து. இப்படி எமராசன்சொல்லும் சொல்லைத் தூதுவர்க ளுட்கொண்டு, அப்பாவிகளை யெல்லாம் பூமியின்கீழ்ப் பொருந்திய பாதாளலோகம் எழினுக்குங் கீழாகிய வுலகத்தில் நிலைபெற்ற நரகத்திலே தண்டித்து நிறுத்துவார்கள். எ-று.

அனையர்க்குச் சொல்லவே யவரேறு மூலகத்திலுள்ள சனங்களுக்குங் கூறியதாயிற்று. (௱௭)

மேல் நரகங்களின் தொகைவகைகளை யுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

தொகையினு லிருபத் தெட்டுத் துக்கசா கரங்கள் சொல்லின்
வகையினற் சதமும் வாய்த்த நாற்பது மதிக்குங் காலை
யகலமு மிருபத் தெட்டுக் கோடியே யாயும் போதிற்
றொகைவகை யிரண்டு மிந்த நூலினுட் சொல்லுவாமே.

எ-து. துக்க சமுத்திரங்களாகிய நரகங்களைச் சொல்லுமிடத்துத் தொகையினு லிருபத்தெட்டாம். அதனை யாராயுமிடத்து வகையினல் நூற்றுநாற்பதாம் அதன்விரிவை விசாரிக்குங்காலத்தி லிருபத்தெட்டுக் கோடியாம், இப்படிகூறிய மூன்றின் றொகைவகை நரகங்களின் பெயர்களையே யிந்நூலிற் சொல்லுகின்றோம். எ-று. (௱௮)

நரகங்களின் பெயருமுறையுந் தடுமாறி வருவதற்கோர்
வழுவமைப் புணர்த்துகின்றார்.

பேதமு முறவே யெண்ணும் பெயர்களு முறையும் பேசும்
வேதனைக் குழிக்க ளாதி விமலனு லொன்றுக் கொன்று
பேதமு முறவே தோன்றும் பிரளய முடிவு தன்னி
லாதலால் விரோதந் தம்மி னவற்றிலை யாயுங் காலே.

எ-து. பிரளய முடிந்தபின் றோன்றுஞ் சிருட்டிகாலத்தில் வேதனை செய்யும் நரகக்குழிக்கு எண்ணு முறையும்,பெயருமொன்றுக் கொன்று வேறுபாடாகத்தோன்றும் ஆகையாலனாதி நின்மலனாகிய சிவபெருமானருளிச்செய்த சிவாகமம் எண்ணையும் பெயரையு முறையையு மொன்றுக்கொன்று பேதமாகவுஞ் சொல்லுமதனை யாராயுமிடத்து அவ்வாகமங்களொன்றுக் கொன்று தம்மில் விரோதமில்லை. எ-று.

பேதமுமென்ற வும்மையாற் பேதமில்லாமலுந் தோன்றுமென்றுணர்க. (௱௯)

தொகை நரகங்களின் பெயரை நான்கு செய்
யுளா லுணர்த்துகின்றார்.

வேறு.

கோர மதுதான் முதனரகங் கூறு மதன்கீழ்க் கவின்கோரங்
கோர மதன்முன் னதிகூட்டிக் கூறு மதாமூன் றுநரகங்
கோர தாமே யதனது கீழ்க் கோர ரூப மற்றதன்கீழ்ச்
சேரு மதன்கீழ்த் தாளதாஞ் செறியு மதன்கீழ்ப் பயாநகமே.

எ-து. வெளி. (௱ள்)

அதன்கீழ்க் காள ராத்திரியே யாகு மதன்கீழ்ப் பயோற்கடமே
யதன்கீழ்ச் சண்ட மதுதானே யடையு மதன்கீழ் மகாசண்ட
மதன்கீழ்ச் சண்ட கோலால மாகு மதன்கீழ்ச் சண்டதா
மதன்கீ ழாகுஞ் சரோருகமே யப்பாற் சலச வதியதுவே

எ-து. வெளி. (௱அ)

அதன்கீழ் விம மதுதானே யப்பால் விம விடணமே
யதன்கீழ்க் காளம் விகாளமே யதற்கு மப்பா லென்றறிக
வதன்கீழ்க் குலிச முக்கோண மைந்து கோண மதற்கப்பா
லதன்கீழ்த் தீர்க்க தாமாகு மப்பாற் பரிவர்த் துளமதுவே.

எ-து. வெளி. (௱கூ)

அப்பா லேழு நிலமதனுக் கப்பா லெட்டு
நிலமதனுக்
கப்பாற் றீர்க்க வொளியதனுக் கப்பான் மாயை
யென்றறிக
அப்பார் சடையான் விதியிகழ்ந்தா ரழுங்குங் குழிக
ளெழுநான்கு
மிப்பா லியலு மெண்ணுகவொவ் வொன்றிற் கோடி
யெண்ணுறவே.

எ-து. வெளி. (௱ம)

முன்னே கூறிய விருபத்தெட்டினுக்கு மொவ்வொன்றாக் கைக்
கைந்து நாயக நரகமுண் டென்பதையு மதன் பெயர்
களையும் பதினாறு செய்யுளால் வகுத்
துணர்த்துகின்றார்.

தொகையா விருபத் தெட்டினையுஞ் சொன்னே மினிநா யககரகம்
வகையா லறைவ மதித்திடுக வைந்நைந் தாக மற்றவற்றிற்

பகையே பாவ மெமக்கென்று பயந்து கொடிய பாவத்தைத்
தகையார் தடுத்து நல்வினையைச் சமைக்க நலத்தைத் தாமுறவே.

எ-து. தொகையினு லிருபத்தெட்டு நரகத்தினையுஞ் சொன்னோம், வகையினு லவற்றி லொவ்வொன்றுக்கு நரக மைந்தைந்தா யிருக்குமென்று சொல்வோம், அதனை யறிவாயாக; அஃதென்னகாரணத்தாலெனிற் பெருமையினை யுடையார் பாவமே நமக்குப் பகையென்று பயந்ததனைச் செய்யாதொழிந்து நல்வினையைச் செய்து நன்மையை யடைவதன் பொருட்டு. எ-று.

கலிவிருத்தம்.

வெந்துயர்செய் ரௌரவமா ரௌரவமே மிக்கதமஞ்
சிந்தைகலு ழதிசீத மதிவெப்ப மெனத்தெரித்த
வைந்தினையு முதனிரயத் ததிபதிக ளெனவறிக
விந்தமுறை நாயகங்க ளனைத்தினுக்கு மெண்ணுகவே.

எ-து. ரௌரவம் மகாரௌரவம் அதிதமம் அதிசீதம் அதிவெப்பம் என்று கூறப்பட்ட வைந்தும், முதனிரயமாகிய கோரத்துக்கு நாயகங்களாம் இம்முறையே மற்ற விருபத்தேழு நரகத்துக்கு மொவ்வொன்றுக் கைந்தைந்தாக வெண்ணிக்கொள்க. அவற்றிற்குப் பெயர்களையுஞ் சொல்வாம். எ-று.

அதிகோர மறவுமிரு டக்கணமற் றம்போசம்
விதமுடைய சஞ்சீவஞ் சடமாயை விலோமமெனக்
கதமுடைய விமமெனக் கடங்கடத்தோ டிவைபத்தும்
விதமறுதீ விரவேகங் காளமென விளம்புகவும்.

எ-து. வெளி. (௱௰௩)

விகராளம் பிரகம்பம் வெண்கமலம் வீற்றுமுகம்
பகவிக்குங் கரும்பாசம் பயின்றபிர மருந்தனமே
புகராய சூசிமுகம் புதைநேமி காதகமே
பகவுடற்பீ டனங்கும்பீ பாகமெனப் பகர்ந்தனவும்.

எ-து. வெளி. (௱௰௪)

அதிபாகங் கிரகசமற் றசிதாரு வங்காரங்
குதிகொள்ளு மிரத்தச்சீக் குழியிருப்புத் துண்டப்புள்
கெதமாக்குஞ் சம்வருத்தங் கிரதுவழன் மயச்செங்கற்
றிதநீங்க வுழுத்ததசை திரபுவெனச் செப்புகவும்.

எ-து. வெளி. (௱௰௫)

சோகிக்கு முச்வாச நிச்வாசஞ் சுடர்த்தீக்க
மோகிக்குஞ் சுழலழல்வாள் முள்ளிலவந் துணித்துருட்டஞ்

சோகிக்கு நாதஞ்சுப் பிரவாகம் பிரவகனம்
வேகிக்குங் காடியுரு மேடமென விளம்புநவும்.

எ-து. வெளி. (௩௰௬)

விறலிடப முட்பன்றி சிங்கம்வியாக் கிரம்யானை
திறனுய்கு காமாடு திடமேதி யிடவமச
மறவெடிய விருகான மதிகிரகங் கும்பீரங்
கறுவுளநக் கிராக்கியங்கட் டரவமெனக் கழறுநவும்.

எ-து. வெளி. (௩௰௭)

உரைத்தபெயர் பின்னுரைத்து மூனமில்லை
யொள்ளழலைப்
பரித்தகடத் தினைமற்று மொருபொருளைப்
பரித்திட்லால்
விரித்துணர்வார்க் கரியெனுஞ்சொல் வேறுபல
பொருள்விளக்குஞ்
சுரித்தகிழித் தொகுகும்பொருள்கள் பலவுமுள
துணியுங்கால்.

எ-து. முன்னே யுரைத்த பெயர்களைப் பின்புரைத்தாலுங் குற்றமே யில்லை. அது எதுபோலுமெனின் அழகிய அக்கினியைத் தரித்த குடத்தூக்கிணையான வேறொருகுடம் மற்றொரு பதார்த்தங்களைத் தரித்தாலுங் குடமென்னும் பெயர் குறையாதவாறுபோலப் பெயரொன்றாயிருந்தாலுங் குணம்வேறுபட்டிருக்கும். அது அல்லாமலும் அரியென்னுஞ் சொல்லை விரித்தறிவார்க்குப்பலபொருளை விளக்குவது போலவுஞ், சுருக்குதலை யுடைய மடிச்சீலை யென்னும் பெயரொன்றாயிருந்தாலும் அதன் பொருளை விசாரிக்குமிடத்து பலவாயிருப்பதுபோலவு மாம். எ-று.

இச்செய்யுளான் முன்னே கூறியதைப் பிறர் கூறினாலுங் குற்றமில்லையென்று வழுவமைதி கூறினாரென்க. (௩௰௮)

கூர்மவுருக் கருங்காகங் கொடுங்கழுகு கடுங்கூகை
கார்வாய வட்டைபுலி கவிகட்கங் கண்டகமே
யீர்வாய்ச்சி யிரத்தவிழி யிகழ்பூதி மிருத்திகையே
சேர்வாய கணதூம மெனமுறையிற் செப்பியவும்.

எ-து. வெளி. (௩௰௯)

அழலுமிழ்வன் புழுக்குழிய மேத்தியமப் பிரதிகாம்
வழுவாயுண் ணீர்த்தானம் வாய்நீர்ச்சி வனமூனைக்
கழியாத்தான் றனைத்தின்னல் கலந்தனத்த மனைத்தமுணை
லொழியாத தாருணமே யென்முறையி னுரைத்தனவும்.

எ-து. வெளி. (௪௰)

வேதிக்குஞ் சங்கடமே வித்தாமே மிகுவிகடம்
வாதிக்குங் கட்பூதங் கரிநெருப்பு வறையோடு
பேதிக்கும் வைதாணி யிருப்பழற்பாற் பிணித்துறக்க
லேதத்தைத் தருமேக பாதமென விசைத்தனவும்.

எ-து. வெளி. (௩௨௧)

அறவருத்தும் பூரணமே யசிதால வனங்கோர
முறியவெலும் பினைமுருக்கன் முழுப்பீடை திலச்செக்கே
யெறியவுறு மியந்திரமே கருப்பாலே யிடர்ப்பாசம்
மறியவுடன் மருத்தனமே யெனமுறையில் வகுத்தனவும்.

எ-து. வெளி. (௩௨௨)

பரியசுவி நுண்சுல்வி பாறையழ லிருப்புமயம்
பொருவனைகள் குரதாரம் யாமளமென் பொருப்பதுவே
யருவருமுத் திரகூப மலக்கூப மறவுமிரு
ளெரியுமறற் சாதனமே யுரலுலக்கை யென்பனவும்.

எ-து. வெளி. (௩௨௩)

அரைத்தொறுக்கு மியந்திரமே சிலைவண்டி லயக்கலப்பை
வருத்தியிடுந் தாலவன மாமசக மண்டுகமே
தருக்கழிக்குஞ் சம்மோக மத்திபங்கந் தழற்சூல
மிருப்பழலா முருள்விழுங்க லெனமுறையி லிசைத்தனவும்

எ-து. வெளி. (௩௨௪)

பலதுயர மிகுதுயரம் பழுதாய கசுமலமே
நிலவரிய சமலமல நிட்டூரவா ரகலமே
விலகரிய மிதவிருபம் விகிர்தமிய மானுகமே
யிலகியிடு மொருபாதந் திரிபாத மென்பனவும்.

எ-து. வெளி. (௩௨௫)

அறக்கொடிய தீவிரமே யவீசியென வறைந்தனவுஞ்
செறித்தறிக வொருநூற்று நாற்பதெனத் திண்ணமுற
வொறுத்துயிர்க்குப் பாவவித மொழிக்கவொழுக் கியநிரயத்
திறத்தினுக்கு நாயகங்க டெருளவெணுஞ் சிந்தையரே.

எ-து. தீவிரம் அவீசியென் றிவ்வாறு கூறப்பட்ட நூற்றுநாற்பதாக வேற்றிய நரகங்களை நிச்சயமாகப் பிறித்தறியுஞ் சிந்தையினை யுடையவர்கள், ஆன்மாக்களுக்குப் பாவவகை யொழிக்க நிறுவிய நரகவகைகளுக்கு ஒன்றுக் கைந்தைந்து நாயகங்களென்றுணர்க. எ-று. (௩௨௬)

மேலிராச நரகங்களை யுணர்த்துகின்றார்.

இருள்புழுதி வடிவாகி யிடர்மிகுத்த ரௌரவத்தை
யனையவென வறிந்திடுக வருந்துயரந் தனைக்கொடுக்கு
மெரிமயக்கும் பீபாக மிதற்குமிறை யெனவெணுக
கிருமிசெறி யவீசியிறை யெவற்றினுக்குங் கிளக்குங்கால்.

எ-து. இருண்ட புழுதி வடிவாய் மிகுந்த துயரஞ் செய்யும் ரௌரவத்தை யெல்லா நரகங்களுக்கு மிராசநரகமென் றறிந்திடுக. அரிய துயரஞ் செய்யு மக்கினிச் சுவாலைபோன்ற கும்பீபாக மென்னு நரகம் இந்த ரௌரவத்துக்கு மிராசாவாகையா லிராசராச நரகமெனப் பெயர் பெறுமென் றுணர்க, புழுப்பொருந்திய அவீசியென்னு நரகஞ் சொல்லுமிடத்து எல்லாவற்றிற்கு மிராசாவாமாதலா லிராசாதிராச நரகமென்று பெயர்பெறும். எ-று.

மேற்பாவிகளை நரகத்தி லனுபவிக்கச் செய்து கரை
யேற்று முறைமையை யுவமைமுகத்தா
லுணர்த்துகின்றார்.

செய்தசெய்த தீவினையின் றிறத்திசைய விவற்றழுங்கி
மையலுறு மவர்துயர முடிவின்கண் வல்வினைகள்
மையவிட வெடுத்திடவும் படுவரழற் படுகனகம்
வெய்யவழ லினைவிடுமே களிம்பறலும் விளங்கிடுமே.

எ-து. அழலிற்போட்ட பொன்னனது அக்களிம்பற்ற மாத்திரத்திலந்த வெய்ய நெருப்பினின்றுஞ் சொன்ன காரராலே யெடுக்கப்பட்டு விளங்கும், அதுபோலத் தாந்தாஞ் செய்த பாவவகைகளுக்கிசைய அவீசிமுதலிய நரகத்தி லழுந்தி மயக்கமுறு மான்மாக்களும் பாவபலத்தின் முடிவிலே பலவினைகண் மெல்லவிட வெமதூதர்களா லவைகளினின்று மெடுக்கப்படுவார்கள். எ-று. (௩௨அ)

சொன்னகாரரொன்றும் எமதூதரொன்று மெச்சம் வருவித்துரைக்கப்பட்டன.

எமதூதர்கள் அப்பாவிகளைத் தண்டிக்க அவர்கள் துன்
பத்தைப் பொருந்தும் வகையினை யிருபது
செய்யுளா லுணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மறுத்த ருட்ட மக்கு வைத்த வத்த னித்தன் வாய்மையும்
வெறுத்த றத்தி னைத்த வத்தை விட்ட கட்ட துட்டராக்.
கறுத்து எத்த றச்சி வத்த ழற்க லித்த கண்ணரா
யொறுத்தொ றுத்து றுக்கு வார்க டூரா யுதத்துமே.

எ-து. தம்மிடத்தி லருளை வைத்த செகத்பிதாவாகிய சிவபிரானுடையவாக்கியப்பிரமாணமு மறுத்துத் தனக்கேற்ற தருமத்தினையுஞ் செய்யாமல்வெறுத்துத் தவத்தையும்விரும்பாமல்விட்ட பொல்லாத துட்டர்களை

எமதூதர்கள் மனங்கறுத்து மிகவுஞ் சிவந்ததழல் சொரிகின்ற கண்ணினையுடையவர்கள் ஆயுதங்களினால் குத்திக் குத்திக் கோபிப்பார்கள். எ-று. ( )

இருப்பி் ழறமொ டர்ப்பி ணித்தி டர்ப்ப டக்க ரத்திலும்
பரித்தி டப்ப ணித்த வண்ப ழிப்பு டற்ப தைக்கவே
தூரக்க மெய்ச்சு ழன்று ருண்ட துக்க ரைத்தொ குத்துவிண்
டருக்க றச்ச தத்தி ருப்பு ருட்பி ணிப்பர் தாளிலே.

எ-து. அழல்போன்ற விருப்புச் சங்கிலியினால் கையையுங் கட்டியந்தச் சங்கிலியைத் துக்கமுற வேந்துவித்து, அப்படி பழிப்புண்டாகிய சரீரம் பதைக்கத் தூரத்த வோடமாட்டாமற் றமதுடல் சுழன்று விழுந்துபுரண்ட துக்கத்தையுடைய பாவிகளை மீளவுங் கூட்டிப் பிடித்து மிகுந்த கர்வமறும்படி நூறிருப் புண்டையையிரண்டு காலினுங் கட்டி மீளவுந் தூரத்துவார்கள். எ-று.

விண்டருக்கு-மேலானகர்வம். (௱௬௰)

உன்னு வார்கண் முன்னை வல்வி னைத்தி றம்மு ளத்துளே
யென்னை செய்ய லாவ தென்று மெண்ணி நொந்தி ளைப்பருந்
துன்னு வாரு மில்லையுற்ற துக்க நோய்து டைக்கவு
மன்னு மாம னத்தொ டல்ல தில்லை யூடல் வாய்மையே.

எ-து. முன்னே கூறப்பட்ட பாவிகள் தாம் முன்னே செய்த கொடுவினையின் திறத்தை விசாரிப்பார்கள், அதற்குப் பரிகாரம் யாதுசெய்வோமென்று தம்மனத்திலெண்ணி யுள்ளழிந் திளைப்பதுஞ் செய்வார்கள், தாம் பொருந்திய துக்கநோய் துடைப்பதற் கவ்விடத் தொருவர், வருவாருமில்லை யாகையால் ஊடலுந் தம் மனத்தோ டன்றி வேறொருவருடனு மில்லை, யிவைகளுண்மையே. எ-று. (௱௬௧)

சித்த முந்தி கைக்க வேயி ரத்த முந்தெ றிக்கவே
மொத்து வார ழற்க சைக்கொ ழுந்த ழுந்தி மூளலூன்
குத்து வாரி ருப்பு லக்கை யைக்க ரத்தி னிற்கொடே
மத்த ரான தூதர் பாவ மேவி னுரை வாடவே.

எ-து. மதத்தையுடைய எமதூதர்கள், பாவஞ்செய்தவர்தனை மனந்தடுமாற இரத்தமுந்தெறிக்க அக்கினியைச் சொரிகின்ற கசையிற் கொழுந்தானது தசையைப்பீறி ஊனில்சென்று தைக்க அடிப்பார்கள். பின்பிருப்புலக்கையைக் கையிலெடுத்துக்கொண்டு அவர்கள் தளரும்படி முதுகிலே குத்துவார்கள். எ-று. கசை-குதிரைச் சம்மட்டி. (௱௬௨)

ஒழுக்கு வார்கள் கார நீரு மொள்ள ழற்கு ழம்புமோ
தெழித்தி ரத்த வெள்ள முந்தி றக்க மெய்ம்ம றக்கவே
யழுத்தி வாளை யங்க மெங்கு மன்றி நின்ற றிந்துடற்
புழுக்கு வாரெ ணைத்த டக்கு டத்தி னுட்பு குத்தியே.

எ-து. இப்படியடிபட்டுப் புண்ணாகிய தேகத்தில் உப்புமுதலிய காரநீரையும் அக்கினிக்குழம்பையும் அதட்டிவிடுவார்கள். அதுவல்லாமல் இரத்தவெள்ளமுந் திறந்தோட நினைவுமறக்க வாள்கொண்டறுத்துச் சரீரமெங்குஞ் சின்னஞ் சின்னமாக அரிந்து பொரிய எண்ணெய்க் குடத்துக்குள்ளடைத்து வேகவைப்பார்கள். எ-று.

அழற்குழம்புமோ வென்ற ஓகாரத்தினாற் புளிநீர் முதலியவுங்கொள்க.

(௫௬௬)

விட்டை மிக்க கூபவாய்வி ழுந்த வேய ழுங்குவார்
கட்ட மிக்க மேதை சிக்க லந்து ளங்க லங்குவார்
நிட்டு ரப்பு ழுக்கு ழிக்கு ணின்ற யர்ந்து நீங்கலார்
விட்ட றத்தி னைக்க ளித்த வம்பு ரிந்த வினையோ.

எ-து. தருமத்தினைச் செய்யாமலொழித்து அதருமத்தைச் செய்த வீணர்களிற் சிலரை எமதூதர்கள் மிகுந்த மலகூபமாகிய நரகத்திற்போட அதில் மூழ்கிக்கிடந்து துக்கிப்பார்கள். சிலர் துன்பத்தை மிகவுங்கொடுக்கின்ற ஊனுஞ் சீயுமுடைய நரகத்தைப் பொருந்திக்கிடந்ததினால் உள்ளங் கலங்குவார்கள். சிலர் கொடுமையான புழுக்குழி நரகத்தினின்று சோர்ந்ததனை நீங்கமாட்டாமல் கிடப்பார்கள். எ-று.

(௫௬௭)

கூரி தாய வாய வாய தாதி கோதி மோதியு
மீர வீர வாறு போலி ரத்த மும்ப ரக்கவே
தீரு மாறு தேடு வார்க ளுய பாவ மேவினார்
வீர மாய நாயு மாய வாயி னால்வி டக்கடும்.

எ-து. தீவினைகளைச் செய்தவர்கள், கூரிய வாயினையுடைய காக்கை முதலாகிய புட்கள், காலாலடித்து மூக்கினாற் கொத்தியும் அறுக்க வறுக்க வீரத்தினையுடைய நாயுங் கூரியவாயினாற் றமது சரீரத்தைக் கடிக்க, இரத்தமாறுபோல் ஓடத்துக்கித்து இத்துயரமொழிவது எப்படியென்று விசாரிப்பார்கள். எ-று.

(௫௬௮)

செக்கி டைத்தி லத்தி னுக்கு மொப்பெ னத்தி ருக்குவார்
இக்கி னுக்கு மொப்பெ னக்க லைப்பர் வைத்தி யந்திரந்
தப்பி னைக்க லந்த வுப்பெ னத்த ழற்க ழுத்துவார்
தப்ப றத்த மக்க றம்பு ரிந்தி லார்க டம்மையே.

எ-து. எமதூதர்கள் தமக்கென்று கருதிக் குற்றமறத் தருமஞ்செய்யாத துட்டரைச், செக்கிற்போட்டு எள்ளுப்போல வரைப்பார்கள், அதுவுமல்லாமல் ஆலையிட்டுக் கரும்புபோலவு நருக்குவார்கள். அதுவுமல்லாமல் நீரிலேகலந்த உப்புப் பின்னமல்லாமல் இருப்பதுபோல விவர்கள் சரீரத்தை அக்கினியென்றுஞ் சரீரமென்றும் பின்னம் பண்ணமலக்கினிச் சுவாலையாகிய நரகத்திலும் போடுவார்கள். எ-று.

கலைத்தல்-சுருக்குதல்-இயந்திரம்-கருப்பாலை. (௩௯௬)

பொய்யி னைப்பு கன்ற புல்லர் வாயி னைப்பு டைத்துநாக்
கொய்வர் துக்க பேத முங்கொ டுப்பர் தூதர் கோணனு
வெய்யர் முன்பு சொன்ன பொய்வி னைத்தி றம்வி ளங்கவே
நைவ ரென்னை செய்வ மென்று தீரு மாறு நாடியே.

எ-து. எமதூதர்கள் பொய்சொல்லிய வாயிலடித்து அவர்கள் நாக்கினையு மறுத்துப் பல துக்கத்தையு முறுவிப்பார்கள் அப்பொழுதந்தப்பொய்சொல்லிய கொடியவர்கள் தாமுன்பு சொன்ன பொய்களெல்லாந் தம்மனத்திலுதிக்க வுதித்தவாறே யதனாலுண்டாகிய பாவபலம் போமாறு விசாரித்த தற் கென்னசெய்வோமென்று உள்ளமு மெலிவார்கள். எ-று. (௩௯௭)

வேத மாதி நூலி னுள்வி தித்த றத்தி னைப்பழித்
தேத மான நூலி யம்பு மீனர் நாவெ ழுந்துபோய்க்
காத மோட ளாத்து ரங்க விக்க வெங்க லப்பையால்
வாதை கூரு மாறு கிழி யூறு செய்ய மாய்வரே.

எ-து. வேதாகம புராணத்திலுண்டாகிய விதிமுறையைப் பழித்து அதற்கு விபரீதமாகிய நூலினைச் சொல்லு மற்பர்கள் நாக்கு ஒன்றரைக் காதவழிதூர மெழுந்து வளர அப்படி வளர்ந்த நாவி லவர்கள் துயரமுறும்படி எமதூதர்கள் கொடிய கலப்பையினாலுழுது புண்படுத்த வதனாலே சோர்வார்கள். எ-று. (௩௯௮)

நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா.

விதித்திறத்தைச் செவிப்புலத்துள் விளைத்தருள்செய் வேதியனைக்
கொதித்ததட்டு மவர்முகத்தைக் குடைந்திரத்தங் குடித்திடலும்
பதைத்திடுவ ரட்டைபல பருகியபின் னழற்காரம்
விதிர்த்தலற விட்டிடுவர் தாமிரத்தின் வெவ்வழலும்.

எ-து. வேதாகம புராணங்களில் விதித்தமுறையினைத் தன் காதிற் புலப்பட வருளிச்செய்த வாசிரியனைக் கோபித்துப்பார்த் ததட்டும் பாவிகள் முகத்தை, யட்டைகள் குடைந்து இரத்தங் குடிக்க வதனாற் பதைத்து விழுவார்கள், அவ்வட்டைகள் குடித்துவிட்ட பின் எமதூதர்கள் சுடுகிற காரநீரு முருக்கின செம்பும் அவர்மெய்ந்நடுங்கி அலறும்படி காய்ச்சி விடுவார்கள். எ-று.

வேதியன்-அறிவிப்பவன். புலம்-அறிவு. (௩௯௯)

உருகியபித் தளைத்தழலு மொழுக்கிடுவ ரதன்பின்பு
விளையவழ லுறுதயில மதுதனையும் விட்டிடுவர்
பொருகிருமி மலவளறும் பூரிப்பர் புல்லியரை
வெருவுறுத்தி நமன்றூதர் விதியிகந்த வினைவிடவே.

எ-து. எமதூதர்கள், வருணாச்சிரமத்துக் கேற்ற விதியினை விட்டவர்களுடைய பாவம்போம்படி யந்த வற்பனைப் பயமுறுத்திப் பித்தளையுருக்கி விடுவார்கள், அதன்பின்பு எண்ணெயினையுங் காய்ச்சிச் சடுதியில் விடுவார்கள் அதுவல்லாமல் புழுக்கணெருங்கிய மலச்சேறாகிய நரகத்திலு மூழ்குவிப்பார்கள். எ-று. (௱௬௰)

உற்றிடுவ ருரைத்ததுய ரனைத்தினையு மொருவாதே
பெற்றெடுத்த தாய்தன்னைத் தந்தைதனைப் பெரியோரைப்
பற்றறவே பாடித்துக் கொதித்ததட்டும் பாவியருங்
குற்றமவர் செய்திடினும் பொறுத்திடுகை குணமன்றோ.

எ-து. பெற்றுவளர்த்த மாதாபிதாக்களையும் மகாத்மாக்களையு மவர்களிடத்து நேசமில்லாத வசனத்தைச் சொல்லிக் கோபித்துறக்கும் பாவிகள், முன்னேசொன்ன நரகங்க ளெல்லாவற்றையும் நீக்கமின்றி யனுபவிப்பார்கள்; ஆகையா லவர்கள் குற்றஞ்செய்தாலு மதைப் பாராட்டாமற் பொறுத்தலே நன்மையாம். எ-று. (௱௬௧)

உத்தமரை மதியாதே யுபானபதத் தொடுநடக்கு
மத்தரையு மழற்சுரிமுள் ளிலவமர மதுதன்னிற்
பொத்திடுவர் முதுகறைவர் புணரிருப்பு முளைத்தண்டாற்
கொத்திடுவ ரங்குசத்தா லீர்வாளாற் குறைப்பருமே.

எ-து. பெரியவர்களை மதியாம லவர்கள் முன்னே மரவடி செருப்பு முதலியவற்றைத் தொட்டு நடக்கு மறிவில்லாதவர்களை எமதூதர்க ளக்கினி சொலிக்கிற முள்ளிலவமரமாகிய நரகத்தில் முகங் கீழாகப் போட்டு இருப்பு முளைகளை நெருங்கக்கடாவிய தடியினால் முதுகி லடிப்பார்கள். அதுவல்லாமல் குடாரியினாலுங் கொத்தி யீர்வாளாலு மறுப்பார்கள். எ-று. (௱௬௨)

உற்றிடுவ ருரைத்ததுய ரனைத்தினையு முயிர்க்கிரக்க
மற்றுவதைத் தவைதம்மை யவலமென தவற்றினைத்
துற்றினரு மற்றுமுள கொலைபுரிந்த துரிசினரும்
பற்றுமிலர் படுந்துயர்க்குக் கடுந்தூதர் வலிப்பட்டே.

எ-து. உயிருக் கிரக்கமற்றுத் தமக்குப் புசித்தற்கருகமாகிய மிருக முதலியவுயிர்களை வதைத்தவற்றி னூன்களைக் குற்றமென்று எண்ணாமற் புசித்தவர்களும் புசித்தற் கருகமல்லாதவுயிர்களை வதைத்த பாவிகளும், எமதூதர்கள் வலியிலகப்பட்டு அவர்கள் படுந்துயரத்துக் காதாரமுமற்று முன்சொன்ன நரகங்க ளெல்லாவற்றையு மனுபவிப்பார்கள். எ-று. (௱௬௩)

அரிந்தரிந்தே யுடலூனை யருத்திடுவ ரிரத்தமெலாஞ்
சொரிந்துகுடித் திடச்சொலுவர் தூதர்பசி தோன்றவனை
யிரந்தவர்க்குப் பசிதணியா திருந்தருந்து மன்னையும்
அருந்தியிடக் குளிர்ந்தபுன லுதவாத வவலரையும்.

எ-து. எமதூதர்களாயினோர் பசித்துவந்த வதிதிகளுக் காகாரமிடாமற்றானே தனித்திருந்துபுசிக்கு மற்பனையுந் தாகங்கொண்டபேர்களுக்குத் தண்ணீர் கொடாத பொல்லாதவர்களையும் அவர்களுடைய மாமிசங்களை யரிந்தரிந்து புசிப்பித்துச் சரீரத்தையுங் குடைந்து இரத்தத்தை வாங்கி யவர்களைத்தானே குடிக்கச் சொல்லுவார்கள். எ-று. (௱௪௪)

பின்னுமவர் தமையாலைக் கரும்பெனவே பேதிப்பர்
துன்னுமசி தாலவனத் துடறுணியத் தொகுத்திழுப்பர்
பின்னமுற வுடலழன்ற சூசிபல பெறுத்திடுவர்
கொன்னவிலுந் தழல்சூலக் கொழுந்திலுமெய் கொளுத்துவரே.

எ-து. வெளி. அசிதாலவனம் - வாள்போன்ற மட்டையினையுடைய பனங்காடு, சூசி - ஊசி, கொன் - அச்சம். (௱௪௫)

அறுந்தொறுப்ப ருறுப்பனைத்து மீர்வாளா லகத்தெலும்பு
முறித்திடுவர் கண்கலங்க முகத்தறைவர் முரணழியப்
பொறுப்பரிய துயரனைத்தும் பொருந்திடவ ரொரித்திடுவர்
கறுத்திடவ ரிரங்காத கரிசுதனைக் கழித்திடவே.

எ-து. வெளி. அகம்-சரீரம், முரண்-வலி, கறுத்தல்-கோபித்தல். ( )

நிறுத்திடு*வ ருச்வாச† நிருச்வாச நிரயத்தும்
வறுத்தமணன் முகத்தறைவர் மாரௌர ரௌரவத்து
முறுத்திமிக வொறுத்திடுவ ரொள்ளழற்கூ ரிருப்புமுளை
செறித்தறைவர் கோசத்தின் முகமதனிற் சிரத்திலுமே.

எ-து. வெளி. (௱௪௭)

பதத்தறைவர் குதத்தறைவர் பறைதத்தழுங்க வுரத்தறைவர்
விதிர்த்தகரத் திலுமறைவர் வெய்யவழற் செங்கலினு
மிதித்திழுப்ப ருதகான முதவாத வெட்டியரைக்
கதத்தெழுந்து நமனுணை கடவாத கடுந்துதர்.

எ-து. வெளி. உதகானம் என்றூர் உதகம்-அன்னம் என்பவைகளை. கதம்-கோபம். (௱௪௮)

மேற்பரதாரகமனம் பண்ணும் புமானையு மந்நாரியையு
மெமதூதர்கள் துய்ப்பிக்குமுறையை யாறு
செய்யுளா லுணர்த்துகின்றூர்.

பரிவுடைய பரதாரி யழலிருப்புப் பாவையினை
யுருகியிட வுடன்முழுதுந் தழுவியழு துளைந்திடவ
னுரியவனை யொழிந்தொருவற் குடல்கொடுத்த வொண்டொடியு
மெரியுருவப் பாவையவ னெனத்தழுவி யிளைப்பாளே.

* உச்சுவாசம்-சுவாசம்விடுதல். † நிருச்சுவாசம்-சுவாசமடைதல்.

எ-து. வெளி. அழலிருப்புப்பாவை-சோர நாரிரூபமாகிய இருப்பழற்பாவை: உளைதல்-துக்கித்தல். எரியுருவப்பாவையவன்-புமானுருவமாகிய இருப்பழற்பாவை. (௨௱௬௯)

பிரிந்திடவே விழைந்திடுமப் பேதைதனைப் பிரியாதே
பொருந்தியிட வழலுருவிற் புணர்த்திடுவர் கணவனைநீ
பிரிந்தனையே புணர்ந்தனையே பிறருருநின் பெரும்பாவம்
பிரிந்திடுநாள் பிரிந்திடுநீ யெனத்தூதர் பேசுவரோ.

எ-து. வெளி. (௨௱௭௰)

மற்றவனு மழன்மயத்த வடிவுசுட வறிவுசெய
லற்றழிந்து பிரிந்திடவே யாதரிப்ப னவன்றனையு
மற்றொருவன் மனைமகிழ்ந்த வல்வினைநின் றனைப்பிரிந்தே
யற்றிடுநா ளகன்றிடுநீ யெனக்கடுகி யழுத்துவரோ.

எ-து. வெளி. மற்று-வினைமாற்று - ஆதரித்தல்-விரும்பல். (௨௱௭௧)

இனையகடு வினையந்த வியற்றினரை யிருப்பாலே
வனைகுடத்துட் புகுத்தியதன் வாயடைத்து வன்றூதர்
கனன்மிசையே வைத்தெரிப்பர் கன்றவுட லுாவிடிப்ப
ரனலொழுகு சிலைதனிலு முடல்சிதற வறைவரோ.

எ-து. வெளி. வனைதல்-பண்ணுதல். (௨௱௭௨)

வெருளவிருட் கூவத்தும் விட்டிடுவர் விள்ளவுடற்
பிரமரங்கள் பெறுத்திடுவர் நிறுத்திடுவர் பெருங்கிருமி
யுருவவுடல் குடைந்திடலு முதிரவெள் மொழுகியிட
வெரியனைய காரவெள்ளக் கூவத்து மிறக்குவரோ.

எ-து. வெளி. பிரமரம்-வண்டு-வெள்ளமென்பது திரிந்து நின்றது.

பின்னுமவ ரொரிவாய நிரயத்துப் பெயப்பட்டுக்
கின்னமுற வுடலுருகக் கிடந்திடுவர் தொடர்ந்தவினை
தன்னைநினைந் தழுங்கிடுவர் விதித்தவினை தனைத்தவறித்
துன்னினர்க டியாவிதந் தனைக்கொடுக்குந் துரிசினையே.

எ-து. வெளி. பெய்தல்-போடல். கின்னம்-துக்கம். துரிசு-பாவபலம்.

குரு முதலிய மூவருக்கும் ஏவல்செய்யக் கூசினவர்கள்
முதலாயினோர் படுந்துயரம் நான்குசெய்யுளால்
உணர்த்துகின்றார்.

தேசிகர்க்குந் தேவர்க்குஞ் சிறப்புடைய வருந்தவர்க்குங்
கூசின்றை யேவலுக்குக் கொதித்தமனக் கோணினரைத்

தூசினையும் பிறர்மனையிற் றொட்டெடுத்த சோரனையும்
பாசமுற வுறுப்பெவற்றும் பிண்டமெனப் பந்தித்தே.

எ-து. குருலிங்கசங்கமாகிய மூவருக்கு மேவல் செய்யக் கூசினவர்களையும் அவர்களைக் கோபித்த பொல்லாத மனமுடையவர்களையும் புடைவை திருடின சோரனையும் எமதூதர்கள் தமது பாசக் கயிற்றினு லவர்களவயவங்க ளெல்லாவற்றையுங் கூட்டிக்கொட்டைக்கட்டாகக்கட்டி. எ-று.

எறிந்தருந்த விருப்புமயத் தும்பிகளை யேவிடுவர்
செறிந்திடவுஞ் செந்தழலிற் செலுத்திமிக வொறுத்திடுவர்
பிறிந்திடவுஞ் செந்தழலிற் பெய்திடுவர் நையவுள
முறைந்துருகக் காரீட வழலிடையு முறுத்துவரே.

எ-து. வெளி. காரீடவழல்-வறளித்தழல். (௪௬௫)

கூட்டிடுவ ருமியழற்குங் கொடிதாய வதுதன்னின்
மீட்டடைப்பர் சாசாத்த வெட்டியகற் பாறையினு
மூட்டிடுவ ருனனைத்து முடலிடையே யுற்பவித்துத்
தேட்டுடைய விரைக்கிருமி யனைத்தினுக்குஞ் சிறப்புறவே.

எ-து. வெளி. உற்பவம்-உண்டாக்குதல். (௪௬௭)

அழுத்திடுவர் கிருமிசெறி யவக்குழிக்கு மதன்மீட்டே
யுழுத்ததசைக் குழியுள்ளு முழுத்திமிக வொறுத்திடுவர்
வழுக்கறவே பொருகிரியி னிடைநெருக்கி வருத்திடுவ
ரழற்குழியி னதோமுகமா வழுத்திடுவ ரவர்தமையே.

எ-து. வெளி. உழுத்ததசை-நாற்றமாமிசம், பொருகிரியினிடைநெருக்கல்-இரண்டு மலையினுல் நெருக்கல், அதோமுகமாவழுத்தல்-தலைகீழாகப் போடுதல். (௪௬௮)

பரிவோடன்றி இடுவோர்கள் பரான்னத்தைப் புசித்தோர்கள்
படுந்துயர முணர்த்துகின்ருர்.

அழலொழுகு மிருப்புண்டை யவைவிழுங்க வடித்திடுவர்
ஒழுகியிட வுதிரவெளங் கசையாலு மொலித்திடுவர்
பழுதறவே பாமதியா திடுசோறுண் பரிசிலரை
யழுதழுது கதறியவர் வீழ்ந்திடத்தூ துவரதிர்த்தே.

எ-து. வெளி. (௪௬௯)

ஆலய முதலியவற்றுள் மலவிசர்க்க முதலியவை செய்தவர்கள்
படுந்துயர மிரண்டு செய்யுளா லுணர்த்துகின்ருர்.

ஈசர் திரு வாலயத்து மிடர்கடியும் புனற்றடத்தும்
வாசமலர்த் திருநந்த வனத்திடையு மடத்தினுளும்

மாசுகளைந் தருந்தியனை மைதுனமற் றையதொழிலுங்
கூசமறப் புரிகின்ற கொடியாரை மிகக்கொதித்தே.

எ-து. வெளி. மாசுகளைதல்-மலவிசர்க்க முதலியனசெய்தல். மற்றையதொழில், சயனாதிகள். கூச்சமென்பது திரிந்து நின்றது. (௱௬௰)

இக்கெனவே செக்கிடையிட் டியந்திரிப்பர் யமதூதர்
துக்கமுற நரகவித மெனைத்தனைத்துந் தொகுத்தொறுப்பர்
உக்கிரவா ரழனிரயத் தொடக்கிடுவ ருருகிவிழத்
தக்ககதிர் மதியளவு மவாதனிற் றவிப்பாரே.

எ-து. வெளி. உக்கிரவாரழனிரயம்-குரூரமாகிய எரிவாய் நரகம். ( )

ஆசிரியனை நிந்திக்கக் கேட்டிருந்தவர்களுஞ் சிவயோகிகள்
தபோதன ரிவர்களுக் கபராதம் பண்ணினவர்
களு மனுபவிக்குந் துயரத்தை யிரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

குரவனையு நிந்தனைகள் கூறியிடக் கேட்டார்த
மிருசெவியிற் றுளையுறவே யெரியிருப்பு முளையறைவர்
உருகியதா மிரமற்று மொழுக்கிடுவ ரவற்றுளுறப்
பருவரலுற் றிடநிரய விதத்துமுறப் பதிப்பாரே.

எ-து. வெளி. பருவரல்-துக்கம். (௱௬௨)

உற்றிடுவர் செவிப்புலத்தி னுறுதுயர மெனைத்தனைத்து
மற்றுமுள விந்திரியத் தபராத மருவினர்க
ணெற்றிவிழி நிருமலனை நினைந்துலக வியற்கைதனை
யற்றவருந் தபோதனர்க்கும் புரிந்தாரு மபராதம்.

எ-து. அந்த வாசிரியர்க்கு மற்றுமுள்ள கண்முதலிய விந்திரியங்களினு லபராதம் பண்ணினவர்களு முதற்கண் செவிப்புலத்தினுக்குக் கூறிய துயரமெத்தனை யுண்டோ வத்தனையு மவ்விந்திரியங்களி லனுபவிப்பார்கள், உலகவியற்கையை யொழித்துச் சிவத்தியானம் பண்ணியிருக்கும் ஞானிகளுக்குஞ் சாதகர் முதலிய தபோதனருக்கு நிந்தை முதலிய வபராதம் பண்ணினவர்களுங் குருநிந்தை சொல்லக் கேட்டிருந்தவர்க்குச் சமமா யனுபவிப்பார்கள். எ-று. (௱௬௩)

பிறர்மனையாளை யிச்சித்துத் தீண்டினோர்கள்
துயர முணர்த்துகின்றார்.

மற்றொருவன் மனையாளை வாஞ்சையுறப் பரிசித்த
குற்றமறக் கூழல்வாய்ச் சூசியினாற் குத்திடுவர்
முற்றுமுட றுமிரத்தின் முழுக்கனலு மொழுக்கிடுவர்
மற்றுமுள நிரயவிதத் தினுமழுத்தி வருத்துவரே.

எ-து. வெளி. (௱௯௪)

பிறர்மனையாளை விழைந்து விகாரத்தால் பார்த்தவர்களை
யெமதூதர்கள் துய்ப்பிக்குமுறையை
யுணர்த்துகின்றார்.

மனமுருக விழிகுளிர வாஞ்சையுறப் பார்த்திடினு
முனமுரைத்த துயரவிதங் கண்டனிலு முற்றுவிப்பர்
நினைவழிய வலிமிதாலைய நிலைமையினை நீங்கினர்க்குத்
துணியதனை முறையுறவே துய்ப்பிக்குந் தூதுவரே.

எ-து. வெளி. கண்டனிலுமென்ற வும்மையாற் சரீரத்திலுமென்பதூஉங்கொள்க. (௱௯௫)

ஆசிரியனைக் கோபத்தினாற் கண்செவந்தேறிட்டுப் பார்த்தவர்களையுஞ்
சிவபூசை யக்கினிகாரிய மதிதிசற்கார மிவை செய்யாமற்
புசித்தவர்களையும் எமதூதர்கள் துய்ப்பிக்கு
முறையை மூன்று செய்யுளா
லுணர்த்துகின்றார்.

எற்றியிட விணைப்புருவ மிரத்தவரி விழியிரண்டும்
பற்றியிடப் பரிவொழியக் குரவனுருப் பார்த்தானை
யெற்றியிரு விழிமுழுது மெரிவிரவுஞ் சூசியினை
யுற்றுறுத்திக் காரவழ லொழுக்கிடுவ ருணர்வறவே.

எ-து. வெளி. இரத்தவரி-செவ்வரி. (௱௯௬)

பஞ்சவித லோகவழற் பதைத்தலறக் கவிழ்த்தொறுப்பர்
நஞ்சழிய மனமவனை மற்றைநர கினுநலிப்பர்
துஞ்சிருளி னடமாடி யடிப்பூசை தொடங்காதே
யஞ்சியழ லோம்பாதே யதிதியனை யருத்தாதே.

எ-து. வெளி. பஞ்சவிதலோகம் என்பன, சூ. 'பொன்னும் வெள்ளி யுஞ் செம்பு மிரும்பும், அன்னவீயமுமைவகையுலோகம்,' என்பதனாலுணர்க. துஞ்சிருள் என்பது சங்காரகாலம். (௱௯௭)

அருந்தினர்க ளவினிடை யழலொழுகு மிருப்பாணி
பொருந்தியிட வொருநூறு புதைத்திடுவர் பதைத்தலற
வருந்தியிடக் காரவழ லுடன்முழுதும் வார்த்திடுவ
ரெரிந்தொழுகு தாமிரமு மிறைத்திடுவ ரிளைப்புறவே.

எ-து. வெளி. (௱௯௮)

சிவனது நந்தவனத்துப் பூவையெடுத்து முடித்து முகந்தோர்களைத்
துய்ப்பிக்குமுறைமை யுணர்த்துகின்றார்.

இணையிலிநந் தனவனத்து ளிணரூரு மணமலரை
யெணமிழந்து பறித்துமுகந் தெழிலுறவே முடிக்கணியிற

றிணமுடைய வழலிருப்பு முளையறைவ ரவர்சிரத்தின்
மணமுகந்த நாசியினுங் காரமுதல் வார்ப்பாரே.

எ-து. வெளி. (௩௬௯)

சிவன் முதலாயினோரையுஞ் சிவாகமத்தையுந் தூடிப்போரையும்
எமதூதர்கள் துய்ப்பிக்கு முறைமை மூன்று
செய்யுளால் உணர்த்துகின்றார்.

அமலனையுங் குரவனையு மமலனுக்கே யாட்பட்டுத்
தமலமறத் தவஞ்செய்யுந் தகுதியர்க ளவர்தமையு
நிமலனுரை யதுதனையு நிந்தித்தா ரவர்வாயுட்
டுமிலமுற விருப்பாணி யழலறைவர் துயருறவே.

எ-து. வெளி. துமிலம்-ஆரவாரம். (௩௭0)

தந்தத்தி னிடைதோறு மதரோட்ட மவைதனினுஞ்
சிந்தச்செங் குருதிவெளஞ் சிரத்திடையு முரத்திடையுஞ்
சந்தித்த விடைதோறு நாசியினுந் தழலொழுக
வெந்துற்ற விருப்புமுளை யறைந்தொறுத்து வெறுப்பாரே.

எ-து. வெளி. (௩௭௧)

ஒழுக்கிடுவ ரழற்கார முடன்முழுதுந் தாமிரத்தி
னழற்சொரிவர் மற்றுமுள் வல்லலெல்லா மருத்திடுவர்
பழித்திடுவர் நிரயவித மனைத்துமுறப் பதைக்கவுடற்
றொழிற்பலத்தை முறையுறவே துய்ப்பிக்குந் தூதுவரே.

எ-து. வெளி. (௩௭௨)

கையினாற் பிறர்பொருளைக் கவர்ந்தவரையும் பிராமணர் வடிவிலுஞ்
சிவனுக்குக் கருதிய பதார்த்தங்களினுஞ் சிவாகமத்தினு
மறந்தாயினுந் தங்கால்படச் செய்தவரையும் எம
தூதர்கள் துய்ப்பிக்கு முறைமை இரண்டு
செய்யுளாலுணர்த்துகின்றார்.

அன்னியர்தம் பொருளதனை யங்கையினாற் பற்றிடினு
மன்னுபுகழ் விப்பிரர்தம் வடிவிடத்து மறந்தேனுந்
தன்னுடைய பதம்படினுஞ் சங்கரர்க்குக் குறித்தபொரு
ளின்னிசைய வாகமமென் றியம்பியிடு மிவைதனினும்.

எ-து. வெளி. (௩௭௩)

கரமதனிற் பதமதனிற் காரவழற் கவிழ்த்திடுவ
ருருகியதா மிரத்தினையு மொழுக்கிடுவர் வழுக்கறவே

நிரயவித மெனைத்தனைத்து முணர்வறவே நிறுத்திடுவர்
கரவினையும் பதவினையுங் கட்டதாங் கட்டதாம்.

எ-து. வெளி. வழுக்கு-நீக்குதல். கட்டதாம்-மிகுந்தகொடுமை. ()

சிவாலய முதலியவற்றின் மலமூத்திராதிகளை விட்டவர்களை
யெமதூதர்கள் துய்ப்பிக்கு முறைமை மூன்று
செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஈசர் திரு வாலயத்து மெழிலுறுநந் தனவனத்து
மோசகனை மலமதனை மூத்திரமு முரணழித்துக்
கோசமதிற் பீசமதி லயோமயத்த குறுந்தண்டா
லோசையுற நமன்றூதர் நருக்கிமிக வொறுப்பாரே.

எ-து. வெளி. அயோமயத்த தண்டு-இருப்புத்தடி. (௱௭௫)

அனலொழுகுஞ் சூசிபல வழுத்திடுவ ரவைதம்மிற்
கனலொழுகு மயோமயத்த தண்டமதிற் கண்டகமு
மினலுறவே குதத்தியற்றிச் சிரத்தின்மிசை யெழவேற்றி
நினைவழிய வஙிதொலையத் துயரவித நிறுத்துவரே.

எ-து. வெளி. கண்டகம்-முள். இன்னல்-துக்கம். இன்னல் என்பது திரிந்துநின்றது.

கனலனைய காரவழ லவைதம்மிற் கவிழ்த்திடுவ
ரனலொழுகு தாமிரமு மலறிடவே சொரிவார்க
ளினையதுயர் மற்றுமுள விந்திரியத் தியற்றிடுவர்
வினையவல மவற்றுலும் விதியிகந்து விளைத்தவர்க்கே.

எ-து. வெளி. மற்றுமுள்ள விந்திரியம் எ-து. மற்றையதென்பது. சுட்டியதற்கினம்-என்பதனல் வாக்குமுதலியனவுங் கொள்க. (௱௭௭)

எமதூதர்கண் மிகவுந் தனதானியங்களைப் படைத்திருந்தும்
அறஞ்செய்யாதோரை வேதனைப்படுத்து முறைமை
எழுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

தனமிகுதி தரித்திருந்துந் தானவினை புரியாரை
மனைதனிற்செஞ் சாலிமிக வுளராயும் வறியார்வந்
தனமுளதே யெனவிரந்த வதிதியரை யருத்தாதே
தனியிருந்துண் ணவலரையுந் தண்டதரன் றமர்தாமே.

எ-து. எமதூதர்கள் மிக்க திரவியத்தை உடைத்தாயிருந்துந் தானதர்மங்களைச் செய்யாதவர்களையுந், தம்முடைய மனையினிடத்துச் செஞ்சாலி முதலிய வெகுதானிய முண்டாயிருக்கவும் பசிமிகுதியால் வந்து ஆகாரம்

வேண்டுமெனக் கேட்ட அதிதிகளைப் புசிப்பியாமற் றாமே தனித்திருந்து புசிக்கும் பொல்லாதவர்களையும். எ-று. (௩௭௮)

அறைந்திடுவர் கூறியவா யிருப்புமுளை யவர்மிடற்றுட்
புறம்புறுமவ் வாணிவளைச் சிருங்கலையைப் பூட்டிடுவர்
சிறந்தவய் விருதம்பத் திடைக்கணையிற் செறித்திடுவர்
பறந்திடவே பதம்பாணி பக்கமுறப் பயிற்றுவரே.

எ-து. கூரிய வாயினையுடைய இருப்புமுளைகளை அவர்கள் கழுத்தி னுள்ளிறங்க வடித்துப் புறம்பேபொருந்திய இருப்பாணி வளையத்தில் சங் கிலியைப்பூட்டி இரண்டிருப்புத்தூணை நாட்டி அதன்மே லுத்திரத்தைப் போட்டு அதனடுவே நூறுவருடங் கிடக்கும்படி கட்டித் தூக்கிக் காலுங் கையும் இரண்டுபுறத்திலும் பறக்கத்தக்கதாக விடுவார்கள். எ-று.

சிருங்கலை - சங்கிலி. (௩௭௯)

சிரத்தறைவர் குளத்தறைவர் திறந்துறவாய் தனிலறைவ
ருரத்தறைவர் பதத்தறைவ ரொள்ளழற்கூ ரிருப்புமுளை
கரத்தறைவர் வருத்தமுறக் கசிந்தன்பாற் கடும்பசியி
லருந்தியிடா தருந்தவரை யருந்தியதீ வினையறவே.

எ-து. வெளி. (௩௮௦)

வாக்கதனைக் கிருமிபல மண்டியுண வயத்துண்டக்
காக்கைபறித் தருந்தியிட மற்றுமுள கடுந்துயர
மாக்கிடுவர் நாக்கினடுத் தொளைத்தழன்ற வயத்தொடரால்
வீக்கியதி பாரவிருப் புண்டைபல விடுவாரே.

எ-து. வெளி-கிருமி—புழு. அயத்துண்டக்காக்கை - இருப்புமூக்கை யுடைய காக்கை. அயத்தொடர்-இருப்புச்சங்கிலி. வீக்குதல்-கட்டுதல். ()

கட்டிடுவர் பீசத்துங் கோசத்துங் கடியதொடர்
விட்டதனை நான்றிடவே வியனிருப்புக் கட்டிதனைக்
கட்டிடுவ ரதன்முடிவிற் காத்துமிலற் றிரட்டிரட்டி
நிட்டுரரை நிதியுதவக் கருதாத நெஞ்சரையே.

எ-து. எமதூதர்கள் திரவியத்தைத் தருமத்திற் செலுத்த விசாரியா தநெஞ்சினையுடைய கொடிய பாவிகளுடைய பீசத்திலுங் கோசத்திலும் இருப்புச் சங்கிலியைக் கட்டிவிட் டதனுனியிலே முற்கூறிய இருப்புண் டைகளி லிருமடங்கு கனமுள்ள இருப்புக்கட்டியைக் கட்டி தொங்கவிடு வார்கள். அதற்குபின்பு கைகளிலும் இருப்புச் சங்கிலியைப் பூட்டி நான்ம டங்கு கனமுள்ள இருப்புக்கட்டியைக் கட்டிவிடுவார்கள். எ-று. (௩௮௨)

அரிந்தரிந்தே யவராகந் திலமென்வே யருத்திடுவர்
சொரிந்திரத்தங் குடித்திடவுஞ் சொல்லிடுவர் சூசியினு

லெரிந்தெழுகுங் காரவற விறைத்திடுவர் தாமிரமுஞ்
சொரிந்திடுவ ரழலொழுகுந் தயிலமும்பின் சொரிவாரே.

எ-து. எமதூதராயினோர் அந்தப்பாவிகள் சரீரத்தை எள்ளுப்போல அரிந்ததனைத் தின்னச்சொல்லுவார்கள், அதுவல்லாமல் ஊசியினாலும் அவர்கள் சரீரத்தைக்குடைந்து உதிரத்தையேற்றுக் குடிக்கச்சொல்லி அப்புண்வாயிலே அக்கினிச்சுவாலைபோன்ற காரநீரையும் இறைத்துச் செம்பினையும் உருக்கிவிடுவார்கள். அதற்குப்பின் எண்ணெயினையும் நெருப்புப்போலக் காய்ச்சிவிடுவார்கள். எ-று. (௱௮௩)

அதிதூர வழலிடையு மழுத்திடுவ ரதன்பின்பு
கொதியாமற் றையநிரயத் துயரனைத்துங் கொடுத்திடுவ
ருதராங்கி தனைமிகவு முதிப்பித்தே யொறுத்திடுவ
ருதகாசை யுறத்தபன வழலினையு முதிப்பிப்பார்.

எ-து. எமதூதர்களாயினோர் அப்பாவிகளைமிக்க ஆழத்தினையுடைய எரிவாய் நரகத்திலும் மற்றுள்ள பொங்கு நரகங்களிலும் போட்டுத் துக்கங்கள் எல்லாவற்றையு முறுவிப்பார்கள். பின்பு அதிதிகள் பசித்திருக்கப் புசித்தினொன்றவர்கள் உதரத்திலே மிகவும் பசியையுண்டாக்கித் தண்ணீர்மேல் ஆசையுண்டாக்கும் வண்ணந்தாகத்தையும் உண்டாக்கி வேதனைபடுத்துவார்கள். எ-று.

தபனவழல் - தாகம். (௱௮௪)

நரகவேதனைகளை அளவிடப்படாதென்று முடித்துணர்த்துகின்றார்.

ஒருநிரயத் துயர்பலவே யுரைப்பனவோ வுரைத்திடினு
நிரயவித மனைத்தினுக்கு நிரந்ததுயர் நிச்சயித்து
வருடமொரு சதமுறினு மதித்துரைக்க வலரிலரோ
யருநிரயக் கடற்றுயரப் பெருவெளத்துக் களவுண்டோ.

எ-து. ஒவ்வொரு நரகவேதனையை விசாரிக்குமிடத்து அனந்தமாயிருக்கும். அதனைச் சொல்லப்படுமோ சொல்லுமிடத்து நரகங்களெல்லாவற்றிற்கும் பொருந்திய வேதனையை அளவிட்டு நூறுவருடஞ் சொன்னாலும் அமைத்துச் சொல்ல வல்லவர்களில்லையே, ஆதலாலுரைத்தற்கு அரிதாகிய நரகக்கடலிற் றுக்கமாகிய பெருவெள்ளத்துக்கு முடிவுண்டோமுடிவில்லை எ-று. (௱௮௫)

நரகவேதனையின் அதிசயமுணர்த்துகின்றார்.

வேதத்தி னாகமத்தின் விதியிகந்து விடுத்தார்கள்
வாதிக்கப் படுவாவற் றனைத்தினுந்தா மரியாரும்
மேதைக்குண் மாதுரியர் கேட்டவுடன் விவொன்ப—
போதிக்குங் கடுந்தழலிற் கொடுவினையார் புகுவாரோ.

எ-து. வேதாகமங்களிற் கூறப்பட்டவழியில் நடவாது அதனைக் கடந்துவிட்டவர்கள் இப்படிகூறப்பட்ட நரகவகைகளெல்லாவற்றினும் எமதூதர்களால் வேதனைபண்ணப்படுவார்கள். அப்படி வேதனைபடினுஞ் சாகவுஞ் செய்யார்கள். புத்தியினுண்மிகவுங் கூரியராயினோர் இவ்வேதனையைக் கேட்டமாத்திரத்தில் தானே சாவாரொன்று வேதாகமங்கள் சொல்லுமாதலால் அறக்கொடிய துன்பங்களைச் செய்கின்ற அனல்போன்ற நரகத்தில் யார்தான் புகுவார்கள். எ-று. வீதல் - சாதல். (௱௮௭)

எமதூதர்கள் நரகத்திலேகிடந்து வேதனைபடும் ஆன்மாக்களுக்கு
அவர்கள் முன்செய்த பாவங்களை எடுத்துக்கூறி அறிவுறுத்துந்
திறத்தைப் பதினொரு செய்யுளாலுணர்த்துகின்றார்.

கலிநிலைத்துறை.

வித்தக னற்றுணை யென்று மதித்து விரும்பீரோ
பொத்தை யுடற்பொறை நிற்கு மெனப்பொய் புகன்றீரோ
யொத்து மருற்ற துயக்க மயக்க மொழித்தீரோ
மித்திர னைப்பரி வுற்றதன் மத்தை விளைத்தீரோ.

எ-து. வெளி. வித்தகன்-சிவன். உமர்-சுற்றத்தார். மித்திரர்-இட்டர்.

யாதனை யுண்டுகொ லென்று துயங்கி யிருந்தீரோ
நாதனு முண்டுகொ லென்று கயந்து நவின்றீரோ
யோதன முண்டுகொ லென்றவர் தம்மை யொழித்தீரோ
வேதனை கண்டுவி யந்து பயந்து விழுந்தீரோ.

எ-து. வெளி. உண்டுகொலென்புழி-ஓகாரமையப் பொருட்டு. துயங்குதல் அறிவு வேறுபாடு. கயத்தல்-நாடனம். வியப்பு-அதிசயம். (௱௮௮)

கண்டக ரோடுக ளித்தற நீதி கறுத்தீரோ
யுண்டொரு தெய்வமு மென்றவர் தம்மை யுவர்த்தீரோ
யண்டர்த மாலய மாமர மற்று மறுத்தீரே
மண்டனில் வாழ்வைம தித்தெளி யாரை வதைத்தீரோ.

எ-து. வெளி-கண்டகர்—துட்டர். கறுத்தல்-நீக்குதல். உவர்த்தல்-கோபித்தல். (௱௮௯)

பஞ்சக பாதக மன்றெளி தென்று பயின்றீரோ
நஞ்சன வெஞ்சொலை நற்றவ ரோடு நவின்றீரோ
வஞ்சக நெஞ்சக மாதர் களிப்புமதித்தீரோ
யஞ்சன வேல்விழி யாருறு கற்பு மழித்தீரோ.

எ-து. வெளி. (௱௯௰)

ஓர வழக்கினை மன்றி லிருந்து முனைத்தீரோ
யாரொதி ரென்றுமை யேமிக மேன்மை யறைந்தீரோ
பாரென வேபொறை யாரையு நொய்மை பகர்ந்தீரோ
நீரென வேயினி யாரையும் வெல்ல நினைந்தீரோ.

எ-து. வெளி. நீரெனவேயினியார்-தண்ணீர்போல இனிமைசெய்கின்ற சாத்துவித குணத்தையுடையவர்கள். (௨௬௧)

உற்ற விடுக்க ணொழித்தவர் தம்மையு மோரீரோ
மற்றவர் காணியு மெம்மது வென்ன மதித்தீரோ
சிற்றின மேயின மென்று தெளிந்து செறிந்தீரோ
மற்றின மொன்றிடி னன்பு மறுத்து மருண்டீரோ.

எ-து. வெளி. சிற்றினம்-அற்பர். மற்றினம் - பெரியோர். (௨௬௨)

ஆதுல ருற்றிடி னேச மவர்க்கு மறுத்தீரோ
வாத வினைதிகள் வந்துறி னசையை வைத்தீரோ
யேதிலர் குற்ற மெடுத்தினை யாம லிசைத்தீரோ
சூது பொருந்தொழி னன்றென வன்று துணிந்தீரோ.

எ-து. வெளி. ஆதுலர்-மிடியர். எதிலர்-குற்றமில்லாதவர்கள். ()

ஊறறி வொக்கு மெனுதுயிர் மெய்யை யொறுத்தீரோ
வேறல வெம்முட லோடு மெனுது மிசைந்தீரோ
பேறுண வல்லது மில்லை யெனக்கை பிழைத்தீரோ
சீறுத லேபொரு ளென்றுயி ரன்பு செகுத்தீரோ.

எ-து. நம்முடைய தேகத்திற் புண்பட்டால் நோமாறுபோலவல்லவர் அவர்க்குமென்றும் எண்ணுமற் பிறிதுயிருடல்களைக் கொன்றீரோ, நம்முடைய சரீரமும் அதனுடைய சரீரமும் பேதமல்லவென்று எண்ணுதனை விரும்பித் தின்றீரோ, இப்படிப் புசிப்பதே பரமமான பேறல்லாமல் வேறில்லையென்று தருமநெறியை விட்டீரோ, கோபமே மேலானதென்று ஆன்மாக்களிடத்துக் கிருபைவையாமல் விட்டீரோ. எ-று.

மிசைதல்-புசித்தல். (௨௬௪)

ஈயு மவர்க்கிடை யூறுக டேற விசைத்தீரோ
காயு மவர்க்கனு பந்தரு மாயுள் களித்தீரோ
நோயு முறப்பிறர் தீமை யுடற்கு நுவன்றீரோ
தூய ரியற்றி யிடாவவ லம்பல சொன்னீரோ.

எ-து. ஒருவருக்கொருவர் ஒன்றையுவந்து கொடுக்குமிடத்தவர்கள் மனம் பேதிக்க விக்கினங்களைச் சொன்னீரோ, ஒருவனையொருவன் கோபிக்கும்போது அவனைத்தடுக்காமல் அதற்குடன்பட்டுச் சந்தோஷத்தை யடை

ந்தீரோ, பிறர் சரீரத்துக்கு வருத்தமுறப் பொல்லாங்குகளையே சொன்னீரோ, சுத்தான்மாக்கள் செய்யாத பொல்லாங்கைச் செய்தாரென்று பலவாகச் சொன்னீரோ. எ-று.

அனுபந்தர்—வடமொழி. (௨௧௬)

ஒழுக்குடை யாரதி மேதையர் தம்மையு மோராதே
புழுக்க மழுங்கு மனத்துற வெம்மை புகன்றீரோ
சழக்கெழு வாய்வினை வாதனை யுற்றமை நன்றலே
யழற்குழி யாங்க ளழுத்த வழுங்கி யறிந்தீரோ. (௨௧௭)

என்றழல் வாயழி வாரொடு தூத ரிசைப்பார்க
ளன்றறி யோமிவை யென்றவர் தாமு மயர்ந்தாழ்வர்
பொன்றுவ ரோவினை போமள வுந்துயர் பூரித்தே
நின்றுறு வார்முனை வல்வினை யாவு நினைந்தேதாம்.

எ-து. ஒழுக்க முடையவரையும் மிகுந்த அறிவுடையரையு மவர்கள் மகிமையை ஆராயாமல் உம்முடைய பொல்லாமனம் புழுங்கும்படி கொடுமைகளைச் சொன்னீரோ, நீங்கண் மனக்கோணல் முதலியவற்றால் இயற்றிய பாவத்தின் வாதனைப்லத்தா லழற்குழியாகிய இந்நரகங்களிலே யாங்கள் வீழ்த்த இப்பொழுது வீழ்ந்தறிந்தீரோ என்று இவ்வாறுகூறி பலவற்றையு மழல்வாய்ந்த நாகத்தில் அழிவாரொடு எமதூதர்கள் சொல்லுவார்கள் அப் பாவிகளுமல்லாமல் இதனை யறிந்தோ மில்லையென்று சோர்ந்து விழுவார்கள் இவ்வாறு வேதனைப்படுகையினும் உயிர்விடுவரோ, உயிர் விடுவதுஞ் செய்யார் பின்பு தாஞ்செய்த பாவந் தொலையுமளவுந் துக்கத்தையே நிறையப்பொருந்தி முன்தாஞ்செய்த கொடுவினைகளெல்லாந் தம் மனத்தினினைத்து அந் நரகங்களிற்கிடந்து துயரமடைவார்கள். எ-று.

அதிபாதகமுதலிய பாதகத்தைச் செய்தோர் அனுபவிக்குங் காலம் மூன்று செய்யுளாலுணர்த்துகின்றார்.

உற்றிடுவ தொழுநான்கு கோடியினு மொருவாதே
பற்றியதி பாதகத்தைப் பரித்தார்கள் பாரினையு
மற்றையவிண் டலத்தினையும் வாரிகொளு நாள்வரையு
முற்றுமதி பாதகத்துக் கிணையதனை முடித்தாரும்.

எ-து. அதிபாதகத்தைச் செய்தவரும், அதிபாதகத் துல்லியத்தைச் செய்தவரு மிருபத்தெட்டுக்கோடி நரகத்தையும் பொருந்திப் பிரமப்பிரளய காலமாகிய ஆயிரஞ் சதுர்யுக மதனைவிட்டு நீங்காதழுங்குவார்கள். எ-று.

இரவிமதி யுள்ளளவு மிவற்றழுங்கி யிடுவார்கள்
பிரமவதை முதலாய பிழைபுரிந்த பேதையர்கள்

விரவிடுவர் பாதகத்தை விளைத்தார்கள் பதினுன்குட்
பிரமனொரு பகற்பாதி மற்றையர்க்கும் பேசிடுவாம்.

எ-து. பஞ்சமாபாதகத்தைச் செய்தவர்கள் இருபத்தெட்டுக்கோடி நரகத்திற் சந்திராதித்த ருள்ளவளையிலுங் கிடந்தழுங்குவார்கள். பாதகத்தைச் செய்தவர்கள் பதினாலுகோடி நரகத்தில் பிரமனது நித்தியப்பிரளயத்திற் பாதியாகிய ஐஞ்ஞூறு சதுர்யுகமளவுங் கிடந்தழுந்துவார்கள். மற்றப் பாதகர்க்கு மேற்சொல்வாம். எ-று. (ாகக)

பாதமுறப் பகலதனிற் பதினென்கிற் பாதிதனில்
வாதையுறு வார்களுப பாதகத்தை மருவினர்கள்
பாதத்திற் பாதியுற மூன்றரையிற் பாவியர்கள்
கேதமறும் பொழுதவல வினையனைத்துங் கேட்டிடுமே.

எ-து. உபபாதகத்தைச் செய்தவர்கள் எழுகோடி நரகத்திலிருநூற்றைம்பது சதுர்யுகமளவுங் கிடந்தழுங்குவார்கள். அதற்குத் தண்ணிதான பாவத்தைச் செய்தவர்கள் மூன்றரைக்கோடி நரகத்தில் நூற்றிருபத்தஞ்சு சதுர்யுகமளவுங்கிடந் தழுங்குவார்கள். இவ்வாறு விதித்த காலங்களளவும் அதிபாதக முதலிய பாவத்தைச் செய்தவர்கள் நரகத்தில் கிடந்து துக்கங்களை அனுபவித்துத் தொலையும்பொழுது அவர்களைத் தொடர்ந்து நின்ற கொடிதாகிய பாவமெல்லாம் விட்டு நீங்கும். எ-று. (உா)

பாவிகளாயினோர் இவ்வாறு நரகபேதங்களை யனுபவித்து அக்காலந்
தொலைந்தவாறே நரகசேடம் அனுபவிக்கும்படி மீளவும்பூமியில்
வந்து பிறப்பாரென்பதை ஐந்துசெய்யுளால் உத்தரோத்தர
விசிட்டமாக உணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

பாவ பேதம் பயிற்றிய பாவிக
ளேவ மாய நரகிட ரெய்தியுந்
தீவினைப் பல சேடமுஞ் சேரவே
சேர்வர் முன்பயின் மண்மிசைத் திண்ணமே.

எ-து. வெளி. (உாக)

அடைவர் தாபர பேதமனைத்தையும்
படர்வ ரங்குள துன்ப பலத்தினும்
விடுவர் தாபர யோனியை விட்டபின்
றொடுவர் கிட வுருவுந் துரிசரே.

எ-து. இவ்வாறு பூமியில் வந்தபாவிகள் தாந்தாஞ்செய்த கர்மத்துக்கீடாக முதலிற் றூபரயோனிபேதங்கள் எல்லாவற்றையு மெடுத்தாண்டு

ள்ள துக்கங்களெல்லாம் அனுபவிப்பார்கள். பின்பத் தாபரயோனியை விட்டுப் புழுவாய்ப் பிறந்து துக்கங்களை அனுபவிப்பார்கள். எ-று. (௨௱௨)

கிட்டியே நின்ற கிட வுருவமும்
விட்டு மற்றை விகங்க வுருவினைத்
தொட்டு நின்ற துயர்பல துய்த்தபி
னெட்டு வார்விலங் கின்னுரு யாவையும்.

எ-து. இவ்வாறு புழுவாயெடுத்த தேகத்தை விட்டதற்கு வேறாகிய பறவையுரு எடுத்ததினால் உண்டாகிய துக்கங்களெல்லாம் அனுபவித்துத் தொலைந்தவாறே மிருகாதிகளாய்ப்பிறந்தாண்டுள்ள துக்கங்களை அனுபவிப்பார்கள். எ-று (௨௱௩)

விட்டு நின்ற விலங்கி னுருவினைத்
தொட்டு ளார்பசு வின்னுருந் துன்பமும்
பட்டு ளார்துய ரம்பல பட்டபின்
விட்டு ளார்பெற்ற மாகிய மேனியும்.

எ-து. பின்பு மிருகசாதிகளாய் எடுத்த தேகத்தை விட்டுப் பசுச்சாதி வடிவெடுத் தாண்டுள்ள துக்கங்களெல்லாம் அனுபவிப்பார்கள். அவ்வாறு துயரங்கள் பலவற்றையும் அனுபவித்துத் தொலைந்தவாறே அப்பசுசாதியா யெடுத்த தேகத்தை விடப்படுவார்கள். எ-று.

கு. ஆவும் பெற்றமும் பசுவுமானுங் கோவுங் குடஞ்சுட்டுஞ் சாதிப் பொதுப்பெயரொன்பதனைலறிக. (௨௱௪)

இனைய யோனி விதம்பல வெய்தியே
துனிய வைத்தையுந் துய்த்துத் துரிசுறு
வினையி னீங்கிமுன் னல்வினை மேவவே
மனித ராகிப் பிறப்பர்கள் வாய்ப்பினால்.

எ-து. இவ்வாறே தாபர முதலிய யோனிபேதங்களையெடுத்து அந்தந்தச் சனனங்களி லுண்டாகிய துக்கங்க ளெல்லாவற்றையு மனுபவித்துப் பின்பு பாவசேடம் அமைந்த தீவினையினின்றும் விடப்பட்டு முன்னைட் பரிபாகப்பட்ட நல்வினைப்பகுதி வந்து பொருந்த அந்த நல்வினையின் பலத்தினால் மானிடராகப் பிறப்பர்கள். எ-று. (௨௱௫)

இவ்வாறு மானிடசரீரமெடுத்தவர்கள் உத்தரோத்தர
விசிட்ட முதலியன வுணர்த்துகின்றார்.

அரிய மானிட யாக்கை யடைந்தபின்
பரம லோக பலத்தினைப் பற்றவு
மொருவி யேயுல கஞ்சிவந் தொன்றவு
மிருளை நீக்கவு மெண்ணில னொன்கொலோ.

எ-து. இவ்வாறு கிடைத்தற் கரிதாகிய மானிட தேகத்தைப் பெற்றவர்கள் மேலாகிய சிவலோகத்துள்ள போகத்தைப் பொருந்தவும் அப்போகத்தை வெறுத் தாணவாதி மலத்தை நீக்கிச் சிவஞானைடைக்கம் பெறவு மெண்ணினார்களில்லை யென்னைகொல்லோ. எ-று. (௨௱௬)

இதுவுமது.

அரிது மானிட யோனிய வற்றுளு
மரிது பூசு ராகையு மாகியு
மரிது நான்மறை யாய்கையு மாசற
வரிது வானொடு முத்தி யடைகையும்.

எ-து. தாபரமுதலிய வறுவகையோனியினுள்ளு மானிட தேகமெடுத்தலே யரிது, அம்மானிடருள்ளும் பிராமணவருண மெடுக்கை யரிது, பிராமண வருண மெடுத்தாலும் நாலுவேதங்களையுங் குற்றமற வாராய்தலரிது, அவைகளை யாராய்ந்தாலு மேலாகிய போகமோக்ஷங்களை யடைதலு மரிது. எ-று. (௨௱௭)

இதுவுமது.

பெற்று மந்தண ராய பிறப்பினைக்
கற்று நான்மறை வேள்விக் கருமமு
முற்றி வானவ ராக முயல்கிலார்
குற்ற மேபெரி தாகிய குற்றமே.

எ-து. மிகவுங் கிடைத்தற்கரிய பிராமணவருணத்தை யெடுத்தும், நாலுவேதங்களையு மோதியும், யாகாதி கருமங்களைப் பண்ணித் தேவர்களாயிருக்கும்படி விசாரித்தார்களில்லை, அந்தப் பிராமண ரிவ்வாறு செய்யாத குற்றமே மிகுந்த குற்றமாம். எ-று. (௨௱௮)

இதுவுமது.

இந்தப் பாரத மெய்தற் கெளியதே
வந்து பாரதந் தன்னினு மானிட
ரந்த வான மடையுங் கருமமுஞ்
சிந்தி யார்சிவன் சேவடி சேரவும்.

எ-து. இப்பூவுலகத்தி லுண்டாகிய நவகண்டப் பிருதுவிகளுக்கும் விசேடமான பரதகண்டத்திற் றோன்றிய குமரித்தீவிற் றோன்றுதல் கிடைத்தற் கெளியதே, எளியதல்ல, அச்சிறப்பினையுடைய பரத கண்டத்திற் றோன்றிய மானிடர்கள் சற்கருமத்தை யனுட்டித்து மேலாகிய சிவலோகத்தை யடையவுஞ் சிவனுடைய சிபாதத்திற் பொருந்தவு மேனோ விசாரித்தார்களில்லை. எ-று.

ஏனையகண்ட மெட்டு மிலேச்சதேச மாகையா லிப்பரதகண்ட மே விசேடமாகச் சிறப்பித்தார். ஏகாரம்-எதிர்மறை. (௨௱௯)

இதுவுமது.

வேத நீதி விளங்குமிவ் வெல்லையு
ளோதி யுண்மை யுணர்ந்துயி ரொன்றிய
வாதி பாத மடையு மருந்தவஞ்
சாதியார் தமக் கேவஞ்சர் தாமரோ.

எ-து, இவ்வாறு வேதாகம புராண நீதி விளங்கிய விக் குமரிகண்டத்திற் றோன்றிய மானிடர்க ளவ்வேதாகமங்களை யோதியதனாற் பதிமுதலிய வுண்மை ஞானத்தை யுணர்ந் துயிர்க்குயிராகிய சிவனது சீபாதங்களை யடைதலாகிய அரிய தவத்தினைச் செய்யாராகையா லவர்கள் தம்முடைய வான்மாக்களுக்குத் தாமே வஞ்சகராவார். எ-று.

அரோ - அசை. (௨௱௰)

இதுவுமது.

ஈரும் வாளுயிர்க் கென்றறி யாரெழு
வார மாகி வருந்தின மானிடர்
தார மாதியுந் தாமு நிலையென்றே
கோர மாய குழிவிழு வார்களே.

எ-து. மானிடராயினோர், ஞாயிறுமுதலா யேழுவாரமாய்வருந் தினத்தை யுயிரையீரும் வாளென்றறிந்து சடுதியில் தன்மத்தைச் செய்யாமற் றமது சரீரத்தையுந் தமது மடவார் முதலிய பொருள்களையும் நிலையென்று கருதிப் பாவத்தையே செய்து குரூரத்தையுடைய நரகக்குழியில் விழுவார்கள். எ-று. (௨௱௰௧)

"ஈரும்வாளுயிர்க்கென்றறியாரெழு, வாரமாகிவருந்தினமென்றது, நாளெனவொன்றுபோற்காட்டியுயிரீரும், வாளதுணர்வார்ப்பெறின்" எனத் திருவள்ளுவனார் கூறியது மிப்பெற்றி நோக்கி யென்க.

இதுவுமது.

அழியு மாக்கைகொ டேயழி யாப்பதங்
கெழுவு வார்பெற்ற தேநல்ல கேள்வியு
மழியு மாக்கை தனையழி யாதென
விழுவ ரோநர கக்குழி வெய்யரே.

எ-து. நிலையுதலில்லாத தேகத்தைக் கொண்டு நிலையுதலுள்ள மோக்ஷத்தைப் பொருந்துவோர் பெற்றகேள்வியே நல்லகேள்வி, அழிகின்ற தேகமழியாது நெடுநாளிருக்குமென்று விரும்பிய பொல்லாதவர்களே, நரகக் குழியில் விழுவார்கள். எ-று. (௨௱௰௨)

இதுவுமது.

ஆக்கை தானிலை யாதென் றறிந்துதம்
வாக்கி னலான் மந்திர மோதியே

நோக்கி ஞலவன் மேனியை நோக்கியே
பார்க்குள் வாழ்பவர் நன்பயன் பற்றினர்.

எ-து. இம்மானிட தேகம் நெடுநாள் நில்லாதென்றறிந்து தமது வாக்கினாலே சிவனது திருநாமமாகிய பஞ்சாக்கரத்தை யுச்சரித்துக் கண்ணுலவனது திருவுருக்களையும் புலப்படச் சேவித் திப்படி நாடோறுஞ் சபத்தியானங்களைச் செய்து பூமியில் வசித்திருக்கும் அவர்களே மோக்ஷத்தை யடைந்தவர்கள். எ-று. (உ௱௰௩)

இதுவுமது.

இந்த நாட்டுள் வினைநன் கியற்றின
ரந்த நாட்டிடை யேபய னார்வர்க
ளெந்த நாட்டி னிடையிருப் பாரவ
ரிந்த நாட்டுட் கரும மியற்றியே.

எ-து. இப்பூமியிற் கன்மத்தை வழுவாமற் செய்தவர் சுவர்க்கலோகத்திற்சென் றாண்டுள்ள போகங்களைப் புசிப்பார்கள் ஆதலாலவர்க ளிப்பூமியில் திரும்பவந்து சற்கருமமாகிய சிவபூசை முதலியவற்றைச் செய்து சுத்தாத்துவபுவன மீறாயுள்ள புவனங்களெல்லாவற்றினுஞ் சென்று திவ்ய போகங்களை யனுபவித்துக் கொண்டிருப்பார்கள். எ - று.

பிரகிருதி சம்பந்தத்தை யிந்தநாடு என்றார். சுத்தாத்துவாவை 'யந்த நாடு' என்றார். கன்மமென்பதனை யிருபாலுங் கூட்டுக. (உ௱௰௪)

இதுவுமது.

பதிகர் தாமன்ன பானத்தொ டேசெலிற்
புதிய வெல்லையை யின்பொடு புல்குவர்
விதியி னின்றவர் விண்ணுல கெய்தியே
புதிய போக விதமும் புணர்வரோ.

எ-து. வழிச்செல்வோர்கள் தம்கையிலே யன்ன பானாதியைக் கொண்டுபோனா லதைப் புசித்துத் தாம் புதிதாகச் செல்லு மெல்லையைச்சுகமா யடைவார்கள், அதுபோல வேதாகமங்களிற் கூறப்பட்ட நெறியில் நின்று சற்கருமத்தை யனுட்டித்தவர்கள் சுவர்க்கமுதலியவை யடைந்து தமக்குப் புதிதாகிய போகபேதங்களைப் புசித்திருப்பார்கள். எ-று. (உ௱௰௫)

இதுவுமது.

வேத நீதியை விட்டவர் தாமிக
வேத மாய நரகினை யெய்துவ
ராதலா லென்றுஞ் செய்க வறத்தினைக்
காத லோடுநல் வானிற் களிக்கவே.

எ-து. வெளி. ஏதம்-துக்கம். காதல்-விருப்பம். (உ௱௰௬)

சிவபத்தரானோர் பாவஞ் செய்தாலு நரகத்தில் வீழா ரென்பதனை
யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஆதி நாத னமல னரன்றிருப்
பாத முன்னினர் பாவம் பயிற்றினும்
வேத னார கக்குழி வீழ்வரோ
நாத ரேயம னிக்கவர் நாடினே.

எ-து. ஒரு காலத்தில் தோன்றப்பட்டவைகளுக்கெல்லாம் நாதனுமாய் நின்மலனுமாயிருக்கிற சிவபிரானது ஸ்ரீபாதத்தைத் தியானம் பண்ணினவர்கள், பாவத்தைச் செய்தார்களானாலுந் துக்கம் தரும் நரகக்குழியில் வீழ்வரோ வீழார்கள், அவர்களுக்குத் தொழில் யாதென்று விசாரிக்குமிடத்தி லெமலோகத்துக் கதிகாரிகளா யிருப்பார்கள். எ-று. (௨௱௰௭)

முற்றக் கால முருக்குங் கொடுந்தொழி
லற்றுச் சங்கர னாளும் புரத்தினைப்
பற்றிப் பண்ணிய புண்ணியப் பாங்குறத்
துற்று வார்சிவ லோக சுகோதயம்.

எ-து. எமபுரத்துக்கு அரசனாயிருக்குங் காலந் தொலைந்தவாறே யக்கொடுந் தொழில் செய்யுஞ் சரீரத்தை விட்டுச் சிவலோகத்தை யெய்தி முன் செய்த புண்ணியவியல்பினை யடைந்து அச்சிவலோகத்தி லுண்டாகிய போகத்தை யனுபவித் திருப்பார்கள். எ-று. (௨௱௰௮)

சிவஞானிகள் பாவத்தைச் செய்தாலும் பாவபலத்தை யடை
யா ரென்பதை யுவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுமிறை யைத்தம கருத்துற விருத்தா
நின்றவர்க ளீசனடி யோடொருமை நின்றார்
துன்றுதுரி சோடுமவர் தோய்விலர்க ணீர்தா
னொன்றியிடு மோதனின பத்திரம தாமே.

எ-து. எந்தக் காலத்திலும் சிவபிரானை அயிக்கமுறத் தியானம்பண்ணி யிருக்குமவர்களே, சிவபிரானது திருவடித் தாமரையை நீக்கமின்றி அடைந்தவர்கள் அந்த ஞாதாக்க ளொருங்கிய பாவத்தைச் செய்தார்களேயாயினும் பாவபலத்தை அடையார்கள். அதுவெவ்வெனில் தாமரை தண்ணீரோடு கூடியிருக்கவும் அதனைக் கலவாதவாறுபோல. எ-று. (௨௱௰௯)

முடிந்ததை உணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுதிவி வாழ்வுநிர யத்துயரி னைத்தான்
குன்றவர் மடக்கொடி யுனக்கருள் கொடுத்தான்

வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை யைய
நின்றமுனி யன்றுணர நிற்குண னினைந்தே.

எ-து. வெளி. திவி-சுவர்க்கம். (உ௱உ௰)

## சிவத்துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வடவரை வில்லெய வல்லவனே மண்புனன் மற்றறைய
வல்லவனே
படவர வங்கையிற் பற்றினனே பத்தரைத் தீர்த்திடும்
பற்றினனே
யடியிணை காண்டற் கரியவனே யகம்பர மென்னுக்
கரியவனே
விடையதன் மேல்வரு வீரியனே விதிமுக மொன்றற
வீரியனே.

எ-து. மகாமேருவை வில்லாகவளைத்தெய்யும் வல்லபத்தை யுடையவனே, மண், நீர் முதலான தத்துவங்களல்லாமல் அதற்கு வேறாயிருக்கின்றவனே, படத்தையுடைய பாம்பைக் கையில் பிடித்தவனே, பத்தர்கள் பவத்தைத் தீர்க்கும் அன்பினை யுடையவனே, வராகவடிவாய் மாயவன் தேடவுங் காணுதற்கு அரிதாகிய பாதாரவிந்தங்களை உடையவனே; அகம் பிரமமென்பார் நாக்கையரிகிறவனே, இடபவாகனத்தின்மேல் எழுந்தருளும் வீரப்பாட்டை யுடையவனே, பிரமனுடைய ஐந்தாவதாகிய சிரத்தை நகத்தாலறுத்தவனே. எ-று. (உஉக)

இதுவுமது.

வேறு.

ஈடு பெற்றிளை யாவிள மேற்றனே யிகலும் புன்சம
யத்தவ மேற்றனே
யாடு நந்தில்லை யம்பல வாணனே யதுல னேயரு
வாட்டிய வாணனே
[illegible]தட ரும்பொரு ளாகிய தேசனே சிறந்த காஞ்சி
வளநகர்த் தேசனே
வேட னெய்விச யற்கருள் வில்லியே விமல னேயவ
னேயுற வில்லியே.

எ-து. வலியமைந்து இளமை வயதினையு முடைத்தாய்த் தளராமலிருக்கிற இடபவாகனத்தை யுடையவனே, மாறுபாட்டினையுடைய வறிவில்லாத புன்சமயிகள் தவத்துக்கு வேறாய் நின்றோனே, தில்லையம்பலத்தில் திருநடனஞ்செய்து வாழ்கின்றவனே, தனக்கொப்பொருவரு மில்லாத

வனே, அரவினையாட்டிய வாண்மையை யுடையவனே, ஆன்மாக்கள் தேடற்கரிய பொருளாகிய பிரகாசத்தை யுடையவனே, சிறப்பினையும் வனப்பத்தினையுமுடைய காஞ்சிமாநகரத்தைப் பதியாகவுடையவனே, அருச்சனற்கு வேடனாக வந்து கிருபை செய்த வில்லினை யுடையவனே, மனமழுக்கில்லாதவர்களிடத்தில் நேசத்தை யுடையவனே, அன்பில்லாதவரிடத் துறவில்லாதவனே. எ-று. (உ௱உஉ)

## குமரன் துதி.

எண்சீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

ஆறாறு கூறு முதித்த வப்பர மானான சேட
ரவர்க்கி ருப்பிடம்
வீறான வேதக சிற்க னப்புரி மீளாத வாழ்வெ
னக்க ளிப்பவ
னீறேறு மேனியி னித்த னுத்தம னோரார்க ளூரு
மெரித்த கிட்டுர
னாறேறு வேணி யளித்த வற்புத னாறுரு மாறு
முகத்தெ னத்தனே.

எ-து. திருநீற்றை யணியு மேனியை யுடையானுமாய், எப்போது முள்ளவனுமாய் உத்தமனுமாய்ச் சத்துருக்களுடைய முப்புரத்தை யெரித்த கிட்டேரத்தையு முடையானுமாய்க் கங்கையைத் திருச்சடையிற் றரித்தவனுமா யிருக்கின்ற சிவபிரான் அளித்த வதிசயத்தினையும் வீரத்தினையு முடைய ஆறுமுகமுடைய பிள்ளையாரே மண்முதனாதமீறாகிய முப்பத்தாறு தத்துவங்கட் கப்புறமான மோக்ஷத்தைத் தனக் கடிமையான சிறப்பினையுடைய வடியார்க் கிருப்பிடமாகக் கொடுப்பவரும், வீடடைவிப்பிக்கிற ஞான சொருபமாகிய சிவதத்துவத்தி லுண்டாகிய நாதகலா புவனத்தில்போய்த்திரும்பிவாராமலிருக்கின்ற வாழ்வை யெனக்குத் தருவோருமாய். எ-று.

## அகத்தியர் துதி.

மாறும லாமென வற்றி யற்றிடு மாயாவி காரவ
வப்ப வக்கட
லேறுது யாமென வுற்ற குற்றமு மீசேச ஞானமு
முற்றி யுற்றிடு
வீறான வேதக னித்த னுத்தமன் வேதாக மாதியெ
னைத்த னைத்தினு
மாறுறு மாறு மதித்த கத்தினு ளானுத ஞான
வகத்தியற் கெனு.

எ-து. வீறுயறிவிக்கப்பட்ட நித்தியனுமா யுத்தமனுமாகிய சிவபிரானருளிச்செய்த வேதாகம முதலிய நூல்க ளெத்தனையுண் டத்தனையும் வே

தாங்க மாறிநினையு முப்பத்தாறு தத்துவத்தினையு முள்ளத்தில் நிச்சயித்து நீங்காத ஞானத்தினையுடைய அகத்தியமுனிவனுக்கு இடையறுமலடிமை யென்று என்றனலான வண்ணம் சொன்னமாத்திரத்தி லெனக்கு மாயையினின்றுநானாவிகாரமாகத் தோற்றப்பட்ட வவலமாகிய சனனசாகரமும் வற்றியற்றிவிடும் யானெனதென்னுஞ் செருக்காகிய தோடமும் பொருந்தாது கடவுளர்க்கெல்லாங் கடவுளாகிய சிவபிரானது ஞானமு மிகுதியாய்ப் பொருந்தும். எ-று. (உ௱உ௪)

ஏழாவது
சுவர்க்கநரகவியலுணா முற்றும்.

---

# எட்டாவது
# சனனமரணவியல்.

மேலிவ்வோத் தென்னுதலிற்றோவெனின் ஒத்துநுதலியதூஉ மோத்தினது பெயருரைக்கவே விளங்கும். ஆயினிவ்வோத்தென்ன பெயர்த்தோவெனிற் சனனமரண துக்கங்களைச் சொல்வதனாற் சனனமரணவியலென்னும்பெயர்த்து. முற்கூறிய வியலிற் சுவர்க்கநரகங்களின் முறைமையைக் கூறிச் சுவர்க்கநரக சேடத்துக்குச்சரீரமானது எடுக்கவேண்டுகையா லதன்பின்னிதனை வைத்தார். இதனுளித்தலைச் செய்யுளென்னுதலிற்றோவெனிற் புண்ணியத்தாலும் பாவத்தாலும் புண்ணியபாவத்தாலுஞ் சரீரமெடுப்பதனைத் தொகுத்துணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பாதளக் குழியி லாழும் பாவிகள் படிவந் தானு
மீதலத் தடையு மேன்மை விண்ணவ ருடலந் தானும்
பூதலம் பொருந்து மற்றை யுயிர்ப்பொறை தானும் பொற்றை
மாதவ வுதிக்குமாறும் வகையுற வறைகு வாமே.

எ-து. மலய மலையி லிருக்கு மிக்க தவத்தையுடைய அகத்தியமாமுனியே யாம், சுவர்க்கமடையுமவர்கள், மேன்மையான தேவசரீரமெடுக்கு முறைமையினையு மிருவினைக் கீடாகப் பூமியின் மற்றைமானிடர் முதலிய தேகமெடுக்கு முறையினையும், வகுத்துச் சொல்வாம், அதனை நீ கேள். எ-று. (க)

அவை வகுத் துணர்த்துகின்றார்.

அருந்துயர்க் குழியி லாழ்வா ராகமே பாவந் தாகும்
பொருந்திய பூதத்தாலே யிமைத்திடும் போது தன்னுட்

புரிந்துவின் புகுவா ராகம் புண்ணியந் தாலே யாகும்
பொருந்திய பூத சாரத் தொருகணப் பொழுது தன்னில்.

எ-து. நரகத்தி லழுந்துவோருடைய தேகம், பாவபலத்தில் பஞ்சபூதத்தினின்று மிமைப்பொழுதி லுண்டாகும், சுவர்க்கமடைவோருடைய தேகம் புண்ணியபலத்தினால் பூதசாரத்தினின்றுங் கணப்பொழுதி லுண்டாகும். எ-று. (௨)

இருவினைக் கீடாக வெடுக்கு மானிட தேகத்தையும் நால்வகைத்
தோற்றத்தையு முணர்த்துகின்றார்.

புண்ணிய பாவத் தாலே பூதத்தின் பரிணா மத்தான்
மண்ணிடை மனித ராக மற்றைய வடிவ மெல்லாம்
நண்ணிடுஞ் சராயு சத்தி னசர்தனு விலங்கு மற்றைத்
திண்ணிய கமடம் பாம்பு சிறைப்புளு மண்டஞ் சேரும்.

எ-து. இருவினையினால் பூமியின் மானிடதேகமும், விலங்கின் தேகமும், சராயுசமாகிய பையினின்று முண்டாகும். எ-று.

சிறைப்புள்ளுமென்ற வும்மையால் தவளை, முதலை, மீன், அரணை, உடும்பு, ஓந்தி, இப்பி முதலியவும் பறவைகளுங் கொள்க. (௩)

இதுவுமது.

கிருமிகள் கிட மற்றுங் கசிவினிற் கெழுமித் தோன்று
மரமெழு வாயவெல்லா மண்டனில் வாரி சேர
விரவிட வனிலம் வெய்யில் விதத்தினும் விளங்கித் தோன்று
மரியன வவற்று ளெல்லாம் யவைமுதற் செந்நெ லந்தம்.

எ-து. புழு வெறும்பு முதலானவைகள், வேர்வையினின்றும் நெருங்கி யுற்பவிக்கும. மரங் கொடி கிழங்கு முதலிய வெல்லாமண்ணில் தண்ணீர் காற்று வெயிலிவைகள் பொருந்துவதனால் விதைகண் முதலியவற்றினின்று முண்டாகும், அவ்வாறு கூறியவற்று ளெல்லா மரியன யவைமுதல் செந்நெ லீறாகிய நெல்லின்பேதமாம். எ-று.

வித்தினுமென்ற வும்மையாற் கொடியினுங் கிழங்கினும் வேரினுங் கொப்பினுங் கொழுந்தினு மிவை முதலியவற்றினு மென்பதூஉங் கொள்க.

இதுவுமது.

எண்ணிரண் டேக மென்ற செந்நெலை யிறுதி யெல்லாம்
நண்ணிடு பலபா கத்தி னசித்திடு நாடுங் காலை
மண்ணிடை மனிதர்க் கெல்லா மவுடத மாக வாய்க்குந்
தண்ணிய வுணவே மற்றைத் தானிய விதங்க ளெல்லாம்.

எ-து. யவைமுதல் செந்நெலீறாகப் பதினேழுவகை நெல்லினையும், அறுத்துமடக்கி யரிசியாக்கி நாலுவிதமான பாகத்தைப் பண்ண வவைகள்

நாசத்தையடையும், அதனை விசாரிக்குமிடத்துப் பூமியிலுள்ள வான்மாக்களுக்கெல்லாம் பசியென்னும் வியாதிக்கு அவுடதமாய்ப் பொருந்தும், மற்றை வரகு கேழ்வரகு, சாமை, கம்பு, தினை, சோளமுதலாகிய தானியங்களெல்லாஞ் சிறப்பினையுடையத்தல்லாமல் அதற்குத் தாழ்ந்தவுணவாகி இருக்கும். எ-று. (௫)

இதுவுமது.

தானிய விதத்தா லுகுந் தண்டுலம் பிண்டி பேத
மூனமி லோத னதி யுறுமவற் றழனீ றொன்ற
மானிட ரருந்தும் போது வயினனு சயத்தின் வைகிப்
பான்மும் பருகப் பட்டுப் பக்குவா சயமும் பற்றும்.

எ-து. இவ்வாறு கூறப்பட்ட நெல்முதலாகிய தானிய விதங்களிலுண்டாகிய வரிசியும், அதினின்று முண்டாகிய மாவின்பேதமும், நீருடன்கூட்டி யக்கினியிற் பாகம்பண்ணும் அன்னம் - அபூபமுதலாகிய உணவின் பேதங்களு முண்டாகும், அவைகளை மானிடரானோர் புசித்துச் சலத்தையும், பானம்பண்ணினாய் அவைகள் பஞ்சாசயத்துட் டலைமையாகிய வயினனுசயத்தை அடைந்து பின்பு பக்குவாசயத்திலிறங்கும் எ-று. அபூபம்-அப்பம். (௬)

இதுவுமது.

பக்குவா சயத்தி னன்ன பானத்தைப் பிராண வாயுத்
தொக்கிரு கூறு செய்யச் சொன்றிமேல் தோயங் கீழா
மட்கியு மறலின் கீழே யாகலும் வாயு வங்கிப்
புக்கிரு பாக மாக்கப் பொருந்திடுஞ் சாரங் கிட்டம்.

எ-து. அவ்வாறு நாபிக்குமே லிருக்கிற பக்குவாசயத்தி னிருந்த அன்னபானத்தைப் பிராணவாயு பொருந்தி யிரண்டு கூறாக்கி யன்னம் மேலுந் தண்ணீர் கீழுமாகப்பண்ணும். தண்ணீருங் கீழே நாபியினின்று ஒரு நெற்பிரமாணம் அக்கினிபொருந்த அதனை வாயு குழல்கொண் டூதுகிறதுபோ லக்கினியைச் சொலிப்பித்த வளவி லெங்கு மொக்கவெந்து பாகமா யந்த வன்னபானஞ் சாரமெனவுங், கிட்டமெனவு மிரண்டாம், எண்ணெயும் பிண்ணாக்கும்போலப் பிறியும். எ-று.

ஆனைமுத லெறும்பீறாயுள்ள பிராணிகளுக்கு அக்கினி சொலிக்குமாறெவ்வாறெனில்-யானை, குதிரை, யொட்டக முதலானவைகளுக்கோரங்குட்டமாத்திரமுங், கீழ்நோக்கி நீண்டவாலினையுடைய பசுக்களுக்கு மேனோக்கிக் குறுகின வாலினையுடைய மிருகங்களுங்கு மொரு நென்மாத்திரமுங், காக்கை, கோட்டான், கொக்குமுதலியவற்றுக்கோ ரெள்மாத்திரமுங், கிருமிகீடமுதலிய செந்துக்களுக்கு ஒரு நெல்வாலி னுனிமாத்திரமுமக்கினி உதாத்தினின்றுஞ் சொலிக்குமென் றறிக, இதனை வாகடத்தில் விரிவாகக் காண்க. (௭)

மேற்றொகுத்த முறையானே கிட்டம் பன்னிருபேத மாமா
றுணர்த்துகின்றார்.

நோக்கினுட் செவியின் மூக்கி னெய்யன வழுக்கே யாயும்
வாக்குறு நாக்கிற் பல்லின் மிடற்றினுள் வழுக்கே யாயு
நீக்கிடு மலநீ ராயு நிகழுகி ரழுக்கே யாயு
மாக்கையின் வேர்வ தாயுங் குதகுபத் தவல மாயும்.

எ-து. கிட்டங் கண்ணினின்றும் பீளையாயுஞ், செவியினின்றுங் குறும்பியாயு, மூக்கினின்று மழுக்காயும் வசனித்தற் குரித்தாகிய நாவினும் பல்லினு மழுக்காயு மிடற்றினின்று கோழையாயும் புறம்பேவிடப்படும் மலசலங்களாயு நகங்களிற் பொருந்தி நின்ற வழுக்காயுஞ் சரீரத்தில் வேர்வையாயுங் குதகுப்யங்களில் விளையும் பொல்லாத வழுக்காயும் புறப்படும். எ-று. (அ)

அன்னசாரம் பன்னிரு பேதமாகப் பிறியுமுறையை மூன்று
செய்யுளா லுணர்த்துகின்றார்.

பன்னிரு பேத மென்னப் பழுதுட லுறுப்பிற் பாறு
மன்னிய வன்ன சார மிருதய மலரின் வாய்த்துத்
துன்னிய நாடிதோறுஞ் சொரிந்திடுஞ் சமானன் றொக்கும்
பின்னையு முடலாற் சாரம் பெற்றிடும் பாக பேதம்.

எ-து. கிட்டம் முற்கூறியமுறையே பன்னிரு பேதப்பட்டுப் பொல்லாத வுடலிலுள்ள அவயவங்களினின்றும் புறப்பட்டுப் போகும் சரீரத்தையடைந்த வன்னசாரம் இதயகமலத்திற் சென்று சமான வாயுவினோடு கூடி யுடலினிறைந்த எழுபத்திராயிர நாடித் துவாரங்டோறும் பரம்பும். பின்னையு மச்சாரம் பிராணவாயுவினாலே யுடலினுவ்ஷ்டணத்தைப் பொருந்திப் பாவபேதத்தைப் பெறும். எ-று. (கூ)

பெற்றிடும் பாகந் தன்னிற் பிறந்திடுந் துவக்குத் தன்னி
லுற்றெழு முதிரந் தன்னி னிணத்துட லூனு திக்கு
மற்றைய நரம்பு வாயக்கு மயிர்தசை தன்னி னேடி
யுற்றெழு நரம்பி னென்பு நாடியி னுதிக்கு மன்றே.

எ-து. முற்கூறிய பாகபேதத்தினின்றுந் தோலுண்டாகும். அத்தோலினின்று மிரத்தமுண்டாகும், அவ்விரத்தத்தினின்று நிணமு மிறைச்சியு முண்டாகும் அவ்விறைச்சியினின்று நரம்பு மயிரு முண்டாகும் அந்நரம்பினின்று மதற்கினமாகிய நாடிகளுண்டாகும் நாடிகளினின்று மெலும்புண்டாகும். எ-று. (ய)

தோற்றிடு மூளை யென்பிற் சுழலுதி நகமுந் தோன்றுந
தோற்[illegible] மூளை தன்னிற் சுக்கிலங் கருத்தான் றோன்றும்.

பாற்றுசுக் கிலத்திற் பந்தாப் பாரிகன் பகத்திற் பாங்கா
லேற்றமா பிரத சார மிம்முறை யீரா றாமே.

எ-து. அவ்வெலும்பி னின்றுந் தசையு நகமு முண்டாகும். அதிற் சுக்கிலமுண்டாகும். கணவன் மனைவியைக்கூடி யவளுடைய யோனியில் விடும் அந்தச் சுகசுக்கிலத்தினின்றுங் கர்ப்ப முண்டாகும். இவ்வாறு சரீர முண்டாவதற்குக் காரணமாகிய அன்னசார மிப்படியே பன்னிரு பேதமாம். எ-று. (௰௧)

மேற்சுக்கில சுரோணிதத்தால் ஆண் பெண்
அலியாமா றுணர்த்துகின்றார்.

சுக்கில மதிக மாயி னாணொடு முருவந் தோன்றுஞ்
சுக்கிலங் குறையிற் பெண்ணுஞ் சோணிதந் துலையே யாகிற்
சுக்கிலத் தலிதான் றோன்றுந் தோய்ந்தவவ் விருவர் பாலு
மெக்குண மிலங்கு மக்கள் பாலுமக் குணமே யெய்யும்.

எ-து. கணவனிடத் துண்டாகிய சுக்கில மதிகமானால் ஆணைப்பிறக்கும், அந்தச்சுக்கிலங் குறைந்து மனைவியினிடத்துண்டாகிய சுரோணிதமதிகமானாற் பெண்ணைப் பிறக்கும். சுக்கில சுரோணித மிரண்டுஞ் சமமாகக் கூடினால் அலியாய்ப்பிறக்கும். அந்தச் சுக்கில சுரோணிதங்களை யக்காலத்துப் பிராணவாயு வந்துமோதி இரண்டாய்ப் பிரிக்கி லிரட்டையாய்ப் பிறக்கும். அப்படி யிருவருங் கூடிய காலத்துச் சாத்துவித முதலிய முக்குணத்துளெந்தக் குணத்தை யடைந் திருந்தார்களோ அந்தக்குணமே பிள்ளைகளிடத்துமுண்டாகும். எ-று. (௰௨)

ஆன்மாப் புரியட்டகரூபியாய் வந்து பிறக்கு
முறை யுணர்த்துகின்றார்.

அட்டக வுடலத் தோடே யுயிர்பிதா வருந்தன் னாகி
தொட்டவ னுதரந் தொக்குச் சுக்கிலத் துடனே தோன்றிப்
பட்டனை பகத்தின் மற்றைக் கருப்பையிற் பதிந்து முற்றிச்
சட்டக மென்னத் தோன்றித் தரணியிற் றங்கிச் சாயும்.

எ-து. ஆன்மா இவ்வாறு கூறப்பட்ட புரியட்டக தேகத்தை யெடுத்துப் பிதா புசிக்கு மன்னபானத்துடன் சென்று அவனுதரத்தைப் பொருந்தி யிருந்து அவன் விட்ட சுக்கிலத்துடனே மாதாவின் யோனியை யடைந் ததற்கு வேறாகிய கர்ப்பாசயப் பையிற் றரித்து அவயவங்களெல்லாமுண்டா யொருவடிவாகப் பூமியிற் பிறந்து வளர்ந்து இறக்கும். எ-று.

புரியட்டகமாவது 'வாய்ந்தமனம் புத்தியாங்காரந் தன்மாத்திரையமாய்ந்த புரியட்டகமென்றார்.' என்பதனாலுமறிக. (௰௩)

ஆன்மா பூதசரீரத்தில் வருந் தன்மையையு மதில் வேதனையுறுந்
தன்மையையும் பதிஞெரு செய்யுளா லுணர்த்துகின்றார்.

வேறு.

காந்த விருது மதிதன்னிற் கலந்து கலித்த
சுக்கிலந்தான்
றோய்ந்த பொழுதிற் சோணிதத்திற் றயக்க முறவே
யவள்பகத்திற்
பாய்ந்து பயின்ற கரணத்தாற் பண்டை வினையாற்
பரிப்பெய்திச்
சேர்ந்து நிற்குஞ் சிவமொரு தினத்திற் குன்றித்
திரளெனவே.

எ-து. புருடன் தன்மனைவியை நாலாநாண்முதலிய நாட்களில் தான் பயின்ற கரணத்தினால் சற்புத்திரன் நிமித்தமாகக் கூட அவ்வா றுண்டான சுக்கிலம் அவள் சுரோணிதத்திற் றோய்ந்தபோது சிவன் அமைந்து அவளு டைய யோனியிற்சென்று கர்ப்பாசயப் பையிற் றரித்து முற்செய்த கன் மத்துக் கீடாக அவளாற் றாங்குதலைப் பெற்று ஒருகணத்தி லிரண்டு திரிச ரேணுக்கொண்ட பருமையாய் ஒரு நாழிகை சென்றா லோருபேனளவு வடி வா யிப்படி யேறியேறி யொருநாள் சென்றாற் குன்றிபோலத் திரண்டிருக் கும். எ-று. (௰௪)

தினமோ ரைந்தி னவ்வுருவந் தெண்ணீர்க் குமிழி யெனச்சிறக்குந்
தினமோ ரேழி னிளவூனும் பருவஞ் செறிந்து திரண்டிலங்குந்
தினமீ ரேழிற் றிரளுனுயச் செந்நீர் பரந்து செறிந்திலங்கும்
தினமூ வேழு மொருநான்குஞ் செறியப் பீசஞ் சிறிதுதிக்கும். (௰௫)

எ-து. வெளி. பீசம்-அண்டம்.

சிரமே களமே சிறுபுறமே திரண்டு திணிந்த முதுகெலும்பே
வருமே தினமோ ராறைந்தின் மற்றை யிரண்டா மாதத்திற்
கரமே பதமே கடிதடமே கலிபா ரிசமே கனதாளே
வருமே மாத மொருமூன்றில் வடிவிற சந்தி வகுப்பெல்லாம்.

எ-து. வெளி. சிறுபுறம்-பிடரி. கடிதடம்-அரை. கலிபாரிசம்-விலாப்புறம். கனதாள்-உள்ளங்கால். சந்தி - ஒன்றோடொன் றொட்டிந் தலங்க ளிருபத்தெட்டு. (௰௬)

உதிக்கும் விரல்கள் சதுர்மாதத் தொளிசேர் முகநா சிகைகன்னம்
உதிக்குங் குய்ய முகிர்தந்த வொழுங்கூன் மாத மோரைந்தின்
உதிக்கு மோசைப் புழைகன்னத் துற்ற மாத மோராறுள்
உதிக்கு மாத மோரேழு ளுபத்த லிங்க மொளிபெறவே.

எ-து. வெளி. உகிர்-நகம். தந்தவொழுங்கூன். எயிறு. ஓசைப்புழை-செவித்துவாரம்.

குதமுந் தோன்றுங் கொப்பூழுங் கூருஞ் சந்தி பேதமெலா
முதய மான விருநான்கு ளுதிக்குங் கேச முயர்சிரத்திற்
றிதமே யங்கப் பிரத்யங்கஞ் செறிந்த மற்றை யுறுப்பெல்லாம்
விதமாம் பிராண வாயுமுத லைந்தும் விரவி விளங்கிடுமே.

எ-து. வெளி. கேசம்-மயிர். அங்கப் பிரத்தியங்கம் - தலைமுதலிய வவயவங்கள். பிராணவாயுமுதலைந்து - பிராணன், அபானன், உதானன், சமானன். வியானன் ஆக வைந்து என்க. (யஅ)

அன்னை யருந்து மாகாரத் தாறு சுவையு மடைவுறவே
துன்னு நாபி சூத்திரத்தா லுதாத் திடையே தொகுமதனுன்
மன்னு மனுதி யவற்றுலு மாந்துந் துக்கஞ் சுகஞ்சிவன்
முன்னைச் செயலுங் கனவெனவே முளைக்கும் பிரியு மோகமுமே.

எ-து. தாய் பசிக்கு மாகாரத்தில் அறுசுவை யடைவாக எரியினின்றும் வாய்க்கால் புறப்படு மாறுபோலக் கர்ப்பத்தி னுபி சூத்திரத் துவாரத்தாற் போய் வயிற்றிற்பொருந்தும். அதனுல் மனம் புத்தி ஆங்காரஞ் சித்தமாகிய கரணங்களுண்டாகி யவற்றுற் சீவன் சுகதுக்கங்களை யனுபவிக்கும். பின்பு பூர்வ சனனங்களிற் செய்த புண்ணியபாவங்களும் புத்தியிற் சொப்பனம்போலத் தோன்றும். அப்போது அதனிடத்துண்டாகிய அஞ்ஞானமு நீங்கும். எ-று.

அறுசுவை யாவன-தித்தித்தல்-புளித்தல்-கைத்தல்-துவர்த்தல் - கூர்த்தல்-காழ்த்தல். இவ்வறுசுவையா லுண்டாவன மதுரத்தாற் சுக்கிலமும், புளிப்பினுல் மச்சையும், உப்பினுல் எலும்பும், கைப்பினுல் மேதையும், காழ்த்தலினுற் றசையும், துவர்ப்பினுல் இரத்தமுமாம். இம்முறையே யுண்டாய்ப் பிள்ளைவளரும். என்க. (யக)

இறந்தே முனமே யினிப்பிறப்பே மென்று மிந்த
முறையினியாம்
பிறந்த பொழுதே பிறவாத பெருமை யுடைய
பிஞ்ஞகனை
யறிந்தே யவலப் பிறப்பிறப்பை யறுத்து விடுவோ
மவனருளாற்
செறிந்தே குரவன் றிருவடியைத் திகழ்ந்த வேதா
கமந்தெருண்டே.

எ-து. அக்காலத்தில் அக்கர்ப்ப முன்னே * பூட்டைய நீரும்போல

* பூட்டை-இறைகூடை

அனேகஞ் சனனமெடுத் திறந்தோம் இன்னமும் பிறந்து திரிவோம். அத னால் வேதனையே மிகவுமுண்டாகும். ஆகையா லிக்கர்ப்பத்தினின்றும் பூமி யிற் பிறந்தபொழுதே சிவபிரானது திருவருளினால் ஞானாசிரியன் திருவ டியடைந்து பிரகாசமுள்ள வேதாகமங்களை யையந்திரிவு விகற்பமற வுண ர்ந்து ஒருகாலத்தினுந் தோன்றுதலில்லாத பெருமையினை யுடைய சிவபி ரான் சொரூப சுபாவத்தை யறிந் தவலமாகிய பிறப்பை யொழித்து வீடக் கடவோமென்று விசாரித்திருக்கும். எ-று. (உ0)

என்றென் றெண்ணி யிருக்குமுயி ரடைப்பட் டழியு
மெழில்வரைக்கி
ழொன்று மொருவன் றனைப்போலக் கருப்பா சயப்பை
யுறுத்துதலான்
மன்ற வுதகி மறிந்தாழ்வான் வருத்த மென்ன
வருந்தியிடு
நின்ற கருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள
நிறையழிந்தே.

எ-று. இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கும் உயிர் அக்கர்ப்பாச யப்பை உறுத்துதலினால் அழகியமலையின்கீழ் நெருக்கப்பட்டு ஒருவன் துய ரமடைவதுபோல மிகவுந் துக்கத்தையடைந்து மனமழிந்து சோரும். அது வல்லாமலுங் கர்ப்பாசயத்து நீராகிய வெள்ளங்கொண்டு நிற்கையினால் சமு த்திரத்தின் மரக்கலத் திருந்து அமிழ்ந்தினவன் றுயரமடைவது போலவுந் துக்கித்துப் புத்திமயங்கியிருக்கும். எ-று. (உக)

அங்கி யதனிற் றங்கியிடு மயோம யந்த கும்பத்திற்
றங்கு மொருவன் றபனம்போற் றபன மெய்துந் தாயுதரந்
தங்கி சுடவே யழலினைய சூசி யதனா லாகத்தைப்
பங்கித் திடவே படுமிடரி லிருநாற் குணிதம் பட்டழுங்கும்.

எ-து. இக்கர்ப்பம் தாயின் உதராக்கினி சுடுகையினால் தீயினின்று நீங்காம லிருக்கிற இருப்புக் குடத்தில் வைக்கப்பட்டவன் துயரமடை வதுபோலத் துக்கத்தை அடையும் இதுவல்லாம லிருப்பூசியைக் காய்ச்சிச் சரீரத்தைத் தொளைத்திடப்படுபவன் துயரத்தி லெண்மடங்கு துயரம டைந்தழுந்தும். எ-று.

கருப்பா சயமே கட்டுதர மதனி னதிகங் கடுங்காலு
முரிக்க மிகவு மோகமுற முன்னை யுணர்வு மந்நிலையே
மரிக்க வாலைக் கரும்பெனவே யோனி வழியின் வலிதொலைய
நெருக்கப் பட்டு நிலமிசையே தோன்று முயிரு நிலையுடனே.

எ-து. இவ்வாறு துயரமடைவதனுற் கருப்பாசயப்பையிற்கிடந்தனு பவித்தன் மிருந்ததுக்கம் அதனினு மதிகமாக * வைட்டுணுவமென்னுங் காற்றும் பிரவேசித் துடலை மடக்கித் தலைகீழாகத் தள்ளுமாகையா லக்கர்ப் பத்திலிருக்கு முயிர் தன் பலமுங்கெட்டு மிகவு மயக்கமடைந்து முன்னே யநேக சன்மமெடுத்தோம், நாமினிப் பிறந்தாற் சற்கன்மத்தைச் செய்து மோக்ஷத்தை யடையவேண்டுமென் றெண்ணி யிருந்த வழிவு மிவ்வாறு மயக்கத்தை அடைந்த வவசரத்தில் கெட்டு ஆலையினெருக்கப்படுங் கரும் புபோல் தாய் யோனி யந்திரத்தில் நெருக்கப்பட்டுச் சரீரத்துடன் பூமி யில் வரும். எ-று. (உரு)

சூக்க வுருவைத் தொட்டெழுந்த தூல வுருவைத் துறைதந்த
வாக்கை தன்னை யானென்றே யபிமா னித்தே யறம்பாவ
மாக்கும் பயனை முறையுறவே யருந்திப் பின்னு மறம்பாவ
மாக்கி யானென் செருக்காலே யடங்கிப் பிறக்கு மாருயிரே.

எ-து. உயிர் சூக்குமவுடல் காரணமா யுண்டான தூலதேகத்தை யடைந்து அத்தூலதேகத்தைத் தானென் றபிமானித்துப் புண்ணிய பாவத் தைச் செய்யும். அப்புண்ணிய பாவ பலங்களை மேலெடுக்குஞ் சனனத்தி லடைவி லனுபவித்துப் பின்னு மதனுலுண்டாகிய தேகத்தினுல் யானென தென்னுஞ் செருக்கினுற் புண்ணிய பாவத்தைச்செய்து இறந்துபிறந் துழ ன்று திரியும். எ-று. (உச)

இவ்வாறுண்டாகிய சரீரத்தி லுரோமதந்த முதலியவற்றை வளையறுத் துணர்த்துகின்றூர்.

மூற்று முடலின் முளைத்தமயிர் மூன்று கோடி யரைக்கோடி
மற்று முளவே நாடிகளு மதிக்கி லினைத்தே வாயதனுட்
பற்றி முளைத்த பல்லெழுநான் கொருநான் கெனவே பார்த்திடுக
வுற்ற வுகிரு மொருபஃதே காத்திற் பதத்து மொருபஃதே.

எ-து. வெளி. மதிக்கிலினைத்தே யென்பதனுன் மயிருக்குச்சொன் ன மூன்றரைக்கோடி யவ்வளவு நாடிக ளுளவாம். உகிர்-நகம். பஃது-பத்து.

நாடிமுதலிய உறுப்புகளி னளவையை யாகமங்கடோறும் பேதித்துக் கூறுமென்பதற்குப் பரிகார முணர்த்துகின்றூர்.

நாடி யளவு மயிரளவு நாடின் மற்றை யுறுப்பளவு
நாட வரிய பராபரன்றூ னவின்ற மற்றை யனவுரையிற்
கூடும் பேத மூழிதொறுஞ் சிருட்டி பேதங் கூடுதலா
லூடும் பொருள்க ளொப்பிலித னுரைக்கு முண்டோ வுணருங்கால்.

* வைட்டுணுவம்-வியானனென்னும்வாயு.

எ-து. காடியமயிர் முதலிய வுறுப்புக்களி னளவையை விசாரிக்குமிடத்துத் தியானித்தற்கரிய பராபரனாகிய சிவபிரானருளிச்செய்த விதற்குரிய வேதநூல்க ளிப்படியே யல்லாமற் பேதமாகக் கூறுவது சங்காரகாலந்தோறும் சிருட்டி பேதித்துப் பேதித்துண்டாகையினு லக்காலத்திற் றோன்றிய நூல்களும் பேதித்துச் சொன்ன தொழிந்து ஒப்பில்லாத சிவபிரானருளிச்செய்த ஆகமங்களுக்குட் டம்முள் விரோதமுண்டோ அது இல்லை.

வாகடத்திலே சுக்கில முழக்கென்று மிரத்தங் குறுணி யென்றுஞ் சுத்தரத்த நாழி யென்றுங் கூறும். கர்ப்போப நிஷத்திலே யெலும்பு நூற்றிருபது பலமென்றுஞ் சுக்கில மிரண்டு பலமென்றும் மேதசு பன்னிரண்டு பலமென்றும் கூறும் இவ்வாறாகமசாத்திரங்களில் பேதித்துக் கூறினமை யறிக. (உ௬)

இன்னுஞ் சரீரத்தின் றன்மையை மூன்று செய்யுளால்
விரித்துணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

உற்றவுடற் பித்தமுழக் குரியுடனே நாழி
மற்றையிடற் றுறுகபமும் வசைநிணத்தின் பலமைஞ்ஞான்
குற்றகவி லப்பலமு மொருபஃதென் பறுபஃது
மற்றுமிரு நூறுமொரு நூறுமுள மதிக்குங்கால்.

எ-து. வெளி. கபம்-சிலேட்டுமம். கவிலம்-செந்நீர். (உ௭)

ஒருபஃதே பலம்பித்த வுருவான மேதைக்குப்
பெரியபல மைஞ்ஞூறு பெற்றிடுமோ ரொருநூறு
முருகுதிர மிருகுதிர மொருமூன்று பலமாகு
மிருமூன்று மிருமூன்று மூளையினுக் கெய்தியிடும்.

எ-து. வெளி. மேதை-மாமிசம். இருகுதிரம்-கட்டியிரத்தம். (உ௮)

விரியமு மாழாக்கு விளம்பியிடு மிவையெல்லா
மோரளவு படவுணரி னுகிர்மயிரோன் பொடுமொன்றப்
பாரவுடற் குறுபலமு மாயிரமே பழுதாய
நீரினுக்கு மலத்தினுக்கு நிறையில்லை நிகழ்த்துங்கால்.

எ-து. வெளி. வீரியம்-சுக்கிலம். (உ௯)

இவ்வாறுண்டாகிய தேகத்தை யறிவுடையோர் நிலையெனக்
கருதமாட்டார்க ளென்பதை யுணர்த்துகின்றார்.

பொல்லாத புலையுடலைப் புழுப்பொதிந்த போர்வைதனை
நில்லாத நீர்மெழுத்தை நிகரிலிதன் றிருவாக்கைக்
கல்லாதார் பொருளெனவே காண்பதனைக் கலந்தறிந்து
நல்லார்கள் பொருளாக வொருகணமு நாடாரே.

எ-து. வெளி. (௩௰)

இத்தேகத்தினு லுண்டான குற்றத்தை யெத்தனை வகையினாற் சொல்லி ... னாடித்தாலு மறிவில்லாதவ ரதனை நிச்சயம் பண்ணுறென்பதை யுணர்த்துகின்றார்.

ன்னுடலத் தருவருப்பைத் தானறிந்துஞ் சரீரத்து
ளென்னிருப்பா மெனத்துளங்கி யிளையாத விழுதைக்குப்
பன்முறையா லுடற்பழுதைப் பாடித்தும் பயனில்லைச்
சொன்னிலையிற் றுணிவாரோ காட்சியினிற் றுணிபாரோ.

எ-து. வெளி. துளங்கல்-கலங்கல். இழுதை-மூடன். பன்முறை-பலமுறை. பாடித்தல்-சொல்லுதல். (௯௪)

மலபாண்டமாகிய தேகத்தை யாது காரணத்தினு லருவருக்காம லிருக்கின்று ரென்பதைத் தாஷித் துவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

பொற்கடத்துள் மலம்பொருந்திற் புல்லியரும் பொருணசையா
லக்கடத்தைப் பற்றியிடா ரங்கையினு லதனிதனின்
மக்கடம துடலினைத்தா மலபாண்ட மெனவறிந்து
மெக்கணக்கா லிகழாதே யருவருப்பற் றிருக்கின்றார்.

எ-து. வெளி. கடம்-குடம். புல்லியர்-அற்பர். மக்கள்-மனுடர். ()

தேகத்துக் கெத்தனை சுத்தி பண்ணினுலுஞ் சுத்தமாகா தென்பதை யுவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

அருந்திடினு னமிர்ததனை மலமாக்கு மலவாக்கை
பொருந்திடுமோ நலம்புனித திர்த்தத்திற் பொருந்திடினும்
விரிந்நகருங் கம்பளத்தின் வெள்ளைநிறம் விளைந்திடுமோ
சொரிந்திடினு மான்பாலை யொருபொழுதுந் துறவாதே.

எ-து. வெளி. புனிதம்-சுத்தம். (௯௯)

மேல் அகச்சுத்தியின் மகிமை யுணர்த்துகின்றார்.

அருவருப்பை யாகத்தைச் சுத்திபண வார்வல்லார்
கரிசறுத்து மனமதனிற் கருகரியன் கழலடியி
லொருமையுற வுயிர்ச்சுத்தி யுவமனிலாப் பதமுதவுங்
குரவனரு ளியபரம வாக்கியத்தைக் குறிக்கொண்டே.

எ-து. அருவருப்பை யுடைய சரீரத்தைச் சுத்தி பண்ண வல்லவர் யார்தான் அவ்வாறு சுத்திசெய்ய வல்லவ ரில்லாமையா லத்தேக சுத்தி வாராமையின்ம சுத்தியும் பிறவாது. ஆகையா லான்ம சுத்தியுண்டாவ தெங்ஙன மெனில் இணையில்லாத மோக்ஷத்தைத் தருவோனுகிய ஞானு

சிரிய னுபதேசித்த மேலான வாக்கியத்தை நிச்சயமாகக் கொண்டு உறவு பகை யாசையாகிய தன் குற்றத்தைப் போக்கி யாவரு மனத்தா னினைத் தற்கரிய சிவபிரானது சிபாத தாமரையி லான்மாவை யயிக்கியம் பண்ணி யிருத்தலே யான்ம சுத்தியாவது. எ-று. (௯௪)

ஞானவான்கள் புறம்பெல்லாரோ டொத்திருந்தாலு முள்ளம்
வேறுபட்டிருப்பரொன்பதை யிரண்டு செய்
யுளா லுணர்த்துகின்றார்.

மனத்துமய லுற்றனனே மனைவிதனைத் தழுவியவன்
றனக்குமக டனைத்தழுவித் தங்கினனோ வங்குமயன்
முனைப்பயனை யருந்திடினுந் தெருண்டார்கண் மோகமிலை
வினைப்பயனை விடந்தருந்தி மற்றையரோ வினைவிளைப்பார்

எ-து. ஒருவன் தன் மனைவியைத் தழுவி மோகத்தை யடைந்தவன் அவன்றானே தன் மகளைத் தழுவி யவ்விடத்து மயலடையான். அதுபோலப் பூர்வகன்மபலத்தைப் புசித்தாலு முற்செய்த கன்மமாயிருக்கும். யாம் புசிக்கின்றோமென்பதில் விருப்பற்றிருக்கு மறிவுடையோரிடத் தாகாமியமென்பதில்லை. முற்செய்த கன்ம பலத்தைப் புசிக்கும்போது யானெனன் றகங்காரங் கொண்டுவிருப்பத்துடன் புசிப்பவரோ யாகாமியத்தை யுண்டாக்குவார்கள்.

குழவிபயந் தவள்குயத்தை வருடுதலுங் குழைந்துமன
மொழுகுமுலைப் பாலூட்டி யொருவாத பரிவினளே
கொழுநனவள் குயம்வருட வவன்புயத்தை நக் கூடுதற்கு
விழைவினளே யித்தகையார் வினைகெடுப்பார் வினைவிளைப்பார்.

எ-து. வெளி. குயம்-முலை. கொழுநன்-கணவன். (௯௬)

அகச்சுத்தியின் மகிமையை வேறு மோர்வகையா
லுணர்த்துகின்றார்.

அகச்சுத்தி யுடையார்க ளறுத்திடுவர் பிறப்பினையு
மகச்சுத்தி தனையின்றி யாகத்தைச் சுத்திசெய்வார்க்
குகத்தக்க தீயவினை யொன்றுமிலை யுணருங்கா
புகத்தக்க புண்ணியத்தின் பலந்தானும் புல்லியதே.

எ-து. உள்ளும் புறம்புமொத்த சித்தசுத்தியை யுடைய ஞானிகள் அநாதியாய்த் தொன்றுதொட்டு வரும் சனனத்தையு மொழிப்பார்கள். அவ்வாறு சித்த சுத்தி யில்லாம லுள்ளம் பிறிதொன்றா யிருந்து புறம்பே மலையத்தனை மண்ணையுங் கங்கையிலுள்ள சலத்தையுங் கொண்டு சரீரத்தைச் சுத்தி பண்ணினாலும் அவர்களுக்குப் போகத்தக்க தீவினை யொன்றேனு மில்லை. அதனை விசாரிக்குமிடத்து அவர்களுக்குக் கிடைக்கும் புண்ணிய பலமுமற்பமாகும். எ-று. (௯௭)

இப்படி யகச்சுத்தி யுடையவர்களே பரம சுகத்தை யடைப
வர். அது இல்லாதவர் மாதரைக் கூடுமிடத் துண்டா
கிய சுகத்துக் குவமான மிரண்டு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

குட்டவுடற் கொடுக்குமிதங் கூடினமுற் கொடியிடையா
ரிட்டமுமிம் முறையெனுக விளையவர்தம் பருவம்போற்
குட்டமழற் கூடுதலுங் கொழுநனுக்கொப் பெனக்கொள்க
தொட்டதுவக் கிந்திரியஞ் சொற்பொருளுந் துணிவாரே.

எ-து. குட்ட வியாதியை யுடையவன் அக்கினியைச் சேர்ந்த விடத்தி லந்நேரத்துக் கெப்படி சுகத்தைப் பொருந்துவானே அதுபோலக் காமவியாதியை யுடையவர்கள் கொடிபோன்ற விடையினையுடைய மடவாரைக் கூடியபோதுள்ள சுகமு மிவ்வளவென் றறிக. அதைப் பிறித்தறிந்தால் குட்டவியாதி பாலியவயதை யுடையவர் காமப்பருவத்துக் கொக்கும் அக்கினியான மடவாரைச் சேர்தலுங் கணவனுக் கொப்பென்க. ஆதலா லக்கினியைச் சேர்ந்த தோலாகிய விந்தியத்தி னுண்டாகிய சொல்லின் பொரு ளிவ்வளவென் றுணர்க. எ-று. (௯௮)

மூத்திரத்தை மலமதனை மோசிக்கு மப்பொழுதும்
வாய்த்துளதே சிறிதின்ப மவ்வளவே வனிதையர்கள்
மூத்திரத்தை மோசிக்குஞ் சுழியினிமை முடைப்பன்றி
நாத்தனக்கு நலமலமே மலநலமோ நாடுங்கால்.

எ-து. வெளி. முடைப்பன்றி-நாற்றத்தையுடையபன்றி. (௯௯)

சிற்றின்பத்தை யுவர்த்துப் பேரின்பத்தை யுறுதலே
சிறப்பென் றுணர்த்துகின்றார்.

நாயினுக்கும் பேயினுக்கு நரியினுக்குங் கழுகினுக்கு
மீயினுக்கு மினிதுபிண மெனிலதுதா னினியதுவோ
வாயினுக்கு மனத்தினுக்கு மதிப்பரிய மாதேவன்
றேயினுக்கே சிவமதனைத் திளைப்பாரோ சிறந்தாரே.

எ-து. பிணம் நாய், பேய், நரி, கழுகு, ஈ இவைகளுக் கின்பத்தைக் கொடுக்கும். அதுபோல மாதரின்பமுங் காமவிகாரமுடைய மூடர்களுக்கே யினிமை, அது ஒழிந்து அறிவுடையோர்கள் விசாரிக்கு மிடத்து இது நிலைமையல்லவே. ஆகையா லதனைச் சீயென் றுவர்த்து வாக்கு மனத்துக் கெட்டாத சிவபிரா னருளினால் தமது சிற்சத்தி யனுபவமான பேரின்பத்தை யனுபவித்துக்கொண் டிருக்கும் அவர்களே சிறப்புடையவர்கள். எ-று.

இவ்வாறு செய்யாதவர்க ளடையும் பலமுணர்த்துகின்றார்.

புரிந்தவர்க டவினையைப் பொருவரிய னடிக்கன்பு
பிரிந்தவர்கள் வனிதையரைப் பெறற்கரிய பேறென்றே

யிருந்தவர்கள் நடந்தவர்க ளிழுக்காய குழிவழிக்கே
யெரிந்தவர்கள் கிடந்தெரிவாய் நிரயத்து மிளைப்புறவே.

எ-து. ஒப்பில்லாத சிவபிரானது சீபாதத்துக்கு அன்பு செய்யாமற் பாவத்தைச் செய்தவர்கள் அப்பாவ மேலீட்டால் மாதருடைய போகங்களைக் கிடைத்தற் கரிய பேறென்றே மதித் தனுபவித்திருந்தவர்களோ ; எரிவாய் நிரயத் துக்கத்தையடைய விருந்தவர்களும் நடந்தவர்களும் பொல்லாத நரகக்குழியில் விழுந்தவர்களு மவர்களே. எ-று. (சக)

மாதர் மயக்கத்தால் வருந் துன்பத்தை யைந்து செய்யுளா லுணர்த்துகின்றார்.

வேறு.

வைத்தவ ரழுக்கினில் வாஞ்சை மையலாற்
றுய்த்தவ ரளவிலாச் சோக வாரியே
வித்தகப் பொருளினை விரும்பு வார்மல
முத்தரின் புறுவர்க ளநாதி முத்தனால்.

எ-ஆ. வெளி. (சஉ)

உருத்திரன் மணவினை யுவந்த நாளினிற்
றரித்தனன் சதுமுகன் சாப சோகமும்
வரத்தினால் வலியுடைத் தக்கன் மாமகள்
கருத்தினி லடங்கிடாக் கதத்தி னனரோ.

எ-து. தக்கனுடைய புத்திரியாகிய தாக்ஷாயணியைப் பரமேசுவரன் கலியாணம் பண்ணுகிற காலத்திலே பிரமன் அவளைக் காமுற அதைத் தாக்ஷாயணி யறிந்து மிகவுங் கோபித்துக்கொண்டு அவனைச் சபித்ததனாற் சாபம் அடைந்து அதனாலே துக்கமுற்றான். எ-து.

அரோ-அசை. (சங)

இந்திரன் முனிமனை யிணங்கி யெய்திய
வந்தா மினைத்தென வளப்ப தல்லவே
சந்திரன் குருமனை தன்னிற் றங்கியே
வந்திடுந் துயரினை மதிக்க வல்லரோ.

எ-து. கௌதமவிருடிமனைவியாகிய வகலிகையை இந்திரனைகொண்டு இராத்திரி யருணோதயத்துக்குமுன் அகாலத்தில் அவராச்சிரமத்திற் காகமாய்வந்து கூப்பிடப் பொழுது விடிந்ததென்று அவரனுட்டானத்துக்குப் புறப்பட்டுப்போக அதன்பின் இந்திரனவளுடனே கூடினான், அகாலமென்றிருடி மீண்டும் வந்து இந்திரனிவ்வாறு கபடமாய் வந்ததறிந்து அவனையவ் விருடி கோபித்துக்கொண்டு அகலிகை கல்லாகவும் ஒரு யோனிக்கா ஆசைப்பட்டதனால் உன்னுடல் முழுதும் ஆயிரம் யோனியாகக் கடவ

தென்று சபிக்க அவன்பட்ட துயரத்துக்கோ அளவில்லை. சந்திரனுந் தன் ஆசிரியரான வியாழபகவானுடைய மனைவியைத் தீண்டியதனால் அவனுக்குக் கயரோக வியாதியுண்டாய்த் துயரமடைந்ததை யாவர் விசாரித்துணாப்பார்கள். எ-று.

நளனது மனைவியை நச்சி வேடுவ
னெளியளென் றவடனைத் திளைக்க வெண்ணின
னளவில துயருறச் சாம்ப லாயின
னுள்ளுமனந் தவள்பகர் சாப மொன்றியே.

எ-து. கலிதோடத்தால் நளனுமவன் மனைவியாகிய தமயந்தியும் வனத்திற் சஞ்சரிக்கிற காலத்தின் மூங்கிலின்மேல் பாம்பிருக்கையிற் காட்டுத்தீ யடியிற்பற்றி யெரிகிற சமயத்தில் அந்தப்பாம்பைக் காக்கவேண்டுமென்று அவள் ஒருகோலைக் கொடுத்திறக்க அவள் கழுத்தை வந்து சுற்றிக்கொள்ள அது தன்னை வேதனை செய்யுமென்று பயந்து கூப்பிட அந்தச் சமயத்தில் வேடன்வந்ததனை விடுவித்து தன்னந்தனியா யிருக்கின்றன ளிவளெய்யளென்று அவளைக் கூடும்படி எண்ணியதறிந்து அவனை யெரிந்துபோகவென்று சபிக்க அவனுந் துக்கத்தையடைந்து அச்சாபத்தினால் சாம்பலாயினான். எ-று. (௨௫)

அரக்கனுஞ் சானகிக் காசை யுற்றனன்
சிரக்கன மிழந்தனன் றிளைத்து மல்லவே
தரித்தவ ராசையைத் தைய லார்கள்பால்
வருத்தமே மருவினர் மண்ணும் விண்ணுமே.

எ-து. இராமபிரானுஞ் சீதாபிராட்டியுமாகப் பஞ்சவடி தீரத்திலிருக்கின்ற சமயத்திலிராவணன் மாரீசனை யனுப்பிப் பொன்மானாகவரவிட அம்மானைச் சீதாபிராட்டி பிடித்துத் தாவென்று சொல்ல, இராபிராமன் முன்னேபோகப் பின்பு இளையவனு மதன்பிறகே தேடிப்போன சமயத்தில் இராவணன் சந்நியாசியாய் வேடமாறிவந்து அவளைக்கொண்டுபோ யிலங்கா நகரத்தில் சிறைவைத் திருக்கையி லிராமபிரான் பின்தேடிப்போ யவனுடைய பட்டணத்தையு மழித்து அவளைக் கூடாமலிருக்கவும் பாணப்பிரயோகஞ் செய்ய அவனுடைய தலை யிழந்தான். ஆதலாற் பெண்மோகத்தி லாசையுள்ளவர்கள் பூமியிலுஞ் சுவர்க்கத்திலுந் துக்கத்தையே யடைந்தார்கள். எ-று.

சுவர்க்கத்தில் சரீரமெடுத்த தேவர்கண் முதலாயினோருந் துக்கமடையு முறையைப் பன்னிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

இந்திரன் புயத்துற வாத மீடிலன்
சந்திரன் கயாமயந் தரித்தி ளைத்தனன்
மந்தனு முடவனே மற்றை யார்களு
மிந்தவா றெவருட லெடுத்தி டர்ப்படார்.

எ-து. தேவர்களுக்கெல்லா மிறைவனாகிய இந்திரனும் ஈ[illegible]னிக்கு ஆசையாய்க் கைலாசத்துக்கே யழைத்துக்கொண்டுபோ யுமாதேவியுடனே நடனம்செய்கின்ற சிவபிரானை யெண்ணாமல் வச்சிராயுதத்தாலோச்ச அப்போது இறைவன் றிரும்பிபார்த்ததனாற் கைவழக்க மற்றுப்போய் வலத்தோளில் வாதவியாதியாய்த் துக்கத்தையடைந்து வலியிழந்தான். சந்திரனுங் கயரோகத்தினாலே துக்கத்தை யடைந்து இளைத்துப்போயினான். சனிபகவானுந் தன் மாற்றாந்தாயாகிய பிரதியுசாதேவி யென்பவளைத் தனக்குப கரிக்கவில்லையென் றுதைக்க அப்போதவள் அழுகிக் கால்விழுந்து போகவென்று சபிக்க வதனா லவனு முடவனாய்த் துக்கத்தை யடைந்தான். மற்றவர்களும் இவ்வாறாகவுடலெடுத் திடர்ப்படாதவர் யார் ஒருவருமில்லை. எ-று.

தக்கனுஞ் சுரத்தினை யுடலிற் றாங்கினன்
றொக்கிடத் தலைவலி யரியுந் தாக்கிதன்
மிக்குறச் சலோதரம் வருணன் வீறில
னுக்குடற் பழுதுள னுதய பானுவும்.

எ-து. தக்கனுஞ் சரீரத்தில் சுரத்தினால் வேதனையை யடைந்தான். மாயனுந் தலைவலியாற் றுயரத்தை யுடையவனாயினான். வருணனு நீர்க்கோவையென்னும் வியாதியைப் பெற்றுத் தன் பலமெல்லாங் குறைந்தான். சூரியனுந் தன்தேவி யுசாதேவியென்பவள் சூரியனுடைய தேசு பொறுக்கப்படாதென்று பிதாவாகிய விசுவகர்மாவினிடஞ் சொல்லி யவன் சாணையினாற்கடைய தேசுமழுங்கித், தொக்குத்தோஷமென்னும் வியாதியான் மனநைந்து துயரமடைந்தான். எ-று.

உம்மை-எண். (௪௮)

காமனுந் திருவுருக் காயப் பட்டனன்
பூமக னொருசிரம் போக்கப் பட்டன
னாமக ளாசியு நறுக்கப் பட்டனள்
சேமமாஞ் சிவனவன் சினந்து சீறவே.

எ-து. வெளி. (௪௯)

கன்றிய காலனுங் களையப் பட்டன
னொன்றிய புரத்துளா ரொழிக்கப் பட்டன
ரன்றிய வரிசிர மரியப் பட்டனன்
பன்றியின் கொம்பிணை பறிக்கப் பட்டதே.

எ-து. மார்க்கண்டருக்காகச் சிவபிரானால் கோபிக்கப்பட்ட எமராசனும் வலப்பாதத்தா லுதைக்கப்பட்டான் அனேகங் காலத்துக் கொருகால் அற்பகாலம் திரிபுரத்துக் கதிபராகிய வித்தியுன்மாலி முதலிய மூவருந் தகிக்கப்பட்டனர் அதுவல்லாமல் குருக்ஷேத்திரத்திற் றேவர்களெல்லாருங் கூடிச் சத்திரயாகஞ் செய்த சமயத்தி லப்போது கிருட்டிணன் எக்கியமூர்த்தியாய

வதரித்து வில்லெடுத்துக் கொண்டு தேவர்களைத் துரத்திப் பின்பு திருவாரூரில் வந்து வில்லைத் தாடியி லூன்றி மோகித்து நிற்க அப்போது வியாழ பகவானுந் தேவர்களுங் காரியவிசாரம் பண்ணி, வில்நாணிற் செல்லை ஏவிய வப்போது வில் நிமிர்ந்தது அதனாற் றலையறுக்கப் பட்டான். மாயன் சிருட்டியில் வராகவடிவமெடுத்துப் பாதாளமளவாகத் தன் கோட்டா லெடுத்தோமென் றகங்காரம் வர அவன் அகங்காரத்தைப் போக்கும் பொருட்டு அதன் கொம்பைப் பறித்துத் தரித்தார். எ-று. (௫௧)

தக்கனு மிழந்தனன் றலையைப் பல்லெலா
முக்கிழந் தருணனு மொடுங்கி யோடினன்
னக்கியுங் கரமிழந் தஞ்சி யெஞ்சினன்
றுக்கமே மிக்குறச் சுரரு மோடினார்.

எ-து சிவபிரானை யிகழ்ந்த குற்றத்தால் தக்கனும் வீரபத்திரர் கையாற் றலையறுப்புண்டான் அவனுடன் கூடிய சூரியன் தன்பல்லெல்லா முடையும்படி யடிபட்டு வலி குறைந்து ஓடினான். அக்கினியுந் தன்கை தறிப்புண்டு ஓடினான். மற்றைத்தேவர்களு மிகவுமடிபட்டு ஓடினார்கள். எ-று.

தாருகன் காளியாற் றறிக்கப் பட்டனன்
சூரனெம் வேலினாற் றுணிக்கப்பட்டனன்
போருடை யசுரரும் போக்கப் பட்டனர்
பாரத குலத்தினுட் பார்த்த னெய்யவே.

எ-து. தாருகாசுரன் பத்திரகாளியால் தறிக்கப்பட்டான். சூரபதுமனும் நம்முடைய வேலினால் சங்கரிக்கப்பட்டான் பாரதகுலத்துட் டோன்றிய அருச்சுனன் மகாபல பராக்கிரமசாலிகளாகிய நிவாதகவசரென்கிற வசுரரைச் சங்கரித்தான். எ-று. (௫௨)

பாம்பென நகுடனும் படியில் வீழ்ந்தன
னோம்பிய வருமுனி சாப மொன்றியே
தேம்பினன் பரசுடன் சிறந்த ராமனும்
வாம்பரித் தயாதன் மகன்வ லிக்கரோ.

எ-து. நகுடனென்னு மரசன் அசுவமேதயாகஞ் செய்து சுவர்க்க லோகத்துக்குச் சத்தவிருடிகளும் சிவிகை தாங்க அதன்மேலேறிப்போகையில் இந்திராணியை யடையச் சடுதியிற் போகவேண்டுமென்னு மாதரவினால் பெருவிரலூன்றி யகத்தியமுனிவரை நோக்கிச் சர்ப்ப சர்ப்பவென்னும் மொழியாற் கடுகிப்போகவென்ன அகத்தியமுனிவர் கோபங்கொண்டு நீசொன்ன சத்தத்தின்படியே சர்ப்பமாகக் கடவையென்று சபிக்க அப்படியே யவனும் பாம்பாய்ப் பூமியில் வீழ்ந்தான். தாவிச்செல்லும் பரியினையுடைய தயரதச் சக்கரவர்த்தி திருக்குமாரனாகிய இராமபிரான் மிதுலையிற்போய்ச் சனகராசன் கன்னிகை சீதாபிராட்டியை வில்வளைத்துக் கலியாணஞ் செய்துகொ

ண்டு வருகிறவழியில் பரசுராமன் தானொரு வில்லைக் கொண்டுவந்து இதனை வளையென்றுகொடுக்க அப்பெருமா னந்தவில்லைவாங்கி வளைத்து நாணையேற்றிச்சரந்தொடுக்கப் பரசுராமன் தன் தவமெல்லா மந்தச் சரத்துக்கிலக்காகக் கொடுத்து வாட்டமடைந்தான். எ-று. (௫௩)

ஆயிரங் கரமுடை யசுர வாணனு
மாயனு விருகர மலாவி ழந்தன
னேயனு மொருசர மாவின் வீழவே
யாயுவு மிழந்தன னங்க மங்கவே.

எ-து. ஆயிரங் கைகளையுடைய வாணாசுரன் சிவபிரான் திருநடனத்துக்குக் குடமுழாமுழக்கிச் சேவிக்கச் சிவன் சந்தோடப்பட்ட காலத்திற் றேவரீ ரென்னுடன் யுத்தம் பண்ணவேண்டுமென்று கேட்க, நம்முடைய சத்தியாகிய நாராயணனைக்கொண்டே யுத்தம் பண்ணுவிக்கின்றோமென்று சிவபிரான் அருளிச்செய்கையா லந்நாராயணனது கிருட்டிணாவதாரத்திற் பௌத்திரனாகிய நிருத்தன் அவ்வாணாசுரன் மகள் உஷையைக் காமுற்றுக் கன்னிமாடத்திற்கூட வதனை வாணாசுரனறிந்தவனைக் காவல் செய்ய வதனைநாரதர்சொல்லக் கிருட்டிணனறிந்ததுவே காரணமாக வாணாசுரன் சிவார்ச்சனை பண்ணிய விரண்டுகையையு மொழித்து நின்ற கைகளை யெல்லாம் வாளாலறுக்கப்பட்டான். இவ்வாறு வாணாசுரன் கைகளைச் சேதித்த கிருட்டிணனும் ஆலிலையின்மேல் பள்ளிகொள்ளுகிற வவதாரத்தி லொருவேடன் சென்று அவன் சீபாதஞ் சிவந்திருப்பதைக் கண்டு புறவென்று கருதி யெய்த அம்பினா லாலினின்றும் வீழ்ந்து சரீரம் நாசமா யுயிரு மிழந்தான். எ-று. (௫௪)

ஆயனும் புறகிட வவன்று வாரையுந்
தாயமுந் தனதெனத் தரித்த சந்தனும்
வாயுசன் வீமனால் வதைக்கப் பட்டனன்
வாயுவோ டோடிய சேடன் வாடினான்.

எ-து. கிருட்டிணன் தோற்றுப்போம்படி பொருது அவன் துவாரகாபுரியையு முரிமையான பண்டி பண்டாரத்தையுந் தன் வசமாகக் கட்டிக்கொண்ட சராசந்தனுந் தன் யாகத்தில் யுத்ததானங்கேட்ட வாயுபுத்திரனாகிய வீமனோடு பொருது அவனால் தன்னுடல் கிழிக்கப்பட்டான். வாயுவுடன் மாறுபட்டு மகாமேருவைக்காத்த சேடனுங் காக்கமாட்டாமல் துயரமடைந்தான். எ-று.

வாயுபுத்திரனென்பது-உபசாரப்பெயர். (௫௫)

அழிவிலா வரமுடை யனும னாகமும்
பழுதுறப் பகலவன் பதறிப் பாற்றின
னெழுகதிர் தடைபட வெதிர்ந்து வானிடைக்
குழுவிய குயினிலை வளியிற் குன்றுமே.

எ-து. அழிவில்லாத வரத்தினையுடைய அனுமான் சூரியன் சிவந்திருக்கையாற் பழமென்று தாவுதலினா லவன் கிரணத்தாற் சரீரம் பழுதுபட் டோடும்படி விரைவிற் றாத்தினான். இச்சிறப்பினையும் விட்டு விளங்குகின்ற கிரணத்தையுமுடைய சூரியனா மாகாசத்திற்றோன்றிய மேகத்தினால் மறைக்கப்பட்டான். அம்மேகம் தன்னைப் பற்றப் பலமாயிருக்கிற காற்றினால் தமது கூட்டத்தைச் சிதற வடிக்கப்பட்டது. எ-று.

வாயு தன் மைந்தனாகிய வனுமானுக்குத் தேவர்க ளாயுதங்களால் வேதனை உண்டாகா திருக்கவேண்டுமென்று பிரமனை வரங்கேட்டுக் கொள்ளுகையா "லழிவில்லா வரமுடையனும்" மெனச் சிறப்பித்தார். (௫௬)

சிற்றுயிர் படுந்துயர் செப்பு வாமெனை
நெற்றியின் விழியுடை நிமலன் வீரியத்
தூற்றுடல் குமரனென் றுரைக்கப் பட்டயான்
சற்றல வசுரரா லுற்ற சங்கையே.

எ-து. வெளி. குமாரன் என்பது திரிந்து நின்றது. கு. எ-து. குற்சிக்கப்பட்டது. மார் எ-து. மரணம். இவ்வாறு குற்சிக்கப்பட்டதை நாசமடைவிப்பதனாற் குமாரனெனப்பெயராயிற்று. இதனைக் குமாரதந்திரத்தோதப்பட்டது. குற்சிதம்-அசுத்தம். (௫௭)

அயனொரு தினந்தனி லமரர் மற்றையர்
வயவலி தொலையவே வருந்தி வாடுவ
ரயனுமற் றவருட னழிவ னாண்டுகள்
கயமுறப் பரார்த்தவெண் ணிரண்டு காட்டியே.

எ-து. மானிடவருடமுந் நூற்றறுபது கொண்டது தேவவருடம். அத்தேவவருடம் ஆயிரத்திருநூறு கொண்டது கலியுகம். தேவவருடமிரண்டாயிரத்துநானூறு கொண்டது துவாபரயுகம். தேவவருட மூவாயிரத்தறுநூறு கொண்டது திரேதாயுகம். தேவவருடம் நாலாயிரத்தெண்ணூறுகொண்டது கிரேதாயுகம். ஆக இவ்வாறு தேவவருடம் பன்னீராயிரங் கொண்டது ஒரு சதுர்யுகம். அச்சதுர்யுகம் இரண்டாயிரங் கொண்டது பிரமனுக்கு ஒருநாள். அவ்வொருநாளில் தேவர்கள் அட்டதிக்குப்பாலகர்கள் சந்திரசூரியர்களெல்லாருந் தங்களிடத்துண்டாகிய பலமும் வயதுந் தொலையவே துக்கித்துச் சிவபிரானால் சங்கரிக்கப்படுவார்கள், பரார்த்தகால மிரண்டிப்படி கழிந்தவுடன் பிரமனுக்கு நாசமுண்டாம், மற்றுள்ள தேவர்கள் தங்கள் தங்கள் காலாவதி சென்றவாறே நாசத்தை யடைவார்கள். எ-று.

பரார்த்தம்-பிரமகற்பத்தனை. (௫௮)

முற்கூறிய மானிடயோனிகள் துயரம் பத்துச்
செய்யுளா லருளிச்செய்கிறார்.

கருப்பையு ளுணர்வினைக் காலு மோதலாற்
பிரித்துயிர் பிறத்தலாற் பேசப் பட்டதே

விரித்துரை வேதமும் விளங்க வாய்கிலார்
மரிப்பரோ பிறப்பரோ மனிதர் தாமுமே.

எ-து. கர்ப்பத்தில் ஞானத்துடன் கூடியிருக்கிறவனைச் சண்டமாருதம் வந்தடித்து அதனால் முன்புள்ள வறிவு கலங்கி யபானவாயுவினால் கிழேதள்ளப்பட்டுப் பூமியில் வந்தவளவி லனேக துன்பத்தை யடைவானென்று நூல்களிற் சொல்லப்பட்டதே யிப்படி வருத்தமடைந்து பூமியிற் பிறந்தமானிடர் வேதாகம முதலிய நூல்களோதி நன்று யாராய்ந்துகதியடையாமல் வீணில் காலத்தைக் கழித்து மரிப்பதும் பிறப்பதுமே தொழிலாய்த் திரிவார்கள். எ-று. (௫௯)

அன்னைதன் வயினிடை யனேக துன்பமே
பின்னையும் பிறப்புழி பெரிது துன்பமே
தன்னயர் வறவுரை தரிக்கத் தாதையோ
சொன்னவில் குரவனுஞ் சுளியத் துன்பமே.

எ-து. வெளி. அயர்வு-மறதி. சுளிய-கோபிக்க. (௬௰)

ஒருமைய வுணர்வின ருரைக்கும் வாசகத்
தருமைய பொருளவ ரருளி னாற்பெறும்
பெருமையைப் பெறற்கரும் பேறென் றெண்ணிலா
ரிருமையு மிழப்பரோ யினைய ரிச்சையால்.

எ-து. மோட்சத்தை யடைவதற் கொருப்பட்ட வறிவினையுடைய ஞானவான்க ளருளிச்செய்யுந் திருவாக்கினா லுண்டாகிய அருமைப்பொருளை யுட்கொண் டந்த ஞானவான்க ளருளினாற்பெற்று நன்மையை யடையவேண்டுமென்னும் புத்தியில்லாமன் மடவார்மேலும் புத்திர மித்திர களத்திராதிகண் மேலும் வாஞ்சையை வைத்தவர்கள் போகமோட்சங்க ளிரண்டையு மிழப்பார்கள். எ-று. (௬௧)

துடியிடைத் தடமுலைத் துளங்கு தோள்வளைப்
பிடிநடைக் கடுவிழிப் பேதை மாதரார்
கடிதடக் கலவியிற் காம மீதுறப்
படுமிடர்க் களவிலைப் போகர் பாருளே.

எ-து. வெளி. தடம்-பெருமை. பிடி-பெண்ணானை. கடு-விடம். கடிதடம்-அல்குல். (௬௨)

விடக்கினை விரும்பியே வெறுப்பு மேலிடக்
கடித்திரு நாய்தமிற் கதறு மாறுபோன்
முடைப்புழுக் குரம்பையின் மோக மெய்தியே
விடைப்பரோ மனிதருந் தம்மில் வெல்லவே.

எ-து. வெளி. விடைத்தல்-அடித்தல். (௬௩)

திலத்தினை யினிமையைத் தினைக்க மானிடர்
மலைக்கிணைத் துயரினை விளைய மாந்துவார்
துலைக்கணக் கறிகிலாத் துரிசி னாவர்
கலைக்கணக் கினத்தலை காண வல்லரோ.

எ-து. வெளி. திலம்-சிறுமைகூறியது. துலைக்கணக்கு-துலாவிறைக்குங் கணக்கு. துரிசு-பாவம். கலை-வேதாகமம். (௬௪)

பனியினும் பனிப்பரோ பவன னெய்தினுந்
துனிவெயிற் கூதிரின் மிகவுந் துன்பமே
யினையன துயர்பல வின்ப மெய்துவர்
மனிதர்க ளெப்பொழு துறுகண் மாறியே.

எ-து. ஆன்மாக்கள் முற்பனியாகிய மார்கழி தையினும், பின்பனியாகிய மாசி பங்குனியினு, முதுவேனிலையுங் காற்றினையுமுடைய ஆனி ஆடியினுங், குளிர்காலமாகிய ஐப்பிசி கார்த்திகையினு, மற்றைக் கார்கால மிளவேனிற்காலங்களினு மிகவுந் துன்பத்தை யடைவார்கள் இக்காலங்களில் துக்கத்தையே யனுபவிப்பதல்லாமல் சுகத்தை யெப்போது தான் அனுபவிப்பார்கள். எ-று.

சூ. "காரேகூதிர் முன்பனி பின்பனி சீரிளவேனில் வேனிலென் றாங் கிருமூவகைய பருவமென்ப" என்பதனாலறிக. (௬௫)

காலையு மலத்தினாற் கடிய துன்பமே
காலவும் பசியினாற் றளர்வ ருச்சியின்
மாலையிற் காமமும் மலிய வாடுவர்
வேலைக டொறுமிடர் விளையும் விஞ்சியே.

எ-து. வெளி. முற்கூறிய ஆறு இருதுவிலுந் துக்கமடைவ தல்லாமல் சிறுபொழுதாகிய நாடொறுந் துக்கமடைவதனை வேலைகடொறும் எனப் பிரித்துங் கூறினர். (௬௬)

ஆக்கையை நிலையென வாட கந்தனை
யாக்கலு மருந்துய ரஞ்சிச் சோரனாக்
காக்கலுங் கடுந்துயர் களித்த வின்முத
லாக்கலு மருந்துய ரழியும் போதுமே.

எ-து. நிலையில்லாத சரீரத்தை நிலையென்று பொருளைத் தேடுமிடத்து மதைக் கள்ளர் கொண்டுபோகாம லிரட்சிக்கு மிடத்தும் பலங் கண்டு களிக்கும் வீடு உண்டாக்கு மிடத்தும் உண்டான வீடு இடிந்துபோ மிடத்துந் துக்கத்தையே யடைவார்கள். எ-று.

துக்கம். எ-து. முழுதுங்கூட்டுக. (௬௭)

ஆடையுமொன் றலா லதிக மென்செய
வீடுமொன் றல்லது வேண்டு மோபல

பாடுடைப் புவிமனர் பாவ சாதனந்
தேடிய மற்றைய வனைத்துந் தேரினே.

எ-து. பண்ட முதலியவற்றைப் பிரயாசப்பட்டுத் தேடினாலு மிவன் தரிக்கப்போகிற புடவை யொன்றல்லவோ மாடகூடங் கட்டினாலு மிவன் படுக்கப்போகிறது பாய்விரியல்லவோ இவ்வாறிருக்கப் பாவசிந்தனையா யிருக்கிற அரசர்கள் கோட்டை யுப்பரிகை முதலாயினவற்றை யுண்டாக்குவதை விசாரித்தால் எல்லாம் பாவத்தைத் தேடுவதொழிந்து புண்ணியமொன்றுமில்லை. எ-று. (சுஅ)

அரசர்களுந் துயரமடைவதனை யுணர்த்துகின்றார்

அஞ்சுவர் புதல்வனை யனையர் மற்றையர்
தஞ்சலில் பிறரிடைச் சாற்று வாமெனை
விஞ்சிய வரசர்கள் வெகுண்ட வேலையிற்
றுஞ்சுவர் சமர்தனிற் றுயரந் துய்த்துமே.

எ-து. சதுரங்க பலத்துடன் கூடி யிருக்கிற அரசர்களுந் தான்பெற்ற பிள்ளை தன்னைச் சேதித்து இராச்சியங் கட்டிக்கொண்டு அனுபவிக்கப் போகின்றானென்று பயப்படுவார்கள். அதுவல்லாமல் தன்னிலு மிகுந்த பரமண்டலத்துள்ள அனையர் வெகுண்டு படையெடுத்துவந்த காலத்தும் யுத்தகளத்திற் பொருது அதனாற் சிறிதுபேர் இறந்துஞ் சிறிதுபேர் துன்பமடைந்து மிவ்வாறே துக்கத்தை யடைவார்கள். எ-று. (சுக)

இனி விலங்குகளும் பறவைகளும் ஊர்வனவுந் தருக்
களுந் துயரமடைவதனை ஐந்து செய்யுளா
லுணர்த்துகின்றார்.

கரிபரி முதலவுங் கனங்க டாங்கியே
புரவலர்க் கேவலர் புடைக்க நொந்திடும்
பொருகள மதனிடைக் குருதி பொங்கவே
சாமுறத் தளர்வுறச் சாய்ந்து வீழுமே.

எ-து. பாகனாலங்குசம் பரிக்கோல் முதலியவற்றாற் றுயரமடையும் யானை குதிரைகள் வாதுவராற் றிருத்துவிக்கு மிடத்துக் கசையினால் வேதனையுறும் ஒட்டக மெருது முதலாயின பாரங்களைச் சுமந்து அதனாற் றுயரத்தையுறும் அதுவல்லாமல் யுத்தகளத்திற் பகைவர் கைப்பாணம் வாள் முதலியவற்றாற் குருதிபொங்கப் பாடுகொட்டு மரிக்கும். எ-று. (எ0)

மானினங் கானவர் வலையின் வாடிடு
மானினம் புலியுறி னழுங்கி யஞ்சுமே
வானற வுணவற வருந்தி வாடிடு
மேனைய மிருகமு மிடுக்க ணெய்துமே.

எ-து. வேடர் முதலியவரால் வலையில் கரடி புலி மான் பன்றி முதலியவை துக்கமடையும். பசுக்களினது கூட்டமும் புலி வந்து பாய்ந்தவிடத்துத் தரையிற் படிந்து அதனாற் றுயரமடையும், அதுவல்லாமல் மழையில்லாமையால் புன் முதலாயின வுணவற்றுப்போக அதனால் வருத்த முற்றும் வாடும். மற்றை மிருகமு மிப்படியே துன்பமடையும். எ-று. (௭௧)

வியங்கமும் வருந்திடும் வெயிலின் மாரியின்
வயங்கெடத் துயங்கிடும் வாடை வீசவும்
நயங்கெடு முணவற நாச மாறினு
மியங்கினும் பகையினுக் கச்ச மெய்துமே.

எ-து. பறவைகளானவை மிகுந்த வெயிலினாலு மழைகளினாலும் வேதனையடையும்; அதுவல்லாமல் வாடைக்காற்றுக் கடுகில் தங்கள் பலங் கெட்டுத் துக்கமடையும், அதுவல்லாம லேரிமுதலானவற்றிற் சலம்வற்றிப் போக மீன்முதலிய வுணவில்லாமையினாலும் வாட்டமடையும், அதுவல்லாமல். ஆகாசத்திலே சஞ்சரிக்கு மிடத்துக் காக்கையானது வலியான், கோட்டானாலுங் கொக்குக் குருவி முதலாயின இராசாளி வல்லூற்றினாலு மிப்படி யொன்றுக்கொன்று பகையாகிய பக்ஷிகளினாலே துயர மடையும்.

பசியுறப் பகையுறப் பாம்புந் தேம்பிடும்
நசமுறும் வலையுற நார மீனுமோ
கசிவினிற் கிருமியுங் கலித்த மூங்கியே
வசமறும் வெயிலினோர் தினத்துண் மாயுமே.

எ-து. பாம்புகளும் பாம்பாட்டிகள் பிடித்துப் பெட்டியி லடைக்கப்பட்டுப் பசிவந்து பொருந்தப் பக்ஷுவத்தி லிளைபெருமையாலுந் தனக்குப் பகையாகிய கருடன் கீரி முதலியவற்றைக் கண்டவிடத்து மயக்கத்தையடைந்தும் வருந்தும், சலத்திலுண்டாகிய மீன்களும் வலைக்காரராற் பிடிக்கப்பட்டு நாசத்தை யடையும். புழுக்களும் வேர்வையிலு மீரத்திலு நெருங்கித் தோன்றி வெயிலினால் துக்கத்தை யடைந்து ஒருநாளிலே தானே சனித்து மரிக்கும். எ-று.

நாசமென்பது-நசமெனக்குறுக்கல்பெற்றது. மீனுமோவென்ற ஓகாரத்தினால் மற்றுமுள்ள செந்துக்களுங் கொள்க. (௭௫)

வருந்திடு தாவர வுருவ மாதவ
ரரிந்திட வற்கலை யதனை யாக்கவும்
பொரிந்திடும் பனியினும் பொருங்கை பானைகண்
முரிந்தறு மூலமும் பறிக்க மூசியே.

எ-து. தாவரவடிவமாகிய மரங்கள் மகத்தாகிய விருடிகள் மரவுரி தரிப்பது பற்றி பட்டையை வெட்டி யுரிப்பதனாலும் வேதனை யெய்தும். அதுவல்லாமல் பனிப்பெய்கையினாலும் பொரிந்து போகும், அதுவல்லா

மல் பொருகின்ற கையினையுடைய யானைகள் கூடி வேரைப்பறிப்பவதனாலு முரிந்து நாசத்தை யடையும். எ-று.

மூசுதல்-கூடல். (எச)

இவ்வாறு கூறி மேற் பொதுவிதி யுணர்த்துகின்றார்.

பெற்றிடுஞ் செல்வமும் பீடை செய்திடு
மற்றுயர் வாழ்வினை மதித்த வேலையி
லுற்றிடு முணர்வுமிம் முறையி னுைத்திடுஞ்
சிற்றுயிர்க் குடற்சிறை செறித லலசோ.

எ-து. ஒருவன் செல்வமு மற்றொருவன் அதிக செல்வத்தைக் கண்டவிடத்து நமக் கவ்வள வுண்டாகவில்லையே யென்னுந் துக்கத்தைக்கொடுக்குந், தான்கற்ற கல்வியும் பிறனொருவன் மிக்ககல்வியை கற்றவிடத்து மிவ்வாறு துக்கத்தை விளைக்கும், சிற்றுயிராகிய ஆன்மாவுக்குச் சிறைச்சாலையாகிய வுடல் பந்தமாகக் கூடுவதா லிவ்வாறு விசாரிக்கச் செய்யும். எ-று.

இதுவுமது.

பரிமிசைக் களியுறப் பயின்ற பாவகன்
றரை தனிற் சிவிகையுட் டங்கி னெதிர்
வாமுனைக் களிப்பினை மாற்றி மையனும்
பிரிவிலன் றேர்வரச் சிவிகைப் பேதையும்.

எ-து. பூமியிற் கால்நடையாய் வந்த ஒருவன் தனக்கெதிரே சந்தோஷத்துடன் குதிரையேறி வருபவனைக்கண்டு நாமுங் குதிரையேறப் பெற்றோ மில்லையேயென்று துக்கத்தை யடைவான், அக்குதிரையுடையவனுந் தண்டிகை பல்லக்கேறி யெதிரே வருபவனைக் கண்டு முன்னுள்ளசந்தோஷத்தை யொழித்துத் தனக்கு அது உண்டாயிற் றில்லையே யென்று துக்கத்தை யடைவான். அப்பல்லக்கில்வரு மறிவில்லாதவனுந் தேரேறி வருபவனைக்கண்டு துக்கத்தை யடைவான், ஆகையா லொருவர்க்கொருவ ரிவ்வாறே யுத்தரோத்தரந் துயரமடைவார்கள். எ-று. (எசு)

இதுவுமது.

இம்முறை யமரரு மிடுக்க ணெய்துவர்
தம்மினு முயர்ந்தவர் பதத்தைத் தாமுனி
யெம்முறை யானுமெய் யிடுக்க ணேதுவே
செம்மைய செல்வமே சிவாநு பூதியே.

எ-து. இவ்வாறே தேவர்கள் முதலாயினோருந் தமக்கு மேலாகிய பேர் பதப்பேறுகளையடையக் கருதி யுத்தரோத்தரந் துக்கத்தை யுறுவார்கள், இவ்வா றெந்தெந்த விதத்தால் சரீரத்தை யெடுத்தாலுந் துக்கத்துக்குக் காரணமே யாகையாற் சிவபிரானுடைய ஸ்ரீபாதகமலத்தை யடைந்து சிவானந்தாநுபூதியில் திளைத்திருப்பதே யழியாத செல்வமாம். எ-று. (எஎ)

தங்கள் தங்கள் கன்மத்துக் கிடாகத் தேவர்களா லசுரரும்
இராக்ஷதருந் துயரமடைவா ரென்பதூஉ மவ் விருவ
ராலுந் தேவர்கள் துயரமடைவார்க ளென்
பதூஉ முணர்த்துகின்றார்.

சமர் தனி லமரரா லசுரர் தாழ்வரோ
யமரரு மவர்களா லபசயத் தரோ
யிமையவர் தயித்திய ரிந்த நீர்மையர்
தமதம வினைபரி பாகஞ் சாரவே.

எ-து. வெளி. தயித்தியர்-இராக்கதர். (எஅ)

மேற்கன்மமுங் காலமும் பலத்தைக் கொடுக்க மாட்டாது சிவனே
கொடுப்பனென்பதனை யுணர்த்துகின்றார்.

கருமமும் பலத்தினைக் காட்ட வல்லதே
பருவமுந் தனக்கது பண்ண வல்லதே
யிருவினைப் பருவமும் பலமு மீசனே
தருவனென் றுணர்கிலா ருடலிற் சார்வரோ.

எ-து. கன்மமுங் காலமுஞ் சடமாகையா லான்மாக்களுக்குத் தானா
ய்ப் பலத்தைக் கொடுக்க மாட்டாது, ஆகையா லவரவர் புண்ணிய பாவபக்
குவத்தையு மதனாலுண்டாகிய பலத்தையு மறிந்து தருகிறவன் சிவனே
யென் றறியாதவர்கள் பூட்டையு நீரும்போல மீளவுஞ் சனனமரணத்தா
லு லுழல்வார்கள். எ-று. (எகூ)

வியாதியால் வருந் துக்க முணர்த்துகின்றார்.

அருந்துய ரடையுமே யவர்கக மாதியின்
பெருந் தினை யருந்தினுந் துயாம் வந்துறு
மருந்திடுந் துயரினை யறிவர் யாவரும்
விரிந்திட விவ்விடத் துரைக்க வேண்டுமே.

எ-து. வெளி. வேண்டுமே யென்ற ஏகார மெதிர்மறையில் வந்
தது. எ-று. (அ0)

நரை திரை முதலிய துன்பத்தை யுணர்த்துகின்றார்.

நரை திரை வருதலி னடலை யோபெரி
திரைதரு மவனென ரென்ன வேங்கியே
வருதுய ரளவிலை மாண வேலையில்
விரவிய தூதரான் மிக்க துக்கமே.

எ-து. வெளி. திரை-உடம்பு திரைதல். (அக)

இதுவுமது.

ஆயுவுஞ் சதமென வறையப் பட்டதே
யாயினு மவரவர் கருமத் தானுடன்
மாயுமென் றறிகமா துயர மேவருந்
தேயுமந் நாடனிற் காலன் சேரவே.

எ-து. ஆன்மாக்களுக்கு பூரணமான வயது நூறென்று வேதாகமங்களிற் சொல்லப்பட்டதே யானாலு மவரவர் செய்த கன்மத்துக்கு ஈடாகக் கற்பத்தி னழுவிப்போவதும் பிறந்தவுடனே யழிவதும் வளர்ந்து பாலதருண விருத்த தசையையடைந் தழிவதுமா யிருக்குமென் றறிக. இங்ஙனமான்மாக்க ளுசத்தை யடையுங் காலத்தி லெமதூதர் வந்து பொருந்துகையினாற் பயந்து மிக்க துயரத்தையே யடைவார்கள். எ-று. (அஉ)

அம்மரணகால மிருவகைப்பட்டிருக்குமென்பதனை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

மிருத்திய மிருவித மொன்று மீண்டிடு
மருத்திய மருந்தினு மழலை யோம்பினு
முனாத்தமந் திரத்தினு மோத ஞதியைக்
குருத்தவர்க் குதவினு மன்பு கூரவே.

எ-து. மரணம் காலமிருத்தியு வென்றும் அவமிருத்தியு வென்று மிருவகைப்பட் டிருக்கு மிதில் அவமிருத்தியு வாகடநூலிற் சொன்ன ஔடதம் புசிக்கையாலுஞ் சீந்திற்தண்டு முதலிய திரவியங்கொண் டோமம் பண்ணுவதனாலு மிருத்தியஞ்செய மந்திர சபங்களினாலும் பெரிய தபோதனர்களைக் கிருபையுட னன்ன முதலிய பாகபேதத்தைப் புசிப்பிக்கையாலுந் திரும்பப்படும். எ-று. (அ௩)

மற்றைய மிருத்தியும் வந்த வேலையி
லுற்றெவ ருடலிடை யிருப்ப சோர்ந்திடிற்
பற்றிய வுடலினை விட்டுப் பாறியே
முற்றிய வினைப்பயன் சீவன் மூளுமே.

எ-து. மற்றைக் காலமிருத்தியு வந்தகாலத்தில் அதனை விசாரிக்குமிடத்து ஒருவரு முடலிலிருக்க வல்லவரில்லை, ஆகையா லான்மா பிராரத்த கன்மம் புசித்துத் தொலையவந்த காலத்து மிருத்தியு வந்தவுடன் பொருந்தியிருந்த தேகத்தை விட்டுப் போய்ப் பரிபக்குவமான கன்மத்துக் கீடாய ததற்கேற்ற தனு கரணாதிகளைப் பொருந்தும். எ-று. (அ௪)

அம்மரணகாலத் துண்டான துக்கத்தை யுணர்த்துகின்றார்.

விட்டிடும் வேலையின் வியந்த வச்சமே
பட்டிடப் படுந்துயர் பகாற் பாலதே

கட்டுவை நீங்கியே காதல் செய்யுமண்
கட்டுவை தன்னையும் பின்னைக் காமுறும்.

எ-து. வெளி. கட்டுவை-கட்டில். (அ௫)

இதுவுமது.

தனத்தினை மனைதனைத் தானி யந்தனை
நினைத்தினி யெவரனு பவிப்பர் நீங்குகா
ளெனக்கிவை யன்னிய மாகு மேயெனு
மனத்துயர் மலியவே மாயு மாவியே.

எ-து. வெளி. (அ௬)

இதுவுமது.

பாம்பழல் வாயினுற் பற்ற மண்டுகந்
தேம்பிடுந் துயருறுஞ் சீவன் றேயுநா
ளோம்பிட வல்லரோ யுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்.

எ-து. வெளி. மண்டுகம்-தவளை. ஓம்பல்-பாதுகாத்தல். (அ௭)

ஆன்மா மறறொரு தேகத்தைப் பற்றியே யிதனை விடுமென்ப
தற் குவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

திணுறுஞ் செழுகைபோற் சீவன் றீண்டியே
வருமுரு வதனைமுன் னுருவ மாற்றிடுந்
தருமமே பருவமேற் சாரும் வானினைப்
பருவமேற் றீவினை நிரயம் பற்றுமே.

எ-து. புல்லினிடத்துப் பொருந்திய சாணளவான புழு வொரு தலை பற்றி யொருதலை விடுவதுபோல ஆன்மா வந்தியகாலத்தெதிரோ வரும் யாதனு சரீரமாகிய சூக்குமதேகத்தை பற்றிப் பின்பப் பூதசரீரமாகிய தூல வுடலை விட்டு நீங்கும். அப்படி யாதனு சரீரத்தை யெடுத்துக்கொண்டு செல்லும்போது நல்வினைப் பரிபாகமானுற் சுவர்க்கத்தை யடையும்; தீவினைப் பரிபாகமானு னரகத்தை யடையும். எ-று. (அ௮)

மரிப்பதைப்பற்ற இரத்தலுங் கரத்தலுமே மிகுந்த
துக்கமென் றுணர்த்துகின்றார்.

மரிப்பதி னருந்துயர் மதிக்கின் மற்றிலை
யிரப்பதே யதனினும் பெரிய வின்னலே
கரப்பதூஉ மிரப்பதிற் கடிய வின்னலே
யிரப்பதூஉங் கரப்பதூஉ மின்மை யின்பமே.

எ-து. மிக்க துக்கங்கள் பலவுளவேனும் விசாரித்துப் பார்க்கும் போது மரிப்பதைப் பற்றவு மருந்துயர் வேறில்லை, அதனினு மிகுந்த துக்க

மொருவன்பாற் சென் றீதா கொடுவென் றிரத்தலேயாம் அதனினுமிக்க துக்கம் இரப்போர்க்கில்லையென்பதேயாம், ஆதலால் தாவொருவன்பாற்சென் றிரவா திருத்தலுந் தன்பால்வந் திரந்தோர்க் கில்லையென்னா திருத்தலு மிம்மை மறுமை யிரண்டினுக்கு மின்பமாவது. எ-று. (அ௧)

துறவுடையோர் மகிமையை யிரண்டு செய்யுளா

லுணர்த்துகின்றார்.

மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்
பெண்ணினு மகவினும் பெரிய பேரினுந்
துண்ணென விழைவினைத் துறந்த தூயரோ
விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்.

எ-து. மண் முதலாகிய பூமியினுந், தனதானிய முதலியவற்றி னுந், தன்மனைக் குரித்தாகிய நற்குணத்தையுடைய பெண்டிருடனும், பிள் ளைகளிடத்தினுந் தன்னைப் பெரியோனென்றசொல்லுங் கீர்த்தியினு முண் டாகும் ஆசையை விரைவில்விட்ட சுத்தரோ, தேவலோகத்தினு மின்பத் தோடு கூடிக் கீர்த்தியைப் பொருந்தி யிருப்பவர்கள். எ-று.

விண்ணினுமென்ற வும்மையால் மண்ணினு மவர்களே நன்மையை யனுபவிப்பார்களென்றறிக. (௯௰)

ஆக்கையிற் றுயர்பெரி தற்ப மின்பமென்
றாக்கையை யறவெறுத் தார்வங் கூர்வரோ
ராக்கையி னாதியே முத்த னுக்கவ
ராக்கையுந் துயரமு மறுப்ப னுணையால்

எ-து. சரீரமெடுத்ததினால் துக்கம் பெரிது, இன்பஞ் சிறிதென்று விசாரித்துத் தேகாதிப் பிரபஞ்சத்தை நன்றாக வெறுத்துத் தேகத்தினி ன்றும் அநாதிமல முத்தனாகிய சிவபிரானுக்கு அன்பு பொருந்தி யிருப்பாரா னால், அச்சிவபிரானும் ஆக்கினாசத்தியினால் யாக்கைக் கேதுவான மலமாயா கன்மமாகிய துக்கத்தை யொழிப்பான். எ-று.

அநாதியே முத்தனுக் கார்வங் கூர்வரேல் என்று கூட்டிப் பொரு ளுரைக்க. (௯௧)

ஆசையானை திருவகைப்படுமென் றுணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆசை தானிரு பேத மேயவை யேய நாதியி லாதவன்
பேசு நூல்விதி பேணி யேசெயும் பெற்றி தான்முதன் மற்றதுந்
தேசு சேர்வினை திர வேவரு சேத னுவிப ரீதமே
யாசி லாவா னுணை யாலவை யாள்வ னேயுட லாளரோ.

எ-து. ஆசை யிரண்டுவகைப்பட் டிருக்கும். அதிலொன்று அநாதி காலந் தொட்டு ஆசையில்லாதிருக்கும் சிவபிரா னருளிச் செய்த வேதாக

மத்தின் வழி தப்பாம னடக்கு மியல்பு, மற்றொன்று நல்வினை நீங்கிய வறிவு மயக்கத்தினு லிதுவே நிச்சயமென்று கருதிச்செய்யுந் தீவினை, ஆசையாற் சரீரத்தை யெடுத்தவர்கள் அந்நல்வினை தீவினை யிரண்டினையுங்குற்றமில்லாத சிவாக்கினையினு லனுபவிப்பார்கள். எ-று. (௩௨)

ஆன்மாவுக்கு முற்கூறிய ஆசை முதலாயினவை நீங்கி வயிராக்கியம் பிறக்கவே மோக்ஷமுண்டாமென்
றுணர்த்துகின்றூர்.

ஆசை மாசற வாக வோற வாண வாதியு மாயவே
பாச நாசக வீச ஞசிவி பாத தாமரை நாண்மலர்
வாச நேசநு பூதி யாவது வாதை யேதுமி லாததே
தேசு தேசமொ ரேக மோசிவ னேசர் பூரண தேசரே.

எ-து. ஆன்மாக்களுக் காசையுண்டாக்குங் கன்மம் நீங்கச் சரீரத்துக்குக் காரணமாகிய மாயையும் வலிகெட வாணவகாரியங்களு நீங்கினவாறே பாசத்தை நசிப்பிப்பவனுந் தனக் காணவாதி குற்ற மில்லாதவனுமான சிவபிரானுடைய சீபாத கமலங்களை யன்புட னனுபவித் திருத்தலே வேறொரு வேதனையு மில்லாதது, அப்படி யவ்வனுபவத்தையுடைய முத்தான்மாக்களுடைய ஞானம் ஏகதேசமன்று. சிவபெருமானைப்போல சருவஞ்ஞத்துவாதி குணங்களோடு கூடி வியாபித்திருக்கும். எ-று.

ஆணவாதி யென்பதனுல் விந்துதிரோதானமுங் கொள்க. (௩௩)

முற்செய்யுளி லான்மாவை வியாபி யென்றதை யிச்செய்யுளிற்
சாதித் துணர்த்துகின்றூர்.

வே று.

ஏக தேசவுட லுற்ற வர்க்கறிவு மேக தேசமல தில்லையே
யேக தேசவுட லற்ற போதுமறி வேக தேசமென லென்சிவ
னேக தேசவுட லற்ற வன்னறிவு மேக தேசமல வாதலா
லேக தேசவுட லற்ற முத்தனறி வேக தேசமல வென்பரே.

எ-து. ஏகதேச வுடலையடைந்த வான்மாக்களுக் கறிவு ஏகதேசமேயல்லாமல் வியாபகம் விளங்காது. ஏகதேச வுடலாகிய பந்தத்தை நீங்கியபோ தறிவை யேகதேசமென்று சொல்லவேண்டுவ தில்லை, அது என்னகாரணத்தா லெனில் சிவன் ஏகதேசசரீர மில்லாதவ னுகையால் அவனுடைய அறிவும் ஏகதேசமன்று வியாபியே; அதுபோல ஏகதேசவுடனீங்கின முத்தான்மாக்க ளறிவு மேகதேசமல்ல சருவ வியாபியேயாம். எ-று. (௩௪)

முத்திக்கு மலக்ஷயம் பிறத்தலே மேலான காரணமென்
றுணர்த்துகின்றூர்.

வேர றப்பணையு மற்று மற்றொழியும்
வேற வற்றுமுதன் மேவுமே

யரா ணத்தினையு மாக மத்தினையு
மாயு மற்பு தன லாரியன்
பேர ருட்பெற வநாதி முத்தனொடு
பேத மற்றநிலை பேறுதான்
கூரி ருட்குழுவு றுத்த றுக்குமுடல்
கூட முத்தனா று கூலமே.

எ-து. மரம் ஒன்று வேரற்றவாறே யதனுடைய கொம்பு பனை காய்பூவெல்லாம் நாசமடைந்து மேலுமுற்பத்தியு முண்டாகாதவாறுபோல, ஆணவமாகிய நிறைந்த விருணீங்கியவாறே யுடல் மலமாயா கன்மத்தோடுங் கூட நாசத்தை யடைந்து முத்தியை யடையும். அதுவென்னெனின் வேதாகமங்களை யையந்திரிபற வுணர்ந்த ஞானாசிரியன் மிகுந்த கிருபைபெற்று அநாதிமலமுத்தனாகிய சிவபிரானோடு கூடி யிரண்டற்ற வயிக்கியமா யிருப்பதே மேலானபேறு. எ-று. தான்-அசை (௯௫)

இப்படிப்பெற்ற முத்தான்மாவின் தன்மையு மவர்கள்
சிருட்டியாதி கிருத்தியங்களைப் பண்ணு
மென்பதூஉ முணர்த்துகின்றார்.

முத்தி பெற்றவ னழுக்க னைத்தினையு
முற்ற விட்டுமுளை யற்றவ
னித்த னுத்தம னிருத்த சுத்தசுக
சிற்க னத்துநிலை யுற்றவன்
புத்த னத்துவித முற்று மிக்கபிர
புத்த னைக்கெழுவு பூரணன்
றத்து வத்தொகைம லத்தொ டற்றுமுடி
லைப்பெ றப்பிறர்ச மைப்பனே.

எ-து. முத்தான்மா ஆணவாதிமலங்களை முழுதும் போக்கி மேற் சனன மில்லாமலிருப்பவன், நித்தியனுமா யுத்தமனுமாய் ஒருபொருளினும் பற்றில்லாத சுத்தனும் சுகஞான சொருபத்தில் நிலைபே றுடையவனுமெக்காலமும் புதுமை செய்திருப்பவனுமாய், அப்பொருள் வகைகளெல்லாவற்றினும் பொருந்திப் பிரபுவுமாயிருக்கிற சிவபிரானோ டயிக்கமாயிருக்கிற அவ்வியாபி கருவி கரணங்களோடு கூடிய தத்துவக் கூட்டத்தையும் ஆணவாதி மலங்களுடன்கூடப் போக்கடித்திருந்தும்மற்ற ஆன்மாக்கள் உடலைப்பெறுதற்குத் தான் சிருட்டிமுதலிய கிருத்தியங்களைப் பண்ணுவானே பண்ணுன். எ-று. ஓகாரம் - எதிர்மறை. (௯௬)

மேன்முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியால்
உணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுபிற வித்துய ரிறப்பல விசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்

வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை யைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-து. வெளி. (௬௭)

மேற்சிவத்துதியுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மூரிவல் லானை முருக்கினனே முதிர்சடை சூடு முருக்கினனே [னே
பாரியோர் பாலுறப் பண்ணினனே பாடிய நான்மறைப் பண்ணின
கூரிரு ளாடிய கொள்கையனே கோல்வளை யார்பலி கொள்கையனே
காரிய காரண னானவனே கரிசறக் காயமுன் னானவனே.

எ-து. ஆங்காரத்தையும் வலியினையும் உடைய யானையின் றோலை யுரித்தவனே, முதிர்ந்த சடாபாரத்திற் பலாசப் பூமாலையைத் தரித்தவனே, பார்வதியாரை ஒருபாகத்தில் பொருந்தவைத்தவனே, நான்கு வேதங்களைப் பாடிய இசையையுடையவனே, மகா சங்காரகாலத்தில் திருநடமே தொழிலாகச் செய்யுங் குணத்தையுடையவனே, அழகிய வளையைத்தரித்த இருடிபத்தினிமாரிடும் பிச்சையை ஏற்குங் கையையுடையவனே, நாதமுதலிய காரியங்களுக்கு நிமித்தகாரணனாயுள்ளவனே, ஆணவாதிதோஷங்களை யறும்படி தகிக்க முதன்மையையுடையவனே. எ-று.

கோலமென்றது-கடைக்குறை.

இதுவுமது.

என்வினை தன்னை யிறுத்தவனே யேதுயி
ரென்ன விறுத்தவனே
முன்மலை வாணா முருக்கினனே முன்னினர்
நெஞ்சு முருக்கினனே
யன்னையு மத்தனு மற்றவனே யகமெனு
மற்பனு மற்றவனே
முன்னொரு வேள்வி முடித்தவனே முதிர்சடைக்
கங்கை முடித்தவனே.

எ-து. யான்செய்த கன்மங்கள் எல்லாவற்றையும் போக்கினவனே, ஆன்மாவின் சொருபம் யாதென்று விசாரிக்கும் அறிவுண்டாக்கினவனே, பிரமனும், மாலும் நானே கருத்தாவென்று மையலுற்றவிடத்தில் தழற் பிழம்பாய்த் தோன்றியவர்கள் அஞ்ஞானத்தைப் போக்கினவனே, தன்னைத் தியானஞ்செய்தவர்கள் உள்ளத்தையு முருகப்பண்ணினவனே, மாதா, பிதாவில்லாதவனே, நானென்னும் அகங்காரத்தையுடைய புல்லியரும் உன்னையல்லாத பிரம விட்டுணுக்களே. தன்னை இகழ்ந்துசெய்த தக்கன் யாகத்தை நாசஞ்செய்தவனே, முதிர்ந்த சடாபாரத்திலே கங்கையைத் தரித்தவனே. எ-று.

அற்பன்-மற்றவன் என்னுமொருமையைப் பன்மையாக்குக. (௬௮)

கந்தன்றுதியுணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தமலை மற்றிட நேசார் தாய்மனை தனையர் மற்றையர் தாமா ரோயென
விமல வித்தக வீறார் வேறறு விதுல சிற்கன தாதா வானவன்
கமலை நற்பதி வேதா வாதியர் கழறெழு பூக்கசி யாளூர் காய்வலி
யமல னற்புத ஞானே றேறிநந் தருள்கு கற்கினி யாளா வாமரோ.

எ-து. தனக்கன்பானவர்க்குத் தங்களுடைய வாணவமுதலிய குற்றம்போகவும் அன்புபொருந்திய தாய், பெண்டீர், பிள்ளைகள் மற்றுமுள்ள பந்துசனங்களை யிவர்களார்? யாமாரென்னும் வெறுப்பு வரவும் மேலாகிய ஞானங் கொடுக்குந் தாதாவுமாய், இலக்குமி நாயகனாகிய திருமால், பிரமன் முதலான தேவர்கள் வந்து விமலனே வித்தகனே ஒப்பிலாதவனேயென்று தோத்திரஞ்செய்து, தன்சீபாதத்தில் வணங்குவதனால் இரக்க மில்லாதவராகிய வித்தியுன்மாலி முதலியோர் முப்புரத்தினையும் எரித்த வில்லினையுடையவனும், மலமில்லாதவனும், அதிசயத்தை யுடையவனும், இடபவாகனத்திலேறிப் பவனி வருபவனுமாயிருக்கின்ற சிவபிரான் அளித்த பிள்ளையாருக்கு, யாமுன்போற் சனனசாகரத்தி லடிபடாம லினி அடிமைப்படுவோம். எ-று. (௭)

அகத்தியர்துதியுணர்த்துகின்றார்.

மருவி யுற்றனை நீயே நீயலை மருவு வித்தது மாதா வாருயி
ரிருள றுத்தனை நீயே நீயலை யெனவெ னக்கிய லீவா னேயவன்
மாவ முற்றிய வாசார் காரகின் மலிய நற்றவர் மாடே நீடிய
வருவ னைப்பயி லாறு மாதவ னருள கத்திய ஞானு ருகமே.

எ-து. குங்குமமும் விளைந்து மணம் அமைந்த காரகிலும் நெருங்கி நல்ல தபோதனர்களும் பக்கத்தில் நெருங்கி அரிய பொதியிலில் நீங்கா திருக்கு மிக்க தவத்தினை யுடையவனும் கிருபையை யுடையவனும் முப்பத்தாறு தத்துவமே சரீரமாக வுடையவனுமாயிருக்கும் அகத்தியனே, இத்தேகத்திற் கிடப்பவனும் நீயேயோ நீயன்று. இத்தேகத்தை யுண்டாக்கினது மாதாவுமல்லள், உடலினாலுண்டாகிய ஆணவத்தை நீக்கினதும் நீயேயோ நீயல்லவென்னும் வாக்கியத்தை எனக்குத் தெரிவித்தவன். எ-று.

நீயோ நீயல்லவென்று ஆன்மாவைக் கருதி வினாவுவதனாற் கூட்டி முடிப்பான் கருத்தாவென்று கருதிற்று. ஆனமை-விட்டு நீங்காமை. (௱௧)

எட்டாவது

சனனமரணவியல்.

முற்றிற்று.

சிவமயம்.

## ஒன்பதாவது

# சுவர்க்க நரக சேட வியல்.

மேலிவ்வோத் தென்னுதலிற்றோவெனின் ஒத்துநுதலியதூஉ மோத்தினது பெயருரைக்கவே விளங்கும். ஆயினிவ்வோத்தென்ன பெயர்த்தோ வெனின்சுவர்க்கநரகசேட மனுபவித்தற் கெடுக்குஞ் சரீரத்தைக் கூறிற்று ஆகையாற் சுவர்க்கநரகசேட வியலென்னும் பெயர்த்து. முன்னையியலிற் சனனமரண துக்கங்களைக் கூறிப் பூமியில் இருவினைக்கீடாகச்சுவர்க்கநரகசேட மாகிய சரீரங்களை யெடுக்கு மிலக்கணங் கூறினமையாலதன் பின்னிதனை வைத்தார். இதனுள் இத்தலைச் செய்யுளொன் றுதலிற்றோவெனின் நல்வினை தீவினைகளைச் செய்தவர் உயர்ந்தசாதி தாழ்ந்தசாதியிலே தோன்று முறைமையைத் தொகுத்துணர்த்த னுதலிற்று.

கலிவிருத்தம்.

புண்ணியர் விண்ணவர் தம்புரி புக்கே
மண்மறை யோர்குல மாய்வரு மாறும்
பண்ணினர் தீவினை பாதல முற்றே
தண்ணிய ராகையு மின்றுசை மைப்பாம்

எ-து. அகத்தியமுனிவனே புண்ணியத்தைச் செய்தவர்கள் சுவர்க்கலோகத்திற் சென்று, அங்குள்ள போகம் புசித்துத் தொலைந்தவாறே பூமியிற் பார்ப்பார் முதலிய நற்குலத்தில் வந்து பிறக்கு முறைமையையும், பாவத்தைச் செய்தவர்கள் நிரயத்தி லழுந்தி யாங்குள்ள துன்பங்களை யனுபவித்துத்தொலைந்தவாறே தாழ்ந்த குலத்தில் வந்து பிறக்கு முறைமையையு மிப்போ துனக்கு யாம் சொல்கின்றோ மதனைக் கேள். எ-று. (க)

நிறுத்தமுறையானே புண்ணியஞ் செய்தவர் பூமியில் வந்து நல்லகுலத்திற் பிறந்து சற்கன்மத்தை யடைந்து மோக்ஷமடையு முறைமையை மூன்று செய்யுளா லுணர்த்துகின்றார்.

வேதக ஞேதிய வேதவி திக்கே
சாநகர் வானவர் தம்புரி புக்கே
மோதக ராயதன் வாழ்வு முடித்தே
வேதிய ராவர்கண் மேதினி மீதே.

எ-து. ஆன்மாக்களுக் கறிவை விளக்கச் சிவபிரா னருளிச் செய்த வேதாகமத்தின் வழியே யனுட்டித்தவர்கள் சுவர்க்கலோகத்திற் சென்றுசந்

தோடத்தை யுடையவரா யாண்டுள்ள போகங்களை யனுபவித் திருந் தப்போகந் தொலைந்தவாறே பூமியிற் பிராமணராய் வந்து பிறப்பார்கள். எ-று.

மோதகம். சந்தோடம். (உ)

முன்னைய நல்வினை வாதனை மூளத்
துன்னுவர் நூல்விதி யான தொடர்ந்தே
யென்னிலர் மண்மிசை நல்வள மீயத்
தன்னிக ரில்லிதன் னுனை தரித்தே.

எ-து. முற்சனனத்திற் செய்த புண்ணியத்தின் வாசனையா லிச்சனனத்தும் வேதாகமங்களை யோதி யதன் வழியை யறிந் தனுட்டித்துத் தனக்கு நிகரில்லாத சிவபிரானுடைய விபூதி கண்டிகை முதலிய சைவ சின்னங்களைத் தரித்துச் சிவார்ச்சனை செய்து பூமியில் எண்வகை ஐசுவரியத்தையு முடையவரா யிருப்பார்க ளாகையால் தன்பால்வந் திரப்பவர்க் கீவதற் கவர்களுக் கெதுதான் குறைவு. எ-று.

எண்வகை ஐசுவரியமாவன இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பனவாம். (௩)

முற்றுவர் நல்வினை முற்றிய பின்னர்ப்
பற்றுவர் வானுய ரும்பதி பற்றித்
துற்றுவர் போகவி தம்பல துற்றிப்
பற்றுவர் பற்றற விசன பாதம்.

எ-து. இவ்வாறு பூமியிற் சற்கன்மத்தையே செய்து கொண்டிருப்பார்கள். பின்ன ரப்புண்ணிய பரிபாகம் பிறந்தவாறே மேலான சிவலோகத்திற் சென்று நானாவிதமாகிய போகங்களைப் புசித்திருப்பார்கள், இவ்வாறதை அனுபவித் தப்போகத்தில் வயிராக்கியம் பிறந்தவாறே வேறொன்றினும் விருப்ப மற்றுச் சிவபிரானுடைய ஸ்ரீபாதகமலங்களையே சேர்வார்கள்.

மேனிறுத்தமுறையானே பாவத்தைச் செய்தவர் நரகத்திற் கிடந்
தழுந்தி மீண்டும் பூமியிற் பிறக்கும்போது தாங்கள் செ
ய்த கன்மத்துக் கீடாகிய சரீரங்க ளொடுப்பா
ரென்பதை யிரண்டு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஈட்டினர் பாவ பேத மிரக்கமி லியம தூதர்
கூட்டிய நரக பேதக் குழிவிழுந் தழுங்கி யாழ்ந்து
மீட்டுமண் ணிழிந்த யோனி விதமெலாம் விரவி முன்ன
மீட்டிய வறத்தி னுனு நர்தனு வெடுக்கும் போதும்.

எ-து. முற்கூறிய அதிபாதக முதலிய பாவங்களைச் செய்தவர்கள் கசிவில்லாத எமதூதர்கள் செலுத்திய இருபத்தெட்டுக்கோடி நரகக்குழியி

னும் விழுந் தழுந்திக் கிடந்து துயரமடைமந்து மீளவு மிப்பூமியில்வந் தினையோனியாகிய தாவரமுதலிய ஐவகை யோனியையு மெடுத்துத் தொலைந்தவாறே முற்சனனத்திற் செய்த சற்கன்மவாசனையினான் மானிடதேகமெடுக்கும் போதும். எ-று

அறத்தினாலுமென்ற வும்மையால் மறத்தினாலு மென்பதூஉங் கொள்க. தனுவெடுக்கும்போது மென்றவும்மையாற் றனுவெடுத்த லரிதென்க.

வஞ்சக மனத்த ராயும் வாக்கினை யிழந்தா ராயுஞ்
செஞ்சொலைக் கேட்கு மற்றைச் செவியினை யிழந்தா ராயு
நஞ்சிட வழுகு நோயி னடலைமெய் யுடைய ராயுந்
தஞ்செயற் கிசைய வானை வழியினிற் சரிப்பர் தாமே.

எ-து. வேதாகமங்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமென்னும் இயல்பைவிட்ட வான்மாக்கள் கன்மானு குணமாய்க் கற்பித்த கடவுள் பிரோரகத்தினால் தத்தமனத்துக் கேற்றபடி நடந்த பாவிகளாயினோர்,வஞ்சகமனத்தை யுடையவராயு மூமராயுஞ், செவிடராயுஞ் சரீரத்தினழுகு கண்முதலிய வியாதியைப் பொருந்தி அதனால் துக்கத்தை உடையவரரயும் இப்படியே பலபல வடிவெடுத் துழல்வார்கள். எ-று. (சு)

மேலதிபாதக முதலிய பாவஞ் செய்தவர்கள் நரகசேடத்துக் கிடா
கப் பூமியில் அதததற்கேற்ற வடையாளங்கள் பொரு
ந்தி அவ்வுடலினிடத் தெய்துந் தீவினைப்பயன்
களை முப்பத்தைந்து செய்யுளால்
உணர்த்துகின்றார்.

உறவுமா யுயிர்கட் கெல்லா முயிருமா யொழிவி லாத
வறவனை யானை நெஞ்சத் தணிட்டரு மவல வாக்கை
பிறவிநோய்ப் பிணியைத் தீர்க்கும் பெருமைய குரவன் றன்னைக்
கறுவிய மனத்தி னாலே கரிசுறுங் கடையர் தாமும்.

எ-து.எல்லாவான்மாக்களுக்குஞ்சுற்றமும் உயிர்க்குயிராயவர்களிடத்திரண்டற வியாபித்து நிற்பவனும் புண்ணிய சொரூபியுமா யிருக்கிற சிவபிரானைத் தூடணித்து அவனிடத்தில்அன்பில்லாதநெஞ்சையுடையதுபாவிகளும், பொல்லாத வுடலையுடைய பிறவிப்பெரும்பிணியைத் தீக்கையினாற் சேதிக்கும் பெருமையினையுடைய் ஞானாசிரியனையும், வெறுப்பினையுடைய மனத்தினால், அவ்வண்ண மெண்ணும் பாவிகளும். எ-று. (எ)

மலத்தினுட் கிருமி யாகி மாண்டுமாண் டுதித்து மாறு
வலக்கணுற் றுழ்வார் நிந்தை யறைந்தவர் யாவ ராலும்
விலக்கரும் விதன முற்று முயலகன் வியாதி மேவிக்
கலக்கிய வுளத்த ராகிக் கதறியே கழிவார் தாமே.

எ-து. மலத்திற் புழுவாய்ச் சனித்துச்சனித் திறந்தொழியாத துக்கத்தையடைந்துகிடப்பார்கள்.சிவபிரானையும்,குருவையும்,குருபுத்திரனையும்

நிந்தைசொன்னவர்கள்முயலகனென்னும் வியாதியையடைந்துஒருவராலும் தடுக்கப்படாத துக்கமடைந்து கலங்கிய மனமுடையவராய்க் கதறிக்கொண்டு திரிவார்கள், எ-று. (அ)

கருத்துட னேவல் செய்யாக் கரிசர்கள் குரவன் காதை
திருத்தினுந் திருந்தா வுள்ளத் திமிரோ யாவ ரேவல்
கருத்துறச் செய்வார் தம்மைக் கலைத்தவன் கோம்பி யாவான்
சிரத்துநோ யடைவான் றானுஞ் சினப்பனேற் சினத்த போதில்.

எ-து. ஆசிரியரேவலைச் செய்யப்பெற்றோ மென்று மனத்துடன் செய்யாத பொல்லாதவர்கள், ஆசிரியர் இதிகாசமுதலிய புராணத்தைச் சொல்லிக்காட்டிப் புத்திசொல்லினுங் கேளாத மனக்கோணலை யுடையவராய்ப் பிறப்பார்கள். அவரேவலைச் செய்யும் மாணாக்கரைக் கலைத்தவன் ஓந்தியாய்ப்பிறப்பான். ஆசிரியரும் பிராமணருங் கோபித்தபோது தானுமவரைக் கோபித்தானானால் அவன் மண்டை வியாதியையுடையவனாயிருப்பான். எ-று. காதை, எ-து. இதிகாசபுராணங்களை.

அந்தணன் றன்னைக் கொன்றா னருங்கய ரோகி யாவான்
றந்தமும் பழுதே யாகுந் தணியலை யருந்தி னார்க்குச்
சிந்திய குஷ்கி யாவன் செம்பொனைத் திருடி னானுங்
கொந்திய குட்ட நோயன் குருமனை குழுவி னானே.

எ-து. பிராமணனைக் கொன்றவன் சயரோகமென்னும் வியாதியையடைவான், மதுபானம் பண்ணினவன் சொத்தைப்பல்லை யுடையவனாய்ப் பிறப்பான். பொன்னைத் திருடினவன் பலகாலும் அறுக்கப்பட்ட சொத்தை நகத்தையுடையவனாய்ப் பிறப்பான். குருதாரகமனம்பண்ணினவன் குடாரியாற் கொத்தப்பட்ட குட்டவியாதியை யுடையவனாய்ப் பிறப்பான். எ-று. (ம)

பாம்பெனு மொருவன் றன்னைப் பரித்திடும் பகைக்கு மஞ்சித்
தேம்பியே திரிவன் றெய்வத் திரவியங் கவர்ந்த தீம்பன்
பாம்பணைப் பள்ளியானைப் பழிமொழி பகர்ந்த பாவி
யோம்பியா யுதர வங்கி கூர்ந்திடக் குலையு மன்றே.

எ-து. சிவத்திரவியங்களை அபகரித்தபொல்லாதவன் பாம்பாகப் பிறந்து தன்னை யடித்துக்கொல்லும் பகையாகிய கருடன் முதலியவற்றிற்கும் மானிடர்க்கும் பயப்பட்டுக் காட்டிற்கிடந்து தேம்பித் தேம்பித்திரிவான். அநந்தகத்தைப் பாயாகக்கொண்டு துயில்கொள்ளும்மாயனை நிந்தைசொன்ன பாவி ஓந்தியாய்ப் பிறந்து, உதராக்கினி மேலிட்டு, அதனாலே நடுங்குவான். எ-று.

பறைந்தவ னாயி னேனும் பழுதுறு பதித னேனும்
புறம்புறு புலைய னேனும் புறம்புறு புலைய னாவான்

அறந்தனை மறந்த பாவி யவினொடு மிருதுவாகி
உறைந்திடு மவளைக் காமுற் றுவகையோ டுரைத்தான் றானும்.

எ-து. நாயுடனும் குற்றத்தையுடைய விரதபங்கனுடனும் நீசனுடனும் அததற்கேற்ற கர்மத்தைச் செய்யாதொழிந்த பாவியுடனும், இருதுவானவளுடனும் ஆசைகொண்டு, மகிழ்ச்சியுடன் வார்த்தைசொல்லுவானும், நீசனாய்ப் பிறப்பான். எ-று. (௰௨)

கருவினு ளழிவன் முற்றிக் கழிந்துட னழிவன் காளைப்
பருவமுற் றழிவ னீகை பகர்ந்துபின் னுதவாப் பாவி
பெருவலைக் கண்ணி யாலும் பிடித்துயிர் வதைத்த பேதை
கருதிய பொருளைத் தக்கோர்க் குதவிடான் றிளைத்த கையன்.

எ-து. ஒருவருக் கொருபொருளைக் கொடுப்பதற் கிசைந்து பின்னே கொடாதவன் மாதாவின் கருப்பத்தில் நாசமடைவான். பெரிதாயிருக்கிற வலையினாலுங் கண்ணிகளினாலும் மிருகம், பட்சி முதலியவைகளைப் பிடித்துக் கொன்ற அறிவில்லாதவன் கர்ப்பமுற்றிப் பூமியிற் பிறந்தவுடனே நாசமடைவான். தபோதனர்க்கென்று நியமித்த பதார்த்தங்களை அவர்களுக்குக் கொடாமல் தானே யபகரித்த வஞ்சகன் போகம் நுகரும் பருவத்திலே யிறப்பான். எ-று. (௰௩)

அவயவ மனைத்துங் குன்றி யழிந்திடு மாக்கை யாருன்
சுவையினை விரும்பி யுண்ட துட்டர்கள் சோலை தன்னைத்
திவலைய திரைநீர் தேங்குந் திண்ணிய தீரந் தன்னை
யவமதி யாலே சால வழித்திடு மறபர் தாமும்.

எ-து. முற்சனனங்களில் மாமிசத்தை விரும்பிப் புசிக்கும் பொல்லாதவரும், தோப்பினையு நிறைந்த நீர்தேங்கித் திவலைதெறிக்க அலையெறிகின்ற திண்ணியதாகிய ஏரி, குள முதலியவற்றின் கரைகளையும், புத்தியின்மையாலே வெட்டியழிக்கு மறபருங், குட்டவியாதியை அடைந்து உறுப்புக்களெல்லாங் குறைந்து நாசமடையும் தேகமுடையவராய்ப் பிறப்பார்கள். எ-று. (௰௪)

ஐவகை யாகத் தொன்று மாக்கிடா தருந்தி னானும்
தெய்வமே கொழுந னென்று தெளிந்தவச் சிந்தை யறற
தையலைக் காமுற் றானுந் தணந்துகற் புடையா டன்னைப்
பொய்முயக் கியைாப் புல்கும் புலையனும் பன்றி யாவான்.

எ-து. தெய்வயாகம், பிதிர்யாகம், பசுயாகம், மானுடயாகம், பிரமயாகம் என்று கூறப்பட்ட ஓமம்வளர்த்தல்முதலிய ஐவகை யாகங்களில் தனக்கியன்ற தொன்றைச் செய்யாமற் புசித்தவனுந் தன்கணவனே தெய்வமென்று கொண்டு வேறு விகாரபுத்தியை யொழிந்த உத்தமியை யாசைப்பட்டவனும் பதிவிரதையாகிய மனைவியைவிட்டுப் பொய்யை மெய்யாசவே

சொல்லிப் பசப்பும் பொதுமடவாரைக் கூடும் பாவியாகிய பொல்லாதவனு முட்பன்றியாய்ப் பிறப்பான். எ-று. (௰௫)

ஒருகுடிப் பிறந்தாள் போக முகந்தவ னூர்நா யாவான்
றருமமே யெமக்கு மோக்குந் தனந்தரு வானே னென்று
கருணையா லன்ன சாலை காப்பது கற்ப லாது
பொருளினை மதித்துச் செய்தான் புலையனு நாயு மாவான்.

எ-து. அன்னிய கோத்திரத்திற் பிறந்த கன்னிகையை விவாகஞ் செய்யாமல் தன்கோத்திரத்திற் பிறந்த கன்னிகையை விவாகஞ்செய்தவன் ஊர்நாயாய்ப் பிறப்பான். தனங்கொடுத்துத் தருமஞ்செய்யுங் கருத்தாவுக்கும் அவர் கையில் தனத்தை வாங்கித் தருமத்தைக் குறைவற நடத்தும் நமக்கும் புண்ணிய மொக்குமென்று எண்ணி அன்னசத்திர முதலியவற்றைக் கிருபையாய் விசாரிப்பதே முறைமையல்லாமல் தனக்கொரு பிரயோசனம் எண்ணி விசாரிப்பவன் சண்டாளனாய்ப் பிறந்து பின்பு நாயாகவும் பிறப்பான். (௰௬)

வேறு.

இம்மைப் பயனைக் குறியாதே யிறைவன் றிருவா லயமதனுட்
செம்மை சிறக்க மாபூசை செய்விப் பவரே சிறப்புடையார்
இம்மைப் பயனைக் குறித்தியற்று மதிகா ரியர்நா யுடலெடுப்பர்
புன்மைப் புலைய னுடலும் பொருந்தி விடுவார் புகழினையே.

எ-து. இம்மைப் பயனாகிய திரவிய முதலியவற்றை எண்ணாமற் சிவபிரானது ஆலயத்தில் வைபோகமாய் மகாபூசைகளைச் செய்விப்பவர்களே மறுமைப்பயனை அடைபவர்கள். இம்மைப்பயனைக் குறித்துச் சிவபிரானது காரியங்களை விசாரிப்பவர் தம்கீர்த்தியையும் ஒழித்து நாயாய்ப் பிறந்து பின்பு சண்டாளராயும் பிறப்பார்கள். எ-று. (௰௭)

எங்கள் குரவன் பெரியனென வெண்ணு மதுகற் பதுவல்லா
னுங்கள் குரவ னெய்யனென நுவலும் பரிவா தவர்தாமும்
பங்கு பதத்தர் விழியிழந்து பார்வை தனையு மிழந்தார்கள்
அங்க ணவற்றைக் கேட்டார்கள் கேள்விப் புலனற் றவர்தாமே.

எ-து. ஒருவர் தம்முடைய குருவைப் பெரியவரென எண்ணியிருப்பதே முறைமை, அதுவல்லாமற் பிறரைநோக்கி உம்முடைய குரவரொன்றும் அறியாரென்று சொல்லு மகாபாதகரு முடவருமாய் உருவமுதலியவற்றைப் பார்க்கக் கண்ணில்லாத குருடருமாயும் பிறப்பார்கள். அவ்விடத்திலந்தக் குருதூடணத்தை மனங்களிக்கக் கேட்டிருந்தவர்கள் செவிடராய்ப் பிறப்பார்கள். எ-று.

பரிவாதம்-குற்றஞ்சொல்லுதல்; இது வடமொழி. (௰௮)

கண்ணிலாக் கிருமி யாவன் கருத்தினு ளையவ னென்றே
யெண்ணினன் குரவன் றன்னை யிடர்ப்படக் குய்யந் தன்னிற்
புண்ணையு முறுவன் பின்பு புகன்றவ னபவா தத்தைக்
கண்ணுளத் திலனே யாகிக் காத்தினைக் காப்ப னன்றே.

எ-து. ஞானசிரியனை யற்பனென்றுமனத்தில் விசாரித்தவன் கண்ணில்லாத புழுவாய்ப் பிறப்பான். மற்றைச் சனனத்தில் மானிடனாய்ப்பிறந்து குய்யத்தில் வியாதியையடைவான். அவ்வாசிரியர் செய்யாத கருமத்தைச் செய்தாரென்று பொய்மொழி சொன்னவன் அறிவற்ற மனத்தையுடையவனாய்ப் பிறந்து கழுதை மேய்த்துக்கொண்டு திரிவான். எ-று. (௰௯)

பரமனுங் கருத்தா வேவற் பற்றிய கருத்தாத் தேவர்க்
குரிமையிற் பூசை மற்று முஞற்றிடா னூனத் தாலே
வரமறு மலிய னவன் வாய்த்தகற் சுற்றத் தார்க்கு
முருகிடா தொழிந்தான் கண்டு மிடியனு முறுவன் கண்ணோய்

எ-து. முதன்மையான அரசன் ஏவலில்நிற்பவ னவ்வரசன் கற்பித்தபடி சிவபிரான் முதலிய தேவர்களுக்குப் பூசை திருநாள் நடத்தாத குற்றத்தால் சிறுமையுடைய அலியாய்ப் பிறப்பான். அச்சிவபிரானடியார்க்கு மனமுருகாமல் கண்டொழிந்தவன் வறியனுமாய்க் கண்ணோயுமடைவான். எ-று. (௨௰)

விருந்தினை யருந்தா துள்ளே யிற்றிருந் தடிசி லுனே
யருந்தினன் கபோல நோய னருந்தவர்க் கருத்தா முன்னுன்
அருந்தியே யவரைப் பின்னை யருந்திய வவனே நெஞ்சின்
வருந்தவே மருவு நோயன் மாறுமோ மருந்தி னாலும்.

எ-து. தன்மனையினிடத்துப் புதிதாய்வந்த அதிதிகளைப் புசிப்பியாமல் தானொருவனா யுள்ளேயிருந்து அன்னபானாதிகளைப் புசித்தவன், சன்னத்திலே வியாதியையடைந்து துயரமடைவான். அரிய தபோதனர்களைப் புசிப்பிக்குமுன் தான் புசித்து பின்பவர்களைப் புசிப்பித்தவன் நெஞ்சிலே களரோகமென்னும் வியாதியை அடைந்து துக்கத்தை யடைவான். அவ்வியாதி மருந்துகளினாலும் போமோ போவதல்ல. எ-று. (௨௧)

ஓதன மொளித்துக் கொண்டா னுதரமந் தாங்கி யாவன்
வாய்தனிற் புண்ணு மாவன் வழக்கிடைக் கூடமாக
ஈதிவன் செய்தா னென்றே விளம்பிய விழுமை தானும்
வாய்தனிற் புண்ணே யாவன் வாக்கினால் வழுக்கலாலே.

எ-து. பரிவாய் அவ்வன்னத்தைத் திருடிப் புசித்தவன் மூலாக்கினி சொலியாதவனாய்ப் பசியில்லாமலிருப்பான். அதுவல்லாமல் வாயில் புண்ணையும் பொருந்துவான், வழக்குச் சொல்லுமிடத்து ஒருபாலுள்ளாசைகொ.

ண்டு ஒருவர் செய்த குற்றத்தை இன்ன திவர்செய்தாரென்று விளங்கச் சொல்லாமல் மறைவினாற் சொன்ன வறிவில்லாதவனும் வாயினால் வழுப்படக் கூறுதலாலவ் வாயில் புண்ணையடைவான். எ-று. (௨௨)

கண்டனி ணோயு மாவன் காறனிற் புண்ணு மாவன்
கொண்டநோய் கண்டு தன்னைக் குறுகிய பெரியோர் தம்மை
விண்டவன் பிதாவைத் தாயை விரும்பிய சுற்றத் தாரைப்
பண்டையோர் தமையும் நெஞ்சி லிரக்கமும் பாங்கு மற்றே.

எ-து. ஒருவனொரு வியாதியைக்கொண்டி தனைப் போக்குபவர் யாவரென்று தேடித்தன்பால் வந்த பெரியவரையுந் தன்மாதா பிதாக்களையுந் தன்னிடத் தன்பினையுடைய சுற்றத்தாரையுஞ் சினேகரையு மிரட்சியாமல் மனத்திற் கிருபையையு முரிமையையு மொழித்துத் தள்ளிவிட்டவன் கண்ணோக் காட்டினையுங் காலில் புண்ணையுமுடையனாய்த் துக்கத்தையடைவான். எ-று. (௨௩)

சொற்றவிப் பலன்க டம்மைத் துன்னுவன் சோரன் சோரற்
குற்றுடன் பட்டான் றானு முரைத்தவ னுபாயி தானும்
பத்தினி பலருட் பக்க பாதத்தை யொருத்தி பாலே
முற்றின னலிய னென்னு முடையுட லெடுக்கு மூடன்

எ-து. பிறர் சொத்தைக் கவருங் கள்ளனும் அக்கள்ளனுக்குத் துணைச்சென்றவனும் அதற் குபாயஞ் சொல்லிக் கொடுத்தவனும் முன்சொன்ன கண்ணோக்காட்டினையுங் காலில் வியாதியையும் அடைந்துஅதனாற் றுக்கத்தை யடைவான். தனக்கு மனைவிகள் பலவுண்டாயிருந்தால் எல்லாரையுஞ் சமமாக நடத்ாது ஒருத்தியிடத்தில் தானே மிகுந்தபட்சபாதத்தையுடையவனா யிருக்கிற அறிவில்லாதவன் நாற்றமுள்ள தேகத்தை யெடுத்தவியாய்ப் பிறப்பான். எ-று. (௨௪)

வெள்ளிபட் டாடை தன்னை விரும்பியே யெடுத்த கையன்
கொள்ளுமே குட்ட நோய்நீர்க் கோவையென் னுதர நோயால்
உள்ளமு மொல்கி வாடு முதகநீர்ப் பந்தர் தன்னை
நள்ளசத் திரத்தை நல்லார் நடுக்குற நாசஞ் செய்தான்.

எ-து. வெள்ளியையும் பட்டுப்புடைவை முதலிய துகிலினையு மாசைப்பட்டுத் திருடிய பொல்லாதவன், வெள்ளைக் குட்டமென்னும் வியாதியை யடைவான். தண்ணீர்ப்பந்தரையும் நல்ல அன்னசத்திரங்களையும் பெரியோர்கள் துயரமடைய அழித்தவன் - நீர்க்கோவையென்னு முதரவியாதியை யடைந்து அதனாலுள்ளமெலிந்து துக்கத்தை யடைவான். எ-று.

புலையனே யாவன் கோவி லூதிநா சிகனே கோளன்
கலகமே விளைத்தான் கண்ணைக் காட்டியுங் கையினாலும்
வலமறு மழுகல் வாயன் வனத்துமா சனமே யாவன்
விலைசெய்வா னீயந் தன்னைப் பித்தளை கவரி வேறும்.

எ-து. மிக்க கோபத்தையுடையவன், சண்டாளனாய்ப் பிறப்பான், கோட்சொல்லுபவன், சீயினால் நாற்றத்தையுடைய நாசியையுடையனாவான். நயனபாஷை இறைபாஷை முதலியவற்றால், ஒருவனுக்குச் சண்டையை மூட்டினவன் நன்மையில்லாத துர்க்கந்தத்தையுடைய வாயையுடையனாவான். ஈயம் பித்தளை சாமணை மற்றுமுள்ள பதார்த்தங்களையுந் தத்தமக்கேற்ற தொழிலில்லாதோன் விற்றால், அவன் மலைப்பாம்பாய்ப் பிறந்து துயரமடைவான். எ-று. (உசு)

செலலுறு மென்று மால வட்டமுந் திருடுந் தீம்பன்
வலமில னேனுந் தன்னை மதித்துவா மனனே யாவன்
கொலைவிடை யூர்தி புண்ணு மனையுறக் குலைந்து நோவ
னலலுறும் பிறவி யந்த னாவினை வதைத்த வற்பன்.

எ-து. ஆலவட்டமும் விசிறியுந் திருடிய பொல்லாதவன், எந்நாளுந் துயரத்துக் கிருப்பிடமாய்த் துயரமேயடைவான், தானொன்றிலும் வளமில்லாதவனா யிருந்தும் யானதற்கு வல்லேனிதற்குவல்லேனென்று தன்னைப் பெருமைபண்ணிக் கொள்ளுகிறவன் மிகவுங் குள்ளனாய்ப்பிறப்பான். இடபத்திலேறித் திரிபவன், கடித்தலத்திற் புண்ணையடைந்து அதனால் நடுங்கி வருத்தத்தை யடைவான். பசுவை வதைத்த வற்பன், பிறவிக் குருடனாய்ப் பிறந்து அதனால் துக்கத்தை யடைவான். எ-று. (உஎ)

கோவினைத் துக்கஞ் செய்தான் கோணிய நாசி யாவன்
கோவினுக் கிரக்க மில்லான் கூறிடிற் சிபுட னாவன்
காவியங் கண்ணி நீங்காக் கற்பின ளவள்பாற் காதல்
ஓவினன் களத்தி னீங்காக் கழலையை யுடைய னன்றே.

எ-து. பசுவைத் துயரமடைவித்தவன் கோணன் மூக்கினையுடையனாய்ப் பிறப்பான். சகல தேவருக்கு மிருப்பிடம் பசுவாதலாற் பசுவினிடத்திலே இரக்கமில்லாதவன், உள்ளே கொப்புளத்தையுடைய மூக்கையுடையனாய்ப் பிறப்பான். கழுநீர் மலர்போன்ற கண்ணையுடைய பதிவிரதா தருமம் விடாதவளிடத்தி லன்பில்லாத கணவன் கண்டத்தி லொழியாதகழலையை யுடையனாவான். எ-று. (உஅ)

விற்றவன் சோமந் தன்னை வேட்டைவார் வேட னாவான்
ஆற்றினன் கடத்திற் கூலி வேலைசெய் தூரிச னாவான்
கற்புறு மானை தன்னைக் காப்பவன் றயிலந் தன்னை
விற்பவன் றானுங் கூலி விரும்பியிற் கொடுத்த வீணன்.

எ-து. யாகாதி கருமநிமித்தமாக ஆட்டாங்கோடியை விற்றவன் வலைமுதலியவற்றால் வேட்டையாடும் வேடனாகப் பிறப்பான்; சட்டிபானை முதலியவற்றிற் புசித்தவன் கூலிவேலைசெய்யும் பாவியாகப்பிறப்பான். வாணியனல்லாம லெண்ணெய் விற்றவனுங் கூலிக் காசைப்பட்டு வீடுகொடுக்கும் வீணனும் யானைப்பாகனாகப் பிறப்பான். எ-று. (உகூ)

களத்தினிற் கண்டமாலை கழித்தலுன் முதலுண் கல்ல
னுளத்திலன் பொழித்து நூலை யோதினன் மூக னாவான்
தளத்தியல் கோசந் தன்னைத் தற்கான் சாத்தி யந்தன்
பளக்குமூக் குடையான் பாங்கார் தருமநூல் பழித்த பாவி.

எ-து. சாத்திரத்தில் மன்னர் முதலானவருக் காகாதென நீக்கிய மாமிசத்தையும் உள்ளிமுதலாகிய பதார்த்தத்தையும் புசிக்கும் பொல்லாதவன், கழுத்திலே கண்டமாலையென்னும் வியாதியைப் பொருந்துவான். ஆகம புராணங்களை யுள்ளத்தில் சிரத்தையில்லாமல் ஆசிரியரிடத்தி லாதாயத்தினாலோதினவன் ஊமையாய்ப் பிறப்பான். ஆகம சாத்திரங்களை எழுதிய திருமுறையைத் திருடினவன் பிறவிக்குருடனாய்ப் பிறப்பான். சிவாகம முதலிய வுரிமையான நூல்களைப் பழித்தபாவி கொப்புளத்தை யுடைய மூக்கையுடையவனாவான். எ-று. (௯௰)

கற்புளார் செயலை நொய்து கழறினன் காக்கைக் கண்ண
னற்றவர் தேவர் ஞான யோகர்நல் லறஞ்செய் வார்கள்
மற்றுமுத் தமர்பா லன்பு வைத்திலன் கோணல் வாயன்
பற்புழுப் பயிலு நோயன் பழுதுரைப் பவனீ வார்பால்.

எ-து. பெரியவர்கள் அனுட்டித்த வாசாரத்தை நொய்மையாய் நிந்தித்தவன் மாறுகண்ணனாவான். நல்ல தபோதனர்கள், தேவர்கள், ஞானயோகிகள் மிகுந்த புண்ணியத்தைச் செய்பவர்கள் மற்றுமுள்ளபார்ப்பார் முதலிய வுத்தமரிவர்களிடத்துக் கிருபையில்லாதவன் கோணல் வாயையுடையவனாவான். ஒருவர்க் கொன்றைக் கொடுப்பவர்களிடத்துக் கொடாதபடி விகாதம்பண்ணினவன் பல்லிலே புழுவுடைத்தாகிய நோயையுடையவனாவான். எ-று. (௯௧)

சலமெனும் வாதி யாவன் றகைபெறு சமயந் தன்னை
நிலைகுலை செய்தான் கள்ள நீசனா நேசஞ் செய்து
கொலைவிலக் கிடுவா னானுங் கோணிய வழக்குக் கூறும்
புலையனும் பொருந்தி மன்றிற் புந்தியிற் புன்மையாலே.

எ-து. தகைமைப் பாட்டையுடைய சைவசமயத்தைப் பேதித்தவனும், சோரராகிய ஈனரை அரசன் ஆக்கினை செய்கையில் பட்சபாதத்தினாலவனை விடுவிக்கிறவனும், இராசசபையிலேயிருந்து செவ்வையாக வழக்கைச் சொல்லாது தன்புத்தியிற் பொல்லாங்கினால் வழக்கல்லா வழக்கைச் சொல்லு மீனனும் சலவாதியாவான். எ-று. (௯௨)

எளியரை வதைத்த வந்த வினிகை காலு மில்லான்
களவிலர் வடியார் தம்மைக் கறுத்தொறுந் தவன்கை காலுந்
தளர்வுறக் குட்ட நோயுந் தாங்கிய வுடல னாவான்
விளிபவன் கொண்ட நோன்பு விடிமுந் துழல்வன் வேறே.

எ-து. ஏழையாயுள்ள பெயனை அவரிடத் தபராதமில்லாமல் வதைத்த பொல்லாதவன் கை கால் முதலியவுறுப்புகள் குறைந்தவனுவான். களவில்லாத வடியானைக் கள்ளனெனக் கருதிக் கோபித்தடிப்பவன் கைகாலுந், தளர்ந்து குட்ட வியாதியையு முடையவனுவான். தான் சங்கற்பித் தனுட்டித்து வந்த விரதங்களை இடையே விட்டவன் தானிருந்த வீட்டையிழந்து வேருயுள்ள விடங்களில்போய்த் திரிந்துழல்வான். எ-று. (௫௩)

நீடிய மனைவி யல்லான் மற்றைநே ரிழையா ரோடு
கூடிவெஞ் சதுரங் காதி யாடிய கொள்கை யாளன்
கேடுறு முடலி னற்ப கேசியே யாவான் கேளிர்
ஈடிலாத் திடக்கை விட்டான் பரிபவப் படுவ னெங்கும்.

எ-து. தன்னுடைய மனைவியல்லாமன் மற்றவர் மனைவிகளுடனே கூடியிருந்து சதுரங்கஞ், சொக்கட்டான் முதலியவற்றை யாடுந்தொழிலையுடையவன் நாசத்தையடைய நின்ற சரீரத்தில், அற்பரோமத்தை யுடையவனுவான். சுற்றத்தார் தமது செல்வம்போய் மிடியரான விடத்து அவர்களுக் கியன்ற அளவு அன்புடனுதவாமற் கைவிட்டவன் போனவிடத்தெங்கெங்கும் அபூச்சியனுய் நிந்திக்கப்படுவான். எ-று. (௫௪)

பொருதவன் சதுரங் காதி பொதுமட வரலா ரோடு
திருவற வுருவு மின்றித் தீம்பரும் புடையே சோரத்
தருபவ ரெவரோ வென்று தளர்ந்துடன் ஞழ்ச்சி பேசித்
திரிவனே யிசந்து தின்று தீர்த்திடாச் செல்ல லோடே.

எ-து. வேசியர் முதலிய பொதுமடவாருடன் சதுரங்க முதலியவற்றைப் பொருதவன், செல்வமுமில்லாமல் சவுந்தரியமும் போய்ப் பொல்லாதவர்களும், பக்கத்தில் சூழக் காசு பணமுதலிய வற்றைத் தருவாரெவரோவென்று எண்ணித்தாழ்ச்சிகளே சொல்லிச் சரீரம் வாட்டமடைந்து ஒருக்காலுந் தீராததுக்கத்துட னிரந்துண்டு திரிவான். எ-று. (௫௫)

அருக்கனத் தமனந் தன்னி லடைந்தவர்க் கிடங்கொ டாதான்
பரித்திடும் பாரி தன்னை யிழந்துளம் பதைப்பன் பாங்கால்
விளைத்தெழுந் தெதிர்கொ ளாதான் விரும்பிய பொருளை வீழ்ப்பான்
றரித்தநால் வேதத் தாரைத் தபோதனர் தமையுந் தாழ்ந்தே.

எ-து. சூரிய னத்தமனகாலத்திலே தன் மனையிடத்தே வந்து சேர்ந்தவர்களுக்கு வீடுகொடாதவன் அக்கினி சாட்சியாகக் கைப்பிடித்த மனைவியையிழந்து, உள்ளத்தில் துக்கமடைந்து திரிவான். நான்கு வேதத்தையுமோதிய வேதியரும் தபோதனர்களும் தன்னிடத்து வந்தகாலத்துச் சடுதியிலெழுந்திருந்து தேவரீ ரெழுந்தருளப் பெற்றதேயென்று இனிய வசனங்களைச் சொல்லிப்பணிந் துரிமையுட னெதிர்கொள்ளாதவன், தான் ஆசைப்பட்டு தேடிவைத்திருக்கிற பொருள்களைப் போக்கடிப்பான். எ-று. (௫௬)

வேதநிந் தகனே புன்மை விடக்குணும் புலைய னாவான்
வேதநல் லந்த நிந்தன் வெவ்வினை வேட னாவான்
வேதக ஞானி நிந்தை விளம்பினன் பித்த னாவான்
வேதியர் பொருளைக் கொண்டான் விளக்குறு விட்டி லாமே.

எ-து. வேதாகமங்களைத் தூஷித்தவன் பொல்லாத விடக்கைப் புசிக்கும் புலையனாய்ப் பிறப்பான். வேதாந்த முதலிய சாத்திரங்களைத் தூஷித்தவன் வெவ்வியகொலைத்தொழிலைச் செய்யும் வேடனாய்ப் பிறப்பான். வேதாகமங்களை யோதியுணர்ந்த ஞானிகளைத் திரஷ்ணஞ் சொன்னவன் பயித்தியங்கொண்டு திரிவான். வேதியர் பொருளை யபகரித்துக் கொண்டவன் விளக்கில் விழுகிற விட்டிற்பூச்சியாய்ப் பிறப்பான். எ-று. (௧௭)

விட்டிடா வியனே யாள னயிட்டிக விரதம் விட்டா
னொட்டக மாதி யின்மை துனிபிர மேக ரோகி
யிட்டமிக் கிணங்கி னுனு நாரிய ரிணைத்தோ ணீக்கப்
பட்டவைம் பருவந் தன்னிற் பாங்கலா மற்றைப் பாலும்.

எ-து. நயிட்டிகப் பிரமசரியத்தை மாணுந்தம் வரையு மனுட்டிக்க வென்று சங்கற்பித்துக்கொண்டு அதனை கடைபோக வனுட்டியாம லிடையே விட்டவன் சரீரத்திலே எக்காலமு மொழியாத வியாதியைப் பொருந்துவான், மாதருடன் கூடுவதற் காகாதெனவிதித்த விதிபாத முதலிய பஞ்சபருவங்களிலு மூரித்தல்லாத மற்றத் திதி நட்சத்திரங்களிலு மாசைமிகுதியால் தன் மனைவியைக் கூடினவனும் ஒட்டக முதலியவற்றின் யோனிகளில் மைதுனஞ் செய்தவனுஞ் சுக்கிலப்பிரமேகமென்னும் வியாதியை யுடையவனாவான். எ-று.

ஒட்டகமாதி யென்றதனாற் கழுதை குதிரையென்பதூஉங் கொள்க. பிரமேகம்-மேகவியாதி. (௧௮)

தந்தைதாய் தம்பா லன்பு தவிர்ந்தவன் றனமு மின்றி
நைந்துள நடுக்க முற்று நாடிய பலத்து மொன்றும்
வந்துகை கூடி டாது வாடுவன் மனத்தின் கண்ணு
மந்தர மடைவ னென்றும் பிறர்பழி யறைந்த வற்பன்

எ-து. மாதாபிதாக்களிடத்திலே அன்புவையாது விட்டவன் தரித்திரனுமா யுள்ளத்தில் துக்கத்தையடைந்து வருந்தித் தனக்கு வருமென்றிருந்த பதார்த்தங்களிலே யொன்றும் வந்து கைகூடாம லதினாலே மனத்தில் துக்கத்தையடைவான் பிறரையடாப் பழிசொன்ன அற்பன் அழகுகெட்ட கண்ணையு மிளைத்த நெஞ்சினையு முடையவனா யெக்காலுந் துக்கத்தை யடைவான். எ-று. (௧௯)

கூட்டியே யவலர் தம்மைக் கூறினன் பெரியோர் குற்றம்
நாட்டமும் பிதுங்க நீங்கா நடலையை யுறுவன் மாலை

சூட்டிய கணவன் றேளைத் துறந்தகத் தூய்மை யற்ற
வாட்டடங் கண்ணி தோளை மருவினன் வாத ரோகி.

எ-து. பொல்லாதவர்களைக் கூட்டி யச்சபையில் பெரியோர் செய்திருக்கிற குற்றத்தைச் சொன்னவன் கண்ணிலே யூனும் புறப்பட்டு அதனுலொருக்காலு மொழியாத துக்கமடைவான். தன்னை யக்கினிசாட்கியாய் மாலைசூட்டிக் கைப்பிடித்த கணவனிருக்கவும் அவனைவிட்டுப் பதிவிரதா தருமங் குலைந்து சோரபர்த்தாவுடன் கூட எண்ணும் வாள்போன்ற கண்ணினையுடைய மாதரைக் கூடினவன் வாதவியாதியைப் பொருந்துவான்.

மிருதியின் வழியை விட்டு வேண்டிய தெல்லாஞ் செய்தா
னுருவினு மனத்துந் துன்ப மொருவில னென்று மற்றைக்
கரிசருங் கலப்பர் தத்தங் கடுவினைக் கிசைந்த கட்டம்
விரியுநூல் துயர பேதந் தனித்தனி விளம்பும் வேலை.

எ-து. மனுமுதலிய மிருதியின் வழி நடவாது தன் மனத்துக்கேற்றபடி வேண்டியதை யெல்லாஞ் செய்தவன் சரீரத்தினும் மனத்தினும் எக்காலமு மொழியாத துக்கத்தை யனுபவிப்பான். ஈண்டுக் கூறியதன்றி மற்றைப் பாவபேதங்களைச் செய்து அதனுல் நரகசேடத்தைப் பொருந்திய பாவிகளுந் தாந்தாஞ்செய்துள்ள பொல்லாவினைக்குத் தக்க துயரங்களை யடைவார்கள். அவைகளையும் விளங்கக் கூறினு லாகாதோவெனி லத்துயர பேதங்களைத் தனித்தனி விரித்துச் சொல்லுமிடத் திந்தநூல் விரியுமாதலாற் கூறிற்றிலர். அதனைக் கன்மபரிபாகநூலில் வந்துழிக்காண்க. எ-று. ()

அதிபாதக முதலிய பாவஞ்செய்தவ ரடையும் பயனையும்
அவர் பின்னர்ச் செய்யுஞ் செயலையு மேலு மோர்
வகையாற் றெருத்து மூன்று திருவிருத்
தத்தா லுணர்த்துகின்றார்.

வேறு.

பன்முறை யாமதி பாதகரோ பன்னெடு நாண்மல பாதகரோ
பன்மய வாமக பாதகரோ பற்பல பன்றிமெய் பற்றுவரோ
பன்மய மற்றைய பாதகரோ பற்பல நாயுடல் பற்றுவரோ
பன்மய வாமுப பாதகரும் பற்பல பாமர சாதியரோ.

எ-து. பலகாலு மதிபாதகத்தைச் செய்தவர்கள் நெடுநாள் நரகத்திற் கிடந் தனுபவித்துப் பூமியில் வந்து மலத்திற் கிருமியாகி யனுபவிப்பார்கள். பலகாலு மகா பாதகத்தை செய்தவர்கள் ஊர்ப்பன்றி முதலிய பன்றியுடலை யெடுப்பார்கள். பலகாலு மகா பாதக வுபபாதகத்தைச் செய்தவர்கள் பலபலநாயுடலை யெடுப்பார்கள். பலகாலு முபபாதகத்தைச் செய்தவர்கள் பலபலவண்டுச்சாதியாய்ப் பிறப்பார்கள். எ-று. (௪௨)

பண்ணினர் முன்னதி பாதகமே பண்ணுவ ரேயதி பாதகமே
பண்ணினர் முன்மக பாதகமே பண்ணுவர் பின்மக பாதமே

பண்ணினர் மற்றைய பாதகமுன் பண்ணுவர் மற்றைய பாதகமே
பண்ணினர் முன்னுப பாதகமே பண்ணுவர் பின்னுப பாதகமே.

எ-து. முற்சனனத்திலதிபாதக மகாபாதகம் உபபாதகம் இவைகளுக்குத் துல்லிய பாதகங்களிவைகளைச் செய்தவர்கள் இச்சனனத்தும் அவ்வண்ணமே யப்பாவ பேதங்களை முன்னரியற்றிய வாசனைப்படியே செய்வார்கள். எ-று. (௪௫)

பண்ணினர் மற்றைய பாவவிதம் பண்ணுவ ரேபல பாவவிதம்
பண்ணின ரேற்பரி காரவிதம் பற்றிலர் முற்றிய பாவ விதம்
பண்ணில ரேற்பரி காரவிதம் பற்றிய வாழ்குழி பற்றுவரே
பண்ணிய பாதக சேடமுறப் பாரிழி யோனியும் பற்றுவரே.

எ-து. முற்சனனத்திற் பாவத்தைச்செய்தவர்கள்இச்சனனத்திலும் அப்பாவத்தையே விரும்பிச்செய்வார்கள். ஒருசனனத்திற் செய்த பாவம்பிறிதொரு சனனத்துந் தொடர்வதனாற் குற்றம் போம்படி பரிகாரஞ் செய்வாரானால் அப்பாவபலனை யடையார். வைதிகத்துஞ் சைவத்துங் கூறியபடி ஆசிரியராற்பரிகாரஞ்செய்துகொள்ளாதிருப்பாரானால் அக்குற்றம்போகாது. ஆதலா லப்பாவபலம் போம்படி நரகக்குழியில் கிடந் தழுங்குவார்கள். அப்படி யந்நரகபுவனத்திற் போக மனுபவித்துத் தொலைந்தவாறே யப்பாவ சேட மனுபவிக்கும் பொருட்டுப் பூமியில்வந் தீனசாதியாயும் பிறப்பார்கள். எ-று. (௪௬)

மேன்முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுவினை யொன்றுபல சேடமு மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

எ-தீ. வெளி. (௪௭)

மேற்சிவத்துதி யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அன்றற மாதிய றைந்தவனே
யருக்கனு ரப்பல றைந்தவனே
குன்றவி லங்கையிற் கொண்டவனே
கோலவி லங்கையிற் கொண்டவனே
வென்றிநி னைந்துவி லங்கலுமே
மிண்டியெ டுக்கவி லங்கலுமே
யன்றவ னாக மரக்கினனே
யவனிசைக் கங்கிய ரக்கினனே.

எ-து. சிருட்டி தொடக்கத்தி லகத்தியர்முதலாயினோர்க் கறமுதலிய நான்கையு முபதேசித்தவனே, சூரியனுக் குரமாயிருந்த பல்லை யுடைத்துப் போக்கினவனே, மகாமேருவை வில்லாக வுள்ளங்கையிற் பிடித்தவனே, அழகுபொருந்திய இலங்காபுரியை யிருப்பிடமாகவுடைய விராவணன் றன் வெற்றிப்பாட்டைக் கருதித் திக்குவிசயம்பண்ணப் புறப்பட்டகாலத்திற் கயிலாயபருவதத்தைக்கண் டதனை யிடுக்கிஞ லெடுக்க அவன் சரீரத்தைப் பெருவிரலாலூன்றி நெருக்கினவனே, பின்பந்த இராவணன் றன் முன்கை நரம்பைவாங்கி யாழாகக்கொண்டு சாமவேதத்தைக் கானஞ்செய்ய அவ்விசைக்குச் சந்தோஷித்து அக்கினியின் மெழுகுபோலுருகினவனே. எ-று.

ஏகாரங்கள்-ஈற்றசை.

வாக்கிறை நோயினை மாற்றினனே
 மனமய லாதிக்கு மாற்றினனே
தூக்கியற் சுந்தரன் றூதுவனே
 தொண்டர்மு கந்துணுந் தூதுவனே
பாக்கவிப் பாண்டியன் மந்திரியே
 பாசம றப்பகர் மந்திரியே
நோக்கரி தாகிய நுண்ணியனே
 நொடிபலி யூன்கல னுண்ணியனே

எ-து. வாகீசவடிகளாகிய அப்பருடைய சூலை வியாதியைப் போக்கினவனே, என்மனத்துண்டான மயக்கமாகிய தீமைக்குப் பகைவனாயுள்ளவனே, தமிழ்நடைச் செய்யுளாகிய திருப்பாட்டை யருளிச்செய்யுஞ் சுந்தரமூர்த்திக்குத் தூதுசென்றவனே, பரமாநந்தமான அமிர்தத்தை யடியார் முகந்து பருகுதற்குப் பாத்திரமாயுள்ளவனே, பாக்கவியினாலே புலவர்கள் துதிக்கும் பாண்டியனுக்கு மந்திரியாகிய தென்னவன் பிரமராய னென்னும் ஆளுடையவடிகளுடைய மலமாயாகன்மம்போம்படி குருந்தின்கீழ் ஆசிரிய மூர்த்தமாயெழுந்தருளியிருந் துபதேசித்த இரகசியப்பொருளை யுடையவனே, ஊனக்கண்ணினால் காண்பதற்கரிதாகிய சூக்குமமா யிருப்பவனே, தாருகாவனத்தி லிருடிபத்தினிக ளழைத்திடும் பிச்சையை யூனையுடைத்தாகிய பிரமகபாலத்திலேற் றுண்பவனே. எ-று. (௬௭)

குமரன்றுதி யுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

மாலயன் மயலுறவு மாலெரி வடிவுடைய
காலனை வெருவுறவுங் காதிய கழலடியன்
ஆலத னிழல்மருவு மாரண னவனருளும்
வேலனை திருபதமும் வேணி னேனே.

எ-து. மாலும் பிரமனுந் தாங்கள் சகத்துக்குக் கருத்தாவென்று மயக்கத்தையடைய, அது தீரும்படி தோன்றிய பெரியஅக்கினிச்சுவாலையையும்

மார்க்கண்டர்க்காக வந்த எமனைக் கலங்கத்தக்கதா யுதைத்த வீரக்கழலை யுமணிந்த ஸ்ரீபாதத்தையுமுடையவனும்,வடதருவி னீழலிலிருந்து வேதாகமங்களை யருளிச்செய்தவனுமான சிவபிரான் அருளிய பிள்ளையாருடைய இரண்டு ஸ்ரீபாதங்களை விரும்பினவர்களே பெருமையையுடையவர்கள்.எ-று..

அகத்தியர்துதி யுணர்த்துகின்றார்.

தீதுக நினைபவருஞ் சிவகதி தருவதுதா
னேதென வேனுமவரு மெனதுரை யினிதறிமி
னோதுக வொருமையுட னுலகுய வுமையுதவும்
போதக னருள்புணரும் பொதிமலை முனிபுகழே.

எ-து. குற்றந்தீரக் கருதுவோரும், சிவபதத்தை யடையும் நெறி யாதென நினைப்பவரும், யான் சொல்லு மொழியினை நன்றாக வுணர்வீர், வையகமெல்லா முய்யும்பொருட்டு உமையா ளருளிய ஞானாசிரியனாகிய பிள்ளையார் திருவருளைப்பெற்ற பொதியின்மா மலையிற் றமிழ் முனிவன் கீர்த்தியை ஒருமைப்பாடுடன் வந்தனைசெய்தோதுக. எ-று. (௬௧)

ஒன்பதாவது

## சுவர்க்கநரகசேடவியல்.

முற்றிற்று.

பத்தாவது

# சிவஞானயோகவியல்.

மேலிவ்வோத் தென்னுதலிற்றோ வெனின்-ஓத்து நுதலியதூஉ மோத்தினது பெயருணர்க்கவே விளங்கும், ஆயினிவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின் சிவஞான யோகவியலென்னும் பெயர்த்து. மேலையோத்தினோ டிதற்கியை பென்னையோ வெனின் முன்னையியலுள் புண்ணியபாவங்களுக் கீடாகச் சரீரமெடுத்தவாறு, அடையாளங் கூறிஅதனுட் புண்ணிய பலத்தாற் சரீரமெடுத்தவர்கள் ஞானாசிரியனை யடைந்து சிவஞானயோகத்தை யடையு முறைமை கூறினா ராதலின் அதனோடியை புடைத்தென்க.

இத்தலைச் செய்யுளென் னுதலிற்றோ வெனிற் கிரியாபாதத்து முறைமையைக் கூறி மேல் ஞானயோகத்தின் பகுதி கூறுதலால் விநாயகத்துதி யுணர்த்துதனுதலிற்று.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஒருவ னிரண்டற வெங்கணு மொழிவற வொன்றியு ணின்றவன்
இருவர கம்பர மென்றவர்க் கிகலற வன்றெரி யொன்றினன்
அருளிய வைங்கர னன்பர்க ளகவினை நைந்தற வன்புசெய்
கரிமுக னம்பவ ளம்புரை கணபதி யெங்களி கண்களே.

எ-து. ஒப்பில்லாதவனா யெவ்வுலகினும் நீக்கமின்றிப் பேதமறக் கலந்துநிற்பவனாகி நாமே பிரமமென்ற மாலயனாகிய இருவர் மாறுபாடுநீங்க அக்காலத்து அழலின் வடிவான விறைவன் அருளிய ஐந்து கரமுடையனாகித் தன்னடிக்கன்னபர்கள் வினைதேய்ந்து போகக்கருணை செய்யும் யானைமுகத்தினையும், அழகிய பவளம் போன்ற நிறத்தினையு முடையவனாய்ப் பதினெண் கணங்களுக் கதிபதியென்னும் பெயரினையுடையவ னெமக்கு மகிழ்ச்சியை வழங்கும் புறப்பொருள் யாவையுங் காட்டும் கண்கள்போலகப்பொருள் யாவையு முணர்த்துங் கண்கள். எ-று. (க)

இறைவன் வணக்கங் கூறுகின்றார்.

உருவரு வென்ற வுடம்புட னொருவ விரண்டனு பந்தமு
மிருண்மல பந்தமு மந்தமு மிணையுமி லின்புற நம்புட
னிருமல னின்ப நிரந்தவ னிலன்முடி வெங்கு நிறைந்தவ
னருளிய சந்தம தன்பொரு ளவனவ ளென்று வணங்குவாம்.

எ-து. தூலசூக்குமமாகிய இரண்டு சரீரத்துடன் மாயையும், கருமமும், இருள்போன்ற ஆணவமலத்தின் மயக்கமும், எமக்கு விட்டு நீங்கவும் முடிவும் புணாவுமில்லாத பேரின்பம் எம்மைவந்தடையவும் யாம் இன்பவடிவனுமாய், நாதமுதல் மண்ணீருக எவ்விடத்து நீக்கமறவு நிற்பானுகி அநாதிமல முத்தனுமாகிய சிவபிரா னருளிச் செய்த திவ்யாகமங்களின் சொல்லையு மதனுட் பொருளையுஞ் சிவனுஞ் சத்தியுமாகக் கருதி ஆதரவோடும் வணங்குகின்ருேம். எ-று. (௨)

ஞானயோகத்தின் பகுதி யுணர்த்துகின்ருர்.

வேறு.

அலற்பிறப் பவல மாவிக் கறவுற வறிவா னந்தஞ்
சொலத்தொடங் குவங்கேண் ஞான யோகமுந் தூகடீர் சத்தி
மலத்தினு மநாதி முத்தன் மயமுணர்ந் துணர்த்தல் ஞான
முலப்பிலா வ்வனுள் வேறற் றுறைதலை யுணர்தல் யோகம்.

எ-து. ஆன்மாக்களுக்குச் சனனமரணத் துயரமுண்டாக்கும் பிறப்பு விட்டு நீங்கவும், ஞாநாநந்தம் வந்து பொருந்தவும் யாம் ஞாநயோகத்தையுஞ் சொல்லப் புகுகின்ருேம். அதனை நீ கேள், அது எவ்வாறெனிற் குற்றகுற்ற சிற்சத்தியை யுடையவனு யநாதியே மலத்தை நீங்கிய கடவுளின் சொருபத்தை யாசிரியன் முன் ஆராய்ந் தறிந்து மாணுக்கருக் கறிவித்தல் ஞானம். நாசோற்பத்தியில்லாத வக்கடவுளுடன் பேதமின்றிக் கலந்திருத்தலை யறிதலே யோகம். எ-று.

உம்மை-இறந்தது தழீஇயவெச்சம். (௩)

ஞானயோகியின் முறைமை யுணர்த்துகின்ருர்.

தன்னது சத்தி காட்டுந் தத்துவத் தொடர்ச்சி நீங்க
அன்னிய னலனைத் தன்னே டநாதிய வமலன் றன்னைக்
கன்மமு மலனைத் தாமுன் கண்டுகண் டிடாது காட்டப்
பின்னத னலவ் வுண்மை பெற்றவன் ஞான யோகி.

எ - து. ஆன்மாக்களுக்குக் கலைமுதலிய தத்துவங்களின் பந்தம் விட்டு நீங்கினவாறே தனக் கன்னியனல்லானுகி யநாதியே மலமில்லாதவனுமாகிச் சுட்டுணர்வா லறியப்படாத சிவபிரானை ஆன்ம சிற்சத்தி பிரகாசிப்பிக்கும், அக்கடவுளை ஞானுசிரியர் தாமுதற்கண் டனுபவித்ததனை மாணுக்கற்குக் காட்சியாற் காட்டாம லுபதேசத்தினு லறிவிக்கப் பின் பவ்வறிவினு லம்மெய்ப்பொருளை யடைந்தவனே ஞானயோகி யாவான். எ-று.

அந்த ஞானயோகி கேவல சகலமடையாமற் சுத்தாவத்தையைப்
பொருந்துவா னென்ப துணர்த்துகின்ருர்.

உலகுளார் பெறுது துஞ்சு மொருபொருள் விழித்த யோகி
யுலகுளார் விழித்த பண்டத் துறங்குவ னுருவ மாக

வுலகெலா மொன்றி வேறற் றுளிருமொப் பிலித ளுண்டா
ளலர் தலைக் கணிந்த யோகிக் கவனலான் ஞேயம் யாதே.

எ - து. உலகினுள்ளவர் மல மறைப்பினால் சிவதரிசனப் படாமற் றுயில் கொள்ளுமிடத்து அப் பொருளின்கண் தன் ஞானக்கண்ணை விழித்துப் பார்த்திருக்குஞ் சிவயோகி, அவ்வுலகில் உள்ளவர் ஊனக்கண்ணாற் கண்டிருக்கப்பட்ட விஷயபதார்த்தங்களிடத்துத் தான் றுயில்கொள்ளாநிற்கு மாகையால் தற்சொரூபமென அவ்வுலகமுங்கலந்து தானேயாகிப் பேதமறநின்று விளங்கு மொப்பில்லாத பரமசிவனுடைய ஒள்ளிய சீபாததாமரையைத் தன் தலைக்கலங்காரமாகப் புனைந்த அந்தஞானயோகிக்கு அப்பரமசிவனே யல்லது வேறறியும்பொருள் யாதோ. எ-று. (௫)

இந்த ஞானயோக முதலியவற்றை யிறைவன் முதனூலாகிய
திவ்யாகமங்க ளுரைக்கின் றமை கூறுகின்றார்.

ஒப்பிலி யநாதி முத்த னோதிய காமி காதி
யிப்பர ஞான யோகம் விரியவே யியம்பு மென்றும்
தப்பிலாக் கரும யோகந் தருமமுன் கருமஞ் சாரும்
அப்பல பேத மென்ற வனைத்தையு மறையு மன்றே.

எ-து. தனக்கொப் பொருவரு மில்லாதவனும், அநாதியே மலமுத்தனுமாகிய சிவபிரான் அருளிச்செய்த காமிகமுதல் வாதுள மீறாகிய விருபத்தெட்டு ஆகமங்களும், இந்த மேலான ஞானயோகத்தை விளங்க விரித்துக்கூறும், அது அல்லாம லெக்காலமும் தவறில்லாமற்காணுங் கருமயோக மென்றும் புண்ணிய பாவங்களென்று மூன் ஈட்டப்பட்ட வினையின் பலன்களென்று சொல்லப்பட்ட யாவையும் விரித்துணாக்கும். எ-று.

அன்றும்-ஏயும்-அசைநிலை (௬)

அநாதிமலமுத்தன் றன்மை யுணர்த்துகின்றார்.

காட்சியிற் பொருளு மந்தக் காட்சியான் முன்னங் கண்டே
யாட்சியா மநுமா னத்தி னருத்தமு மனுமொ ணாத
சேட்சியிற் பொருளு மையந் திரிவறச் செப்பிச் சீவ
னாட்சிய வறிவு மாக்கு மவன்மலத் தநாதி முத்தன்.

எ-து. காண்ட லளவையினால் அளக்கும் பொருளையு மக்காண்டலினால் தான் முன்கண் டனுபவித்தறிந்து பின்னொருகாலத்தி னிருமித் தறியும் பொருளையு மிவ்விரண்டினானு மளத்தற் கரிதாகிச் சொல்லளவையினாலளக்கு மாகமப்பொருளையும் ஐயம் விபரீதமறக்கூறி அவ்வளவைகளா லுயிர்களிடத் தனுபவசித்தமாகிய அறிவுகளையு முண்டாக்குவானே யநாதியில் மலத்தினின்றும் விடப்பட்டவன். எ-று. (௭)

பரசமயத்தினின்றவர்கள் இச்சைவசமயத்துக் கதிகாரியாகி
வரு முறைமை யுணர்த்துகின்றார்.

இருவினை யுணர்ந்த புத்த ரவர்முத லிகலும் வாதத்
தெரிசன மனைத்துஞ் சேர்ந்தார் சிவசம யத்துச் சேர்வார்
பொருவிலி புகன்ற வாக்கிற் கருமநன் னெறியும் புக்கே
யிரவுவர் ஞான யோகம் விடுவர்மெய் யடைவர் மெய்யே.

எ-து புண்ணிய பாவங்களை யுண்டென் றறிந்த புத்தர்முதலொன்றுக்கொன்று மாறுபடச் சொல்லும் சமயிகள் நிலைமை யாவையு மறிந்தடைந்தார் முன்பு செய்த நல்வினைப் பகுதியாலே சைவமயப் பற்றுள்ளராவார். பின் அவ்வா றடைந்தவர் ஒப்பில்லாத இறைவனால் கூறப்பட்ட ஆகமங்களிற் சொல்லும் சரியை, கிரியைகளை யனுட்டித்துப் பின்பு ஞான யோக மடைவார்கள், அடைந்தவரே சரீரபந்தம் விட்டு உண்மை நிலையையு மடைவார்கள். எ-று.

கரும நன்னெறியுமென்ற வும்மையால் யோகபாதமு மென்பதூஉங் கொள்க. (அ)

சைவத்திற் சிறப்பு மேனையவற்றிற் சிறப்பின்மையு
முணர்த்துகின்றார்.

எடுத்ததோ ராக்கை தன்னி லிருண்மல சத்தி தன்னைத்
தடுத்தருள் சைவ நூலின் சாதன மதனைத் தள்ளி
விடுத்துவி றற்ற நூலின் சாதனம் விரும்பு வார்முன்
அடுத்தவா ரமிர்தம் விட்டுப் புற்கையா தரிப்பா ரன்றே.

எ-று. இவ்வாறெடுத்த உடம்பிலேயே இருளாகிய வாணவமலத்தின் சத்தியை நீக்கிப் பேரின்பத்தை வழங்குவதாய் சைவசாத்திரத்திற் சொல்லப்பட்ட மார்க்கங்களை யாய்ந்துணரா தொழித்து மலபந்தமுடையவராற் சொல்லப்படுதலின் மேன்மையற்ற புன் சமயங்கள் சொல்லு மார்க்கங்களைப் பொருளென மதித்து விரும்புகின்றவர்கள், தமக்கெதிரா யனுகியிருக்கிற நிறைந்த அமிர்தத்தைவிட்டுப் புற்கை யுணவுண்ண விரும்புகின்றவரோ டொப்பாவார்கள். எ-று.

புற்கை-கூழ். (௯)

மேல்அயல் நூல்களின் பகுதியு முணர்த்துகின்றார்.

ஒப்பிலி யநாதி முத்த னுரைக்கய னூலொவ் வொன்று
தப்பறுஞ் சிருட்டி யாதித் தலைமையொவ் வொருவர் தம்மை
யப்பர மென்னு மற்றை யனைவரும் பரமே யென்னுந்
தப்பறத் துணியும் புத்தி தன்னையும் பரமே யென்னும்.

எ-து. தனக் கொப்பில்லாதவனாகிய வநாதிமல முத்தனாற் சொல்லப்பட்ட சிவாகமங்களுக் கயலாகிய சமயநூல்களி லொவ்வொரு நூல்கள்

குற்றமற்ற படைப்பு முதலிய தொழில்களால் தலைமை பூண்ட பிரமவிட்டுணுக்களி லொருவ ரொருவனை யங்கதனாற் கதுவே பரப்பிரமமென்று சொல்லும். மற்றை வேதாந்தநூல் சிவசோடிக ளெல்லாவற்றையும் பரமே யென்று சொல்லும். மற்றைப் பவுத்தநூல் தவத்தை நிறுவிக்கும் புத்தி தத்துவத்தையும் பரமேயென்று சொல்லும். எ-று.

எல்லா முணர்ந்தவராற் சொல்லப்பட்டதல்ல ஆகையாற் சிற்றறிவுடையவர் செய்தாலு மொருவழிப்படாது தங்களின் மாறுபடக்கூறி மயங்குமென்க. (௰)

முன்கூறிய சமயவாதிகளை நோக்கி மறுத் துணர்த்துகின்றார்.

அசேதன வாக்கை யாள ரவர்பரப் பிரம மல்ல
அசேதனத் தநாதி முத்தன் சிவன்பரப் பிரம மாகும்
அசேதன வாக்கை யின்றே லறிவுமஞ் சனத்தார்க் கில்லை
அசேதனத் தநாதி முத்த னதிபரை யாக்கு வானும்.

எ-து. கலாதி தத்துவங்களாகிய சரீரத்தாற் கட்டப்பட்டவர்களாதலாலும் அச்சரீரப் புணர்ச்சி யில்லாதவிடத்து மலமறைப்பாலறியுந் தொழிலுந் தடைப்படுமாதலாலும் ஆன்மாக்கள் பலரும் பிரமமல்ல. ஆதலான் மும்மலங்களினின்றும் அநாதியேவிடப்பட்ட சிவனே பரப்பிரமமாவான். படைப்பு முதலிய தொழில் பூண்ட காரணகருத்தாக்களை யுண்டாக்குவானும், அவ்வநாதிமல முத்தனேயாம். எ-று.

உம்மையா லவர்களை யுண்டாக்கின்றவனும், அவர்கள் செய்யும் கிரியைகளுக்குத் தன் சத்திகொண்டு செய்விப்பவனும், தனுகரண புவன போகங்க ளெல்லாவற்றையு முண்டாக்குகிறவனு மவனே யென்று கூறியதென்க. (௰க)

அச்சிவன் விகாரியல்ல வென்பதனை யுவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

உருக்குத னவநீ தாதி யுலர்த்துத லீர மண்ணும்
விரிக்குதல் கமல மாதி வெறிகமழ் குவளை மற்றுஞ்
சுருக்குத லென்ற விந்தத் தொழில்வித மில்லா னேனு
மருக்கனே யவற்றிற் கேது சடச்செயற் கநாதி முத்தன்.

எ-து. வெண்ணெய் முதலிய பொருள்களை யுருக்குதல், ஈரமண்ணை யுலர்த்தல் தாமரைப்பூ முதலியவற்றை யலர்த்தல், மணம் வீசுகின்ற நெய்தல் முதலான மலர்களைச் சுருக்குத லென்று சொல்லும் வினையினது வேறுபாட்டை யில்லாதவனானாலும் அத்தொழில்கள் முடிவிற்கு சூரியனே காரணமானாற்போலச் சரீர முதலியவைகளை யுண்டாக்கிக் காரியப்படுத்துவதற்கும் அநாதிமலமுத்தனே காரணனாவான். எ-று.

ஆதியென்றதனால் மெழுகு வெல்லமுதலியனவுங்கொள்க. (௰உ)

பதிமுதலிய திரிபதார்த்தமும் அநாதியென்பதூஉம், அவற்றள்
பாசம் நீங்குமுறைமை இது என்பதூஉ
மூணர்த்துகின்றார்.

அநாதியே யமலன் சச்சி தானந்தன் பதியான் மாக்கள்
அநாதியே பெத்தர் பந்த மகவிரு ளநாதி மூன்றும்
அநாதியே பசுபா சத்திற் பக்குவத் ததுல னென
அநாதியே யமல னாலே யவர்தமை யவைக ணீங்கும்.

எ-து. அநாதியே மலத்தினின்றும் விடப்பட்ட நித்திய ஞாநாநந்த சொரூபத்தை யுடையவனே யிறைவன், அநாதியே மலமுதலியவைகளால் தடுக்கப்பட்ட ஞானக்கிரியைகளை யுடையவரே ஆன்மாக்கள், இருளாகிய ஆணவ மாயை கன்மமாகிய மூன்று மநாதியே கட்டுகளாயுள்ளவை. ஆகையான் மலமாயா கன்மங்கள் பரிபக்குவப்பட்ட விடத்து ஒப்பில்லாத சிவனாகிய அநாதி முத்தனாலே யநாதி பெத்தராகிய ஆன்மாக்களை யநாதியே பந்தங்களாகிய பாசங்கள் மூன்றும் விட்டு நீங்கும். எ-று. (௱௫)

அவ்வாணவ தோடத்தைப் போக்குவித்தற்குத் திட்டாந்த
மூணர்ந்துகின்றார்.

செம்பினிற் களிம்பு தானே செம்பினைத் தீராதென்றுஞ்
செம்பினுக் கதனைத் தீர்க்குஞ் சித்தியு மில்லைத் தேரிற்
செம்பினிற் களிம்பு தீர்க்குஞ் சித்தனு முண்டு தேடிற்
செம்பினிற் களிம்பு தீர்க்கு மருந்துமற் றவனாற் சேரும்.

எ-து. அதனை யாராயுமிடத்துச் செம்புடன் சகசமாயிருக்கும் களிம்பு தானே செம்பினைவிட்டு நீங்காது, அச்செம்பினுக்கு மக்களிம்பைத் தானே நீக்கிக்கொள்ளும் வலியுமில்லை. அக்களிம்பை நீக்கும் பொருட்டுநாட்டமுற்றுவிசாரித்தால் அக் களிம்பை யகற்றவல்ல சித்தியை யுடையவனுமுண்டு, அவனா லக் களிம்பைப்போக்க வல்லமருந்தும் வந்தடையும். எ-று. (௱௬)

மாயா காரியமாகிய சரீரத்தை யான்மாக்களுக் கிறைவனே
கூட்டுவானென்பதை உவமைமுகத்தா
லுணர்த்துகின்றார்.

விளக்கினுக் கில்லைத் தன்னை யாக்கிடும் வினைதா னென்றும்
விளக்கினை யாக்க வல்ல வினைவிழி தனக்கு மில்லை
விளக்கினை யாக்கிப் போக்கி விழிக்கிரு ளருந்த பேதம்
விளக்குவான் போலு மீசன் விழியுயிர் விளக்கொப் பாக்கை.

எ-து. விளக்குத் தன்னைத்தானே யுண்டாக்கிக் கொள்ள வல்ல தொழில் தன்னிடத்தில்லை, அவ்விளக்குக் காட்டாகிய கண்ணுக்குந் தானே

யுண்டாக்கிக்கொள்ளுந் தொழில் தன்னிடத்தில்லை, ஆதலால் விளக்கென்னுஞ்சுடரை யுண்டாக்கிக் கண்ணின் சோதியைத் தடுத்த விருளை நீக்கிப் பொருள்களின் விகற்பங்களை யறிவிப்பவனே டொப்பானவ னிறைவன். கண்களோ டொப்பன வுயிர்கள், விளக்கினே டொக்குங் கலாதி தத்துவரூபமாகிய சரீரம். எ-று. (௰௫)

அச்சரீர மிருவிதமென்று மதற்குக் காரண
மிதுவென்றுங் கூறுகின்றார்.

ஆக்கையுந் தூல சூக்க மெனவிரண் டவற்றுட் டூல
வாக்கைதான் பஞ்ச பூத பரிணமத் தாகுமற்றை
யாக்கையா றைந்திற் கால மாதியி னுகு மந்த
வாக்கையு மாயை தன்னி னமலனின் னருளா லாமே.

எ-து. முன்சொல்லப்பட்ட உடல் தூலவுடலென்றும் சூக்குமவுடலென்று மிருவகைப்படும், அவற்றுள் தூடவுடல் மண்முதல் வானீருகிய ஐந்துபூதங்களின் பரிணம காரியத்தா லுண்டாகும், மற்றைச் சூக்குமவுடல் காலதத்துவமுதல் நிலமுடிவாகிய முப்பத்தொரு தத்துவத்தாலு முண்டாகும், அச்சூக்கும வுடலின் காரணமாகிய முப்பது தத்துவங்களும் சிவனுடைய இனிதாகிய திருவருளின் பிரேரகத்தினுல் மாயையினின்று முண்டாகும். எ-று.

தன்மாத்திரை முதலிய வெட்டையும் புரியட்டகமென் றோதியிருக்க, இவ்வாசிரியர் முப்பதென் றோதிய தென்னெனின், அந்த எட்டும் எட்டுவர்க்கமாம், அவை, பூதம்-௫. தன்மாத்திரை-௫. ஞானேந்திரியம்-௫. கன்மேந்திரியம்-௫. குணம்-௩. பிரகிருதி-௧. கலாதி-௫. மாயை-௧. ஆக் எட்டுவர்க்கத்துக்கு முப்பது தத்துவமும் வந்தவாறு காண்க. (௰௬).

மேலிவ் வகைய்ய யான்மாக்கள் புணர்ந்து போகந் துய்க்கு
முறைமையை யுவமான முகத்தால் கூறுகின்றார்.

பாங்குளான் கொடுத்த கோலைப் பற்றியே குருட னூன்றி
யீங்கெமக் கியங்கு மார்க்க மிஃதென வெண்ணிச் செல்வ
னுங்கா னளித்த வித்தை யாதியி னற்ப ஞானந்
தேங்கிய போகந் தேற்றத் திளைத்துட லியக்குஞ் சீவன்.

எ-து. கண்ணில்லாதவன் தனக்கியல்புடையவ னொருவ னுதவிய தண்டைப் பிடித்துக்கொண் டூன்றி யிவ்விடத்தில் யாஞ் செல்லும் வழியிதுவெனக் கருதிச் செல்வான், அதுபோல மூலமலத்தா றடைபட்ட ஞானக்கிரியைகளையுடைய ஆன்மாக்களுஞ் சங்கார கருத்தாவாகிய இறைவனருளிய வித்தை முதலிய தத்துவங்களா லுண்டான அற்பவறிவு மாயாபோகங்களை நிச்சயித்துக்கொடுக்க அவைகளை நுகர்ந்து யாக்கையின் போக்குவரவு செய்யும். எ-று. (௰௭)

இவ்வாறு நூனவிருத்தி யதிக விருத்தியை யுணர்த்தி மேல்
துல்லிய வியாத்தியை யுணர்த்துகின்றார்.

உயிரொளியு மிருண்மலமு மொன்றுதறல் வியவியாத்தி
அயர்வுறலா லறிவதனு லதற்குவியா பகமல்ல
அயர்வுறுத்து மகவிருளு மதற்குவியாப் பியமல்ல
நயனவொளி யிருளிவற்றின் கலப்பொப்பே நாடுங்கால்.

எ-து. ஆன்மப்பிரகாசமும், அப்பிரகாசத்தை மறைத்து இருளேவடிவா யிருக்கின்ற வாணவமலமுங் கூடிநிற்பது. ஒன்றுக்கொன் றேற்றக் குறை வின்றி யிரண்டு மொத்த வியாபகமாயிருக்கும், அவ்வான்மாவினுடைய ஞானக்கிரியைகள் மலத்தால் தடைபடலால் அதிக விருத்தியை யுடையதல்ல, அதனைத் தடுக்கும் வலியினையுடைய வாணவமலமும் நூனவிருத்தியை யுடையதல்ல. ஆகையா லான்மசத்திக்கு வியாப்பியமாகாது. அதனு லாராயு மிடத்து ஆன்மசத்திக்கு மாணவத்துக்குஞ் சமவியாத்தி யெப்படி யெனிற் கண்ணிடத்துண்டாகிய சோதியு மிருளின் பிரகாசமுந் துல்லிய வியாத்தியா யிருக்கும். எ-று.

இதன்கருத்து, கண்ணொளியானது, இருள் மேலிட்ட காலத்து ஒளி மறைந்து நிற்கு மொளிமேலிட்ட காலத்து மிருண்மறைந்து நிற்கும். இதுபோலச் சிவன் மாயாகாரியமான தனுவாதிகளை யான்மாவுக்குக் கூட்டியகாலத்து ஆணவசத்தி மறைந்த விடத்து ஆன்மசத்திசற்றே பிரகாசமா யிருக்கும். மலமேவிட்ட காலத்து ஆன்மசத்தி மறைந்திருக்குமென் றறிக. * 'ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடவொன் றொளிக்கும்' என்னுந் திருவாக்காலுணர்க. (௨௧)

மேலிறைவன் ஆன்மாக்களுடன் சருவவியாபியா யிருந்
தாலும் பாசந் தன்பரிபாகத்தா லல்லது நீங்கா
தென்பது கூறுகின்றார்.

பாமசிவன் பராசத்தி பல்லுயிர்க்கும் பயின்றிருக்க
விரவுவதென் னிருளொளிற்கேள் வெய்யவழற் பசுமரத்தின்
விரவியதே பசுமரமும் வெந்தவல வெந்துவிழும்
பருவமுறக் காணமுறப் பதியுமுறப் பழுதறவே.

எ-து. மேலாகிய சிவனும் அவனுடைய மேலாகிய ஞானசத்தியும் எல்லாவுயிர்களிடத்துங் கலந்திருக்கவும், இருளாகிய ஆணவம் பொருந்துவ

கொடிக்கவி. கட்டளைக்கலித்துறை.

* ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடராதுள் ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிகொடிக் கட்டினனே. (௧)

தென்னெனி லிவ்விஞவிற்கு விடைகேள் மெம்மையையுடைய நெருப்பு பசுமையையுடையமரத்தின் அடிதொடுத்து முடியளவாக வியாபித்திருந்தா மப்பசுமரங்கள் வெந்தன வல்ல. முதிர்ந்து தமதுபருவம் வந்தவிடத்து தம் மிடத்துண்டாகிய தழலை யுதிப்பிக்கும். * ஞெகிழிக்கோலாகிய கருவியு மதுகொண்டு கடையுங் கருத்தாவு முதலாயின பழுதற வந்துபொருந்த அவ் விடத் தழலுண்டாய் அம்மரங்கள் வெந்து விழுதலைச் செய்யும். அதுபோல் ஆணவமுந் தனக்குப் பருவம்வந்த விடத்துச் சிவனுடைய திருவருளால் தன் வலிகெட்டு நிற்கும். எ-று.

இதன் கருத்து பரமசிவனுடைய பராசத்திமலபரிபாகம் வாராத வா ன்மாக்களிடத்துப் பசுமரத்தில் தீப்போலப் பிரகாசமில்லாம லிருக்கும். மலபரிபாகம்வந்த ஆன்மாக்களிடத்துப் பிரகாசித்து மலநாசஞ்செய்து ஆன் மப் பிரகாசத்தை உண்டாக்கிக் காக்குமென்க. (உ௪)

இதுவுமது.

உக்கொழியா தொளிக்குமிரு ளுதயகதி ரொளிமுன்னே
பக்குவத்திற் பசுபாச வலியடங்கும் பரமசிவ
னக்கனுயிர்க் கருள்புரிய நசித்ததல வசித்ததல
நெய்க்கனநீங் குதலென்ன மாயைய நிலைதொலையும்.

எ-து. உதயகாலத்தில் சூரியப்பிரகாசத்தின்முன் இருள் நாசமடை யாமல் மறைந்து நின்றதுபோலச் சிவனுடைய அனுக்கிரகத்திஞல் ஆன் மாக்கள் பசுத்துவமாகிய ஆணவமலம் - அதனுக்குப் பருவம்வந்தவாறே நா சமடையாது, உயிரின் ஞானக்கிரியைகளைத் தடுக்கும் வலிகெடும். மாயாகா ரியங்களும் நாசமடைந்தனவு மல்லாமல் நிலைபெற்று நின்றனவும் அல்லா மல் உறைந்திருந்த நெய் உருக்கினபோது கனங்குறைந்து நெய் கெட்டுப் போகாமலிருக்கின்றது எப்படி? அதுபோல முத்திநிலையிலும் இந்தமலங்க ளும் கெடாமல் ஆன்மாக்களைப் பந்தியாமலும் நிற்கும். எ-று. (உ௫)

மேலுமோ ருபாயத்தால் இறைவனைத் தொட்டு மூலமல
மீறுகச் சூக்கும தூலமாகி நிற்கும் பகுதியைத்
தரிசிப்பிக்கின்ருர்.

நுண்ணியனே சிவன்றூலஞ் சத்தியவ னையார்க்கு
நுண்ணியளே நொய்யார்க ளதிதூலர் நுதன்மதிக்கு
நுண்ணியரோ நொய்யூர்தஞ் சத்திகளுக் கவர்தாமும்
நுண்ணியரோ நோய்க்கவர்க்கு மதிதூல தரநோயே.

எ-து. சிவன் சிவசத்திக்குச் சூக்குமமாயிருப்பான். அச்சிவனுக் குச்சத்தி தூலமாயிருக்கும். அச்சிவசத்தி ஆன்மாக்களுக்குச் சூக்குமமாயி ருக்கும். அச்சத்திக்கு ஆன்மாக்க ளதிதூலமாயிருக்கும்; அந்த ஆன்மாக்கள்

* ஞெகிழிக்கோல்-தீக்கடைகோல். ஞெலிகோலெனவுமீஇ வழங்கும்.

மேல் உலோகாயதன் முதலிய சமயிகள் ஆன்மாவி னுண்மை
யுணராமல் தத்தங் கோட்பாடே யுணர்த்த அதனை
மறுத் துணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

ஆக்கையினைச் சிலரான்மா வெனவறைவ ரறிவிலர்மெய்
வாக்குமன மெனுமிவையே யெனமதிப்பர் மதித்தவற்றின்
நீக்கமிலாக் குணமென்பர் நிரந்தவற்றின் மேனின்ற
நோக்கினையு நோலினையு முடைத்தாமா னுவலுங்கால்.

எ-து. உண்மை யறிவில்லாமையால் உலோகாயதன் தூலவுடலை யே, ஆன்மாவெனக் கூறுவான். புத்தன் மதத்தை விசாரிக்கு மிடத்து அகங்காரமாகிய அந்தக் கரணங்களையே ஆன்மாவெனக் கூறுவான். அருகன்மதத்தை விசாரிக்குமிடத்துச் சருவான்மாக்களிடத்தும் வியாபித்து நிற்கும் முக்குணங்களே ஆன்மாவெனக் கூறுவான். அவையயல. அதனுண்மையை விசாரித்துச் சொல்லுமிடத்து, இவ்வாறுசொல்லப்பட்டவைகளுக் கெல்லா மேலாய் நிலைபெற்ற ஞானக்கிரியைகளை யுடையதே ஆன்மா. எ-று. (௫௮)

இதுவுமது.

ஆக்கைசடந் தனித்தியங்கா தறிவனையு மின்றியகத்
தாக்கைவிளக் கெனவறியப் படுங்கரண மான்மாவுக்
காக்கைவிதம் பேதமென வத்தியக்க மறிவிக்கு
மாக்கைவிதத் ததிபதியே யமலனுயிர்க் கதிபதியே.

எ-து. இச்சரீரஞ் சடமாதலால் அறிவுடையனாகிய ஆன்மாவை அல்லாமல் தான் போக்கு வரவு செய்யமாட்டா தாகையாலும், சூக்கும சரீரமாகிய கலாதிகள் அத்தூல சரீரமாகிய மனைக்குப் விளக்குபோல அறிவைப் பிரகாசிப்பிக்குங் கரணங்களாகையால் இந்தச் சரீரங்க ளான்மாவுக்கு வேறாயிருப்ப தொன்றென்பதை நீ பிரத்தியக்ஷ வாதியாகையால் உனக்குக் காண்டலென்னுமளவை தானே அறிவிப்பிக்கும். ஆகையால் சொல்லப்பட்ட சரீரபேதங்களுக் கெல்லாம் ஆன்மாவே யிறைவன், அவ்வான்மாவு மீசுரப்பிரேரகனாகையாலவனுக்குச் சிவனே யிறைவனாவான். எ-று.

அறிவனையுமென்ற உம்மையால் அறிவிப்பவனானசிவனையும் அல்லாமலில்லை என்பதாம். பிரத்தியக்க மென்பது தலைக்குறையாய் நின்றது.

இதுவுமது.

அறிவென்பர் சிலர்சடமே மனமொன்றி னறிவென்பர்
அறியுநிரு மலனறிவை யளிக்கிலென வறைந்திடுவர்
அறிவில்லா ரவர்மூல மலத்தான்மாச் சாதித்த
அறிவுடைத்தே மாயையெனுந் துணையினையு மஃதுடைத்தே.

எ-து. மாயாவாதிகள் உயிரை விளங்கிய வறிவென்று கூறுவார்கள். வைசேடிகர் மனமுதலிய தத்துவங்கள் வந்து கூடினகாலத்து அறிவுண்டா

குமென்பார்கள், பரிணாமவாதிகள் ஆன்மாவுக்குச் சுதந்திரமாய் அறிவில்லை எல்லாம் அறியுமிறைவ னுணர்த்தினால் உணருமென்பார்கள். இவர்கள் எல்லாரு மெய்யுணர்வற்றவர்கள். அநாதியே மூலமலத்தினால் தடுக்கப்பட்ட உணர்வை யுடையதாகி யததனை நீக்கும் மாயையென்னுந் துணைக்காரணத்தையும் துணையாக வுடைய தான்மா. எ-று. (உ௰)

இதுவுமது.

ஆக்கைதனி லோரிடமென் றறைவரல வணுவென்பர்
நீக்கமற வுடன்முழுது நிற்குமென நிகழ்த்திடுவர்
போக்குவர வில்லாத பூரணமே யெனப்புகல்வர்
மேக்கிலர்நுண் டனுமூல வியாத்திக்கும் வியாபகமே.

எ-து. மேலாகிய அறிவில்லாத கன்மயோகிகள், ஆன்மாவை உடலினோரிடத் திருக்குமென்பார்கள், அதுவல்லாமல் நையாயிகனும் பாஞ்சராத்திரியும் ஆன்மாப் பரமாணு ரூபமாயிருக்கு மென்பார்கள், சமணருடம்பு முழுவதிலும் வியாபித்து நிற்குமென்பார்கள், மாயாவாதிகள் போக்கும் வரவுமில்லாமல் எவ்விடத்தும் பூரணமாய் நிற்குமென்பார்கள், இவர்களெல்லாரும் உண்மையான தரிசனப்படாதவர்கள்; ஆனாலும் சித்தாந்தம் யாதெனில் நுண்ணியதாயிருக்கப்பட்ட தத்துவங்களாகிய சூக்கும தேகங்களுக்குக் காரணமாகி வியாபகியாயிருக்கும். அசுத்தமாயைக்கு மதற்கு மேலான சுத்தமாயைக்கும் அப்பாற்பட்ட வியாபகமே முத்தித்திசையில். எ-று.

மேக்கிலர் என்பதனை முற்றுங் கூட்டுக. (உக)

வியாபக முறைமையைத் தரிசிப்பிக்கின்றார்.

அமலைக்கு வியாபகனே யரனவற்கு வியாப்பியமே
விமலைவியா பகியுயிர்கட் குயிரவட்கு வியாப்பியமே
சமலைக்கு வியாபகியே சமலையுயிர் வியாப்பியமே
சமலைசக வியாபகியே சகஞ்சமலை வியாப்பியமே.

எ-து. நிருமலையாயிருக்கிற சிவசத்திக்குச் சிவன் வியாபகன், அவனுக் கந்த நின்மலையாகிய சத்தி வியாப்பியம், அச்சிவசத்தி ஆன்மாக்கட்கு வியாபகி. அவ்வான்மாக்கள் அவளுக்கு வியாப்பியம். அவ்வான்மாக்கள் தமது மலத்தோடு கூடிய ஆன்ம சத்திக்கு வியாபகர், அவர்க்கவர் சத்திகள் வியாப்பியம். அச்சகத்துக்கு ஆன்மசத்தி வியாபகம். அவ்வான்ம சத்திக்குச் சகம் வியாப்பியம். எ-று.

அதிக விருத்தியை யுடையது வியாபகம், நூனவிருத்தியை யுடையது வியாப்பியம், இப்படி நூனவிருத்தி யதிக விருத்தியின் முறைமையைத் தரிசிப்பித்ததென்க. (உஉ)

ஆரக னதிக னென்று தவர்தமக் கொப்பென் பார்கள்
நாரகர் பரிகா ரத்தை நவிற்றுநூ லறியா நாமே.

எ-து. சரீரத்தையும் நிலனீறாகிய புவனங்களையும் படைக்கும் விதியினையும் அவற்றைப் புரக்கும் விண்டுவையும், அவனால் புரக்கப்படும் வையகத்தினையுஞ் சராசரமாகிய பொருள்களையும் அழிப்பவனாகிய உருத்திரனை, இவரின் முதன்மைபூண்டான் என்றாது இவரோடு ஒப்பான் என்பாரேல் அவர்கள் நரகசம்பந்தராவார்கள். எ-று.

காரகன்-சிருட்டிப்பவன்; பாரகன்-காப்பவன்; ஆரகன்-சங்கரிப்பவன் நாரகர்-நரகத்திலே விழுகின்றவர்கள்.

அச்சிவனே யதிகமென்பதனைப் பௌராணிகர்
மதத்தினாலுணர்த்துகின்றார்.

எண்ணுக பிரதா னத்தை யிருபத்து நாலாம் வேறொன்
றெண்ணுக புருடன் றன்னை யிருபத்தைந் தாவா னென்றே
யெண்ணுக விருபத்தாறும் பொருளென வீசன் றன்னை
யெண்ணுக வினையி லீச னிருபத்தே ழாவா னென்றே.

எ-து. பிரகிருதி, மாயையில் தோற்றப்பட்ட இருபத்துநான்கு தத்துவத்துக்கும் வேறாதலால் அதற்குக் காரணமென்றறிக. ஆன்மாவை அம்மாயைக்குமேலா யிருபத்தைந்தாக எண்ணப்பட்டவனென்றறிக. அதற்குமேலாக இருபத்தாறும் பொருளென்று எண்ணப்பட்டவர் ஈசுரனென்றறிக, அதற்கு மேலாய் இருபத்தேழாம் பொருளாக எண்ணப்பட்டவனை ஒப்பற்ற பரமேசுரனே யென்றறிக. எ-று.

பிரகிருதியைச் சொல்லவே அசுத்தமாயையும் அதிலடங்கியதாயிற்று, * 'ஐயைஞ்சினப்புறத்தானு மாரூரமர்ந்த மம்மானே' யென்றவாறுமறிக. (௯௨)

அப்பரமசிவனைத் தியானம்பண்ணினவர் பெறும்பேறு
கூறுகின்றார்.

பார்த்தவ ரிருபத் தேழாம் பொருடனைப் பகவன் றன்னைப்
பேர்த்துட லெடுப்ப ரல்லர் பெறற்கரும் போக பேத
மூர்த்துவ புவனத் துண்டே யுலகெலா மொடுங்கும் போது
தீர்த்திட மூல நோயுஞ் சிவனவ னாவர் திண்ணம்.

திருவாரூர்-பண் காந்தாரம்.

* பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி கொள்வா னுளத்தானுங்
கை யஞ்சு நான்குடை யானைக் கால்விர லாலடர்த்தானும்
பொய் யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க் கருள்செய்யும்
ஐயைஞ் சினப் புறத்தானு மாரூ ரமர்ந்த வம்மானே. என்பது ஆளுடைய வரசு அருளிச்செய்ததேவாரம்.

எ-து. இவ்வாறு சொல்லப்பட்ட இருபத்தேழா மெண்ணின்கணின்ற பொருளாகிய பரமசிவனைத் தம்முடைய அறிவில் அன்னியமாகக் கண்டவர்மீண்டொருகாலுங் கருப்பையிற் புக்குச்சரீரமெடுப்பவ ரல்ல. தேவராலும் பெறாதற்கு அரிதாகிய போகபேதங்களையெல்லாம் மேலாகிய சுத்தவித்யா புவனத்தில் நுகர்ந்து பின்பிரபஞ்ச காரியமெல்லாம் தத்தம் காரணத்தி லொடுங்குஞ் சருவசங்காரம் வந்தவிடத்துச் சிவன் அவர்க்கநாதி சம்பந்தமாகிய ஆணவ மலத்தினையுநீக்கி விடுதலினாலச் சிவனோடபேதமான முத்தியை யடைவார்கள், இதற் கையமேயில்லை. எ-று.

உம்மையால்-மாயை, கருமங்களுங் கொள்க. ஊர்த்துவ புவனமென்றார், அசுத்தமாயா புவனங்கட்கு மேலாகிய தாகலின். (௫௫)

சிவன் திதிகாலத்தில் ஆசிரியனா யதிட்டித்துக்கொண்டவனைய காலங்களில் நிராதாரமாக அனுக்கிரகிக்கு முறைமை இரண்டு திருவிருத்தத்தா லுணர்த்துகின்றார்.

திதியினா தாரஞ் சேர்ந்து சிவனுயிர்ப் பாசந் தீர்க்கப்
புதியன போக முண்டு சிலர்சிவம் பொருந்து வார்மேல்
திதிநிலைத் தொலைவி னந்தக் கணத்தினிற் சிவமேயாவர்
பதியருள் விழியி னாலே நள்ளிருட் பார்க்கப் பட்டார்.

எ-து. திதிகாலமாகிய எதிர்காலத்தில் பரமசிவன் அவ்வாசிரியனா யதிட்டித்துக்கொண்டு மலபரிபாகத்துக் கீடாயவரவர் பாசத்தைப் போக்கவே அபரமுத்தித் தானமாகிய பஞ்சகுய்யாட்டக தானமாகிய உருத்திரர் பதத்திலும், மந்திரேசர் பதத்திலும், ஈசானமுதலிய பதங்களிலும் இருந்து ஆண்டுள்ள போகங்களைப் புசித்திருந்து சங்காரகாலத்தில் நிராதாரமாகச் சிவனா லனுக்கிரகிக்கப் பட்டவர்கள் அப்போதே மோக்ஷ மடைவார்கள். எ-று. ஏகாரம், தேற்றம். (௫௬)

சிவமே என்புழி.

உற்பவ வேலை தன்னி லுலகினை யாக்க வல்லெ
கற்புளர் சிலரு மாவர் கழலடை வாரு முண்டு
தற்பரன் விழியிற் பட்டார் சங்கார வாரம் பத்திற்
கற்புடன் படைப்பு மூலக் கருத்தரும் வருகா லத்தின்.

எ-து. சிவன் படைத்தற்றொழில் தொடங்குங் காலத்துச் சுத்தாத்துவாமுதலிய மூன்றத்துவாவிலுந் தத்தமக்கு முதன்மையான அதிகாரம் செய்திருந்து அதிகாரத்தில் வயிராக்கியம் பிறந்ததனால் மோக்ஷமடைவார்கள்; சங்காரகாலத்தில் மலபரிபாக முள்ளவர்கள். பரமசிவனா லனுக்கிரகிக்கப்படுகிறவர்கள் மலபரிபாகம் உடையவர்கள். சங்காரகாலத்தொலைவில் மேல்வருகிற சிருட்டிகாலத்துச் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களைப்

தமதுசத்திக்குச் சூக்குமமாயிருக்கும். அந்த ஆன்மசத்தி ஆன்மாவுக்குத் தூலமாயிருக்கும். அந்த ஆன்மசத்தி மும்மலங்களுக்குஞ் சூக்குமமாயிருக்கும். அந்த மும்மலங்களும் ஆன்மசத்திக்குத் தூலமாயிருககும். எ-று. (உ௬)

அந்த ஆணவமாகிய பிணியை நீக்குவான் அநாதிமுத்த
னாகிய மருத்துவன் என்று இரண்டு செய்
யுளா லுணர்த்துகின்றார்.

பெருநோயே மூலமலம் பிணிமருந்து முடன்மூலந்
தருமமலன் மருத்துவனே மருந்தறிந்து சாராது
பெருநோயர் மருந்தறியா ரெனல்பேசிப் பெறுவதல
நிருமலனை மருத்துவனென் றறிகபிணி நீங்கிடுமே.

எ-து. ஆணவமலம் ஆன்மாக்களுக்குப் பெரிதாகிய பிணி, அப்பிணிக்கு மருந்தாகி மாயாகாரியங்களாகிய தனுகரணாதிகளும் அதனோடு அன்றே உள்ளது. அம்மருந்தினையுதவிப் பிணிதீர்ப்பவன் நின்மலனாகிய சிவனே. மருந்து தானேயறிந்து வந்தடையாது எனவும், பெரிதாகிய வாணவ நோயையுடைய யுடையாராகிய ஆன்மாக்கள் தாமே தம்பெருநோயைப்போக்கிக்கொள்ளும் அதற்கு மருந்து அறிந்ததர் அல்லர் எனவுஞ், சொல்லுதலைச் சொல்லி இருந்ததனால் அப்பிணி நீக்கம் வந்தடைவது அல்ல. அநாதி மலமுத்தனாகிய சிவனே பிணியைநீக்கும் பண்டிதனாவான் என்று அறிந்து அவன் மாட்டு அன்புசெய்யப் பிணிநீங்கும். எ-று.

ஈண்டன்பென்றது, சமாதிசெய்தல் என்றறிக. (உ௭)

இதுவுமது.

மருத்துவனும் பிணியாளி யெனிற்பிணியு மாறாது
மருத்துவன்முன் பிணியாளி யெனிற்பிணியை மாற்றியதோர்
மருத்துவனுண் டிம்முறையின் மாற்றமன வத்தைவரு
மருத்துவனை யநாதிமல முத்தனென மதிக்கவரோ.

எ-து.பண்டி[illegible]ம்நோயுடையானெனின் பிணிநீங்குவது அல்ல பண்டிதன் முன்னோ[illegible]டையானெனில் அந்நோயை நீக்கினனொரு பண்டிதனுள்ளும், இம்[illegible]ன் ஒருவன் பிணியை மாற்றுவான் ஒருவன் உடனாகத் தொன்று[illegible]வத்தை என்னுங் குற்றம் வருமாதலால் அநாதியேமலத்தினின்[illegible]டவனே யுயிர்கள் அடைந்த ஆணவம் என்னும் பிணியை நீ[illegible]னவான். எ-று,

அரோ-[illegible]டு செய்யுளிடத்தும் பிணியெனவும், மருந்தெனவும், ம[illegible]வருவன ஆகுபெயர். (உ௮)

மேல் சரீரியல்லாத சிவனே யுலகம் யாவையும் மாக்கி நிறுத்தி யழிக்கு முறைமையைக் கூறுகின்றார்.

ஆக்கையினை யியக்குதற்கு மாக்கையிலை யான்மாவுங்
காக்கையிலா னவனமல ளாக்குவிப்ப னனைத்துலகு
மாக்கியொரு மூவரைமுன் முக்குணத்தி னளிப்பிப்பன்
போக்குவிப்ப னவர்பாற்றன் சத்திவிதத் தினைப்புணர்த்தே.

எ-து. ஆன்மா அசரீரியா யிருந்து எப்படி யுடலைப் போக்குவரவு செய்விக்குமோ அதுபோல நின்மலனுமாய் அசரீரியுமா யிருக்கிற சிவன் தன் சந்நிதி மாத்திரத்தில் எல்லா உலகங்களையு முண்டாக்குவான். அது எவ்வாறு எனின் தாமதமுதலிய முக்குணத்தையுடைய மூவரையு முண்டாக்கி அவரிடத்தில் தன் சத்திபேதமாகிய கிரியாசத்தியைப் பிரமனிடத்து * அதிட்டித்துச் சிருட்டி கிருத்தியமும், ஞானசத்தியை மாயனிடத்ததிட்டித்துத் திதிகிருத்தியமும், இச்சாசத்தியைச் சிகண்ட பரமேசுரனிடத்ததிட்டித்துச் சங்கார கிருத்தியத்தையும் செய்வான். எ-று.

போக்குவிப்ப னென்பதனாற் சிருட்டியுந் திதியும் கூறியவாறு.

இதுவுமது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உள்ளுறச் சத்து வந்தா னுருத்திர னுருவந் தோன்று
முள்ளுற விராச தந்தா னுதிக்குமா லுருமுன் மெய்யி
னுள்ளுறத் தமோகு ணந்தா னயனுருத் தானு முற்ற
வொள்ளிய வொருமூ வர்க்கு மொழிப்பிறு வாய்வே றென்றும்.

எ-து. சிருட்டி பேதங்க ளனேகமா யிருக்கும். அதில் பௌராணிகப் பிரக்கிரியையில் தோற்றமான பிரகிருதி மாலையயில் மூன்று குணத்திலும் மூன்று கருத்தாக்களைப் பரமசிவன் தோற்றுவித்த அச் சிருட்டியின் மூவருள் உருத்திர மூர்த்தியாகிய சிகண்ட பரமேசுரன் திருமேனி சாத்துவித குண மதிகமாய் ஏனைய இரண்டும் குறைந்து தோன்றும்; மாயன் திருமேனி இராசதகுணம் அதிகமாய் ஏனைய இரண்டும் குறைந்து தோன்றும்; பிரமனுடைய திருமேனி தாமதகுண மதிகமாய் ஏனை இரண்டும் குறைந்து தோன்றும்; இப்படி மூவகையான திருமேனியை [illegible] டய கருத்தாக்கள்மூலப்பகுதிக்குக் கீழுள்ள சிருட்டி முதலிய கிருத்தி[illegible]களைச் செய்வார்கள். எ-று. (௬௰)

மேல் இம்மூவருள் சங்காரகருத்தா[illegible]ாய இரு வரையும் ஒப்புக் கூறுவார் [illegible] றங் கூறுகின்ற[illegible]

காரகன் றனையுங் காயங் காசினி[illegible] காக்கும்
பாரகன் றனையும் பாரும் படை[illegible]ாவும்

* அதிட்டித்தல்-நிலைப்படு[illegible]

பண்ணுவதற்கு அதிகார கர்த்தர்களாகச் சிவனால் செய்யப் படுவோர்கள். எ-று.

உம்மை யெதிரது தழீஇயது. (௯௫)

முற்கூறிய ஞானயோக மடைதற்பொருட்டுக் கருமயோகத்தின்
இயல்பு கூறுவான் றொடங்குகின்றார்.

பரமமெய்ஞ் ஞான யோகப் பாங்கிலார் தமக்கும் பாங்காம்
கருமயோ கினையுங் காணக் கழறுவங் கருது வானை
கருதிடும் பொருளை யந்தக் கருத்ததன் பயனை யென்ன
வருமொரு நான்கு முன்னே மதிக்கவே யோகம் வாய்க்கும்.

எ-து. மேலாகிய உண்மையாகிய ஞானயோகமடையாதவருக்கு நன்மையைத் தருவதாயிருக்கின்ற கருமயோகத்தினில்லையுங் கூறுகின்றோமறிவாயாக. ஒருபொருளைக் கருதுவானு மவனாற் கருதப்படும் பொருளும் அப்பொருளைக் கருதுங் கருத்தும் அக்கருத்தால் வந்தடையும் பயனும் என்று சொல்லவரும் நான்கினையு முன்னரோ ஆய்ந்தறியி னவர்களுக்குப்பின் அக்கருமயோக நெறிகூடும். எ-று.

நான்குமென்னு மும்மை - முற்றும்மை. மதிக்கவென்றதனால் ஆய்தறிதல் வேண்டுமென்பதாயிற்று. (௯௬)

இதுவுமது.

மலத்தினு மநாதி முத்தன் வாக்கினு ளேக தேசம்
பலிப்பது முந்திப் பார்க்க விம்மையிற் பயனுட் பார்த்தான்
மலத்தினு நீங்கி யீசன் மலரடி நீழல் வாழ்க்கை
விலக்கிலை யென்றே யெண்ணி விரும்புவன் யோகம் வேறும்.

எ-து. அநாதிமலமுத்தனா லுரைக்கப்பட்ட வேதாகமங்களில் ஒருசாரார் இம்மைப்பயனால் பலிக்கப்பட்ட கருமயோகத்தை விதிவழுவா தியற்றி முன் பார்த்தறிவாயாக, அவ்வாறு பார்த்தால் மூலரோயி னின்று நீங்கி இறைவனுடைய தாமரை மலர்போன்ற சீபாத நிழலையடைந்து வாழ்வதற்கு விபரீதமில்லையென்று எண்ணி இம்மைப்பயனுள் பலிக்குங் கருமயோகத்துக்கு வேறாய் வீடுபேற்றிற் குரித்தாகிய ஞானயோகத்தையும் விரும்புதலைச் செய்வான். எ-று. (௯௭)

இக்கரும யோகத்துக்குப் புண்ணிய தல முதலானவை
உபாங்கமெனக் கூறுகின்றார்.

எல்லையை பெழுவா யெல்லா மெண்ணுக வுபாங்க மென்றே
யல்லலில் வாக்கை கண்ட வருவருப் பெனவ றிந்து
புல்லிய புலன்கள் வென்று பொருவிலி புரியும் புக்குச்
செல்லலெல் லாமுந் தீரச் சிவனடி யடையுஞ் சித்தர்.

எ-து. இந்நிலையில் நில்லாத சரீரந் துன்பத்தை விளைக்குமென் றுங் காட்சிப் பிரமாணத்தாற் பழிக்கப்பட்ட மலமூத்திரப் போர்வை யென்றும் அறிந்து அற்பவறிவைத்தருவதாகிய விடயபோகங்களின் வழிபோகாமல் தம்வழிக்கொண்டு தனக்கு ஒப்பில்லாத இறைவனை அனுசந்தான மடைந்து வீற்றிருந்து துன்பத்தொடர்ச்சி யெல்லாம் விட்டு நீங்கிப் பரமசிவனுடைய சிபாதங்களை யடைய விரும்புவார்கள் இடம்பொரு ளேவல் செய்வோரொன்னு மூன்றையு மிக்கரும யோகத்திற்கு உபாங்கமென்றறிக. எ-று.

யோகத்துக்குப் பிரதானமாகிய அங்கம் இயம முதலிய வெண்வகை யுறுப்புக்குத் தானமுதலானவைகள் உபயோகமாதலா லுபாங்கமென்று சிறப்பித்தனர். இது வடமொழி. இப்பயன் பலித்த லியல்பாதலாற் சித்தமெனச் சிறப்பித்தார். (௯௮)

இதுவுமது.

அரவினன் மற்று மச்ச மறவரு வருப்பு மின்றி
மரகினா மலரு மல்க மணிநர்கள் பலரும் வந்து
விரவிடா வெல்லை தன்னில் விரும்பியே குகையுஞ் செய்து
திருவிளக் குடனே தூபஞ் சிறக்கவே குகையுட் செய்க.

எ-து. வெளி. இதனல் யோகசாதனைக்குத் தலங்கள் கூறியதாயிற்று. (௯௯)

யோகசாதனைக் குரித்தல்லாதார் இலக்கணத்தை இரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஆக்கையிற் பிணியை யுற்று ஞதா வகத்தி லற்றன்
காக்கவே யாக்கை தன்னைக் கருத்தினு ளருத்தி வைத்தான்
நீக்கிடாக் கருமத் தோடே வலியுற நிரந்து நின்று
னூக்கமே யுடையா னூன மிலிபணிக் கொருமை யுற்றே.

எ-து. வெளி. ஊக்கம்-உற்சாகம். (௩௱)

ஆரிய னேவல் செய்வா னதிகதி பனமு முள்ளான்
பாரிய தபனந் தன்னைப் பற்றினன் மற்றுங் குற்றம்
சேரிய னென்று செப்பு மிவரொலாஞ் சிறந்த யோகத்
தூரியர் சொல்லப் பட்ட விவரலார் தொடங்க லாமே.

எ-து. வெளி. யோகத்தூரியர்-யோகஞ் சாதித்தற் குரிமையல்லாதார். ஆரியன்-ஆசிரியன். (௩௧)

இக்கருமயோகத்தின் பயனை வழுவாதெய்துவார் இத்தகையரான அவரிலக்கணங்களை நான்கு செய்யுளாற் கூறுகின்றார்.

பதவிநாய்ச் சிறிய சூடும் பற்றிய பரிமி தான
முதாதி பனமுங் கூர வுச்சிப்பின் னொருபோ தூண்பா

னுதகமு மொய்தி னுண்பா னுதாபந் தனமு முள்ளான்
மிதமித மென்றே யெண்ணி வேணவாத் துடைத்து விட்டான்.

எ-து. மேன்மையை யுடையதாய்ச் சிறிய சூட்டொடுங் கூடிய அற்பமாகிய அன்னத்தை வயிற்றில் பசியு மிகவுமுண்டாக உச்சி காலத்துக்குப் பின் ஒருநேரமா யுண்பதைச்செய்வான், தண்ணீரையுஞ் சிறிதே பருகுதலைச் செய்வான். வயிற்றில் * ஒட்டியாணக் கட்டினையு முடையான். யாதேனு மொருபொருளை நுகர்தற் பொருட்டு ஆசைவந்த விடத்துச் சிறிதைக்கருதி மிகவு முண்பதைச் செய்யாது நீக்குவான். எ-று.

வேணவா. எ-து. வேட்கைப் பெருக்கம். (சுஉ)

நீக்குவான் றிரண்ட பாலெனப் நிகழ்தரு தனையு நெய்யி
னுக்கிய வபூப மாதி யனைத்தையு மவல மென்றே
தூக்கினுட் சொல்லு முண்டைச் சுளையுளி முருங்கை தொண்டை
பீர்க்கினுட் பெரிய தத்தி யெனுமிவை யாதி பேணான்.

எ-து. வெளி. இதனுள் தூக்கு-நூல், தொண்டை-கொவ்வை. (சுங)

அஞ்சுவா னுசை தோன்றி லருவருப் பான்றன் னுகம்
பஞ்சின்மெல் லடியார் வந்து பரிந்துமெய் பற்றி னுலு
நஞ்சுள நடுங்கி யன்னை யெனவவர் தம்மை நாடி
வஞ்சிநுண் ணிடையார் போக மறுத்தற வெறுக்க வல்லான்.

எ-து. வெளி. (சுச)

தொழிலினைச் சுருக்கி யுள்ளான் சுளிப்பவன் றுயிலுந் தோன்றில்
விழைவினை ஞானயோக பலத்தறி வினைவின் வைத்தான்
உழையுறை புலன்க ளெல்லா மொடுக்கியே யுள்ளா னென்று
கழறிய விவரோ யோக பலத்தினைக் கைக்கொண் டாரோ.

எ-து. கிரியாபாதத்திற் சொல்லும் நித்திய நைமித்திக காமிய சட்ங்கிற் கிரிகை விரியாமற் சுருக்கிச் செய்துள்ளவன் நித்திரை வந்த விடத்துத் தடுத்து அதனை வெறுப்பான், யோகத்தின் பலமாகிய முத்தியினை யடைவதில் மிகவும் விரும்புதலைச் செய்வான், தன்னிடத்திற் பொருந்திய விடயங்களிற் பற்றுதலெல்லா மொழித்துள்ளவன் என்றிப்படிச் சொல்லப்பட்ட இத்தன்மையரோ யிவ்வியோகசாதனை யெய்தும் பயனைப் பெறுபவர். எ-று.

கைக்கொண்டாரென்று இறந்தகாலத்தாற் கூறியது விரைவுபற்றி இது மலர்மிசையேகினு னென்புழிப் பரிமேலழகர் கூறலானுமுணர்க. இவ்வாறு வருவதனை ஆசிரியர் தொல்காப்பியர் "வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி, இறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார்புலவர்" எனக் கூறியதனானும்,

அதற்குரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் காட்டிய உதாரணங்களானு முணர்க. (௬௫)

மேல் ஆதன முதலியவற்றை யிரண்டு செய்யுளாற்
றொகுத் துணர்த்துகின்றார்.

ஆதனம் பதும மாதி யல்லது மிசைந்த தொன்றா
லேதமக் கியற்றித் தேவ னிணையடி யிறைவி பாதம்
போதக வுருவன் பொறருள் புந்தியு ணினைந்து போற்றிச்
சாதகர் புரிக யோகந் தவறறு முபயோ கத்தால்.

எ-து. சாதகன பதுமமுதலிய அறுபத்திநாலு ஆதனத்து ளொன்றைப் பொருந்தி யல்லது தனக்கியன்றதாகிய ஒரு ஆதனத்தி லிருந்து சிவன் உமையாள் தக்ஷணாமூர்த்தி யிவரு ளொருவர் பாதமாதல் புத்தியினால் தியானித் தொழிந்தவாறே தோத்திரஞ் செய்து யோகத்துக்குத் தவறு வராமற் செய்க. எ-று. (௬௬)

கரந்திரி யக்கே யாகக் கவான்மிசைக் கலக்கத் தென்பாற்
கரந்தனிற் பிருட்ட சாய்கை கலக்கமற் றங்கைக் கண்ணே
பிரிந்தபன் னடுவே நாவி னந்தமும் பெய்து நிற்க
வுரந்தள முன்னே பின்னும் நிமிர்ந்திடக் களமு மோங்க.

எ-து. கையுங் காலுங் குறுக்கே வைக்க, அது எவ்வாறெனின் வலதுகாலை யிடது தொடைக்குள் வைத்து அதன்மேலே மடியிலே யிடது கையை முதல் வைத்து அதன்பின் அதன்மேல் வலது புறங்கை பொருந்த வைத்துப் பல்லொன்றோடொன்று கிட்டாம னடுவே நாக்கு நிற்கச் செய்து மார்பு முன் தள்ளிப் பின் நிமிர்ந்து சரீரஞ் செவ்வையாக விருக்க. எ-று.

முற்கூறிய ஆதனத்தையும் பிராணயாமத்தையும் பிரத்தி
யாகாரத்தையுந் தொகுத் துணர்த்துகின்றார்.

நாசியி னந்தஞ் சேர்த்தி நாட்டநான் கைந்தொன் றென்றே
தேசுறு திசைக டம்மிற் செலுத்திடா திருந்து வாயு
ரேசக பூரகங்க ளென்னு மிவை யிரண்டு மின்றிப்
பேசுத லுனு மில்லாச் சிலையென விருக்கை பெற்றே.

எ-து. கண்கள் நாசியினுனியைப் பொருந்திப் பிரகாசமுடைய பத்துத் திக்கிலும் மனத்தைச் செல்லாதபடி நிறுத்தி யிருந்து இரேசக பூரகமாகிய இரண்டையும் விட்டுக் கும்பகத்தோடே மௌனியாயிருந்து சிலையானதெவ்வாறு சேட்டையற் றிருக்குமோ அதுபோல வசைவற விருக்க. எ-று.

மேல் தாரணை தியானஞ் சமாதி மூன்றையுந்
தொகுத் துணர்த்துகின்றார்.

மனநிலை யொடுங்க வீசன் வடிவினை யகத்துள் வைத்துப்
பிணைவடி வறுதி பேசுந் தேசிக னருளாற் பெற்று

மனதினை யொடுக்க வாய்த்த வாய்மையி னறிவை வைக்கக்
கனிவொடு காண்பான் காட்சி காட்சியிற் படலுங் கைத்தே.

எ-து. மனத்தை வேறொன்றிலுஞ் செல்லவொட்டாமல் மூலாதார முதலிய ஆதாரங்களிலே நிறுத்துவது தாரணை. ஞானாசாரியனுடைய வருளினால் சிட்சனத்தை உபதேசிக்கப்பெற்றுச் சிவனை மூலாதாரமுதலிய தானங்களிற் கடப்பம் எப்படி யடியிலே தொடுத்து மேலே சொல்லுமோ வது போலப் பாவிப்பது தியானம், காண்பானுங், காட்சியுங், காணப்படும் பொருளுமின்றிச் சித்தமனோலயம் பிறப்பித்துச் சித்தாயிருக்கிற வியாபகத்திலறிவை ஞேயத்துடன் வைத்திருப்பது சமாதியெனப்படும். எ-று. (௪௯)

இப்படி உண்மைநிலை கைவராதவர்க்கு மேல் ஒரு
உபாயநிட்டை யுணர்த்துகின்றார்.

நீங்கின ரிந்த வுண்மை நிலையினை நெஞ்சந் தன்னில்
தாங்குக சகளந் தன்னைச் சங்கரன் றன்னை யுன்னி
நீங்குக சகளந் தன்னை முன்னையி னிலையி னிடத்
தூங்குக திரியிற் பின்னுஞ் சகளமா தரிக்கச் சூழ்ந்தே.

எ-து. இவ்வாறுகூறிய உண்மைநிலையாகிய சமாதியைவிட்டு நீங்கினவர்கள் சகளமூர்த்தியாகிய பரமசிவனை இதயத்தில் தியானஞ்செய்க. அத்தியானத்தை விட்டு நீங்கினவிடத்து முன்போலச் சமாதியைச் செய்க. அதனை விட்டு நீங்கினவிடத்துப் பின்புஞ் சகளமூர்த்தியையே தியானஞ் செய்க. எ-று. (௫௰)

மேலுமோர்வகையால் அகப்பூசையுமுணர்த்துகின்றார்.

அகத்தினுட் பூசை செய்வார்க் கருவருப் பில்லைக் கொல்லும்
பகைத்தொழி லில்லை யல்லற் படுதலு முடலுக் கில்லை
யுகப்புறு பலமு மேலா முறும்பல முனையி னற்பஞ்
சகத்தினுட் பூசை செய்வார் தமக்கெலாம் வருத்தஞ் சார்ந்தும்.

எ-து. யாரேனுமொருவர் அகப்பூசை செய்யுமிடத் தவர்களுக்கு அருசி முதலிய குற்றமுமில்லை. பூ முதலியவற்றைப் பறிக்கிற வேதனையாகிய குற்றமுமில்லை, மிகவும் இதனாற சரீரவருத்தமுமில்லை; இவன்பெறும் பலமுமதிகமாயிருக்கும்; புறப்பூசை செய்யிற் சரீரவருத்தஞ் சாரினும் அதனாற்பெறும் பலமு மற்பமேயாம். எ-று. (௫௧)

மேலாகப் பூசைசெய்தற்குத் திருமேனி
ஈதென்றுணர்த்துகின்றார்.

மங்கல வங்கு லத்தும் வளர்திரு வுருவந் தன்னைந்
தங்கருத் தினுக்கே தக்க நிறத்தினிச் சலசந் தன்னு
ளெங்களுக் கிறைவா விட்ட சித்திநா வென்றே யேத்தச்
சங்கர னவர்க்கே யிட்ட சித்தியைச் சமைப்பன் றேனே.

எ-து. எட்டங்குல முயரமாக ஒரு சிவலிங்கத்தை நினைந்து தம்கருத்துக்கு வேண்டிய தொருநிறமாக அதனை எண்ணி இதயகமலத்திலிருத்தி வேண்டு முபசாரத்துடன் பூசைசெய்து எமது கடவுளே யாம் யாதொன்றடையவேண்டுமென்று எண்ணிய இட்டசித்திக ளெல்லாவற்றையுந் தருவாயென்று பிரார்த்தித்துத் தோத்திரஞ் செய்யச் சிவபிரானுந் திருவுளமகிழ்ந்து அவரவர் வேண்டிய இட்டசித்திகளை இம்மையிலே கொடுப்பான். எ-று. (௫உ)

சராசரமாகிய ஆன்மாக்களிடத்துச் சிவன் வியாபித்து
நிற்கு முறைமையை உணர்ந்தார் பெறும்
பலமுணர்த்துகின்றார்.

சராசரத் தமல னீங்காத் தன்மைய னாத லாலே
சராசர மவன்றன் மேனி யெனவுணர் தக்கோர் தாமுஞ்
சராசர வுயிர்க்குத் தாயாஞ் சங்கர னுலகுஞ் சார்ந்து
சராசர மொடுங்கும் போது தற்பரன் றானுஞ் சார்வார்.

எ-து. வெளி. சரம்-நரர் மிருகமுதலியன. அசரம்-தாபரமுதலாயின.

முன்றொகுத்துப் போந்த யோகத்தை மேல்
வகுத்துணர்த்துகின்றார்.

போகத்தை யிங்கு மங்கும் புணாமுன் பொருந்தி நின்ற
மோகத்தை முனிய யோக மூவிரண் டங்கத் தாலே
யூகித்தே யுரைப்பாஞ் சொல்லற் கொருபொரு ளல்லா வூத்தை
யாகத்தை யயலென் றாய்ந்த வறிவுடை யார்க டாமே.

எ-து. ஈதென்றறுதியிட்டுச் சொல்லுதற் கேதுவல்லாத அழுக்கு மிகுந்த சரீரத்தை நமக்கன்னியமென்று ஆராய்ந்த அறிவுடையவர்கள், அபரபோகம் பரபோகத்தைப் பொருந்தவு முன்சனனந்தோறுந் தொடரும் அஞ்ஞானங்க ளொழியவும் ஆறங்கமாகிய யோகத்தை யாம்விசாரித்து இந்நூலிற்சொல்லுகின்றோம். எ-று. (௫௪)

ஆறங்கமாகிய யோகத்தில் தலைமையாகிய பிராணயா
மத்தை யுவமித் துணர்த்துகின்றார்.

அட்டாங்க யோகமென் றிருக்க ஈண்டாறங்கமென்றதென்
னென்னின், இயம நியம மிரண்டு மிதனுளடங்குத
லால் வேறாகக் கூறிற்றிலர்.

முந்திய பிராண யாம முத்திசா தனச மாதி
யந்தமா றங்க யோக மவற்றுளும் பிராண யாமம்
தந்தியைப் பாக னன்றே தடுத்தடர்த் திடுகை யற்றே
யந்தமாம் பிராணன் றன்னைப் பயிற்றுத லுரைக்கும் பாங்கால்.

எ-து. பிராணாயாமமுதற் சமாதியந்தமாகிய ஆறங்க யோகமு மோக்ஷமடைவதற்குப் பாங்கென்று சொல்லலாம், அவற்றில் தலைமையாகிய பிராணாயாமத்தின் வகையை விசாரிக்குமிடத்துப் பாகன் யானையைத் தன் வழி செல்லவொட்டாமற் றேட்டி யாற்றலையிற் கொத்தி மறித்துத் தன் வசமாக்கிக் கொள்வதுபோ லான்மாவை விட்டு நீங்கா திருக்கும் பிராணவாயுவை சிவயோகி யிரேசக பூரகங்களினால் மறித்துத் தன்வச மாக்கிக் கொள்ளுவான். எ-று. (௬௫)

அப்பிராணாயாமத்தின் பேத முணர்த்துகின்றார்.

ஊன்றியே வலப்பா னாசிப் புடைவிர லுதர வாயுங்
கான்றிட விடையி னாலே கனகமிங் கலையி னாலே
யூன்றியே யிடப்பா னாசி யுதரத்துள் ளுறவே பூரித்
தான்றியே யிரண்டுங் குநதத் திடுகபின் னுதரத் துள்ளே.

எ-து. வெளி. (௬௬)

மேற்பிராணாயாம மென்னுஞ் சொற்குப் பதப்
பொரு ளுணர்த்துகின்றார்.

பெற்றமை யாலே நீங்காப் பெற்றியைப் பிராண னோடே
யெற்றிடும் பிராண னென்னும் பெயரினை யனிலந் தானு
மற்றதன் வருத்தந் தன்னை மதித்துளா யாம மென்றே
பற்றுக பிராணா யாமப் பதப்புணர்ச் சியினைப் பாங்கால்.

எ-து. ஆன்மாவோடு பிராணவாயு விட்டு நீங்கா திருக்குந் தன்மையைப் பெற்றமையா லதற்குப் பிராணனெனப் பெயராயிற்று. அதனை இரேசக பூரகங்களினால் போக்குவரவு செய்து துக்கிப்பிக்கையால் ஆயாமமெனப் பெயராயிற்று, இப்படி பிராணவாயுவைப் போக்குவரவு செய்விப்பித்தலால் பிராணாயாமமெனச் சொற்பொருளாயிற்று. எ-று. (௬௭)

அப்பிராணாயாமத்தால் வரும் நன்மை தீமையை
யுணர்த்துகின்றார்.

அந்தரம் பெரிதே யாகு மவகதி யாயா மத்தான்
வந்துறு மேன்மை நன்கு வசய்க்கினா யாமம் பாச
பந்தமும் பயிற்றி யச்சப் படுத்தியங் குசத்தாற் பற்றுந்
தந்திவா கனனுஞ் சாலத் தளர்வனே தவறே சாரில்.

எ-து. மேல் அப்பிராணாயாமத்தை யாரேனுமொருவன் விதிவழி செய்யாமல் ஏற்றக் குறைவாகச் செய்தால் அவனுக்கு மிகவுந் துக்கத்தையே கொடுக்கும். அதை யுள்ளபடி யறிந்து செய்து அது வாய்ந்தவிடத்து அதனால் உள்ள சித்திகள் நன்மைகளெல்லாம் வந்து பொருந்தும். காலில் சங்கிலியும் பூட்டப்பட்டுப் பாகன் தோட்டியினால் வேதனை செய்ய அதனாற் பய

ங்காமுடைய யானையின் மத்தகத்தி லிருக்கும் இந்திரனே யாயினும் அப்பி ராணாயாமம் வாயாதவிடத்து மிகவுந் துக்கமேயடைவான். எ-று.

உம்மை-உயர்வு சிறப்பு. (௫அ)

பிராணாயாமம் தவறினவிடத் துண்டாகிய குற்றம் போம்
படி யுபாய மைந்து செய்யுளாலுணர்த்துகின்றார்.

லாயுவா யாமந் தானுந் தவறுறின் வருந்த மாக்கு
நோயுறு முற்ற நோய்க ளுங்குத னுவலக் கேண்மோ
தேயுவைத் தியானஞ் செய்யச் செறிந்தநோ யங்கந் தன்னின்
மாயுமே வாத ரோக மனத்தகத் தொருமை வாய்த்தே.

எ-று. யாரேனு மொருவர் பிராணாயாமஞ் செய்யுமிடத்துக் குற்றம் வந்தாற் சரீரத்தில் வாயுவினால் வருத்தத்தை யுண்டாக்கும்; அதுவல்லாமல் வியாதியையு முண்டாக்கும்; அக்குற்றங்கள் போம்படி ஒரு உபாயஞ் சொல்வாம் அதைக்கேள். மனத்தி லொருமைப்பாட்டை யுடையவனா யதற்கு விருத்தமான வக்கினியைத் தியானஞ் செய்தா லதனாற் சரீரத்திற் பொருந்திய வாதமுதலிய வியாதிகளு நீங்கும். எ-று. (௫௯)

அங்கியான் வருந்த முற்ற வவயவ மதனி லாழ்ந்த
பொங்குதண் புனலைச் சிந்தை புரிந்திடிற் பிரிந்து போகும்
பொங்குதண் புனலாற் றுன்பம் பொருந்திய வுறுப்புத் தன்னி
னங்கியைத் தியானம் பண்ண வல்லவர்க் கழியு மந்நோய்

எ-து. அக்கினியைத் தியானஞ் செய்ததனா லிவன் சரீரத்தில் அதனால் வேதனை வந்தால் அதற்கு விருத்தமாகிய தாழ்ந்த மதியில் நிறைந்திருக்கின்ற சீதசலத்தைத் தியானம் பண்ணினா லவ்வேதனை விட்டுநீங்கும். அச்சீதசலத்தினால் சரீரத்தில் வேதனை வந்தால் அதற்கு விருத்தபூதமாகிய தேயுவைத் தியானிக்க வல்லவர்க்கு அவ்வேதனை நீங்கிப் போம். எ-று.

வல்லவர்க்கென்னுஞ் சொல் முற்றுங் கூட்டுக. (௬௰)

உற்றிடி னுதாரந் தன்னி னுதாசன னுற்ற போதே
பற்றுக வமிர்த வெள்ளப் பாவனை யதனாற் பாறு
மற்றைய வுதக வேட்கை வரினுமிவ் வாறு செய்க
வற்றிடு மறலின் வேட்கை யாகமுங் குளிரு மன்றே.

எ-து. முற்கூறிய வவ்வக்கினி உதராக்கினியுடன் பொருந்தி மிகவும் வேதனைசெய்தவிடத்து விந்துத்தானத்தில் நிற்கிறவமிர்தம் புறப்பட்டு எங்கும் நனைந்ததாகப் பாவித்தா லவ்வக்கினி வேதனை தணியும். அதுவல்லாமல் மிகவுந் தண்ணீர்த்தாக முண்டான விடத்து முன்புபோ லமுத பாவனை செய்தா லத்தாகமும் தணிந்து சரீரமுங் குளிர்ந்திருக்கும். எ-று. ( )

உற்றநோ யுடலி னுடி யுணர்ந்தபின் விபரீ தத்தைப்
பற்றுக பாவ கத்தாற் பற்றிய வுறுப்பி னோய்கள்

அற்றிடு மைவர் விர மடக்கியே யவாவு மாய்த்த
நற்றவர் புரிக விந்த முறையினைப் பலிக்கு நாளும்.

எ-து. பஞ்சேந்திரியங்களையும் அடக்கி யாசையும் ஒழித்த நல்லசிவ யோகிகள் நாடிசோதனை செய்தபின் சரீரத்திற் பொருந்திய வியாதி போம்படி பாவனை வலியினால் பின் விபரீதமாக நாடி சோதனை செய்தா லச்சரீரத்திற் பொருந்திய தலைவலி கண்ணோய் முதலியவியாதிகளெல்லாம் போமாதலால் நாடோறும் இப்படியே செய்தால் யோகசித்தி வரும். எ-று.

கடுவெயிற் றரவ மெய்யிற் கடித்திடிற் கனலு மந்த
வுடலெலா மமிர்த தாரை யொழுக்கியே நினைக்க வுள்ளத்
திடமுளான் றனக்கப் போதே தீர்ந்திடும் விடமு மற்றை
விடமுறும் போது மிந்த நினைவுறின் விரைந்து மீளும்.

எ-து. வெளி.

காளி, காளாத்திரி, யமன், யமதூதையென்னும் பல்லை யுடையன ஆதலாற் கடுவெயிற் றரவமெனச் சிறப்பித்தார், இதனைத் திருமுருகாற்றுப்படையில் "கடுவோ டொடுங்கியதூம் புடைவாலெயிற் றழலெறன வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற் பாம்பு" என்புழி நச்சினார்க்கினியார் கூறலானு முணர்க. மற்றுமென்பதனால் தேள்முதலாயினவுங் கொள்க. (௬௬)

யோகசித்தி யடைந்ததற் கடையாள முணர்த்துகின்றார்.

வாயுவைச் செயித்த செய்கை வாய்த்ததற் கடையா ளங்கள்
ஆயுரா ரோக்கி யாதி யவற்றையவ் வுடலங் காட்டு
மாயமு மனத்தி னில்லை வசமுறும் புலன்க ளெல்லாங்
காயத்தின் மலநீர் மற்றும் நொய்தெனக் கழியு மன்றே.

எ-து. வெளி. (௬௭)

அப்பிராணாயாம மிருவகையாமென்று இரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

வாயுவி ணாயா மந்தா னிருவித மாக் வாக்கு
மாயினொன் றகற்ப மற்றை யதுமகா சகற்ப மாகும்
வாயின்மந் திரத்தைச் சொல்லிப் பயிற்றலு மனத்தி னாலே
தேயனைச் சிந்தை செய்தே பயிற்றலுஞ் சகற்பந் தேரின்.

எ-து. பிராணாயாமம் சகற்பப் பிராணாயாம மென்றும் அகற்பப் பிராணாயாமமென்று மிருவகையாம். அவற்றில் சகற்பமாவது வாக்கினால் மந்திரத்தை யுச்சரித்து மனத்தினால் சிவபிரானைத் தியானஞ் செய்து பிராணாயாமஞ் செய்வது. எ-று. (௬௮)

அகற்பமவ் விரண்டு மின்றி யாக்கிடு மாயா மந்தான்
மகற்பல வாஞ்சை யாலே பயிற்றுமா தவர்க்கு வாய்த்த

சகற்பமே யகற்பந் தன்னிற் றரும்பல மதிகந் தாழ்ந்த
வகற்பமு மலசி னார்க்குப் பலத்தினை நொய்தி னாக்கும்.

எ-து. முற்கூறிய செபமுந் தியானமுமில்லாமல் பிராணாயாமஞ் மிக்ன்ன மாத்திரைகளினால் செய்வது அகற்பப் பிராணாயாம மெனப்படும். மிகுந்த பலத்தையடையக் கருதும் வாஞ்சையையுடைய பெருந்தவமுடையார்க்கு அகற்பப் பிராணாயாமத்தைப் பார்க்கிலும் சகற்பப் பிராணாயாமமே மிக்கபலனைக் கொடுக்கும். அச்செபத் தியானத்தோடு கூடிய சகற்பப் பிராணாயாமஞ் செய்ய மாட்டாமற் சோம்பினவருக்கு அகற்பப் பிராணாயாமம் முற்கூறியதினுந் தாழ்ந்தபலனைக் கொடுக்கும். எ-று. (௬௬)

பிராணாயாமத்தின் சிறப்பும் அது இல்லாதார் சமாதியடைய மாட்டாரென்பது முணர்த்துகின்றார்.

இந்திய விருத்தி யெல்லாம் பிராணனே யியக்கவேயு
மிந்தியட் செயிக்க வெண்ணிற் பிராணனைச் செயிக்கப் பஞ்ச
விந்தியஞ் செயித்தார் தாமே யெய்துவர் சமாதி தன்னை
யிந்தியஞ் செயிக்க மாட்டா ரெய்தவ தேது மின்றே.

எ-து. இந்திரியங்களெல்லாம் பிராணவாயு இயக்கவேயியங்கும். ஆகையா லிந்திரியங்களைச்செயிக்க எண்ணுகின்றவர் பிராணவாயுவைத் தம்வசம் விருத்தி செய்க,இந்திரியங்களைச் செயித்தாற் பயன் யாதெனி லிந்திரியஞ் செயிக்கமாட்டாதவர் சமாதியு மடையப் பெறார்கள், தியானாதிகளுங் கைவரமாட்டாது, ஆகையினாற் பஞ்சேந்திரியங்களைச் செயித்தவர்களே சமாதியை யடைபவர்கள். எ-று. (௬௭)

அச்சமாதி யடையு மிடத்து பஞ்சேந்திரியங்கள் தாமாகச் செய்யவல்லதேவெனி லான்மாவே நடத்து மென்பதற்குருவகம்செய் துணர்த்துகின்றார்.

விசையுறு பரிக ளாக விரவுமிந் திரிய பேதங்
கசையது வாக வாயுக் கறபுற்று யாமத்தாலே
தசையுட லிரதந் தன்னைச் சாரதி யாகித் தானே
யசைவது மின்றி யூருங் கொளவிரு பயனு மான்மா.

எ-து. சோத்திர முதலிய பஞ்சேந்திரியங்கள் விணாவுடைய குதிரைகளைப்போல விடயங்களைச் சென்று பொருந்தும். இப்படிச் செல்லும் இந்திரியங்கள் வாயுச் செலுத்தச் செல்லும். அது வல்லாமல் தானாகச் செல்லமாட்டா, அவ்வாயுவும் பிராணாயாமத்தை விதிப்படி நாடோறும் செய்தவிடத்துத் தானிளைத்து இந்திரியங்களைச் செலுத்தமாட்டா; ஆதலால் ஆன்மாவுக்கு வசவிருத்தியாம் அப்போது ஆன்மா மேலாகிய போகமோக்ஷமாகிய விரு பயனையு மடைதற்பொருட்டு மாமிச முடைய தூலசூக்குமமாகிய சரீரத்தைத் தேராகச் செய்து இந்தியமாகிய பரிகளைப் பூட்டி வாயுவைச் சம்ம

ட்டியாகப் பிடித்துக்கொண்டு தான் தேர்ப்பாகனு மசைவில்லாமல்நிர்விகாரியா யிருந்து தன் சந்நிதிமாத்திரத்தில் அத்தேராகிய சரீரத்தைச்செலுத்துவான். எ-று. (௬௮)

அவ்வான்மாவுந் தானுகச் செலுத்தவல்லதோவெனின் சிவன்
றன் சந்நிதி மாத்திரத்தில் நடத்துவா னென்பதனை
யுத்தர பூருவமா யுணர்த்துகின்றார்.

இபக்கினுட னுயிர்வி தற்கி யெனிற்பூணிக் கியந்திரத்தின்
றியக்குவிக்கு மிறையமல னெனிற்றொழிலுண் டிறைவனுக்கு
மியக்கமிரு நிலமெய்து மிரவிக்கே வுதவில்லை
யியக்கமிரும் பெய்திபிடுங் காந்தத்து மிலைத்தொழிலே.

எ-து. ஆன்மா நிர்விகாரியா யிருந்து சரீரத்தை யியக்குவிப்பானெனின சகடையையியக்கும். பூணியை யியக்குவிப்பா னொருவன்போல உலகத்தை நடத்துவான் நின்மலனாகிய சிவனேயெனி னக்கர்த்தாவுக்குத் தொழிலுண்டாக வேண்டுமெனின் அது அப்படியல்ல; பெரிய நிலத்துள்ளார் தொழில் செய்வது சூரிய னேவலல்லவே; யதுவல்லாமல் காந்தக்கல்லின்முன் இரும்பு சேட்டிக்கப்படுவதுங் காந்தக்கல்லின் றொழிலல்லவே; ஆகையால் கர்த்தாவுக்குத் தொழிலில்லை, சூரியன் காந்தக்கல் இவற்றின் சந்நிதி மாத்திரத்தில் அவை காரியப்படுவதுபோல உலகமுஞ் சிவன் சந்நிதி மாத்திரத்தில் காரியப்படும். எ-று. (௬௯)

சிவன் சகத்தை யசரீரியா யிருந்து நடத்துவா னென்பதற் குதா
ரண பூருவமாக வுணர்த்துகின்றார்.

அவயவத்துங் காரியமெய் யாதியதற் கமலனிறை
யவயவத்த விரதாதி காரியமுண் டாக்கினர்மெய்
யவயவமு மாக்குமறி வதற்குமுதற் காரணத்தின்
றவயவத்தாற் பந்திக்கப் படுமவர்க்கு மவர்வினைக்கும்.

எ-து. சரீரம்-மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய அவயவங்களுடன் கூடிக் காரியப்பட்டிருக்கையினுல் அதனை யுண்டாக்குவதற்குச் சரீரமில்லாத சிவனேகர்த்தன். அச்சரீரமில்லாதவனே தனுவுண்டாக்க வேண்டுமெனின் அச்சு பார் தட்டுமுதலிய அவயவங்களைப் பொருந்தியிருக்கின்ற தேர்முதலியவற்றை உண்டாக்கினோருடைய சரீரமும் அவயவங்களுடன் கூடியிருக்கக் கண்டோமே. ஆதலால் சரீரத்தையுடையவர்களே தனுவாதிகளை உண்டாக்குவார்களெனின் தேர் முதலியவற்றை உண்டாக்கும் விசுவகன்மாவுக்கும் அதனையுண்டாக்கும் வலியுடைய பேரறிவினையும் அவனது மேலான கிரியைகளையும் உண்டாக்கவல்ல சரீரங்களையுண்டாக்குவதற் கசரீரியாகிய சிவனே கருத்தா. எ-று.

எனவே நிமித்தகாரணன், ஈசுவரனென்பதாயிற்று. (௭௰)

ஆசிரியனை மாணாக்கன் ஆசங்கித்து வினவுவதை உணர்த்துகின்றார்.

அமலனிறை சடச்செயல்க ளனைத்தினுக்கு மெனிலணுக்கள்
சமலரவர் சபக்கத்திற் றலைவனெனச் சாற்றினையென்
விமலவவ ரதிபால னெனிற்காட்சி விருத்தமுமுண்
டெமலமற விருந்தவனே பரிகார மிவற்றியம்பாய்.

எ-து. ஆன்மாக்கள் செய்யுங் கிரியைகளெல்லாவற்றிற்கும் நின்மலனாகிய சிவனே கர்த்தாவென்று நீர்சொல்லின் சபக்கத்தில் இரததிட்டாந்தமிட்டுக் கூறியது, ஆன்மாக்கள் மலத்தான் மறைக்கப்பட்டவர்கள், ஆகையாலவர்களைக் கர்த்தாவென்று கூறியதெப்படி? அதுவல்லாமல் அவர்கள்விசேஷித்த மலத்துடன் கூடினவர்கள் ஆகையா லவர்கள் கர்த்தாக்களாகார்களெனின் இரதமுதலியவற்றைச் செய்யும் அவர்களைப் பிரத்தியக்ஷமாகக் காண்கையால், எல்லாவற்றிற்குஞ் சிவனே கர்த்தாவென்று சொல்லுவது பிரத்திக்ஷ விருத்தமாகையாற் கூடாது, எம்முடைய மலத்தைப் போக்குவதற்குத் திருமேனிகொண்டு, எழுந்தருளியிருந்தவரோ இவ்வாசங்கை தீரும்படி வகை சொல்லவேண்டும். எ-று. (எக)

அதற்கு விடைமேல் ஆன்மாக்கள் தனுவாதிகளைப் பண்ணமாட்டாரென்பதுவும் பரமசிவன் சுத்தாத்துவா முதலியவற்றைச் சிருட்டித்து அதிலிருக்கும் விஞ்ஞானகலர் முதலானவரை உண்டாக்கி அவர்களாற் சிருட்டியாதி கிருத்தியங்களைச் செய்விப்பானென்பது முணர்த்துகின்றார்.

ஆக்கையுமாக் குதற்குவல ரலரணுக்க டமக்கமலன்
ஆக்கையுமாக் குவனவருட் சிலர்க்கவருட் சிலர்சிலருக்
காக்கையுமாக் குவரவருட் சிலர்சிலருக் கவருள்ளுந்
மாக்கையும்பின் தினரிரத மாதியுநின் மலனருளால்.

எ-து. ஆன்மாக்கள் தம்சரீர முதலியவற்றைத் தாமாக வுண்டாக்கவேமாட்டார்கள். அப்பரமசிவன் சுத்த மாயையை யதிட்டித்துக்கொண்டு அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடி மந்திரேசுரரிவரையுண்டாக்குவான். அவ்விஞ்ஞானகலருள் பரமசிவன் அனந்தாதிகளை அதிட்டித்துக்கொண்டு அசுத்தமாயையில் சிருட்டியாதி கிருத்தியங்களைச் செய்விப்பான். அனந்த தேவநாயனார் சிகண்ட பரமேசுரனையதிட்டித்து அவரால் பிரகிருதியிலுண்டான சிருட்டியாதி கிருத்தியங்களைச் செய்விப்பர். அச்சிகண்ட பரமேசுரன் பிரமனையதிட்டித்து பஞ்சபூதத்தின் காரியசிருட்டியைச் செய்வித்து அதில் மிதுனசிருட்டியால் சகல ஆன்மாக்களையும் உண்டாக்கித் தச்சன் முதலானவரைக்கொண்டு தேர் முதலானவற்றைச் செய்விப்பான் பரமசிவன் அருளினால். எ-று.

மேல் இதன் விதியை விரித்தறியுமிடத்து முதலே சுத்தமாயை யாகிய முதற்காரணத்தினின்றும் பரமசிவன் அதிகாரகர்த்தாக்களை உண்டாக்கியவர்களாலே கீழிரண்டு மாயையில் சிருட்டிகளும் அதிற்றோன்றும் அதிகார கர்த்தாக்களை உண்டாக்கப்படுமென்றும் அதிகாரகர்த்தாக்கள் பரமகர்த்தாவல்ல என்று மருளிச்செய்தற்கு விளங்க வருளிச்செய்கின்றார். பரமசிவனவ்வதிகார கத்தாக்களாகிய தாங்களும் தங்கள் சரீரங்களையும் தாங்களிருந்து சஞ்சரிக்கும் புவனங்கள் போகங்கள் அவற்றிற்கு ஆதாரமாகிய அண்டங்கள் அவற்றிற் காதாரமாகிய சாதாரணமான தத்துவங்களையுந் தாமாகவுண்டாக்கிக்கொள்ள வல்லவரல்ல. அச்சுத்தமாயையிற் றோன்றப்பட்ட அதிகார கர்த்தாக்களாகிய அணு சதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடி மகா மந்திரேசுரரில் அதிகார கிருத்தியம் வேண்டாமென்று வெறுத்த மூன்றரைக்கோடிபேர் ஒழிந்த மூன்றரைக்கோடி மந்திரேசுரர்க்கு மவர்க்கேற்ற திருமேனிகளைப் பரமசிவனே உண்டாக்கும். அவர்களிற் பிரணவர் முதலாகிய அணுசதாசிவர் பத்துப்பேரும் பரமசிவனே தன் சந்நிதிமாத்திரத்தில் உண்டாக்கப்பட்ட திவ்யாகமங்களை அதிகரித்துக்கொண்டு கீழுள்ள அனந்த தேவநாயனார் முதலான வெட்டுப்பேரும் அதற்குக் கீழான மூன்றரைக்கோடி மந்திரேசுரரு மற்றுள்ள விஞ்ஞான கேவலர்களுக்கும் அனுக்கிரக கர்த்தராகவிருப்பார்கள். இனி அட்டவித்தியேசுரர் மூன்றரைக்கோடிமந்திரேசுரர் இவருள் அனந்ததேவநாயனாராகிய மகேசுரர் நின்மலனாகிய சிவானுக்கிரகத்தினால் அசுத்தமாயையில் உண்டாக்கப்பட்ட அண்ட புவனபோகம் ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய சாதாரண தத்துவங்களையு மண்டலிகர் முதலிய பிரளயாகலரான சருவான்மாக்களுக்கும் அவரவர்க்கே தனித்தனி தோன்றப்பட்ட அசாதாரணமாகிய சூக்குமதேகங்களையு முண்டாக்குவார், இனி மூன்றரைக்கோடி மந்திரேசுரரும் அம்மாயையி லுண்டான தூல அண்டங்கள் புவனங்கள் போகங்கள் பிரளயாகராவார் தூலசரீரங்களெல்லாவற்றையும் நின்மலனாகிய பரமசிவ னனுக்கிரகத்தினாலே யுண்டாக்குவர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பிரளயாகலருட் சிவானுக்கிரகத்தைப் பெற்றவரான நூற்றெருபத்தெட்டு உருத்திரர்களில் சீகண்ட பரமேசுவரராகிய உருத்திரமூர்த்தி பிரம விட்டுணுக்களுக்கு மற்ற சகலருக்குந் தனுவாதிகளை யுண்டாக்கிப் பிரகிருதியிற் றோன்றப்பட்ட சாதாரண அசாதாரணமான தத்துவங்கள், அண்டபுவனங்களை யெல்லா முண்டாக்குவர், சீகண்டரால் உண்டாக்கப்பட்ட பிரமன் பிருதிவிமுத லாகாச மீறாகிய பௌதிகமாகிய பஞ்சபூதங்களி லுண்டாகிய தூலபரிணாமமான அண்டங்கள் புவனங்கள் சகலராயுள்ளவர் தூலசரீரங்களெல்லா நின்மலனருளினால் உண்டாக்குவர், அப்பிரமனால் உண்டாக்கிய பஞ்சபூதமட்டும் விட்டுணு நின்மலனருளினாலே யிரக்ஷிப்பர், அப்படி யவர்களாலே யுண்டாக்கப்பட்டவரில் இந்திரன் விசுவகன்மா நவக்கிரகாதியாகிய அதிகார கர்த்தர்கள் நின்மலனருளினால் தங்கள் தங்களுக்குக் கட்டளையிட்ட அதிகாரங்களைப் பண்ணி வருவர், அவர்களுள்ளும் பிற்பட்ட புவலோக வரசரான மனுமுத

லாகிய அரசர்களும் விசுவகன்மாவி னமிசம் பற்றிவருஞ் சிற்பாசாரியர் முதலானவர்களுந் தேர்முதலிய வாகனங்கள் மூர்த்திகளான விக்கிரகபேதங் களையெல்லாம் நின்மலனருளினாலே யுண்டாக்கியும் போக்குவரவுகளைப் புரி விப்பார்களென் றறிக. இதனாற் சொல்லியது சரீரங்களான அதிகாரகர்த்தா க்களெல்லாம் அவனருளால் அபரகர்த்தர்களாக இருப்பதொழிந்து பரமகர்த் தாவல்ல வென்பதாம். (எஉ)

இன்னுமவர்கள் பரமகர்த்தா வல்லர் என்பதனை விளங்க வருளிச் செய்கிறார்.

உற்பவத்து முடலாதி யுண்மையினு மொடுக்கத்தும்
அற்பறிவின் றிரோதான மனுக்கிரக மெனுமிவற்றுந்
தற்பரனல் வினைவுளதாந் தலைவரலர் தமோவினைக்குஞ்
சிற்கனன ஞாதியம லன்சிவன்சா தகன்றேசால்.

எ-து. ஆன்மாக்கள் சங்காரஞ் செய்யப்பட்டுக் கிடந்த காலந் தொலை ந்து பரமசிவன் தனுகரண புவனபோகங்களைத் தோற்றுவிக்கு மவதரத்தி லும் சங்காரஞ் செய்யப்பட்டுக் கிழ்க்கிடக்கிற காலத்திலுந் திதிகாலந் தொ லைந்து சருவசங்கார காலமாகிற வவ்வவதரத்திலுந் திதிகாலந் தன்னிலுமாக இந்நான்கு காலத்தில் திதிகால நீங்கலான மூன்றுகாலத்து மலபரிபாகம் வந்த வான்மாக்களை யெல்லாம் பரமசிவனே யனுக்கிரகம் பண்ணும், அவர்க ளி லதிபக்குவராகிய சிலரைத் திருவடியிலே சேர்த்துக்கொள்ளும் சிலரை யதிகார கர்த்தர்களாக்கி யவர்களைக்கொண்டு சுத்தமாயை நீங்கான இரண்டு மாயையிலுண்டாக்கப்பட்ட அதிகார கர்த்தாக்களுக்கெல்லாம் பரமசிவனால் அனுக்கிரகிக்கப்பட்ட அனந்தாதிகளைக் கொண்டே அனுக்கிரகமுதலான பஞ்சகிருத்தியங்களையும் செய்விக்கும். அவ்வேளையிலு மப்பரமசிவனால் மல க்ஷயம் பண்ணிக்கொண்டார்க ளொழிந்துந் தங்களால் அனுக்கிரகாதி வினை வை யுண்டாக்கிக்கொள்ள மாட்டார்கள். அவ்வதிகார கர்த்தர்கள் தாங்கள் பரமகருத்தர்களல்ல இனித் திதிகாலத்தி லதிகார கர்த்தர்களல்லாத மற்ற வான்மாக்களாயுள்ளார்க ளிம்மலபரிபாகம் வந்த வான்மாக்களுக்கு மலமென் பது போக்கியுஞ் சில அறிவுடைத்தா யிருக்கிற வான்மாக்களைத் திரோதான சத்தி யவர்களுடைய மலசத்தியைச் செலுத்தாமல் கைவிட்டு அனுக்கிரகி த்த விடத்துங் குருமுதலான அதிகார கருத்தர்கள் மலக்ஷயம் பண்ணுவார்க ளென்ற அவ்விடத்துந் தொழிலுக்கும் ஞானசொருபனா யநாதியே நின்மல னும் ஞானத்தைச் சாதிக்க வல்லவனுமான சிவனுடைய பராசத்தி யவர்க ளிடத்தில் இருந்துண்டாக்குமாதலா லவர்கள் பரமகர்த்தாவல்ல. அவர்களு க்கும் பரமசிவனனுக்கிரகத்தால் அபரகர்த்தாக்களாக விருந்து கர்த்தத்துவம் செய்வார்கள். எ-று. (எ௩)

இன்னும் பரமகர்த்தாவே மாயாகாரியம் எல்லாவற்றிற்குங் கர்த்தாவென்றும் அவனுடைய சாமர்த்தியம் விளங்கவுமன்று * அநுமானப் பிரயோகங்களினாலு மேதுவாலும் இரண்டு செய்யுளால் அருளிச் செய்கின்றார்.

உண்மையினாற் முதற்பக்கத் தூறுதலினாற் சபக்கத்தும்
நண்ணுமுறு நான்கிறையை ஞாபகக்கா ரியம்பண்ணுவா
னண்ணுமுரு வைந்தினையு மிருளினான் குருவினைமெய்
பண்ணினனு மவனறிவு முடலிலியும் பலமாமே.

எ-து. முற்பக்கமாகிய இம்மண்ணிலே கடாமுதலியவைகள் தோன்றுவதற்கு தகுதியாயிருக்கை யுண்மையாகையா லது சடமாதலினால் தானாகத் தோன்றமாட்டாது, ஒருசேதனனான குலாலனால் அவயவியவயவங்களாகத்தோன்றப்பட்டவை காண்பதனால் சபக்கமென்று மேலானமாயைகளிலுந் தனுகரணமுதலியவைகள் நான்குந் தோன்றுகைக்கு யோக்கியமுண்டாயிருக்கவு மவைகளைத் தோற்றுவிக்கைக்கு அம்மாயைகள் சடமாகையா லவற்றைத் தோற்றுவிக்க மாட்டாது. ஆகையால் அத்தனுகரணமுதலியவைகளை யவயவியவயவம் பொருந்தக் காரியப்படுத்தித் தோற்றுவிப்பானொருகருத்தா வுண்டென்றறியப்படுங் குலாலனைப்போல இன்னு மவனுடைய சத்திசாமர்த்தியத்தையு மறிவின் பெருமையையு மறிவிப்போனாகச் சிவனுடைய விக்கிரகமென்று சொல்லப்பட்ட வுருவம் நான்கு முபயமொன்றுமாகிய ஐந்து விக்கிரகங்களையு மிருளற்று ஞானசொரூபமா யிருக்கும் சிவம், சத்தி, நாதம், விந்து என்னு மருவமாகிய விக்கிரகங்கள் நான்கையும், ஆக ஒன்பது விக்கிரகங்களையுங் காரியரூபமாகப் பண்ணினாலும் அந்தச் சரீரியல்லாத பரமசிவனே யென்றறிக. அப்படியானால் சரீரமில்லாத பரமசிவனே யெல்லாவற்றையுஞ் செய்வானானாற் சரீரிகளான அதிகாரகர்த்தாக்களிருக்க வேண்டுவானேன்? அவர்களாற் பயனில்லையே யெனின் உடலிலியுமென்ற வும்மையாற் சரீரமில்லாத பரமகர்த்தாவாலு மவனனுக்கிரகம் கொண்ட சரீரமுள்ள அதிகாரகர்த்தாக்களாலும் விசுவம்பலப்படும். எ-று.

இந்நூலில் வாராத பொருள்களெல்லாம் விரித்துக் கூறியது மற்றும் விரிந்த தமிழ் நூல்களிலு மாகமங்களிலுங் கண்டு விரித்துக்கூறிய தெனக் கொள்க. † சித்தியார் சுபக்கத்தில் 'வித்தைகள் வித்தை யீசர் சதாசிவ ரென்றிவர்க்கு, வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்திரங்க, டத்துவஞ் சரீரம்போகங் கரணங்களெல்லா, முய்த்திடும் வயிந்தவந்தா னுபாதான மாகின்றே' எனவும் ‡ பரபக்கத்தில் புத்தன்மாத்துமிகன்

* அநுமானம் இம்மலைதீ யுடைத்தென்றற் போல்வது.

† சித்தியார் சுபக்கம் செய்யுள்—௯௪.

‡ பரபக்கம்மாத்துமிகன்மதம் செய்யுள்—௩

யதத்தில்; 'அவையவம் பொருளாய்த் தோன்றும் அவையவ மழிந்தாற் பின்னை, யிவைபொரு ளென்ன வேறொன் றிலாமையாற் பொருள்க ளின்றாம், அவைபொரு ளிலாமை யாலே யறிவுமின் றாகு மென்று, நவைதரு மொழியினாலே நவிலுமாத் துமிகன்றானே' எனவும் 'கருவிதனித்தனியே கா ணுயிர்கட்கெல்லாம் புறமுடலார் தங்கும்பொழுது' எனப்பதி பசுபாசவியலிலும் அருளிச் செய்தமையானுங் கண்டுகொள்க, இன்னும் விரிக்கிற் பெருகும்.

ஆயாம மறைபொழுதி லறைந்தவனு பாடணத்தாற்
றேயாரு மனுமான விதமூன்றி னுறத்தெருளத்
தாயானை யனைத்துயிர்க்குந் தற்பரனைச் சிற்கனனை
நேயாரு நெஞ்சினர்க்கு நிறையுறவே நிகழ்த்தினமே.

எ-து. பிராணயாமவிதி சொல்வதில் பிரசங்காப் பிரசங்கமாகிய அனுபாடணம் சொல்லத்தக்க சத்தி பொருந்துகையால் விளக்கம் அமைந்த அனுமானவகை மூன்றினாலும் அறிய எல்லா வான்மாக்களுக்கு மாதாவாக விருக்கும் மேலாகிய பரமசிவனை ஞானசொரூபனைநேசம் உள்ள புத்தியையுடையவர்களுக்கு எற்றக் குறைவு வராம னிறைபொருந்த சொல்லுகின்றோம். எ-று.

(எரு)

பிராணயாமஞ் செய்தற்கு மாத்திரை யுத்தமாதி பேதத்தால்
மூவிதமென் றுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கைத்தலத் தாலே சானுப் புரிவலங் கணிக்க விரொட்
டத்தொகை யனைத்து மொன்றே யாகுமாத் திரையா யாமத்
துத்தம நாற்பத் தெட்டா மொருபது மிரண்டு நீச
மத்திம மெண்மூன் றாங்கை நொடியுமாத் திரைமாட் டார்க்கே.

எ-து. இடதுகையினால் இடது முழந்தாளைப் பதினறுதரஞ் சுற்றி யெண்ணினால் ஒருமாத்திரையெனப்படும், அந்த மாத்திரைகொண்டு நாற்பத்தெட்டுப்பண்ணுவது உத்தமமானபிராணயாமம்; இருபத்துநாலு பண்ணுவது மத்திமம், பன்னிரண்டு பண்ணுவது கனிட்டம், இவ்வாறு செய்யமாட்டாதார் முற்கூறிய வெண்ணிக்கையில் கைநொடி மாத்திரையா லுத்தமாதிபேதத்தாற் செய்க. எ-று.

(எசு)

குசைநுனித் தீர்த்தபானத்தா லுண்டாகிய விசிட்டமும் பிராணயாம விசேடமு முணர்த்துகின்றார்

குசைநுதி நீரை நாளுங் குடித்திட விடைவி டாதே
தசதச வருடங் கூடத் தங்கிய பலத்தைச் சார்வார்
இசைவுடன் பிராணயாம மியற்றின னொருகால் விண்ணில்
அசைவற விருக்க யாக மனைத்தையு மியற்றினோரே.

எ-து. ஒருவ ரனுட்டானஞ் செய்த முடிவில் ஒருமாத நாடோறுங் குசை நுனியில் விழுகிற சலத்தை வலதுகையால் பானஞ்செய்தவர் நூறு வருஷம் பிராணுயாமம் செய்த பலத்தைப் பொருந்துவார்கள். சொன்னபடியே பிராணுயாமம்செய்த பலத்தை யாரோனுமொருவரொருக்காற் பண்ணினு லவர்கள் தவம் யாகந் தானம் விரதம் சிவதீர்த்தம்இவைகளா லுண்டாகும் பலங்களையும் பெற்றுச் சுவர்க்கத்திற பொருந்தியிருப்பார்கள். எ-று. (௭௭)

குசை-தருப்பை.

பிரத்தியாகாரத்தையு மதனாற் பெறும் பலத்தையு
முணர்த்துகின்றார்.

மனத்தையும் விடயந் தன்னின் மறித்துளே யடக்கி வைத்துப்
பினைச்சவி யாமை செய்கை பிரத்தியா காரம் வேதத்
தெனைத்துள யாக பேத மனைத்தையு மியற்றி னோர்கள்
மனத்தையு மறித்த மைந்த ரவர்சிவ புரத்துள் வாழ்வார்.

எ-து. மனமும் விடயங்களும் போகங்களைப் புசிக்க வந்தவிடத்தும் மிகுந்த பசிவந்த விடத்து மதனிடத்துச் செலுத்தாமல் ஆமையெப்படிதன் அங்கங்களை யுள்ளே யடக்கிக் கொள்ளுமோ அதுபோலத் தானுஞ் சலியாமல் மனத்தை நிறுத்துவது பிரத்தியாகாரம். யாரோனுமொருவ ரிதனை நாடோறு மியற்றுகின்றாராயின் அவர் வேதத்தில் கூறுகின்ற யாகபல மெத்தனையுண்டோ அத்தனையுஞ் செய்தவராவார்கள். அடைந்த பலத்தைச் சிவலோகத்தி லிருந்து புசிப்பார்கள். எ-று. "ஆமைபோல் ஐந்தடக்கலொருமையுளாமைபோ லைந்தடக்கல்" என்னுந் திருக்குறளானும், அதற்குப் பரிமேலழக ருரையானு முணர்க. (௭௮)

தாரணையு மதனாற்பெறும் பலமு முணர்த்துகின்றார்.

நசையுட னிதயப் போதி னாட்டிய பொருளிற் சித்த
மசைவற நிறுத்த றானே தாரணை மதனைச் செய்தார்
கசிவுறு மூவேழ் சுற்றங் கடுநர கதனின் மீட்டு
மிசையுறு சிவலோ கத்து ளிருப்பரோ விருப்ப மிக்கே.

எ-று. ஆசையுடன் மூலாதார முதலிய தானங்களி லங்கங்கே பார்க்கக் கடவ பொருள்களைக் குறித்து மேலேமேலே போய்த்தான் வேண்டிய பொருளில் நிறுத்துதல் தாரணை யெனப்படும். இப்படி யாரோனுமொருவர் நாடோறு மிதைச் செய்தா லிரங்குகின்ற தன் குலத்தி லிருபத்தொரு தலைமுறையுள் வெவ்விய நரகத்திற் கிடந்தாரை யெடுத்து மேலாகிய சிவலோகத்தில் உண்டான போகங்களை மிகுந்த வாசையுடன் புசித்து அவர்களுட னிருப்பார்கள். எ-று. (௭௯)

தியானஞ் செய்யு முறைமையும் பலமு முணர்த்துகின்றார்.

ஆற்றிடைப் புனரு னொற்றே யவிச்சின மாக வோடன்
மாற்றற வற்றே யீசன் மலர்ப்பதத் தறிவை வைத்துங்

தோற்றுற நிற்கை தானே தியானமித் தியானஞ் செய்தார்
மாற்றியே நரகிற் சுற்ற மவர்களைப் போல வாழ்வார்.

எ-து. ஆற்றி லிடைவிடாமற் சலம் எப்படி யோடுகின்றதோ அப்படியேதான் கருதின் பொருளை யிடைவிடாமற் றியானஞ்செய் திருத்தலே தியானயோகம், இத்தியானயோகத்தை யாரேனுமொருவர் செய்தால் அவருடைய சுற்றத்தா ரெல்லாரையும் நரகத்தினின் றெடுத்துச் சிவலோகத் திருத்தித் தன் தேகத்தைவிட் டவரைப் போன்றிருப்பார்கள் எ-று. (அ௰)

இனி மந்திரஞ் செபிக்குமுறை யுணர்த்துகின்றார்.

மானத மந்த மற்றைப் பாடித வசன மென்றுந்
தானொன்று மூன்றுஞ் சாற்று மந்திரந் தகைமை சார்ந்த
மானத மனத்தி னாலே மந்திரிப் பதுவே வாய்க்க
வேனைய மந்தஞ் சற்றே யிதழுற வியம்ப ருனே.

எ-து: வெளி. பாடிதம்-சொல்லல். (அ௧)

இதுவுமது.

அருகிருந் தவர்தாங் கேட்க வுரைநல்பா டணமே யாதி
திருவுருக் கருதிச் செப்பிற் சிறப்புடைத் தெல்லாந் தூல
வுரைதனிற் சிறப்பே மந்த வுரையது தன்னிற் சாலப்
பெருமையை யுடைத்தே நெஞ்சிற் பேசிடாப் பேச்சுத் தானே.

எ-து. வெளி. ஆதி திருவுருக்கருதிச் செப்பவென்பதனை முற்றுங் கூட்டுக. (அ௨)

மந்திரங்களை யுச்சரிக்குமிடத்து உச்சாரணபேத முணர்த்துகின்றார்.

உற்றிடு முயிரோவ் வொன்றே யுயர்ந்துயர்ந் தொருமூன் றாகு
மற்றைய வன்ன தாதி கூடலு மொன்பான் வாய்க்கும்
பற்றிட நாசி நீங்கப் பத்துட னெட்டா மீரா
றுற்றிடு முயிரு மோர்ந்துச் சரிக்கவே பலிக்கு மோதில்.

எ-து. அகரமுதலாகவிருக்கிற உயிரெழுத்துத் தனித்தனி யுச்சரிக்குமிடத்து ஒவ்வொன்று மும்மூன்று பேதமாம், அதாவது உயர வுச்சரிப்பது உதாத்தமென்றும், தாழ வுச்சரிப்பது அனுதாத்தமென்றும், சமமாயுச்சரிப்பது சொரிதமென்றும் சொல்லப்படும். இம் மூவகையும் ஒவ்வொன்று மும்மூன்றாக ஒன்பது வகையாம், அதாவது ஒரு மாத்திரை கொண்டது இலகுவென்றும், இரண்டுமாத்திரைகொண்டது குருவென்றும், மூன்றுமாத்திரைகொண்டது புலுதமென்றும் இப்படி யுதாத்தமூன்று மனுதாத்த மூன்றுஞ் சொரித மூன்றுமாக ஒன்பதாம் இந்த வொன்பதையும் நாசியைக்கூட்டி யுச்சரிக்குமிடத்து சானு நாசிகமெனப் பெயர்பெறும், நாசி கைகூடாம லுச்சரிக்கும்போது நிரனு நாசிகமெனப் பெயர் பெற்று இப்படிப் பதினெட்டுப் பேதமாம். அகரமுதலிய உயிரெழுத்துப் பதினாறுள் அலியெழு

த்து நாலு நீக்கி நின்ற பன்னிரண் டியெழுத்துஞ் செபகாலத்தில் அவ்வம்மந்திரத்துப் பிரயோகத்துக் கிடாகவறிந் துச்சரிக்கில். மந்திர சித்தி வரும். எ-று.

உதாத்தம், அனுதாத்தம், சொரிதமென்பவற்றை முறையே எடுத்தல், படுத்தல், நலிதலென்பர் தமிழ்நூலார். (அரு)

இப்படி மந்திரத்தின் விதியறிந் துச்சரிப்பவர்களுடைய
மகிமையை யுணர்த்துகின்றார்.

அந்தரத் தியங்க வல்ல வசுரரு மனுக மாட்டார்
சிந்திய சித்தக் கொத்தைப் பேய்களுந் தீண்ட மாட்டா
செந்தழ லென்ன வஞ்சித் தியவா யரவுந் தீண்டா
மந்திர நவிற்று வாரை மறலியு மஞ்சு மன்றே.

எ-து. முற்கூறிய விதியை யறிந்து மந்திர முச்சரிப்பவர்களை யாகாசத்தில் சஞ்சரிக்கு மிராக்ஷதர்களுங் கிட்டமாட்டார்கள், பலவகையான சித்தத்தையுடைய வறிவில்லாத பேய்களுந் தீண்டமாட்டா, பொல்லாத விடம் உள்ள வாயினையுடைய பாம்புகளுஞ் சிவந்த அக்கினியெனப் பயந்து தீண்டமாட்டா, இதுவல்லாமல் எல்லாரையும் வேதனைசெய்யு மெமராசனு மணுகமாட்டான் பயப்படுவான். எ-று. (அசு)

இதுவமது.

வினைகளு மஞ்சும் வெய்ய வினைஞரு மஞ்சு வார்க
ணினைவினி லிட்ட மெல்லா மவர்க்கொரு கணத்தி னேருந்
துனையவே சுழன்று போகுந் துட்டசார்த் தூல மற்று
மனிதரு மல்லா ரேபோ வமரரும் வாஞ்சிப் பாரே.

எ-து. வெளி. துனைவு, விரைவு. சார்த்தூலம், புலி. (அ௭)

சகற்பசெபஞ் செய்பவர்கள் பெறும்பய
னுணர்த்துகின்றார்.

பரமனை யொருமை கூரப் பாவனை பண்ணி யுள்ளே
யுரைதனி லதிக ரான மொழியவே விதியி னோக்கிப்
பரவிடும் பத்தர் முன்னைப் பாவமும் பறிப்பன் வேண்டும்
வரமெலாங் கொடுப்பன் வள்ளன் முத்தியு மவர்க்கே வாய்க்கும்.

எ-து. மேலாகிய சிவனை மிகுந்த வொருமைப்பாட்டுடன் மனத்தில் தியானம்செய்து அம்மந்திரத்தை யெற்றக்குறைவின்றி விதிப்படியுச்சரித்துத் தோத்திரம்செய்து பத்தர்கள் முற்சனனத்தில் செய்த பாவத்தையுந் தீர்ப்பான், அவர்கள் வேண்டும் வரத்தினையு மிம்மையிற் கொடுப்பான், மோட்சமு மவர்களுக்கே சித்தியாம். எ-று.

முன்னைப் பாவமுமென்ற வும்மை எதிரது தழீஇயது. பத்தர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தலால் வள்ளலெனச் சிறப்பித்தார். இதனைக்

"தற்பயன்குறியாதுவேண்டுவார் வேண்டியவாறேநல்கும் அருளுடைமை நோக்கி" அங்ஙனங் கூறியதென்பர் சிவஞான முனிவரும். வள்ளல் என வினை முடிக்க. (அ௬)

சமாதியி னிலக்கணங் கூறுகின்றார்.

பொருளெனு மாத்தி ரந்தாய்ப் புலனிறந் திரவி கண்ணுக்
கிருளறுத் திலங்க லென்ன வெண்ணகத் திலங்கி யெங்குந்
திரையறு வுததி யெல்லாந் தேங்கல்போல் விம்மிச் சித்தங்
கருதுரு வல்லா மூலங் கண்டிரண் டறல்ச மாதி.

எ-து. உண்மைப்பொருண் மாத்திரையாய்க் கருவிகரணாதிகளுடன் கூடாமல் சூரியப்பிரகாசங் கண்ணினிடத் திருளைப்போக்கிப் பிரகாசித்தல் போல் இவன் கருதப்பட்ட நினைவினுள்ளே பிரகாசித்து ஆரவாரிக்கும் அலைகளறச் சமுத்திரமெல்லாவிடங்களிலு நிறைதல்போல நிறைந்து பொலிந்து சித்தத்தாற் கருது முருவமல்லாத வெல்லாவற்றிற்குங் காரணமான சிவத்தைத் தரிசித் திரண்டற் றிருப்பதே சமாதி. எ-று. (அ௭)

சமாதிசித்தராகா தார்க்கு உபாயமுணர்த்துகின்றார்.

இடையினு மியங்கி டாதே பிங்கலை தனினும் வாயு
நடுமுனை நாடி தன்னி னடக்குமேற் சமாதி வாய்க்குந்
திடமுடைச் சிலையே யென்னச் சித்திர மெனவி ருப்பர்
விடயமு முணரா ரந்தக் கரணமும் வேறு பட்டே.

எ-து. யரோனு மொருவர் சமாதி செய்யுமிடத்துப் பிராணவாயு இடையினும் பிங்கலையினு மோடாமற் சுழுமுனைநாடியில் நடக்குமிடத்து விடயத்தில் சித்தத்தை வையாம லந்தக் கரணங்களும் பசுகரணத்தைப் பொருந்தாமற் சிவகரணங்களாய்க் கடினத்தையுடைய கல்லெனவுஞ் சித்திரமெனவு மிருந்து சமாதிசெய்தால் அவர்களுக்கே யச்சமாதி சித்தியாகும்.

சமாதியடைந்தோர் நன்மை யுணர்த்துகின்றார்.

அட்டமா சித்தி யென்ற வணிமாதி யவர்க்கே யாகு
மிட்டமாஞ் சந்தோ பேத மியற்றவும் வல்ல ரென்னின்
முட்டற வேத மாதி மொழியவும் வல்லர் நல்ல
துட்டியாற் சமாதி தன்னிற் றூங்கிய தூயோர் தாமே.

எ-து. நல்ல சந்தோஷமாகிய சமாதியைப் பொருந்திய மகாத்துமாக்கள் இட்டமா யிருக்கின்ற உத்தை முதலிய சந்தசு இருபத்தாறு பேதங்களையும் சொல்லவல்லவ ராவார்கள், அதுவல்லாமல் விசாரிக்குமிடத்து வேதாகம புராணங்க ளனைத்தையுங் கடைபோக ஓதவும் வல்லவராவார்கள், அவர்களுக்கே அணிமாமுதலிய வட்டமாசித்தியும் வந்து கை கூடும். எ-று.
'புத்தி காரிய' மாதலாற் றுட்டியெனச் சிறப்பித்தார். (அ௯)

முன் றொகுத்துப்போந்த அட்டமா சித்தியின் இலக்கண
மீதென் றுணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அணுவினுநுண் ணுருவுகொள லணிமாவா முளதறி
னதிவேகத் தியங்கியுந்தோய் வற்றவுட லகிமாத்
திணியபெரு வரையெனமெய்ச் சிறப்புறுகை மகிமாச்
சிந்தித்த பலமெவையுஞ் செறிந்துறுகை பிராத்தி
பிணைவிழியா ராயிரவ ரொடும்புணர்ச்சி பெறுகை
பிராகாமி யீசிதைதமா வலியுமடி பேணன்
மணமலர்போ லெவராலும் வாஞ்சிக்கப்படுகை
வசிவசிதை வலியாராற் றடுப்பரிய வாழ்வே.

எ-து. அணிமா பரமாவணுவைப் பற்ற அதிசூக்கும வடிவையெடுப்பது. இலகிமா மகத்தாகிய வேகத்துடன் சேற்றுக்குள் அழுந்தியிருந்தும் பிள்ளைப்பூச்சியைப்போற் சேறுபடாம லெழுந்திருப்பது. மகிமா கடினமான பெரிய மலைபோல வடிவெடுத்தல். பிராத்தி தான் யாதொரு வடிவங் கொள்ளவேண்டுமென்று மனத்திலே நினைத்தா லந்தந்த வடிவமா யந்தந்த போகத்தைப் புசித்திருத்தல். பிராகாமியம் மாய னேககாலத்தி லெப்படி பதினாயிரங் கோபாலபாலிகைகளைக் கூடி யவர்க்கவரா யிருந்ததுபோல் ஆயிரம் பெண்களை யேககாலத்திலே கூடியிருந்தனுபவித்தல். ஈசிதை சகல தேவர்களையுந் தன்னாணையா னடப்பித்துக்கொள்வது. வசித்தும் தன்னை யாவராலு மணத்தையுடைய புட்பமெப்படி வாஞ்சிக்கப்படுமோ அதுபோற் சகலலோகங்களையுந் தன்வசமாக்குவது. வசிதையாவது இவனுடைய பலத்தை மிகுந்த பலவான்களாலுந் தடுக்கப்படாமலிருத்தல். எ-று. (௯௰)

சமாதியை யடைந்தவர் சிறப்பும் பெறும் பயனு
முணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அடைந்திடுஞ் சமாதி யாளர்க் கமரருஞ் சிறப்புச் செய்வார்
திடம்படு சித்தத் தாலே யவற்றினைத் தீண்டா தார்க்கு
நடம்பயி னாதன் வேண்டும் வரத்தினை நல்கி யென்று
முடன்பிரி யாத பேறு முதவுவன் கருணை யுற்றே.

எ-து. சமாதியை யடைந்தவர்களுக்குத் தேவர்களுஞ் சிறப்புச் செய்வார்கள். திடமான சித்தத்தால் அவ்வட்டமாசித்தியை விரும்பாதவர்களுக்கு நடனஞ் செய்யுஞ் சிவபெருமான் கருணையமைந்து விரும்பிய வரங்களைக் கொடுத் தெக்காலமுந் தன்னிடத்தினின்று நீங்காத முத்தியையுங் கொடுப்பான். எ-று.

இதற்குத் தேவிகாலோத்தரத்தில் * 'அட்டமாசித்தி முதல்' என்னுஞ் செய்யுளாற் காண்க. (௧௧)

பிராணாயாம முதலியவற்றை யுத்தரோத்தர விசிட்டமாக
உணர்த்துகின்றார்.

அதிகமா யாமந் தன்னி லுறுவளை யடக்கு மாற்றால்
அதிகமே யதனி னேக்கை மனத்தினை யனகன் பாதத்
ததிகமே யதனிற் சிந்தத் தவிச்சினத் தியான மம்ம
வதிகமே யதனி னுள்ளத் தானைவைத் தறையும் வாக்கே.

எ-து. காமக்குரோதாதிகள் வழிச்செல்லாம னிறுத்துவதைப் பார்க்கிலும் பிராணாயாம மதிகம். அப்பிராணாயாமம் பன்னிரண்டுகொண்டது ஒரு தாரணை. அத்தாரணை பத்துக்கொண்டது கால மிடைவிடாமற் சிவத் தியானஞ் செய்வது. அதனைப் பார்க்கிலும் பன்னிரண்டு கொண்டது சமாதியென்பது, இதை இப்படிக் காலவளையறுத்து வேதாகமங்கள் சொல்லும். எ-று.
அம்ம எ-து. உரையசைக்கிளவி. (௧௨)

செபத்தியானங்களும் இவற்றாற் பெறும்பலனு மொன்றுக்கொன்
றதிகமென் றுணர்த்துகின்றார்.

வாக்கினு மதிக மூல வாக்கினு மனத்தி னானு
நோக்கரும் பொருளைத் தன்னு ளேக்கற நோக்கு நிட்டை
நோக்கிடிற் பலங்க டாமு நுவன்றவிம் முறையா னென்மை
யாக்குவ னவற்றை யெல்லா மன்பருக் கனாதி முத்தன்.

எ-து. மூலவாக்காகிய வைகரிவாக்காயுச்சரிக்கு மதனைப் பார்க்கிலும் மந்த வொலியாய் மந்திரத்தை யுச்சரிப்பது சிறந்தது. அதனினு மானதசெபம் சிறந்தது. அதனிலும் வன்னரூபங்களோடு மூர்த்தியை மனத்தாற் றியானித்த லதிகம். அத்தியானத்தைப் பற்ற அதற்கு மேலாகிய சமாதியைப் பாராதே பார்ப்பது சிறந்தது. முற்கூறிய செபமுதலியவற்றின் பலன்களை யடியவர்க்கு அநாதிமுத்தனாகிய பரமசிவன் கிரமத்தினால் அறிந்து அதததற்கேற்ற பலன்களைக் கொடுப்பான். எ-று.

ஈண்டு மூலவாக்கென்றது † வைகரிவாக்கினையென்க. (௧௩)

தேவிகாலோத்தரம் ௬௪-ம் செய்யுள்.

* அட்டமா சித்திமுத லனைத்துள்ள பேறுகளும்
கட்டமாங் கதிகடரும் பரகதிகா ணக்கொடா
மட்டிலா மாலையாய் வியாபகமா யறிவாகிக்
கிட்டலா காமுத்தி மற்றிவற்றாற் கிடையாதே.

† வைகரிவாக்கு, உதானவாயுவைக் கூடிய பிராணவாயு தன்னோடு கூடிவந்த வசனருக்குமை முதலான வாக்குகளைச் செவியின்பகுதியிலே கேட்க நினைத்த பொருள்களை யறிவிக்கும், இது தனக்கும் பிறருக்குங் கேட்க வுச்சரித்தல்.

இதன்மேற் சிவயோகத்தா னிட்டையடைந்தார் பெறும்
பல முணர்த்துகின்றார்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியச்சந்த விருத்தம்.

சிலரோண யோகர் திடமாக மேனி சிவலோக ராக மெனவே
பலகாலம் வாழ்வர் படிநீதி யாள்வர் பசுபாச நாச முறவே
நிலனீறு மாய வருகால மேய நிகழ்வாய காய மறவே
மலமாசு மாய வமலேசர் பாத மலர்சூடி வாழ்வர் மகிழ்வால்.

எ-து. சிவயோகத்தால் நிட்டையடைந்த ஞானயோகிகள் சிலர் சிவலோகத்தில் அச்சிவனுடைய சகளத்திருமேனி போலச் சித்திபெற்றுப் பலகாலம் வாழ்ந்து உலகமெங்கு நீதிமுறைமை யுடையராய்ச் சார்பைப் பற்றிவரும் பசுபாசங்கள் நாசமடையச் சஞ்சரித்திருந்து சருவசங்காரகாலத்தின் மலக்குற்ற நீங்கவும் நிகழுஞ் சரீர மாறவும் பரமசிவன் சீபாதமலரை நிரதிச யானந்தத்தோடு பொருந்தி வாழ்வார்கள். எ-று. (௯௪)

இனி இப்படிப்பட்ட சிவயோகிகளை வழிபட்ட வடியவர்கள்
பெறும்பய னுணர்த்துகின்றார்.

அறுமாசை கோப மனைவநாச மாக வறுமேறு பாவ மறலு
மறவேசெய் பாவ மறஞாக மாயு மதுமாய மாயை யகலு
மறமாயை தானு மகமாயை தீரு மதுதீர மூல மலமு
மறமூல நோயு மமலேசர் பாத மடைவார்கள் யோக ரடியார்.

எ-து. முன் கூறப்பட்ட ஞானயோகிகள் அடியவர்கள் ஞானவான்களுக்கு அருள்வரவே பணிவிடை செய்கையாற் பரமசிவன் அவர்களுக்குக் காமக்குரோத லோபமோக மதமாச்சரியமாகிய அறுவகைப் பொல்லாப்பு நெருங்காதவண்ண நீக்கும்; நீக்கவே ஆகாமியம் போம். போகவே அந்த ஞானிகள் அருணோக்கால் அநாதியேசெய்த அளவில்லாத சஞ்சித கன்மங்களுங் கெடும். கெடவே சரீர மாய்ந்துபோம். அச்சரீர மெடாமற் கன்மமு மாயாகாரியமுமான சரீரமுங் கெட்டுப்போம். போகவே யசுத்த மாயை நீங்கும். நீங்கவே சுத்தமாயைக் குள்ளீடாய் அசுத்தமாயா காரியங்களைச் செலுத்தும் சூக்குமை முதலான வாக்குக ளடங்கும். அடங்கவே சுத்தமாயை யடங்கும். அடங்கவே மூலமலமும்அகன்றுபோம். அம்மூலமலமாகிய நோயு மற்றுவிடவே நின்மலனாகிய பரமசிவன் சீபாதத்தை யடைவார்கள். எ-று. (௯௫)

இனிச் சிவன் சிவசத்தி விஷயம் வந்ததனால் ஆன்மா வான்ம
சத்தி விஷய முணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சிவன்றனக் கவனி யந்தஞ் செகமதி தால தேகம்
அவனுடற் றால மாறா ருருயிர் வர்க்கஞ் சூக்கம்

பவன்றனக் குயிர்க்கு மப்பாற் பராபரை பரம சூக்கம்
அவன்சிவன் பரம சத்தி தனையனு பவிப்ப னோர்ந்தே.

எ-து. பரமசிவனுக்கு நாததத்துவமுதல் பிருதிவி தத்துவம் வரையிலுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களிலு முண்டான அளவில்லாத வண்டங்களும் புவனங்களும், அளவில்லாத வான்மாக்களுடைய தூலதேகங்களெல்லா மதிதூலதேகமாயிருக்கும். அச்சிவனுக்குத்தூலதேகம் முப்பத்தாறுதத்துவங்களா யிருக்கும். அளவில்லாத வான்ம சொரூபங்களெல்லாம் அச்சிவனுக்குச்சூக்குமதேகமா யிருக்கும். அவ்வான்மசொரூபங்களுக்கு மேற்பட்டிருக்கின்ற மேலாகிய பரமசத்தி ஆன்மாக்கள் சொரூபத்திலு நுண்ணிதாய்ப் பரமசூக்குமமா யிருக்கும். அச்சிவன் தன் பராசத்தியினுடைய பேரின்பத்தையனுபவித்துக்கொண்டிருப்பான். எ-று. (௯௬)

இதுவுமது.

பாரியைப் பார்கண் பார்வைப் படாப்பதி விரதை தன்னை
யாரிய முணர்ந்த காந்த னவடனைத் திளைப்ப னோர்ந்தே
பாரியைப் பார்கண் பார்வைப் படாப்பரா சத்தி தன்னை
யாரிய னநாதி முத்த னவடனைத் திளைப்ப னோர்ந்தே.

எ-து. ஆன்ம சத்தியாகிய அந்தந்த வான்மாக்களுக்கே யுரித்தாய்ப் பிறரிடத்துச் செல்லாது பதிவிரதை யாகவே யிருக்கின்ற சத்தியை வடமொழியாகிய வாகமங்களை நன்றாய் ஆராய்ந்த ஞானியாகிய புருஷன் மலத்திரையங்களுக்கு நீங்கிச் சிவசாயுச்சியத்தைப் பெற்றபோது களங்கமற்ற வின்பம் அனுபவிப்பான், இனி யநாதி முத்தனாகி யிருக்கும் பரமசிவனும்

ஆகமங்கள் வடமொழியிலுள்ளனவாகலான் 'ஆரியமுணர்ந்த' என்றார்.

தன்னை விட்டு நீங்காதிருக்கும் பராசத்தி பேரின்பமனுபவிப்பான். எ-று.

ஆன்மா மல நீங்கினாற் றற்சொரூபந்தானே இன்பமாமெனத் தானிச்சித்தா லின்ப முண்டாகாது ஆன்மசத்தி யின்பமே யாமென் றுவமை முகத்தா லருளிச் செய்கிறார்.

மண்டலத் தவரு மற்றை யவர்களும் வாஞ்சை செய்தே
யொண்டொடி யாரை யின்ப முறுவரோ யவர்தா னொன்றிக்
கண்டிலந் தம்மைத் தாமே காமுறல் களிப்பார் தங்கள்
எண்டனக் கெட்டா னிச்சித் திறைவியைத் திளைக்கு மென்றும்.

எ-து. உலகத்தி லுள்ளவர்களு மற்றத் தேவர்கள் முதலானவரு மாசைப்பட்டு பெண்ணைப் புணர்ந்தே யின்பம் அடைவார்கள். அப்படி யல்லாமல் தன்னைத் தானிச்சித் தின்பம் உடையவர்களாகக் காணோம். அதுபோல ஆன்மாக்களுடைய அறிவுக்கெட்டாத பரமசிவன் தன்பராசத்தி யின்ப மனுபவிப்பான், ஆதலால் ஆன்மாக்களுடைய சத்தி மலத்தை நீங்கின சாயுச்சியத்தில் ஆன்மா தன் சத்தி யின்பத்தை யனுபவிப்பான். எ-று. (௯௮)

சிவனுஞ் சத்தியும் ஆன்மாக்களுக்கு மாதா பிதா வென்ப
தனை யுணர்த்துகின்றார்.

அணுக்களே யவர்க்கு மைந்த ரன்னையு மத்தன் றானு
மணுக்களுக் கார்வங் கூர்ந்தே யணுக்கடன் சத்தி யோடே
யணுக்களைப் புணர்ப்பர் சத்திப் பருவமு மறிந்து தாமே
யணுக்கடஞ் சத்தி தன்னைத் திளைப்பரஞ் சனமு மற்றே.

எ-து. ஆன்மாக்களே அச்சிவபெருமானுக்கு மைந்தர்கள், அவர்க ட்கு மாதாவும் பிதாவுமாகிய சிவபெருமானும் அவ்வான்மாக்களிடத்து விருப்ப மிகுந்து அவ்வான்மாக்களுடைய சத்தியுடன் அவ்வான்மாக்களைச் சத்தியின் பருவங்களையும் அறிந்து தாமே புணரச் செய்வார், அதனால் அவ் வான்மாக்கள் தங்கள் சத்தியை மல நீங்கி யனுபவிப்பார்கள். எ-று. (௬௬)

இச்சிறப்பினையுடைய சிவதரிசனப் பட்டவர்கள் முறை
மையை யுணர்த்துகின்றார்.

அநாதியே யமலன் றன்னை யகன்மனைக் காண்ப ரன்பர்
அநாதிய பசு பாசத்தை யறுத்தவ னருளி னாலே
அநாதியே யமலன் கன்ம மாயனு பவிப்ப ரென்பர்
அநாதிய பசு பாசத்தை யறுத்திலா ரறிவி லாரே.

எ-து. அன்பராகிய ஆன்மாக்கள் பரமசிவ னருளினால் அநாதியான பசுபாசங்களைப் போக்கி யநாதியே நின்மலனாகிய பரமசிவனைத் தன்னுள் ளத்தே தரிசிப்பர், அறிவில்லாத ஆன்மாக்கள் அநாதியாய் வரும் பசுபாசங் களை அவனருளாற் போக்கிக்கொள்ளமாட்டாமல் அவனிடத்துக் கலந்திருந் தும் அவனே செய்விக்கின்றானென்னும் அறிவை இழந்து யான் செய்தேன் பிறர் செய்தா ரென்னும் தற்போதத்தால் வருங் கன்மத்தை யனுபவித்தற் பொருட்டு இறந்து பிறந்து திரிவார்களென்று சொல்லுவார்கள் பெரியோ ர்கள். எ-று. (௱)

தூலசரீர முதல் ஒன்றுக்கொன்று அறியாவென்பதையு
மாணவநோய் போனவிடத்து ஆன்மா சிவதரிசனப்
படுமென்பதையு முணர்த்துகின்றார்.

நோக்குமோ தூல வாக்கை நுண்ட னுவதனைத் தூல
நோக்குநுண் டனுவுந் தன்னை நோக்குமோ மீது மாக்கை
நோக்குமா றுயிருந் தன்னை நோக்குமோ மீது மெல்ல
நோக்குநின் மலனை நோக்கு நோக்கறத் தனையு நோய்போய்.

எ-து. வெளி. நோக்குமோ என்புழி ஓகாரம் எதிர்மறைப் பொருளது..

முற்கூறிய சிவதரிசனப் படுவதைத் திட்டாந்த
முணர்த்துகின்றார்.

ஆக்கையி னவி யென்ன வமலனை றுயிரின் வாழ்வ
னோக்கிலர் மூல நோயால் நோலறி வடங்கி நொய்யார்

நோக்குவ ரமலன் மூல நோய்வலி யடக்கப் பாகத்
தோக்கொளி யுணர்வைச் சேர்ந்தா ரொனலுபசாரத் தொன்றும்.

எ-து. சரீரத்தில் ஆன்மா வியாபித்திருப்பதுபோல அவ்வான்மாவி னிடத்திலுஞ் சிவன் வியாபித்து நிற்பான். இவ்வாறு வியாபித்திருக்குஞ் சிவனை யாணவமல மேலிட்டால் இச்சாஞானக்கிரியைகளாற் றடைபட்டுக் கிஞ்சிக்ஞியர் தரிசிக்க மாட்டார்கள். பக்குவான்மாக்களுக்குப் பரமேசுரன் ஆணவமல சத்தியைக் கெடுத்துத் தாணிரண்டற நிற்பதனைத் தரிசிப்பிப்பான். இப்படி தரிசனப்பட்ட பிரகாசத்தையுடைய வறிவைப் பொருந்தினவர்கள் முன்னில்லாததை யிப்போது சென்று கூடினார்க ளென்பதல்ல. கண்ணிற் காசம்போனவே கண்ணுக்கு மிக்க பிரகாசமுண்டானதுபோல இவனுஞ் சிவனது பிரகாசத்தைப் பொருந்தினனென்பது உபசாரம். எ-று.

அதற்கோர் திட்டாந்த முணர்த்துகின்றார்.

இருட்டெலை யிருந்தான் றுஞ்சா விணைவிழி யொளியவ் வெல்லைப்
பொருட்டனைப் புணர்ந்துங் காணு தொளியுறிற் புதைந்து நின்ற
விருட்டற வுடலைக் காணு மேனைய யாவுங் காணும்
பொருட்டனிற் புணர்ச்சி கண்ட பொழுதெனப் புகல்வ ரேயோ

எ-து. ஒருவ னிருட்டறையில் விழித்திருக்கின்றவனுடைய கண்ணிற் பிரகாச மவ்விடத்தி லிருக்கும் பதார்த்தங்களுடன் சம்பந்தித் திருக்கையினு மறியான். பின்பு விளக்கு வந்து இருளைப்போக்க வப்போது தன் சரீரத்தையும் அங்குள்ள பதார்த்தங்களையுங் காண்பதுபோல ஆன்மாவினுடைய சத்தியைத் தடுத்த மலம் சிவசத்தியினால் நீங்க அது நீங்கின விடத்து ஆன்மதரிசன முண்டாம். அதற்குமேல் அருட்டெரிசனமுஞ் சிவதரிசனமும் பெற்று அதனுடனே கூடியிருப்பார்கள். எ-று. (௱௯)

ஆன்மா சிவனைக் கூடினனென்பதை ஏகதேசமென்று
ஆசங்கித்து அதனை மறுக்கின்றார்.

கூடுத லேக தேசி யெனுமிரு பொருட்கே கூடு
மோடிவான் றேடிக் கூடு மவரொவ ருயிரு ளேனம்
வாடலுந் தன்னுண் மெய்யை நோக்கற நோக்கு வானி
னீடொளி படல நீங்கக் கண்டனி னிகழு மன்றே.

எ-து. ஆன்மா சிவனைக் கூடின னெனி லேகதேசியுமாய்க் கடபடாதிகளைப் போலப் பிரிந்து இரண்டு பொருளாய் விடும், அது எப்படி எனில் வியாபியாயிருக்கின்ற ஆகாயத்தை விரைவில் தேடிக் கூடுகின்றே மென்கின்றவ னெவன்றான் சொல்லுவன் ஆனால் கூடுமென்று சாத்திரஞ் சொல்வ தெப்படி யெனில் ஆன்ம சத்தியைத் தடைசெய்யு மாணவ மலம் அருளாற்போகவே யப்பொழுது தற்சொரூபமும் விளங்கி அதற்கு மேலாகிய பதிசொரூபத்தைப் பாராமற் பார்த்திருப்பதுபோல வெனில் ஆகாச

த்தில் விளங்கும் சூரியகிரணம் மேகத்தினாலே தடைபட்டபோது காணாமல் அது நீங்கினபோது அப்பிரகாச மிவனுடைய கண்ணுக்குத் தோன்றுவது போல. எ-று. (௱௪)

பேதாபேதமென்பதை மறுத்து ஆன்மா சிவனுடைய
ஐக்கியத்தை யுணர்த்துகின்றார்.

பேதமே லேக தேசி முத்தியிற் பிரானு மேக
வாதமு மயக்கஞ் செம்பு மலினநா சகனு மொன்றோ
ஆதலா லிரண்டு மல்லா வபேதமே யமல னாவி
வேதாக ருயிருங் கண்ணும் வேறெனா வொன்று மென்னார்.

எ-து. ஆன்மாவுஞ் சிவனும் பேதமென்று நீ சொல்லுவையானால், ஏகதேசியாய் விடும், அப்படியல்ல; முத்தி திசையி லான்மாவுஞ் சிவனுமொன்றென்னி லேகான்மவாதமுமாய் மயக்கத்தையுங்கொடுத்துவிடும். அப்படியானாற் குற்றம் யாதெனிற் செம்புந் தன்னுடைய களிம்பைப்போக்கு மிரதகுளிகையுமொன் றல்லவே, ஆகையான் முற்கூறிய விரண்டுமில்லாமல் ஆன்மாவுஞ் சிவனு மபேதமாயே யிருக்கும், வேதாகமங்களை யுள்ளபடி யறிந்த ஞாதாக்க ளான்மப் பிரகாசமுங் கண்ணினுடைய பிரகாசமும் கலந்தவிடத் தவ்விரண்டையும் பிரித்து வேறென்று மொன்றென்றுஞ் சொல்லார்கள். எ-று.

உம்மையிறந்தது தழீஇயது. (௱௫)

இவ்வாறு கூறிய முத்தான்மாக்களிடத் துண்டாகிய வாணவமல
மவர்களை வேதனைசெய்யாமல் நாசமுமடையா னிற்கு
மென் றுணர்த்துகின்றார்

கடல்விடங் கொல்லுங் கணடார் தம்மையுங் கால காலன்
மிடறுறுங் கொல்ல வல்ல மிடலிலை யெற்றே யற்றே
யடியிணை சரண மென்றே யமலனை யடைந்தார் தங்க
ணடல்வலி யடங்கன் மூல மலத்தினுக் கழிவு மின்றே.

எ-து. தேவர்கள் திருப்பாற்கடலில் அமிர்தங் கடைந்தகாலத்தில் உண்டான ஆலகாலவிஷம் கண்டவர்களையுங் கொல்லு மித்தன்மையையுடைய விடங் காலனுக்குங் காலனாகிய பரமசிவன் கண்டத்தில்வந்து பொருந்தியிருக்கவு மவரை வாதியாது எப்படி தன்வலி கெட்டுநின்றதோ அப்படியே பரமசிவனுடைய சிபாதத்தை யடைந்த முத்தான்மாக்களை மலசத்தி வேதனைசெய்யாமற் றானுங் கெடாம னிற்கும். எ-று.

உம்மை உண்டாரையுங் கொல்லுமென்பது படநின்றது. மலங்களுட் சிறந்ததுபற்றி மூலமலமென்று சிறப்பித்தார். (௱௬)

அநாதியான வாணவமலசத்தி முத்தியிற் கெடுமென்று சொல்லின் ஆன்ம சத்தி சிவசத்தியுங் கெடாதோ வென்னக் கெடாதென் றுணர்த்துகின்றார்.

அடங்குமே லநாதி மூல மலவலி யதனைப் போல
வடங்கிடு மநாதி முத்தன் வலியணு வலியு மென்னி
லடங்கிடா தநாதி முத்தன் சத்தியாற் றடுக்கும் பாச
மடங்குநுண் ணாக்கை நீங்க வணுவறி வதீதத் தாசால்.

எ-து. அநாதியாயுள்ள மூல மலமாகிய வாணவ மலத்தின் சத்தி சிவசாயுச்சிய மடைந்த வான்மாக்களுக்கு அடங்குமென்றது ஆணவமலமொன்றா யிருக்கையாலேனு மவர்களை மறைப்பது தனித்தனிசத்தியாக மறைப்பிக்கும் ஆகையா லந்தச் சத்திமாத்திர மறையாம லந்தச்சத்தி கெட்டுப் போகாமலு மிருக்குமென்று சொன்னதைப்பற்றி, அநாதியாக மறைத்திருக்குஞ் சத்தி மறையாது தன் வலிகுன்றி யடங்குவதனால். அதுபோலவநாதி முத்தனாயிருக்கிற பரமசிவன் சத்தியு மநாதியாயுள்ள வான்மாவினுடைய சத்தியும் வலியுங்கெட் டடங்குமென்று நீசொல்லினா லநாதியே மலத்திரயமு நீங்கி விளங்கப்படும் சிவனுடையசத்தி யடங்காது. ஆணவ மலசத்தியாகிய பாசத்தை மேலிட வொட்டாமலான்மாவி னறிவு பிரகாசிப்பிக்கு நுண்ணிதாகிய சூக்குமதேக நீங்கிய வதீதாவத்தையி லாணவமலத்தால் ஆன்மாவினுடைய வறிவற் றடங்கும். எ-று.

(இதன்கருத்து) ஆன்மா மோக்ஷத்தைப் பெற்றவிடத்து ஆணவசத்திகெடாம லடங்குமென்றுஞ் சகலத்திற் றத்துவங்களாகிய சூக்குமதேகங் கூடிய விடத்து ஆன்மசத்திக்கும் விளக்க முண்டாயுந் தத்துவங்களாகிய சூக்கும தேக நீங்கிய வதீதாவத்தையில் மலசத்தி மறைப்பால் ஆன்மசத்தி யடங்கி யிருக்குமென்றும் பாசசத்திகளுக்குக் கேடில்லை யென்றுஞ் சொன்னதாம். (௱எ)

மேலான்மா பரமசிவனுடைய வயிக்கிய முணர்த்துகின்றார்.

ஏகமன் றிறைவ னாவி யிரண்டுமன் றபேத மென்றே
யாகம வேத மெல்லா மயிக்கிய பதத்தி னாலே
யூகமுள் ளவர்தம் முள்ளத் துணர்த்திடும் பிரத்தி யாயத்
தாகமு மற்றொன் றென்ப ரயிக்கிய பதார்த்த முணர்

எ-து. ஆன்மாவுஞ்சிவனு மொன்றல்ல இரண்டுமல்ல என்று வேதாகமங்களெல்லா மவர்களிருக்கின்றவயிக்கியத்தினால் அபேதமென்றே சொல்லும். இப்படி விவேகித்துப் பிரத்தியமென்னுஞ் சத்தத்தினால் இதற்கு அயிக்கியபதமென்ற பதத்தின் அருத்தத்தை யொன்றென்று சொல்லுவார்கள். எ-று.

பிரத்யமென்பது-அறிவு. (௱அ)

முற்கூறிய வயிக்கியத்துக் குதாரண முணர்த்துகின்றார்.

தருநிழ லொன்றோ வன்றே தனித்திரு பொருளோ வன்றே
பரமனு முயிரு மிந்தப் படியென வபேதம் பாரார்
ஒருபுடை யேக தேச மெனவுவ மான மோரார்
அரிவைசொல் லமிர்த மென்று ணவிணு லறிவ தோசொல்.

எ-து. மரமு நிழலு மொன்றென்று சொல்லப் படமாட்டா அல்லாமல் இரண்டென்றுஞ் சொல்லப் படமாட்டா ஆதலாலிவை யிரண்டுமொன்றுக்கொன்று இப்படி பிறிக்கப்படா திருந்தது போலப் பரமசிவனு மான்மாவு மிப்படி பிறிக்கப்படாம லிருக்கிற வயிக்கியத்தை விசாரித்தறியார்கள். எந்தவிடத்திலுந் திட்டாந்தம் சொல்லுவதெல்லாம் ஏகதேச திட்டாந்தமே அல்லாமல் முற்றுமல்ல. அது எப்படியெனில் இவள்சொல் அமிர்தம் போலவிருக்குமென்றால் அதை நாவினுற்பருகி அதன் சுவை இன்னபடி என்று சொல்லப்படாது. எ-று. (௱௬)

இப்படி ஆன்மாவுக்குஞ் சிவனுக்குமிருக்கிற வயிக்கத்தை அறியாமல் மாயாவாதி யொன்றென்று சொல்வதை மறுத் துணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

அத்துவித மென்றசொலு முன்முறையி னுய்க
வத்துவய மென்றசொலு மம்முறையி னுய்க
முத்தனிணை யற்றொருவ னென்றுமொழி வேதத்
தத்தமறி யாரமல னுவிமல மென்பார்.

எ-து. அத்துவிதமென்ற சொற்பொருளை முன்னே ஆசிரியர்கள் சொன்ன முறைமையில் விசாரிக்க, அத்துவயமென்ற சொற்பொருளையு மவ்வாறே விசாரித்தறிக, அநாதிமல முத்தனும் தனக்கொப் பொருவருமில்லாதவனுமென்று வேதமெடுத்துக்கூறு மவ்வுண்மைப் பொருளையறியாமல் நின்மலனுகிய பரமசிவனையுஞ் சமலனுகிய வான்மாவையும் அவித்தையாகிய மலத்தையு மொன்றென்று கூறுவது கூடாது. எ-று.

* இதனைப் பண்ணையு மோசையும் போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம், என்னுந் திருவாக்காலுந் தெளிக. (௱௭)

அதற் குதாரணமாக ஆறு செய்யுளா லுணர்த்துகின்றார்.

பார்த்திவனு மேவல்வினை பற்றினரும் வாழ்வுந்
தீர்த்தரச னேவலிடா சேருநரு மொன்றே

---

சிவஞானபோதம் உ-ம் சூத்திரத்து நேரிசை வெண்பா.

* பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணனு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்
றத்துவித மென்றறையு மாங்கு.

வார்த்தவுட லோவறிவ னுருயி ரனைத்து.
மூர்த்தமவன் மூர்த்தியென வோர்கவறு மோகம்.

எ-து. அரசனுமரசனுக் கேவற்றொழில் செய்வோரும் அவனுடைய நால்வகைச் சேனையு முலகத்துள்ள வான்மாக்களுக் கிடர்வந்தபோது தீர்த்துமவர்கள் செய்த குற்றத்தை யறிந்து தண்டித்தும் போக்கப்படுவதால் அரசனும் அவனேவற் றொழில் செய்யும் அப்பிராணிகளு மொன்றல்லவே அது வல்லாமல் சத்ததாதுக்களா லெடுக்கப்பட்ட சரீரமு மான்மாவல்லவே. ஆனால் அது எப்படியெனில் எல்லா ஆன்மாக்களு மவனுக்கு வடிவாகவு மச்சிவ னவ்வடிவுக்கு மூர்த்திமானாகவு மிருக்கு முறைமையை விசாரித்தறிவையானா லுன்னிடத் துண்டாகிய அஞ்ஞானம் போம். எ-று.

ஓகாரம் எதிர்மறை. (௱௰௧)

ஊடலிரு வர்க்கொழிய வுண்டுகொ லொருத்தர்க்
கேடணையு மேவலெழு வாயுமிய னாலு
மூடருண ரார்மலைவு முன்னொடுபி னென்றோ
தேடுவர் சிவன்றனையு மாதரவு செய்தே.

எ-து. இருவர்க்கே சண்டை யொழிந்து ஒருவர்க்கது வில்லையே அவ் * வேடணையு மொருவன் போ வாவென் றேவுதல் முதலியனவும் இம்முறைமைகளைப் பிரித்து முன்னோடு பின்பொருள் கோள்மலை வில்லாமல் சொல்லுஞ் சாத்திரத்தி னுண்மையு முணராமல் அறிவற்றவர்கள் சிவனு மான்மாவு மொன்றானாற் சிவனை ஆதரவுடன் கூடவேண்டுமென்று விசாரிப்பது எதற்கு. எ-று.

ஓகாரம் வினாப்பொருளது. (௱௰௨)

பொத்தையுட னூனுமற வேயருள் புரிந்து
தத்துவ மசிப்பொரு டருங்குரவ னொன்
றத்தவுந யத்தவல மாசினைய றுத்தே
சித்திபெறு மோபிரம மென்கொலிது செப்பாய்.

எ-து. பொந்துபோல ஊன் அமைந்த உடலை விடுவித்துத் தத்துவமசியென்னு மகா வாக்கியப்பொருளை யுபதேசித் தனுக்கிரகஞ் செய்யு மாசிரியனெவனென்று தேடி அதனாற் றற்பதமாகிய சிவனையுந்தொம்பதமாகிய வான்மாவையும் அசிபதத்தா லயிக்கியம் செய்யப்பட்டு இருந்த வுபதேசகாலத்தாற் பொல்லாத அஞ்ஞானபோக்கிச் சித்தியை யடையுமோ பிரமம் நீ சொல்லுவது வென்னை சொல்வாயாக. எ-று.

* எடணை-விருப்பம். அது அருத்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை என மூவகையாம்.

ஓகாரம் எதிர்மறை. கொல் ஐயத்தின்கண் வந்தது * "தொம்பதந் தற்பதம்-சீர்நந்திதானே" என்னுந் திருமந்திரத்தாற் காண்க. (௩௰௩)

விண்டனு பவத்தெழு விருந்தமெழு வாது
மண்டமவ னன்றவன தாகமய லென்றே
கொண்டவர்கள் விண்டவர்கள் கூடினர்க ளாகம்
பண்டைய பராபர னிணைக்கமல பாதம்.

எ-து. முற்கூறிய தத்துவமசியி லயிக்கியத்தை யொன்றென்னை யானு லுன்னிடத்தில் விளங்கிய வனுபவத்துக்கு மாறுபாடாய்விடும். அண்டச முதலாகிய நால்வகைத்தோற்றமு மவனிடத்திற் றோன்றியதல்ல.. அதற்கு அவன் பின்னமென்று யார்கொண்டவர்கள்; அவர்களே சரீரபந்த நீங்கினவர்கள். ஆகையால் அநாதியான பரமசிவன்சீபாத மடைந்தவர்கள். எ-று.

மோசக னுயிர்க்கிரு ளநாதிமல முத்தன்
பேசுமியல் வேதமொழி பெற்றுமறி வற்றோர்
மாசறிவி னர்சிலர்கண் மற்றையியல் பெற்றோர்
தேசில ருணர்ச்சியினு மென்றறிக திண்ணம்.

எ-து. ஆன்மாக்களுக் காணவமலத்தைப் போக்குகின்ற அநாதியே மலமில்லாத சிவபிரா னருளிச்செய்த வேதவாக்கியத்தி னுண்மையைப் பெற்றிருந்து மறிவில்லாதவர்களே யான்மாவுஞ் சிவனுமொன் றென்பார்கள்; அதுவல்லாமல் வியாழபகவான் முதலானோரால் சொல்லப்பட்ட குற்றமமைந்த சாத்திரத்தையோதி அதனுண்மையை அறிந்தார்களேயானாலும் அவர்களறிவு விளங்கினவரோ யல்லவென்று நிச்சயமாயறி. எ-று. (௩௰௪)

ஆக்கைசட மாருயிரை யின்றியசை யாது
நோக்கிலர்கொல் பாவையுட லாவியெனு நொய்யார்
சாக்கியரு மற்றையர்க டாமுமுரை யானு
மேக்கில ருணர்ச்சியினு மென்னையவர் வீடே.

எ-து. சரீரம் சடமாகையால் ஆன்மாவை யல்லாம லொருக்காலுஞ் சேட்டிக்கமாட்டாது, அதனை விசாரிக்கிலர் கொல்லோ, மரப்பாவை சூத்திரதாரியை யல்லாமல் சேட்டிக்கமாட்டாதுபோல. அதுவல்லாமல் அற்பமாயிருக்கிற சமணருமற்ற சமயிகளும் சாத்திரத்தைப் படித்தறிந்தார்களே யானாலும் அவர்கள் தங்கள் தங்கள் சமயமுத்திகளைச் சாதித்தார்களே யானு

திருமந்திரம் முத்துரியம் எ-ம் கவி.

* தொம்பதந் தற்பதந் தொன்முத்து ரியம்போ
னம்பிய மூன்றுந் துரியத்து நற்று
வம்புலி யுன்னு வதிருக்கத் தப்பாலைச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே.

லுந் திரும்புமுத்தி யாதலா லது பரமமான முத்தி யல்லாமையால் அவ்வழி யில்லாதவர்கள் சொல்லுகிற முத்தி யெப்படிதான் கூடும். எ-று. (௩௰௬)

மேற்பர முத்திகளை மறுத்துத் தமது முத்தி யீதென்
றுணர்த்துகின்றார்.

கந்தமறல் பந்தமறல் கட்டுருவெண் சித்தி
யந்தமறி வூறுகட காசமற லப்பு
முந்தவளை யுற்றதிரண் முத்தியல முத்தி
பந்தமற வின்புறல்பி றப்பிலி பதத்தே.

எ-து, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்கிற பஞ்ச கந்தமுங் கெடுவதே முத்தியென்று சொல்லும் புத்தன் முத்தியும், வினையில் வெவ்வேறு உருவங்கொள்ளு மணிமாமுதற் பிராகாமிய மீறாகிய அட்டமாசித்தியென்று சொல்லப்பட்ட யோகிகள் முத்தியும், ஆகாயம் பாத்திரவசத்தால் கடாகாச மடாகாசமா யிரண்டாய் நின்றாற்போலவு மொரு சந்திர னுபாதிவசத்தாற் சார்வங்கடோறும் பலவாய் நின்று தோன்றினாற் போலவும், பிரமம் மாயாகாரியங்களான தேகங்கடோறு நின்று முத்தியி லொன்றுமென்னு மாயாதி முத்தியும்; மகாமேருவையடைந்த காகம் பொன்னிறமானாற்போலவும், உப்பளத்தையடைந்த திரணாதிக ளவ் வுப்பேயானது போலவுந் தன்மைகெட்டு ஒன்றுமென்னும் சிவசமவாதி முத்தியுமிவைக ளற்ப முத்தி யாதலா லிவை பரமமுத்தி யல்ல: ஆனால் உமது முத்தி யாதெனில், ஆணவாதி பந்த நீங்கிச் சனனமரணமில்லாத சிவனது சீபாதத்தை யடைந்து சிவானந்தானுபூதியைத் திளைத்திருப்பதே முத்தி.

அம்முத்தியை யடைந்தவர்கள் திரும்பார்க ளென்பதூஉம்
சிருட்டியாதி கிருத்தியங்களைச் செய்யார்க
ளென்பதூஉ முணர்த்துகின்றார்.

விண்டவர்கண் மூலமலம் வீற்றிவர மீளார்
பண்டைமுறை நாடுடல் படைப்புநிலை யிறுங்
கண்டனையி முந்தவுயிர் காரணனி டத்தே
யுண்டுலவி டாதகிழி யுற்றபொரு ளொத்தே.

எ-து. கண்ணிற் காசம்போக்கக் கண்விளங்கியதுபோல மூலமலத்தை நீங்கிச் சருவஞ்ஞத்துவத்தை யடைந்தவர்கள் ஆற்றநீர் சமுத்திரத்தை யடைந்தா லது மீளாதவாறுபோல மோக்ஷத்தைப்பெற்று மீண்டுவந் துடலெடுக்கார்கள். அதுவல்லாமல் சிருட்டிமுதலிய கிருத்தியங்களையும் பண்ணார்கள், மீளாதமுத்தியடைவார்க ளானாற் சிவனுக்குப் பஞ்சகிருத்திய மெப்படியெனி லநாதியே யான்மாக்க ளளவற் றிருப்பார்கள், அது எவ்வாறெனி லுலவாக்கிழி யெடுக்கவெடுக்க யெப்படி தொலையாம லிருக்குமோ அதுபோல முத்தியடைந்த வான்மாக்களுக்கு மளவே யில்லை. இனி முத்தியடையப் போன்ற வான்மாக்களுக்கு மளவில்லை. எ-று.

*பிறந்தநாள் மேலும் பிறக்குநாள், போலுந், துறந்தோர் துறப்போர் தொகை. என்னுந் திருவாக்கினுனுமுணர்க. (௱௰௮)

ஆசிரியன் உபதேசத்தை பக்குவான்மாக்களுக் குணர்த்த
வேண்டு மென்பதும். அபக்குவர்க் குணர்த்தினுற்
குற்றமென்பது முணர்த்துகின்றார்.

ஆக்கையினை யைந்தலைய நாகமென வஞ்சி
நீக்கநினை வார்க்குருகி நேயமுட னிந்த
வாக்கறைக மற்றையர் தமக்கறையு மாந்தர்
தீக்குழியி னுழ்ந்தழிவர் சேர்ந்தவரு மாய்ந்தே

எ-து. வெளி. சேர்ந்தவர் என்பது கேட்டமாணுக்கனை. (௱௰௯)

பக்குவான்மாக்களுக்குப் போதிக்காத வாசிரியனுக்குக்
குற்ற முணர்த்துகின்றார்.

உற்றசிறை சாலையென வூனுடல்வெ றுத்தே
நெற்றிவிழி நின்மலன தாளிணையி னேய
முற்றவர்த மக்குருகி யோதுதல்செ யாத
குற்றமுடை யானுமழல் வீழ்வனயர் கொண்டே.

எ-து. வெளி. (௱௨௰)

பக்குவர்க்குப்போதித்த வாசிரியரு மவரிடத்துக்கேட்ட
மாணுக்கரும் பெறும்பய னுணர்த்துகின்றார்.

ஆசிலர் தமக்குருகி யன்புட னுணர்த்துந்
தேசிகனுந் தேர்ந்தவருஞ் சேர்ந்துசிவ லோகம்
வாசமலர் மேலுறைவர் மாசறலு மந்தத்
திசனடி கணடனுப விப்பர்தம தின்பம்.

எ-து. வெளி (௱௨௧)

பரசமயிகள் வந்து மேலிட்டவிடத்து அவர்களைக் கண்டிக்கு
மாற்றல் தன்னிடத் துண்டாயிருக்கவு மவர்களைக்
கண்டியா திருந்தவர்களுக்குக் குற்றம் ஒப்பின்
முடித்தலென்னுந் தந்திரவுத்தியா
லுணர்த்துகின்றார்.

நிறுத்திட வலானமல ஞானெறியை யென்று
மறுத்திட வலானவல மாக்கமய வூற்றே

* திருவருட்பயன் உயிரவை நிலை.-க.

நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரி சன்னேச
மறுத்தவனை மாய்க்கைகரி சல்லவற மாமே.

எ-து. புறச்சமயிகளாகிய பொல்லாதோர் தத்தங் கோட்பாடே சிறந்ததாகச் சாதிக்கவந்தவிடத்துப் பரமேச னருளிச்செய்த திவ்யாகமத்தையுள்ளவாறறிந்த வாசிரியன் அந்தந்த மார்க்க நூல்களைக் கண்டித்துத் தன் மதத்தைத் தாபிக்கவல்லவனு யிருந்துந் தன்னுடையமதம் மேலான மதமென்று சாதித்து நிறுத்திவிடா திருப்பானுனல் அப்பாவியினிடத்து நேசம்வையாம லவனைச் சிபென் றுவர்த்தல் குற்றமல்ல, அதுவேசிறந்த தருமம். எ-று. (௧௨௨)

வேதாகமத்தை யுணர்ந்தவர்கள் அறமுதலிய மூன்றைத் தமிழாற்
சொல்வதன்று வீட்டுநெறியைத் தமிழாற் சொல்லார்கள்
சொல்லவேண்டு மிடத்துக் கவுடமாக வுரை செய்க
வென் றுணர்த்துகின்றார்.

செந்தமிழி னின்பமிறு வாயலது செப்பார்
அந்தமிலி யாதியுமி லானுரையை யாய்ந்தார்
செந்தமிழி னுங்கவுட மாகவுரை செய்தார்
இந்தயுக காலகவி யீடறநல் வீடும்.

எ-து. தேவர் செந்தமிழில் அறத்துப்பால் முதலிய முப்பாலுமோதி வீட்டுநெறியை விரித்துச் சொன்னாரில்லை. சிவவாக்கியத்தையுணர்ந்தவராதலாற் பக்குவான்மாக்களே மோக்ஷமடையும்பொருட்டுங் கலிகாலத்தின் வலி தொலைதற் பொருட்டுங் கவுடமாக மெய்யுணர்தலென்னு மதிகாரத்தாற்கூறினார். ஆளுடையதேவ நாயனார் திருவுந்தியாவொன்னுஞ் சாத்திரத்தைக் கூறியதனாற் றமிழாற் கூறினுங் குற்றமில்லை. எ-று.

'வீடு என்பது சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத் தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன எனை மூன்றுமேயாம்' என்பர் திருவள்ளுவனார்க்குப் பரிமேலழகரும். எனை மூன்றென்பது அறம், பொருள் இன்பங்களை. நூல்களென்றது தமிழ்நூலை.

முடிந்தது முடித்தலென்னுந் தந்திர வுத்தியா
லுணர்த்துகின்றார்.

என்றுசிவ ஞானவர யோகமு மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யென்றுணா நிர்க்குண னினைந்தே.

ஏ-து. வெளி. (௱௨௩)

சிவத்துதி யுணர்த்துகின்றார்.

* கட்டளைக்கலிப்பா.

மைய னீக்கி யெனக்கருள் வள்ளலே
  மாற மாசுட லாகிய வள்ளலே
யையவர் தம்மை யடர்த்து மடக்கியே
  யால நஞ்ச மிடற்று மடக்கியே
பைய பாம்பணி யாகப் பரிப்பனே
  பாண்டி யற்கு முடல்வெப் பரிப்பனே
யையம் பெய்பவர் நாணு மறுப்பனே
  யருச்சு னன்றனு நாணும றுப்பனே.

எ-று. மலக்குற்றம் அமைந்த வுடலாகிய சேறு மாறும்படி மயக்கத்தைக் கெடுத் தெனக் கருளைச் செய்யும் வள்ளலே, என்னிடத் துண்டாகிய வைம்புல வேடர்களைக் கொன்று மடக்கினவனே, ஆலகால விடத்தை யுண்டு கண்டத்தில் அடக்கினவனே, படத்தையுடைய பாம்பை ஆபரணமாகத் தரித்தவனே, பாண்டியனுக்கு உடலி லுண்டாகிய வெப்புநோயைக் கெடுத்தவனே, பிச்சையிடும் இருடிபத்தினிமார்கள் நாணத்தையும் விலக்கினவனே, அருச்சுனன் வின்னாணினையு மறுத்தவனே. எ-று.

ஐயம் என்றது துறவற வொழுக்கி னின்றார்க் கிடு முணவை. ஐயம்பு எய்பவர் எனக்கொண்டு மதனனை யெனக் கொள்ளாமோ வெனின் அவனைப் பொடிபடுத்திய தல்லது வில்லின் நாணைச் சிதைத்த வின்மையிற் குற்றமென்க. (௱௨௬)

இதுவுமது.

கங்கை செஞ்சடை தாங்கிய கண்டனே
  காள வல்விட முண்டிருள் கண்டனே
மங்கை மாதவஞ் செய்திட வாடியே
  மதித்து மற்றவ னோடுற வாடியே
சங்க மேவித் தருந்தமிழ்ச் சைவனே
  தவிரி னன்றற யானு மசைவனே
திங்க ளேரினைப் பூதிக்குஞ் செல்வனே
  திளைத்து நின்னைப் பவத்தினுஞ் செல்வனே.

எ-து. கங்கையைச் சிவந்த சடையிற் புனைந்து எங்கு நிறைந்தவனே, கருமையான வலிமிகுந்த விடத்தை யுண்டிருண்ட கண்ட முடைய

* மாச்சீர்முன்வரு நாற்சீரடியே, நேர்முதலிளைமுதல் னிரனிரையானே, பதினேழெழுத்தும் பன்னீரெழுத்து, மியைந்தாயடியாய் நடந்தஃதிரட்டித், தொத்துநான்கிறுவது கட்டளைக்கலிப்பா. என்பவாகலின்.

வனே, மங்கையாகிய உமாதேவி திருமேனி வருந்தி யரியதவம் செய்யவ தையறிந்து அவளோடு முறவாடினவனே, மதுரையிற் பொய்யடிமையில்லாப் புலவராகிய சங்கத்தாரோடு இறையனுரென்னுந் தெய்வப் புலவராகி யெழுந்தருளித் தமிழிலக்கணத்தை யுதவுஞ் சிவபெருமானே, நீங்குதற்கரிய நன்மைகள்கெட சொர்க்க நரகங்களில்யானுந் திரிபவனே, திங்களூரி னவதரித்த * அப்பூதிநாயனுருக்குச் செல்வமாகி யிருந்தவனே, உன்னருளாலுன்னைக் கூடினபின்பு பிறவியினிடத்துஞ் செல்வேனே செல்லேன். எ-று.

ஏகாரம் எதிர்மறை; உன்னருளா லுன்னைக் கூடுதலென்பதனை 'அவனருளாலே யவன்றாள் வணங்கி, யென்பதனு லுணர்க. (௱௨௬)

குமரன்றுதி யுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

உமையாள் புதல்வா வுனதா ளிணையே
யிமையோர் தொழவே யெதிர்சூ ரனையுங்
குமையா வவர்வாழ் வருள்கூ ரியனே
யெமையா ளெமையா ளிடரோ டிடவே.

எ-து. வெளி. (௱௨௭)

அகத்தியர் துதி யுணர்த்துகின்றார்.

அதிபா தகமா கியபா வவிதம்
புதுமா மலர்சூ டுதல்போற் புரிவேன்
விதியே விழையேன் வினைவே ரரிவாய்
பொதிமா மலைமா தவனே புனிதா.

எ-து. வெளி. விதியே விழையேன் எ-து. சற்கருமத்தி லாசைப்படேன். (௱௨௮)

---

பத்தாவது

சிவஞானயோகவியல்

முற்றிற்று.

---

* அப்பூதிநாயனுக்குச் செல்வமாகியிருந்தவனென்பதனை திருநாவுக்கரசு சுவாமிக ளருளிச்செய்தமையாலு முணர்க.

திருப்பழனம் பண் பழந்தக்கராகம்.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தா
னஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே. (௰)

உ

சிவமயம்.

# பதினொன்றாவது

# பரிகாரவியல்.

இவ்வோத் தென்னுதலிற்றோ வெனின், ஒத்து நுதலிய நூஉ மோத்தி னது பெயருரைக்கவே விளங்கும். ஆயினிவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின் பரிகாரவியலென்னும் பெயர்த்து. ஆன்மாக்களுக்கு வாதனைவலியால் இருவினைப் பயன்களைப் புசிக்குமிடத் தேறியபாவம் போம்படிப் பரிகாரத்தைக் கூறிய தென்றறிக. இத்தலைச் செய்யுளென் னுதலிற்றோவெனின் பரிகார வகைகளிற் சிறிது தொகுத் துணர்த்துதனுதலிற்று.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அறிந்திடுக பரிகார மவலவினை யறுத்தற்
  கறைந்திடுவா மருமுனிவ வாகார சுத்தி
நிறைந்தபுன லான்மாசு நீக்கலுடற் காடை
  நிகழ்நீரி னமுழ்க்கறுக்கை நீசரைப்பே சிடினும்
பிறந்திறந்த வாசூசம் பேணியறன் மூழ்கும்
  பெற்றியெனப் பேசியவிம் முறையனைத்தும் பெற்றார்
சிறந்தபரி காரத்தைச் செய்தவல மான
  தீவினையிற் றீர்ந்திடுவர் நன்பலமுஞ் செறிவார்.

எ-து. சிறப்பினையுடைய அகத்தியமுனிவனே, ஆன்மாக்கள் செய்த பாவம்போம்படி பரிகாரஞ் சொல்லுவாம், அதனை யறி. அது எவ்வாறென்னனின் உடலில் நவத்துவாரத்தா லுண்டாங் குற்றமும், சுத்தியாகும் பொருட்டு நதிமுதலியவற்றின் மூழ்காமல் வெந்நீரின் மூழ்குங் குற்றமும் புடவையிற் சுக்கிலமுதலியன பட்ட குற்றமும், இழிந்த சாதிகளுடன் பேசின குற்றமும், அவர்களுடைமையைப் புசித்த குற்றமும் அந்தணர் முதலானோர்க் குண்டாகிய இருவகையாசூசமும் போனவாறே முழுகிச் சுத்தராகாத குற்றமுமாகிய இவ்வாறு கூறப்பட்ட குற்றங்களைச் செய்தார் அக்குற்றம்போம்படி அதற்கேற்ற பரிகாரஞ்செய்து பாவம்போனவாறே யோடவைத்த பொன்போல் விளங்கிச் சுத்தாத்துவாவி லுண்டாகிய போகந் துய்ப்பார்கள். எ-று.

நன்பலருமென்ற வும்மையான் மோக்ஷமுமென்பதுங் கொள்க. (௧)

அப்பரிகாரஞ் செய்தற் கதிகாரிகளைப் பிரித்
துணர்த்துகின்றார்.

பரிகாரங் கிருகபதிக் கும்பிரம சாரிக்கும்
  பகர்ந்திடுவாம் பவுதிகனே நயிட்டிகனே யென்று
விரதியரு மிருவரிரு விதங்காமா காம
  மெனவினையுங் கிருகபதி யகாமவினை யினுக்குப்
பரிகாரம் பகர்ந்திடுவர் மொழிபாலுங் காமம்
  பார்க்கவிரு குணிதமெனப் பவுதிகனுக் கிரட்டி
கிருகபதி யினும்பரம விரதிக்கு நான்கு
  கெழுமுமென வறிகவினைப் பாவங்கள் கெடுப்பார்.

எ-து. ஈண்டியாம் இல்வாழ்வானுக்கும் பிரமசாரிக்கும் பரிகாரஞ் சொல்வாம், அப்பிரமசாரி பவுதிகப்பிரமசாரியு நயிட்டிகப் பிரமசாரியுமென விருவகையர், அவர் யாவரெனின் நூலில்விதித்தகாலமளவும் பிரமசரிய விரதத்தை யனுட்டித்து அது முடிந்தவாறே விவாகஞ்செய்பவன் பவுதிகப்பிரமசாரி. மரணாந்தம்வரையும் பிரமசரியவிரதியாய் விவாகஞ்செய்யாம லிருக்கின்றவன் நயிட்டிகப் பிரமசாரி. இவர்கள் செய்கின்ற கருமமும் புத்திபூருவமெனவும் அபுத்திபூருவமெனவுமிருவகைப்படும், ஈண்டு இல்வாழ்வான் அபுத்தி பூருவமாய்ச்செய்த கருமத்துக்கே பரிகாரஞ் சொல்வாம், ஒழிபென்னும் பிரமாணத்தால் முற்கூறிய திலிரட்டி புத்திபூருவமாகச்செய்த கருமத்துக்கென்றறிக, கிருகத்தனுக்கு அபுத்திபூருவத்துக்குச் சொன்ன திலிருமடங்கு பவுதிகன் செய்த அபுத்திபூருவத்திற்குமென்றறிக. அப்பவுதிகனுக்குச்சொன்ன திலிருமடங்கு நயிட்டிகப் பிரமசாரிசெய்யும் அபுத்தி பூருவத்திற்கென்றறிக, அதிலிருமடங்குபுத்திபூருவத்திற்குப் பொருந்தும், ஆகையா னென்மடங்காயிற்றென்றறிக. தான் செய்தவினை செய்வினையெனப் பாவங்களிருவகையால்வரும். அது புத்திபூருவம் அபுத்திபூருவம் என்னும் வேறுபாட்டால் நான்குவகைப்படும், இப்படிக்கன்மபேதங்களை யறிந்து அததற்கேற்ற பரிகாரங்களைச்செய்து பாவங்களைப்போக்குக. எ-று.

ஒழிபாலுமென்ற வும்மையாற் பிரமசாரிக்குச் சொன்னது வானப்பிரத்தனுக்கும் நயிட்டிகனுக்குஞ் சொன்னது சந்நியாசிக்குமெனக் கொள்க. இவர்கள் தாந்தாமே பரிகாரஞ்செய்தற் கசத்தரானாற் றம்மாசிரியாராலே யாதல் ஆசிரியர் புத்திரராலேயாத லிருமடங்கு செய்விக்கிற் குற்றம்போமென்றறிக. (௨)

முற்கூறிய காமம் அகாமம் ஈதென் றுணர்த்துகின்றார்.

முற்றும்வினை தைவிகத்தான் மோகத்தா னேயான்
  மூர்க்காசுர் சோரரிவர் முடுகுபயத் தாலும்
அற்றமுறை யறிவழிந்து மகாமமென வறிக
  வல்லனவே காமமென வறிகவமலேசன்

சொற்றனையுந் துணியாத துயக்கந்தை விகமே
துணிந்தவரும் பேராசை தொட்டறிவு கெட்டும்
பற்றியிடும் வினைமோகம் பாமனுரை கேட்டும்
பரலோக மார்கண்டா னென்றெண்ணும் பழுதும்.

எ-து. தைவிகத்தாலுண்டாயவினையும், மோகத்தாலுண்டாய வினையும், மிகுந்த வியாதியாலுண்டாய வினையும், மூர்க்க அரசன், கள்வர் இவர்களுடைய மிகுந்த பயத்தால்வரும் வினையும், பேய் பாம்பு மாயமயக்க முதலியவற்றால் அறிவழிந்து செய்யுங் கருமமும், அகாம வினையெனப்பெறும். இவையல்லாமல் உண்டாம் வினைகள் காமமென்றறிக. வேதாகமங்களில் இன்னது செய்தால் இன்னபாவமென்று அறுதியிட்டறிந் திருக்கவும் அதற்குப்பயமில்லாமல் செய்து முற்கூறிய தைவிகமென்றறிக. குறள் *'மோகஞ் சுகந்துக்க முற்றுதலாற் புத்திதனக் கூகமொழிக் கையெனவோர்' என்பதனால் வேதாகமங்களையோதி யறுதியிட்ட அவர்கள் ஆசைமிகுதியாலதனைச் செய்வது மோகத்தாலென்றறிக. உலோகாயதனைப்போல் இம்மைப்பயன் ஒழிந்து அம்மைப்பயனை யார்கண்டனென்று கருதுவதுவு மோகமெனப்பெறும். எ-று.

அகாமமெனினும் அபுத்தி பூருவமெனினுமிழுக்கா. காமமெனினும் புத்தி பூருவமெனினு மிழுக்கா. அமலேசன் சொற்றனையுமென்றவும்மையா ன்மிருதி புராணங்களுங்கொள்க. (௫)

நித்திய கன்மத்துட் டலைமையாகிய சிவத்தியான முதலியவற்றைப்
புலரிக்காலத்திற் செய்யாதொழியிற் பரிகாரமுணர்த்துகின்றார்.

உன்னிடுக சதாசிவமும் பிரமமெனு முகுர்த்தத்
தொழிந்திடிற்பின் னிருகுணித முணர்ச்சிக்கே யொருநான்
குன்னிடுக வல்லதிறை யுருவத்தை மூல
முணாத்திடுக விருநூறு நீறுடலிற் பூசிப்
பின்மனையிற் புறப்படுக பிழைத்தானே யாகிற்
பேசிடுக வகோரத்தை யிருநூறெண் பெறவே
யன்னமருந் தாதருந்திக் கௌவியத்தை யற்றைக்
கபசவியம் பூணுனு மலசலமோ சனத்தே.

எ-து. சூரியனுதிக்க மூன்றேமுக்கானுழிகையிருக்க எழுந்திருந்து சுத்திசெய்து திருநீறு தரித்துக்கொண்டு சமாதிசெய்க. சமாதி செய்தற்கருகமல்லாதவர் சதாசிவ முதலிய திருவுருவைத் தியானஞ்செய்க. நித்திரையல்வயத்தாற் றியானியாதொழியி னிருமடங்கு தியானஞ் செய்க. நித்திரையல்லாமலிருக்கவும் தியானஞ்செய்யாதொழியி னான்குமடங்கு தியானஞ்செய்க. இவ்வாறு செய்யாதொழியி னக்குற்றம் போம்படி மூலமந்திரம் இருநூறு

* பதிபசுபாசப்பனுவல்-நான்காவது-பாசசாதகவியல்-௪௮.

ருச் சபிக்க, பின் திருநீறு தரித்துத் தியானித்து இல்லினின்றும் புறப்படுக. திருநீறு தரியாமற் புறம்பே புறப்பட்டாலும் பூணூலை வலக்காதிலேனும் கழுத்திலேனும் வைக்காமலிருந்து மலசலங்களை நீக்கினும் அக்குற்றம் போம்படி யன்று உபவசியாயிருந்து பஞ்சகௌவியத்தைச் சிவனுக்காட்டிச் சேடத்தைப் பருகி அகோரமந்திர மிருநூறுருச் செபித்திருந்தா லக்குற்றம் நீங்கும். எ-று.

உம்மை-எதிரதுதழீஇயது. (௪)

மலசல மோசனகாலத்து வருங் குற்றத்துக்குப்
பரிகார முணர்த்துகின்றார்.

பார்த்தவன்மூத் திரமலமும் பாற்றியிடும் போதிற்
பருதிமுதற் பண்ணவரைப் பார்ப்பாரைப் பசுவைச்
சேர்த்தறைக வொருநூறு நிசைபிழைத்தான் றானுந்
தேசத்தைப் பிழைத்தானுஞ் சிவாங்கணத்துஞ் சிறந்த
நீர்த்தடத்து நிறைவாச நந்தனத்து மலநீர்
நீக்கினனே லொருகானெஞ் சழிந்தூணு நீக்கிச்
சேர்த்தறைக பிரமங்க ளொருநூறைஞ் ஞூறு
செப்பிடுக வீசானஞ் சுடலைதிருப் புரிக்கும்.

எ-து. மலசல மோசனகாலத்தில் தேவர்கள் தவசிகள் அந்தணா சூரியன் சந்திரன், அக்கினி, தாரகை, மாதர் முதலாயினோரைப் பாராதொழிவானன்றிப் பார்த்தானாயின் அகோரத்தை யொருநூறுருச் சபிக்க. இதுவல்லாமல் சந்தியாகால மிரண்டிலும் பகலிலும் வடக்குமுகமா யிராதவனும் அர்த்த ராத்திரியில் நிருதிதிக்குப் பார்த்திராதவனு மிரவில் தெற்குமுகமா யிராதவனும் விதித்த தேசத்தைப் பொருந்தி மலமோசனம் விடாதவனும் அம்முறை செபிக்க. சிவ சந்நிதித் தெருவினும் புண்ணியதீர்த்தக்கரையினும் மணம் அமைந்த நந்தவனத்தினு மலசலமோசனஞ் செய்வானாகில் நெஞ்சுவருந்தி யுபவாசம்பண்ணிப் பஞ்சகௌவியத்தைக்கொண்டிருந்து பஞ்சப்பிரமங்களை நூறுருச்செபிக்க. திருவிழா நடக்குந்தெருவீதியினுஞ் சுடலைக்கரையினு மலசலத்தை நீக்கினவனும் உபவாசமாயிருந்து ஈசானமந்திரமைஞ்ஞூறுருச் செபிக்க வக்குற்ற நீங்கும். எ-று.

தேசமென்பது-ஆக்கள்சேர்விடம். பொழிலின்புடை-சிலை நீர். நீடுநிலம்-உன்னதத்தலம். கோயம்-இவைமுதலியன. (௫)

நீராடுமிடமுந் தூசொலிக்குமுறையு முணர்த்துகின்றார்.

ஆடுகநீ ரினையாற்று ளரிதெனின்மற் றவற்று
மாடைதனி னழுக்கறுக்க வருந்திடினு மலைத்தூற்
றாடிதமென் மூத்திரத்துஞ் சுக்கிலத்தி னானுந்
தோய்த்திடுக காரத்திற் சுடுநீருஞ் சொரிக

கூடியிடக் கோசலமுங் குளிர்நீருஞ் சொகரி
கூட்டிடுக சுத்தமிருத் திகைதனையுந் துலங்க
வோடுபுனல் வெள்ளத்து முறுத்தியொலித் தழுக்கை
யொழித்திடுக வாதபத்தி னுலர்த்தே திடுக வுணர்ந்தே.

எ-து. நதிமுதலியவற்றின்கண் முழுகுவது உத்தமம். அதுவல்லாத தாமரையோடை கேணி இவைகளின் முழுகுவது மத்திமம். கிணற்றினும் வாவியினு முழுவகுது அதமம். இவ்வாறியன்ற வொன்றின் முழுகி யனுட்டானஞ்செய்து பின் புடைவையைத் தோய்த்துலர்த்தவும் புசித்தவிடத் துண்டான அசுசி போகும்பொருட்டு மவ்வாறு செய்க. மலசலஞ் சுக்கில முதலியவற்றாற் புடைவையின் அசுசி சுத்தியாகும்பொருட்டு அதனை யுவர் முதலிய காரநீரிலே போட்டு வெந்நீரும் புற்றுமண்ணுங் கூட்டி யதினுண்டான வழுக்கைப் போக்கிக் கோசலந் தெளித்துக்குளிர்ந்தநீரிற் றுவைக்க சுத்தியாம். அதுவல்லாமல் நீரோடுகிறவாறு முதலியவற்றிற் றோய்த்துக் கல்லிலடித்துத் தோரணமாக விரண்டு கழியை நாட்டி மேலே யொரு மூங்கிலைப்போட்டு சூரிய கிரணத்தா லுலர்த்திடுக. நித்திய கன்மநூல்தெரிந்து வெள்ளத்துமென்ற வும்மையாற் குளத்துமென வறிக. (௩)

வியாதியினா லாறுமுதலியவற்றின் முழுகாதவர்க்குப்
பரிகார முணர்த்துகின்றார்.

அஞ்சினனேற் பிணியாள னுடியிடக் குளிர்நீ
ரழன்றபுன லாடியபி னகத்துநினைந் தறைக
தஞ்சமெனப் பிரமங்கள் சடங்கங்கள் முக்காற்
றண்புனலுக் கன்னியனு மஞ்சினனேற் றூனு
மெஞ்சலற வெண்பஃது மிருபஃது மியம்ப
விருநூறுஞ் சாதத்தை யியம்பிடுக நூற்றெட்
டஞ்செலனு மகோரத்தை யாடையற நீரு
ளாடினனே னுணவொழிக வற்றையறி வலந்தே.

எ-து. நோயாளர் குளிர்ந்த நீராடப் பயந்து வெந்நீரின் முழுகின் குற்றம் போம்படி பஞ்சப் பிரமாங்கங்களை யதனைப் போக்குமெனக் கருதி யதனை முக்காற் செபிக்க. நோயல்லாம லிருப்பவனும் வெந்நீரின் முழுகினாற் சத்தியோசாத முந்நூறுருச் செபிக்க. சிவதீக்கையுடையவ னாறுமுதலியவற்று ளாடையில்லாமல் நீராடினனென லன்று வருந்தி யுபவசியா யிருந்து அகோரத்தை நூற்றெட் டுருச்செபிக்கிற் குற்றம்போம். எ-று.

ஆசௌசவிதி யுணர்த்துகின்றார்.

ஒருவனுடல் விடினூரு ளுண்டவ்வூர்க் கசுசி
யொருதெருவு ளொருமுகமே லைம்பதாவிற் கிடையுண்

டிருபதினே டொருபதிஞ்ஞ் டிடைவிடினே முகடு
 மிடைசெவினே நாராச மில்லையப்பா லசூசி
யொருபதினொன் றளவுண்டு மற்றைபவீ திக்கண்
 ணானவுட லெடுப்பதன்முன் வேதமுத லோதேற்
பாமனையர்ச் சனைபுரியேன் முப்பதுதண் டளவுட்
 பற்றியிடு மாசூசம் பசுபதியா லயத்தின்.

எ-து. ஒரு கிராமத்தில் ஒருவன் மரணமடைந்தால் அவ்வூர்க் கெல்லா மாசூசமுண்டு; அல்லது ஒரு வீதியிலொரு முகட்டுக்கூரை யிடைவிடா திருக்குமானா லதற் கைம்பது விற்கிடைதூர மாசூசமுண்டு. அது வல்லாமல் நடுமுகடு இடைவிட்டிருக்குமானால் முப்பது விற்கிடை யாசூசமுண்டு; ஒரு தெருவின் நடுவே நாராசம் வரில் அதற்கப்பா லாசூசமில்லை; இருக்கிறவீடு விட்டுப் புறக்கடைப் புறத்து வீதியிலும் பக்கவீதியிலு மாசூசமுண்டானாற் பதினொரு விற்கிடைதூர மாசூசமுண்டு, இவ்வாறு கூறப்பட்டதலங்களி லாசூசமுண்டான விடத்துக் குற்றத்தையுடைய சவமெடுப்பதற்குமுன் சிவபூசை முதலிய கன்மமும் வேதாகமபுராண மோதுதலு மொழிக, திருக்கோயிலைச் சூழ்ந்த வீதியிலொருவர் மரணமடைந்த விடத்து முப்பது தண்டுக் குட்பட்டிருந்தா லாசூசமுண்டு. எ-று.

சவங்கிடக்கப் பரார்த்தத்தி னித்திய முதலிய கன்மஞ் செய்தாரானால் அக்குற்றம் போம்படி கலசந்தாபித் தபிடேகஞ்செய்யி னக்குற்றம்போமென்க. (அ)

அந்தணர் முதலியோர்க் காசூசவிதி யுணர்த்துகின்றார்.

எட்டுமிரண் டும்பிறந்த நாளிறந்த நாளு
 மிழுக்குண்டு மறையோருக் கரையருக்கீ ரெட்டோன்
றெட்டுடனே மேழையருக் கீரெட்டோன் றான
 மியல்வழியி னியங்கியிடுஞ் சூத்திரருக் கிரட்டி
யிட்டவர்க்கு விதிபுதல்வி தன்னுடனே பிறந்தாள்
 வேறல்லா நன்மாம னெழுவாயார் வியோகத்
தொட்டுமொரு மூன்றுநா ளொழிந்தார்க்கு மூழ்க
 வொழியுமொரு பதினைந்துட் சிவகணிகை யோர்க்கே.

எ-து. சனன மரணமிரண்டினுக்கும் பிராமணர்க்குச் சூதகம் பத்து நாளுண்டு; அரசர்க் கிருவகை யாசூசமும் பன்னிரண்டு நாளுண்டு. வைசியருக் கவ்விருவகை யாசூசமும் பதினைந்துநாளுண்டு. தீக்கைபெற்று வேதாகமங்களின்வழி நடக்குஞ் சற்சூத்திரர்க்கு இருவகை யாசூசமும் பதினைந்துநாளுண்டு. அந்நூல்களில் விதித்தவழி நடவாத சூத்திரர்க்கு இருவகை யாசூசமு முப்பதுநாளுண்டு. இவை நானகு வன்னத்தார்க்கும் பூரணாசூசம். இனிமூன்றுநா ளாசூசமுடையார் யாவரெனிற் றன்பெண்ணுந் தன்னுடன்

பிறந்தாளுந் தாயுடன் பிறந்த மாமனுமாகிய விவர்களுக்கு மூன்றுநாள் மரணவாசூசமுண்டு. எழுவாயர் என்பதனால் தாயைப்பெற்ற பாட்டன்பாட்டி தாயுடன் பிறந்த பெரியதாய் சிறியதாய் பெண்கொடுத்த மாமன் மாமி சாதகாசிரியர் போதகாசிரியர் மோக்ஷத்தைக் கொடுக்கு மாசிரியர் இவர்களுடைய தேவிமார் மாணுக்கர்க்கு மென்றறிக. ஞாதியில்லாதவர்களில் ஒருவனேக் சாதியானுய் அன்னியன் வீட்டில்வந்து மரிக்கி லவனுக்கு மூன்றுநா ளாசூசமுண்டு. இவர்கள் அல்லாதோர் மரிக்கில் முழுகினமாத்திரம் வீடுடையவனுக்குச் சுத்தி. மூன்றுநா ளாசூச முடையவர்களுக்கு அவர்கள் அவர்கள் மரித்து மூன்று நாளுங் கடந்தவன் கேட்டா லொருநா ளாசூசம். ஒருநா ளாசூசமுள்ளார்க்கு அந்த ஒருநாளுங் கடக்கிற் கேட்ட பொழுதே யாசூசம். தொண்ணூறு நாழிகை யாசூச முள்ளார்க்கு இராத்திரி கேட்கி விராத்திரி மட் டாசூசம். பகல் கேட்கிற் பகல்மட் டாசூச முண்டெனவறிக. இது பிறனூன் முடிந்தது தானுடன்படுந லென்னுந் தந்திவுத்தியாற் கூறியதென்றறிக. சிவபெருமான் ருருகாவனத்தி லிருடிகண் மாதரை மோகிப்பித் தந்த விகாரத்தினு லவர்களிடத்துக் கருப்பமுண்டாகிப் பிறந்த உருத்திர கணிகைமார்க் கிருவகை யாசூசமும் பதினைந்து நாளுண்டென்றவாறு.

உருத்திர கணிகைமாரிற் கொண்டு வளர்த்தவள் வாங்கிவளர்த்தவள் முதலாயினருக் காசூசம். ஆசூசதீபிகையில் விரித்துக் கூறினராண்டுக்காண்க. யாதேனுமொரு சாதிக் கெவ்வளவு ஆசூசமுண்டு. அவ்வளவும் பிண்டோதகக் கிரியையைச் செய்க. ஆசூசம் போனவாறே யேகோதிட்டக் கிரியையைச்செய்க. இவ்விதியந்நூலிற்காண்க. மாதாவுக்குச் சக்களத்தியுடன் பிறந்தானு மாமனுதலால் வேறல்லா நன்மாமனெனச் சிறப்பித்தார். (௬)

தீக்ஷாவிசேடத்தாற் சங்கோசமான வாசூசமுணர்த்துகின்றார்.

ஒடுங்கமன மமலனடி யொன்றினர்க்கா சூச
மொட்டாது சிவதரும ணீயர்க்கு முலகம்
விடும்பரிசில் லாவுலக தருமணிய தீக்கை
விரும்பினர்க்கு நாண்மூன்று விரவியிடு மசூசி
சடங்கொருமை யன்னியராற் சங்கரற்குப் பூசை
சமைப்பிக்க வல்லதுதா னீரவுடை தரித்தே
தொடங்கலுமாஞ் சிவபூசை யிரண்டாந்திக் கையினைத்
தொட்டாரு மிம்முறையைத் தொடங்கலுமாஞ் சூழ்ந்தே.

எ-து. சங்கிலிட்ட முதலிய நால்வகை மனத்தினுள் மூன்றுந் திரிகரணத்தோடு கூடின ஆதலாற் சிவனிடத்திற் சுவலீனமான நாலாவதான மனத்தைப் பாதத்திலே இலயிப்பித்திருக்கிற சிவஞானிகளுக்காசூசமில்லை. ஆசிரியனு லிருவினையுந் தீக்கையினாற் சோதிக்கப்பட்டு ஆசூசமுடையவர்களுடன் கூடிப் பாகமும் புசிப்புமில்லாமல் தனியே பாகம் பண்ணிப் புசித்திருக்குஞ் சிவதருமணியதீக்கை புடையார்க்கும் ஆசூசமில்லை, ஆசிரியன் மாணுக்கன் செய்த புண்ணியங்களை மாயைக்குமேற் சுத்திசெய்யாமற் சுத்

தாத்துவாவிற் போகம் புசிக்கையின் பொருட்டு அதனை வைத்தப் பாவகன் மத்தையே சோதித்துப் புண்ணிய கன்மத்தைச் சேதியாமற் சிகாச்சேதம் விதிவழி பண்ணப்பட்டிருக்கிற வுலகதருமணியதீக்கையை யுடையவர்களுக்கு இருவகை யாசூசமு மூன்று நாளுண்டு, முற்கூறிய சிவதருமணியதீக்கை யுடையார்களும் பூருவாச்சிரமத்துடனே கூடிய பாகமும் போசனமும் வேறின்றிக் கூடிப் புசித்திருந்தார்களேயாகு லவர்க்கு மூன்றுநா ளிருவகை யாசூசமு முண்டெனக, இவ்வாறு கூறிய விருவகையருஞ் சிவபூசை செய்யாத மூன்று நாளு மந்தரியாகஞ் செய்து புசிக்க, அவர்களுடைய சிவலிங்கத்தை வேறே யொருவராலே * சாதாரண மந்திரங்கொண்டு பூசை செய்விக்க, அல்லது பத்தி வயிராக்கியத் திடமுள்ளவர்களானல், ஆசிரியன் தீக்கைசெய்து மண்டலத்தரான சிவன் திருமுன்னே நீயுள்ள மட்டுமே பூசியென்று கற்பித்து அவர் கொடுக்கக் கைக்கொண்ட இலிங்கத்தைப் பூசியாமற் புசிக்கலாகாதெனக் கருதி முழுகி யீரப்புடைவையைத் தரித்துக்கொண்டு சிவபூசை செய்க, விசேட தீக்கையுடைய புத்திரரு மம்முறைமையிற் பூசைசெய்க. எ-று

பிறரைக்கொண்டு பூசை செய்வித்தவர்கள் ஆசூசம் போனவாறே முழுகிக் கௌவியத்தைப் புசித்துப் பின்பு பிராயச்சித்தமாக அகோரத்தை முந்நூறுருச் செபித்துப் பூசைசெய்யத் தொடங்கலுமாம் என்ற வும்மை யெதிர்மறை. (௰)

புத்திரன் மரித்தால் மாதாபிதாக்கள் செய்வதும் பதி மரித்தான் மனைவி செய்வது முணர்த்துகின்றார்.

மரித்தமூநா ளுணவொழிக மகவிழந்த பிதாவு
மற்றிருநாட் கௌவியமாந் துகமாதாப் பாரி
பரித்தவனை யிழந்தமூநாட் பணுகதலை வபனம்
பண்ணிடுக சாந்திரா யணமாதி பதைத்தே
சரித்தபினைச் சிறிதுண்க தாங்கவுட றன்னைச்
சங்கரனற் றுளிணையைச் சாரவறி வுண்டே
லருச்சனையைப் புரிந்திடுக வாரியன்ற னருள்பெற்
றவனிதனிற் சயிக்கபுல னடக்குகநைந் தழுதே.

எ-து. பிள்ளை சாகக் கொடுத்த பிதா மாதாவு மன்றைக் குபவசியாயிருக்க. மாதா இரண்டாநாள் மூன்றுநாளானல் விதிப்படி கௌவியத்தைத் தாயித்து அதனையே புசித் துபவசியா யிருக்க, பதியைச் சாகக் கொடுத்த மனைவி பட்டினியை யுடையளாய் துக்கித்தழுது மயிருடனிருக்கிறது பதிக்குக் குற்றமென்பதனுல் முண்டிதம் பண்ணிக்கொண்டு சாந்திராயணமுதலியவற்றை யனுட்டித்து முடித்துச் சிறிது நாளைக்குப்பின் னந்த வுடலில் உயிரிருக்கு நிமித்தம் சிறிதன்னுதிகளை யுப்பு மிளகு மில்லாமலொருபொ

* சாதாரணம்-பொது.

ழுது புசித்துப் பாக்குத் தின்னுமலிருக்க. * 'தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்பதனாற் கணவனே தெய்வமென் றிருந்த பதிவிரதை அவனில்லாமையால் இனிச் சிவனை யடையவேண்டு மென்னும் புத்தியுண்டாகு லாசிரியனை யடைந்து அவன் செய்யுந் தீக்ஷையைப்பெற்று அவனனுக்கிரகத்தினாலே யுடையவரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டருச்சனை செய்க. பூமியில் நாடோறுந் தருப்பையைப் போட் டதனிற் சயனஞ் செய்க. ஆமை தன்னவயவங்களை யடக்குமாறுபோலப் பஞ்சேந்திரியங்களின்வழி மனஞ்செல்லாம லடக்கி யவன் சற்சரித்திரத்தைச் சொல்லித் துக்கித்திருக்க. எ-று.

பிதாவுமென்ற வும்மையான் மாதாவுமென்றறிக. (௰௧)

சுமங்கலியி னுசார முணர்த்துகின்றார்.

வந்திழைக்குப் பதியேவ லியற்றுதலே நியதி
யீசனிணைத் தாளணைய வேசறுவு பெருகிற்
காந்தனநு மதிபெற்றுக் கைக்கொள்க பூசை
கலித்திடினே யிருதுகலுழ்ந் தொருமூன்று நாளும்
வாய்ந்திடச்செய் துடற்சுத்தி மற்றையர்நீர் தரவே
மானதபூ சனைபுரிக மற்றையநாட் புனலுட்
டோய்ந்தருந்திக் கௌவியத்தைச் சூட்டுகபோ தாற்குச்
சூதகமுன் பெருநோய்முன் சூட்டிவிக்கப் பிறரால்.

எ-து. சுமங்கலிக்குக் கணவ னேவல் செய்தலே சிறப்பான தருமம். இதுவல்லாமல் அக்கணவ னேவல்செய்து வருகையிலுஞ் சிவனுடைய சீபாதங்களை யடையவேண்டு மென்னும் விருப்ப முண்டாகு லவர்களுக்குத் தனக்கெனச் சுதந்தர மில்லாமையாற் கணவ னநுமதியைப் பெற்றாசிரியரை யடைந்து அவரிடத்தி லுடையவரை யெழுந்தருளப் பண்ணிக் கொண்டு சிவபூசை செய்க. அவளுக் கிருது வந்தவளவி லவளொருகன் மத்துக்கு மருகமல்ல; அதேனெனில் முதனு ளவள் சண்டாளி, இரண்டாநாள் பிராமணனைக் கொன்றவள், மூன்றுநாள் வண்ணாத்தி, இத்தன்மையை யுடையளாதலால் ஒருகன்மத்துக்கு மருகளல்ல. மூன்று நாளுஞ் சரீரசுத்தி நிமித்தமாக நதி முதலியவற்றைத் தீண்டாமல் வேறொருவரைத் தண்ணீர் தரச் சொல்லிச் சரீரசுத்தி செய்துகொண்டு நாலாநாள் கோசலம் புற்றுமண் முதலியவற்றாற் சரீர சுத்தி செய்து நதி முதலியவற்றின் மூழ்கிப் பஞ்சகௌவியந் தாபித் தருந்துக. அது கூடா திருந்தால் பால் நெய்யேனும் பருகிற் சுத்தியாம். பின்பு சிவபூசை பண்ணுக ; அம்மூன்று நாளும் அந்தரியாகஞ் செய்யா தொழிந்தால் அக்குற்றம் போம்படி அகோரத்தை யாயிரமுருச் செபிக்க. அக்காலம் பூசியா திருந்தாற் குற்றமன்று. தான் பிள்ளைபெற்ற சூதகந் தனக்குரியார் மரணசூதகம் நோ

* திருக்குறள் செய்யுள்-௫௫.

யிவைகள் வந்தால் தனக்கொத்த தீக்கையுடையவர்களைக் கொண்டு சாதாரண மந்திரத்தாற் பூசை செய்விக்க. எ-று. (மஉ)

இருதுவரும் காலநியமமும் அவர்களைக் கூடலாகாத தின மீதென்பது முணர்த்துகின்றார்.

நிசிவேலை யந்தியயா மத்திருது நிகழி
னேரிழைக்கற் றையநாளை முதலெனவே நினைந்து
நசையுறவே பதியவடோ ணண்ணுகவைந் தாநா
ளுன்கினுமா மிவைதனினு நணுகலம வாசி
யிசையினும்பூ ரணைபதினுன் கெட்டாறு திதிமூன்
றெட்டுடனீ ரிரண்டென்னுந் திங்களெழு வாய்கள்
சுசியாய வெதிபாத மெனுமிவற்று ளொன்று
தொடினுமணைந் தாற்பலியா சொல்லிடமந் திரமே.

எ-து. மாதர்கள் இராத்திரி நாலாஞ் சாமத்திருதுவாயின் அவர்களுக்கு அன்றுதானே முந்தினநாளாகக்கொள்க. கணவன் விருப்பத்துடன் அவளுக் கிருது ஐந்தாநாளுண்டாகா திருந்தால் அன்று அவளைக் கூடுக; நாலாநா ளுண்டாகாதொழியின் அன்றுங் கூடுக. அமாவாசை பருவம் சதுர்த்தசி, அட்டமி, சட்டி, திதித்திரையம், துவாதசி, மாதப்பிறப்பு, விதிபாதமுதலிய பஞ்சபருவம் இவைகளி லொன்று வந்து கூடினுமாகாது. அவைகளிற் காமமிகுதியாற் சேர்ந்தால் தான் சபிக்குமந்திரமும் பலனைக் கொடாது. எ-று.

மனையாளைத் தீண்டுமிடத்து ஒற்றைப்பட்டநாட்களிற் புத்திரனிமித்தமாகத் தேவதேவ மகாதேவ மந்திரத்தை யுச்சரித்துக் கூடினுற் சற்புத்திரனுண்டாம். இதுவல்லாமல் இராத்திரிக்குத் திரியாமையென்னும் பெயருண்டாகையா லதனை மூன்றுகூறாகப் பிரித்து முந்தின விரண்டு கூறுகடக்கப் பிற்படி லன்றுதானே யொருதினமென்று கூறுவது பெரும்பான்மையாதலா லில்வாசிரிய ரதனைக் கூறிற்றிலர், நான்கினு மென்ற வும்மையால் நாலாநாள் கூடிப்பிறந்த பிள்ளை யற்பவயதில் மரணமடைவான். உம்மையிழிவு சிறப்பு. ஏகாரமீற்றசை,நாலாநாள் முதல் பன்னிரண்டு நாள்வரையும் இருதுவுண்டாகில் அற்பாசமனம் பண்ணினவர் சுத்திசெய்யு மாறுபோலச் சுத்திசெய்க. அப்பாலு மிருபதுநாளுக்குமேற் காலத்தில் நோயின்றியிருதுவானால் மூன்றுநா ளாசூசமுண்டென்றறிக. (மரு)

சிறப்புவிதி யுணர்த்துகின்றார்,

அந்தணர்க்கைந் தாநாளே யன்னியர்க்கு நான்கு
மல்லாவைந் தாதியுமா மமவாசி யாதி
வந்துறினே மருவற்க வவற்றுள்ளுந் தவத்தை
மதித்துவசிக் கின்றவா முடையானே யாகில்

அந்தணரு மைந்தாநா ளணையேன்மற் றிரத்தி
னாகுதியுஞ் செய்கபழி யகன்றிடவே யதிந்தா
மைந்தொடியைத் தவம்பண்ணுன் பரிசியா னுகித்
மனைதக்கொரு கொப்பத்தை யடைந்தபழிப் படுவான்.

எ-து. தெய்வகன்மத்திலும் பிதிர்கன்மத்திலு மைந்நாளை விருது வான் மாதர்க்குச் சுத்தியென்று வசனமுண்டாதலாற் பிராமணருக்குப் பூசாரா தலின் ஐந்தாநாள் அந்தணர் மாதரைக்கூடலென்றார்: க்ஷத்திரியருக்கு நாலா நாள் சுத்தி யென்பதனுன் மற்றையர்க்கு நாலாநாள் கூடலென கூறியது இந்த நாள்களில் அமாவாசை முதலிய வாகாத நாட்கள் கூடினுந் தீண்டா தொழிக. "கு. *தீராடியபின் னீராறுநாளுங் கருவயிற் றுறுங்காலம் மாத விற்பிரியப்பெருன்பரத்தையிற் பிரிவோன்" என்றதனுற் கணவன் விரதங்க ளிற்றிரியாதிருத் தவம்பண்ணிக்கொண்டிருப்பானுனால் அவ்வந்தணரு மை ந்தாநாளன்சேர்க்க. அப்படிச் சேராதகுற்றநக் போம்படி விதிவழிமந்திரத்தினு லே யோமஞ் செய்க. தவம்பண்ணுமன் மாதராமக்காலத்து உள்ளுறிலிரு ந்து அவளைத் தீண்டா திருப்பானுனுற் பிள்ளையைக் கர்ப்பத்தில் வதைத் த்த குற்றத்தை யடைவான். எ-று. (௭௫)

ஆகாதென்ற காலங்களிற் கூடல் முதலியவற்றிற்குப்
பரிகார முணர்த்துகின்றார்.

விலக்கியகா லங்களிலும் புணர்ந்தாரே லயுதம்
விளம்பிடுக பிரணவமே லோரெழுத்தஞ் சல்லார்
மூலத்தடத்தைப் பகற்பொழுதின் முயங்கிடினு மிந்த
முறையதைக பசுப்புணர்ச்சி முதலான நோக்கின்
அலத்றவிராப் பகலுறங்கி னகோரமொரு நூற்றெட்
டுரைந்திடுக வரிவையர்தம் போகத்தை யனித்தே
சொலத்தொடங்கிச் சிலர்கேட்ட லோடமறத் தனக்குச்
சொல்லிடுக நூற்றெட்டுத் துரிசுடனே தொடைப்பார்.

எ-து. பிராமணர்முதலிய மூவருமாகாதென்ற நாளிலொருகாற் கூடி ஞானுற் பிரணவத்தைப் பதினயிர முருச் செபிக்க. சூத்திரானுற் பஞ்சா க்கரத்தை யம்முறையே செபிக்க. அறியாமற் பசுமுதலிய புணர்ச்சியைப் பார்த்தாலும் பகல்நித்திரைசெய்திதாலும் அகோரத்தை நூற்றெட்டுருச் செபி க்க. சிலர் இரவிலே தாங்கள் கலவியிற் கூடின வார்த்தையைத் தங்களிலே பேசியிருப்பதை யொருவர் விருப்பத்துடனே கேட்டாராகு லக்குற்றம் போம்படி யகோரத்தை நூற்றெட்டுரு செபிக்க; பாவத்தை யுடனே போ க்கவேண்டுமென்று கருது முத்தமர். எ-று. துரிசு-பாவம். (௭௬)

* நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம்-௬. ௯௧.

பரதார முதலியவற்றைத் தீண்டிற் பரிகார முணர்த்துகின்றார்.

பரதாரந் தனைவேசி தடவிடலி தனையும்
　　பரிசித்தான் மோகத்தாற் பதைத்துடலுந் தெளிந்தே
யொருநூறு யிரத்துடனே யைம்பதினா யிரமு
　　முச்சரிக்க வகோரத்தைக் கன்னிகைதோ ளொன்றி
லிருகுணித மிணங்கவின மல்லாரைக் கண்ணு
　　லிச்சையுறப் பார்க்கிலொரு சதமுறவே யியம்ப
குருமனையைக் குணதோட முறப்பார்த்த கொடியான்
　　கூறிடுக சாதத்தை யொருநூறு குறித்தே.

உ-து. ஒருவனுடைய பெண்சாதியையும் பொதுமடவாராகிய வேசியையும் புருடனிருக்கவும் புறத்திற் சோரமாகத் திரிகின்ற விடலியையும் ஆசை மிகுதியா லொருகால் தீண்டினனாகில் ஐயோ இப்படி செய்துவிட்டோமே யென்றுடல் நடுங்கித் துக்கித்துப் பின்பு தெளிந்து அகோரமந்திர நூற்றைம்பதினாயிர முருச்செபிக்க. கன்னிகையைத் தீண்டினனாகில் முற் கூறியதி லிரட்டி செபிக்க. இணங்குதற் கருகமில்லாதவர்களைக் காம விகாரத்தாற் பார்த்தானாகில் வாமத்தை நூற்றெட்டுருச் செபிக்க. பிராமணர் முதலிய நால்வருந் தத்தம் மனையாளைப் பற்றத் தகும். அதுவொழிந்து தமக்கன்னியமானமாதரை யொருநாள் விகாரத்தாற் பார்த்தாற் பட்டினியிருந்து பிராமணர் நூற்றெட்டும், அரசர் முதலானோர் நூறுநூறேற்றியும் வாமதேவத்தைச் சிவ சந்நிதியிற் செபிக்க, வாமதேவங் குய்யத்துக் கதிட்டாதாவா யிருப்பதனால் அம்மந்திரங் கூறியதென்றறிக. குருமனைவியை விகாரத்தாற் பார்த்த பொல்லாதவன் சத்தியோசாதத்தைத் தியானஞ்செய்து நூறுருச் செபிக்க. எ-று. சூத்திரச்சிக்கும் வாழ்க்கைப்படுமுன் இருதுவானவளுக்கும் விடலியென்றும் பெயர் சொல்லப்படும். சத்தியோசாதமெ ன்பது சாதமென முதற்குறை யாயிற்று. (௰௩)

நயிட்டிகப் பிரமசாரிக்குப் பரிகார முணர்த்துகின்றார்.

உரையாதே விரதியரி வையர்பெயரு முருவு
　　முன்னுதே கனவினவ ரொடும்புணர்ச்சி யுறினும்
வெருவிவிய னீர்மூழ்கி யுணவொழிந்தத் திரத்தை
　　விளம்புகநூ றெழுகினுநீர் வீரியத்தை விதிக்கிற்
சுரிகுழலார் தோணிவிற் சொல்லுகநா னூறு
　　துயக்கமற வாமத்தைச் சொல்லிடுக விருநூ
றிரவினிளை யாரையெணி யிறக்கினன்வீ ரியத்தை
　　யினவியோ னியையிணங்கி னையுத மெனுவார்.

எ-து. விரதத்தன் மாதர்பெயரையு மூரையாதவர்கள் வடிவையு மன திற்கருதா திருக்கையிலுங் கனவின் கணவர்களுடன் கூடினனாகிற் பயப்ப ட்டக் குற்றம் போம்படிக்கு நல்ல சிவதீர்த்தங்களில் உதயகாலத்தில் முழு கியுபவசியா யத்திரத்தை நூறுருச் செபிக்க, நீர்கழிந்து கிடந்தாலும் அம் முறையே செய்க. சுருண்ட மயிரினையுடைய மாதரைக் கூடவேணுமென் று நினைப்பினாற் பகலில் வலிய வீரியத்தை விட்டானாகி லறிவுமயங்குதலி ன்றி வாமதேவதை நானூறுருச் செபிக்க, வாமதேவதைச் சொல்லிடுக வெ ன்ப திருபாலுங் கூட்டிக்கொள்க. இராத்திரி பெறாம்பை முதலிய பருவத் தையுடைய மாதரைக் கூடவேண்டுமென்றே கருதிவலிய வீரியத்தை விட் டானானால் வாமதேவத்தை யிருநூறுருச் செபிக்க. சாதியிற் றாழ்ந்த மாத ரைக் கூடினால் அகோரத்தைப் பதினாயிரமுருச் செபிக்க. எ-று.

ஈனயோனியென்பது வாழ்க்கைப்படுவதன்மு னாசார வைகல்லியஞ் செய்தவள் யோனியையெனவும் பெறும். ஆசார வைகல்லியம் - ஒழுக்கக் குறைவு. (௰௭)

நயிட்டிகப் பிரமசாரி போகத்தில் விருப்பமுற்றா லந்தவிரதத்தை
விதிப்படியே முடித்து விவாகஞ்செய்யாவிடத்துக்
குற்ற முணர்த்துகின்றார்.

புரிந்தனனேற் போகத்தை விரதத்தை நூலிற்
புகன்றமுறை யுறவிறக்கிப் புனையிழையை விதியாற்
றிருந்தமணஞ் செய்தனனாக செய்யா திவ் வாறு
தீண்டியிடிற் றெரிவையரைத் தனதுசிறை யுடலி
னிரந்தமயி ரொன்றனைத்தும் வருடமுறக் கொடிய
நிரயத்தி னழுந்திடுவ னீற்றினனு வெனைத்துய்
வருந்திடுவ னவ்வளவு வருடமுமுற் றிடவே
மற்றிதற்குப் பரிகாரம் வாக்கியத்து ளரிதே.

எ-து. நயிட்டிகன் போகத்திற் கருத்துற்றானானால் ஆகமங்களிற் சொல்லியபடியே யாசிரியனிடத்துச் சென்று எனக்குப் போகத்திலினியிச் சையென்று சொல்லி அவ் விரதத்துக்குண்டான அடையாளமாகிய சடைசி காமணி முதலானவற்றைப் பஞ்சாசனமென்னுமண்டலமிட்டு அவர்சந்நிதி யில் ஆகமத்திற் சொன்னபடி அதனையிறக்கிப், பின்பு ஆசிரியனவனை முழுக ச்சொல்லி அவனுக்கிரண்டு வெள்ளைப் புடைவையைக் கொடுத்துப் பதினா யிரமுரு அகோரத்தைப் பரிகாரமாகச் செபிப்பித்து அவனையழைத்து நீகிரு கத்தனாக விருவென் றனுமதிசெய்ய அவனும் விவாகம்பண்ணிக் கூடுக. இப்படி விரதத்தை யிறக்காது மாதருடன் கூடுவனானால் இந்தப் பிரமசாரியு டலில் வளர்ந்த உரோமமெத்தனையோ அத்தனைவருடமும் அது அல்லாமல் அவனுத்தூளனம் பண்ணிய திருநீற்றி லணுவெத்தனையோ அவ்வளவு வரு

டமுங் கொடிதாகிய ரௌரவ முதலாகிய நகரத்திற்கிடந்து அழுந்துவான். ஆதலாலிவை யல்லாமல் இதற்கு வேறொரு திவ்யாகமங்களிற் பரிகாரமில்லை. எ-து. (௰௮)

பவுதிகப் பிரசாரி பரதாரகமனஞ் செய்தாற் பரிகார
முணர்த்துகின்றார்.

பவுதிகனே மோகத்தாற் பரதாரந் தன்னைப்
பரிசித்த துயக்கமறப் பார்த்தழிந்து நெஞ்ச
முபவசியா யோங்கார மோரிலக்க முறவே
யுச்சரிக்க யாமவினை யினைப்புரிக வுணர்வா
லவடனையே யறிந்தும்பின் னணைந்தானே யாகி
லவனுக்குப் பரிகார மாகமத்து மில்லைச்
சுவையுறவே யவள்சொல்லைக் கேட்டானே யாகிற்
றுயக்கமற வாமத்தைச் சொல்கவொரு நூறே.

எ-து. பவுதிகப் பிரமசாரி சுகதுக்க முதலியவைகளினுடைய மோகத்தாலறவே மயங்கி யொருவன் பெண்சாதியைத் தீண்டினனால் அக்குற்ற நீங்க நம்முடைய அறிவின் பொல்லாங்கால் இப்படி வந்து விட்டதே யென்று மனத்தில் மிகவுஞ் சலித்துப் பாவசனாய் உபவாசஞ்செய்து பிரணவத்தை நூறாயிரமுருச் செபித்துப் பிராணாயாமத்தை நூற்றெட்டுச்செய்தால் அபுத்திபூருவமாய்ச் செய்த குற்றம்போம். புத்திபூருவமாய் அவளைப்பல நாள் கூடினனானால் அதற்குப்பரிகார மாகமத்திலுமில்லை, விருப்பமாய் விகாரத்தால் அவள் சொல்லும் வார்த்தையைக் கேட்டிருந்தானானா லக்குற்றம் போம்படி வாமமந்திரத்தை நூறுருச் செபிக்க. எ-று.

ஆகமத்துமென்ற வும்மையால் வேதமுதலியவுங் கொள்க. (௰௯)

புலைச்சி மேலோர் மனையிற் புகுந்தாலு மவள்கையா லருந்தி
னாலும் பரிகார முணர்த்துகின்றார்.

புன்புலைச்சி மனைபுகுந்தாற் புத்தியிழப் பாகிற்
போக்கிடுக மட்பாண்ட முற்புனிதம் புரிக
வென்செய்கோ மெனவிரங்கித் தற்புருட மெண்ணி
யியம்புகவை யாயிரமுங் கிருச்சரத்தோ டுனி
தன்கையினா லறியாது தானொருநா ளருந்திற்
றத்தகிருச் சரத்தயுதஞ் சாற்றிடுக வகோரம்
அன்புடனே யானைந்து மமலனணி முடியி
னூட்டியது தனையருந்திற் புன்புலைபோ யறுமே.

எ-து. பொல்லாத புலைச்சி ஒருவன் வீட்டிலே அவளின்னவளென்று அறியாதிருக்கப் புகுந்ததுண்டானால் அக்குற்றம் போம்படி மட்பாண்டம்

எல்லாம் புறம்பே யெடுத்தப்போட்டு மூழுகி மனையைக் கோமயகோசலத்தால் சுத்திசெய்யு முறைமையிற் சுத்திசெய்க, இக்குற்றமெப்படி போக்கிக் கொள்வோமென் றிரங்கித் தற்புருடத்தைத் தியானித்து ஐயாயிரமுருச் செபித்து உடனே கிருச்சரத்தையு மியற்றினு லக்குற்றநீங்கும். அச்சண்டாளி கையால் அபுத்திபூருவமா யொருநாள்புசித்தால் அப்புன்மை நீங்குவதற்குத் தப்தகிருச்சரத்தையு மியற்றி அகோர மந்திரத்தைப் பதினாயிரமுருச் செபித்துச் சிவனுக்குப் பஞ்சகௌவியத்தையாட்டி அச்சேடத்தைப் புசித்து உபவசியா யிருந்தால் அக்குற்றம்போம். எ-று. (௨௰)

இதுவுமது.

அறிந்துமொரு நாளவள்கை யருந்தினனே யாகி
லவகைய கிருச்சரமு மியற்றிடுக வடைவே
சிறந்தவுரு வாமத்தைச் சித்தத்தின் வைத்தே
செப்பிடுக வயுதமுற விரதமுஞ்செய் திடுக
வறிந்தவள்கை யருந்தியது மிரண்டுமூன் றாகி
லதிகமறிந் தியற்றிடுக வப்பாலு மருந்திற்
பிறிந்திடுவ தலப்புன்மை சண்டாள னாகிப்
பிரிந்திடுவன் முன்னில்லை யருந்துமுறை பிழைத்தான்,

எ-து. பறைச்சியென்றறிந்தும் ஒருநாள் அவள் கையால் புசித்தானானால் அக்குற்றம் போம்படி சாந்திராயணம், பராகம், பிராசாபத்தியம், தப்தகிருச்சரம், அதிதபனம் என்று கூறப்பட்ட பஞ்சகிருச்சரங்களையு மடைவே செய்து சிறப்பினையுடைய மாதர்வதனம் போன்றிருக்கிற வாமதேவ மூர்த்தியைத் தியானஞ்செய்து பதினாயிரமுருச் செபிக்க. செபமுடிந்தவாறே விரதத்தையுமுடிக்க. இன்னவளென்றறிந்திருந்து மிரண்டுமூன்றுநாள் அவள்கையால் புசித்தானானால் முற்கூறியமுறைமையில் செபபூருவமுதலியவற்றையதிகஞ்செய்க. இப்படி யநேகநா ளருந்தினும் கன்மசண்டாளனானபுலையனுக் கொருபோது மிப்பாவம்விட்டு நீங்காது. ஆனால் அவன்பூருவ சாதியுடன் கூடுவனோவெனில் இப்படி யருந்துகின்ற முறைமை பிழைத்தவன் முன்னுள்ள சாதியை விட்டுச் சண்டாளனாவான். எ-று. (௨௧)

விரதம் பின்னர்க் கூறுகின்றார்.

வண்ணாத்தி முதலாயினோர் மனையிற் புகுதல் முதலியவற்றிற்குச் சுத்தியுணர்த்துகின்றார்.

வத்திரத்தி னிருதுவினை மாற்றிடுவா ளில
வண்ணாத்தி தோற்பணத்தி வலகருமகாரி
யெத்தொகைய விழிகுலத்தா ரறியாது மனையி
னிணங்கிடினே மட்பாண்ட மெறிந்திடுக மண்ணாற்
சுத்திசெய்க கிருகத்தைக் கோமயகோசலத்தாற்
சொல்லுகநாண் மூன்றையா யிரமயுத மகோர

மத்தந்தா லறியாதே வருந்தினனே லொருநா
ளறைகபதி னுயிரமு மைந்துறுமா யிரமும்.

எ-து. நாலுவர்ணத்து மாதர், இருதுவான புடைவையைச் சுத்திப ண்ணும் வண்ணாத்தி, நீலவண்ணாத்தி, தோற்பணத்தி செய்வதற்கு வல்ல மையையுடைய முச்சிய மாதரிவர்கள் முதலிய விழிந்த சாதியிற் பிறந்தவர்களும், அறியாமல் வீட்டிற் பிரவேசித்தாராஞல் மட்பாண்டத்தை யெடுத்துப் புறம்பேபோட்டு முழுகிப் புற்றுமண் கோமய கோசலங்களாலுங் கிருகசுத்திசெய்க. மூன்றுநாள் சத்தியோசாதத்தை ஐயாயிர மையாயிர முருச் செபிக்க. அவளைப் பரிசித்தாஞற் பதிஞயிரமுரு அகோரஞ் செபிக்க. அவளின்னவளென் றறியாம லவள்கையா லொருநாள் போசனம் பண்ணிஞஞல் அகோரத்தைப் பதினையாயிரமுருச் செபித்தா லக்குற்றம் போம். எ-று. (௨௨)

இதுவுமது.

நாண்மூன்றிம் முறைநவிற்றிக் கௌவியத்தை யருந்த
நாளிரண்டே லிருகுணித நவிற்றிடுக வறிந்தே
யூணுடையா னிருகுணித மொருநாளைக் கியற்ற
வுண்டதும்பன் ஞளாகி லுணவினையு மொழிந்து
நாணீராற் சாந்திரா யணவிரதந் தன்னை
நவிற்றுகமற் றுகார தோடநவை நணிஞ
நீணிலவு சடையமலற் கானைந்து மாட்டி
நிசிவேலை தனிலருந்த வவலமெலா நீங்கும்.

எ-து. இப்படி மூன்றுநாளும் பதினையாயிரம் பதினையாயிர முருச் செபித்து முடிவிற் பஞ்சகௌவியத்தைப் புசித்திருக்க. அபுத்தி பூருவமா யவள்கையால் இரண்டுநாள் புசித்தாஞஞல் முப்பதிஞயிர முருவகோரத்தைச் செபித்துப் பஞ்சகௌவியத்தைப் புசிக்க, அவள்கையாலே யறிந்து ஒருநாள் புசித்தாஞஞல் முற்கூறியதி னிருமடங்கு செபிக்க. அறிந்து புசித்ததுவும பலநாளாஞல் அதற்கேற்றியேற்றிச் செபமுஞ்செய்ததின் முடிவில் நாடோறுஞ் சுத்தசலத்தாற் சாந்திராயண விரதத்தை யனுட்டிக்க. யாதாயினு மோரிடத்தில் புசிப்பிஞலுண்டான குற்றம் போம்படி பிரகாசமுடைய சந்திரனைச் சடையிற் றரிக்கின்ற சிவனுக்குப் பஞ்சகௌவியத்தை யாட்டி அதை யிராத்திரிபுசித் துபவசியாயிருக்க அதிஞலுண்டான குற்றமெல்லாம் போம். எ-று. (௨௩)

முதற்கண் டொகுத்துப்போந்த சாந்திராயணமுதலிய விரத
விதியை யுணர்த்துகின்றூர்.

முதற்பக்க மூவைந்து மொன்றிரண்டென் றேற்றி
முகந்துவலக் கரத்தாலே நீருந்திமுறையா

லதற்கபர பக்கத்தி னெவ்வொன்று குறைத்தே
யருந்துதலே சாந்திரா யணவிரத மாகும்
பதத்துணவு நீருணவு மின்றிப்பன் னிருநாட்
பட்டினியே பராகமினிப் பிராசாபத் தியந்தா
னுதித்தபகன் மூன்றாண்மற் றயாசகமு மொருமூன்
றொருமூன்று நிசியூண்முப் பகலதனில னுணலாம்.

எ-து. பூருவபக்கத்துப் பிரதமைமுதல் பதினைந்துநாளுஞ் சலத்தை வலக்கையாலே யொவ்வொரு சேரங்கையாக நாடோறு மேற்றியேற்றிப் புசித்து அபரபக்கத்துப் பிரதமை முதனுடோறும் ஒவ்வொரு சேரங்கை யாகக் குறைத்து அருந்தி முடிப்பது சலசாந்திராயண விரதமென்றறிக. நீரும் அன்னமுமென்னு மிரண்டினையும் புசியாமற் பன்னிரண்டு நாள் சுத்தப்பட்டினியேயிருக்கை புராகமென்னுங் கிருச்சரமாம். சூரியனுதிக்கின்ற பகலில் மூன்றுநாண் மத்தியான மொருவேளை புசித்தலும் அதற்கடுத்த மூன்றுநா ளொன்றுந் தொடாமல் அயாசகமாய் வந்ததைப் புசித்தலும், மூன்றுநா ளிராத்திரி யொருவேளை புசித்தலும், மூன்றுநாள் வாயுவே யாகாரமாகப் புசித்தலுமாகப் பன்னிரண்டு நாளு நியமத்தோடிருத்தல் பிராசாபத்தியமென்னுங் கிருச்சரமாம். எ-று. (உ௭)

இதுவுமது.

அருந்துகவா ரழற்றோய மொருமூன்று பகலு
ளழனிகழு மாவின்பா லருந்துகமுப் பகலு
ளருந்திடுக வழனிகழு மானெய்முப் பகலு
ளருந்தாதே யாதேனு மாகபகன் மூன்றுள்
வருந்துதலிம் முறைதன்னின் முன்னான்கு தினமு
மதித்திடுக தத்தகிருச் சரமென்றே மதியோ
ரருந்துதன்முப் பலப்பான்மூ வைந்தாறு தினமு
மதிதபன மாமென்றே யறிககரி சறுப்பார்.

எ-து. தாஞ்செய்த பாவத்தைப் போக்கவேண்டுமென் றறிந்தவர் வெந்நீரை மூன்று பகலுஞ் சுடுகிற பசுவின்பாலை மூன்று பகலுஞ் சுடுகிற பசுவினெய்யை மூன்றுபகலு மருந்துக. ஒன்றும் புசியாமல் மூன்றுநாளுமிருக்க, இப்படியே வருத்தமுற்றுப் பன்னிரண்டுநா ளிருப்பது தத்தகிருச்சரமென் றறிக. இருபத்தொருநாண் மூன்றுபலப் பசுவின்பாலைப் புசிப்பது அதிதபன மென்னுங் கிருச்சரத்தின் முறைமையென் றறிக. எ-று.

வியாதி முதலியவற்றால் இது அனுட்டிப்பதற்கு அசத்தரானாற் பிராசாபத்தியத்துக் கொருபசுவும், சாந்தபனத்துக் கதிலிரட்டியும், அதிகிருச்சரம் பராகந் தத்தகிருச்சரம் இவற்றிற்கு மும்மூன்று பசுவுஞ் சாந்திராயணத்துக்கெட்டு பசுவுங் கொடுக்க. தரித்திரனானவதற்கு மூன்று பசுவுங்

கொடுக்க. பசுக்கொடுக்க மாட்டாதார்கோமூலியம் பன்னிரண்டு பணங்கொடுக்க. இம்முறையே கொடுத்தால் அந்தந்தவிரதமனுட்டித்த பலத்தைக் கொடுக்கு மென்றறிக. (௨௫)

திருவிழா முதலியவற்றிற்குப் பரிகார முணர்த்துகின்றார்.

தேவனது திருவிழவுஞ் சேவிக்க யாருந்
 திரண்டதிரு வீதிதனிற் றீண்டார்தீண் டிடினும்
பாவமில்லைப் பரமேசன் பதிவணங்கச் செல்லும்
 பரிசினுமா மகந்தனினும் பணிமொழிதன் பாணி
மேவியிடும் விவாகத்தும் வெண்பொடிப்பூ சிடுக
 விரிபுனலின் மூழ்கிடுக மற்றையன வேலைப்
பாவியைப் பார்த்தானே லகோரசதாட் டகத்தைப்
 பகர்ந்திடுக பரிசித்தான் பகர்கபுனல் படிந்தே.

எ - து. சிவன் திருவிழாவில் திருவீதியில் ஆன்மாக்களை நெருங்கிச் சேவைசெய்யு மிடத்துத் தன் சாதியாயினும் பிறசாதியாயினுந் தீண்டினால் அக்காலம் தோடமில்லை. சிவத்தல தரிசனத்துக்குப் போங்காலத்தும் அக்கினிட் டோமமுதலிய யாகத்திலும் பார்ப்பார் முதலானோர் விவாகஞ் செய்யுங் காலத்துந்தீண்ட அருகரல்லாதவர் தீண்டினால் அக்குற்றம்போம்படி விபூதியுத்தூளனம் செய்க. இவ்வாறு கூறப்பட்ட காலங்களில்லாமலொழிந்த காலங்களிற் பரிசித்தால் தடாகமுதலியவற்றில் மூழ்கினால் அக்குற்றம்போம். அதிபாதகமுதலிய பாவங்களைச் செய்தபாவிகளைப் பார்த்தானானாலகோரத்தை நூற்றெட்டுருச் செபிக்க. அவர்களைத் தீண்டினானால் முழுகிய கோரத்தை நூற்றெட்டுருச் செபிக்க. எ-று. (௨௬)

அதிபாதகாதியர் அன்னமருந்தினாற் குற்ற
முணர்த்துகின்றார்.

அருந்தினரே லக்கணமே பதிதரென வறிக
 வதிபாத கானமமார்ப் பழிப்பா ரன்ன
மருந்தினரே லொருமாத முறப்பதித ராவ
 ரபவாதர் பிசினபிளை யற்றுனென் றிவர்சோ
றருந்தினரேல் வருடமுறப் பதிதரென வறிக
 வஞ்சாச்சூக் திரர்கரிசுக் களியில்லா வனையர்
பொருந்தமணப் புணர்நாண்முன் புரிவார் புல்லறிவ
 ரெனுமிவர்த மன்னத்தைப் புசித்தார்க டாமும்.

எ-று. சிவநிந்தை செய்தவர்கள் அன்னத்தைப் புசித்தவர்கள் அப்போதே பதிதராவார்கள். தேவர்களைத் தூடித்தவர்கள் அன்னத்தை யொருமாதமிடையறாமல் புசித்தவரு மப்போதே பதிதராவார்கள். ஒருவர் சொல்லாத வார்த்தையைச் சொன்னானென்று அவதூறுசொன்னவர்கள் அன்னமும் இரா

சசத்துடனே கோட்சொல்லுகிறவள் அன்னரும் மலடி யன்னரு மொருவ ருட மிடையருமல் புசித்தார்களாகு லவர்கள் பதித்தொன்றறிக. பாவத்துக் குப் பயப்படாத சூத்திர ருடைமையையு மான்மாக்களிடத்தி லிரக்கமில்லா த அரசர்களுடைமையையும் விவாகம் செய்வதற்கு முன்னுகப் பிராமணர் மாயேசுருக்கென்று தத்தம்செய்த உடைமைமையு முயர்ந்தசாதியானுமி ழிந்த சாதியானு மற்பார் யறிவில்லாதவர்களானால் அவர்களுடைமையை யும் ஒருவருட மிடையருமல் புசித்தவர்களும் பதிதராவார்கள். எ-று. (உஎ)

இதுவுமது.

கன்னிகையை விற்பார்கள் பரதாரந் தன்னைக்
 காமுறுவார் மனைவிகுறை கண்டறிந்துந் துறவார்
பொன்வினைசெய் கொல்லர்மரக் கொல்லர்பொருட் பெண்டிர்
 புலைவிலைஞர் மதுவிலைஞர் புரந்தாரை மறந்தார்
தென்னெனவே பாடுமவ ராடுமவர் வாளாற்
 சேவிப்பார் பூவிற்பார் செக்கார்சோக் கிடுவா
ரென்னுமிவ ரெழுவாய ரன்னுதி யருந்தே
 விழுக்கான வனமுளத்தை யழுக்காக்கி விடுமே.

எ-து. உத்தமமாகிய பிரமமுதலியவற்றி லொன்றுற் கன்னிகையை த்தானஞ் செய்யாமற் பணம் வாங்கி வாழ்க்கைப் படுத்துமவரும், பரதாரங் களை யிச்சிக்கு மவரும், மனைவி பிறர்முகம் பார்க்க அவளை நீக்காது மகிழ் ந்து கூடுகிறவரும், பொன்முதலிய பஞ்சலோகங்களைப் பணி செய்யுந் தட் டார் தச்சர் முதலானோரும், பரத்தையரும், ஆட்டுவாணிகருங், கள்வாணிக ருஞ், செய்ந்நன்றி குன்றினவரும், பலனையு மழகாகப் பாடித்திரிகிறவ ரும், கழைக்கூத்தாடிகளும், வாளாற் சேவகஞ் செய்பவரும், நந்தவனத்துப் பூவை யெடுத்து முடிபூவுக்கு விற்கும் பூவாணிகரும், எண்ணெய் வாணி கரும்,நித்திரையிற் சொக்குப்பொடிபோட்டுக் களவுசெய்பவருமாகிய இவர் கள் முதலானோ ரன்னமுதலியவற்றை வாங்கி யொருக்காலும் புசிக்கக்கடவ னல்ல. இவர்களன்னங் குற்றமுள்ளதாகையால் அதனைப் புசித்தவர்களுக்குச் சித்தசுத்தியைப் பண்ணுமற் பாவத்தை யுண்டாக்கும். எ-று.

எழுவாயர்-என்றதனுல் கன்னுர், கொல்லர், வண்ணுர், குருநிந்தை செய்வோர் பாஷண்டி முதலாயினருங்கொள்க. (உஅ)

அதற்கோர் புறனடை யுணர்த்துகின்றுர்.

அழுக்குளமே பாவத்தை யாக்குதற்குத் துணியு
 மவ்வினையா னிரயத்தி னழுங்கியழுந் துவரோ
யிழுக்கான மொழித்தவரோ யிச்சிப்பார் சுகிர்த
 மேறிடுவர் பரலோக மின்புறவே யிருப்பார்

வழுக்காம மொழிக்கமணில் வந்துதவம் புரிந்து
மறந்திடுவர் பிறப்பினையுஞ் சிறந்திருப்பர் சிவன்றாள்
சழுக்கான மனத்தாரோ சடலத்தைப் பேணித்
தடக்குவருந் துயரத்தைச் சாற்றினுந்தாங் கேளார்.

எ-து. அவ்வழுக்கான வுள்ளமே யான்மாக்களுக்குச் சித்தசுத்தி பிறவாமற் பாவத்தைச் செய்தற் கொருமைப்பாட்டைக் கொடுக்கும். அதனுல் பாவத்தையேசெய்து நரகத்திற்போட வருந்திநோவார்கள். ஆகையாற் பொல்லாதென்ற அவர்களன்னத்தை யொருக்காலும் புசியாமற் றள்ளினவரோ நல்வினைப்பயனை யடையக் கருதுமவர். அதனுல் சுவர்க்கமுதலிய உலகங்களையடைந் தங்குள்ள போகங்களைப் புசித்திருப்பார்கள். குற்றத்தையுடைய சரீர மேலெடாதபடி பூமியில்வந் தரியதவங்களையுஞ் சிவபூசைகளையுஞ்செய்து அதனுலே யொருபோதுஞ்சனனமெடார்கள். ஆகையாற் சிவனுடையசிபாத நிழலின்கீழ் சிவானந்தானுபூதியை யனுபவித்துக்கொண் டிருப்பார்கள். மனக்கோணலுடைய பொல்லாதவர்கள் இம்மையிற் சரீரத்தையே போற்றிப் பொல்லாதவர்க ளன்னத்தைப் புசித்ததனுல் மறுமையில் நரகத்தில் விழுந்தழுங்கு முறைமைகளை நூல்களினுல் பலகாற்சொல்லினு மதனைக் கேளார்கள். எ-று.

பிறப்பினையுமென்ற உம்மையான்-மரணத்தையு மடைவார்கள் என்பது கொள்ளக் கிடந்தது.

(௨௧)

விவாகமுதலியவற்றிற் புசித்தாற் பரிகாரமுணர்த்துகின்றார்.

அருந்தினனேல் விவாகத்தி லகோரசத மறைக
வாயிரமுச் சரித்திடுக நாலாநா ளருந்தி
னருந்தினன்சி மந்தத்து மாயிரமுச் சரிக்க
வவ்வளவே நாமகரணத்தருந்தி னுலு
மருந்தினனே லன்னத்தை யருந்தியிடு நாளு
மவ்வளவே யுச்சரிக்க வறைந்திடுக வயுத
மருந்தினனேற் சிரார்த்தத்திற் சபிண்டிதனி லருந்தி
லாயிரமப் பாலருந்தி வறைகவொரு நூறே.

எ-து. ஒருவன் விவாகத்தில் ஞாதியல்லாதார் புசிக்கி லகோர நூறுருச் செபிக்க, நாலாநாட் சடங்கினுஞ் சீமந்த கலியாணத்தினும் நாமகரணகாலத்தினும் ஊட்டுக் கலியாணத்தினும் புசித்தானுனு லகோர மாயிரமுருச் செபிக்க, ஏகோதிட்டத்திற் புசித்தானுனல் அகோரம் பதினுயிர முருச்செபிக்க, சபிண்டிகரணத்திற் புசித்தானுனு லகோரமாயிர முருச்செபிக்க, வருடந்தோறுஞ் செய்யுந் திவசத்திற் புசித்தால் அகோர நூறுருச் செபிக்க. எ-று.

மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின்மொழியாததனை முட்டின்றி முடித்தலென்னுந் தந்திரவுத்தியால்; திரை யபக்ஷகம், ஊனமாசிகம்,

ஜனஷாண மாசிகம்,ஊனப்திகம் இவைகளிற்புசித்தானுனல் அகோரமோ வ்வொன்றுக் காயிரமுருச்செபிக்க. பும்சவனத்துக்குநூறுருச்செபிக்க. (௩௰)

இதுவுமது.

அறிவழிந்து விரியத்தை யவலமல சலத்தை
யருந்தினனு மதோசாதி யகத்தினருந் தினனு
மெறிவிழிப்பட் டிரங்கிமனம் புலைச்சியினைத் தோனை
யிணங்கவெனு மிழுதையுமென் றியம்பியவெல் லோரு
மறிவுறவே யகோரத்தை யயுதமுற வறைந்தே
யருந்துகவா னைந்தினையு மமலனணி முடியிற்
செறிவுறவே திளைத்தாட்டி முப்பொழுதும் பூசை
சிறப்புறவே செய்விக்க வவ்வினைக டீரும்.

எ-து. சித்தோன்மத்தத்தினுல் அறிவழிந்து இந்திய முதலியவற்றைப் புசித்தவனும், தான் புசித்தற் கருகமல்லாத வீனசாதிகள் வீட்டிற் புசித்தவனும், வெருவுதலையுடைய விகாரப் பார்வையினுல் மனமிரங்கி அப் புலைச்சியைத் தீண்டக் கருது மறிவில்லாதவனுமாகிய விம்மூவரும் இப்படி செய்தோமென் றிரங்கி அகோரத்தைப் பதினுயிரமுருச் செபித்து மூன்று காலமுஞ் சிவனுக்கு விசேட பூசை செய்வித்துக் கொளவியத்தையாட்டி அதனைப் புசித்திருந்தால் அக்குற்றம் போம். எ-று.

திளைத்தல்-பலகாற்செய்தல். (௩௧)

கனகமுதலிய பாத்திரங்களின் சுத்தி இரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

அருங்கனக பாத்திரமுன் மரபனைத்தை யந்த
மழனீராற் சுத்தியுறு மருவருப்புண் டாகிற்
பொருந்திடும் புனிதங்கோ சலத்தான்மண் ணீராற்
பொருகரியின் மருப்புவளை சுத்திமுதற் புனித
மரிந்துகடைந் திடவுமியா னீரானு மேடாறு
மாம்புனிதங் கோமயத்து மறலானு மாகு
மெரிந்தபுனன் மண்ணிவற்று னிலங்கியிடு மவல
மெய்தியிடிற் புனிநீராற் றுமிரந்தா னிலங்கும்.

எ-து. பொன் முதலிய பஞ்சலோகங்களினுற் செய்யப்பட்ட பாத்திரங்களும், தருவினுற் செய்யப்பட்ட சுருக்குச்சுருவ முதலாயினவும், வெந்நீராற் கழுவினுற் சுத்தி. மகளிர் சூதகமுதலிய வருவருப்புற்ருல் வெள்ளி முதலிய பாத்திரங் கோசலத்தாலும் உவர்நீராலுஞ் சுத்தி, போரிற் பொருகின்ற யானைக்கோடு சங்கு முத்துச்சிப்பி இவை அரிந்து கடைந்தால் முதற்சுத்தி, நித்தியசுத்தியு மிக்காக்கலாற்றுன் அவைகளில் அசுசியுற்ருல் கோ

மயத்தாலும் தண்ணீராலும் வெந்நீராலும் புற்றுமண்ணாலும் சுத்தி. செய்க: செம்பில் அசுசியுண்டானாற் புளிநீராற் சுத்தியாம். எ-று.

அவலம் என்பதனை ஈரிடத்துங் கூட்டுக, உளாயிற்கோடலென்னு முத்தியாற் பொன் மஞ்சட் பொடியாலும் வெள்ளி யுப்புத் தடவிக் காய்ச்சலாலுஞ் சுத்தி யென்க. (௩௨)

வெண்பொடியாற் றண்புனலால் வெண்கலமுன் விளங்கும்
  வெதுப்பியநெய் தடவியழ லெழுத்தியிட விளங்குந்
திண்கலச வெணகலமுன் றீண்டியிடிற் காகஞ்
  சிறப்புடைய கௌசிகமும் பெருங்கடுகு செறிந்த
தண்புனலாற் குதபாதி யரிட்டத்தைக் கலந்த
  தண்ணீரா லசிநுதி தடந்திரைநீர் தன்னான்
மண்பயிலக் கோசலமும் வாரியும்வார்த் திடினே
  மலினமுறி னசினத்திற் புனிதமிக வாய்க்கும்.

எ-று. வெண்கலப் பாத்திரமுதலானவை வெண்ணீற்றாலுஞ் சலத்தினாலுஞ் சுத்தி. அவற்றைக் காக்கை தீண்டினாற் பசுவின் வெண்ணெயுருக்கித் தடவியழலிற் காய்ச்சினாற் சுத்தி. சிறப்பினையுடைய பட்டாடைகள் வெண்கடுகு கூடின நீராற்சுத்தி, தருப்பை முதலாயின மோர்சேர்ந்த சலத்தினாற் சுத்தி, புலித்தோன் முதலானவை பெரிய குளங்களிற் றோய்த்தெடுத்தாற் சுத்தி. தோன் முதலியவற்றில் அசுசிபட்டாற் புற்றுமண்ணாலுந் தண்ணீராலுங் கோசலத்தாலுங் கழுவினாற் சுத்தியாம். எ-று.

கவுசிகமென்ற உம்மையால் வெண்பட்டும், மலையிலுண்டானசெம்மறியாட்டுக் கம்பளமும் கவரிமாமயிரு முதலாயின பூவம்பழத்துடன் கூடின நீராற்சுத்தி. அசிநுதியென்றதனான் மரவுரியு மூங்கிலாற்செய்ததுமென்க.

அன்னசுத்தி யுணர்த்துகின்றார்.

பாண்டத்திற் பதமதனைப் பற்றிடினே வாயாற்
  பன்றிகர நாய்பூனை காகமிவற் றொன்று
வேண்டற்க பாண்டத்தோ டன்னத்தை விடுக
  மிக்கவிரா சியினேக தேசத்தின் விரவிற்
கீண்டெற்றிச் சேடத்திற் றிருநீறு கெழுமிக்
  கவ்வியத்தும் புரோக்கிக்க வுண்கலத்திற் கெழுமின்
மாண்டற்ற மசகாதி யுறும்புறத்தை மாற்றி
  மற்றையபாற் றிருநீறு மருவுதலின் வரமே.

எ-து. பன்றி, கழுதை, நாய், பூனை, காகம் இவற்றில் ஒன்று பாண்டச்சோற்றில் வாயிட்டால் அதைப் பாண்டத்துடனே புறம்பேயெடுத்துப் போடுக. பாவாடையிற் சொரிந்திருக்கு மிருந்த வன்னத்தில் ஒருபுறத்திற்

டன்றிமுதலியன வாயிட்டதாகு லவ்வாயளவு மெடுத்துப் புறம்பேபோட்டு நின்ற வன்னத்தைத் திருநீற்றாலும் பஞ்சகௌவியத்தாலுஞ் சுத்திசெய்க. போசனஞ் செய்கையினுலுண்கலத்தில் கொதுகு முதலியன விழுந்து செத்தா லவ்வளவுமெடுத்துப் புறம்பேபோட்டுக் கையைக் கழுவிக்கொண்டு சேடவன்னம் திருநீற்றாற் புரோக்கித்துச் சுத்திசெய்தாற் புசித்தற்குச் சிறப்பாம். எ-று.

உணாயிற் கோடலென்னுமுத்தியாற் பூனை கீரி பெருச்சாளி முதலானவை அன்னமுள்ள பாண்டத்தில் வாயிட்டால் அப்பாண்டத்தை யேழுதாரமந்திர மந்திரத்தாற் கழுவிப் பின்பு தருப்பையாற் பரியக்கினி கரணஞ்செய்தாற் சுத்தியாம். அன்னமில்லாத பாண்டமானல் அதற்கதற்கேற்ற சுத்திசெய்க. (௫௪)

தேன்முதலானவைகளுக்குச் சுத்தியுணர்த்துகின்றார்.

தேன்வடித்துச் செந்தழலிற் செறிக்கவுறும் புனிதந்
தெண்ணீரிற் செறித்துப்புக் காய்ச்சியிடச் சிறக்கு
மான்வெண்ணெ யாம்புனித மழலின்வெதுப் பிடலு
மறலெண்ணெ யாதியருக் கியத்தாலும் புனிதங்
கான்மலிந்த கர்ப்பூரங் குங்குமங்கத் தூரி
கமழ்சாந்து புழுகுசவா தெனுமிவையுங் கமழு
மான்பாலும் புனிதங்கன் றருந்தியதன் முலையுங்
கழுவியற லாற்கரந்தே வெதுப்புதலு மழலின்.

எ-து. தேனை ஆடையால் வடித்துக்காய்ச்சினுற் சித்தி. உப்பைத் தண்ணீர்வார்த்துக் கழுவிக்காய்ச்சினுற் சுத்தி. பசுவின் வெண்ணெயையுருக்கி வடித்தாற் சுத்தி, திருமஞ்சனமும் நல்லெண்ணெய் முதலியனவுமணம்பொருந்திய கர்ப்பூரமுதலான சுகந்த திரவியங்களு மருக்கிய புரோக்கணத்தாற் சுத்தி. கன்றூட்டிய ஆவின் முலையையுங் கழுவிப்பாலைக்கறந்து காய்ச்சினுற் சுத்தியாம். எ-று. ஆதியென்றதனுல் திரணகாட்ட முதலாயினவு முலையுமென்ற உம்மையாற் கையையுமெனக்கொள்க. (௫௫)

இலிங்கசுத்தி முதலியவற்றை யுணர்த்துகின்றார்.

தெண்ணீராற் கோசலத்தாற் றிருநீற்றன் மயத்தாற்
சிறந்தநிலப் புற்றுமண்ணுற் சிவலிங்கஞ் சுத்தி
விண்ணிவந்த வில்வத்தின் பத்திரத்தின் சாற்றான்
விசேடித்த சுத்திகிவே தனம்பொன் மாதி
புண்ணியவர்க் கியசலத்தைப் புரோக்கிக்கப் புனிதம்
பொருவரிய பரமசிவன் பூரணத்தை யுயிரி
னெண்ணவலாக் குயிர்ச்சுத்தி யேனையதத் துவத்து
மியைந்தமுறை யறிபினிவை களுஞ்சுத்தி யெய்தும்.

எ-து. கோசலங் கோமயங் திருநீறு சுத்தசலத்துப் புற்றமண் குளிர்ந்த திருமஞ்சன மிவைகளாற் சிவலிங்கஞ் சுத்தி. இது சாமானியசுத்தி; ஆகாசமளவாக வளர்ந்த வில்வப்பத்திரத்தின் சாற்றினல் சிவலிங்கத்தை யபிடேகஞ் செய்தாற் பிராயச்சித்தத்தில் அதற்கு விசேடசுத்தியாம். சிவனுக்கு நிவேதனம்பண்ணச்சமைத்த அன்னமுதலானவை அருக்கியசலத்தினற் புரோக்கித்தாற் சுத்தியாம். ஞாதாக்கள் ஒப்பில்லாத பரமேசன் ஆன்மாக்களிடத்தில் வியாபித்திருந்த முறைமையை யுள்ளபடியறிந்தால் அவர்களுக்குயிர்ச் சுத்தியாம். நாதமுதன் மண்கடையாயுள்ள தத்துவங்களிலே சிவன் வியாபித்திருக்கு முறைமையை யுள்ளபடி யறிந்தால் தத்துவசுத்தியாம். எ-று.

நித்தியானுட்டானம் பூசை தவறிற் பரிகார
முணர்த்துகின்றார்.

சாற்றிடுக தவறிடினோர் சந்தியசா தத்தைச்
சதமுறவே சதுர்த்தியெனுஞ் சந்திநிலை தவறி
னேற்றியொரு நாற்குணித மியம்பிடுக தவறி
னொழிற்பூசை யகோரத்தை யெண்ணுகவா யிரத்திற்
போற்றியுடன் பூசையினைப் புரிந்திடுக வறிந்தான்
புகன்றிடுக விருகுணிதம் புசிப்பொழிக வழலி
னேற்றியவி யியற்றிடுக பன்னளுந் தவறி
னிந்தமுறை யறிந்தியற்றப் பூசனைவாய்த் திடுமே.

எ-து: முதற்காலம் அபுத்தி பூருவமாய்ச் சந்தியாவந்தனம் பண்ணுதொழிந்தால் அக்குற்றம் போம்படிச் சத்தியோசாதத்தை நூறுருச்செபிக்க. நாலாஞ் சந்தி தவறினல் அம்மந்திர நானூறுருச் செபிக்க. புத்திபூருவமானு லிருமடங்கு செபிக்க. ஒருகாலஞ் சிவபூசையை யபுத்திபூருவமாகச் செய்யாதொழிந்தா லகோரத்தை யாயிரமுருச் செபித்துப் பின்பு சிவபூசைசெய்தாலக்குற்றம்போம். புத்திபூருவமா யொருகாலம் பூசைபண்ணு தொழிந்தாலுபவசியாயிருந்து அம்மந்திரத்தை யிரண்டாயிரமுருச் செபிக்க. பலநாளும் பூசைதவறினு லிம்முறை யேற்றியேற்றிச் செபஞ்செய்து உபவசியாயிருந்து அக்கினி காரியஞ் செய்தா லக்குற்றம்போம். எ-று.

எற்றி யென்னுங் கருத்தா லிரண்டாஞ் சந்தி மூன்றாஞ் சந்தி தவறினல் அபுத்தி பூருவத்திற் கிருநூறு முந்நூறும், புத்தி பூருவத்திற் கிரட்டியுஞ் செபிக்க. சமையி, புத்திரன், சாதகன், போதகன் இந்நால்வர்க்கும் அந்நாற் சந்தியுமென் றறிக. ஒருநாண்முதற் பத்துநாள் வரையும் பூசைசெய்யா திருந்தா லொவ்வொருகாலப் பூசைக்கு மூவாயிர மூவாயிர முருவாக நாடோறுமேற்றிச் செபஞ்செய்க. பத்துநாளைக்குமேற் பதினைந்து நாள்ளவும் பூசியாதொழிந்தால் நாளொன்றுக்கு முப்பதினயிரமுருச் செபித்துக் கலசத்தாபனமுஞ் செய்து அபிடேகம் பண்ணி ஓமமுஞ் செய்தாற் குற்றம்போமென்க. சத்தியோசாதத்தை அசாதமென்றது தலைக்குறை. (௬௭)

நித்தியாங்கமாகிய பவித்திரஞ் சாத்தாதொழிற்றாற்
பரிகார முணர்த்துகின்றார்.

ஆக்கியான் றிருமுடியிற் பவித்திரத்தை யணிக்
வாயுமுதன் மூன்றினையோ யார்த்தானே லகோர
வாக்கனைநக விருதியுத மறந்தானை மறந்தான்
மந்திரிக்க விருத்தமித மழியேமறந் தானு
னோக்கியபற் முநாளாக னவின்றிகே நியுநம்
வருடத்தின் மாதத்தின் ளெய்தியற்றி யகோர
வாக்கனைநக விராயுத நிவேதனத்தை மறந்தான்
மற்றவற்றுஞ் சிவகாயத் திரிசதமென் வாக்கே.

எ-து. விதிமுறை சந்த பவித்திரஞ் சங்காவதாரம் கௌரியவதாரங் களைத்தினாயம் எனக்கூறிய பவித்திரங்களை யுண்டாக்கி விதிமுறையே யதிவாதனஞ்செய்து சிவன் திருமுடியில் பவித்திரஞ் சாத்துவதற்கு முன் னுன் சந்தபவித்திரஞ் சாத்தா. ஆடி, ஆவணி புரட்டாதி யிம்மூன்று மாதத் தினுள் அதிகமாத மலிமாதம், விட்டுணு சயன முதலிய காலங்களை நீக்கி ச்சாத்துக. அபுத்திபூருவமாகச் சாத்தா தொழிந்தால் உபவசியா யகோரத் தை யிரண்டுநூறுயிரமுருச் செபிக்க. புத்திபூருவமாகப் பவித்திரஞ் சாத்தா தொழிந்தால் உபவசியா யதனி னிருமடங்கு செபஞ்செய்க. அக்கினிகாரிய மொருகாலஞ் செய்யாதொழிந்தால் ஒருகாலம் பூசை தவறினதற்குச் சொ ன்ன முறையே யிதற்கு மேற்றி செய்க. இம்முறை யோமஞ்செய்யா நா ள்கடோறுங் கணக்கறிந் தம்முறையே யேற்றியேற்றிச் செய்க. ஒருமாதம் அக்கினிகாரியஞ் செய்யாதொழிந்தால் நாளொன்றுக்கு முந்நூறு முந்நூறு அகோர மந்திரத்தை யேற்றிச் செபஞ் செய்க. ஒருவருட மக்கினி காரியஞ் செய்யாதொழிந்தால் அம்மந்திரத்தை நூறுயிரமுரு நூறுயிரமுருவேற்றிச் செபஞ்செய்க. சிவனுக்கு நிவேதனஞ்செய்யாதொழிந்தா லகோர மந்திரத் தை யிருபதினாயிரமுருச் செபிக்க. ஆசிரியர் முதலானோர் பவித்திரஞ் சா த்தும்பொழுது அதற்குச் சொன்ன விரதங்கள் நியமங்கள் அனுட்டியாமற் குறைவுறுமாயின் சிவகாயத்திரியை நூறுருச் செபித்தா லக்குற்றம்போம். மற்றென்பது வினைமாற்று. (௬௮)

இட்டலிங்கத்துக்குப் பரிகார மிரண்டு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

செந்தழலினபாயத்தாற் சிவலிங்கத் துருவஞ்
சிறப்பழியி னழிந்தறிவு தேசிகனை வணங்கி
வந்தவினை நைந்தழிய வுண்டியொழிந் தகோர
மந்திரிக்க நியுதமுற மற்றொருவின் கத்தைத்

தந்திடவே தாங்கிடுக சோரரான் மற்றுந்
தவறுறினு மூணாத்தமூறை தனைச்செய்க தழல்வந்
தந்தவுரு வந்தீண்டி யும்பழுதின் றாகி
லறைந்திடுக மூன்றயுத முடல்விடல்பொல் லாதே.

எ-து. சிவலிங்கம் அக்கினியினாலே திருமேனியிற் பூருவவன்னம் விட்டு வேறுவன்னமாகக் கண்டாலுஞ்சிதறிப்போனாலும் இப்படிவந்துவிட்டதே யென்று மனத்திற் றுயரமடைந்து ஆசிரியனை வணங்கி இக்குற்றம் போக்கி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து உபவசியா யகோரத்தை நூறுயிரமுருச் செபித்து அவ்வாசிரியனால் வேறொரு லிங்கத்தையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு பூசைசெய்க. கள்வர் முதலானோர் சிவலிங்கங்கொண்டுபோனால் அது வருமோவென்று நாற்பதுநா ளுபவசியாயிருந்து பின்பு முற்கூறியபடி பரிகாரஞ்செய்து எழுந்தருளப்பண்ணிக்கொள்க. அக்கினி யச்சிவலிங்கத்தைத் தீண்டினால் பழுதிலவாயிருக்கும். ஆனாலுபவசியாய் முப்பதினாயிரம் உருச்செபிக்கில் அக்குற்றம்போம். அப்படிச் செய்யாது பத்தியினாலுடல் விடுவோமென்பது பொல்லாது. எ-று.

மற்றுமென்றதனால் வானரம், காகம், பருந்து, எலி முதலாயினவற்றாலபாயம் வரினுமம்முறையே செய்க. (௩௩)

ஊறுபடிற் றிருமேனி பரார்த்தத்து மொழிக்க
வுரித்தாகு மற்றொன்று சயம்பெழுவா யொழிபேற
கூறிடுக வீரயுதம் பதமேனி குறுகிற்
கடந்திடினிற் றாளிபடிற் கூறுகவோ ரயுதம்
றூறுமிரு நூறுமுற நுவல்கநிழல் கடந்தான்
பீடத்திற் சாய்ந்திடினு மவ்வளவே நுவல்க
வாறியிட வபராத முருண்டிடினு யிரமீ
ராயிரம்பின் னும்முருண்டா லப்பாலோ ரயுதம்,

எ-து. மானிடர் தாபித்தபரார்த்த லிங்கத்தில் அக்கினிமுதலியவற்றாலூறுபட்டால் ஒழிக்க. மற்றை ஆன்மார்த்த லிங்கத்தினுஞ் சுவயம்பு முதலிய இலிங்கத்தினு மூறுபட்டால் ஒழியற்க. சிவலிங்கத்திற் கால் படினுங் கடக்கினு மிருபதினாயிரமுருச் செபிக்க. காலில் தாள் திருமேனியிற் பட்டாற் பதினாயிரமுருச் செபிக்க. இலிங்கத்தின் சாயை கடக்கினு மெழுந்தருளி யிருக்கிற பீடத்திற் சாய்ந்தால் அகோரத்தை முந்நூறுருச்செபிக்க. பீடத்திலொருகாலுருண்டால் அகோரமாயிரமுருச் செபிக்க. இரண்டுதரமிலிங்கமுருண்டா லிரண்டாயிரமுருச் செபிக்க. இரண்டுதரத்துக்கு மேற்பட்டுருண்டு கீழே வீழ்ந்தாற் பதினாயிரமுருச் செபிக்க. எ-று.

அவ்விலிங்கத்திலே யவையங்குலத்துக்கு மேற்படப் பழுதானால் அவ்விலிங்கத்தை;யொழிக்க. பீடத்திலே மூன்றங்குலத்துக்குமேற் பழுதா

றல் அப்பீடத்தை யொழிக்க. அவ்விலிங்கப் பிரமாணத்தில் வேறொருலிங்கத்தில் முன்புபோல மானிடமாகத் திருமேனியைச் செய்தபிரதிட்டையை யவ்வழியே செய்க. சுயம்பு, தைவிகம், ஆரிடம், காணவம் இவைகளிற் பழுதானாலும் அக்கினிவாதையினாற் பழுதானாலும் அச்சிலையைத் தானே முன்புபோல் சந்திக்கவைத்துத் திடமுறம் பொருட்டுச் செம்பு முதலானவற்றாற் பட்டங்கட்டி அதனையே பூசைசெய்க. பீடம்பின்னமானாற்சிர்ணோத்தாரண விதியா லதனை யெடுத்துப் போட்டுப் பெண்சிலையினால் முன்புபோல் திருமேனிகொண்டு பிரதிட்டைசெய்க. எ-று. (௪௰)

ஆதார நிராதாரத்தில் வருங்குற்றத்துக்குப் பரிகார
முணர்த்துகின்றார்.

அயுதமியம் பாதாரத் தொடுவிழினே சாணுக்
காதார மறவிழினே யீரயுத மறைக
வயுதமிரண் டறைந்திடுக வாய்த்திவலை யணுக
வறைந்திடுக மூன்றயுத மணுகிடினே கோழை
நியுதமுற நிகழ்த்துகவாழ் நீர்தன்னிற் படியி
னின்மாலி யப்புனலிற் படிந்திடினு நியுதம்
விதிவினைதா னிலைப்புருட மாத்திரத்தின் வீழ்ந்து
விண்டிடினே சிவலிங்கம் பீடம்பின் டிடினும்.

எ-று. பெட்டகக் கோயிலுடனே சேமப்பிழை வந்தாற் சாணுக்குப் பதினாயிரமுருச் செபிக்க. ஆதாரமில்லாமல் இலிங்க மாத்திரஞ் சேமப் பிழையானாற் சாணுக் கிருபதினாயிரமுருச் செபிக்க, வாய்த்திவலை சிவலிங்கத்தில் தெறித்தா லிருபதினாயிரமுங் கோழைபடின் முப்பதினாயிரமுஞ் செபிக்க, பெரியமடுக்களிற் கைதவறி வீழ்ந்தால் நூறுயிரமுருச் செபித்து முடிந்தவாறே யாசிரியனால் வேறொரு லிங்கத்தை யெழுந்தருளப் பண்ணிக்கொள்க. நின்மாலிய பாத்திரத்திலே வீழ்ந்தால் நூறுயிரமுருச் செபிக்க. ஒருபுருடப் பிரமாணத்தினின்றுஞ் சேமப்பிழையாய்ச் சிவலிங்கம் பீடமிவைகளிற் பின்னலங்கனமானா லதற்குப் பரிகார மில்லை. எ-று. (௪௧)

ஆசிரியர் முதலானோர் நிழலைக் கடக்கினு நைவேத்திய
மாதியில் தூடணம்வரினு மதற்குப் பரிகார
முணர்த்துகின்றார்.

தேசிகன்ற னிழல்கடந்தார் செபிக்கசதத் தினையந்
திருவேடத் தார்நிழலைக் கடக்கினுஞ்செப் பியவா
றாசகல வகோரத்தை யந்தணர்தந் நிழ
லாவினிழல் விளக்கினிழல் கடந்திடினா றறைக
வீசனது நிவேதனத்திற் கிருமிமயி ரிணங்கி
னிழிந்திடுக நிவேதிக்கி லியம்பிடுக வொருநூ
றாசகல விருதூணி யரிசியுயர் பிழிவு
விருநாழி யையுழக்கெக் காலத்து மாகா.

எ-து. ஆசிரியருடைய நிழலைக் கடந்தால் முந்நூறுருச் செபிக்க. சாதகர்புத்திரர் சமையிமுதலிய திருவேடத்தார் நிழலைக் கடந்தாலும் அப்படியே பார்ப்பார் பசுத்திருவிளக்கு இவைகளினிழலைக் கடந்தால் நூறுரு அகோரத்தைச் செபிக்க. இட்டலிங்கத்துக்கு வைத்த நைவேத்திய முதலியவைகளிற் புழு, மயிர் முதலான செந்துக்கள் விழுந்தால் அதை நிவேதனம் பண்ணுமலொழிக. அது அல்லாமல் கிடப்ப தறியாமல் நைவேத்தியம்பண்ணினுல் நூறுருச்செபிக்க. இட்டலிங்கத்துக்கு உத்தமம் இருநாணி; மத்திமம் இருநாழி; அதமம் ஐயுழக்கு அமுதுபடி ஆகையால் அவ்வதமமொருகாலு நிவேதனத்துக்கு ஆகாது. எ-று.

உத்தமத்தி லுத்தமம்-இருதூணி. மத்திமந்தூணி-அதமங் குறுணி. இருநாழி ஐயுழக்கு அமுதுபடி வைத்தாற் பைசாச போசனமாகையா லொருகாலு நிவேதனத்துக் காகாதென் றுரைப்பாருமுளர். (சஉ)

இட்டலிங்கத்தைப் பார்ப்பார் முதலானோர் தீண்டினுற்
பரிகார முணர்த்துகின்ருர்.

தீக்கையிலா வந்தண ராதியரிட்ட லிங்கந்
திண்டியிடிற் சிறப்புறவே பூசையினைச் செய்தே
நோக்கிமுறை யுறநூறு நுவல்கவிரு நூறு
முந்நூறு நானூறு வாமசம யத்தார்
மூர்க்கரொனும் வேடர்முத லோர்திண்டி னயுத
மொழிந்திடுக நாய்காகந் தீண்டின்மூ வயுத
நாய்க்கடுவான் றீண்டியிடி னவின்றிடுக நியுத
நயப்பனுக்குப் பூசையினைச் செய்துவிதி நயந்தே.

எ-து. தீக்கையில்லாத பார்ப்பார் முதல் நான்குவருணத்தார் இலிங்கத்தைத் தீண்டினுற் பஞ்சகவ்விய முதலியவற்ருல் விசேடபூசை செய்து பார்ப்பார் முதல் நால்வர்க்கு நூறு நூறுகவேற்றிச் செபஞ்செய்க. சைவபேதமாகிய மூல தந்திராவத சாத்திரத்தின்வழி யனுட்டிக்கும் வாமசமயத்தவரு மூர்க்கராகிய வேடர் முதலான விழிகுலத்தவருஞ் சிவலிங்கத்தைத் தீண்டினுற் பதினுயிர முருச்செபிக்க. நாய்முதலான மிருகமும், காகமுதலான பறவையும் தீண்டினுல் முப்பதினுயிர முருச்செபிக்க. நாய்க்கடுவான் இலிங்கத்தைத் தீண்டினுல் விசேட பூசையைச்செய்க. எ-று.

உரையிற்கோட லென்பதனுற் சுவந்தலளித்தின்வழி அனுட்டிக்குந் தக்கண சைவர்தீண்டினுற் பதினுயிர முருவும் வாமசமயி தக்கணசமையி இவர்களுடன் பேசினுல் நூறுருவுஞ் செபிக்க. நாய்க்கடுவானென்பது சண்டாளன் பிராமணியுடனே கூடிப்பிறந்தவன். (சங)

செபமாலைமுதலியவற்றிற்குப்பரிகாரமுணர்த்துகிருர்.

திருவுருவுக் குரைத்தபரி காரத்திற் பாதி
செபமாலை சிவஞான மெழுவாய்க்குஞ் செய்க

கருதிடுக கண்டைக்கும் பாதத்திற் பாதி
கைதவறி யபிடேக கலசமது கடுகித்
திருமுடியைத் தீண்டியிடி னீராயுதஞ் செபிக்க
தின்னியவர்க் கியம்விழிற் சிறைதயினூருண் டிடினு
மிருசதமா யிரமைஞ்ஞூ றியம்புகநாய்க் கடுவான்
றெரிசிக்கி லைந்தயுத மியல்லி கிசெப் திறைக்கே.

எ-து. சிவலிங்கத்துக்குக் கூறிய பரிகாரத்திற் பாதிசபமாலை சிவாகமமுதலியவைகளிற் கால்படினும் விழுந்தாலும் பரிகாரஞ் செய்க. சிவலிங்கத்துக்குச் சொன்னதி லெட்டிலொன்று மணிமுதலிய உபகரணங்களிற் கால்பட்டாற் பரிகாரஞ்செய்க. அபிடேக கலசங் கைநழுவித் திருமுடியிற் பட்டா லிருபதினாயிர முருச்செபிக்க. சாமானியமாகப் பட்டாற் பதினாயிரமுருச் செபிக்க. அருக்கிய சலந் தாபித்திருக்கை லதுவிழுந்தால் இருநூறுருச்செபிக்க. அது உடைந்தா லாயிரமுரு செபிக்க. அப்பாத்திர முருண்டதானு லைஞ்ஞூறுருச் செபிக்க. நாய்க்கடுவான் இலிங்கத்தைத் தெரிசித்தால் ஐம்பதினாயிர முருச்செபிக்க. ஆகமத்திற் சொன்னபடி சிவலிங்கத்துக்குப் பூசைசெய்து. எ-று.

எழுவாயென்றது நூல் வேதமிருதி புராணமுதலியவைக யென்றறிக.

சிவலிங்கமுதலிய விற்பார்க்குப் பரிகாரமில்லையென
இரண்டு செய்யுளாலுணர்த்துகிறார்.

சிவலிங்கம் விற்பார்கள் சிவஞானந் தனையுந்
திருவுருவ மதுதனையுந் தீரப்பா தகமு
யவர்தமக்குப் பரிகார மறையாதா கமமு
மாரணத்தி னுட்பொருளை யாருயிர்க்குத் துணையைச்
சிவனையுணற் பொருட்டாலே செய்வாரோற் பூசை
சிறப்புடைய வைதிகரோ சைவரோ தெளிந்த
வெவரேனும் பதிதாவ ரெனவெண்ணி யின்னவ
விற்புகுந்தாற் றீண்டியபாண் டத்தைதவிட வினிதே.

எ-து. சிவலிங்கம், வேதாகமங்கள், சந்திரசேகரர் முதலான விக்கிரகங்களை விலைகுறித்து விற்றவர்கள், எப்போது மொழியாத பாதசதலை கடையவர்கள். அவர்களுக்குப் பரிகாரமாகமத்திற் கூறவில்லை. வேதாந்தத் தெளிவாய் நிறைந்த உயிர்க்குத் துணையாகிய பரமசிவனைப் பத்தியினாற் பூசிப்பதல்லாமல் விலைபொருந்திப் பூசிக்குமவர்கள் சிறப்புடைய வைதிகராலுஞ் சைவராலுமற்றைத் தெளிந்த எவரேயாயினும் அவர்களைப் பதிதரென விசாரித்து அவர்களுடனிருக்காலுங் கூடாமல் தாழ்க. அவர்கள் பிறரொருவர் வீட்டில் வந்து பாண்டத்தைத் தீண்டினு லதனைக் கழித்துப் போடுக. எ-று.

ஆதிசைவராகிய சிவப்பிராமணர் முதலானவர்கள் திரவிய முதலான கூலிவாங்கிப் பூசித்தா லவர்களு மப்படியோவெனில். அவர்களுக் கதுவேவிதித்தகன்மமாதலாற் குற்றமில்லையென்று சிவாகமமோதுமென்க. (௬௫)

பொருணசையாற் பூசையினைப் புரிவார்கண் மாலைப்
  புரந்தரனைத் திசைமுகனைப் புரந்தரன்றன் சேனைப்
பெருமானை விநாயகனைப் பேரறங்காப் பானைப்
  பேருலகத் தாயமினைப் பேசுமெழு வரையும்
இருமையினும் பயனிழந்தா ரவர்தம்மை யிணங்கே
  விகலாதே சாக்கியரோ டேனையர்தம் மோடும்
விரவிடினுந் திருநீறு மெய்ப்பூசி யிடுக
  வியம்பிடுக சிவநாமம் வெறுப்பொழிக வெவர்க்கும்.

எ-து. இவ்வாறு கூறப்பட்ட தேவதைக ளெல்லாரையுங் கூலிவாங்கிப் பூசிப்பவர்கள் இம்மை மறுமை யிரண்டையு மிழந்தவர்க ளென்று விசாரித்து அவர்களுட னொருகாலுங் கூடாதொழிக. சாக்கியர் புத்தர்களிவர்களுடன் வாதஞ் செய்யாதவர்களைத்தீண்டினுலுமாகா. தீர்த்தசலத்தினுல் தானத்தைப்பண்ணி விபூதிதானஞ் செய்து இருபதினுயிரமுரு அகோரத்தைச் செபிக்க. மற்றைய ரிடத்தும் வெறுப்பில்லாமல் ஒழுகுக. எ-று.

ஏனையவொன்றதனுற் சாருவாகன்முதலியவரையுங் கொள்க. இருபதினுயிர மென்றது சொல்லெச்சம். (௬௬)

சிவத்திரவிய முதலியவை அபகரித்தாற் பரிகார
முணர்த்துகின்றூர்.

பரமசிவ னுலயத்திற் பகர்திரண மற்றும்
  பற்றுதே பற்றியிடி னழுங்கியுளம் பதைத்து
வெருவியப ராதத்தைப் பொறுத்தருளென் றிறைஞ்சி
  விண்ணப்பஞ் செய்தறியா தெடுத்தவனுற் குணிதங்
கருதியெடுத் தவனைந்து குணிதமுறக் கொடுத்தாக்
  கடிதினியற் றிடுகசாந் திராயணத்தைக் கசிந்தே
யருமறையோர் பொருள்குரவ னரும்பொருள்கொண் டானு
  மம்முறையிற் கொடுத்திடுக வவல்வினை யறுமே.

எ-து. திருக்கோயிலுக்குஞ் சிவனுக்கு முபயோக மல்லாத பதார்திரண முதலாயின ஆனலு மவைகளைத் தீண்டாதொழிக. அத்திரண முதலியவைகளை அபுத்திபூருவமாக வெடுத்தானுனு லிப்படி வந்ததேயென்று மனத்திலே துக்கித்துச் சுவாமியை யிக்குற்றம் பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு எடுத்ததற்கு நான்மடங்கு கூட்டிக் கொடுத்தால் அக்குற்றம் போம். புத்திபூருவமாக வெடுத்தானுனல் ஐம்மடங்கு கூட்டிக் கொடுத்துச்

செபத்திற்கும் பொதுவிதியென் றறிந்துசெய்தா லிவன்செபித்த செபபலத்தைக் கொடுக்கும். ஓமஞ்செய்தற் கதிகாரியல்லாவிடத்து ஆசிரியரால் ஓமம்பண்ணுவித்தா லிவனுடைய பாவங்கள்போம். எ-று.

அப்பாலுமென்ற உம்மையெதிரது தழீஇயது. ஒப்பின் முடித்தலென்னும் தந்திரவுத்தியால் இருபதருச் செபத்துக்கு ஒருகலசந்தாபித்தபிடே செய்க. (௫௨)

பரிகாரஞ் செய்தற்கு நியமவிதி யுணர்த்துகின்றார்.

உண்மைமொழி யுரைத்திடுகை யொண்டொடியார் கலவி
யொழித்திடுகை நிசிதனிலூண் பூதலத்தி லுறங்கல்
எண்ணையினைத் தீண் டாமை கௌவியத்தைத் தினமு
மிறைவனணி முடி யாடி யருந்தலிவை யெல்லாம்
பண்ணுதலே பஞ்சவருடத்தளவும் விரதம்
பரிகாரந் தேசிகனைப் பழித்தவினைப் பகைக்கும்
புண்ணியர்த மடியிணையும் புரிந்துபணிந் தவர்தம்
பொருவரிய வருள்பெறலும் புன்மைவினை போமே.

எ-து. வெளி. கௌவியத்தை யருந்தும்போது இடையிடையே கையைக் கழுவித் தத்துவத்திரயத்தினு லதைக் கொள்க. (௫௩)

பிரமகத்திக்குப் பரிகாரமில்லையாயினு மொருவாற்றாற் பரிகார முணர்த்துகின்றார்.

அறிவின்று யந்தணனை யதஞ்செய்தா னவல
னாயிரமா னிரைநடுவே மண்டலத்தை யாக்கி
யறைகவத னடுவிருந்தே யீசானத்தியுத
மாக்கிடுக நிதியாளன் மகவினையை யாங்கே
பொறையுறவே சாந்திரா யணம்பின்பு புரிகை
பொதுவலது புலனைத்தும் வென்று திருநீற்றின்
அறையின்மக வுருத்திரத்தை யறைந்துநினைந் தரனை
யையறுநாண் மாணமுடி வறிந்தகொலை யறுமே.

எ-து. அபுத்தி பூருவமாய்ப் பிராமணனைக் கொன்ற குற்றம் போம்படி ஆயிரம் பசுவிற்குங் கோட்டத்தி னடுவே தேனுமண்டலத்தை யெட்டுமுழத்தில் நாற்கோணமாகவிட்டு அதனையொன்பது கோட்டமாகப் பிரித்து ஒவ்வொரு கோட்டத்தை யொவ்வொரு தளமாகவு நடுக்கர்ணிகையாகவுமிட்டு அவைகளிற் சுரபி முதலானவைகளை ஞானரத்னாவலியிற் சொன்னவாறு பூசித்து அம்மண்டலத்தின் முன்னிருந்து ஈசான மந்திரத்தை நூறாயிரமுருச் செபித்து நிதியுடையவனுறை லவ்விடத்திற்றானே யாகத்தைச் செய்து சாந்திராயண விரதத்தை யனுட்டிக்க. இவ்வாறு கூறியன பொதுவிதி. அல்லாதபோது இந்தியங்களைந்தையு மடக்கித் திருநீற்றறையிலிரு

பஞ்சகமல மண்டலமாவது.—யாகசாலை மண்டபத்துக்கு நடுவே திகையைப் பதினாலுக்குப் பதினாலு பதம்பண்ணி நடுநாலுபதத்தில் வெண்டாமரையையிட்டு நடுவே காணிக்கையைச்சூழக் கேசரம், பீதவர்ணமாகவிட்டு அதைச்சூழ ஒருபதஞ் சிவப்பினாலே வீதியாகவிட்டுப் பூர்வதிக்குமுதல் நான்கு திக்கினு நந்நான்கு பதத்தாலே யந்தந்தமுகத்துக்கேற்ற வன்னமாக நடுப்பதுமம்போல நான்கு பதுமமிட்டு அதனைச்சுற்றிவர இரண்டாம் வீதியிலொருபதம் பொன்னிறமாக விட்டு ஒவ்வொரு திக்குக்கு இவ்விரண்டுபதத் துவாரம், அந்தந்தத் திக்குப்பதிகளுடைய நிறமாகவிட்டுக் கர்ந முபகர்ணபத மிரண்டு சோபத்தாலுங் கோணங்களில் வச்சிரம்போலக் கொண்டு பதமிட்டு அதிற் சிவனைப் பூசித்தாற் பஞ்சகமல மண்டலமெனப்பெறும்.

ஆசிரியர்க் கியற்றிய குற்றத்திற்குப் பரிகாரபூசையினை
வகுத்துணர்த்துகின்றார்.

பலமிரண்டா யிரமுறவே பாரதிநெய் பழமும்
பண்ணிடுக திருமுடியி னபிடேகம் பரிவாற்
பலமிரண்டா யிரமுறவே யேலமுதற் பண்டம்
பயிற்றியநீ ரபிடேகம் பண்ணிடுக பதுமம்
பலமிரண்டா யிரமுறவே குறியமுதாயி [illegible]
பாயுணக்கு கிவே [illegible] பண்ணிடுக பாகிதாற்
பலகுலனே [illegible]
[illegible] தேசிகனுக் கபாரதட பணிஞா.

எ-து. வெளி. தேசிகனுக்கபாரதம் பணிஞர் பண்ணிடுகவென வினைமுடிக்க. (௫௧)

முற்கூறிய முறைமைக்குப் பொதுவிதி நியமமுணர்த்துகின்றார்.

அங்கியினா குதியுமிரண் டாயிரமே யாக்க
யானெய்பா னயுதத்துச் செபமறையும் போது
மங்கியினா யிரமுறவே வாக்குகவா னெய்யா
னயுதத்துக் கப்பாலுந் தசத்தொன்றே யாக்க
வெங்குமிது பொதுவெனவே யெண்ணியியற் றிடினே
யியம்பியமந் திரபலன்று னெய்தியிடு மென்று
மங்கியினுக் கருகாலா ரரியனா லங்கிக்
காகுதியைக் கொடுப்பிக்கி லவலவினை யறுமே.

எ-து. ஒருவர் நூறாயிர முருச்செபிக்கும்போது பசுவினெய்யினாலிரண்டாயிரமுரு ஓமஞ்செய்க. பதினாயிர முருச் செபஞ்செய்யுமிடத் தாயிரமுரு ஓமஞ்செய்க. பதினாயிரத்துக்குமேல் அதிகசெபஞ் செய்தாலதற்குப் பத்துக்கொன்று அதிகமாயேற்றி யோமஞ்செய்க. முற்கூறிய வெல்லாச்

வார்த்தையினைக் கடினமுற வசனித்தா ஞகின்
மந்திரிக்க வோரிலக்கம் பாதியதன் பாதங்
கூர்ந்தவருட் சோதகனைப் போதகனை முத்தி
கொடுப்பானைப் பதம்பணிந்து குறைபொறுத்தா னென்றே.

எ-து. அரசன் முதலானோர் நரகதியடையு நிமித்தம் ஆசிரியன் சிவலிங்கப் பிரதிட்டை பண்ணினல் அக்குற்றம் போம்படி உபவசியா யிரண்டு நூறுயிரமுருச் செபிக்க. சிவாகமத்திற் கூறிய முறைமையை யறியாமற் றீக்கைசெய்யு மாசிரியனு முபவசியாய் ஐந்துநூறுயிர முருச்செபிக்க. சாதகர், போதகர், முத்திகொடுப்போர் என்னு மூவகை யாசிரியனைப் பார்த்துக் கொடிய வார்த்தையைச் சொன்னனல் அக்குற்றம் போம்படி அவர்களை வணங்கி நூறுயிரம் ஐம்பதினுயிரம் இருபத்தையாயிர மடைவே செபித்தா லக்குற்றம்போம். எ-று.

தீர்த்துணலு மென்பதனை யீரிடத்துங் கூட்டுக. மூவகை யாசிரியருக்குக் கூறியதொகை. எதிர் நிரனிறை. சைவாகமத்தை இதுவென்று தரிசிப்பிக்கையாற் சோதகனெனப் பெயராயிற்று. மாணுக்கர்க் காமமாதிகளைப் போதிக்கையாற் போதகனெனப் பெயராயிற்று. நிருவாண தீக்கையைமாணுக்கர்க்குச்செய்து மோக்ஷத்தை யடைவிப்பிக்கையான் முத்திகொடுப்போனெனப் பெயராயிற்று. (சக)

இதுவுமது.

தாக்கிடினே தன்னதுகை பவனுடலந் தன்னிற்
சாற்றிடுக வாறிலக்க மாயுதத்தாற் றடியி
னேற்றியிரு குணிதமுற வியம்பிடுக பூசை
யியற்றிடுக சிறப்புறவே யீசனுக்கஞ் சென்னுங்
கூற்றுடைய சாந்திரா யணவிரத முதலுங்
கொள்கவிர தத்தினையு முடிவினடி குறுகிப்
போற்றியுள பொருளெல்லாங் கொடுத்தவன்செய் தீக்கை
பொருந்திடுக வருந்தவனைப் பிழைப்பினும்பிப் புரிவே.

எ-து. மூவகையாசிரியரில் ஒருவனை யொருவர் தம்கையா லடித்தா லறுநூறுயிரமுரு அகோரத்தைச் செபிக்க. ஆயுதத்தா லிரத்தம் புறப்பட வெட்டினற் பன்னிரு நூறுயிரமுருச் செபித்துச் சிவனுக்கு மகாபிடேகமு நிவேதனமுஞ்செய்து சலசாந்திராயண முதல் ஐவகைச் சாந்திராயணத்தையு மனுட்டித்து முடிந்தவாறே ஆசிரியனைப் பாதத்திற்பணிந்து தமக்குள்ள பொருளெல்லா மவருக்குக் கொடுத்துப் பஞ்சகமலமென்னு மண்டத்தை வேதிகையிட்டு அது முன்னகத் தீக்கையையும் பெறுக. அரியதவமுடைய சாதகர் முதலாயினரை அடித்தாலும் வெட்டினலும் இம்முறை செய்தாலக் குற்றம்போம். எ-று.

176



சாந்திராயண விரதத்தை யந்நேரமே யனுட்டித்தா லக்குற்றம்போம். பிராமணர், ஆசிரியர் திரவியத்தை யபகரித்தவனும், அம்முறையே செய்தா லக்குற்றம்போம். எ-று. (சஎ)

இதுவுமது.

கூடியெடுத் தனுபவித்தான் பாதமுறக் கொடுக்க
 கூடினனைக் கூடினனும் பாதத்திற் பாதி
யோடியிட னினைவினை வுரைத்திடுக நியுத
 முருபிதனை யடுத்தவனு முரைக்கவதன் பாதங்
கூடினனைக் கூடினனும் பாதத்திற் பாதி
 கூறிடுக வந்தணர்தம் பொருளினைக்கொண் டானும்
பாடியவிம் முறைசெபம்பண் ணிற்றீரு மந்தப்
 பாவவினை யல்லதமற் குழிதன்னிற் படுத்தும்.

எ-து சிவத்திரவிய மொருவனுடன் கூடி யெடுத் தனுபவித்தவன் அதில் காலிலொன்று கூட்டிக் கொடுக்க. அதனைக் கூடி யெடுத்தவனுடனே கூடினவனு மெட்டிலொன்று கூட்டிக்கொடுக்க. அதனைப் புத்திபூருவமா யெடுத்தவன் அதற்கஞ்சுருவிதங் கொடுத்து விரதமனுட்டித்து அக்குற்றம் போம்படி அகோரமந்திரத்தை நூறுயிரமுருச் செபிக்க. எடுத்தவனுடனே சேர்ந்தவனு மதி னலிலொன்று செபஞ்செய்க. அதனை யெடுத்தவனுட னடுத்தவனுடன் கூடினவனு மதிற்பாதி செபஞ்செய்க. பிராமணர் திரவியத்தை யெடுத்தவனும் எடுத்தவனுடன் கூடினவனுங் கூடினவனுடன் கூடினவனு முற்கூறிய செபஞ் செய்க. இவ்வாறு பரிகாரஞ் செய்யாதொழிந்தால் அது ரௌரவ முதலிய நரகங்களில் வீழ்த்தும். எ-று.

உருபியெனினு மகோரமெனினு மிழுக்கா. அந்தணர் தம்பொருள் கொண்டானுமென்ற வும்மையால் அரசர் முதலானோர் திரவியத்தை யெடுத்தவனு மெடுத்தவனுடன் கூடினவனுங் கூடினவனுடன் கூடினவனு மம்முறையே யென்க. (சஅ)

ஆசிரியர் நைமித்தியமாகிய சிவலிங்கப்பிரதிட்டையுந் தீக்கையும்
பண்ணினு லதில்வருங் குற்றமும், மூவகை யாசிரிய
ராக் கொடிய வார்த்தை சொல்லல் முதலிய
குற்றமும் போம்படி பரிகார
முணர்த்துகின்றார்.

பார்த்திவரு மற்றையரு முயந்தேவ பதிட்டை
 பண்ணினமே லாசானு மிருநியுதம் பகர்க
தீர்த்தனுஞ் சிவாகமத்தி னுண்மைதெளி யாதே
 தீக்கைபுரி தேசிகனு மஞ்சிலக்கஞ் செபிக்க

ந்து சிவபெருமானைத் தியானித்து வேதத்திற் சொல்லிய சதருத்திரமென்னு மந்திரத்தைச் செபித்து முப்பதுநாளிருந்தா லக்குற்றம்போம். இப்படி மரணமளவும் இருப்பானாகில் புத்திபூருவமாய்ச் செய்த குற்றம்போம்.

தேனுமண்டல மென்பதனை மண்டலமென்றது தலைக்குறை.

மதுபானிக்குப் பரிகார முணர்த்துகின்றார்.

பண்ணினனே லறிவிலனாய் மதுபானம் பார்ப்பான்
பரமேச னாலயத்திற் றற்புருடம் பகர்க
வெண்ணியுற விலக்கமக மியற்றிடுக நிதியன்
பராகமெனுங் கிருச்சாத்தை யியற்றியிடல் பொதுவே
வெண்ணெ யழல் வெதுப்பிவாய் வாக்கலுமா மன்றி
வெதுப்பியகோ சலம்வெந்த வெண்கலமு மாகும்
புண்ணியவெண் ணீற்றறையி னுருத்திரத்தைப் புகன்று
பொருந்தலுமா முன்புகன்ற படியிரண்டும் போமே.

எ-து. பிராமணன் அறியாமல் மதுபானம் பண்ணினானாற் சிவாலயத்தில் மண்டல முன்புபோலிட்டு அதில் வியோமவியாபி மகாசிவர் முதலானோரைப் பூசித்து அம்மண்டல மருகி லிருந்து தற்புருட மந்திரத்தை நூறுயிரமுருச் செபிக்க. திரவியவானானால் யாகத்தைச் செய்து முற்கூறிய பராகமென்னுங் கிருச்சரத்தைச் செய்க, இது பொதுவிதி. அல்லது பசுவின் வெண்ணெயை நன்று யுருக்கிக் கொதிக்கக் கொதிக்க வாயில் வாக்குக. அல்லது கோசலத்தை நன்றாய்க் காய்ச்சி வாயில் வாக்குக, அல்லது பஞ்சலோகங்களை யொழுக வுருக்கி வாயில் வாக்குக, அல்லது முன்புபோலத் திருநீற்றறையி லிருந்து மகாருத்திரத்தைச் செபித்தால் அபுத்திபூருவமும் புத்திபூருவமு மடைவேபோம். எ-று. (௫௩)

பொன் திருடினவர்க்குப் பரிகார முணர்த்துகின்றார்.

கனகமொரு கழஞ்சளவு கருத்தழிந்து கொண்ட
கள்வனுடல் சுடுகனரி யெல்லையினைக் கலந்தே
யனுகவகோ ரத்தைநியு தத்தைநிதி யாளன்
பணுகமகம் பொதுப்பிரமா பத்தியமே யல்லா
லெனைமுசலத் திரும்பாலே யெற்றுகமன் னவனே
யென்றழிக வல்லதுவெண் ணீற்றறையை யெய்தி
முன்முனைத்த முறைமுயலின் மோசனமே யாகு
மோகவினை முன்னுணர்வின் முற்றியதி வினையும்.

எ-து. அறியாம லொருகழஞ்சு பொன் திருடிய கள்ளன், ஆயிரம் பேருக்குக் குறையாமற் சுட்ட சுடுகாட்டிற் சுடுகாடென்னு மண்டலத்தை முன்புபோ லெட்டிதழ் நடுக்கர்ணிகையுமாக விட்டு, அதில்

அகோரப்பிரயோகமவென்று அகோரகலை மந்திரத்தாற் பூசித்து அம்மண்டல சமீபத்தி லிருந்து அகோர மந்திரத்தை நூறுயிர முருச் செபிக்க. திரவியவானுனல் யாகத்தைத் யாண்டுச் செய்க. இவை இரண்டும் பொதுவிதி. அல்லது, பிரசாபத்திய விரதமனுட்டிக்க. அதுவல்லாமல் அவன் அரசனிடத்திற்போய் அரசனே நான் பொன்திருடிய கள்ளன் அக்குற்றம் போம்படி இருப்புலக்கையா லடியுமென்றுசொல்லி யவனாலடிக்கப்பட்டு மரிக்க. அல்லது முன்புபோல நீற்றறையை அடைந்து முன்சொன்ன முறைசெய்தாற் புத்திபூருவம் அபுத்திபூருவமென்னு மிரண்டினால்வருங் குற்றமும் போம் ஏகாரம் தேற்றம்.

(௯௬)

குருமனைவியைப் புணர்ந்தவனுக்குப் பரிகார முணர்த்துகின்றார்.

அற்றறிவு குருமனையை யொருநாளுற் றணைந்தா
னழலோம்புஞ் சாலைதனில் வாமத்தை யறைக
வுற்றிடவே யோரிலக்க மகமியற்றி நிதியன்
றத்தகிருச் சரமியற்ற வொக்குமிரு வருக்கு
மற்றலது குய்யத்தைப் பீசத்தைக் கருக்கான்
மாற்றியுணன் மறந்துதிசை தெற்கியங்கி மரிக்க
முற்பகர்ந்த முறையுறவே நீற்றறையின் முயல்க
முயங்கிறின் திரண்டாநா ளரகனைத்து மூழ்கும்.

எ-து. மோகவயத்தா லறிவிழந்து குருமனைவியை ஒருநாட் கூடினானால் அக்கினிகோத்திரஞ் செய்கிற யாகசாலையின் கிழக்கே காருகபத்தியம் நாற்கோணமாகவு மேற்கே யாகவனீயம் வட்டமாகவும், தெற்கே தெக்கணக்கினி யர்த்தசந்திரனைப்போலவு மிட்டு, அதில் அக்கினியை யுண்டாக்கியதிற் றற்புருடாய விர்மகேயென்னு மந்திரமுதலாக வடைவே பூசித்து அம்மண்டல மருகிலிருந்து வாமதேவ மந்திரத்தை நூறுயிரமுருச் செபிக்க. திரவியவானானல் யாகத்தை யாண்டுச்செய்க. புத்திபூருவ மபுத்திபூருவமாய்ச் செய்தவர்கள் தத்தகிருச்சர மனுட்டிக்க. இது பொதுவிதி; அல்லாதபோது குய்யத்தையும் பீசத்தையுங் கருக்காலரிந்து விட்டுத் தென்றிசையை நோக்கி யுபவசியாய்ப்போய் மரித்தாலக் குற்றம்போம். புத்திபூருவமாகவிரண்டாநாளும் அவளைக் கூடினானானால் விருபத்தெட்டுக்கோடி நரகத்திலும் அழுந்துவான். எ-று.

(௯௭)

கொலை களவு கட் காமஞ் செய்த நால்வரோடு கூடின வஞ்சாம் பாவிக்குங் கோகத்திக்கும் பரிகார முணர்த்துகின்றார்.

கூடியவ ளிவர் தம்மு ளொருவனுடன் சாதங்
கூறிடுக நியுதமுறக் குலவனாயி னுச்சி
மாடுடையன் புரிந்திடுக மகவினையை யாங்கே
வருந்திடுக மற்றையதி தபனத்தை மதித்துத்

தேடரிய தேனுவினைத் தெளியாது செகுத்தான்
செப்புகவோ ரிலக்கமுற வகோரத்தைத் தெளிந்தா
னுடியிரு குணிதமுற நவின்றிடுக வந்த
நாயகனை மனத்திருத்திப் பூசனைழிந்து நைந்தே.

எ-து பிரமகத்தி முதலான பாதகங்கள் செய்த நால்வருள் ஒருவனுட னொருவன் கூடினு லவனஞ்சாம்பாதகத்தை யுடையவன், அக்குற்றம் போம்படி சத்தியோசாத மந்திர நூறுயிர முருச் செபித்து மலையுச்சியின் மண்டலமிட்டு அதி னடுவே மகாமேருமுதற் பாரிசப்பருவத மீருகவைந்தினுஞ் சதாசிவ முதலிய கலா மந்திரங்களை யடைவே பூசித்து அப்பருவதத்தி னுச்சியிற் றனலானுனல் யாகத்தைச் செய்து அதிதபன் னெனனும் கிருச்சரத்தின் முறைமையை விசாரித்து வருத்தமுற வனுட்டித்தால் அக்குற்றம் போம். தேடுதற்கரிய பசுவை யபுத்தி பூருவமாய் வதைத்தானானல் அகோரத்தை நூறுயிர முருச்செபிக்க, புத்தி பூருவமாய்ச் செய்தவன் இப்படி வந்து விட்டதே யென்று உபவசியா யகோர மூர்த்தியை மனத்திற் றியானித்து அம்மந்திரத்தை இருநூறுயிர முருச் செபித்தா லக்குற்றம்போம். எ-று. (௩௮)

மகா பாதகத்துக்குப் பரிகார முணர்த்துகின்றார்.

கங்கைநதிப் புனலாடிக் கடப்பாடு மீண்டு
காசிவிசு வேசனடிக் கமலவிணை பணிந்து
தங்கியொரு நாளுணல்கா மாதிகளுந் தவிர்ந்து
தாமறந்து புரிந்தமகா பாவமொன்று தவிருந்
திங்களுநறி னறிந்துபுரி மாபாவ மொன்று
திருங்கே தாரஞ்சீ சயிலங்கா ளத்தி
சங்கைதச சதன்மகனைத் தணந்ததல மாரூர்
சடைமருது குடமூக்கை யாறெழுவாய்த் தலத்தும்.

எ-து. கங்கையில் முழுகித் தம்மாற் கூடியவளவு தானங்கொடுத்துக் காசி யென்னுந் திருத்தலத்தி லெழுந்தருளி யிருக்கின்ற விசுவநாதனுடைய தாமரை மலர்போன்ற சீபாதங்களை வணங்கித் தான் காமக்குரோத லோப மோக மத மாச்சரிய முதலான குற்றங்களை யொழிந் தொருநா ளுபவசியா யிருந்தால் அபுத்தி பூருவமாய்ச் செய்த மகா பாதகங்களி லொன்று போம். இவ்வா றொருமா தமளவு செய்தாற் புத்திபூருவமாய்ச் செய்த மகா பாதகங்களி லொன்றுபோம், அக்காசி யல்லாமற் கேதார முதற்றிருவையாறிறுதியாகச் சொன்ன புண்ணிய தலங்களினு மிவ்வாறு செய்தா லக்குற்றம் போம். எ-று.

எழுவா யென்றதனல் மதுரைத் திருவாலவாய் திருவெங் காடு திருநெல்வேலி முதலான மற்றைப்புண்ணிய தலங்களினு மெனக்கொள்க.

சங்கை தசரதன் மகனைத் தணந்ததென்றது, தசரதனை யிந்திரன் புத்திரனில்லாத குற்றத்திறைற் சங்கிக்கச் சங்கோத்திரம் பண்ணித் திருவாரூரில் வந்து தியாகராயனைப் பூசித்துப் புத்திரனுண்டாகைற் சங்கை தசரதன்மகனைத் தணந்ததல மாரூரெனச் சிறப்பித்தார். இவ்வாறு கொள்ளாது திருவிராமேச மெனக் கொள்ளினு மிழுக்காது. திருவையாற்றைப் பஞ்சநதமென்றுங் கூறுவர். (௫௯)

சிவஞானிகளைப் பூசித்தாலு மக்குற்றம் போமென்
றுணர்த்துகின்றார்.

அநாதிமல முத்தனவன் சிவனுயிர்கட் குயிரா
யகலாதே வினைப்பலன்க ளருத்திமல மறுப்பான்
மனுதியினுக் கெட்டாதா னெனமதித்துத் தம்முண்
மனோலயவாழ் வுறவவன்றாள் கண்டவர்தாள் வணங்கி
யெனுதியிவ ரெனவெண்ணி யொருபகற்பூ சனையை
யியற்றினர்க ளொருதிங்க ளுறவியற்றி னோர்கள்
முனோதியவா றொழிந்தார்தா முற்றியமா பாவ
முட்டாம லியற்றினர்கள் விட்டார்தீ முழுதும்.

எ-து. வெளி. மனுதியினுக் கெட்டாதானென்பது சாத்துவிதமுதலானமனத்திறைலறியப்பட்டாதவ னென்றகு மனோலயவாழ்வு என்றது, சுவலீனமானமனத்தை யதீதத்தி லயிப்பித்து ஆண்டுள்ள வின்பந் துய்த்தலை. (௬௰)

உருத்திராக்கந் தரித்தாலும் பாவம்போமென் றுணர்த்துகின்றார்.

அரித்திடவே யவலவினை யனுமதித்தார் கண்டி
யாமலக பலத்தினள வாகவுமே யன்பாற்
றரித்திடுக சிகைதன்னிற் கன்னத்திற் களத்திற்
றடவரைமார் பிடைப்புயத்துத் தாங்குகபூ ணூலி
னுருத்திரசா தனநாயின் கண்டத்தி னுறினு
மொன்றியிடுஞ் சிவபுரியை யதுதானு மென்றே
விரித்தவுரை மெய்யெனவே யுணர்ந்தரொல் லாரும்
விருப்புறவே தரித்திடுக கண்டியினை விரைந்தே.

எ-து. வெளி. அரித்தல், போக்குதல். கண்டி உருத்திராக்கம். * "கண்டியிற்பட்ட கழுத்துடை யீர்கரி காட்டிலிட்ட, பண்டியிற்பட்ட பரிகலத்தீர்" என்ற திருவாக்கானு மறிக. ஆமலகம் நெல்லி. (௬௧)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருவீழிமிழலை
திருவிருத்தம்.

* கண்டியிற்பட்ட கழுத்துடை யீர்கரி காட்டிலிட்ட
பண்டியிற்பட்ட பரிகலத்தீர் பதி வீழிகொண்டீ
ருண்டியிற்பட் டினிநோயி லுறக்கத்தி லும்மையைவர்
கொண்டியிற்பட்டு மறக்கினு மென்னைக் குறிக்கொண்மினே. (௬)

அண்டச முதலியவற்றுற் பரிகார முணர்த்துகின்றார்.

வதைத்தவனே மயிலன்னங் குக்குடமும் பாம்பு
　மற்றுமுள வண்டசமு மர்க்கடமு மறப்பான்
மதித்ததைக வகோரமிரண் டாயிரமாற் சால
　மறப்பாலே வதைத்தானே யாயிரமாஞ் சாதம்
வதைத்தவனே யசமேதி மற்றையமான் மரையு
　மந்திரிக்க வகோரமொரு நூறுநா னூறு
வதைத்தவனே வராகத்தை வன்மிருக மற்று
　மதித்தறைக வொருநூறு மறந்தவினை மாயும்.

எ-து. மயில் முதலான பறவைகளை யபுத்தி பூருவமாய்க் கொன்றானால் அகோர மிரண்டாயிரமுருச் செபிக்க. பூனையை யபுத்திபூருவமாய் வதைத்தால் ஆயிரமுருவும், புத்திபூருவமானால் இரண்டாயிர முருவுஞ் சத்தியோசாதத்தைச் செபிக்க, ஆடு, மான், மரை, எருமை, முதலானவற்றை அபுத்திபூருவமாய் வதைத்தால் நூறுருவம் புத்திபூருவமாய் வதைத்தால் நானூறுருவு மகோரத்தை செபிக்க. வனத்திலே சஞ்சரிக்கின்ற துட்டமிருகமான பன்றி, சிங்கம், காடி முதலானவைகளை யபுத்திபூருவமாய்க் கொன்றானால் நூறுருவும், புத்திபூருவமானால் இருநூறுருவு மகோரத்தைச் செபித்தா லக்குற்றம் நீங்கும். எ-று.

மற்றைய வென்பதனால் அதற்கினமானவைகளும் கொள்க. (௬௬)

இதுவமது.

வதைத்தவனே நாய்நரியுஞ் சாதத்தை மறப்பின்
　மந்திரிக்க வாயிரமீ ராயிரமே மதித்தான்
வதைத்தவனே மூடிகத்தை வாவுமு டிகமு
　மந்திரிக்க சாதத்தை யொருநூறு மறந்தான்
வதைத்தவனே யென்பில்லா வடிவையறி வின்றி
　மந்திரிக்க வைம்பஃது மற்றையவ னூறும்
வதைத்தனனேற் பலகிருமி யொருநாளின் மறப்பான்
　மந்திரிக்க மூன்றயுத மதிக்கிவிரு குணிதம்.

எ-து. அபுத்தி பூருவத்தினால் நாய்-நரி யிவைகளை வதைத்தா லாயிரமுருவும், புத்திபூருவமாகி லிரண்டாயிர முருவுஞ் சத்தியோசாதத்தைச செபிக்க. பெருச்சாளி-எலி இவைகளை யபுத்தி பூருவமாகக் கொன்றவனூறுருவும், புத்திபூருவமாகி லிருநூறுருவுஞ் சத்தியோசாதத்தைச் செபிக்க. வெதுப்பிற் றோன்றிய வென்பில்லாத கிருமி முதலியவற்றைவதைத்தால் அபுத்திபூருவத்துக் கைம்பதுருவும், புத்திபூருவத்துக்கு நூறுருவுஞ் சத்தியோசாதத்தைச் செபிக்க, ஒருகாற் பல கிருமிகளைக் கொன்றால் அபுத்திபூருவத்துக்கு முப்பதினாயிரமும் புத்திபூருவத்துக்கு அறுபதினாயிரமுஞ் செபிக்க. எ-று. (௬௭)

பாகத்திற் பட்டழுங்கிச் சிக்குழிக்கும் படிவர்
பகர்வருட மறுபதினை யிரமுறவே பாங்கே
சாகத்தாந் துணிந்தழிகை சங்கானு லயத்திற்
றவறுறினே யவரமலன் புரியதனைச் சார்வார்.

எ-து. வெளி. கொடுநோய்-மகாவியாதி. குணமோவென்னு மோகாரம் எதிர்மறை. கும்பீபாகஞ்-சிக்குழியென்பன நரகம். பாங்கு-உரிமை. ()

குற்றஞ் சாராக்கொலையிது என்று சிறப்புவிதி
யுணர்த்துகின்றார்.

படைபிடித்துத் தங்கையிற் பற்றாரைச் சமரிற்
பாழ்படுக்கப் போர்புரியும் பார்ப்பாரைப் பற்றா
ருடலிறுத்தா ரேலவர்க்குப் பிரமகத்திப் பாவ
மொன்றுவதன் றெனவுணர்க வுள்ளத்தே கள்ள
மிடனுறவே நள்ளிருளின் வேற்றயலார் மனையின்
வேண்டியது கொண்டியங்கும் வேலைதனில் வேந்தன்
படையவரைப் பந்தித்தே யப்பொழுது நாசம்
பண்ணிடினும் பிரமவதை பற்றுபார்த் திவர்பால்.

எ-து. வெளி. படை-ஆயுதம்; பற்றார்-சத்துருக்கள்; இறுத்தல்-துணித்தல்; படையெடுத்துப் போர்செய்த பார்ப்பாரைப் பிடித்து வதைத்தாலுங் குற்றமில்லை யென்க. (கூஎ)

சூத்திரர் முதலிய மூவரையும் வதைத்தாற் பரிகார
முணர்த்துகின்றார்.

ஓரயுதஞ் சூத்திரனை யொடுக்கினனுஞ் சரிக்க
வுருபிதனை யொண்டொடிக்குங் குழவிக்கு மொக்கு
மீரயுதம் வசியனைக்கொன் றிறுத்தவனுஞ் சரிக்க
வேந்திழைக்குங் குழவிக்கு மிக்கணக்கே யியம்ப
வோரயுத மீரயுதம் பார்த்திவனை யொடுக்கி
லுச்சரிக்க வொண்டொடிக்குங் குழவிக்கு மொக்கு
மீரயுதஞ் சூத்திரனை யெணியிறுத்தா னியம்ப
வேனையர்க்கு மிசைக்கவிரு குணிதமெணி யிறுத்தான்.

எ-து. சூத்திரனையு மக்குலத்து மாதரையும் அவர்கள் பிள்ளைகளையுங் கொன்றவன் அகோர மந்திரத்தைப் பதினாயிரமுருச் செபிக்க மேல் எனைய விரு குலத்தவர்க்கும் இம்மந்திரத்தாற் பதினாயிரம் பதினாயிரமுரு வேற்றி யேற்றிச் செபிக்க, சூத்திரர் முதலான மூவரையும் புத்திபூருவமாகக் கொன்றவன் இருபதினாயிர நாற்பதினாயிர மறுபதினாயிர மம்மந்திரத்தாற் செபிக்க. எ-று. (கூஅ)

181

முற்கூறிய பார்ப்பாருட் பதிதனையும் அக்குலத் தழிந்து திரியு
மாதனையும் பூதிசாதன மணிந்து ஒழுக்கந்தவறிய தவசிகளை
யும் வதைத்தல் கூடாதென்பதும்; இவர்கள் ஏற்றக்
குறைவு செய்தால் விசாரித்து நிறுத்துமது
ஆசிரியர்க்குக் கடனென்பது
மூணர்த்துகின்றார்.

அந்தணர்தங் குலத்துமுதித் தழிவுபுரி வானை
யதஞ்செய்யேற் பரிகார மவன்வதைக்கு மறியேம்
வெந்தவெண்ணீ றணிந்தமலன் வேடமணிந் தாரும்
விப்பிரரும் வேண்டியது செய்துவினை விடினுஞ்
சிந்தையினைப் யவனேவே தேறியவர் தம்மைத்
தெளியற்க தெளிந்துமவர் தமைச்செகுத்தா ராயி
னெந்தழிவர் நிரயத்திற் றேசிகனுக் கவரை
நோவிக்கை நிலைநிறுத்தல் கடன்விதித்த நூலான்.

எ-து. வெளி. அந்தணர் தங்குலத்துதித்துமென்ற வும்மை உயர்வு
சிறப்பு. 1அதஞ்செய்யேல் என்றது கொல்லேல் என்கை. இதுவடமொழி.
தெளியற்க என்றது சாதியிற் கூட்டாமற் றள்ளிவிடுதல். செகுத்தல் என்
றது கொறலை. நோவிக்கை எ-து. அடித்துக் கோபிக்கை. விதித்தநூல்என்
றது வேதாகமத்தி லின்னதற் கின்னபடி செய்க வென்னுதல். (கூசு)

தன்பொருட்டாகப் பிறனொருவன் பிராணவதை செய்ய
வவனைத் தடாதிருந்தாற் குற்ற மூணர்த்துகின்றார்.

என்றனைநீ புன்மைமொழி யிசைப்பரயே யென்று
மெனதுதனந் தாராதே யேகுவையே யென்று
நின்றனக்கோ வுரித்நிந்த நிலமெனக்கு மென்று
நின்முன்னே யென்னுயிரை நீக்குவனே யென்றுந்
தன்றனையே தான்வதைக்கிற் றடுத்துமுறை புரியாச்
சலத்தெதிரி யவன்றன்னைத் தன்னதுகை யாலே
கொன்றவனே யாதலினாற் றடுத்திடுக கொலையைக்
கொடுத்திடுக கணக்குளது கொளுக்கஞ்சுங் குணத்தார்.

எ-து. வெளி. புன்மொழி-பொல்லாதவார்த்தை. ஏகுதல்-போகுதல்.
நீக்குதல்-விடுதல். சலம்-கோபம். உம்மை-யெண். (கூரு)

கோபமுதலியவற்றாற் பிராணவதை செய்தார் பெறும்பல
மீதென் றுணர்த்துகின்றார்.

கோபத்தா னுக்த்திற் கொடுநோயான் மறறுங்
குற்றத்தாற் றன்றன்னைக் கொலைபுரிகை குணமோ
பாவத்தான் மிக்காரே தமைத்தாமே வதைக்கும்
பதர்மனித மந்தணர்க்கும் பாங்கல்ல தும்பீ

மேலுமோ ருபாய முணர்த்துகின்றார்.

பூசிடுக நீற்றினையுந் தீவினையைப் போக்கப்
  புரிந்தார்க டிருநீறு பூசினரைப் பணிந்து
பேசிடுக மதுரவுரை யவரோவ றன்னைப்
  பெற்றிடுக முற்றிடுக பேணியொருப் பட்டே
கூசினர்க ளவர்தம்மைக் கும்பிடவு மேவற்
  குறித்தியற்றி யிடத்தானுங் கொடுநரகக் குழியாழ்
நீசரென நினைந்திடுக நின்மலனைத் தம்மு
  ளினைப்பாரை நினைப்பார்கள் வினைப்பாவ நீங்கும்.

எ-து. வெளி. * செடிகொணோயினடை யார்திறம் பார்செறு தீவினை, கடியகூற்றமுங் கண்டக லும்புகல் தான்வரு, நெடியமாலோடய னேத்தநின்றார் திருவாஞ்சியத், தடிகள்பாத மடைந் தாரடியாரடி யார்கட்கே, என்னுந் திருவாக்கானு முணர்க. (௬௨)

சிவபத்தர்கள் பெருமை யுணர்த்துகின்றார்.

மண்ணுளு மன்னவன்றன் மகன்குணந்தங் கிரண்டும்
  வையகத்தார் பாராதே வணங்கிடுவ ரஞ்சி
யெண்ணுளு மிறையமலன் றிருவேடந் திருநீ
  றிட்டார்கள் குணங்குணக்கே டெனுமிரண்டு மெண்ணார்
விண்ணுளத் தீவினையை விட்டியிட விழைந்தார்
  விரும்பியவ ரடிபணிவர் விமலனுரை விலங்க
லொண்ணாதே யெனக்கருதி யொருப்பட்டே யமல
  னெப்பரிய புரிவாழ்வு மற்றையருக் குண்டோ.

எ-து. வெளி. † "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதே யவரவரைக் கண்டபோதே யுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி, யவர்தேவ ரிவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமேபேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என்றுந் திருவாக்கானு முணர்க. (௬௩)

* திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த
திருவாஞ்சியம்-பண்-இந்தளம் பா. (௩)

† திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த
திருக்கன்றாப்பூர்-திருத்தாண்டகம் பா. (௩)

நாய் முதலியவை கடித்தாற் பரிகார முணர்த்துகின்றார்.

உடலூறு படக்கடிக்கி னைய்நரிமர்க் கடமு
முாகமுந்தேள் விடமுறினு மொழியுமடு கீருண்
மிடறுறநின் றயுதமுற விளம்ப வகோரத்தை
விக்கிரக நினைந்துசுழல் விழிமூன்று முடையார்
சடைமுடியிற் றலைமாலை கரியவுருக் காளந்
தாடிமுகந் தடமார்பிற் சர்ப்பவிருச் சிகப்பூண்
படைசூல மழுத்தண்டு வாள்வலப்பா லிடப்பாற்
பற்றியுளர் கட்டங்கந் தலைபலகை பாசம்.

எ-து. நாய் முதலானவை சரீரத் தூறுபடக் கடித்தாலு மவ்விடம் பொருந்தினுந் தடாகங்களிற் கழுத்தளவு தண்ணீரி னின்று சுழல்கின்ற மூன்று விழியையுஞ் சடாமகுடத்திற் றலைமாலையையுங் கரியநிறத்தினையுந் தீக்குணத்தினையுந் தாடியினு முகத்தினும் பெரிய மார்பினும் பாம்புத் தோளாபரணத்தினையுஞ் சூல மழு தண்டு வாளைப்பற்றிய வலப்பாற் காத்தினையு, மாத்திரைக்கோல் தலை பலகை பாசத்தைப்பற்றிய விடப்பாற்கரத்தினையு முடைய அகோர தேவநாயகனைத் தியானஞ் செய்து அகோரம் பதினாயிரமுருச் செபித்தா லக்குற்றங்க ணீங்கும். எ-று. (௭௧)

பொன்முதலியவற்றைத் தானம்வாங்கிற் பரிகார
முணர்த்துகின்றார்,

தாங்கினனேற் றனத்தையரி தாலத்தைக் கழஞ்சு
தரத்தாதா வகோரத்தைச் சாற்றிடுக வயுதந்
தூங்கிருளி னடமாடி யாலயத்திற் பாவந்
தொலைத்தருளென் பாவமெனச் சொல்லுகமுன் னூறு
தாங்கினனேற் றயிலத்தைத் ததியானெய் தனையுந்
தரித்திடிற்காற் பாசத்தைக் கம்பளத்தை மற்றுந்
தாங்கினனேற் றத்துபரி தனையெருது தன்னைத்
தானியத்தைத் தரணியையுஞ் சாற்றுகவோ ரயுதம்.

எ-து. பொன் முதலியவற்றையு அரிதார முதலிய தாதுக்களையும் ஒரு கழஞ்சு தானம்வாங்கினால், அவர்கள் சிவாலயத்திருந்து,அகோர மந்திரத்தைப் பதினாயிரமுருச்செபிக்க. பால்,தயிர்,ஆனெய்,எண்ணெய்,பருத்தி,கம்பளம் இவைகளைத் தானம்வாங்கினவர்களுஞ் சிவசந்நிதியில் அக்குற்றத்தைப்போக்கி யருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டு அகோரத்தை முந்நூறுருச்செபிக்க, குதிரை, யானை, எருது இவைகளையும் நெல், பூமி, இவைகளையும் தானம்வாங்கிற் சிவாலயத்திருந்து அகோரத்தைப் பதினாயிர முருச்செபிக்க. எ-று.

மற்றுமென்பதனாற் பட்டுமுதலான புடைவைகளையும், இரத்தினக்கம்பளம், வெண்பட்டு, மூஞ்சிப்புல் இவைகளையும் வாங்கினு மம்முறைசெபிக்க.

பத்தர்கள் ஆசிரியர் முதலானோர்க்கு மடங்கட்டுவித்து அதற்கு
வேண்டு முபகரணத்துடன் தானமாகக் கொடுத்தா
லதை வாங்கிய குற்றம் போம்படி பரிகார
முணர்த்துகின்றார்.

சிறப்புறவே திருமடத்தைச் செய்துதலை வணங்கித்
தேவவினி யானுமுயச் செறிந்திருக்க வென்றே
யறத்தினையா தரித்தான்கை யதுபரித்தா னாகி
லறைந்திடுக நியுதமுற வாலயத்தி னமர்ந்தே
பெறற்கரியா யான்றரவே பெற்றிதனை யென்ற
பிழைதீர வருந்துகவுள் ளளவுமெனப் பேசுங்
குறிப்பினன்கைக் கொண்டோ ராந்தமுணல் கொடுமை
கொள்கசில நாளினுக்கே யவன்வினைக்குக் குழைந்தே.

எ-து. சிவபத்தர்கள் திருமடஞ்செய்து அதற்கு வேண்டு முபகரணத்துடன் ஆசிரியர் முதலானோரை அடியே னுய்யும் வண்ணந் தேவரீர் நீங்காமல் இத்திருமடத்தி லெழுந்தருளி யிருக்கவேண்டுமென்று வணங்கிக் கொடுக்க. அதைவாங்கினவர்கள் சிவாலயத்தி லிருந்து அகோரம் நூறுயிரஞ் செபிக்கக் கடவர். யாவர்க்கும் பெறுதற்கு அரியோய் அடியேன் கொடுப்பதைப் பெற்று என் குற்ற நீங்க வுள்ளகாலவரையும் புசித்திருக்கவேண்டுமென்று இரந்து கூறுவான் குறிப்பினை யுணர்ந்து அவனிடத்திற் பெற்றதைத் தாமுள்ளவளவும் அருந்துதல் கொடிது. ஆகையால் அவன் வினை கெடுமாறு உள்ளமிரங்கிச் சிலநாள் அருந்தக் கடவர். எ-று. (௭௧)

அதை வாங்கிச் சிவனுக்கு நிவேதியா திருந்தாற் பரிகார
முதலியவை யுணர்த்துகின்றார்.

தரப்பிறர்கைத் தாங்கியது சங்கரற்கு நாளுஞ்
சமைத்துரிவே தனஞ்செய்க தவறியநா ளூற்றெட்
டுளைக்கசிவ குரவனுக்கு முட்டுகநா டோறு
மொருதேசத் தய்ஞ்ஞட்டி லுன்னியவன் பாதஞ்
சிரத்தையுற மலர்தூவித் திசையவனை நோக்கித்
தெண்டெனவே பணிந்தெழுக சிவநேச ருடனே
விருப்புடனே நாடோறு மிசைந்திடுக தீக்கை
வேற்றார் சாதியினு மொருபந்தி மிசைவே.

எ-து. ஈகையாளர் தரவாங்கியதை நாடோறுஞ் சிவனுக்கும் ஞானாசிரியனுக்கு நிவேதனஞ்செய்க. செய்யாதொழிந்தால் அக்குற்றம் போம்

படி அகோரத்தை நூற்றெட்டுருச் செபிக்க. ஆசிரியர் அருகிலில்லாவிட்டால் அவர் பாதந் தன்றலையிற் பொருந்த வாதரவுடன் தியானம்பண்ணி மலரா லருச்சித்து அத்திசையை நோக்கி தண்டாகாரமாய் வணக்கஞ் செய்க. இவ்வாறு செய்தபின்பு சாதகர் முதலானோருடன் கூடவிருந்து புசிக்கக்கடவர். தனக்கொத்த தீக்கையுஞ் சாதியுமுடையவ ரானால் அவர்களைக் கூடவைத்து நாடோறும் புசித்தலே சிறப்பு. எ-று. (௭௪)

பந்திபோசனத்தால் வருங்குற்றமும் பாண்டத்தால் வருங்குற்றமும் போம்படி பரிகாரமுணர்த்துகின்றார்.

அற்றழிய வாகார தோடங்க ளென்று
  மருவினையு மெனக்குவிரைந் தழிந்தொழிய வென்றும்
பெற்றசிரத் தையினாலே யாக்கடமைப் பேணிப்
  பெற்றவற்றி னைந்தினையும் பேதமிலி தன்னை
நெற்றிவிழி நின்மலனை நேயத்தா லாட்டி
  நிசியருந்தி லாகார தோடங்க ணீங்கு
மற்றழியு மரும்பாவ நல்வினையு மாகு
  மவனதுநற் புரிதன்னை யடைந்துறலு மாமே.

எ-து. பந்திபாண்டம் அன்ன முதலியவற்றால் வருங்குற்றம் போகவேண்டுமென்றும், நான்செய்த பெரும்பாவம் விரைந்தழிய வேண்டுமென்றும் ஒருவன் ஆதரவினால் பசுக்களை நன்றாகப்போற்றி அதனிடத்துண்டாகிய பால் முதலியவற்றால் *பிரம கூர்ச்சத்தைத் சாபித்து அபேதனாகியும், நெற்றிக் கண்ணையுடைய நின்மலனாகியுமிருக்கிற சிவனுக் கபிடேகஞ் செய்து உபவசியாயிருந்து அதைப் பருகினால் அக்குற்றம்போய் பெரிய பாவங்களும் நீங்கும். அதனால் சித்தி புத்தி பிறந்து நற்கன்மத்தை யனுட்டித்தற் குரித்தான தபோபலத்தினால் அவன் மகாசிவலோகத்தை யடைந்துமிருக்கலாம். எ-று.

அடைந்துறலு மாமென்ற வும்மை-சிறப்பு. ஏகாரம்-ஈற்றசை. (௭௫)

பிரமகூர்ச்சரத்துக்குரிய பசுக்களின் முறைமையுங் கோமயங்கொள்ளு முறைமையு முணர்த்துகின்றார்.

பிணிமூப்புச் சாகன்று பிறந்திளைய கன்று
  பெறுங்கன்று கருக்கன்று பெருக்கன்றாண் மலமென்
றெணியவிரு நான்கொழிந்த வெவையுமினி யனவே
  யிவற்றுதித்த மயமாதி யாட்டிடுக விறைக்கே
மணிலணவா முன்மயத்தைத் தாமிரத்திற் கொள்க
  வானிடையே கமலத்தின் வகிர்ந்தநடு மயத்திற்

* பிரமகூர்ச்சரம்- பஞ்சகௌவியம்.

பிணியிலர்கைப் பெருவிரலிற் பாதியெனு மளவு
பெற்றிடுக மற்றையவுங் கொளுமுறைமேல் சுவமே.

எ-து. வியாதிப்பசு, கிழப்பசு, கன்றுசெத்தபசு, கன்றுபோட்டு பத்துநாட் சூதகமுடையபசு, கிடாரிக்கன்றாகியபசு, சினைப்பசு, மலட்டுப்பசு, மலத்தைத்தின்னும்பசு என்று நினைக்கு மெண்வகைப்பசுக்களையு நீக்கிய மற்றப் பசுக்களெல்லா மினிமையை யுடையனவாம். இவற்றில் தோன்றிய கோமய முதலியவற்றால் சிவனுக் கபிடேகஞ்செய்க. இவற்றிற் புகை நிறத்தையுடைய பசுகோமயமிடும்போது பூமியில் விழுமுன் னிடையே தாமரையிலையி லேந்தி அக்கோமயத்தி னடுவே நோயில்லாதார் கைப் பெருவிரலிற் பாதி மாத்திரம் வகிர்ந்தெடுத்துக் கொள்க. மற்றைக் கோசலமுதலாயினவுங் கொள்ளுமுறைமையை மேற்சொல்வாம். எ-று. (௭௬)

கோசல முதலியவை கொள்ளும் பசுவி னிறமு மவற்றின்
பலமு முணர்த்துகின்றார்.

பலமொன்று நீர்கொள்க நீலநிறப் பசுவிற்
பால்கொள்க பலமைந்திற் செம்மைநிறப் பசுவின்
பலமூன்றி லுறத்ததியைப் பாணிறத்திற் கொள்க
பலமிரண்டி னெய்கொள்க கபிலைநிறப் பசுவி
னலதிவைக் ளரியனவேற் கபிலைதனிற் கொள்க
வைந்திணையு மதுதானு மரியதுவே யாகிற்
பலநிறத்தும் பாலெழுவா யைந்திணையுங் கொள்க
பசிதணிய வூட்டியபின் பால்கொள்க பாங்கே.

எ-து. வெளி. கபிலைநிறம்-கருமைசேர்ந்த பொன்னிறம். குன்றி-இரண்டு கொண்டது-ஒருவுழுந்து, அது பத்துக்கொண்டது-ஒருகழஞ்சு, அது எட்டுக்கொண்டது ஒருபலமென்க. (௭௭)

பஞ்சகவ்வியந் தாபித்தற்குக் கோட்டங் கொள்ளு
முறைமை யுணர்த்துகின்றார்.

கோட்டந்தண் டலத்தொன்பான் கொள்கதருப் பையினாற்
கொள்ளனுமா முகமைந்திற் குறித்தநிற முறவே
தீட்டிடுக நடுப்பூர்வந் தெற்குவடக் கொழிவுஞ்
சிறப்புறவே யீசத்திற் பொதுமைநிறஞ் செய்க
கூட்டிடுக விவைதம்மிற் கனகபாத் திரங்கள்
கொள்ளனுமாம் வெள்ளியினாற் பலாசினுங்கொண் டிடுக
விட்டுடைய தாமிரத்தி னியற்றலுமா முறையே
யிவற்றினுக்குப் பெயர்களையு மியம்பியிடு வாமே.

எ-து. சிவ சந்நிதியில் இருமுழமேனும், ஒருமுழமேனும், நாற்கோணமாக மெழுகிய தின்மேல் நெல்லேனும் அரிசியேனும் பரப்பிப் பதுமமாக

வொன்பது கோட்டம் பிறப்பித்து, அதில் அஞ்சாயினு மூன்றாயினுந் தருப்பையை வடக்குங் கிழக்கு நுனியாகக் கிழக்கு முதலாகப் போட் டக்கோட்டத்தி னடுவில் வெள்ளையுங் கிழக்குமுதல் வடக்கீறாக அடைவே பொன்மை, கருமை, வெண்மை, செம்மையாக விவ்வன்னமிட்டு ஈசானகோட்டத்திற் பஞ்ச வன்னத்தையுங் கூட்டி யிட்டக் கோட்டங்களை யடைவே பூசித்துப் பொன் முதலியவற்றா லுண்டாக்கிய பாத்திரங்களை யியன்ற தொன்றை வைக்கக்கடவர். அக்கோட்டங்களின் பெயரை மேற் சொல்வாம்.எ-று.

நவகோட்டம் பிறப்பித்த லெப்படியெனில் அஞ்சுக்கஞ்சு சூத்திரம் போட்டாற் கோட்டம் பதினாறாம். அதினடுவி னான்கு பதத்தையு மழித்தொன்றாக்குக. திக்குகளில் நடுப்பத மிரண்டையு மொன்றாக்குக, ஆகப்பதம் ஒன்பதாம். (எஅ)

கோட்டபூசை பண்ணுமுறை யுணர்த்துகின்றார்.

புரிகசிவ தத்துவகோட் டாயநம வென்றே
பூசைநடுக் கோட்டத்திற் பூருவகோட் டத்திற்
புரிகசதா சிவதத்துவ கோட்டாய வென்று
பூவானும் பூசனையைத் தென்புடைக்கோட் டத்திற்
புரிகவித்தியா தத்துவகோட் டாயநம வென்று
பூவானும் வடபாற்கோட் டத்தினிடம் பூசை
புரிகபொதுப் புருடதத்துவ கோட்டாய கால
தத்துவகோட் டாயவென மேல்பாற்பூ வானும்.

எ-து. வெளி. (எகூ)

மேற்கூறிய முறையே பாத்திர பூசையும் பால் முதலிய திரவிய மிடு முறைமையு முணர்த்துகின்றார்.

உணர்த்தமுறை நிரையுறவே பாத்திரப்பே ருணர்க
வொளிருஞ்சுப் பிரதிட்டை சுசாந்தையே யென்றுந்
தெரிந்தறைக தேசோவற் பாத்திரமே யென்றுஞ்
சிறப்புடைய விரற்றினச பாத்திரமே யென்றும்
பரிக்குமிய னல்லமிர்த பாத்திரமே யென்றும்
படித்தறிந்து பஞ்சகநற் பாத்திரத்தின் பெயரால்
அருச்சனையை நமோந்தமுற வலரானு மாக்க
வடைவுறவே பாறதிநெய் நீர்மயமாக் குகவே.

எ-து. வெளி. (அ0)

மேல் பால்முதலிய திரவியங்களை யீசான முதலான மந்திரத்தால் அபிமந்திரிக்கு முறை யுணர்த்துகின்றார்.

உச்சரிக்க வீசான மந்திரத்தை யொருகா
றுத்தமந்த பால்வலக்கை தொட்டொருமை யுறவே

யுச்சரிக்க புளிப்பொழிந்த ததியிருகாற் புருட
மொள்ளியவத் திரத்துவடித் தொளிவுடைய நெய்யின்
உச்சரிக்க வகோரத்தை முக்காலுன் குறவே
யொழுகுசலம் வாமத்தை யுச்சரிக்க மயத்தின்
உச்சரிக்க சத்தியோ சாதத்தை யைங்கா
லுடல்வெறுத்தான் கோமயமுன் புரிந்திடுக வுணர்ந்தே.

எ-து. உத்தமமாகிய வலக்கையினில் தற்சனிமுதல் நான்கு விரலாலும் ஈசான மந்திரங்கொண் டொருகாற் பாலைத்தொட் டபிமந்திரிக்க, எனையவு மிவ்வாறே யேற்றியேற்றி யபிமந்திரிக்க, இது சிருட்டிக் கிரமம். இது கிருகத்தனுக்கென்றறிக. முத்திகாமி சத்தியோசாத முதலான மந்திரத்தைக் கோமய முதலான திரவியத்தி லேந்து முதலாக வொவ்வொன்றுகுறைத் தபிமந்திரிக்க. எ-று. (அக)

மேற் சுத்தோதகந் தாபிக்கு முறையும் அவைகளை யொன்றாகக்
கூட்டு முறையு முணர்த்துகின்றார்.

அரிச்சிக்க வீசானத் தவ்வியத்த கோட்ட
மதன்மீது சத்திதத்துவ பாத்திரத்தை யலரால்
அரிச்சித்தோர் பலத்தளவு சுத்தசலம் பூரித்
தறுகுகுசை சந்தனமு மதனுடனே கலந்து
தெரித்தறிந்த சிவகாயத் திரியையறு வாறுஞ்
செவித்திடுக மூலத்தைச் சிறப்புறவே செப்பிப்
புரித்திடுக மயநீரி னீர்நெய்யி னெய்யைப்
பூரிக்க ததிதன்னிற் றதிபாலிற் புகவே.

எ-து. ஈசான திக்கில் அவ்வியத்த கோட்டத்தைப் பூசித்து அதிற் பாத்திரத்தை வைத்து அப்பாத்திரத்தில் சத்தி தத்துவத்தைப் பூசித்து அதில் ஒருபலஞ் சுத்தசலத்தைப் பூரித்து ஒட்டை நீளத்திலே கூர்ச்சத்தைப் பண்ணி யதனுடன் அறுகுஞ் சந்தனமு மிட்டுச் சிவகாயத்திரியை நாலாறுஞ் செபித்து அதனுண்மையை யறிந்தவர்கள், அக்காயத்திரியை யாறுவகை மந்திரிக்க, பின்பு மூலமந்திரத்தை நன்றா யுச்சரித்துக்கொண்டு கோமயம்-கோசலத்திலும், கோசலம்-நெய்யிலும், நெய்-தயிரிலும், தயிர்-பாலிலும் ஒன்றாகக் கூட்டுக. எ-று.

அல்லது எல்லாத் திரவியத்தையும் பாலிலே கூட்டலுமாம். (அஉ)

சுத்தோதகங் கூட்டிப் பூசிக்கு முறைமை யுணர்த்துகின்றார்.

உச்சரித்தே சிவகாயத் திரிதன்னை யொருகா
லுதகத்தைப் பாலுடனே யொடுக்கிடுக வனைத்தும்
உச்சரிக்க பிரமாங்கஞ் சிவகாயத் திரியு
மொருநூற்றெட் டுறமூல மந்திரமு முனைக்க

வெச்சமற வெண்டிசைக்கும் பந்தனத்தை யியற்றி
யியற்றிடுக வவகுண்டந் தேனுவின்முந் திரையும்
உச்சரித்தே சத்திமனு வுறுத்திடுக மகத்தென்
றுரைத்தபெரு முத்திரையு மூலத்தை யுரைத்தே.

எ-து. சிவகாயத்திரியை யொருகா லுச்சரித்துச் சுத்த சலத்தைப் பாலுடனே கூட்டுக, அது உச்சரிக்க வருகல்லாதார் இதய மந்திரத்தை யுச்சரித்துக் கூட்டுக. எல்லாங் கூட்டி யிருக்கிற நடுவிற் பாத்திரத்தைத் தொட்டுச் சங்கிதையையுஞ் சிவகாயத்திரியையு மொருகா லபிமந்திரித்துப் பணிமாறப்பண்ணி யபிடேகஞ் செய்க. பரிகார நிமித்தமானுன் மூலமந்திரத்தை நூற்றெட்டுரு பஞ்சகவ்வியத்தில் அபிமந்திரித்துத் திக்குபந்தனஞ் சோடிகாமுத்திரையினுலும் அவகுண்டனம் பரிகாரமுத்திரையினுலும், தேனுமுத்திரை வவுஷடந்தமான சத்திமந்திரத்தாலும்,பரமீகரண மூலத்தாலுங் கொடுக்க. எ-று.

பரமீகரணமெனினும், மகா முத்திரையெனினு மொக்கும். (௮௫)

பஞ்ச கௌவியத்தை விதிவழி தாபித்துச் சிவனுக் கபிடேகஞ்
செய்தாற் பிறராறியாமல் தான் செய்த பாவம் போமெ
ன்ப துணர்த்துகின்றார்.

ஆட்டிடுக பச்சிமதிக் கானனனுக் கமலற்
கதுதன்னை யான்புரிந்த வவலவினைக் குய்யம்
ஓட்டிடுக வென்றதனை யுண்டுபக லிரவு
முறங்காதே பூருவதிக் கானனனு யுற்றே
நாட்டமவன் றிருமேனி நாடியிட நாவா
லோங்கார முன்மூல மந்திரத்தை நவின்று
வீட்டிடுக பிறரறியா தேபுரிந்த வவல
வினைதன்னை மற்றைவினை போக்குவது வியப்போ.

எ-து. மேற்றிசை முகமா யிருக்கிற வாலயத்துச் சிவபெருமானுக்கு அப்பஞ்ச கௌவியத்தை யபிடேகம் பண்ணி யான் பிறராறியாமற் செய்த தீவினையை யோட்டவேண்டுமென்று பகற்பொழுதுண்டு இரவில் உறக்கமுமில்லாமல் அச்சிவ சந்நிதியிற் கிழக்கு முகமாக விருந்து, கண்ணாற் றெரிசித்து, நாவாற் பிரணவ முன்னிட்ட பஞ்சாக்கரஞ் செபித்து, அத்தீவினையை யொழித்திடுக. அது வியப்போ வியப்பேயல்ல. எ-று.

வலம் நல்லது அது அல்லாததவலம். வினைக்குய்யம் என்றது பிறரறியாமற்றானே செய்த பாவமென்க. (௮௬)

அது தாபித்து அபிடேகித்தற்குக் காலவிசேடமுமெளிதில்
தாபிக்கு மோர்வகையு முணர்த்துகின்றார்.

ஆட்டிடுக வபரபக்கத் தட்டமியி னிசியி
லானைந்து மமலேச னணிமுடியி லன்பா

லூட்டிடுக தேசிகன்றன் றனக்கடிமை யொட்டி
யோட்டுதற்குத் தீவினையை யொருப்பட்டான் றனக்குக்
காட்டியவிம் முறைநவமி பதினான்கு காறுங்
க்குத்துறவே செய்தருத்திற் கரிசவலங் கழியு
மீட்டியிவை யைந்தினையு மிதயத்தாற் செபித்தே
யிறைவனணி முடிக்காட்டி யருத்தலுமா மெளிதே.

எ-து. அபரபக்கத் தட்டமி நவமி சதுர்த்தசி இம் மூன்று திதிகளி லாசிரியன் பிரமகூர்ச்சத்தைத் தாபித்து சிவனுக் கபிடேகஞ்செய்து தனக் கடிமையாக வுடன்பட்டுத் தீவினையை யோட்டுதற்குத் துணிந்து உபவசி யா யிருக்கிற மாணுக்கனுக்கு அருத்துவித்தா லவன் பிறரறியாமற் செய்த குற்றத்தி லொன்றுபோ மல்லா தொருபாத்திர மானுற் சுப்பிரதிட்டாயந மோ வென்று பாத்திரத்தையு மருச்சித்துச் சிரத்தினாலே யைந்து பாத்திர த்தையும் ஆவாகனம் செய்து யதிலே யைந்தையுங் கூட்டி இதய மந்திர த்தா லருச்சித்து அபிடேகஞ்செய்து அதனை முன்புபோல விரவிலுமுபவசி யா யதைப் புசிப்பிக்கி லக்குற்றத்தி லொன்றுபோம். எ-று.

பஞ்சகௌவிய முண்டாதற் பொருட்டுக் கபிலை பூசை
யுணர்த்துகின்றார்.

ஆருயிரி னருவினையை யறுத்தறத்தை யாக்க
வமலவா னருள்புரியப் பாற்கடலி னுதித்துப்
பாரிடரைப் பாற்றியிடும் பயோதரியே தாயே
பற்றுபுல் லென்றுவட மொழிப்பொருளைப் பகர்க
யாரியத்தை வல்லாரா ரியம்பகர்ந்து புல்லை
யருத்திடுக வருக்கியத்தைத் தெளித்திடுக வலருங்
கூரருளாற் சூட்டிடுக கும்பிடுக பாலுங்
கொண்டுமுறை யமலன்முடிக் காட்டுகபோங் குற்றம்.

எ-து. நின்மலனாகிய சிவன் கிருபையினாலே ஆன்மாக்கள் செய்த பாவத்தைப் போக்கி மோக்ஷமடையும் பொருட்டுத் தேவர்களு மசுரர்களுங் கூடி யமுதங்கடைகின்ற காலத்திற் பாற்கடலிற் றோன்றி யான்மாக்கள் துக்கத்தைப் போக்கும் பயோதரத்தை யுடைய மாதாவே நான் தருகிறபுல்லை நீ கைக்கொள்வாயாக வென்று வடமொழிப்பொருளைச் சொல்லுக, அம்மொ ழிக் குரியார் அவ் வடமொழி மந்திரத்தைச் சொல்லி யப் புல்லை யருத்தி டுக, நந்தை முதலிய பசுக்களின் பெயரா லருக்கியங் கொடுத்து மந்திரத்தா லருச்சித்து வலமாக வந்து வணக்கஞ்செய்து முற்கூறிய முறையே பான் முதலியன கொண்டு பிரமகூர்ச்சந் தாபித்து அதனைச் சிவனுக் கபிடேகஞ் செய்தா லவன்செய்த பாவமெல்லாம் போம். எ-று. (அசு)

மன வாக்குகளால் வரும் பாவம் போம்படி பரிகார
முணர்த்துகின்றார்.

சங்கரனைச் சதாசிவனைத் தரித்திதய மலரிற்
றண்புனலு ளாழ்ந்திருந்து வாயுவினைத் தடுத்து
மங்கமனோ தோடமெனச் சிவகாயத் திரியை
மானதத்தா லட்டசத முச்சரிக்க மாயும்
பொங்கியபொல் லாங்கொன்று வாக்கினது புன்மை
போமென்று வாக்கடக்கப் பொறியழலை யோம்பி
மங்கையொரு பங்கனடி மலர்சூட்டி யென்றன்
வாக்கியன்ற தோடத்தை மாற்றிடுவா யெனவே.

எ-து. இதய கமலத்திற் சதாசிவமூர்த்தியை தியானஞ்செய்து வாயுவை மறித்துக் குளிர்ச்சியையுடைய நீரில் அகமருடணமாக மூழ்கியிருந்து சிவகாயத்திரியை நூற்றெட்டுரு மானதமாக மூன்றுநாட் செபித்தால் மனத்தா லன்னிய மனையாளை யணையு மாதரவு கூர என்று முன் ஆறுவது பாவவியலிற் கூறிய நால்வகைக் குற்றத்தி லொன்று போம், மூன்றுநாளுண வொழிந்து மௌனியாய்ச் சிவபூசையு மோமமும் பண்ணிச் செபமு முற்கூறிய முறையே செய்து சுவாமி நான் வாக்காற் செய்த குற்றத்தி லொன்று போக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டால் அழுகையுங் கோளும் பொய்யு மயலப வாதந்தானு மென்று முன் ஆறுவது பாவவியலிற் கூறிய நால்வகைக் குற்றத்தி லொன்று போம். எ-று. (௮௭)

காயத்தால் வரும் பாவமுந் தும்மல் முதலியவற்றால்
வருங் குற்றமும் போம்படி பரிகார
முணர்த்துகின்றார்.

கழிந்துவிடுங் காயத்திற் கரிசொன்று விரையக்
கட்டுரைக்கை நாண்மூன்று விட்டுணலுங் கடுக
வொழிந்தறலைச் சந்திதொறு முண்டுமட வார்தோ
ளொன்றாதே சிவனடியை யொருப்பட்டே நினைக்கி
னிழிந்தவிரு மற்றும்மல் பொருமலிவை யெழினே
யெழுமூன்றோங் காரமுற வியற்றுகவா யாம
மொழிந்தவர்சூத் திரர்தம்மைச் சூத்திரசோ மொழித்தே
யுச்சரிக்க வைந்தெழுத்து மைம்முகனை யுனியே.

எ-து. மூன்றுநா ளுபவசியாய்ச் சந்தியா காலங்கடோறு மூழ்கி நியமஞ்செய்து சலத்தைப் புசித்து மௌனியாய் மாதர் கலவியைப் பொருந்தாமற் சிவத் தியானஞ் செய்து முற்கூறிய மந்திரத்தை யுறுதியாகச் செபித்தால் ஆறுவது பாவவியலில், அழுகையுங் கோளுமென்ற கவியுள் மற்

றைய மனையாட்டோரைத் தழுவுதலாதி காயத்தால் வருங்குற்ற நாலி லொன்று போம். பொல்லாதென்று சொன்ன விருமல்முதலான துண்டாளு லக்குற்றம் போம்படி யிருபத்தொரு பிரகாரம் பிரணவத்தை யுச்சரித்துப் பிராணாயாமஞ் செய்க. சூத்திரர்கள் சதாசிவ மூர்த்தியைத் தியானஞ்செய்து பிரணவ நீக்கிப் பஞ்சாக்கரத்தை யுச்சரித்துப் பிராணாயாமஞ் செய்க.

மேல் தொகுத்துப் போந்த சதாசிவ நாயனார்க்குத் தியான
மிரண்டு விருத்தத்தா லுணர்த்துகின்றார்.

உச்சிமுக மீசான மொளிதெளியப் பளிங்கே
யுத்தரா பூருவதிசையை நோக்கியுறு முகந்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கி யமருஞ்
செச்சைநிறத் தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்வால்.

எ—து. ஈசானமுகஞ் சிறுபிள்ளை போன்று சுத்த படிக மயமாய் அநவரதமு மீசான திசையைப் பார்த்து மேல் நோக்கினதாயிருக்கும். இவ்வாறு கூறிய முகத்தின்கீழ் கோங்கம்பூ நிறம்போன்ற தற்புருடம் யௌவன்னத்தையுடையவர்கண் முகம்போன்று கிழக்குமுகமாய் விளங்கும். கண்டவர்களுக்குப் பயங்கரமுமாய்க் கீழ் நாலா நின்ற தாடியையும் புறப்பட்ட வெயிற்றினையு முடைத்தாய்க் கறுத்து விருத்தர் முகம்போன்ற அகோரமுகம் வலத்தோளின் மேல் தெற்குமுகமாகவிருக்கும். வெட்சிப்பூ நிறம்பெற்று மாதர் முகம்போல அவர்க ளாபரணத்தையு முடைத்தாய் வாமதேவ முகமிடத் தோளின்மேல் விளங்கும். பிடரில் மேற்றிசையைப் பார்க்க விருக்கிற சத்தியோசாதமுகம் அரசர்கள் முகம்போன்று பால்நிறம் பெற்றிருக்கும். எ-று.

சிறுபுறம் - பிடரி. (அக)

திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்திற் சத்திய யஞ்சூல நீண்ட
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் காத்தின்
வரதமுமா துளங்கபலம் போகிசெப மாலை
மணமலிநீ லோற்பலமு முடையர்வய தீரெட்
டுருவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமந் தனந்தா
னுறவிருப்பர் சதாசிவர்தத் துவதவிதி னுகந்தே.

எ-து. படிகம்போன்ற திருமேனியையுஞ் சடாமகுடத்திற் கொன்றைமாலையு மிளம்பிறையையும் பதினைந்து விழியையும் வலப்புறத்துத் திருக்கரத்தில், அபயஞ், சூலம், மாத்திரைக்கோல், தமருக மிவைகளையும், இடப்புறத்துத் திருக்கரத்தில் வரதம், மாதுளம்பழம், பாம்பு, செபமாலை, நீலோற்பலம் இவைகளையுந் தரித்துப் பதினாறு வயதையு முப்பத்திரண்டிறுப்பையு மிரண்டு சீபாதத்தையு முடைய சதாசிவதேவர் சதாசிவ தத்துவத்திற் புத்திகாரியமாகத் தன்மஞ் ஞானமுதலிய சிங்கக்கால்களையு மாயிரந்தளத்தையு முடைய பதுமமே யாதனமாக வெழுந்தருளியிருப்பர். எ-று.

லயாங்கத்திற் சதாசிவத் தியான முணர்த்தி மேற் போகாங்க
பூசைசெய்தற்குப் பிரமாங்கங்கள் மூர்த்தியாதலை யைந்து
செய்யுளாற் பிறித் துணர்த்துகின்றார்.

திருவுருவந் தெளிபளிங்கு [illegible]ரிநயனம் பிறையுஞ்
செறிசடையர் வலக்கரத்திற் றிரிசூலம் வரதங்
கருதுகமற் றிடக்கரத் [illegible] செபமாலை யபயங்
காருணிகர்க் கீசானர்க் கவர்தமக்குக் கனிட்டர்
திருவுருவங் கோங்கினலர் திரிநயனங் கரமுன்
செப்பியதே திருநாமந் தற்புருட தேவர்
வரியரவு மிளம்பிறையுஞ் சடைமுடியின் வைத்தார்
மலரடியை மறவாதார் வல்வினையை மாய்ப்பார்.

எ-து. திருமேனி படிகம்போன்று மூன்றுவிழியையு முடையாராய்ச் சடாபாரத்தில் சந்திரனையும் வலப்புறத்திற் சூலம், வரதம், இடப்புறத்திற் செபமாலை, அபயம் இவைகளைத் தரித்துக் கிருபையை யுடையாரா மீசான தேவ ரிருப்பர், அவர்க்கு தாழ்ந்திருக்கிற தற்புருட தேவர் கோங்கம் பூப்போன்ற நிறத்தையு மூன்று விழியையும், வலப்புறத்தில் சூலம், வரதம், இடப்புறத்திற் செபமாலை, அபயம், சடாபாரத்தி லிளம்பிறையுந் தரித்திருப்பர். இம் மூர்த்திகளைத் தியானஞ்செய்தவர்களே வலிதான வினைகளைப் போக்கினவர். எ-று. (கக)

கரியவுரு வெரியசடை கபாலநிரை மாலை
காளமுகங் கவிழ்தாடி கண்மூன்று வட்டங்
கரதலங்க ளொருநான்கும் கட்டுரைத்த படியே
காட்டினமுன் னிருநான்கு கரமுமுள ரென்றே
வெருவியிட மருவலரை வெருட்டியவுக் கிரத்து
விக்கிரகா கோரமென விளம்புபெய ருடையா
ரிருபதமு மொருபொழுது மறவாதே யேத்தி
யெண்ணுமவ ரிடர்வினையை யிடிப்பார்க ளென்றும்.

எ-து. வெளி. எரியசடை யென்றது அக்கினிச் சுவாலை போன்ற குஞ்சியை யுடைய சடை. கபால நிரைமாலை யென்றது பிரம விட்டுணுக்கள் கபாலத்தை யொழுங்காக்கிக் கோத்து முழங்காலளவாகத் தரிக்குமாலை. மூன் உடலூறுபட வென்னும் எக-ம். திருவிருத்தத்தி லெட்டுப் புயமாகத் தியானங் கூறியதை உணர்த்துமென்ற லென்னுந் தந்திரவுத்தியால் இத் திருவிருத்தத்தினுங் கூறினர். எ-று. (௯௨)

தேமொழியா ளுமையென்னத் திருமுகமுந் தோடுந்
  திலதநுதற் சிறப்புமிரு ளளகவிதச் செறிவும்
வாமமெனுந் தேவர்க்கு வாய்த்தனவே செம்மை
  வடிவுமவர் காதலங்கண் ணுதிதனில் வகுப்பே
சேமவுருத் திகழ்சங்கஞ் சடாமுடியிற் பிறையுந்
  திரிநயனங் காதலங்கள் செப்பியமுற் படியே
நாமமது சத்தியோ சாதமென நவின்ற
  நாதற்கு நயந்தவரை நினைக்கவினை நாசம்.

எ-து. வெளி. மாதர்முகம்போல் வாமதேவ மிருத்தலாற் றேமொழியாளுமையெனச் சிறப்பித்தார். சேமம்-இன்பம்; இவ்வின்பந்தானே திருமேனியென்க. (௯௩)

திருவுருவ மிதயர்க்குத் தவளமெனத் தெளிக
  சேடித்த வுறுப்பனைத்துஞ் செப்பியமுற் படியே
திருவுருவங் கனகமெனச் சிரத்தினுக்குத் தெளிக
  சேடித்த வுறுப்பனைத்துஞ் செப்பியமுற் படியே
திருவுருவஞ் சிந்தூர மெனத்தெளிக சிகைக்குச்
  சேடித்த வுறுப்பனைத்துஞ் செப்பியமுற் படியே
திருவுருவம் வண்டினிறங் காளமுகங் கவசஞ்
  சேடித்த வுறுப்பனைத்துஞ் செப்பியமுற் படியே.

எ-து. வெளி. (௯௪)

ஒவ்வொன்றே திருமுகமு நேத்திரங்கட் குணரி
  லுடலொளியு மிரவிமதி யுதாசனனை யொக்கு
மிவ்விரண்டே காதலமும் வரமபய மவையு
  மிவ்விரண்டே விழியுமென வெண்ணிடுக வெழிலார்
செவ்வரத்தந் திருவுருவங் காதலமீ ரைந்துந்
  திருநயன மொருமூன்றுஞ் சினந்தடித்த குரலு
மிவ்வகையெல் லாமுடைய ரத்திரனொன் றியம்பு
  மிவரடியை யிதயத்தி னிருத்திணிட ரிலையே.

எ-து. விழி மூன்றக்கு மொவ்வொரு திருமுகமுடையராய் மூச்சுடர்போன்ற நிறமு மிவ்விரண்டு விழியும் வரத மபயமாகிய விவ்விரண்டு கையுமுடையராய் விளங்காநிற்பர். பிரகாசமுள்ள செவ்வரத்தம் பூப்போன்ற நிறமு மூன்று விழியுங் கோபத்தினல் இடிபோன்ற திருவாக்கையும், வலப்புறத்தில்-கமண்டலம், வேல், சூலம், மழு, பிரமதண்டம்; இடப்புறத்தில்—வாள், கேடகம், நாராசம், வில், செபமாலை, இவைகளைப் பத்துக் கைகளிலுந் தரித்திருப்பரென்று சிவாகமங்களில் அத்திர மூர்த்தித் தியானஞ்சொல்லும். இவ்வத்திர மூர்த்தியை இதயத்திற் றியானித்தாவிடர் இல்லை. எ-று.

ஏகாரம்—தேற்றம். சில வாகமங்களில் வலப்புறத்திற் சூலஞ் செபமாலையெனவும் இடப்புறத்திற் கபாலமுங் கமண்டலமுமெனவும் பேதமாகவுங் கூறும். (௯)

அகளமாகிய சிவந்தானே ஆன்மாக்கள் போகமோக்ஷமடையும்
பொருட்டுச் சகளீகரித்ததென் றுணர்த்துகின்றார்.

வாக்குரையா லறிவரியன் வாக்குணர்ந்த மனத்து
மதிப்பரிய னிணையிலிய நாதிமல முத்த
னேக்கிமல நோயாளர் போகவித நுகர்ந்து
நோயற்றுத் தன்மயத்தை நோக்காதே நோக்க
நீக்கமிலாப் பஞ்சவித நிறத்துருவி னிகழ்ந்தா
னிலனீறு மவனுருவே நீக்கினனே நிலத்து
மரக்கையிலா னக்கையினை யாதரித்தா னனுக்கட்
கழுக்கறுக்க வல்லதறி வாரவனை யாரோ.

எ-து. வைகரி முதலிய வாக்கினலு மவ்வாக்கினா லுண்டாகிய ஆகமப் பிரமாணங்களினலு மறிதற் கரியவனும், சாத்திரத்தினலு மனத்தாலு மளவிடுதற் கரியவனும், தனக்கொருவரு மொப்பில்லாதவனும் அநாதியே மலத்தினின்றும் விடப்பட்டவனுமாகிய சிவன் ஆணவமாகிய வியாதிகளையுடைய வான்மாக்கள் நாடோறுந் தன்னைத் தியானஞ்செய்து அபரபோகம், பரபோகமாகிய போகவகைகளைப் புசித்துக் கண்ணுக்குப் படலம்போனவாறே பதார்த்தங்கள் விளங்குவதுபோல வாணவாதியின் வேதனையில்லாது தற்சொரூபத்தைப் பாராமற் பார்த்திருக்கவே ஆன்மசொரூபம் விளங்கித் தற்சொரூபம் விளங்கப் பஞ்சவர்ண சொரூபமாகிய அஞ்சு திருமுகத்தினையுடைய சதாசிவமூர்த்தியை யதிட்டித்துக்கொண் டதிலே வியாபித்திருந்தான் எனவே யேனையவிடத்தும் வியாபிக்கவில்லையோவெனில் நாதமுதற் பிருதிவி யீறாகிய தத்துவங்களெல்லாமவனுக்குத் திருமேனியே, யிவ்வாறு கூறிய நாதமுதற் பிருதிவி யீறாகிய தத்துவங்கடோறும் விடப்பட்டு நீங்காதிருக்கையால் தனக்கென்ன வொருவடிவில்லாத அச்சிவன் றிருமேனி கொண்டது யாதுகாரணத்தாலெனின் தன்னைத் தியானஞ்செய்யும் ஆன்மா

க்களுடைய சனன மரணமாகிய குற்றத்தைப் போக்கும் பொருட்டல்லாமல் தனக்கொரு பிரயோசன நிமித்தமல்ல. அவன் றிருமேனிகொண்டு வேதாகமங்களை யருளிச்செய்யாதபோது அவனுடைய மகிமையை யார்தான் அறியவல்லவர்கள். எ-று.

முத்தியையடைய எண்ணுமவர்க் கோருபாய முணர்த்துகின்றார்.

சேர்ந்திடுக சதாசிவநற் றிருவெல்லை வட்டந்
  தீவினையுந் தீர்ந்துசதா சிவபுரியைச் செறிவார்
சார்ந்திடுக வப்புரியுட் டமையுணர்ந்தார் தாளைத்
  தாமறிவ ரொம்பிணியு மருந்துமெனத் தம்மு
ளோர்ந்தவர்த மேவலினுக் கொருப்படுக விருப்பா
  லுயிர்க்குயிராய் நின்றசிவ னுள்ளொருமை யுணர்ந்தே
தீர்ந்திடவே பசுபாச மூலமல மதுவுந்
  தேசிகனை யதிட்டித்துத் திருவருளைப் புரிவான்.

எ-து. காசிமுதலிய திருத்தலத்தி லியன்ற தொன்றை யடைந்து அத்தலத்தில் நித்தியகன்ம முடித்துச் சிவாலய சேவை செய்து அத்தலத்தி லிருப்பவர் கன்மவேதனை யில்லாமல் சதாசிவ பதத்தி லுண்டாகிய போகத்தைப் புசித்திருப்பார்கள், அத்திருத்தலத்தில் வாசமா யெழுந்தருளியிருந்து தம்மை யுணர்ந்த ஞாதாக்களைச்சென் றடைந்து, மாதா குழந்தைக்கு வியாதி யின்னதென் றறிந்து மருந்து கொடுப்பதுபோல இவர் நமக்குப் பக்குவத்துக்கீடாய் அனுக்கிரகஞ் செய்வாரெனத் தன்மனத்தில் எண்ணி விருப்பத்துடன் நாடோறு மவருடைய எவல் செய்துவந்தால் அப்பொழுது எல்லா வான்மாக்களிடத்திலும் வியாபியாயிருக்கிற சிவ னிம்மாணுக்கன் கபடமில்லாம லொருமைப்பாட்டாற் செய்யும் வழிபாட்டை யறிந்து ஞானசிரியனை யதிட்டித்து ஆன்மாக்களுக்கு ஆணவ முதலிய மலங்களை நீக்கிச் சிவானந்தானுபூதியை அனுபவிக்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுவான். எ-று.

தீவினையுமென்ற வும்மையால் ஆணவாதியுமெனக் கொள்க. (௧௭)

அவ ரனுக்கிரகம் பெறு முறைமை யுணர்த்துகின்றார்.

எழுதுகொடி யிடைமடவா ரிணைவிழிவே லெறியு
  மிளவுருவந் தளருருவும் வேறொருவன் றென்றே
யழுததனைப் பரிப்பதனுக் கருவருத்தே யழுங்கி
  யநாதிமல முத்தனமுக் கறுப்பானென் றடைந்தா
ரொழுகுமவர் நவவாய்த லூனுடலி னுதியா
  ரொண்குரவ னுபதேசத் தூற்றநூ... லோக
முழுதுலகு மொடுங்கிடுசாண் மூலமலந் தனிலு
  முத்தருமா யநாதிமல முத்தனடி பிரியார்.

எ-து. வல்லிசாதகக்கொடியைப்போன் றெழுதப்பட்டிருக்கிற விடையையுடைய மடவார் இருவிழியாகிய ஆயுதங்களினாலே வேதனை பட்டிருக்கிற இளமையு முதுமையும் வேறல்ல, அவ்விரண்டினாலுஞ் சுகமில்லையென் றெண்ணி யிப்படி தளர்கை வளர்கையாகிய பரிணாமத்தையுடைய சரீரத்தைச் சுமப்பதற்குச் சிறைச்சாலையி லிருக்கின்றவ னருவருப்பதுபோல வதை யருவருத்து அழுதா சீ யென்று துக்கித்து இக்குடும்பத்தைப் போக்குவாராரென்று தேடி யான்மாக்களுடைய வாணவாதி தோடத்தை யநாதியே மலமில்லாத சிவனே போக்குவானென்றெண்ணி யடைந்தவர்கள் நவத்துவாரத்தினையுடைய சரீரத்தைப் பொருந்தார்கள் ஞானாசிரிய ருபதேசித்த முறைமையிலே நின்று சமாதி செய்திருந்து ஒப்பில்லாத நாததத்துவத்தி லிந்திராதி புவனங்களைப் பொருந்தி யாண்டுள்ள போகங்களைப் புசித்துத் தொலைந்தவாறே மகாசங்காரகாலத்தி லநாதிமல முத்தனான சிவன் ஸ்ரீபாத கமலத்திற் சேர்ந்து மீளா திருப்பார்கள். எ-று. (௯௮)

நின்மல ஞானமுள்ளார் சிறப்பையும், அது இல்லாதார்
தன்மையு முணர்த்துகின்றார்.

வாழ்க்கையினை மகிழ்ந்தாலும் வாழ்க்கையவ மதித்து
வனத்தூவளை தனிற்கனிகாய் மூலமிவை மாந்தி
யாக்கையினை யொறுத்தாலு மாக்கையினை யாக்கி
யளித்தழிக்கு மமலனுள னவன்பெயரோ தாயே
நீக்கமற வுயிர்க்குயிராய் நிற்பனவ னெனவே
நினைந்தொருமை யுறநின்றார் மலமனைத்து நீங்க
நோக்கறவே நோக்குவர்க ளுளந்தொளித்து நின்ற
நுண்ணியனை யவரல்லா ருடறோறு நுழைவார்.

எ-து. பிரம முதலிய மணத்தினால் விவாகஞ் செய்து மகிழ்ச்சியுடனில்வாழ்க்கையி னிருந்தாலு மிவ்வில்வாழ்க்கையைச் சீ யென்று கருதிக் காடுமலையி லுண்டாகிய காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்து வானப் பிரத்தனாயிருந் தாக்கையை யொறுத்தாலும் எல்லா வான்மாக்களுக்கும் பகுதி சம்பந்தமாகிய தேகத்தை யுண்டாக்கிச் சிருட்டி திதி சங்காரமாகிய தொழில்களைச் செய்வானொரு கருத்தாவுளனென்று அக்கத்தாவின் றிருநாம மேதாலு முருக்கமாகக் கேட்டு எல்லா வான்மாக்களிடத்து மத்தன்மை விட்டு நீங்காமல் வியாபித்து நிற்குமுறைமையை யறிந்து அவ்வொருமைப் பாட்டுடன் எப்போதும் எண்ணி யிருப்பவர்கள், ஆணவ முதலிய மலங்களின் வலிகெட வணுவுக்கணுவாய் நிற்கும் சிவனை நோக்காமல் நோக்குவார்கள். இத்தன்மைவாராத வான்மாக்கள் பூட்டையும் நீரும்போலப் பிறந்து மிறந்துந் திரிவார்கள். எ-று.

எனவே கிருகத்தினிற் பிரமசாரியும், வானப்பிரத்தனிற் சந்நியாசியு மடங்கிற்று. (௯௯)

தீவினைகட்குச் செய்யும் பரிகாரங்களுள் மேலான பரிகார மீதென் றுணர்த்துகின்றார்.

பரிகாரந் தீவினைக்குப் பலவிதமே யவற்றுட்
பரமான பரிகாரம் பரமசிவ ஞான
மிரவியொளி யிருளறுக்கை யெற்றற்றே பாவ
மெனைத்தனைத்து மஃதறுக்கை யிருண்மலத்தின் வலியு
மொருவுமதன் முன்பாவ விதமொழிகை வியப்போ
வுயிர்க்குயிரா யிரண்டறவே யொருவாதே நிற்கும்
பரமசிவன் பத்தினியைப் பாராதே பார்க்கத்
தன்பதிக்கும் பார்ப்பிக்கு மதுபரம ஞானம்.

எ-து. ஆன்மாக்கள் செய்தபாவம் போம்படி பரிகாரம் பலவகையாயிருக்கும், அவற்றுள் மேலான பரிகாரஞ் சிவஞானமே அது எவ்வகையெனின் பூதவிருளை சூரியப்பிரகாசம் எப்படிப்போக்குமோ அப்படியே பாவவகைகளெவ்வள வுண்டோ அவ்வளவு மிக்கன்மமட்டல்ல அக்கினியைச்சேர்ந்தவித்து எப்படி தான்கெடாமற் றன்சத்திகெட்டதோ வதுபோல அக்கன்மத்துக்குக் காரணமாகிய வாணமுதலியவுங் கெடாமற் சத்திகெட்டு நிற்கும். ஆதலாலச் சிவஞானத்தின் முன்னே பாவங்கள் போமென்ப ததிசயமல்லவே ஆதலால் எல்லா ஆன்மாக்களிடத்திலு மெப்போதும்விட்டு நீங்காமனிற்குஞ் சிவசத்தி சிபாதகமலங்களை யூனதிட்டியினாற் பாராமல் ஞானதிட்டியினாற் பார்த்தால் அச்சத்தியே தாரகமாய்த் தனக்குப் பதியாயிருக்கும் சிவனை என்று மனுசந்தானம் பண்ணிவைக்கும் அதுவே பரமமான சிவஞானம். எ-று.

பரிகாரம் பலவகையாவன. கங்கைமுதலான தீர்த்தத்தின் முழுகல். மந்திரஞ் செபித்தல். ஓமஞ்செய்யல். கிருச்சிரசாந்திராயண முதலிய விரதமனுட்டித்தல் காசிமுதலிய திருத்தலத்தைச் சேவித்தல். தலங்களிற் சிவலிங்கப் பிரதிட்டைசெய்தல் முதலியனவாம். (௩)

இப்பரிகாரஞ் செய்தற்குப் பக்குவரிவரென்பதும் அபக்குவர்க்குணர்த்தின் வருங்குற்றமு முணர்த்துகின்றார்.

பரிகார வியலிதனைப் பாவவினைக் கஞ்சிப்
பழிக்குமழிந் திவையிரண்டும் பாற்றியிடப் பணிந்து
குருபாத மலர்தலையிற் கொண்டழுவான் குறிப்பைக்
குறித்தறிந் தாண் டாரிரண்டிட் குரவனுளங் குழைந்தே
பரிவுறவே யவன்றனக்கே பகர்ந்திடுக வஞ்சாப்
பாதகர்க்கும் பகரற்க பகர்ந்தானே யாகி
லெரிவாய நிரயத்தி லிருவரும்வீழ் வாரே
யெவராவர் துணையமல னுமையிலங்கித் தாக்கே.

எ-து. இப்பரிகாரவியலை உள்ளபடியாராய்ந்து பாவவினைக்கும் இம்மையிலின்னபாவம் செய்தானென்னும் பழிக்கும் பயந்தழிந்து அவ்விருவகையும்போம்படி யாசிரியன் சீபாதகமலத்தைத் தன்தலைமேற் சூடிக்கொண்டழுது தண்டுபோல நமஸ்காரஞ்செய்யு மாணாக்க னுட்கருத்தை அவ்வாசிரியன் விசாரித்துப் பன்னிரண்டு வருஷம் பரிட்சித்து அறிந்து தீக்கைசெய்து அவனுக்கு அக்குற்றம் போம்படி கிருபைசனித்துப் பரிகாரஞ்சொல்லுக. பாவத்துக்குப் பயப்படாத மாணாக்கர்க்குப் பரிகாரம் பகராதொழிக, அபக்குவர்களுக்குப் பரிகாரங்கூறினால் அக்கினிச் சுவாலைபோல வெளியாநிற்கும். நரகத்தில் அவ்விருவரும் வீழ்ந்து கிடப்பார்கள். பரமேசன் அருளிச்செய்த வேதாகமங்களின் வழியே நடவாது நிந்தித்த ஆன்மாக்களுக்கு யாவர் துணையாவார், ஒருவருந் துணையாகமாட்டார்கள். எ-று.

ஏகாரம்—தேற்றம். (௱௧)

முடிந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியா லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுபரி காரவித மாசறவி சைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குணனி னைந்தே.

எ—து. வெளி. (௱௨)

## சிவத்துதி.

* கட்டளைக்கலிப்பா.

அன்னி யம்பசு பாசமெ னப்பனே யநாதி யேமல மற்றவ னப்பனே, கன்னி பாகங்க லந்தக ணவனே கருது மெய்யடி யார்தங் கணவனே, முன்ன மேபுர மூன்றையு மட்டனே மூத்தர் கண்டு முகந்துணு மட்டனே, தென்னன் றேவியு நின்கண் சிறப்பரோ செறிகிலார்கள் பிறந்துஞ் சிறப்பரோ.

எ-து. பசுவுக்கும் பாசத்துக்கு மிலக்கணமாயிருக்கப்படும் சுவாமியே, அநாதிகாலத்தில் ஆணவமுதலிய குற்றமில்லாத அழகனே, பார்வதி தவஞ்செய்ய அந்நாளிற் றிருமேனியி லொருபாகங் கொடுத்துச் சேர்ந்த கண்போன்றவனே, மெய்யடியாரால் விரும்பப்பட்ட நாயகனே, பூருவத்திலே முப்புராதிகளையு மொருகணத்தில் சங்கரித்தவனே முத்தான்மாக்கள்

* கட்டளைக்கலிப்பா என்பது, "மாச்சீர்முன்வரு நாற்சீரடியே-நேர் முதனிரைமுத னிரனிறையானே-பதினொன் றெழுத்தும் பன்னிரெழுத்து-மியைந்தனவடியாய் நடந்தவீரிரட்டித்-தோத்துநான்கிறுவது கட்டளைக்கலிப்பா" என்பதனானுமுணர்க.

தரிசித்துச் சிவானந்தானுபூதியை யனுபவிக்கப்பட்ட அமிர்தசொரூபனே, பாண்டிமாதேவியு மும்முடைய திருக்கணோக்கி னவலோகனத்தினாலே முத்திபெற்றனளே, தேவரீர் சிபாதகமலத்தை யடையாதவர்கள் பிறந்தும் நல்ல குணமில்லாதவர்களே. எ-று. (௱௫)

இதுவுமது.

நடலை வாழ்வெனை நீக்கிய நம்பனே நயந்து பார்த்தற் களித்த சொன் னம்பனே, சுடலை நீறணி சுந்தர வேடனே சுரத்து நாய்புடை சூழச்செல் வேடனே, கடலி னஞ்சினை யுண்டக ளத்தனே கரிசர் நெஞ்சி னொளித்தக ளத்தனே, யுடலிற் பூணெனப் பாம்பு முடையனே யுழுவை யின்னுரித் தோலு முடையனே.

எ-து. துன்பவாழ்வினின்று நீக்கியநம்பனே, அருச்சுனனுக்குக் கிருபைசெய்து பாசுபதங்கொடுத்த பெரியவனே, பிரமர்களின் மயானத்திருநீற்றைத் தரித்த வெற்றிப்பாட்டையுடைய மிக்க அழகையுடையவனே, அருச்சுனனிமித்தமாக வேதங்களுயாகிப் புடைசூழப் பாலைநிலத்தில் நடந்தவேடவடிவனே, கடலில் எழுந்தநஞ்சினையுண்ட கண்டத்தை யுடையவனே; பாவிகளிதயத்திற் பிரகாசியாம லொளித்த கள்ளத்தை யுடையவனே, திருமேனியிற் பாம்பாபரணத்தை யுடையவனே, புலித்தோலையுடையாக வுடையவனே. எ-று.

## குமரன்றுதி.

* வஞ்சித்துறை.

முருக னேயெனக்-கருமு னைசறும்
பருகு பாலினும்-பெருகு மின்பமே.

எ-து. வெளி. (௱௬)

## அகத்தியர் துதி.

பொதிய மாமலைக்-கதிப னேயெனக்
கதியு மாமுடற்-பொதியு மாயுமே.

எ-து. வெளி. (௱௭)

பதினொன்றாவது,

## பரிகாரவியல்

முற்றிற்று.

---

* வஞ்சித்துறை என்பது, "குறளடி நான்மையிற் கோவைபூண்டுய், வருவனவஞ்சித் தாழிசை தனிவரிற், றுறையெனமொழிப துணிந்திசி னோரோ" என்புழிதனிவரிற் றுறையெனமொழிப என்பதனுல் கொள்க.

உ

சிவமயம்.

பன்னிரண்டாவது,

# கோபுரவியல்.

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனிற் பஞ்சகௌவியம் பாவத்தைக் கெடுத்துப் புண்ணியத்தைத் தருமென முற்கூறினார் அக்கௌவியத்தைத் தரு நந்தை முதலிய பசுக்கணிற்கு மிடத்தின் றன்மை முதலியவற்றைக் கூறுவதாற் கோபுரவியலென்னும் பெயர்த்து.

இத்தலைச் செய்யுளென்னுதலிற்றோவெனிற் கந்தனை வினாத லுணர்த்திற்று.

கலிவிருத்தம்.

ஆக்குவது மழிப்பதுவு மறத்தினையு மறத்தினையு
மாக்கடரு மைந்தெனவே யறைந்தனமுன் னறுமுகவ
வாக்களவை நிலவுமெலை யருள்விரிய வெனக்கறிய
வாக்கமுற வினைத்துயிர்க்கு மவற்றுறு மல்லறவே.

எ-து. சண்முகக்கடவுளே தன்மத்தை யுண்டாக்குவதும், பாவத்தைப் போக்குவதும் பசுக்களிடத் துண்டாகின்ற பஞ்ச கௌவியமே யென்று பரிகாரவியலில் முன்பு கூறினை, அப்பசுக்கணிற்கு மெல்லையை எனக்கு விளங்க வருள்செய்யவேண்டும். எல்லா வான்மாக்களும் இப்பசுக்களின் சொரூபமுள்ளபடி அறிந்து அதனைப்பூசித்து அதனிடத்துண்டான கௌவியத்தைப் பரமேசுரனுக் கபிடேகம்பண்ணி யதனால் அவரவர் செய்தபாவங்களைப் போக்கும் பொருட்டு. எ-று. (க)

வினாதற்கு உத்தரமுணர்த்துகின்றார்.

என்றிசைத்த முனிவரனுக் கெழிலுடைய குமரதான்
நன்றறைவ மெனநவின்று நாதனடித் தேசுடனே
யொன்றிவிழித் துலகனைத்து முணாத்தவற்றுட் சிவபுரத்து
ணின்றிழிந்து நிலத்துறையு மெனுங்கதையு நிகழ்திடுவாம்.

எ-து. என்று விண்ணப்பஞ்செய்த சிறந்த அகத்தியனுக்கு அப்படியே உனக்கு நன்றாய்ச் சொல்வாமென்று பிள்ளையார் திருவுளஞ் செய்து பரமமான நிட்டைசெய்து விழித்துப் பிருதிவியண்டத்திலுண்டான அளவு கீழ்ப்பிரமாணங்களைச் சொல்லி அவ்வண்டத்தி லிருக்கிற சிவலோகத்திற் பரமேசன் சந்நிதி முன்னிருக்கு வீரஇடபத்தின் இனமான நந்தை

முதவிய வைந்து கோமாதாக்களும்। பூமியிலிழிந்துவந்து நிற்குஞ் சொருப
தையு முனக்குஞ்சொல்வாம். எ-று

குமரதரன்-வடமொழி. (௨)

அண்டப்பகுதியை யறியப்புகுந்தால் அணுமுதலிய பிரமாண
மறியாவிடத் தறியப்படாவாதலால் அவ்வணுமுதலிய
வற்றை மூன்றுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

இன்னுமழையுங் கதிரணுவெட் டெட்டிணங்கிற் கசாக்கிரகம்
சொன்னவித மிருநான்கு மிலீகையெனத் துணிந்திடுக
இன்னவிலீ கையினைய விருநான்கே யூகையென
வுன்னிடுக யூகையினெட் டியவையென வுன்னுகவே.

எ-து. வீட்டிற் சாளரவாசலில் சூரியகிரணத்தா லுண்டாகிய துகள்-அணு. அது பதினாறுகொண்டது சிறுபிள்ளைகள் மயிர்நுனியாகிய கசாக்கிரகம். அது எட்டுக்கொண்டது - இலீகை. அது எட்டுக்கொண்டது-யூகை. அது எட்டுகொண்டது-யவை. எ-று. இலீகை-ஈர். யூகை-பேன். யவை-நெல். அணு-எட்டுக்கொண்டது. திரிசரேணுவென்க. (௩)

இன்னடவை யிருநான்கு மங்குல்மென் றெண்ணிடுக
சொன்னவித மறுநான்கு முழமெனவே துணிந்திடுக
பன்னுமுழ மொருநான்குந் தனுவெனவே பார்த்திடுக
மன்னுதனு விரண்டினையோர் தண்டெனவே மதிக்கவரோ.

எ-து. இந்நெல் குறுக்காக-எட்டுக்கொண்டது உத்தமமான மானாங்குலம், அது-இருபத்துநான்குகொண்டது முழம். அது-நான்குகொண்டது-வில். அது-இரண்டுகொண்டது-தண்டம். எ-று.

எழு நெற்கொண்டது மத்திமாங்குலம். ஆறு நெற்கொண்டது அதமாங்குலம். இதுவல்லாமல் நெல்லினீளத்தான் மூவித முழமென்க. முழமெனினும் அத்தமெனினு மொக்கும். அரோ-அசை. (௪)

தெண்டமிரண் டாயிரத்தைக் குரோசமெனத் தெளிந்திடுக
கொண்டவிரு குரோசத்தைக் கெவியூதி யெனக்கொள்க
மண்டியநாற் குரோசத்தை யோசனையா மதிக்கமணி
னண்டமொன்றிற் சதகோடி யோசனைவித் தாரமுமே.

எ-து. தண்டம் இரண்டாயிரங்கொண்டது-குரோசம். அது--இரண்டுகொண்டது. கெவியூதி. அக்குரோசம்-நான்குகொண்டது-யோசனை. அந்தயோசனை நூறுகோடிகொண்டது. பிருதிவி தத்துவத்திலுண்டாகிய ஓர் அண்டத்தளவின் விரிவு. எ-று.

வித்தாரமுமென்ற வும்மையா லுயரமு நூறுகோடி யென்க. குரோசம்-கூப்பிடுதூரம். கெவியூதி-அரைக்காவதம்.

பூமிமுத ஞதமீருகிய வண்டங்கள் போகப்போக அளவேற்ற
மென்பதை மூன்று செய்யுளா லுணர்த்துகின்றூர்

மண்டனக்கா யிரகோடி யண்டமுள வாரிக்கு
மெண்டொகையிற் பேதமிலை விரிவுயர்ச்சி யேறியுறு
மண்டனிலுந் தசகுணிதம் வாரிக்கு வாரியினு
மொண்டமுற்கு மூணாத்தமுறை பிரகிருதி முடிவுமுறும்.

எ-து. பிருதிவி தத்துவத்துக்கு ஆயிரகோடி யண்டமுண்டு, அப்பிருதிவிதத்துவத்தைப் பார்க்கிலும் அப்பு தத்துவம் பதின்மடங்குவிரிவு முயர்ச்சியு மேற்றமுண்டு, அவ்வப்பு தத்துவத்தை பார்க்கிலும் தேயு முதல் பிரகிருதி யீருகிய அண்டங்கள் பதின்மடங்கு விரிவுமுயர்ச்சியு மேறியுறும்.

குணிதசத மிராகத்திற் கூடுமுனே யதுதனினுங்
குணிதசதம் வித்தைக்குக் கூடுமுனே யராகத்துங்
குணிதசத நியதிக்குக் கூடுமுனே வித்தையினுங்
குணிதசதங் காலத்து நியதியிதுங் கூடிடுமே.

எ-து. முற்கூறிய பிரகிருதியைப்பார்க்கிலும் இராகம் நூறுமடங் குயரமும் விரிவுமேற்றமுண்டு. அவ்வராகத்தைப்பார்க்கிலும் வித்தியாதத்துவ நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியு மேற்றமு முண்டு. அவ்வித்தையைப் பார்க்கிலும் நியதி தத்துவ நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியு மேற்றமு முண்டு. அந்நியதி தத்துவத்தைப்பார்க்கிலும் காலதத்துவ நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியும் எற்றமு முண்டு. எ-று.

குணிதநியு தாயுகமே கலைக்குமுனிற் கூடியிடுங்
குணிதமொரு கோடியென மாயைக்குங் கூடியிடுங்
குணிதமுறுஞ் சுத்தவித்தை கோடியுட னேரயுதங்
குணிதவித மிம்முறையி னுதாந்தங் கூடிடுமே.

எ-து. முற்கூறிய காலத்தைப் பார்க்கிலும் கலாதத்துவ நூற்றொருபதினுயிரம் விரிவுமுயர்ச்சியுங் கூடும், கலையைப் பற்ற மாயை கோடி மடங்கு கூடும், மாயையைப் பார்க்கிலும் சுத்த வித்தை கோடியே பதினுயிரமடங்கு கூடும், சுத்தவித்தையைப் பார்க்கிலும் இலக்ஷ மதிகம் ஈசுரம், ஈசுரத்தைப் பார்க்கிலும் சாதாக்கியம் இலக்ஷ மதிகம் அதனைப் பற்ற விந்து லக்ஷ மதிகம் இப்படியே யொன்றுக்கொன்று போகப்போக, மேலசி தத்துவ மிப்படி யளவுபட்டதல்ல. எ-று.

மேற்பட்டது வியாபகம் கீழ்ப்பட்டது வியாப்பியமெனக் கொள்க.

பிருதிவி யண்டத்தின்வகை யுணர்த்துகின்றூர்.

மண்டனக்கா யிரகோடி யண்டமென மதித்தவற்றோ
ரண்டமுறு மளவினையு மீதனுலக மனைத்தினையுங்
கண்டிடுக முனிவரனே கழறிடுவன் கற்பார்க்கும்
பண்டைவினைப் பாவமறப் பரலோக பதமுறவே.

எ-து. முனிவனே பிருதிவியி லொருதட்டில் தெங்கங்காய் விளாங் கனி பரப்பினாற்போல ஆயிரகோடி யண்டமுண்டென்று புத்தி பண்ணி அவற்று ளோரண்டத்துக் குண்டான உயரவகலங்களின் பிரமாணங்களையு மதிலுண்டாயிருக்கிற புவனங்களையும் யாஞ்சொல்வாமறிக. இதனாற் பயன் யாதெனி லிவ்வண்ட வகைகளைச் சொல்லு மாகமத்தை யதிகரித்தவர்க் குப் பூருவத்தி லியற்ற கன்மாதிகள் க்ஷயம் பிறந்து சிவசாயுச்சியத்தை யடையும் பொருட்டு. எ-று. (௧)

மேலதனைத் தொகுத் திரண்டுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

வேறு.

தரைக்குக் கீழ்க்கோடி தானூறு மைம்பது
தரைக்கு மேற்கோடி தானூறு மைம்பது
தரைக்குண் மேருத் தடவரைத் திக்கெலா
முரைத்த வைம்ப தூறுங்கடா கத்தொடும்.

எ-து. கீழண்டவோடு தொடங்கிப் பூலோகம்வரையிலு மைம்பதுகோடியோசனையும், பூலோகத்துக்குமேலண்டகடாகவோடுவரை யைம்பதுகோடி யோசனையும், பூலோகத்தின் மத்தியி லிருக்கு மகாமேருவி னடுவினின்றுங் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு இந்நான்கு திசைகளின் அண்டவோட்டின்கனமீறாக வைம்பதைம்பதுகோடி யோசனைதூரமும் பொருந்தும். எ-று.

பொன்மயத்தக டாகப் புறத்திசை
தன்னிற் சாரும் புவனஞ் சதமவை
தன்னி னூற்றுவர் தங்குவ ரீசன்மே
லுன்னி லாறு புரமிரண் டோர்கவே.

எ-து. பொற்படிவமாய்ப் பதினாயிரஞ் சூரியப் பிரகாசமாய்க் * குக்குடாண்டம் போன்றிருக்கிற வண்டகடாகப் புறம்பே யிந்திரதிக்கு முதலிய பத்துத் திசையினு மிருக்கிற நூறுபுவனத்திலும் உருத்திரர் நூற்றுவரிருப்பர். அவர்கள் புவனத்துக்குமேற் காலாக்கினி ருத்திரர் முதலானோர் புவனமாறு. அவற்றிற்கு மேற்புர மிரண்டுண்டு. அவையுணர்வாயாக. எ-று.

அவையாவையெனின் இந்திரதிக்கில் கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, அவ்வியன், சாத்தா, பினாகி, திரிசோதியன் என்ற வுருத்திரர்கள் ௰. அக்கினி திக்கில் உருத்திரன், உதாசனன், பிங்கலன், காதகன், அயன், சுவலன், தகனன், வெப்புரு, பிரமாந்தகன், க்ஷயாந்தகன் என்ற வுருத்திரர்கள் ௰. எமதிக்கில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கத்திரு, காலன், தன்மன், சங்யோத்தா, வியோக்கிருதன் என்ற வுருத்திரர்கள் ௰. நிருதிதிக்கில் நிருதி, மாரணன், அரந்தா, குரூரதிருட்டி, பயாந்தகன், ஊர்த்துவகாயன், விரூபாக்ஷன், தூமிரு, லோகி

*குக்குடாண்டம் -கோழிமுட்டை.

தன், தெங்கிருட்டிருணன் என்ற வுருத்திரர்கள் ௰. வருண திக்கில் பலன், அதிபலன், பாசத்தன், மகாவெலன், சுவேதா, செயபத்திரன், திர்க்கவாகு, செலாந்தகன், வடவாமுகன், தீமான் என்ற வுருத்திரர்கள் ௰. வாயுதிக்கில் சீக்கிரன், லகு, வாயுவேகன், தீக்ஷணன், சூக்குமன், க்ஷயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபத்தி, மேகவாகனன், என்ற வுருத்திரர்கள் ௰. குபேரதிக்கில் நிதீசன், ரூபவான், தன்னியன், சௌமியன், சௌமியதேகன், பிரமத்தனன், சுப்பிரகடன், பிரகாசன், இலக்குமிவரன், சோமேசன் என்ற வுருத்திரர்கள் ௰. ஈசான திக்கில் வியாத்தியாதீபன், ஞானபுகன், சருவன், வேதபாரகன், மாத்திருவிருத்தன், பிங்கலாக்ஷன், பெலீப்பிரியன், சருசருவவித்தியாதிபன், தாதா என்ற வுருத்திரர்கள் ௰. அண்டகடாக வோட்டுக்குக் கீழே விட்டுணு திக்கில் அனந்தன், பாலகன், வீரன், பாதாளாதிபதி, விபு, இடபத்துவசன், உக்கிரன், சுப்பிரன், உலோகிதன், சருவன் என்ற வுருத்திரர்கள் ௰. அண்டகடாகத்தின் மேலே பிரமதிக்கில் சம்பு, விபு, கணத்தியக்ஷன், திரியக்ஷன், திரீதேசகவாதகன், சன்வாகன், விவாகன், நபன், லீபசு, விலக்ஷணன் என்ற வுருத்திரர்கள் ௰. ஆகிய விந்த நூற்றுவரும் இந்திராதியரான வுலோக பாலர் பலத்தையு மடக்கி யவர்களவர்களாற் பூசிக்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்கள் புவனம் ௱. காலாக்கினி, கூர்மாண்டர், ஆடகேசுரர், பிரமன், விட்டுணு, உருத்திரன், இவர்கள் புவனம் ௬. அண்டகடாகத்துக்கு மேலே சூக்குமப் பிருதிவியில் பத்திரகாளி, வீரபத்திரர் இவர்கள் புவனம் ௨. ஆகப் பிருதிவி தத்துவத்திற் புவனம் நூற்றெட்டென்க.

(௰க)

கீழ் அண்டகடாகத்தினளவுங் காலாக்கினி யுருத்திரர்
மனைமுதலிய தன்மையு மூன்றுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

வேறு.

அண்டகடா கக்கனமுன் டொருகோடி யதனடியுட்
கண்டிடுக காலாங்கி யுருத்திரர்க்குக் கனகமனை
யுண்டதற்குன் னதங்கோடி யோசனையி னாங்கோடி
மண்டியமெய்த் தழற்கொழுந்தை தங் கோடியுறும் வளர்புகையும்.

எ-து. கீழண்டகடாகத்தினுடைய கனமொருகோடி யோசனை, அவ்வண்ட கடாகத்தினுள் காலாக்கினி யுருத்திரர்க்கு கனக மயமான வாலயங் கோடியோசனை, அவருடைய திருமேனியி லக்கினிச்சுவாலை பத்துக் கோடி யோசனை, அச் சுவாலையிற் புகையைந்துகோடி யோசனையுண்டு.

யோசனையா யிரமனையு ளரியணையி னுயரந்தான்
யோசனையீ ராயிரமென் றதன்விரிவை யுணர்ந்திடுக
தேசுடைய காலாங்கி யுருத்திரர் தந் திருமேனி
யோசனையு மொண்டழலா லயுதமென வுன்னுகவே.

எ-து. காலாக்கினி ருத்திரருடைய வாலயத்தினிருக்குஞ் சிங்காதனத்தினுயரம் ஆயிரம்யோசனை, அச் சிங்காதனத்தின் வித்தாரம் இரண்டா

193



யிர யோசனையென்க. பிரகாசத்தையுடைய அக் காலாக்கினி ருத்திர நாயனார் திருமேனியின் உயரம் பதினாயிரம்யோசனை அக்கினி சொரூபமாயிருக்குமென் றறிவாயாக. எ-து. (௰௩)

தரித்துடையர் வலக்கரத்திற் றயங்கொளிவாட் சரத்தினையும்
பரித்துடைய ரிடக்கரத்திற் பலகையினைத் தனுவினையு
முருத்திரர்க ளொருபதின்ம ருறைவரவ ருழையவர்போ
லுருத்திரர்க ளொவ்வொருவர்க் கொருகோடி பரிச்சிதமே.

எ - து. அக் காலாக்கினி ருத்திரதேவ நாயனார் வலக்கையின்மிகவும் பிரகாசத்தையுடைய வாளும் அம்பும், இடக்கையில் கட்கமும் வில்லுந் தரித்திருப்பர். இக் காலாக்கினி ருத்திரதேவ நாயனாரைச் சூழ்ந்தவரைப்போ லுருத்திரர்கள் பதின்மரிருப்பர். அவரைச் சேவித்திருக்கிற பதின்மரையு மொவ்வொருவரை ஒவ்வொருகோடி யுருத்திரர்கள் பரிவாரமாகச் சூழச் சேவித்திருப்பர்கள். எ-று.

ஆகக் கடாகங்கூடக் காலாக்கினி ருத்திரர் புவனம் பதினேழுகோடியுண்டென்க. (௰௪)

அப்புவனத்தின்மேல் நரகங்களினளவை மூன்று
செய்யுளா லுணர்த்துகின்றார்.

இனையபுரி மிசைநிரய மெழுநான்கு கோடியுறு
நினையினவை யெழுநான்கு நிலைமடமே யெனனிலவுந்
துனியுறுவ ரவைதம்மிற் றுரிசறவற் றினுக்களவு
முனிவிருநூ றாயிரமு முப்பஃது கோடியுமே.

எ-து. இக்காலாக்கினி ருத்திர புவனத்துக்கு மேலே யிருபத்தெட்டுக்கோடி நரகமிருக்கும், இந்நரக புவனத்தை விசாரித்தறியுமிடத்து ஒன்றின்மே லொன்றாக விருபத்தெட்டுத் தளமாகக் கட்டின மனைபோன்றிருக்கும், அதில் அதிபாதக முதலிய பாவபேதங்களைப் புரிந்தவர்கள் கிடந்து வேதனை யுறுவார்கள், அந்நரகங்களினளவு விசாரிக்குமிடத்து முப்பதுகோடியே இரண்டு நூறாயிரம்யோசனை யுயரமாம். எ-று. (௰௫)

இடையிடையிற் படிகளைக்கும் படுகுழிக்கு மிடைவெளிக்கும்
படுமுயர மவற்றடங்கும் படிகளைகட் களவதிக
மிடையிடையிற் குழிபாழ மிலக்கமிடை வெளிதானும்
புடைவிரிவு மண்டகடா கத்துடனே பொருந்திடுமே.

எ-து. முற்கூறிய முப்பதுகோடியே இரண்டு நூறாயிரம் யோசனை யுயரத்துள் நடுவேநடுவேயிருக்கிற விருப்புமயத்தா லுண்டாகிய புடங்களும் நரகக் குழிகளி னாழங்களும், அவற்றின் மேலேயிருக்கிற இடைவெளிகளின் உயரமுமடங்கும், அவற்றி னிடையிலிருக்கிற புடங்களுக் களவதிகமாயிருக்கும், இடையிடையில் நரகக்குழிகளினாழம் நூறாயிரம் யோசனை

யாம். அந்தந்த நரகக்குழிகளுக்கு மேலேயிருக்கிற ஒவ்வொரு இடைவெளி யுயரமும் நூறுயிரம் யோசனையாம், அந்தந்த நரகங்களின்புடை விரிவுகளை விசாரிக்குமிடத்து நாலுதிக்கு மண்டகடாகத்துடன் பொருந்தும். எ-று.

புடமிருப்பு மயமிருபத் தொன்பதுள புடமொவ்வொன்
றடைவுமொரு கோடியு நூற் றைம்பதினா யிரந்தானு
மிடமுறுமெண் ணாயிரமு மறுநூறு மிருபஃது
மடியகன்ற புடத்துயர்ச்சி யதிகமிரு பஃதாமே.

எ-து. முற்கூறிய புடங்களிருபத்தொன்ப திருப்புமயமாயிருக்கும், ஒவ்வொரு புடத்தினுயரங் கோடியே நூற்றைம்பத் தெண்ணாயிரத் தறுநூற்றிருபது யோசனையென்க. அப்புடங்களி னுயரத்தைப் பார்க்கிலு மெல்லாவற்றிற்கு மடியிற் பொருந்திய புடத்துயர மிருபதினாயிரம் யோசனை அதிகமுளதென்க. எ-று. (௪௭)

அந்நரகத்தின் மேலிடைவெளியுங் கூர்மாண்டர் புவனமும்,
அவர்தன்மையு மூன்றசெய்யுளா லுணர்த்துகின்றார்.

நிரையமிசை நிராலம்பத் துச்சிமிசை யோரிலக்கம்
முறைசெய்த நிராலம்பத் துச்சிமிசை யோரிலக்கம்
வரையவொரு கோடியுறு மண்ணவற்றுட் கீழ்பாகங்
கரியவிரும் பிடைப்பாக மேல்பாகங் கனகமயம்.

எ-து. இவ்வாறகூறிய வெல்லா நரகத்துக்குமேல் வெளிமும்பதினாயிரமுயரம். அவ் வெளிக்குமேல் நூறுயிரங் குறையக் கோடி யோசனையுயரங் கூர்மாண்ட புவனம், கீழ்பாகம் மண்ணாகியு நடுப்பாக மிரும்பாகியு மேற்பாகங் கனகமாகியும் பொருந்தும். எ-று. (௪௮)

மேலயபாற் கனகபுரி யிற்றிருப்பர் கூர்மாண்டர்
காலவழ லிரவியுருக் காளமுக மழுவுங்கை
கோலமுறு வட்டவிழி கொன்றுடைய ரவர்தம்மைப்
போலுமுருத் திரர்பலரும் புடையடைவர் போற்றிசைத்தே.

எ-து. மேலாயிருக்கிற கனகபூமியிலே நரகத்துக் கதிபராகிய கூர்மாண்ட தேவநாயனார் பிரளய காலாக்கினியும் பிரளயகாலாதித்தியனும்போன்ற திருவுருவும், கறுப்பாகிய முகமுமுடையராய் எழுந்தருளியிருப்பர், அவரைச் சூழ்ந்தவரைப்போன் றிருக்கிற வுருத்திரர் அநேக ரவரைத்தோத்திரஞ் செய்து சேவித்திருப்பார்கள். எ-று.

மழுவுமென்ற உம்மையால் வலக்கைகளில் மழுவன்றி யம்பையுமிடக்கைகளில் வில்லையும் பலகையையும் பயங்கரமாய்த் தோன்றிய வீரப்பல்லையு முடையரென்க. (௪௯)

பிணைவிழியார் துணைமுலையார் பிடிநடையார் துடியிடையார்
பணையனதோ ளிணையினையார் பலர்பாவப் பதமொழியாற்

றிணைமுறுமா கணமுறையிற் செறியவமர் கூர்மாண்டர்
எணமுடையார் கணமடையா ரிடர்கிரயத் திறையவரே.

எ-து. பிணைவிழி முதலிய வுறுப்புகளையுடையராகிய கன்னியர்கள் பலர் பதத்தையுடைய வுரைகளாற் ரேத்திரஞ்செய்யத் திண்மூற்ற பெரிய கணங்கள் தாந்தாம் நிற்குமுறைமையிலே செறிந்துநின்று சேவிக்க, அக்கூர்மாண்ட தேவர் எண்ணமுடையராகிக் கணப்பொழுதுந் துயரத்தையடையாராகி யந்நரகங்களுக்கு அதிபதியாயிருப்பர். எ-று. (௨௰)

அக்கூர்மாண்ட புவனத்துக்கு மேலுள்ள விடைவெளியும்,
பாதாளங்களின் றன்மையு மாறசெய்யுளா லுணர்த்துகின்றார்.

உரைத்தபுரி மிசைவெளிதா னொன்பதினா றாயிரமாந்
தெரித்ததன்மே லாபாத பாதாள திர்க்கத்தைத்
தரித்திடுக பத்திலக்க மெனவடிவந் தமனியமே
பரித்தவிரி வயுதமிடை வெளிதானு மதன் படித்தே.

எ-து. இவ்வாறு சொல்லிய கூர்மாண்ட புவனத்துக்கு மேலிடைவெளியொன்பது னாறாயிரம் யோசனை யுயரம், இவ் விடைவெளியின்மேற் பொன்மயமாயிருக்கிற ஆபாத பாதாளத்தி னுன்னதத்தைப் பத்துநூறாயிரம்யோசனை யெனவறிக. இதற்குமேலிடை வெளியின் பரப்புப்பதினாயிரம் யோசனை. அதனுயரமும் பதினாயிரம்யோசனை. எ-று. (௨௧)

பொருந்துமது முப்பாகம் பூருவத்திற் றயித்தியரே
யிருந்திடுவர் நாகேச ரிடைப்பாலிற் பச்சிமத்தில்
லுரந்திகழும் வாளரக்கர் மற்றையபா தலந்தோறும்
பரந்திடுமிப் படிபாகம் வெளியுயரம் பரப்பெல்லாம்.

எ-து. அப் பாதாளம் மூன்று கண்டமாயிருக்கும் அதில் கீழ்ப்பாகத்திற், சங்குசுருதியென்னும் பெயரையுடையய அசுரனிருப்பன், நடுப்பாகத்திற். குளிகனென்னும் பெயரையுடைய நாகராசனிருப்பன், மேற்பாகத்தில் சிறந்த பிரகாசத்தையுடைய விகடனென்னு மிராக்கதனிருப்பன், இப்படியே மற்றைப் பாதாளங்கடோறும் மூன்று பாகமுமதிலிருக்கிறவதிபதிகளு மப்பாதாளங்களின் விரிவுயரமும். எ-று.

இனி பத்மதல பாதாளமுதலிய ஆறு பாதாளங்கடோறு மொவ்வொன்றில் மூன்று கண்டத்திலிருப்பவர்கள் யாவரெனில், பிரகலாதரன், சுபாலகன், கற்கந்துகன், பரரைக்கன், பிருதற்கர்ப்பன், பலி எனத்தயித்தியர்களறுவர், வாசுகி, கம்பலன், கார்க்கோடகன். சாளாங்கன், துர்த்தெரிதனன், தட்சகன், என நாகராசர்களறுவர். உலோகிதாக்ஷன், யமன், விசடனன், கராளன், நிருகாபின், பிங்கலன், என இராக்கதரறுவர். இவ் வதிபதிகள் பதினெண்மரும் அம்முறையே யிருப்பரென்க. இதுவல்லாமல் ஒரு கண்டத்துக்கு மும்மூன்று பெயராக மூன்று கண்டத்துக்கு மொன்பதின் மருண்டென்க, ஏனையவு மிவ்வாறு காண்க. (௨௨)

அதன்மீது பதுமவொளி பத்மதல மெனவறிக
அதன்மீதிந் திரநீல நிதலதல மெனவறிக
அதன்மேற்புச் சியராகச் சுதலதல மெனவறிக
அதன்மீது வெள்ளிமய மாதலமென் றறிகவரோ.

எ-து. அப்பாதாளத்துக்கு மேல் பத்மதலபாதாளம் பத்மாக்கிரம்போன்றிருக்கும். அதற்குமேல் நிதலதலமென்னும் பாதாளம் இந்திரநீல நிறம்போன்றிருக்கும். அதற்குமேல் சுதலதல மென்னும் பாதாள புட்பராகநிறம் போன்றிருக்கும். அதற்குமேல் மகர்தலபாதாளம் வெள்ளிமயமா யிருக்குமென்க. (௨௫)

அதன்மீது ரசாதலத்தை முத்தொளியென் றறிந்திடுக
அதன்மீது பாதாள நவமணிபோ லெனவறிக
அதன்முடிவுட் கன்னியர்க ளெண்ணூறா யிரவருள்
ரதன்மேலே பத்திலக்க நிராலம்ப மாயிடுமே.

எ-து. அதற்குமேல் ரசாதல பாதாளம் முத்தினது பிரகாசம்போன்றிருக்கும், அதற்குமேல் பாதாளம் நவரத்னப் பிரபைபோன்றிருக்கும், அப்பாதாளத்தின் முடிவிலெண்ணூறாயிர நாககன்னியர்க ளிருப்பார்கள், அப்பாதாளத்தின் மேலிருக்கு மிடைவெளி பத்திலக்க யோசனையாம். எ-று.

மயிலனையார் சாயலினான் மானனையார் விழியதனாற்
குயிலனையார் மொழியதனாற் கொடியனையா ரிடையதனாற்
சயிலனையார் முலையதனாற் றளவனையா ரிளநகையால்
வெயிலனையா ருடலொளியாற் பாதாள விலாசினியார்.

எ-து. வெளி. சயிலம் எ-து. ஈறுகெட்டு நின்றது, தளவு - முல்லையரும்பு. (௨௬)

சுரிகுழலா ரரிகுழலார் சுவைமொழியார் நவைமொழியார்
வரிவளையா ருருவளையார் மதர்விழியா ரிதர்விழியார்
உருவுடையார் குருவுடையா ரொளிநகையார் தெளிநகையார்
அருகிடையார் பருகிடையா ராடகர்தா ளலர்மதுவே.

எ-து. சுருண்ட குழலினை யுடையார் அரிந்த குழலோசைபோன்ற வினிமையான மொழிகளை யுடையார், குற்றங்களை யொருகாலுஞ் சொல்லாதவர்; வரியாகிய வளையினை யுடையார், உருவ மொருகாலும் வளையாதவர், மதர்த்த விழியினை யுடையார். இதர பதார்த்தத்தைப் பாராதார், அழகான வுருவத்தை யுடையார், மிகுந்த பாரத்துக் குடையாதவர், ஒளியாகிய நகையினை யுடையார், ஊழியத்தில் தெள்ளிதாகிய கையை யுடையார், சுருங்கிய விடையினை யுடையார், ஆடகேசுரர் பாதமலர்த் தேனைப் பருகுதற் கிடையாதவர், மேற்கூறிய நாககன்னியர்களாகிய பாதாள விலாசினிமார்.

ஆடகேசுர புவன முணர்த்துகின்றார்.

அதன்மேலே நவலக்க மாடகநா யகர்புரிதான்
புதுமைதிகழ் மனைபொன்னால் யோசனையா யிரம்புகலிற்
கதமுடைய தயித்தியர்கள் கட்டரவர் வெட்டரக்கர்
விதிமுறையிற் பதம்பணிய வீற்றிருப்பா ராடகரே.

எ-து. அப்பாதாளங்களுக்கு மேலே யாடகேசுரர் புவன மொன்பது நூறாயிரம் யோசனை, அதிலாடகேசுரர்க்குப் புதுமையே கொடுக்குஞ் சொன்னமயமாயிருக்கிற வீடு ஆயிரம் யோசனை யுயரமா யிருக்கும், அதில் கோபத்தையுடைய அசுரர்களாலும், விடத்தையுடைய நாகர்களாலும் வெட்டிமையையுடைய வரக்கர்களாலு மத்திமைதார மென்னுஞ் சுரபேதங்களாற் றோத்திரஞ் செய்து விதிப்படி நமஸ்காரம்பண்ண வீற்றிருப்ப ராடகேசுரர்.

அதன்மேற் பூமியினளவு முன் தொகுத்ததைப் பூமிவரை
முடித்து முணர்த்துகின்றார்.

அப்பரியின் மிசைத்தாக வவனிகன மொருகோடி
யொப்பரிய கடாககன மொருகோடி முதலாக
விப்புவனி யீறாக வேழேழொன் றெனுங்கோடி
தப்பறவே யோசனையின் றொகைமுறையிற் றரிக்கவரோ

எ-து. அவ்வாடகேசுரர் புவனத்துக்கு மேற் பூமியினுடைய கனங் கோடியோசனை, முற்கூறிய அண்டகடாகமுத லிப்பூமியீறாகத் தவறின்றித் தொகையினு லடைவி லைம்பதுகோடி. யோசனையாம். எ-று.

அவை.—அண்டகடாக வோட்டின் கனம் ஒருகோடி. அதற்குமேற் காலாக்கினி ருத்திரர் கனகமனை யொருகோடி, அவருடைய திருமேனிச் சுவாலை பத்துக்கோடி, அச்சுவாலையின் புகை யைந்துகோடி, ஆகப் பதினேழுகோடி, அதற்குமேல் நரக முப்பதுகோடியே யிரண்டு நூறாயிரம்; அதற்குமே லிடைவெளியாகிய நிராலம்ப முப்பதினாயிரம், அதற்குமேற் கூர்மாண்ட புவனந் தொண்ணூற்றொன்பது நூறாயிரம், அதற்குமேலிடைவெளி யொன்பதுநூறாயிரம், ஆக முப்பத்தொருகோடியே பத்துலக்ஷத்து முப்பதினாயிரம். அதற்குமேல் ஆபாத பாதாளம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமேற் பத்மவொளிபாதாளம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமே லிந்திரநீல நிதலதலம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமேற் புட்பராகசுதலதலம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமேல் வெள்ளிமயமகாதலம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமேல் முத்தினொளிபோன்ற ரசாதலம் பத்துலட்சம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம், அதற்குமேல் நவமணிபோன்ற பாதாளம் பத்துலட்சம், அதற்குமே லிடைவெளி பதினாயிரம், அதற்குமேல் நிராலம்பம் பத்துலட்சம், அதற்குமேல் ஆடகேசுரர்புரி யொன்பதுலட்சம், ஆக எண்பத்தொன்

பதுலட்சத் தெழுபதினுயிரம், அதற்குமேல் பூமியின் கனம் ஒருகோடி, ஆக அண்டகடாகமுத லிப் பூமிவரை யைப்பதுகோடி யென்க. (௨௮)

பாதாள வதிபதியும் பிலத்துவாரவளவு முணர்த்துகின்றார்.

பாதாளப் பிலவழிக்கும் பாதாள மேழினுக்கு
மாதார மதிபதியு மாடகநா யகர்தாமே
பாதாளப் பிலவகலம் யோசனையா யிரம்பகரிற்
பாதாள முதனிரய விறுதியினும் படர்ந்திடுமே.

எ-து. ஆடகேசுரநாயனார் பாதாளத்துக்கும் பிலத்துவாரத்துக்கு மாதாரமா யதிபதியுமா யெழுந்தருளி யிருப்பர், அப் பிலத்துவாரத் தின் வட்டமாகிய அகலத்தைச் சொல்லின் ஆயிரம் யோசனையாம், அப் பிலத் துவாரம் பாதாளமுதல் நிரய மீறுகவுஞ் செல்லும். எ-று.

பொன்மயமா யிருக்கிற பாதாளத்துக் கதிபதியாகையால் ஆடகேசுர னெனப் பெயர் கூறினர். (௨௯)

இனி யிப்பூமியினளவு மேருவின் றன்மையும் ஐந்து
செய்யுளா லுணர்த்துகின்றார்.

அறைந்தாஞ்சொன் முறையுறவே பிரமாண்டத் ததோபாகஞ்
சிறந்தபெரு வரையுடனுஞ் சேடித்த வுறுப்புடனு
மறைந்திடவா மறிந்திடுக வவனிதலத் தகலமுமெண்
ணிறைந்தசத கோடிநடு மேருவுற நிலவிடுமே.

எ-து. முனிவனே யிப்படி மேலே யிருக்கிற பூமி முடிவாகப் பிர மாண்டத்தின் கீழ்ப்பாகத்தினுடைய சொரூபத்தை யொழுங்குபடச் சொன் னேம், இனி யுனக்குச் சிறப்பை யுடைத்தாய் பூலோகத்தி னடுவே யிருக்கு மகாமேருவையு மட்டகுலபருவதங்களையு நவகண்ட முதலியவற்றையுஞ் சொல்வோ மறிக, அப் பூலோக மெவ்வள வகலமென்னி னூறுகோடியோச னையா யிருக்கும், மக்கட்கு நாபி நடுவானாற்போல விப் பூமிக்குநடுவே மகா மேருநிற்கும். எ-று.

நூறுகோடியிற் குறைவில்லாமையா லெண்ணிறைந்தவெனச் சிறப் பித்தார். (௩௰)

பாதலத்தின் மிசைத்தாதிப் படிகடலைப் புடையுடுத்த
பூதலத்தி னடுநிலவும் பொன்னசலம் யோசனைதான்
பாதலத்தின் பதினறு யிரமுறவே படிந் தழுந்தி
மீதலத்து மவைகுறைந்த நியுதமுற விளங்கிடுமே.

எ-து. பொன்மயமான அம்மகாமேருவானது முற்கூறிய பாதாளத்து க்கு மேலாகி யேழுசமுத்திரங்களாலுஞ் சூழப்பட்ட பூமியினடுவே பொருந் திப் பூமிக்குக் கீழ்ப் பதினாறுயிரம் யோசனையளவு புதைந்து பூமிக்குமேல் எண்பத்திநாலாயிரம் யோசனை யுயரம் விளங்கும். எ-று.

கீழ்முதல் மேல்வரை நூறுயிரம் யோசனை யுயரமென்க. (௩௧)

அடியகலம் பதினறு யிரமாகு மவற்றிரட்டி
முடியகலம் பதுமமலர்ப் பொகுட்டினைப்போன் முற்றியுறும்
புடைபரந்த மேகலையு மிடைமூன்று பொருந்தியிடும்
முடிவிடத்து மேகலையிற் பலசிகர முளைத்துளவே.

எ-து. அம்மகாமேருவி னடிவிரிவு பதினாறாயிரம் யோசனை, அதனுனி விரிவு முப்பத்திராயிரம் யோசனை, அது எவ்வாறெனின் தாமரைக் காய்போ லடிசிறுத்து நுனிவிரிந்து முடிவுபெறும், அதன் புடையி லொன்றுக்கொன்று விரிவு அதிகமாய் மூன்றுமேகலைபொருந்தும், அவற்றுள் நுனி மேகலையில் பலகொடுமுடி முளைத்துண்டாயின. எ-று.

அவை வருமாறு - மேருவினடியில் அந்தராளம் இருபத் தையாயிரம் யோசனையுயரம். அதற்குமேல் முதன்மேகலையி னுயரமூவாயிரம் யோசனை. அதன் புடைவிரிவு பதினாயிரம் யோசனை. அதன்மேலிரண்டாம் அந்தராள மிருபத்தையாயிரம் யோசனையுயரம். அதன்மே லிரண்டாமேகலை மூவாயிரம் யோசனையுயரம். அதன் புடைவிரிவு பதினாலாயிரம், அதற்குமேல் மூன்றும் அந்தராள மிருபத்தையாயிரம் யோசனையுயரம். அதற்குமேல் மூன்றுமேகலையுயரம் மூவாயிரம்யோசனை, அதன் புடைவிரிவு பதினெண்ணாயிரம் யோசனை, ஆகமேகலை மூன்றுக்கு மந்தராள மூன்றுக்கும் உயரமெண்பத்தினாலாயிரம் யோசனை யுயரமெனக்கொள்க. பல கொடுமுடிகளாவன-கிழக்கு முதல் அமராவதி முதலிய வெட்டுக் கொடுமுடிகளு மவ்வெட்டுக் கொடுமுடிகளி னிடையிடையில் தேவகன்னிகைகள் முதலானோர் வசிக்கக் காமவதி முதலிய கொடுமுடிக ளிருபத்திரண்டும் விளங்குமென்க. விரிக்கில் ஆயிரங் கொடுமுடியுண்டென்க. (௯௨)

இந்திரனை முதலாய வெண்டிசைப்பா லருமவற்றிற்
றந்தமக்குப் தக்கதிசைக் கொடுமுடியிற் றங்கிடுவ
ரந்தவரை யெட்டினுக்கு நடுவாக வணியுறவே
முந்திமுளைத் தெழுசிகர மூன்றுளவே மூவர்க்கும்.

எ-து. இந்திரன் முதலிய வெட்டுத் திக்குப்பாலருந் தத்தமக்கேற்ற திசைக் கொடுமுடிகளி லிருப்பார்கள், அக்கொடுமுடி யெட்டுக்கு நடுவிலழகுபெறத் திருவிளையாட்டு நிமித்தமாகப் பிரமவிட்டுணு ருத்திரர்கள் மூவர்க்கு மாதியிற்றோன்றிய மூன்று கொடுமுடிகளுண்டு. எ-று.

இதன்வகை கிழக்கு முதலாக அமராவதியிலிந்திரனுந், தேசோவதியில்-அக்கினியும், சம்யமனியில் எமனும், கிருட்டிணாங்காரவதியில் - நிருதியும், சுத்தவதியில்—வருணனும், கெந்தவதியில்-வாயுவும், மகோதயபுரியில் சோமனும், எசோவதியில்-ஈசானனு மிருப்பரென்க. எண்டிசைப்பாலருமென்றவும்மையால் அமராவதிக்குத் தெற்குக் காமவதியில் தேவகன்னிகைகளும், அதற்குத் தெற்கு சொன்னபுரியில் சித்தவதிகளும், அதற்குத் தெற்கு அம்சவதியில் சூரியர் பன்னிருவரும், அதற்குமேற்கு-சுமாவதியில் சாத்

தியசாதிகளும், முற்கூறிய வக்கினிதிக்கின் மேற்கு இரோவதிபுரியில் விசுவகன்னியர்களு முற்கூறிய சம்யமனிக்கு மேற்கு மாதிருநந்தாபுரியில் சத்தமாதரும், அதற்கு மேற்கு உரோகிதைபுரியில் உருத்திரரும், அதற்மேற்கு குணவதிபுரியில் எமனுக்குப் பரிவாரமான சூலத்தைத் தரித்த சத்திகளும், அதற்குமேற்கு பிங்கலபுரியில் மகாதேவன்-சிவோத்தமன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், பீமன், தேவதேவன், பவோற்பவன், கபாலீசன் ஆகிய ஏகாதசவுருத்திரர்களும் முற்கூறிய நிருதிக்கு வடக்குக்கிருட்டிணவதியில் பசாசுகளும் அதற்கு வடக்குசைலையென்னும் புரியில் மித்திரதேவர்களும், அதற்கு, வடக்கு சித்ரவதியில் வித்தியாதரர்களும், அதற்கு வடக்கு சித்தபுரியில்கின்னரரும், வாயுவுக்குக் கிழக்கு காந்தாரிபுரியில் சித்திர ரதனென்னுங் கந்தருவனும், அதற்குக் கிழக்கு சித்திரபுரியில்தும்புரு நாரதரும், அதற்குக் கிழக்கு பிரமதபுரியில் குய்யகசாதிகளும்; சோமனுக்குக் கிழக்கு சித்திரவதி புரியில் குபேரனும், அதற்குக் கிழக்கு குசைபுரியில் தன்மதேவர்களும், அதற்குக்கிழக்கு சித்திபுவா புரியில்-மாயனும், ஈசானனுக்குத் தெற்கு பதுமபுரியில் பிரமனும், அதற்குத் தெற்குகாமசுகாவதியில் அசுவனிதேவர்களும், அதற்குத் தெற்கு மகாமேக புரியில் விநாயகரு மிருப்பாரென்க. இப்புரிகளிருபத்திரண்டும், முற்கூறிய அமராவதி முதலிய புரிகள் எட்டும் கூடி முப்பதாயின. கீழ்மேகலை யிரண்டினுள்ளுஞ் சித்திர கந்தருவ தேவர்களிருப்பரெனக்கொள்க. (௯௯)

தடவரையி னடுவுச்சி தனின்முளைத்த சிகரத்தின்
வடிவுடைய மனோவதிதான் மலரயன்வாழ் புரியதற்குக்
குடதிசையிற் கொடுமுடியில் வைகுந்தங் கோவிந்தன்
இடம்வடபாற் குணதிசையி லெசோவதிசங் கரர்நடமே.

எ-து. அம்மகாமேருவி னடுவே பதினாயிரம் யோசனை விரிவையு முயரத்தையு முடைத்தாய் எல்லா இரத்னங்களாலும் விளங்குவதாயெல்லாப் போகங்களுடனுங் கூடிய மனோவதி புரிக்கு மேற்குப் பதினாயிரம் யோசனை விரிவைய முயரத்தையு முடைத்தாய் எல்லா இரத்னங்களாலும் விளங்குவதாயெல்லாப் போகங்களுடனும் வைகுந்தமென்னுங் கொடுமுடியில் மகாவிட்டுணு விருப்பர். அம்மனோவதிக் கீசான திசையி லிருபதினாயிரம் யோசனை விரிவையு முயரத்தைய முடைத்தாய் வெள்ளிமயமாய் எசோவதியென்னும் பெயர்பெற்றிருக்குங் கொடுமுடியில் ஸ்ரீகண்ட பரமேசனெழுந்தருளி யிருப்பன். எ-று.

எசோவதி யெனினுஞ் சோதிகிரி யெனினு மொக்கும். அச்சிகரத்தைச் சூழ நந்தி முதலிய அட்டகணங்களுஞ் சூழ்ந்திருப்பாரென்க. (௱)

மேருவைச் சுற்றிய திசை நான்கினு முள்ள மலை
முதலியவற்றை நான்கு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

இத்தகைய தடவரையி னடிவாரத் தெல்லைதனி
லத்திரிதான் பூருவத்தின் மந்தரமொன் றமுந்தியுறு

மத்திரிதா னுயர்கந்த மாதனந்தென் றிசையமரு
மத்திரிதான் பச்சிமத்தின் விபுலமுறு மழகுறவே.

எ-து. இவ்வாறு கூறிய மகாமேருவின் அடிவாரம் நான்கு திக்கிலும் அம்மகாமேருவுக்கு நிமித்தமாக விட்கம்பசயிலம் நாலுண்டு. அவையாவன கீழ்த்திசையி லேம்பதினாயிரம் யோசனை யுயரமான மந்தர பருவதஞ் சுவேத நிறமாய்ப் பூமிக்கு ளெண்ணாயிரம் யோசனையும் மேலே நாற்பத்தீராயிரம் யோசனை யுயரமு முடைத்தா யிருக்கும். அவ்வளவுடன் தென்றிசையிற் கனகமயமான கந்தமாதனகிரி நிற்கும், அவ்வளவுடன் பொருந்தி நீலநிறம் போன்று மேற்றிசையில் விபுலகிரி நிற்கும். எ-று. (௩௫)

உத்தரத்திற் பாருசுவ வத்திரிபொன் றுற்றமரூந்தும்
வைத்தவரை முறையுறவே மரமொருநான் கமருமவை
யுத்தமத்த கதம்பமுக னுயர்நாவ லொளிர்போதி
மொய்த்துறுபத் திரமொளிரு முதுமரமென் மொழிப்பொருளே.

எ-து. முற்கூறிய வளவுடன் வடதிசையில் மாதளைவித்து நிறம் போல பாருசுவகிரி நிற்கும், அக்கிரி நாலி லொவ்வொரு கிரியின் அடியகல மெண்ணாயிரம் யோசனையு மேலகலம் பதினாயிரம்யோசனையுயரமுமா யிருக்கும். அம்மலைபுச்சிகளில் நாலு தருக்கணிற்கும், அவையாவன கிழக்குமுத லுத்தமமாகிய வுயர்ச்சியையுடைய கடம்பு, நாவல், அரசு, நெருங்கிப் பிரகாசத்தை யுடைத்தாய்த் தளிர்த்த ஆலமரம். எ-று.

அவைகளினுயர மொவ்வொன்றுக்கு ஆயிரம் யோசனை. அவைகளின் சாகைக ளைஞ்ஞூறு யோசனை யுயரம். பூக்கள் குடம்போலவும், பழம் யானை போலவும் பழுத்து திருமென்க. (௩௬)

குணதிசையி லருணமெனுங் குளநிலவுந் தடவ்ரைக்கீழ்
யணமலியு மானதமுந் தென்றிசையின் வாய்த்துளது
தணமருவுஞ் சிதோதம் பச்சிமத்திற் றங்கியுறு
முணவினிய மாமடுவும் வடதிசையி னுற்றிடுமே.

எ-து. கிழக்கில் மந்தர மலையடிவாரத்தில் அருணமென்னுங் குளம் பொருந்துந். அதிற் கடப்பம்பழச் சாற்றினின்றும் - ஆறுகள் புறப்பட்டுக் கீழ்திசையிற் பாயும். தென்றிசையில் கந்தமாதன மலையடிவாரத்திற் கந்தமலிந்து விளங்கும் மானதசரமென்னுங் குளம்பொருந்தும். அதில் நாவற்பழச் சாறுவிழுந்து தெற்கே மேருவைச் சூழப்பாயும். மேற்றிசையில் விபுல மலையடிவாரத்திற் குளிர்ச்சிபொருந்துகின்ற சிதோதமென்னுங் குளம் பொருந்தும். அதில் அரசமரம் பொருந்திநின்று பால்முதலிய பஞ்சதாரையாகப் பொருந்தி மேற்றிசையிற் பாயும், வடதிசையிற் பாருசுவ மலையடிவாரத்திற் புசித்தற்கினிதாகிய மகாமடுவென்னுங்குளம் பொருந்தும். அதில்ஆலமரத்தின் சாகையினின்று முண்டாகிய பால், தயிர், நெய், தேன் முதலிய பொருந்தி வடதிசையிற் பாயும். எ-று. (௩௭)

சயித்திரக்காப் பூருவத்தி னடிவாரந் தனிற்றழைக்கு
விசித்திரநந் தனவனமுன் றென்றிசையின் விளங்கியிடும்
வசித்திடுநல் வைப்பிரச வனங்குடபான் மன்னியிடு
முதித்ததிரு தாக்கியமும் வடதிசையி லொடுங்கிடுமே.

எ-து. கிழக்கு மலையடிவாரத்திற் சயித்திரக்காவென்னும் பெயரையுடைய நந்தனவனம் விளங்கும், தெற்கு மலையடிவாரத்தில் விசித்திரையென்னு நந்தனவனம் விளங்கும். மேற்கு மலையடிவாரத்தில் வசிக்கத் தகுந்த நல்லவைப்பிரசையென்னும் நந்தனவனம் பொருந்தும், வடக்கு மலையடிவாரத்தில் திருதாக்கியமென்னு நந்தனவன முண்டாம். எ-று.

இப்பூந்தோப்புகளி னடுவே நான்கு ஓடைகளுண்டு. அவையாவன கிழக்கு சயித்திரக்கா நடுவி லனேகந் தாமரைப் பூவுடனுங் கூடிய தாகமென்னு மோடையும், தெற்கில் விசித்திரக்கா நடுவில் அனேகங் குமுதோற்பலங்களுடன் கூடிய மானதசரசென்னு மோடையு, மேற்கு வைப்பிரச நடுவில் செந்தாமரைகளுடன் கூடிய விமலோதகமென்னு மோடையும், வடக்குத் திருதாக்கிய நடுவி லனேக நீலோற்பலங்களுடன் கூடிய மனோரதமென்னு மோடையும் என்க. இவை வந்ததுகொண்டு வாராதது முடித்தலென்னுந் தந்திர வுத்தியாற் கூறியவாறென்க. (௯௪)

முற்கூறிய நாவல் மரத்தின் தன்மையை யிரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

நறவனைய கனியுதிரு நன்னாவ லெந்நாளு
முறுதியுற வுயிர்க்கெல்லாந் தென்கிரியி லோங்குதலாற்
பெறுநவகண் டமும்பெரிய நாவலந்தீ வெனும்பெயரை
மறுவறுமக் கனித்தீநீர் வரையதனை வலம்வருமே.

எ-து. தெற்கு மலையில் நிற்கும் நாவல் எந்நாளுந் தேன் போன்றவினிமையையுடைய பழம் சொரிந்து தன் சாற்றைப் பருகின வான்மாக்களுக்கெல்லாம் பலமுண்டாக்கி நிற்கையால் நவகண்டங்களு நாவலந்தீவெனப்பெயர்பெறும். குற்றமற்ற வினிமையுடைய அக்கினியின் சாறு பொன்மயமாய் மேருவை வலமாகவந்து அந்நாவல் மூலத்திற்றிரும்பவந்தடையும். நன்னாவலெனச் சிறப்பித்தமையால் அதி லொவ்வொரு பழத்துக்குப் பதினெண்கலச்சா றுண்டாயிருக்குமென்க, அச்சாறு நாற்றிசையும் வளையப் பெருகுகையால் நாவலந்தீவெனப் பெயர் பெற்றதென்க. மறுவறுமென்பதனா லச்சாறு பொன்மய மென்பதனை யறிவித்து நின்றது. (௯௫)

மேருவினை வலமாகி மேவியிடு மந்நீரை
யாருமவர் கனகநிற மாவரயு தாயுளுறச்
சாரமொரு மூன் றுடனுந் தங்கியவா யிரந்தழைக்க
வூருமுயிர் மற்றையவு முண்டதனை யொளியுறுமே.

எ-து. மகாமேருவை வலமாகவரும் நாவற்பழச்சாற்றை யருந்தினவர் எல்லோரும் பொன்னிறமாய்ப் பதின்மூவாயிரம் வயதுடனே பொருந்தியிருப்பர். அவர் மட்டோ அல்ல. அதனைப் பானம் பண்ணினால் ஊர்வன, பறப்பன, நடப்பன, தத்துவன, தவழ்வன, கொடிசெடி முதலியவும் பொன்மயமா யிருக்கும். எ-று. (௬௰)

அட்டகுல பருவதத்தின் தன்மைகளை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

தடவரையின் றென்றிசையிற் றங்கியிடு மொருசயிலங்
குடகடலைக் கூடவொரு தலைகூடக் குணகடலை
யிடமுடைய விதன்றென்பா லித்தகைத்தோர் வரையிசையுந்
திடமுறமுன் முறைதிகழு மிமையகிரி யதன்றென்பால்.

எ-து. மகாமேருவுக்கடுத்த தெற்குப் பதுமராக நிறம்போன்ற நிடதமலை கிழக்கு மேற்குஞ் சமுத்திரத்தையுற நூறாயிரம் யோசனை நீளமா யிருக்கும், அதற்குத் தெற்காகப் பொன்மயமான எமகூடமலை மேற்குங் கிழக்குஞ் சமுத்திரத்தையுறத் தொண்ணூறாயிரம் யோசனை நீள்மா யிருக்கும், அதற்குத் தெற்காகக் கடினமாய்ப் பனிநிறம் போன்ற இமயமலை எண்பதினாயிரம் யோசனை நீளமா யிருக்கும். எ-று. (௬௧)

வடபாகத் தொருகிரிமுன் வகுத்தபடி வதியுமதன்
வடபாலு மொருகிரிமுன் வகுத்தபடி வதியுமதன்
வடபாலு மொருகிரிமுன் வகுத்தபடி வதியுமினிக்
குடபாலிற் குணபாலி லொவ்வொன்று குறுக்குறுமே.

எ-து. மேருவுக்கு வடக்கு இரத்தின நிறம்போன்ற நீலகிரி கிழக்கு மேற்குச் சமுத்திரத்தையுற நூறாயிரம் யோசனை நீளமாயிருக்கும், அந்நீலகிரிக்கு வடக்காகச் சந்திரப் பிரகாசம்போன்ற சுவேதகிரி கிழக்கு மேற்குச் சமுத்திரத்தையுறத் தொண்ணூறாயிரம் யோசனை நீளமாயிருக்கும். அச்சுவேதகிரிக்கு வடக்காகச் சந்திரகாந்த நிறம்போன்ற சிருங்ககிரி யெண்பதினாயிரம் யோசனை நீளமாயிருக்கும். இனி மகாமேருவுக்கு மேற்காக வடக்கில் நீலகிரியையுந் தெற்கில் நிடதமலையையுமுறத் தெற்குவடக்காக நீலநிறமான கந்தமாதனமலை முப்பத்திரண்டாயிரம் யோசனை நீளமாயிருக்கும். மேருவுக்குக் கிழக்காக நீலகிரியையு நிடதமலையையுமுறத் தெற்கு வடக்காகப் பொன்னிறமான மாலியவானென்னுமலை முப்பத்திரண்டாயிரம் யோசனை நீளமாயிருக்கும். எ-று.

நவகண்டத்துள் பாரத கண்டத்தின் றன்மையை யாறு செய்யுளா லுணர்த்துகின்றார்.

அட்டகுல பருப்பதங்க ளமோவிடை நவகண்டம்
பட்டபடி பார்க்கவிமகிரித்தென்பாற் பாரதத்தை

பொட்டிமுத லுரைத்திடவா மதனைமொழிந் தனவெல்லாங்
கட்டமறு மமருலகத் திணையெனவே கருதுகவே.

எ-து. இவ்வாறு கூறிய அட்டகுல பருவதங்களினுடைய விடையிடையினுள்ள தேசங்களை நவகண்டமென்று அறிக. இமயமலைக்குத் தெற்காய்த் தென்சமுத்திரத்துக்கு வடக்காய் நடுவாயிருக்கிற பாரதகண்டத்தை முதலாகத் தொடுத்துச் சொல்வாம், அப்பாரதகண்ட மொன்றையு மொழிந்த வெட்டுக் கண்டங்களுந் துக்கமின்றிச் சுகத்தை யுடைத்தா யிருக்கும். அது எவ்வாறெனில் தேவலோகத்துக்குச் சமானமான போகங்களுடன் பொருந்துமெனக் கருதுக. எ-று. (சங)

பாரதமு நவதிவ பாகமுறு மவற்றுள்ளுஞ்
சீரியது குமரியெனுந் திவதனிற் சிறந்திருப்ப
ராரியரா மந்தணரு மல்லாரு மருமறையின்
காரியமு முறுமதனி லின்னுமுள கழறிடுவாம்.

எ-து. அப்பாரதகண்டம் இந்திரதீவு முதலான வொன்பதுதீவாகப் பிரியும், அவ்வொன்பது தீவினுள்ளுங் குமரித்தீவே சிறப்புடைத்து, அக்குமரித்தீவிற் பூச்சியராயிருக்கிற பிராமணரும் அவரல்லாத மற்றவர்களுஞ் சிறந்திருப்பார்கள், அதுவல்லாமல் அத்தீவில் வேதங்களின் காரியமான யாகாதிகளும் பொருந்தும்; அதுவல்லாமல் இன்னுமுள்ளவற்றைச் சொல்வாம். எ-று.

அந்தணருமென்றவும்மையா லொருவர்க்கொருவர் தாழ்ச்சியான அரசரும், வைசியரும், சூத்திரருமென்க. அல்லாதாரென்பது-அனுலோமர், பிரதிலோமர், விராத்தியர், அந்தராளரையென்க. இதனை. ரு. பார்ப்பா ரரசர் வணிகர் வேளாளர் நாற்குலத்துவருமுந் தங்கு நடையிடையினு - முயர்ந்தவாணினு மிழிந்த பெண்ணினும் வியந்த கூட்டத்தவ ரனுலோமர், இழிந்தவாணினு முயர்ந்த பெண்ணினும் பெயர்ந்த கூட்டத்தவர் பிரதிலோமர், அனுலோமர் குலத்தாணினு மவ்வழி பிரதிலோம குலப்பெண்ணினு முயர்ந்த கூட்டத்தாரோ யந்தராளர், பிரதிலோம குலத்தாணினும் பின்னிலை யனுலோமகுலப் பெண்ணினும் வியந்த கூட்டத்தவரோ விராத்தியராகும். என்பதனாலறிக. ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே என்பதனால் இருக்கு முதலிய நான்கு வேதமும், மந்திரமுதலிய ஆறங்கமும், மனுமுதலிய பதினெட்டுத் தருமசாத்திரமும், காமிகமுதலிய விருபத்தெட்டு ஆகமங்களும், பிரமமுதலிய பதினெண்புராணமும், மகாபாரத மிதிகாசமுதலியவும், நியாய வைசேடிக முதலிய சாத்திரங்களும் வழங்குமென்க. (சச)

கங்கைமுத னதியவைவுங் காசிமுதற் பதியவைவும்
பொங்குமயேந் திரம்பொதிய முதன்மலையும் பொருந்தியிடு
மங்கதற்கு யோசனையே யாயிரமுண் டெனவறிக
வெங்கொடிய மிலேச்சரிட மெட்டினுமென் றுயிரமே.

199



எ-து. கங்கை முதலிய அறுபத்து நான்குகோடி தீர்த்தமும், காசிமுதலிய ஆயிரங்கோடி புண்ணிய தலங்களும், சிறந்த மயேந்திரமலை, பொதியமலை முதலிய சத்தகுல பருவதங்களும் பொருந்தும். அக்குமரித் தீவினுடைய விஸ்தாரம் ஆயிரம்யோசனை யுண்டென்க. மற்ற இந்திரதீவு முதலியவெட்டுத் தீவுகளும் ஒவ்வொரு தீவுக்காயிரம் யோசனையாகவெண்ணாயிரம் யோசனை பொருந்தும். அவைகளிற் கொடுமைகளையுடைய மிலேச்சரிருப்பர். எ-று.

இவ்வாறு கூறிய அறுபத்துநான்குகோடி தீர்த்தங்களுள் ஐஞ்ஞூறு தீர்த்தஞ் சிறப்புடையன. ஆயிரங்கோடி புண்ணிய தலங்களுள் அறுபத்தெட்டு தலஞ் சிறப்புடையன. (௪௫)

இந்திரமே சேருகமே தாமிரமே யெழிற்கபத்தி
சந்துமலி நாகமதே சவுமியமே காந்திருவ
மந்தமலி வாருணமே யெனவெட்டு மதித்திடுக
விந்தவள வெனைநிலத்துங் கிரிவிரிவீ ராயிரமே.

எ-து. இந்திரத்தீவு, சேருகத்தீவு, தாமிரத்தீவு, அழகையுடைய கபத்தித்தீவு, நாகத்தீவு, சவுமியத்தீவு, காந்திருவத்தீவு, வருணத்தீவு ஆக வெட்டுத்தீவு முண்டென்க. இப்பாரத கண்டத்தளவு ஒன்பதினாயிரமும், ஒழிந்த-இரமிய கண்டமுதலிய வெட்டுக்கும் ஒவ்வொன்றுக்கு ஒன்பதினாயிரம்யோசனை விரிவென்க. இமயமலை முதற் சிருங்ககிரி யீறுகக் கிரி ஆறுக்கு மொவ்வொன்றுக் குயரமு மகலமு மிரண்டாயிரம் யோசனையும் கந்தமாதனம்-மாலியவா னிவ்விரண்டு கிரிக்கு முயரமும் அகலமு மாயிரம் யோசனையுமுண்டு. எ-று.

இமயமலை முதலிய கிரிகளினுயர் வகலத்தை யாண்டுக்கூறு தீண்டுக் கூறிய தென்னெனின் தலைதடுமாற்றமென்னுந் தந்திரவுத்தியாமென்க.

உன்னதத்தென் மயேந்திரமே யுயர்மலையஞ் சையகிரி
வின்னவினுஞ் சுத்திகமே யிருக்குமுயர் விந்தியமே
பன்னுபுகழ் மிகுபாரி யாத்திரமே யெனப்பகர்ந்த
வின்னகிரி யேழுமுதற் குமரிதலத் திசைந்தனவே.

எ-து. தெற்குமுதல் வடக்கீறாக மிகவு முயரத்தைப் பொருந்திய மயேந்திரகிரி மிகவு முயரத்தைப் பொருந்திய பொதியமலை, சையகிரி, சுத்திகாசலம், இருக்ககிரி, உயர்ந்த விந்தியமலை; மிகுந்த புகழுடையதென்று சொல்லப்பட்ட பாரியாத்திர பருவதம், இவ்வேழுங் குமரித்தீவிற் பொருந்தும். எ-று. (௪௭)

அங்கமெதிர் நிரணிறையாற் சமாக்கியமு மணிமலையுஞ்
சங்கமுந்தண் குமுதமுநல் வாரமெனுந் தலந்தானுந்
துங்கமலி பொதித்தென்பாற் றொடர்ந்தவடி வாரத்தி
னங்கனக விலங்கையுமேழ் வரைச்சார லடித்தேசம்.

எ-து. முற்கூறிய பத்திராகாத் தீவி லிருக்கிறவர்கள் செந்தாமரை போன்ற நிறமுடையராய்ப் பதின்மூவாயிரம் வயதும் உடையரா யிருப்பார்கள், இரணிய கண்டத்தி லிருக்கிறவர்கள் நல்ல எலுமிச்சம்பழம் புசித்திருப்பார்கள், அவர்களுடைய நிறத்தைச் சொல்லுமிடத்துச் சந்திரப் பிரகாசம் போன்றிருப்பார்கள், அவர்களுக்குப் பன்னீராயிரத்தைஞ்ஞூறு வயதுண்டு.

உற்றிடுவார்க் கிரமியத்தி லொளிகரிய குவளைநிறந்
துற்றுவதா லின்கனியே தொடர்வருட மவர்க்கயுத
மற்றுயிரண் டாயிரமுண் டரிவருட மருவினர்க்குப்
பற்றியமெய் யொளிவெள்ளி பானமுந்தீங் கரும்பாமே.

எ-து. இரமிய கண்டத்தி லிருக்கிறவர்களுக்கு நெய்தற்பூப்போன்ற நிறம்; அவர்களுக்குப் புசிப்பு ஆலம்பழம். அவர்களுக்கு வயது பன்னீராயிரம், அரிவருட கண்டத்தில் வசிக்கு மவர்களுக்கும் பன்னீராயிரம் வயது அவர்கள் தேகத்திற் பிரகாசம் வெள்ளிநிறம் போன்றிருக்கும், அவர்கள் புசிப்பு இனிய கருப்பஞ்சாறும். எ-று. (௬௧)

பொன்னுருவர் கிம்புருடர் புசிப்பிறலிப் புன்கனியே
மன்னுமயு தாயுவுளர் மனக்கவலை தனையில்லார்
கின்னமிலர் நரைதிரையுங் கிளருடலிற பிணியினையு
மின்னமுறை மற்றையவேழ் கண்டத்து மெண்ணுகவே.

எ-து. கிம்புருடகண்டத்தி லிருக்கிறவர்கள் பொன்னிறமாயிருப்பார்கள். அவர்கள் புசிப்பு-இத்திக்கனி அவர்களுக்கு நிலைபெற்ற வயது பதினாயிரம். அவர்கள் மனக்கவலையு மின்றி யத்தியான்மிக முதலிய துக்கத்திரையங்களும் நரைதிரையு மின்றி மிகவுஞ் சந்தோஷத்துடன் கூடியிருப்பார்கள், அக்கிம்புருட கண்டத்துக்குற்றபடி மற்றை யேழுகண்டத்தி லிருப்பவர்களுக்கும் பொருந்துமெனக் கருதுக. எ-று. (௬௨)

ஈங்குரைத்த விருநான்கு கண்டத்து ளெல்லோர்க்கு
மோங்கிவிடுங் கிருதயுகம் போலொழிந்த யுகமெல்லா
நீங்கரிய நன்மையினை நிறுத்தியிடு நிறையறிவு
தாங்கிடுவ ரவருடலி னுரமாதி தன்னையுமே.

எ-து. வெளி. (௬௩)

பாரதகண்டத்திலிருக்கிறவர்கள் தன்மையை இரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

அறிவுவலி யாயுளுரு வாகார மவையெல்லாஞ்
செறியுமுகத் திலுக்கிசையப் பாரதத்துட் டிகழ்வார்கட்
குறுமுனைவு புலத்துழலா லுழுவதுமின் றியுமுண்டு
பெறுபலமுந் தைவிகமா தியமுன்றிற் பிறழாவே.

எ-து. பாரத கண்டத்திலிருக்கிறவர்களுக்கு அறிவும் பலமுஞ் சரீரமுங் கிருதயுகம்போலாம்;மற்றையுகங்கட்குத் தக்கபடி பேதமாகப் பொருக்

பலாப்பழம் புசித்து நீலநிறமுடையராய்ப் பதிநூயிரம் வயதுடையவரா யிருப்பார்கள். எ-று.

அரிகண்டமெனினும் பத்திராசுவகண்டமெனினுமொக்கும். (௫௪)

ஆயுங்காற் குருகண்டத் தமர்வார்க டமக்கெல்லா
மாயுவுமூ வாயிரமு மயுதமும்மேவண் டியகனியுண்
டேயுமுடற் பச்சைநிறஞ் சிறுவருள ரிருவாவ
ராயுதாக் கொருபொழுதி னுமிணனப்பெண் ணெனவமர்வார்.

எ-து. குருகண்டத்தி லிருக்கிறவர்கள் சொரூபத்தை விசாரித்தாற் பதின்மூவாயிரம் வயதுடையவரா யெப்பொழுது மெவ்வனராய்ப் பொற்கொன்றைநிறமுடையராய்த் தம் கருத்துக்கு வேண்டிய மரத்தின் பழம்புசித்திருப்பார்கள், அவர்களுக் கொருபொழுதுக்குள்ளே கருப்பந் தரித்து ஆண்பெண்ணென விரண்டு பிள்ளைகள் பிறந்திருப்பார்கள். எ-று. (௫௫)

அத்தகைய குருகண்ட வடபாக மதுதன்னிற்
சித்தரொடு முனிவருஞ் சாரணருஞ் செறிந்திருப்பர்
துய்ப்பதுவு மூலபலஞ் சோமனெனத் துளங்கொளியா
ருத்தமத்த சந்திரதீ வெனும்பெயரு முளதற்கே.

எ-து. முற்கூறிய குருகண்டத்தின் வடக்குச் சமுத்திரத்துக்குள்ளே யெண்ணூயிரம் யோசனையுள்ள தீவிற் சித்தர்களு முனிவர்களுந் திகம்பரர்களு நெருங்கி யிருப்பார்கள், அவர்கள் புசிப்பது கிழங்குங்கனியும். அவர்கள் சந்திரனைப்போலும் விளங்கும் பிரகாசமுடையார், அத்தீவு உத்தமமான சந்திதீரெவனப் பெயர்பெறும். எ-று. (௫௬)

ஆயுவயு தத்துடன்மூ வாயிரமு மவர்க்குண்டு
வாயுதிசை தனிற்பத்தி ராகரமே வாய்த்தபெயர்
தேயமுமுண் டதிற்றிகழ்வார் சித்தருநன் முனிகணமு
மாயுமியற் சாரணருங் கனிமூல மருந்துவரே.

எ-து. அச்சந்திர தீவி லிருப்பவர்க்குப் பதின்மூவாயிரம் வயதுண்டு, முற்கூறிய குருகண்டத்தின் வாயுதிக்கில் வடக்குச் சமுத்திரத்துக்குள்ளே நாலாயிரம் யோசனைக் கப்புறத்திற் பதிநூயிரம் யோசனை விரிவையுடைய பத்திராகர தேச மன்றொரு தீவுண்டு, அதிற் சித்தர்களு மிருடிகளு மியலையாராயும் திகம்பரர்களுந் திவ்யமான மரத்தின் கனிகளையுங் கிழங்குகளையும் புசித்துக்கொண்டிருப்பார்கள். எ-று. (௫௭)

செங்கமல நிறமுடையர் திகழ்மூவா யிரவயுதந்
தங்கிடுவ ரிரணியத்திற் றங்குநர்கல் விகுசபல
நுங்கிடுவர் மதியனைய நிறமுடையர் நுவலுங்கா
லங்கயுத மைஞ்ஞூற் சாயிரமு மவர்நிலையே.

மலைமேனிலவு நிடதகிரித் தென்பாக மரிவருட
மிமையவரு மிருந்தபெரு வரைச்சார லிளாவிருதம்.

எ-து. தென்சமுத்திரத்துக்கு மிமயமலைக்கு நடுப் பாரதகண்டம். இமயமலைக்கு வடக்கு ஏமகிரிக்குத் தெற்குக் கிம்புருட கண்டம். ஏமகிரிக்கு வடக்கு நிடதகிரிக்குத் தெற்குப் பொன்மையைப் பெற்ற அரிவருட கண்டம். மகாமேருவைச் சூழ்ந்த தேவர்களிருக்குமிடம் இளாவிருத கண்டமெனப் பெயர்பெறும். எ-று.

இமையவருமென்ற வும்மையாற் சித்தர்-கந்தருவர்-இராக்கதர்-வேதாளகணங்கள் முதலியகொள்க.

(௫௧)

நீலகிரி வடசேதந் இரமியமே யெனநினைக
பாலிமய கிரிவடபா லிரணியமே யெனப்பகர்க
சிலமுனார் சிருங்ககிரி வடபாலைத் தென்பாலை
யோலமிடு முந்நதிக்குங் குருவெனவே யுன்னுகவே.

எ-து. மேருவுக்கு வடக்காயிருக்கிற நீலகிரிக்குஞ் சுவேதகிரிக்கும் நடு இரமியகண்டம். சுவேதகிரிக்கு வடக்குச் சிருங்க கிரிக்குத் தெற்கு இரணியகண்டம். சிருங்ககிரிக்கு ஆரவாரத்தையுடைய வடகடலுக்குத் தெற்கு நற்குணமே சுபாவமாகவுடையவர்க ளிருக்குங் குருகண்டமென்க. எ-று.

குடகடற்குக் கீழ்கேதுமாலமெனக் குறித்திடுக
விடமுடைய வியன்கந்த மாதனத்தின் மேற்கதுதா
னிடமுடைய மாலியவா னெனுங்கிரிக்குக் கீழ்பாற்கீழ்க்
கடலினுக்கு மேல்பாலம் பத்திரமாக் கருதுகவே.

எ-து. மேற்சமுத்திரத்துக்குக் கிழக்கும் விசாலமுள்ள கந்தமாதன கிரிக்கு மேற்கு கேதுமாலகண்டம், விரிவையுடைய மாலியவான் கிரிக்குக் கிழக்குக் கீழ்ச்சமுத்திரத்துக்கு மேற்குப் பத்திராசுவ கண்டமெனப் பெயர்பெறும். எ-று.

(௫௨)

பாரதகண்ட மொழிந்த வெட்டுக் கண்டத் திருப்பவருக் குணவு
முதலியவற்றை யெட்டுச் செய்யுளா
லுணர்த்துகின்றார்.

உண்டுயிர்வர் கருங்குவளை யுருவமதி யன்னமரி
கண்டமதிற் கலந்திருப்பர் காலமுடிவோ ரயுதமுள
கண்டமதிற் கனியுணவு கருங்குவளை நிறமாயு
வுண்டயுத முமையர்கேது மாலத்தி னுறைவார்க்கே.

எ-து. அப்பத்திராசுவ கண்டத்தி லிருப்பவர்கள் செய்தற்புனைப் புசித்துச் சந்திரப் பிரகாசம்போன்ற நிறம் பெற்றுப் பதினாயிரம் வயதுடையரா யிருப்பார்கள். கேதுமாலகண்டத்தி லிருக்கிறவர்கள் வருக்கைப்

எ-து. வடக்கே தொடுத்து எதிர் நிரனிறையாகப் பாரியாத்திரமலை யடிவாரத்தில்-அங்கமென்னுந் தேசமும், விந்தியகிரி யடிவாரத்திற் சமாக் கியமென்னுந் தேசமும்,இருக்க பருவதத்தின் அடிவாரத்தில்-அணிமலையெ ன்னுந் தேசமும், சுத்தி காசலத்தடிவாரத்திற் சங்கமென்னுந் தேசமும், சைய மலை யடிவாரத்திற் றண்மை பொருந்திய குமுதமென்னுந் தேசமும், மலய மலை யடிவாரத்தில் நன்மையினையுடைய வராகமென்னுந் தேசமும், மிக வுமுயர்ந்திருக்கிற பொதியமலைக்குத் தெற்காகிய மயேந்திரகிரியி னடிவா ரத்தில் அழகிய பொன்மயமாகிய இலங்கையென்னுந் தேசமும் பொருந் தும். எ-று.

கனகமயமான விலங்கையென்னுந் தேசம் இரத்னபூமியுடன் கூடி யைஞ்ஞூறு யோசனை சமுத்திரத்துக்குட் புகுந்திருச்குமென்க. அவ்விலங் கை யொழிந்த தேசமாறும் உபத்தியெனப்பெறும். (௬௮)

கயிலையின் சிறப்பிரண்டு செய்யுளாலுணர்த்துகின்றார்.

இமையகிரி வடகுணபா லிமையவர்க ளெழுமேத்த
வுமையுடனே பசுபதிதா னுறைவதொரு கிரியதனிற்
றமையுணர்ந்த தபோதனருந் தங்குவரச் சயிலத்திற்
கமையுடையா ரதன்பெயரைக் கயிலையெனக் கழறுவரே.

எ-து. மேற்கூறிய விமயமலைக் கீசானத்திற் றேவர்கள் வணங்கி யேத்தும்படி பார்வதியுடன் பசுபதியாகிய சிவபெருமா னெழுந்தருளியிரு க்கும் ஒப்பற்ற மலையினிடத்து அதிற் றம்மையறிந்த தபோதனர்கள் தங்கி யிருப்பார்கள். அம்மலையின் பெயரைப் பொறுமையையுடைய பெரியோர் கள் கயிலைமலையென்று சொல்லுவார்கள். எ-று. (௬௯)

ஆகமங்க ளனைத்தினையு மருமறைக ளொருநான்கு
மோகமற முனிவர்க்கு மொழிந்தருள வொழிந்தனவு
மாகருமோ மாலயனு மலர்தூவித் தலைவணங்க
வேகனிறை யதன்மிசையு மிருக்கவிரும் பினனினிதே.

எ-து. இமயத்துக்கு வடகிழக்காகக் கிம்புருட கண்டத்தில் வெள் ளிமயமாய் பலவகையான சிகரங்களுட னிருக்கும் அக்கயிலையிலுந் தேவர்க ளும் பிரமனும் விட்டுணுவும் மலராலருச்சித்துத் தலையால் வணங்க ஏகனா கிய சிவபெருமான் இனிதாக எழுந்தருளியிருக்கும், அது எனெனிற் சன கர் முதலிய முனிவர்களுக்குக் காமிகமுதலான விருபத்தெட்டு ஆகமங்களை யும், இருக்கு முதலிய நான்கு வேதங்களையு மற்றவைகளையு முணர்த்தி யா ணவாதி மலங்களைப் போக்கிச் சிவசாயுச்சியத்தை யடைவிக்கும் பொரு ட்டு. எ-று. (௭௰)

நவகண்டங்களின் பெயர்களும் அவைகளிருக்கு மிடங்களு
மூன்றுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

இமகிரிக்குந் தென்கடற்கு மிடைப்பாகம் பாரதமே
யிமகிரிமற் றேமகிரி யிடைப்பாகங் கிம்புருட

தும்,அவர்கட்கு வயலுழவு முதலிய தொழில்களினா லுண்டாகியதே புசிப்பு. அதுவல்லாமல் உழுது விளையாமற் றானே யுண்டாகிய குளச்செந்நெல், புல்லரிசி, காட்டிலுள்ள காய் கனி முதலிய புசிப்புகளுமுண்டு; அவர்கள் அத்தியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் எனக்கூறப்பட்ட துக்கத் திரயங்களையு மொழியாம லனுபவிப்பார்கள். எ-று.

துக்கத்திரயமாவன—தேவர்களால் வருந் துன்பம். ஆதிதைவிகம். பிருதிவி முதலிய பூதங்களால் வருந் துன்பம் ஆதிபௌதிகம், அரசர், மிருகம், பசு, பக்ஷி முதலியவற்றால் வருந் துன்பம். அத்தியாத்மிகம். என்னை

நேரிசை வெண்பா.

கருவிற் றுயர்செனிக்குங் காலைத் துயர்மெய்
திரைநரைமூப் பிற்பிளைத்துச் செத்து—நரகத்தின்
ஆழுந் துயர்புவியை யாளின்ப மாதியெலாம்
ஊழுதவு தைவிகமென் றோர். (௧)
பனியா விடியாம் படர்வா டையினுந்
துனிதென் றலினுஞ் சுகமுந்—தனையனைய
நீரினு மின்பின் னலுநெருப்பி னுந்துயரின்
போரிற் பவுதிக மாகும். (௨)
தன்னாற் பிறராற் றனக்குவருந் தீங்குநல
மின்னா விலங்கரவந் தேளெறும்பு—சென்முதனீ
ரட்டையல வன்முதலை மீனரவ மாதியினுங்
கட்டமுமிங் காத்மிகமே காண். (௩) (௯௨)

மற்றைநயநற் றலமெவற்றும் வாழ்வார்கள் பாரதத்தைப்
பற்றிவினை நலம்பயின்றார் முற்பலத்தி லெனப்பகர்க
முற்றியுற வினைபலவு முளைத்ததல மிதுவதனான்
முற்றவினை யனைவருமிவ் விடமதனுண் முயல்வாரே.

எ-து. பாரதகண்டங் கன்மபூமி யாகையான் முற்சனனங்களி லியற்றிக் கன்மபலத்தை யாண்டனுபவித்து அவ்வக் கன்மபலத்தால் கிம்புருட முதலிய வெட்டுக் கண்டங்களிலுண்டாகிய போகவகைகளை யாண்டாண்டு புசித்திருப்பார்களென்க. ஒருகருமஞ் செய்தவன் அவ்வத்தலத்திலேயிருந்து அவ்வப்பலத்தைப் புசியாமல் வேறோர் தலத்திலே யப்பலம் புசிக்குமாறு போல விப்பாரத கண்டத்திலே கன்ம பரிபாகமானவாறே மற்றைக் கண்டங்களை யடைந்திருந்து போகங்களைப் புசித்துத் தொலைந்தவாறே பின்பிப் பாரத கண்டத்தை வந்தடைந்து எல்லாருஞ் சற்கன்மங்களையே பண்ணுவார்கள். எ-று. (௯௩)

நவகண்டத்தின் யோசனையளவை யுணர்த்துகின்றார்.

தென்றிசைப்பா ரதமாதி சிறந்தபெரு வரைவடபாற்
குன்றமொரு மூன்றினுக்கு மப்பாலைக் குருவந்தத்

தோன்றிவிடும் யோசனையு மொருநூறு யிரமுண்டு
நின்றகுணக் கொடுகுடக்கு மிவ்வளவே நிகழ்த்துங்கால்.

எ-து. தெற்குப் பாரதகண்ட முதல் மேருவுக்கு வடக்காயுள்ள நீலகிரிமுதலிய மூன்று கிரிக்கு மப்பாலிருக்கிற குருகண்ட மீறுகப் பொருந்தப்பட்ட யோசனை நூறுயிரம் என்க. மற்றைக் கிழக்கு மேற்கு நூறுயிரம் யோசனை விரிவுண்டு. எ-று.

அவை வருமாறு பாரதகண்டம் ஒன்பதினுயிரம், கிம்புருடகண்டம் ஒன்பதினுயிரம், அரிவருடகண்டம் ஒன்பதினுயிரம், இளாவிரதகண்டம் பதினெண்ணுயிரம், மகாமேரு பதினுயிரம், இரமியகண்டம் ஒன்பதினுயிரம், இரணியகண்டம் ஒன்பதினுயிரம், குருகண்டம் ஒன்பதினுயிரம், சிருங்ககிரிமுத லிமயமலை யீறுக மலை யாறுக்கும் பன்னீராயிரம்; ஆகத் தெற்கு வடக்குத் தொகையானே நூறுயிரம் யோசனை யென்க. பத்திராசுவகண்டம் முப்பத்திராயிரம், மாலியவான்கிரி ஆயிரம், இளாவிரதகண்டம் பதினெண்ணுயிரம், மகாமேரு பதினுறுயிரம், மேற்குக் கந்தமாதனகிரி ஆயிரம், கேதுமாலகண்டம் முப்பத்திராயிரம்; ஆகக் கிழக்கு மேற்கும் நூறுயிரம் யோசனை யுண்டென்க. (௯௪)

நவகண்டத்தின் பெயர்க் காரணம் உணர்த்துகின்றார்.

மனுகுலத்துள் வருமங்கி நேத்திரனு மன்னவன்றன்
றனையர்பா தனைமுதலோர் சவுரியரோன் பதின்மருளர்
இனையவர்க ளாண்டமையா லெய்தியபே ரனவிவற்றை
நினைகபா தனுக்குரிமை பாரதமே நிகழ்த்துங்கால்

எ-து. இந்நாவலந்தீவில் மனுகுலத்தில் வந்த அரசர் அக்கினி நேத்திரன், அவனுக்குப் பாதன், கிம்புருடன், அரி, இளாவிரதன், பத்திராசு, கேதுமாலி, இரமியன், இரணியன், குரு என வீரப்பாட்டையுடைய புத்திரரொன்பதின்மருளர், இக்கண்டங்களை யொவ்வொருவராக வொன்பதின்மரும் பிரித் தாண்டமையா லவரவர் பெயரா லக்கண்டங்களின் பெயராயிற்று. அதில் பாதனென்னுமரச னிக்கண்டத்தை யுரிமையாக வாண்டமையால் பாரதகண்டமெனப் பெயராயிற்று. எ-று.

ஏகாரம்-தேற்றம். அது என்போலெனிற் பாண்டியன் சோழன் ஆண்ட தேசத்தைப் பாண்டிமண்டலஞ் சோழமண்டல மென்றாற்போ லென்க. சுவாயம்புவென்னு மனுவின் புதல்வன் பிரியாவிரதன், அப்பிரியாவிரதன் புத்திரர்கள் பதின்மருளர், அப்பதின்மருள் மேதா, அக்கினி, வாகு என்னும் மூவரும் வயிராக்கியத்தாலே சந்நியாசமா யிருந்தார்கள், மற்ற அக்கினி நேத்திரன் முதலிய வெழுவருஞ் சம்புத்தீவு முதலிய வேழுதீவையு மொவ்வொருவராகப் பிரித் தாண்டார்களென்க. (௯௫)

எழு தீவினளவு மேழு கடலினளவு நான்கு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

எண்ணுகயோ சனையிலக்க மென்றினைய நாவலந்தீ
வெண்ணிடுக விதன்புடைசூ ழுவரிவிரி விப்படியென்
றெண்ணிடுக விதற்கப்பாற் சாகமிரண் டிலக்கமெனக்
கண்ணிடுக வதற்கப்பாற் பாற்கடலு மக்கணக்கால்.

எ-து. இந்நாவலந்தீவை நூறுயிரம் யோசனை நீளமென்று கருதுக. இந்நாவலந்தீவைச் சூழ்ந்த வுப்புக்கடல் நூறுயிரம் யோசனை யென்று கருதுக, இவ்வுப்புச் சமுத்திரத்துக் கப்பாற் சாகத்தீவு இரண்டு நூறுயிரம் யோசனைசாம், அச்சாகத்தீவுக்கப்பாற் பாற்கட லிரண்டு நூறுயிரம் யோசனை நூரமாம். எ-று.

முற்காலத்திற் பருவதங்க ளெல்லாஞ் சிறகுடனே கூடப் பறந்து ஒரு தேசத்திற் போயிருக்கிறபொழுது அதிலிருக்கிற பிராணிகளுக்கு மிகவும் பீடை வருகையால் தேவர்களெல்லாருந் துக்கித்து இந்திரனுக்கு முறையிட அப்பொழு திந்திரன் அப்பருவதங்களின் சிறகைச் சேதித்தபோது பயப்பட்டு இலவண சமுத்திரத்திற் பன்னிரண்டு கிரிகள் பறந்துவந்து கிழக்கு முதலிய திக்குகளில் விழுந்தன. அவையாவன கிழக்குச் சமுத்திரத்தில் இடபகிரி, துந்துபிகிரி, தாமிரகிரி எனு மூன்றும், தெற்குச்சமுத்திரத்திற் சக்கரகிரி, மைநாககிரி, வலாககிரி யென மூன்றும், மேலைச் சமுத்திரத்திற்சோககிரி, வராககிரி, நந்தனகிரி எனு மூன்றும்; வடக்குச் சமுத்திரத்தில் கங்ககிரி, சந்திரகிரி துரோணகிரி என மூன்றுமாகப் பன்னிரண்டு மென்க. அவற்றிற் சக்கரகிரிக்கு மைநாககிரிக்கும் நடுவே குதிரை முகம்போன்ற வடவாமுகாக்கினி யெப்போதுஞ் சொலித்துக்கொண்டு நிற்குமென்க. இரண்டாவதாகிய சாகத்தீவுக்கு அரசன் மேதாதிதி. அவ்வரசனுக்குப் புத்திரர்க ளெழுவ ருளர். அவர்கள் யாரெனிற் சாந்தன், அபையன், சிருகன், அனந்தன், சிவன், கேஷமன், துருவனென எழுவரையும் அபிடேகம் பண்ணி யவரவர்பெயரா லத்தீவை யேழாகப் பிரித்துக் கொடுத்தான். அச்சாகத்தீவிற் சொடுமதகம், சந்திரசம்சயகம், நாரதம், மந்தரம், சோமகம், இடபம், வைப்பிராசம் என்ற மலைக ளேழுமுண்டு. அம்மலைகளி னின்றும் அநிருதை முதலிய நதிகளேழும் புறப்பட்டுப் பாற்கடலிற்போய் விழும். அத்தீவிலிருக்கிறவர்க்குப் புசிப்புப் பால். அவர்கள் நிறஞ் சந்திரப் பிரபையாம். அத்தீவில் சாகமென்னு மரம் நிற்கையாற் சாகத்தீவெனப் பெயர் பெற்றதென்க, அப்பாற்கடலில் வடக்கே சுவேதத் தீவில் நடுவே வைகுந்தம். அதில் அநேகங் கோபுரமும் பிரகாரமுமுண்டு. அவ்விடத்திற் கமலையாருடன் கூடித் திருமா லாதிசேடன்மேல் சயனிப்பரென்க. (கலை

எண்ணிடுக வதற்கப்பாற் குசைத்தலநான் கிலக்கமென
வெண்ணிடுக வதற்கப்பாற் றதிபுததி முனையிலக்கத்

றெண்ணிடுக வதற்கப்பாற் கிரவுஞ்ச மெட்டிலக்க
மெண்ணிடுக வதற்கப்பா னெய்க்கடலு மெட்டெனவே.

எ-து. முற்கூறிய பாற்கடலுக் கப்பாற் குசைத்தீவு நான்குநூறாயிரம் யோசனை, அக்குசைத்தீவுக் கப்பாற் றயிர்க்கடல் நான்குநூறாயிரம் யோசனை. அத்தயிர்க் கடலுக்கப்பாற் கிரவுஞ்சத்தீவு எட்டுநூறாயிரம் யோசனை. அக்கிரவுஞ்சத் தீவுக்கப்பால் நெய்க்கடலு மெட்டுநூறாயிரம் யோசனை விரிவாம். எ-று.

அக்குசைத்தீவிற் பொன்மயமான குசைநிற்கையால் அப்பெயர் பெற்றது, அக்குசைத் தீவுக்கு அரசன் வசு. அவ்வசுவென்னு மரசனுக்குப் புத்திரர்களெழுவர். அவர் யாரெனில்-சுவேதன், லோகிதன், சீமுதன், அரிதன், விபுத்தியுதன், மானசன், சுப்பிரதன் என்க. அவ்வெழுவர்களும்பிரித்தாண்டமையால் அவரவர் பெயராலத்தீவு எழுபிரிவாயிற்று, அவ்வேழு தீவுக்குமேழு கிரியுண்டு. அவை குமுதகிரி, ஊதகிரி, வராககிரி, துரோணகிரி, கங்ககிரி, மயிடகிரி, குமுதவானகிரி என்க. அக் கிரிகளினின்றுஞ் சுவேததோயநதி முதலியவேழுநதிகளும் புறப்பட்டுத் தயிர்க்கடலிற்போய்விழும். அதிலிருப்பவர்க்குப் புசிப்புத் தயிர். அதுவல்லாமல் பலங்களமிர்த மிவற்றையும் புசித்திருப்பார்கள், இனி யக்கிரவுஞ்சத்தீவுக்கு அரசன் சோதிமான். அவ்வரசனுக்கு எழுபுத்திரர்களுண்டு, அவர் யாரெனில்; உற்பிதன், வேணு, மண்டலன், இந்தகாரகன், திருதிமான், சுப்பிரபாகன், கபிலன் என்க. அவ்வேழு புதல்வர்களும் பிரித்தாண்டமையால், அவரவர் பெயராலத்தீவு எழுபிரிவாயிற்று, அவ்வேழு தீவுக்கு மேழுகிரியுண்டு. அவை வித்துருமகிரி, எமநாமகிரி, திருதிகிரி, புட்பதந்தகிரி, குசலகிரி, லோகிதகிரி, மந்தாகிரி யென்க. அவ்வேழுகிரிகளி னின்றும் மகிபாபாவென்னு நதிகள் முதலிய வேழும் புறப்பட்டு நெய்க்கடலிற் போய்விழும். அத்தீவி லிருப்பவர்கள் நெய்மயமாயிருக்கிற அமிர்தபல சாரங்களைப் புசித்திருப்பார்கள், அவர்களுக்கு நிற முற்கூறியதே. அக்கிரவுஞ்சத் தீவில் எமநாமகிரியில் கிரவுஞ்சனென்னுமசுரன் சிலநாளாண்டுகொண்டிருந்து குமாரசுவாமியுடன் போர்செய்து மரிக்கையால் அது கிரவுஞ்சமெனப் பெயர்பெற்றதென்க. (௬௭)

எண்ணிடுக வதற்கப்பாற் சான்மலியெண் ணிரண்டிலக்க
மெண்ணிடுக வதற்கப்பா லிக்கிரத முற்படியே
யெண்ணிடுக வதற்கப்பாற் கோமேத மெண்ணான்கென்
றெண்ணிடுக வதற்கப்பான் மதுக்கடலு முனையெண்ணல்

எ-து. முற்கூறிய நெய்க்கடலுக்கு அப்பாற் சான்மலித்தீவு பதினாறுநூறாயிரம் யோசனை, அச்சான்மலித் தீவுக்கப்பாற் கருப்பஞ்சாற்றுக் கடல் பதினாறு நூறாயிரம யோசனை, அக்கருப்பஞ்சாற்றுக் கடலுக் கப்பாற் கோமேதத்தீவு முப்பத்திரண்டுநூறாயிரம்யோசனை, அக்கோமேதத் தீவுக்கப்பாற் சுராக்கடல் முப்பத்திரண்டு நூறாயிரம் யோசனைவிரிவு. எ-று.

அச்சான்மலித் தீவுக்கு அரசன்-கந்தமான், அவ்வரசனுக்குப் புத்திரர்க ளெழுவர்-அவர் யாவரெனில் நமோதுர்க்கன், தனுசுமான், பாகவன், அந்தகாரன், முனி, துந்துமி, குசலன் என்க. அவ்வெழுவர்களும் பிரித்தாண்டமையா லவரவர்பெயரா லத்தீவேழு பிரிவாயிற்று. அவற்றிற் கிரிகளேழாவன-கிரவுஞ்சகிரி, வாமனகிரி, அந்தகாரகிரி, திவாகிருதகிரி, தீவிபிந்துகிரி, புண்டரீககிரி, துந்துபிகிரியென்க. அவைகளினின்றம்-புண்டரீக முதலிய நதிகளேழும் புறப்பட்டுக் கருப்பஞ்சாற்றுக் கடலிற்போய் விழும். அதிலிருப்பவர்களுக்குப் புசிப்பு கருப்பஞ்சாறு, அத்தீவி லாயிரம் யோசனையுயரத்தையு முடைத்தாய்க் கனகமயமான ஆதித்தப்பிரபைபோ னிருக்கும் இலவமரநிற்கையாற் சான்மலித் தீவெனப் பெயர்பெற்றதென்க. இனிகோமேதகத்தீவுக்கு அரசன் அவ்வியவாகனன், அவ்வரசனுக்குப் புத்திரர்களெழுவர். அவர் யாவரெனில்- சலதன், குமாரன், சரித்தகன், குமுதன், சந்தனன், மகாமத்திரன், சுகுமாரன் என்க. அவ்வெழுவர்களும் பிரித்தாண்டமையா லவரவர் பெயரா லத்தீவேழு பிரிவாயிற்று. அவற்றிற் கிரிகளேழாவன கேசரகிரி, சேடககிரி, சுரதவதகிரி, அம்பிகிரி, செயோபகிரி, மேககிரி, சிங்ககிரியென்க. அவைகளினின்றுங் கபத்திமான் முதலிய வேழுநதிகள் புறப்பட்டு மதுக்கடலிற் போய்விழும், அத்தீவிலிருப்பவர்களுக்குப் புசிப்புச்சுவாதுபலங்கள். கோமேதத் தீவெனப் பெயர்பெற்றது யாதெனில், மனுகுலத்திற் கோபதியென்னும் பெயரையுடைய வரசன் கோசலனென்னும் பெயரையுடைய யாகநிமித்தமாகத் இந்திரனுடையயாகத்துக்க திபதியாயிருக்கிற பிருகு இருடியை வரிக்கையால் கௌதமர் இந்திரனுடைய யாகத்துக்கு வந்திருக்கும் இவரை வரிக்கலாமோவென்று அவ்வரசனைக் கோபத்தாற் சபிக்க, அவ்வரசனு மவ்யாக நிமித்தம் வந்திருக்கிற பசுக்களும் நாசத்தை யடைந்து அப்பசுக்களுடைய நிண மித் தீவை மறைக்கையா லதற்குக் கோமேதத்தீவெனப் பெயராயிற்று.

(௬௮)

எண்ணுகயோ சனையெட்டெட் டிலக்கமென வதற்கப்பா
லண்ணியபுட் கரணிதலத் தகலத்தை யதற்கப்பா
லண்ணியசுத் தோதகத்தி னகலமுமுன் னறைந்தபடி
திண்ணியமால் வரையுமினி யிவற்றினுக்குத் தெரிப்பாமே.

எ-து. முற்கூறிய சுரைக்கடலுக் கப்பாற் புட்கரணிதலத் தகலத்தை யறுபத்துநான்குநூறுயிரம் யோசனையெனக் கருதுக. அப்புட்கரணித் தீவுக் கப்பால் நன்னீர்க்கடலி னகல மறுபத்து நான்கு நூறுயிரம்யோசனை. சாகமுதலிய தீவிற் சுடினமாய்ப் பருத்திருக்கு மலைகளைத் தொகுத்துச்சொல்வாம். எ-று.

அப்புட்கரணித் தீவுக்கு அரசன். அசன், அவ்வரசனுக்குப் புத்திரர்க ளிருவர், அவர் யாரெனில் தாக்கியன், மத்தியனென்க. அவ்விருவரும் பிரித் தாண்டமையா லவரவர்பெயரா லத்தீ விரண்டு பிரிவாயிற்று. அவற்றிற் கிரிக ளிரண்டாவன, மந்தரகிரி, உத்தரகிரி யென்க. அக்கிரிக ளிரண்டு

மைம்பது யோசனை யுயரமு மிருபத்தஞ்சு யோசனை விரிவுமா யிருக்குமெ ன்க. (௬௯)

சாகத்தீவு முதலிய தீவின் மலைகளி னதளவை
யுணர்த்துகின்றார்.

சாற்றியிடுஞ் சாகமுத லைந்தினுக்குந் தடவரையு
மூற்றமிகு மெவ்வேழுண் டொருகிரிசக் கரம்போல
மாற்றறவே புட்கரணி தலத்தை நவல மாய்வதியுந்
தேற்றுநதி முடிவிடத்துந் திகழுமொரு வரையதுபோல்.

எ-து. சாகத்தீவு முதலிய வைந்து தீவினு மொவ்வொன்றுக் கெவ்வேழாக முப்பத்தைந்து மலைகளுண்டு, அதுவல்லாமல் புட்கரணித்தீவிலிருக்கு மொப்பற்ற மானதகிரி, யத்தீவைச் சக்கரம்போ லிடைவிடாமல் வலமாகச் சூழ்ந்திருக்கும் அதுவல்லாமல் சுத்தோதக சமுத்திரத்தைச் சூழ விடைவிடாமல் சக்கரவாளகிரி விளங்கும். எ-று.

ஐந்தினுக்குமென்ற வும்மையாற் புட்கரணித் தீவில் மலைக ளிரண்டிருக்கின்றன, ஆகத்தீவு, ஆறக்குக் குலமலைகள் முப்பத்தேழென்க, தடவரையுமென்ற வும்மையாற் சாகமுதலிய வைந்து தீவினுள்ளு முப்பத்தைந்து நதிகளு முண்டென்க. புட்கரணித்தீவி லிருக்கு மானதகிரியிற் கிழக்குமுதலிய நான்கு திக்கினு முலகபாலர் நால்வர்க்கு நான்கு புரியுண்டு, அவை இந்திரனுக்கு விசுவோகசானு புரியும், இயமனுக்குச் சங்யமனி புரியும், வருணனுக்குச் சுத்தவதி புரியும், சோமனுக்கு விபாவதி புரியுமென்க. தேவபூசை நிமித்தமாகச்சொன்னமயமான தாமரைப்பூ அத்தீவின்க ணுண்டாயிருக்கையா லத்தீவு பட்கரணித் தீவெனப் பெயர் பெற்றது, மலைகளையும் நதிகளையு மீண்டுக் கூறியிருக்க; ஆண்டுக்கூறிய தென்னையெனின், ஈண்டாசிரியர் தொகுத்தமையா லாண்டு ஒப்பின் முடித்தலென்னுந் தந்திர வுத்தியாற் கூறியதென்க. (௭௰)

சாக முதலிய தீவி லிருப்பவர்கள் தன்மையை
யுணர்த்துகின்றார்.

சாகமுத லிருமூன்றிற் றங்குநர்க டமக்கெல்லாஞ்
சோகமிலை யெந்நாளுந் துய்த்திருப்பர் சுகமவர்தம்
மாகமதி னரையுமிலைத் திரையுமயு தாயுவுளர்
மோகமிலர் கலியுகத்துங் கிம்புருடர் முறைபெறுவார்.

எ-து. சாகத்தீவுமுதலாறு தீவிலுமிருப்பவர்கள், சம்புத்தீவினுட்குமரிகண்டத்தி லிருப்பவர்களைப்போல் எப்பொழுதுஞ் சுகதுக்கமுறாமல் சுகவாசியாய் நரை திரை மூப்பில்லாமல் நித்தியயௌவனமுடையராய்ப் பதினாயிரம் வயதுடையரா யிருப்பார்கள். அதுவல்லாம லிக்கலியுகத்து மோகமில்லாதவராய்க் கிம்புருட கண்டத்தில் இருப்பவர்களுக் கொத்திருப்பார்கள். எ-று. (௭௧)

பூலோகத்தைத் தொகுத்துணர்த்துகின்றார்.

எழுதீவு மெழுகடலு மீழமய மென்றிவையுந்
தழல்போலு மொளியிப்பாற் றமப்பாற் றருமலையுங்
குழுவாய பேரிருளு மதற்கப்பாற் குரைகடலு
மழகாய வண்டகடா காந்தமும்பூ தலமாமே.

எ-து. சம்புத்தீவு முதலிய வேழுதீவும், இலவணசமுத்திர முதலிய வேழுகடலும், பொன்மயமான பூமியும் அக்கினியைப்போலு மொளி முற்பாகத்திலும் இருள் பிற்பாகத்திலு முடைய லோகாலோகமென்னும் பெயர்பெற்ற சக்கரவாளகிரியு மந்தகாரபூமியு மார்க்கின்ற பெரும்புறக்கடலும் அண்டகடாக முடிவுமாகிய விவையெல்லாம் பூலோகமெனப்படும். எ-று. (எ௨)

சக்கரவாளகிரியின் றன்மையையுணர்த்துகின்றார்.

இசைத்தவிதத் திருளொருபா லொளியொருபா லேய்ந்தகிரி
வசிப்பர்முதற் பாகத்தின் வடிவியக்க ரிராக்கதரும்
பசுத்தவிராக் கதர்தாம்பை சாசர்திசைப் பாலகரு
மிசைப்பயிலும் விண்ணவர்பொன் னிலத்துவிளை யாடுவரே.

எ-து. இவ்வாறு சொல்லப்பட்ட வொளி யொருபாலும் இருளொருபாலுமிருக்கிற சக்கரவாளகிரியில் வடிவையுடைய வியக்கரும் சந்திரனும் பசுமைநிறத்தையுடைய அரக்கரும் பசாசகளும் அட்டதிக்குப் பாலர்களும் மேலேயிருக்கின்ற தேவர்களும் வாசஞ்செய்வர். அதுவல்லாமல் முற்புறமாகிய கனகமயமான பூமியினிழிந்து சஞ்சரித்து விளையாடிப் பின்பு தங்கடங்க ளெல்லையை யடைந்திருப்பார்கள். எ-று. (எ௩)

சக்கரவாளகிரிக் கப்புறத் திருட்பூமியிலிருப்பாரை
யுணர்த்துகின்றார்.

விதித்தவுரை மரணமலால் விபரீத முறவிதிக்கு
வதைத்தவர்க டமைத்தாமே மைபலுற வதிவார்கள்
புதைத்தவிரு ளுலகத்துட் பொருளல்லாப் புல்லியரோ
கதத்துமருந் துயரத்துந் தம்முடலைக் களைவாரே.

எ-து. சிவாகமத்திற் சொல்லியபடி மிருந்த சிவகாரியங் குருகாரியஞ் சங்கமகாரியமாகத் தான்றன்னுடைய தேகவெறுப்பாற் றன்புராணாதிகளிற் சொல்லிய பிருகுப் பிரபாதமாதல், கங்கை முதலிய தீர்த்தத்திலாதல் தேகம் விடுதலன்றிச் சாத்திரத்துக்கு விரோதமாகத் தம்முடைய வுடலைத் தாமே விட்டவர்க ளிருட்பூமியாகிய உலகத்தின் மயக்கத்தைப் பொருந்திக் கிடப்பார்கள், ஆதலால் இப்படிப்பட்ட மரணமாகாதென் றறியாமற் கோபத்திலும் வியாதிமுதலிய பீடைகளினலும் வலிய உயிரை விட்டவர்கள் ஒரு பொருளிலுஞ் சேராத கீழ்மக்களாவார்கள். எ-று. (எ௪)

அண்டகடாகமுதல்மகாமேரு நடுவளையிலும் ஐம்பதுகோடி யோசனைதூரம் என்பதை மூன்று செய்யுளா லுணர்த்துகின்றார்.

அழகாய கடாகத்துக் களவுகன மொருகோடி
யெழு நூறு யிரத்துடனே யிருபது நூ றுயிரத்தைத்
தழுவியுறு மொருகோடி சமுத்திரநா யகத்தளவு
குழுவிருளு மேழைஞ்சுக் கோடியினுங் கூறிடுவாம்.

எ-து. அழகிய அண்டகடாகவோட்டுக் கனமொருகோடி யோசனை. பெரும்புறக்கடலி னகலங் கோடியே யிருபத்தேழு நூறுயிரம் யோசனை. முற்கூறிய வந்தகார பூமியினகல முப்பத்தைந்து கோடியோசனை. அதுவல்லாமல் இன்னுமதனுடைய வளவையைச் சொல்வாம். எ-று. (எரு)

இருபதுநூ றுயிரத்தி னொன்றான மிவற்றுடனே
வருவதுதா னற்பதினா யிரமெனவே மதித்திடுக
விருளொருபா லொளியொருபா லிசைந்தபெரு வரைக்கயுத
மொருபஃது கோடியுறுங் கனகமய வெளிநிலனே.

எ-து. முற்கூறிய அந்தகார பூமியினளவு முப்பத்தைந்து கோடியுடன் பத்தொன்பது நூறுயிரத்து நாற்பதினாயிரம் யோசனையுண்டென்க. ஒருபாற் பிரகாசமாயும் ஒருபா லிருளாயுமிருக்கிற பெருமையையுடைய சக்கரவாளகிரி பதினாயிரம் யோசனை விரிவை யுடையதாயிருக்கும். முற்கூறிய கனகபூமி பத்துக்கோடி யோசனை விரிவாம். எ-று.

அச்சக்கரவாளகிரி நூறுயிரம் யோசனை யுயரத்தையுடைத்தா யொருபாற் சூரியன் சஞ்சரித்தலாலும், ஒருபாற் சஞ்சரியாமையாலு மொருபா லொளியும், ஒருபால் இருளுமாயிற்று. மண்ணினு மண்டத்துக்கு நடுவே சூரியன் சஞ்சரித்தலால் அவனுக்கு மார்த்தாண்டனென்னும் பெயராயிற்று. அக்கிரியி லட்ட திக்குப்பால ரிருந்து தத்தந்திக்கைக் காத்துக்கொண்டிருப்பார்கள் என்க. (எசு)

எழுநூறு யிரத்துடனே யிருபதுநூ றுயிரத்தைத்
தழுவியுறு மொருகோடி சத்தசமுத் திரவிரிவு
மெழுநிலமு மைம்பதினா யிரங்குறைய விவ்வளவே
குழுமியுறும் பஞ்சாசத் கோடிபெருங் குன்றிறுவாய்.

எ-து. முற்கூறிய சத்தசமுத்திரங்களின் விரிவு கோடியே யிருபத்தேழுநூறுயிரம் யோசனை, சம்புத்தீவில் மகாமேரு முதலாகத் தெற்கேழுதீவுங் கோடியே யிருபத்தாறு நூறுயிரத்து ஐம்பதினாயிரம் யோசனையுண்டென்க. மகாமேரு முதலாகக் கடாகமீறாகத் தொகுத்தறியு மிடத்தைம்பது கோடி யோசனை விரிவைப் பொருந்தும். எ-று.

அதன்வகை-சத்தசமுத்திரமுஞ் சத்ததீவுமாக-இரண்டுகோடியேயைம்பத்து மூன்று நூறுயிரத் தைம்பதினாயிரம். அதற்குப் புறம்பே கனகமய

மானபூமி பத்துக்கோடி. அதற்குப் புறம்பே சக்கரவாளகிரி பதினாயிரம். அதற்குப் புறம்பே யிருளுலக முப்பத் தைந்துகோடியே பத்தொன்பது னாறுயிரத்து நாற்பதினாயிரம். அதற்குப் புறம்பே பெரும்புறக்கடல் கோடியே யிருபத்தெழு னாறுயிரம். அதற்குப் புறம்பே அண்டகடாகங் கோடி; ஆக மகாமேரு நடுநின்றுந் தெற்குப்பாதி ஐம்பதுகோடி யோசனை விரிவுஞ்சரி; மற்றைத் திக்கினுங் காண்க. (எஎ)

அளவுக்சோர் புறனடையுணர்த்துகின்றார்.

தரைத்தலத்துக் கீழ்த்தலங்கள் பேதமுறச் சாற்றியிடுந்
தரைத்தலத்து மேற்றலமுந் தவறுறாயா சாத்திரமுந்
தரைத்தலத்தும் பேதமுறச் சாற்றியிடுஞ் சாற்றிடினு
விருந்தமிலைச் சிருட்டிதொறும் பேதமுற விளைதலினால்.

எ-து. இப்பூமிக்குக் கீழான நரக புவனங்களை யாகமங்களிற் பேதமாகக் கூறும். பூமிக்கு மேற்றலங்களையும் பேதித்துக்கூறும், ஆனா லொருபடித் தல்லாமல் பலவாகப் பேதித்துச் சாத்திரஞ் சொல்லுமோ வெனிற் சிவபிரான் சருவஞ்ஞனுகையாற் சாத்திரங்கள் பொய் சொல்லாது. பூலோகத்தினிடத்தும் பேதமாகக் கூறும். ஈசுர னெவ்வொரு சிருட்டிகாலங்களிலாகமங்களைப் பேதித்துக் கூறினாலுங் கடைத்தொகையள வொத்திருக்குமாகையா லந் நூற்கு மிந் நூற்கும் விரோதமில்லை யாதலால் மாறுகொளக் கூறலென்னுங் குற்றமில்லை. எ-று.

பேதம் யாதெனில், கீழ்முதலடுக்கில்-நரகம் பதின்மூன்று. இரண்டாமடுக்கு ஒன்றுக்குப் பத்து. மூன்றாமடுக்கு ஒன்றுக்கு-ஒன்பது. ஆக அடுக்கு மூன்றுக்கும் நரகம் முப்பத்திரண்டு. அதில் ரௌரவம், கும்பீபாகம், அவீசி, இம் மூன்று நரகமும் இராசாதி ராசநரகம். இதிலொன்றைச் சூழ்ந்த வுபநரகம் ஒன்றுக்கொன் றெவ்வேழாக நரக மிருபத்தொன்று. நீக்கி நரக மிருபத்தொன்பது மொவ்வொன்றை மும்மூன்றாகச் சூழ்ந்த வுபநரகம் எண்பத்தேழு ஆகநரகம் நூற்றுநாற்பதென்று ஆகமங்களிற் பேதித்துக் கூறியவா றுணர்க. (எஅ)

அண்டங்க ளளவில்லை யென்பதனை யுவமை முகத்தா லுணர்த்துகின்றார்.

எண்ணரிய வாருயிர்க ளண்டமுமப் படிதானே
யெண்ணரிய வெனுமமல னியலெனின்மற் றோரியலி
னெண்ணியவ னளவிடுத லென்னையெனில் வினைவிதத்தாற்
பண்ணிடுவ னண்டவிதஞ் சிருட்டிதொறும் பலபடியால்.

எ-து. எப்படி யான்மாக்க ளளவிறந்த கோடி யுண்டோ அப்படியே யிவ் வண்டவகையு மளவிறந்தகோடியென்க. மலமில்லாத சிவபிரானருளிச் செய்த திவ்யாகமங்களு மளவிறந்தன ஆகையா லளவிடுதற்கரிது, ஆனால்

அவ னருளிச்செய்த திவ்யாகமங்களிற் காமிகம், பதார்த்தம், யோகசம் இவைகள் நூருயிரஞ் சுலோகமென்று அளவிட்டுக் கூறுத லென்னையோ வெனிற் கேட்கிறவர்களுடைய புத்தி தாரதன்மியத்துக் கிடாகப் பெருக வுஞ் சிறுகவுங் கூறினேன். அவர்களுக்குப் புத்திபெருத்துஞ் சிறுத்து மிருப்பா னேனெனில் ஆன்மாக்கள் செய்த கன்மானுகுணமாக அவரவர் புத்தியை யேறக்குறைச்சலாகப் பிரகாசிப்பிப்பன், அதுபோலச் சிருட்டிதொறும் பலபல விதமாக வண்டங்களை யருளிச்செய்வான். எ-று. (௭௧)

இந்நூல், இவ்வாகமத்துட் சேர்ந்ததென்பதனை
யுணர்த்துகின்றார்.

ஏகனருள் சிவதருமோத் தரமெனு நூ லெண்ணுங்கா
லாகமத்துட் சருவோத்தத் துபபேத் மதனுமே
லாகமத்துட் படியிதனு ளருகிவரு மெனவறிக
வாகமத்தின் படிமற்றை யியலுள்ளு மடைந்திடுமே.

எ-து. தனக் கொப்பொருவருமில்லாத சிவபிரானருளிச்செய்த சிவ தருமோத்தரம், மூலாகமமோ உபாகமமோவெனின் மூலாகமத்திலிருபத்தைந் தாகமமாகிய சருவோத்தமென்னு மாகமத்தில், ஈசானம் சிவதன்மம் சிவதரு மோத்தரம் திவ்யப்புரோக்தம் குபேராக்கியம் எனப்பிரிந்த பேதமைந்துள்:— இச்சிவ தருமோத்தரமும் உபாகமமாகையாலே மற்றாகமத்திற் கூறிய பொருள்களுமிதனுளருகிவருமென்க. ஆதலாலிஃது மிகைபடக் கூறலென்னுங் குற்றமன்று, அதுவல்லாமல் சிவஞானயோகவியலினும் பரிகாரவியலினுங் கலந்துவரும். எ-று. (௮௰)

இனிப் புவலோக முதல் மேல் அண்டகடாகம் வரை யுள்ள வுல
கங்களும் அவற்றி னளவு முதலியனவும் பத்துச்
செய்யுளா லுணர்த்துகின்றார்.

தணர்த்தல்மு முனிவரனே தகைபெறவே தொகையாக்கி
யுரைத்தனமேற் புவலோக முதலாய வுலகினையுந்
தரித்திடுக தொகைசெய்தே சாற்றிடுவாந் தவறறவே
விரித்தவுரை விளம்புமவர் வினைவிரைய வீட்டிடவே.

எ-து. முனிவனே பூலோகத்தின் சொரூபத்தை முறையாகத் தொகுத்துச் சொன்னோம். மேற் புவலோக முதலிய வுலகங்களை யைம்பது கோடி யளவிற் குறையாமற் றொகுத்துச் சொல்வா மதனை யறிக. இவ்வாறு தொகுத்துக் கூறும். அதைக் குற்றமில்லாமல் யாதொருவர் விரித்துக்கூறுவ ரவர்கள் வினை விரைவில் நீங்கிப்போம்படி சொல்வாம். எ-று. ()

கலிவிருத்தம்.

தரைக்கு மேற்புவ லோக மதூதனி
லிருக்கன் சோம னெனுமிவ ராதிய

ரிருப்பர் தத்தம் பலத்தினை யெய்தியே
பரித்த நீளம் பதினெண் ணிலக்கமே.

எ-து. இப்பூமிக்குமேற் புவலோகம், அப்புவலோகத்தில் சூரியன் சந்திரன் ஆதியர் தத்தம் பதங்களிற் சஞ்சரித்திருப்பார்கள். இவ்வாறு தரிக்கப்பட்ட புவலோகம் பதினெண்ணூறாயிரம் யோசனை யுயரமுண்டு. எ-று.

சஞ்சரித்த லெத்தன்மையெனில். சூரியன் பதத்துக்குக் கீழாகப் பத்துவாயுவும், எழு மேகங்களுங் கூடிச் சஞ்சரிக்கும் வகையாவன—விதனுவான், ரசேதகன், அக்கினிப்பிரசேதகன், செசனி, அவுத்தன், வச்சிராங்கதன், வயுத்தியுதன், இராவதன், சங்வர்த்தன், விசங்வர்த்தன் என வாயுக்கள் பத்து. இவைகளுக்கு வியாபாரமாவன. விதன்னுவானென்னும் வாயு பூமிக்குமேலே பதினாயிரம் யோசனை யளவாகச் சஞ்சரித்து ஔஷதிகளுக்குப் பலங்களையு முண்டாக்கிக் கழுகு முதலிய பறவைகள் பறப்பதற் காதாரமாயிருக்கும். பிரசேதனென்னும் வாயு அதற்கு மேலாகப் பதினாயிரம் யோசனை யளவாகச் சஞ்சரித்து விருக்ஷங்களையும் பயிர்களையு மவ்வக்காலங்களுக் கீடாக வேதனையும் பண்ணி முறிக்கும், அக்கினிப் பிரசேதனென்னும் வாயுப் பதினாயிரம் யோசனை யளவாக வியாபித்து முற்கூறிய மரங்களையும் பயிர்களையு முலர்த்தி வீட்டையுஞ் சுட்டுச் சமுத்திர சலத்தினலதைச் சமிப்பிக்கும், இம்மூன்று வாயு மேகங்களைப் பொருந்தாமற் றனே சஞ்சரிக்கும், இனிச் செசனி யென்னும் வாயு சத்துகனென்னு மேகத்துடனே பொருந்தி மீன் ஆமை தவளை முதலிய வெல்லாம் துயருறப்பொல்லா மழையைப் பொழியும். அவுத்தனென்னும் வாயு, ரோதகனென்னு மேகத்துடனே பொருந்திப் பதினாயிரம் யோசனை யளவாக வியாபித்து விடமாகிய மழையைப் பொழிந்து அதனு லான்மாக்களை நாசம் செய்யும், வச்சிராங்கதனென்னும் வாயு உபலகனென்னு மேகத்தைப் பொருந்தி யிரத்தம் ஆலாங்கட்டி, கற்களையும் பொழியும், வயித்தியுதனென்னும் வாயு வயித்தியுதனென்னும் மேகத்தைப் பொருந்திப் பதினாயிரம் யோசனை யளவாக மேலே சஞ்சரித்து இடி மின் முதலியவற்றை யுண்டாக்கும். இராவதனென்னும் வாயு புட்டிவதனென்னு மேகத்தைப் பொருந்திப் பதினாயிரம் யோசனை யளவு சஞ்சரித்து ஆன்மாக்களுக் குபயோகமாகிய நல்ல மழையைப் பொழியும், சங்வாதனென்னும் வாயு விரோதமென்னு மேகத்தைப் பொருந்திப் பதினாயிரம் யோசனையளவு வியாபித்து வியாதியை யுண்டாக்கிற சலத்தைப் பொழியும். விசங்வாதனென்னும் வாயு குரோதமென்னும் மேகத்தைப் பொருந்தி மேற் பதினாயிரம் யோசனையளவு சஞ்சரித்து ஆன்மாக்களுக்கு யுத்தத்தாலும் வியாதிகளாலுஞ் சஞ்சரிக்கிற மழையாகப் பொழியும், ஆக வாயு பத்து. மேகமேழும் பூமிக்குமேலே யொன்றக்கொன்று பதினாயிரம் யோசனை யளவாக மேன்மேல் சூரியபத மளவாகச் சஞ்சரிக்கும், அம்மேக மேழையு மொவ்வொரு மேகத்தை முப்பதினாயிரங்கோடி மேகஞ் சூழ்ந்து சேவித்திருக்கும், விதன்னுவான் முதலிய வொன்பது வாயுக்கள் பதத்

திலு மடைவே யிருப்பார்கள். யாவனெனில் சித்தர்களும், சத்தமாதர்களும், சித்தசாரணரும், நாராசஞ், சங்க முதலிய ஆயுத தேவதைகளும், அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபமென்னு மட்டகஜங்களும், பக்ஷிராசனாகிய கருடனும், ஆகாசகங்கையுந், தரும சொரூபமா யிருக்கிற விடப தேவரும், தக்ஷப்பிரசாபதியுமென்க. பத்தாம் வாயுவாகிய விசங்வர்த்தனில் ஆதித்தர் பன்னிருவர். அசுவனிதேவரிருவர். உருத்திரர் பதினொருவர். எண்வகைவசுக்களாவார். ஆகிய முப்பத்து மூவரும் வசித்திருப்பர்கள். ஆதித்தர் பன்னிருவராவார். வைகர்த்தனன், விபச்சுரன், மாத்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப்பிரகாசன்; உலோகசாக்ஷி, தி விக்கிரமன். ஆதித்தியன், சூரியன், அங்சுமாலி. திவாகரன் என்க. உருத்திரர்கள் பதினொருவராவார் மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசையன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் என்க. அட்டவசுக்களாவார் அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன்,பிரத்தியூசன்,பிரபாசன் என்க. இதனை "நால்வேறியற்கைப் பதினொருமூவரோ டொன்பதிற்றிரட்டி யுயர்நிலைபெறீஇயர்" என்புழி நச்சினார்க்கினியர் கூறுதலானுமுணர்க.

ஓரி லக்க மருக்க னுலகமே
லோரி லக்க முடுபதி லோகமே
லோரி லக்க முடுக்க ளுலகமே
லீரி லக்கம் புதனுல கேயுமே.

எ-து. முற்கூறிய பத்தாம் வாயுவில் நூறாயிரம் யோசனை யுயரத்தில் யாகமயமா யிருக்கிற வோராழியையு மேழிசைமயமா யிருக்கிற வேழு பரிகளையும் நரகங்களான வடத்தையும் அருணனை தேர்ப்பாகனையும் பெற்று அமிர்தத்திற் றோன்றித் திவ்யமயமா யிருக்கிற தேரின்மே லொன்பதினாயிரம் யோசனை யுயரமுமுடைய சூரியர்க ளெழுந்தருளி யிருந்து சிவாக்கினையினாற் றொழினடத்தவேண்டி மகாமேருவை வலமாக வருவர். ஆனால் சூரியர் பன்னிருவர்களு மெக்காலத்து மொவ்வொருவராகச் சஞ்சரிப்பார்களோ வல்லாமல் பன்னிருவருங் கூடிச் சஞ்சரிப்பர்களோவெனிற் சித்திரைமாதமுதற் பன்னிரண்டு மாதமும் வைகர்த்தனர்முதற் பன்னிருவரும் அத்தேரிலேறிச் சஞ்சரிப்பர்களென்க. அச்சூரியர் பதத்துக்கு மேலே யிருபத்தேழு நாளுக்கும் நாயகனாகிய சோமனுலகும் நூறாயிரம் யோசனை யுயரம் பொருந்தும். அச்சோமனுலகுக்குமேலே நூறாயிரம் யோசனை யுயரத்தில் நக்ஷத்திரமண்டலங்களு மிராசிமண்டலங்களும் பொருந்தும், அந் நக்ஷத்திரமண்டலத்துமே லிரண்டுநூறாயிரம் யோசனை யுயரத்திற் புதனுலகம் பொருந்தும். எ-று.

(௨௬)

ஈரி லக்கமொண் சுக்கிர னெல்லைமே
லீரி லக்கமங் காரக னெல்லைமே

வீரி லக்கஞ் சுரர்குரு வெல்லையே
வீரி லக்கஞ் சனியுல கேயுமே.

எ-து. முற்கூறிய புதனுலகத்துக்குமே லிரண்டுநூறாயிரம் யோசனை யுயரஞ் சுக்கிரனுலகம் பொருந்தும், அச்சுக்கிரனுலகத்துக்குமே லிரண்டு நூறாயிரம் யோசனை யுயரஞ் செவ்வா யுலகம் பொருந்தும், அச்செவ்வாயு லகத்துக்குமே லிரண்டுநூறாயிரம் யோசனை யுயரந் தேவகுருவாகிய வியாழபகவானுலகம் பொருந்தும், அக்குருவுலகத்துக்குமே லிரண்டுநூறாயிரம் யோசனை யுயரம் சனிபகவா னுலகம் பொருந்தும். எ-று. (அச)

ஓரி லக்கமேழ் மாதவ ரூர்மிசை
யோரி லக்கந் துருவ னுலகுயர்
பாரின் மீது பதினைந் திலக்கமுஞ்
சேரு மேபுவ லோகஞ் சிறக்குமே.

எ-து. அச்சனி யுலகத்துக்குமேல் அத்திரி, வசிட்டர், புலத்தியர், புலகர், பிருகு, அங்கிரா, மரீசி ஆக இவ்வேழ் விருடிகளு மிருக்கு முலகம் நூறாயிரம் யோசனை யுயரம் பொருந்தும். அவ்விருடிகள் பதத்துக்கு மேலாகத் துருவபதம் நூறாயிரம் யோசனை யுயரம் பொருந்தும், அத்துருவன் பதினுலகங்களுடன் கூடி யிருப்பன். முற்கூறிய நக்ஷத்திரங்களெல்லா மித்துருவ னாதாரமாகிக் கட்டப்பட்டுக்கொண்டிருந்து சஞ்சரிக்கும். அவற்குத் துருவனென்னும் பெயர் பெற்றது எக்காரணத்தாலென்னிற் சிவசத்தியதிட்டித் தலையாமற் பண்ணுகையாலென்க. ஆகப் பூமிக்குமேலே சிறப்பினையுடைய புவலோகம் பதினைந்துநூறாயிரம் யோசனை யுயரமென்க.

அதற்கு மேலமை ரோச னரும்புரி
யதற்கு நீள மசீதியு மைந்துமா
மதற்கு மேன்மக லோக மதுதனில்
வதிப்பர் மாதம ராதி மரீசியும்

எ-து. அப்புவலோகத்துக்கு மேற் சுவர்க்கலோகம் எண்பத்தஞ்சுநூறாயிரம் யோசனை யுயரம் பொருந்தும். அதற்கு அரசன் இந்திரன். அவனைத் தேவர்களு மிருடிகளுந் தேவஸ்திரிகளுஞ் சேவித்திருப்பார்கள். அதிலக்கினிட்டோம முதலிய யாகங்களைப் புரிந்தவர்களுந் தீர்த்த யாத்திரை பண்ணினவர்களுந் தானமர்விரத முதலியவற்றைப் பண்ணினவர்களு மந்தலோகத்தை யடைந்திருந்து அதிலுண்டான போகங்கள் புசித்துத் தொலைந்தவாறே பூலோகத்தில் வந்து நல்ல மானிடராய்ப் பிறப்பார்கள். அச்சுவர்க்கத்துக்குமேல் மகலோகம். அதிலிருப்பார் மரீசி, மார்க்கண்டர், சித்தர்கள் முதலானோர். எ-று.

(அரு)

உயரந் தானிரு கோடி யுறுமதற்
குபரு மெல்லை சனதல முன்னத

முயரு நாலிரு கோடியென் றுன்னுக
வுயரு மாபிதிர் தேவ ருறைவரே

எ-து. முற்கூறிய மகலோகம் இரண்டுகோடி யோசனை யுயரம் பொருந்தும். அம்மகலோகத்துக்குமேல் செனலோகம் எட்டுக்கோடி யோசனை யுயரம் பொருந்தும், அதில் கவ்வியவாகனர், அனலர், சோமர், யமர், அரியமணர், அக்கினிவாக்கர், பெரக்கிஷ், ஆசியபர், சோமபா என்று சொல்லப்பட்ட பிதிர்தேவர் பதின்மரும் சங்கரிஷணர், வாசுதேவர், பிரத்தியுமினர், நிருத்தர் இந்நால்வரும் அத்தசியசாரமும் மதன முதலானோரு மிருப்பார்கள். எ-று. (அஎ)

அதற்கு மேற்றவ லோக மருந்தவ
ரதற்குள் வாழ்வர் சனகளை யாதிய
ரதற்கு நீளமு மாறிரு கோடியா
மதற்கு மேலயன் றேசமென் றுய்கவே.

எ-து. அச்செனலோகத்துக்குமேற் றவலோகம் பன்னிரண்டுகோடியோசனை யுயரம் பொருந்தும், அதிலிருப்பவர்கள் சனகர், சனந்தர், சநாதர், சனற்குமாரர், சங்கு திரிசங்கு இருபு இவ்விருடிக ளெழுவரும் அரிதாகிய தவஞ்செய்து அதைவந் தடைந்திருப்பார்கள், அத் தவலோகத்துக்குமேற் சத்தியலோகமென் றறிக. எ-று. (அஅ)

அதற்கு நீளமு மாறுடன் பத்துறு
மதற்கு மேலரி தேசமென் றுய்கவே
யதற்கு நீணாற் கோடியென் றுய்கவே
யதற்கு மேற்சிவ லோகமோ ராறுறும்.

எ-து. அச்சத்தியலோகம் பதினாறுகோடி யோசனை யுயரத்தைப் பொருந்தும், அதி னடுவே பிரமனிருப்பன். கிழக்கே யிந்திரநீல நிறம்போன்ற வடிவையுடைய இருக்குவேத மிருக்கும் மேற்கே பதுமராக நிறம்போன்ற சாமவேத மிருக்கும். தெற்கே மைநிறம்போன்ற அதர்வணவேதமிருக்கும். மற்றுமுள்ள விதிகாசபுராண மீமாமிசமுதலிய சாத்திரங்களுஞ் சாவித்திரியும் அங்கே யிருக்கும். அப் பிரமலோகத்துக்குமேல் அரியினுடைய லோகமென்க, அது நாலுகோடி யோசனையாம். அதில் மாயனிருந்து பிராணிகளைப் பரிபாலனம் பண்ணிக்கொண் டிருப்பன், அதி லவனை வழிபட்டபத்தர்கள் அடைந்திருப்பர்கள், அவ்வுலகத்துக்குமேற் சிவலோகம் ஆறுகோடி யோசனை யுயரத்தைப் பொருந்தும். அச் சிவலோகத்தின் வளத்தை விரித்துக் கூறுதற்கரிது. அதிற் பார்வதியாருடன் விட்டுணு பிரமன் முதலிய தேவர்கள் சேவிக்க உருத்திரமூர்த்தி யெழுந்தருளி யிருப்பர். எ-று.

அற்கு மேலுறு மண்டக டாகமொய்ம்
பதற்க னந்தனைக் கோடியென் றுய்கவே

மதித்த வைம்பது கோடியும் வாய்ந்தமை
கதித்த வண்ட மெலைக்கடா கத்தெதாடும்.

எ-து. அச்சிவலோகத்தின் மேல் நெருங்கிய அண்டகடாகத்தி னுயரங் கோடியோசனை யென்க, ஆகப் பூமிக்கு மேலுயர்ந்த வண்டகடாகம் வரை யைம்பதுகோடியோசனை யுயரமென்க. எ-று.

அதன்வகை புவலோகம் பதினைந்து நூறாயிரம், சுவலோகம் எண்பத்தைந்நூறாயிரம் மகாலோகம் இரண்டுகோடி, செனலோகம் எட்டுக்கோடி, தவலோகம் பன்னிரண்டுகோடி, சத்தியலோகம் பதினாறுகோடி, விட்டுணுலோகம் நாலுகோடி, உருத்திரலோகம் ஆறுகோடி, அண்டகடாகங் கோடி; ஆக வைம்பது கோடியென்க. (சுய)

கோபுர மிருக்குந் தலத்தை யுணர்த்துகிறார்.

வேறு.

உரைத்தவித வுலகத்து ளொப்பிலிமுப் புரத்தினையு
மெரித்தவிறை யெரியாகி யிருவருறு மிகலினையும்
மரித்தருள்செ யமலனெலை நந்தைமுத லைந்தினையு
தரித்திணையைத் தரியாத தலமுடிவிற் றங்கியதே.

எ-து. இத் தன்மையாய்ச் சொல்லிய சிவலோகத்தில் ஒப்பில்லாதவனுந் திரிபுரத்தை யெரித்த விறைவனும் அழலுருவாகியயனுமரியுந் தம்மிற்பொருந்து மாணவமாகிய மாறுபாட்டைக் கெடுத்து அவர்க்குள் செய்யு நின்மலனுமாகிய சிவபெருமானுடைய திருக்கோயிலுள் முடிவிடத்தில் நந்தைமுதலிய வைந்து பசுக்களையுந் தாங்கி யொப்பற்ற கோபுரம் விளங்கும். எ-று.

கோபுரம்-பசுப்புரை. (சுக)

சிவலோகத்தின் றன்மையைப் பதினெட்டுச் செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஒப்பரியன் புரிவளமு முரைவிரியி னடங்காது
செப்பரிய வதன்வளத்திற் சிறுதுரைப்பஞ் சிந்தைசெய்க
வெப்பொருளுந் தானேயா யாவையினுந் தோயாத
வப்பொருளை யழுக்கொழிய வகத்துணர்ந்த வருந்தவனே.

எ-து. எல்லாப் பொருள்களுந் தானேயா யவற்றிற் சேராத வச்சிவத்தை மும்மலவழுக்கு நீங்க வுள்ளத்தி னுணர்ந்தவனே, யொப்புரைத்தற்கரிய வவனது சிவலோகத்தின் வளங்களும் விரித்துச் சொல்லினும் அடங்காது, ஆயினுஞ் சொல்லுதற்கரிய அச் சிவலோகத்திற் சிறிது சொல்லுவாஞ் சிந்தைசெய்க. எ-று.

உம்மை விகாரத்தாற் றொக்கது. (சுஉ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

இரவியை நிகர்பல விரதமு மொருபா லெழின்மட வரலிய
    ரியலிசை யொருபாற்
பரதமு முறைமுறை பயிலுந ரொருபாற் படகமு முதலிய
    பறையொலி யொருபான்
மருமலர் விரவிய மரநிரை யொருபான் மறைபயில் விரதியர்
    வளவன மொருபாற்
புரைவரை விரவிய புரிசைகள் பலபாற் பொருவிலி வரைவிலி
    மருவிய புரமே.

எ-து. ஒப்பில்லாதவனுய் மேருவை வில்லாகவுடைய இறைவனெழுந்தருளிய சுவலோகத்திற் சூரியப் பிரகாசம்போன்ற பலதேவர்களொருபாலும், அழகிய வரம்பையர்கள் பாடு மியலிசைக ளொருபாலும், பரதவிதிப்படி நடனஞ்செய்யு மரம்பையர்க ளொருபாலும், மணமருவிய மலர்களையுடைய மரத்தி னெழுங் கொருபாலும், வேதங்களையோதும் விரதியர் நிறைந்த வளத்தையுடைய வனங்க ளொருபாலும், மலையையொத்து விளங்கிய மதில்கள் பலபாலிலும் விளங்கின. எ-று. (கூகூ)

நிலையொரு பதுசத நெடுமட மொருபா னெடியன கொடுமணி
    நிகழொலி யொருபால்
விலையில நவமணி விரிதிணை பொருபால் விழைவினர் விழைவன
    விளைநிதி யொருபா
லலைமலி புனனதி யணியுற லொருபா லளிமுரல் குவளைக
    ளலர்சுனை யொருபாற்
பொலன்முடி யமரர்கள் பொருளிய தொருபாற் பலியுரி யரையினன்
    மருவிய புரமே.

எ-து, புலித்தோலுடுத்த வரையுடையா னெழுந்தருளிய சிவலோகத்திலுன்னதமான ஆயிரக்கால் மண்டப மொருபாலும், நீண்ட கொடியிற் கட்டும் விளங்கிய மணியோசை யொருபாலும், விலையில்லாத நவமணிகுயிற்றிய திண்ணைகளொருபாலும், விருப்பினையுடையவர்கள் விரும்புவனவாகிய நவமணிக ணிறைந்த சங்கநிதி பதுமநிதிக ளொருபாலும், அலைமலிந்த புனலையுடைய நதிக ளொருபாலும், வண்டுகெண்முழங்கு நீலோற்பலம் விரிந்த தடாகங்க ளொருபாலும் பொன்முடிசூடிய தேவர்கள் கூடுமிடங்க ளொருபாலும் விளங்கின. எ-று. (கூச)

புதுவிரை மலர்கொடு புனைமனை யொருபாற் பொறிமணி யவைகொடு
    புனைமனை யொருபான்
மதியென விதிவழி வனைமனை யொருபான் மரகத வொளியின
    வனைமனை யொருபாற்

கதிரவ னொளிநிகர் கடிமனை யொருபாற் கலைகண் மயமுறு
கனமனை யொருபாற்
சதிவழி நட்பிடு தகைமைய மிமையோர் தலைமைய னிலவிய
தனிநிகர் தலமே.

எ-து. தாளவொத்தின்படி நடனஞ்செய்யும் பெருமையையுடைய வனாய்த் தேவர்க டேவனாகிய சிவபெருமா னெழுந்தருளியதனாற் றானே யொப்பாகிய சிவலோகத்தின் மணமுறுகிய அலர்ந்த மலரா லலங்கரிக்கப்பட்ட மாளிகைக ளொருபாலும், தீப்பொறிபோன்ற மாணிக்கங்களாலலங்கரிக்கப்பட்ட மாளிகைக ளொருபாலும், சிற்பநூல் விதிப்படி செய்த சந்திரனைப்போன்ற மாளிகைக ளொருபாலும், ஒளியையுடைய மரகதத்தாலலங்கரிக்கப்பட்ட மாளிகைக ளொருபாலும், சூரியப் பிரகாசம்போன்ற காவலையுடைய மாளிகைக ளொருபாலும், மாற்றுயர்ந்த பொன்மயமான பெரிய மாளிகைக ளொருபாலும் விளங்கின. எ-று. (௧௫)

கலிவிருத்தம்.

ஒருபா லரிபோ லுடலார் சிலரே
யொருபா லவரே புலிபோ லுடையா
ரொருபா லுடையார் கரிபோ லுடனே
யொருபாற் பரிபோ லவரே யுடையார்.

எ-து. அச்சிவலோகத்தி லொருபாற் சிங்கம்போன்ற உருவமுடைய சிலரே ஒருபாற் புலிபோலவும் ஒருபால் யானைபோல வுருவமுடையவரோ யொருபாற் குதிரையைப்போலவும் விளங்கினார். எ-று. (௧௬)

ஒருபா லுடலா னெனவே யுடையா
ரொருபா லுழைபோ லவரே யுடையா
ரொருபான் மயில்போ லுடையார் சிலரே
யொருபா லவரே குயில்போ லுடையார்.

எ-து. அச்சிவலோகத்தி லொருபால் ஆனைப்போல வுருவமுடையவரே யொருபான் மான்போல வுருவத்தையுடையவராயும், ஒருபால் மயில்போலுருவமுடைய சிலரே யொருபாற் குயில்போ லுருவமுடையவராயும் விளங்கினர். எ-று. (௧௭)

சிலரே யொருவா ணுகமே செறிவார்
சிலரே பலமா முகமே செறிவார்
சிலரே யொருகா லுடனே செறிவார்
சிலரே பலகா லுடனே செறிவார்.

எ-து. அச்சிவலோகத்திற் சிலர் ஒளியுள்ள வொருமுகமே பொருந்துவார்கள். சிலர் பன்முகமே பொருந்துவார்கள். சிலர் ஒருகாலுடனே பொருந்துவார்கள். சிலர் பலகாலுடனே பொருந்துவார்கள். எ-று.

ஏகாரங்கள் இசை நிறை. (௧௮)

சிலரே செவியும் பெரிதே செறிவார்
சிலர்பா லஃது மிலதே சிறிதுஞ்
சிலரே பலவா முருவஞ் செறிவார்
சிலர்தா மியல்பா முருவஞ் செறிவார்.

எ-து. சிலர் பெரிய காதுகளையும் பொருந்துவார்கள். சிலரிடத்துச் சிறிதாயினும் அக்காதுமிலதாயிற்று. சிலர் பலநிறம்பெறு முருவங்களைப் பொருந்துவார்கள். சிலரியல்பான உருவங்களைப் பொருந்துவார்கள். எ-று. செவியுமென்று மும்மையான் மற்றவெங்கங்களுங்கொள்க. (௯௯)

விதமே பலவே விளையா டவிறு
விதமே யிதமே யிவர்பா லிவையு
மதிமே தையரோ யழியா தவரோ
பதமே பணிவார் பரமே சனையே.

எ-து. பேரறிவினராய் ஒருகாலத்துங் கெடாதவராய்ப் பரமேசன் பதம் பணிபவராதலிற் பலவகையான இவ்வுருவங்கள் யாவும் அப்பரமேசன் திருவிளையாட்டினால் நன்மைக்கெல்லா மேலான நன்மையாகவே அச்சிவலோகத்துள்ளா ரிடத்துப் பொருந்தும். எ-று. (௱)

திணமே யுடையார் சிவனே வியதே
யெணமே யுடையா ரிடரோ துமிலார்
கணமே யிவரோ கரிசே துமிலார்
நணமேன் மையரோ நலரோ நலரே.

எ-து. பத்திவயிராக்கியத்தின் உறுதியை யுடையாரும் சிவபெருமானருளிய பணிவிடையி னிடத்தே கருத்தினை யுடையாரும், மலநோய் சற்றுமில்லாதவரும், ஒரு குற்றமுமில்லாதவரும், யாவருஞ் சேரவிரும்பு மேன்மையினை யுடையாரும்; மிகுந்த நலத்தினை யுடையாருமே அச்சிவலோகத்தில் கணங்களாவார். எ-று. (௱௧)

அடிசேர் பலமே னியரோ படருஞ்
சடைமா முடியார் தகுநீ றுடையார்
புடையே புயமு மொருநா லுடையா
ரடியா ரவரோ கணநா யகரோ.

எ-து. நற்குணமமைந்த பல திருவுருவங்களை யுடையாரும், படர்ந்த பெரிய சடைமுடியினை யுடையாரும், தகுதியான திருநீற்றை யுடையாரும், பக்கத்திற் சதுர்ப்புயங்களை யுடையாரும், அடிமைத் தன்மையை யுடையாருமே அச்சிவலோகத்திற் கணநாதராய் விளங்கினர். எ-று. (௱௨)

உடையார் விழியு மொருமூன் றினையு
முடையார் புவியி னுரியும் மணாயி

னுடையார் மழுவு மொளிர்வே லினையு
மடியா ரவரோ கணநா யகரே.

எ-து. மூன்று கண்களையு முடையாரும், அரையிற் புலித்தோலினை யுமுடையாரும், மழுவினையு மொளிர்கின்ற வேலினையு முடையாரு மடியா ராகியுங் கணநாதராகியும் அச்சிவலோகத்து விளங்கினர். எ-று.

வேறு.

ஆதியு மந்தமு மிலனவ னமரரு
மோதியும் வேதமு முணர்வரும் பெருமையன்
போதகன் வேதகன் பொருவில னிருமலன்
பாதபங் கயமுனு மவர்பலம் பகர்வமே.

எ-து. முதலுமீறு மில்லாதவன் றேவரும் எவ்வகையானும் வேதமு மறிதற்கு அருமையான பெருமையினை யுடையன் தன்னடியருக்குத் தோன்றுத லினையாயிருந் துள்ளத்துணர்த்தும் போதகன் அவ்வடியார்களை மலத்தினின்றும் வேறுபடுத்துவோன் ஒப்பில்லாதவன் மலரகிதன் அவனது பாதத்தாமரையைச் சிந்திக்கும் பெரியவரது பலத்தினைச் சொல்லுவாங் கேட்பாயாக. எ-று.

ஆதியுமந்தமு மிலன் என்றார். 'ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ் சோதியை' எனத் திருவாதவூரடிகளும் அருளிச்செய்தமை நோக்கி. (௬௪)

உருவினு லுவமையு மொருவினர் மருவினர்
திருவினு ருருவினர் தெரிவைமார் செறியவே
முரவமே முதலவா மழலையு முரலவே
யிரவியா யிரமுநே ரிரதமே சரதமே.

எ-து. சிவபெருமான் சிபாதத்தைச் சிந்திக்குஞ் சிவகணங்கள் தங்க ளுருவத்தினு லொப்பற்றவராகித் திருமகளைப்போலும் அழகினையுடையாகிய தெய்வப்பெண்கள் தங்களிடத்து நெருங்கிப் பணிவிடை செய்யவும், முரவமுதலிய வாச்சியங்கள் முழங்கவும், ஆயிரஞ் சூரிய ருதித்தாற்போலும் பிரகாசமுள்ள தேரினிடத்து மெய்ம்மையாகவே மருவிவாழ்ந்தனர். எ-று.

மழலை—ஆகுபெயர். (௬௫)

கொத்துலாங் குழலினுர் குழலினேர் மொழியினுர்
முத்துலா முறுவலார் முகையுநேர் முலையினுர்
சித்தமுங் கவரவே சிலரவர் செயலுகந்
தெத்திறுங் குறைவெமக் கெனவுமங் கிசைவரோ.

எ-து. பூங்கொத்துலவுங் கூந்தலினை யுடையாரும், குழல்போலு மொழியினை யுடையாரும், முத்தைப்போ லொளிவிடு நகையினை யுடையாரும், அரும்புபோன்ற முலையினை யுடையாருமாகிய சில ரம்பையர் சித்தத்

தையுங் கவர்தலிருல் அச்செயலை விரும்பி யெமக்கு ஒன்றாலுங் குறைவி ல்லையென்று அவர்கள் சொல்லவும் அச்சிவலோகத்துள்ளார் அவ்வாறு பொருந்துவார்கள். எ-று. (ாசு)

ஓதுவார் வேதமுஞ் சிலருணக் குறுபய
னீதெனு வேதெனு வேகமாய் மோகமுங்
காதுவார் காதுவார் குழையினன் கழலுனும்
போதமே பூதியாய் வேறுணர் போகமே.

எ-து: காதில் ஒள்ளிய குண்டலத்தையுடைய சிவபெருமான் போதங்களைக் கருதுமறிவே யனுபூதியாய் மற்றைப் போகங்களை நினையாதவர் தனித்திருந்து மோகங்களைக் கெடுப்பார், வேதத்தினும் பொருந்தும்பயன் யாதெனக் கேட்குஞ் சிலர்விருவிற்குப் பொருந்தும் பயனீதென்றும் விடை கூறுவார். எ-று. (ாஎ)

முத்தனே முதல்வனே முடையுடற் பொறையறுத்
தத்தனே சிவபுரத் தடியரைச் செறியெனத்
துத்தியஞ் சொன்னமெய்த் தொண்டருந் துரிசறச்
சித்தமுஞ் சிவமுறச் செறிவராங் கரிதரோ.

எ-து. அடியார்க்கு முத்தியைக் கொடுப்பவனே! எப்பொருளுக்கு முதலாயுள்ளவனே, புலானாற்றத்தை யுடைய உடற்பாரத்தைக் கெடுத்த அத்தனே, சிவலோகத்தின்க ணடியார்களை இருத்துவாயென்று துதிசெய்யுமெய்யடியாரும் மலக்குற்ற நீங்கவும், சித்தமுஞ் சிவத்தைப் பொருந்தவும், அச்சிவலோகத்தில் வாழ்வார்கள். அவரவர்க் கங்கு அரியது யாது. எ-று.

பொன்னிற முடையரும் புயனிற முடையரு
மின்னிற முடையரும் விரைமலர்க் கமலமு
மென்னிற முடையரு மெரிநிற முடையரும்
பன்னிற முடையரும் பவளமே னியருமே.

எ-து. பொன்போன்ற நிறமுடையாரும், மேகம்போன்ற நிறமுடையாரும் மின்போன்ற நிறமுடையாரும் மணம்விரித்த வெண்டாமரை, செந்தாமரைபோன்ற நிறமுடையாரும் சூரியன்போன்ற நிறமுடையாரும், அக்கினிபோன்ற நிறமுடையாரும் பலநிறமுடையாரும், பவளம்போன்ற நிறமுடையாரும், அச்சிவலோகத்தில் வாழ்வார்கள். எ-று.

என்னிறம் இருள்நிறமென் றுரைப்பினும் அமையும். (ாக)

அச்சிவலோகத்திற் சிவபெருமான் எழுந்தருளுந் திருக்கோயிலின் றன்மையை ஆறுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இத்தகைய விதமுற்வே யெழிலுடைய சிவபுரிகள்
ளெல்லை வட்டம்

விந்தகற்கு விடைமேற்றும் வேதியற்கு மந்திரந்தான்
வியந்த தூங்கஞ்
சுத்தவொளிப் படிகமயஞ் சுடர்மணியா றுமணியத்தாற்
றோரணதி
மெத்தகைய வுறுப்பினையு மியற்றியிட விசைந்தவெழில்
வியம்ப லாமே.

எ-து. இத்தன்மையான குணங்கள்பொருந்தும் அழகையுடைய சிவலோகத்தில் வட்டமாகிய நடுவெல்லையில் ஞானமே திருமேனியாக வுடையாளும், இடபமேறும் வேதியனுமாகிய சிவனுக்கு, யாவராலும் வியக்கப்பட்ட உயரமும் பரிசுத்த வொளியினையுடைய பளிங்குமயமும் பெற ஒள்ளிய நவமணிகளாலும், பொன்னினாலும், தோரணமுதலிய எல்லா அங்கங்களையுஞ் செய்வது தானேயமைந்த திருக்கோயில் விளங்கிற்று அதனழகுசொல்லுமளவன்று. எ-று. (௫௰)

சுத்தவொளிப் படிகமயந் துளங்குமிளம் பிறைவிளங்கச்
சூடிச் சூடு
மத்தமலர்ச் சடைமுடியர் வரமுடையர் திரிநயனம்
வாய்த்து ளார்நங்
கைத்தலங்க ளொருநான்கிற் கனன்மழுவுந் திரிசிகையுங்
கதையும் வாளும்
வைத்துடைய கணநாதர் வரதனுக்குக் குணதிசைச்சந்
நிதியின் வாய்த்தார்.

எ-து. அச்சிவலோகத்தி லெழுந்தருளும் வரதனுக்குக் கீழ்த்திசைச் சந்நிதியில் பரிசுத்தமான வொளியினையுடைய பளிங்கு மயமாய் விளங்கும் இளம்பிறையை யொளிவிடச்சூடி ஊமத்தமலரை யணிந்த சடைமுடியாரும், வரங்கொடுக்குந் தகைமையுடையாரும், மூன்று கண்களை யுடையாரும், கரங்கள் நான்கினுங் கனல்போன்ற மழுவையுஞ் சூலத்தையுந் தண்டத்தையும் வாளினையுந் தரித்தவருமாகிய கணநாதர்கள் வாழ்ந்து பணிசெய்வார்கள். எ-று. (௫௰௧)

பரமசிவ மயமுணர்ந்த பாசுபதர் சைவர்கா
பாலர் பான்மை
விரதியர்மெய்த் தவரொன்று மவர்தாமு மேனுணர்ந்த
மேனி மேவி
விரவுவரத் திசைதன்னில் வியன்கமலத் தயன்றெருள்பால்
விரவ மெய்மைச்
சரசுவதி முனிவரர்க்குத் தலைமையுவங் கிரிவருஞ்
சார்வ ரங்கே.

எ-து. மேலாகிய சிவபெருமான் றன்மையை யுணர்ந்த பாசுபதரும் சைவரும் காபாலரும் மூறைமையினையுடைய மாவிரதியரும் மெய்ம்மையான தவத்தினை யுடையருமான அவர்களு மூன்சொன்ன சொரூபம் பெற்று அக்கீழ்த்திசைவாயிற் சந்நிதியிலிருந்து பணிசெய்வார்கள். தென்றிசைவாயிற் சந்நிதியிற் பெரிய தாமரையில் வாழும் பிரமனிருந்து பணிசெய்ய அவனுட னுண்மைச் சரசுவதியு மூனிவரர்க்குள் தலைமையான அங்கிராவும் அத்திசையி லிருந்து பணிசெய்வார்கள். எ-று. (௩௰௨)

செப்பியவத் தென்றிசையிற் கபிலாதி சித்தருமோ
  செறிவர் யோக
தற்பரநற் சனகசனந் தராமுழுவா யெழுவருமெய்த்
  தவருஞ் சார்வார்
மெய்ப்பொருளுக் கொப்பாகி வேதருமாய் மாயைக்கு
  வினையை வென்று
பொய்ப்பொருளை மதியாத பூதேச ராதியர்மேல்
  புடையிற் சார்வார்.

எ-து. சொல்லிய வத்தென்றிசையிற் கபிலாதியான சித்தர்களுங்கூடிப்பணிசெய்வர், அதுவல்லாமல் நன்மையான தற்பரயோகத்தையுடைய சனகர் சனந்தாராதியான சத்தவிருடிகளு முண்மையான தவத்தினரும் பணிசெய்வர். சாரூபத்தைப் பெறலால் மெய்மைப்பொருளுக் கொப்பாகி மாயாவினோதங்கட் காசா யிருவினை யொப்புவந்து பொய்யாகிய உலகை மதியாத பூதங்கட் கதிபர் மேற்றிசைவாயிற் சந்நிதியிற் சார்ந்து பணிசெய்வர்.

அத்திசையிற் பிராமிதனை யாதியரோ மூணங்கினரு
  மவர்க ளோடே
பத்திரையைப் பார்ப்பதியை யெழுவாய வெண்மருமோ
  படைக்க வல்ல
சத்திதாக் குஞ்சண்டப் பிரசண்ட வயிரவர்க
  டாமே லோரு
முத்தரத்திற் றிருமாலு முருத்திரரும் பருதியரு
  முள்ளா ரன்றே.

எ-து. அம்மேற்றிசையில் அபிராமி முதலான சத்தமாதர்களு மவர்களுடன் பத்திரை பார்ப்பதி முதலான வட்டகன்னியரும், எப்பொருளும் படைக்க வல்ல சத்தியையுடைய சண்டப்பிரசண்ட வயிரவராகிய மேலோரும் பணிசெய்வார்கள். வட திசைவாயிற் சந்நிதியில் திருமாலும், பதினொரு கோடி ருத்திரரும், பன்னிரண்டுகோடி சூரியரும் பணி செய்வார்கள். எ-று.

அத்திசையி லெண்வசுக்க ளரமகளிர் காந்திருவ
  ரியக்க ரல்லாச்

சித்தரியல் கிந்நரரர் சிறப்புடைய குய்யரழற்
சேடரொன்று
மித்தொகைய ரேயிசைவ ரின்றுமுள ரிணையிலியை
யிறைவன் றன்னை
வித்தகனை யுளத்திருத்தி விட்டாருந் தொட்டதுயர்
வேட்கை யெல்லாம்.

எ-து. அவ்வடதிசையி லட்டவசுக்களும் தெய்வமகளிரும் கந்திருவரும் இயக்கரும் அவர்களல்லாத சித்தர்களும் நல்லொழுக்கமுள்ள வித்தியாதாருஞ் சிறப்பினையுடைய குய்யகரும் அழல்போன்ற சேடருமாகிய இத்தொகுதியரும் பொருந்திப் பணிசெய்வார்கள். அவரல்லாமல் ஒப்பில்லாதவனும் எப்பொருட்கு மிறைவனுமான ஞானமூர்த்தியை யுள்ளத்தில் வைத்துத் தொன்றுதொட்டு வந்த சஞ்சித முதலிய துன்பங்களையும் ஆசைகளெல்லாவற்றையும் விட்ட பெரியவரு மவ்விடத்துள்ளார். எ-று. (௩௰௮)

சி. கைலாசத்திற் சிவபெருமா னெழுந்தருளியிருக்குந் தன்மையை
ஐந்து செய்யுளா லுணர்த்துகின்றார்.

இத்... மேயோர் தொழுதேத்த வாயிரக்கான் மண்டபத்து
விணை... மீசன்
முத்தனொரு முதல... மூவுலகாய்த் தழைத்தெழுந்து
மூவா மூர்த்தி
யத்தனர னணிகிளரு மரிபரித்த வாதன...
னலரின் மீதே
வித்தகவே தகியுடனும் வீற்றிருப்பன் வினைப்பயனை
விளைக்கவே தான்.

எ-து. இப்பண்பினையுடையார் வணங்கித்துதிக்க ஆயிரக்கான் மண்டபத்து நடுவில் அழகினையுடைய சிங்கங்கள் தாங்கும் ஆசனத்து ஆயிரவிதழையுடைய தாமரை மலரின்மேல் முத்தனுகியும் ஒப்பற்ற முதன்மையாய் மூன்றுலகமாய்த் தழைத்தெழுந்து கெடாத மூர்த்தியாகிய அத்தனுகியும் அரனுகியும் விளங்கிய ஒப்பற்ற பரமேசன் அடியவரைப் பக்குவப்படுத்துந் தன்மையையுடைய வேதகியாகிய பெருமாட்டியுடன் எழுந்தருளியிருப்பான் எவ்வுயிரு மிருவினைப்பயனை யனுபவிக்க. எ-று. (௩௰௯)

கண்டனுக்குக் காட்டாய கதிருதய மொருகோடி
கலந்த தென்ன
வெண்டனுக்குக் காட்டாய வெழிலுருவ மிசைந்திலங்க
விளைக்கு நீரும்
விண்டனுக்கு விளக்காய வெண்மதியும் விரவுசடை
முடிதன் மீதே
பண்டனுக்குப் பாடல்பயில் பறவையுறு மிதழிமுதற்
பரிக்க பாங்கால்.

எ-து. கட்பொறிக்கு விடயமாகிய உருவமனைத்தினையுங் காட்டும் சூரியன் ஒருங்கே ஒருகோடி கலந்து உதயமானாற்போல மேலுமேலுஞ் சொல்லு மெண்களுக்கெட்டாததாகிய அழகினையுடைய திருவுருவம் பொருத்தமாய் விளங்கவும் மணமாகிய கங்கையும் ஆகாயவிளக்காகிய வெள்ளைமதியுங் கலந்த சடைமுடிமேற் பண்களுக்கொத்த இசைப்பாட்டைப்பாடும் வண்டுகள் பொருந்துங் கொன்றை முதலிய மலர்களைப் பாங்காய்த் தரிக்கவும். எ-று. (௱௰௭)

செங்கமூன்றுங் கண்மூன்றாய்த் தொடர்ந்திலங்கக் குழையினூடு
துலங்கக் காதி
விடர்மூன்று விழிந் தருளு மிளமுறுவன் முகமலரி
னிலங்க வெயதிற

கடலுமிழும் விடமிடற்றிற் கலந்திலங்க மறிமழுவுங்
கையில் வைத்த
வடியவரை விட்டகல வமைத்தகாம் வரதகா
மரா வரங்கே.

எ-து. சூரியன், சந்திரன், அக்கினியாகிய முச்சுடரு முக்கண்ணுமைந்து விளங்கவும், காதிற்குண்டலமுந் தோடும் விளங்கவுஞ் சஞ்சிதம், பிராரத்த மாகாமிய மாகிய முத்துயாமுந் தீர்த்தருளு மிளமையான புன்சிரிப்பு திருமுகத்தாமரையிலே விளங்கவும் கோடிதாய்க் கடலினின்றெழுந்த ஆலகாலவிடம் கண்டத்திற் சேர்ந்து விளங்கவும் திருக்கரத்தின் மானு மழுவு மடியார்களுடைய பிறவிப்பிணி நீங்க அமைத்த அபயமும் வரதமும் பொருந்தவும். எ-று. (௱௰௮)

* இது முதல் மூன்றுசெய்யுளும் குளகம்.

குங்குமத்தின் சந்தனத்தின் குழம்பேயோ திருநீற்றின்
கோல மங்கத்
துங்கவரை யிரண்டனைய தோளகலத் தலர்குவளைத்
தொடைய லேயோ

பங்கயத்திற் பயில்வாளும் பாற்கடலிற் றுயில்வாளும்
பழுத்த நாளின்
மங்கியிட வவாங்க மாலைகளுங் கண்டிகையும்
மலிய விரயத்தே.

எ-து. குங்குமத்தாலுஞ் சந்தனத்தாலுஞ் சமைத்த குழம்புதானோ வென்ன திருநீற்றுக்காப்பினழகு பெருகவும் உயர்ந்தவிரண்டு மலையையொ

* குளகம் பலபாட் டொருவினை கொள்ளும் என்பர். தண்டியாசிரியரும், தனித்தனி முடிவது முத்தகம் - முத்தகச் செய்யுட் டனிநின்று முடியும்.

த்த தோட்பரப்பில் அணிந்த குவளைப் பூமாலையோவென்ன தாமரையிலிருக்கும் பிரமனும் பாற்கடலிற் பள்ளிகொண்ட விட்டுணுவும் தன்னுனியமித்து முடித்தநாளிறுதியில் அழிந்துவிட அவர் முழுவெலும்பாகிய அங்கமாலைகளும் கண்டிகைமாலைகளும் மிகுந்து பெருகவும். எ-று. (௱௰௯)

திருவரையிற் புலியதளுஞ் சிறந்திலங்க வுடைவாளுஞ்
செறிந்த கச்சும்
பரிபுரமு மிருவினையும் பறித்தருளென் றிருபதமும்
பற்றி யொற்றப்
பொருகழலுந் திருவடியிற் பொலிந்திலங்கப் புடைதொழுவார்
புலன்க டம்மைப்
பருகியவ ருளத்தரிய பரமபல மளித்தொளித்துப்
பாச மெல்லாம்.

எ-து. அரையினிடத்துப் புலித்தோலும் உடைவாளுநெருங்கிய வீரக்கச்சுஞ் சிறந்து விளங்கவும், நின்பால் வணங்குவார் ஐம்புலன்களைத் தன்வசப்படுத்தி அவருள்ளத்து அரியனவென் றெண்ணும் மேலான பலத்தைக் கொடுத்து எல்லாப் பாசங்களையும் கெடுத்து இருவினையு நீக்கி யருளென்று இரப்பனபோற் பரிபுரமும்பால்கள் பொருகின்ற வீரக்கழலும் இரண்டு பாதங்களினும் பற்றியொற்றவும் பொலிந்து விளங்கவும். எ-று. (௱௨௰)

நந்தைமுதலிய பசுக்களின் தோற்றமுதலியவற்றை
எட்டுச் செய்யுளா லுணர்த்துகின்றார்.

வீற்றிருக்கும் விமலனது சந்நிதியில் வெள்விடையும்
விளங்கு மந்த
வேற்றினய னந்தைமுத லிசைந்துறையு முயிர்க்கிரக்க
மெய்தி யீசன்
றேற்றுவிக்கப் பூதலத்திற் றோன்றியெழிற் பாற்கடலிற்
றுயரந் தன்னை
மாற்றிநிலன் வாழ்வார்க்கும் வரங்கொடுக்கும் பரமனருள்
வழியி னாலே.

எ-து. எழுந்தருளி யிருக்கும் விமலனாகிய சிவபெருமான் சந்நிதியில் வெள்ளிய விடையேறும் விளங்கியிருக்கும், அவ்விடையேற்றின் பக்கத்தில் நந்தை முதலிய பசுக்கள் விரும்பியிருக்கும், அவைகளைச் சிவபெருமான் சிற்றுயிர்க்கிரங்கிப் பூமியிற் பிறக்கும்படி செய்தலால் அழகினையுடைய பாற்கடலிற் பிறந் திவ்வுலகத்தில் வாழ்வார்க்குப் பரமனருளினபடி துன்பங்களைக் கெடுத்து வரங்களைக் கொடுக்கும். எ-று. (௱௨௧)

நந்தைசுபத் திரைசுரத நற்சுசிலை சுமனையென
நவின்ற நாம
மைந்தினுக்கு மரிகநிறங் காபிலமே கரியவுரு
வணிகொள் வெண்மை

சுந்தரத்த தாமிரமே தாமிரமே யெனத்துணிந்து
நாமஞ் சொல்லி
வந்தனைசெய் தவற்றுதித்த விருமூன்று மாட்டிடுக
வாதற் கென்றும்.

எ-து. மேற்கூறிய பசுக்களைந்துக்கு நந்தை யென்றும் சுரபியெ
ன்றும், நல்ல சுசீலையென்றும், சுமனை யென்று நாமத்தை யறிக. அவற்
றுள் நந்தை கபிலநிறம், சுபத்திரை கருமைநிறம், சுரபி அழகிய வெண்மை
நிறம், சுசீலை சுந்தரமான தாமிரநிறம், சுமனை தாமிரநிறம் என்று நிச்சயித்து
அதனதன் பெயரைச் சொல்லிப் பூசைசெய்து அவற்றி லுண்டான பால்,
தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனையாகிய ஆறு பொருளையும்
வரதனுகிய சிவபெருமானுக் கென்றும் அபிடேகஞ் செய்க. எ-று. (௱௨௨)

வேதாவுங் கரியவனு மாவினது கோட்டடியின்
விளங்கி வாழ்வர்
கோதாவி முதற்றீர்த்தங் கோட்டினுதிச் சராசரமுங்
கூடி நிற்கு
மீதான சிரத்தமலன் விமலையத னடுநெற்றி
விசாக னுசி
மீதானந் தனிலதனுண் ணுசிதனி னுகேசர்
விளங்கு வாரே.

எ-து. பிரமனும் திருமாலும் அப்பசுக்களின் கொம்பி னடியில் விள
ங்கி வாழ்வர்; கோதாவிரி முதலிய தீர்த்தங்களும், இயங்குதிணை நிலைத்
திணையாகிய வுயிர்களுங் கொம்பு நுனியிற் கூடி நிற்கும், மேலான சிரத்திற்
சிவபெருமானும் நெற்றிநடுவிற் சத்தியு மூக்குநுனியிற் சண்முகனு மூக்கு
க்கு ளிந்திரன் முதலிய தேவர்களும் விளங்கிவாழ்வர். எ-று.

கோதாவிரி என்பது இடைக்குறைந்து நின்றது. (௱௨௩)

ஆசகல விருகன்ன நாப்பணச்சு வினிதேவ
ரமர்ந்து வாழ்வர்
தேசுடைய பரிதிமதி நயனத்திற் றந்தத்திற்
செறியும் வாயு
வோசையுறு.நாவதனில் வருணனுரை மகளோங்கூங்
கார நெஞ்சி
னேசமுற யமனியக்கர் கெண்டதலத் தெந்நாளு
நிலவு வாரே.

எ-து. குற்றநீங்கவே யிரண்டுகன்ன நடுவில் அச்சுவினி தேவர்கள்
விரும்பி வாழ்வார்கள், இரண்டு கண்களிடத்தொளியினையுடைய சூரியனும்

சந்திரனும் தந்தத்தில் வாயுவும் பொருந்தும். ஒலியுள்ள நாவில் வருணனு முன்னதமான ஹுங்காரத்தையுடைய நெஞ்சிற்கலைமகளு மணிக்களிடத்தில் எமனுமியக்கரு மெக்காலமு மன்புடன் வாழ்வார்கள். எ-று. (ாஉ௬)

ஓட்டத்தி னுதயாத்த மனசந்தி யிவையுறையு
　முறைவன் கண்டத்
திட்டுடைய விந்திரனே யிமிலிருப்ப ரருக்கனென
　வியம்புந் தேவர்
வாட்டமிலாச் சாத்தியரே வாழ்வார்க ளுரமதனி
　லனில வாயு
நீட்டியதா ளொருநான்கின் மருத்தென்பர் முழந்தாளி
　னிலவு வாரே.

எ-து. உதட்டி னுத யாத்தமனத்துக்குரிய சந்தி தேவதை தங்கும், கழுத்திற் பெருமையுடைய விந்திர னிருப்பான். முரிப்பி லருக்கரிருப்பர். மார்பிற் சோர்வில்லாத சாத்தியர் வாழ்வார்கள், நீட்டுகின்ற நான்கு காலி லனிலனுகிய வாயுவும், முழந்தாளின் மருத்துவரும் வாழ்வார்கள். எ-று.

குாத்தினுநிப் பன்னகரே குடிகொள்வர் காந்திருவர்
　குாத்தி னுப்ப
ணிருப்பரா மகளிர்கண மிவரொல்லா மேற்குாத்தின்
　முதுகி னெல்லை
யுருத்திரரே சந்தொறு முறைவார்கள் வசுதேவர்
　பிதிர்க்க ளோங்கிப்
பருத்தவனாப் பலகைதனிற் பகத்துறைவ ரெழுமாதர்
　பரிவு கூர்ந்தே.

எ-து. காற்குளம்பு நுனியில் நாகர்கள் குடியாக வாழ்வார்கள். அக்குளம்பு நடுவிற் கந்திருவர் தங்குவார்கள். அக்குளம்பின் மேலிடத்தி லரம்பையரும், முதுகிடத்தி லுருத்திரருஞ் சந்துகடோறு மட்டவசுக்களுந் தங்குவார்கள். உயர்ந்து பருத்த வணாப் பாப்பிற் பிதிர் தேவதைகளும், யோனியிற் சத்தமாதர்களு மின்பமிகுந்து வாழ்வார்கள். எ-று. (ாஉ௬)

திருமகளே யபானத்தி னுகேச ரடிவாலிற்
　சிறந்து வாழ்வ
ரிரவியொளி வாலின்மயி ரிலங்கியிடுஞ் சுரநிதா
　னேயு நீரின்
வாமுடைய யமுனையைய மதுதன்னின் மாதவர்க
　ளுரோமம் வாழ்வ
ருமுடைய பூதேவி யுதாத்திற் பயோதாத்தி
　னுததி யெல்லாம்.

எ-து. குதமாகிய வபானத்திற் றிருமகளும், டிவாவில் நாகாதிபரும் சிறந்து வாழ்வார்கள் பூளியுள்ள வாலுரோமத்தி லாத்திகன் விளங்கி யிருப்பன்; கோசலத்தி லாகாயகங்கை பொருந்தும். கோமயத்திற் பெருமையுடைய யமுனைநதி பொருந்தும். உரோமங்களில் மாதவர்கள் வாழ்வார்கள். வயிற்றி லாற்றலுள்ள பூமிதேவியுங் கொங்கையி லெல்லாக் கடலும் பொருந்தும். எ-று.

கோமயமென்பது முதற்குறைந்து நின்றது. (௩௨௭)

சடாத்தி னிதயத்திற் றழைத்தமுக மதுதன்னிற்
றங்கு மங்கி
கடனுடனே காருகபத் தியமெழுவா யொருமூன்றுங்
கடின வேள்வி
யுடலுறுசுக் கிலந்தனினு முறையுமக வினையனைத்து
முறுப்புத் தோறுந்
திடமுறுகற் புடைமடவார் செறிந்திருப்ப ரிம்முறையைச்
சிந்தை செய்தே.

எ-து. வயிற்றில் - காருகபத்தியமும், இதயத்தில் - ஆகவனீயமும், முகத்தில்-தக்கணைக்கினியுமாகிய மூன்று அக்கினியும் பொருந்தும். கடினமான வெலும்பினிடத்து முடலுட்பொருந்திய சுக்கிலத்தினிடத்தும் யாகத்தொழிலின் முழுமையும் பொருந்தும். எல்லா வங்கங்கடோறுங்கலங்காநிலைமையுள்ள கற்புடைய மடவார்கள் பொருந்தியிருப்பார்கள் ஆதலா லிம்முறைமையைத் தியானஞ்செய்து. எ-று.

'அங்கி கடனுடனே காருகபத்திய மெழுவா யொரு மூன்றும்' என்பதை 'மூன்றுவகைக்குறித்த முத்தீ' என்புழி நச்சினார்க்கினியர் கூறலானுமுணர்க. (௩௨௮)

பசுக்களை யோம்பலால் வரு நன்மையையும், ஓம்பாமையால் வருந் தீமையையு மேழு செய்யுளா லுணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆக்கடமை யியக்கிடினு மார்வங் கூர்ந்தே
யங்கையினிற் பலாசந்தண் டாலே மெல்ல
வோக்கியுடற் கொறுப்பறவே யொற்றி யொற்றிக்
கெச்சநெறி கெச்சநெறி யென்றே யோதும்
வாக்கியரோ சிவபுரியின் வாத்தை யுற்று
மலரிரதத் தமலனென மகிழ்ந்து வாழ்வர்
தீக்குழியைச் செறிவார்கள் கருணை யின்றிச்
சினத்ததட்டி யடித்தொறுக்குஞ் சிறியார் தாமே.

எ-து. அப்பசுக்களை மேய்க்கினும் ஆசைமிகுந்த அழகிய கையிலுள்ள புனமுருக்கங் கோலால் வருத்தநீங்க மெல்ல வொற்றியொற்றிப் பொருந்தாமலெரிந்து கெச்சநெறி கெச்சநெறி யென்று சொல்லு மேன்மைச் சொல்லை யுடையவரே சிவலோகத்திற் சிறப்பினைப் பொருந்தி மலரானிறைந்த விமானத்தில் நின்மலனைப்போல மகிழ்ச்சியாக வாழ்வார்கள். அது வல்லாமல் இரங்கமில்லாமற் கோபித்து வன்சொல்லாலதட்டி யடித்து வருத்து மறிவில்லாத சிறியோர் தீக்குழியாகிய நரகத்திற் றங்குவார்கள். எ-று.

கலிவிருத்தம்.

அரனாதி யொருமூவ ரமரேசன் மருமானு
மொருவாம லுறைவார்க ளுமையாதி மடவாரு
மரிதாய மறையோர்க ளுடலாவி னுடலார்வ
மொருவாது வழிபாடு புரிவார்க ளுயர்வாரே.

எ-து. அரன், அரி, அயன் ஆகிய மூத்தேவரு மிந்திரனு மவன்வழித் தோன்று மற்றைத் தேவரு முமாதேவி முதலான பெண்களும் அருமையான வந்தணர்களும் அப்பசுவின் உடலில் நீங்காமல் வாசஞ் செய்வார்கள். ஆதலால் அப்பசுவி னுடலிலாசையால் நீங்காமற் பூசைசெய்வோர்கள் உயர்வா யிருப்பார்கள். எ-று. (௱௯௰)

பரியாது பகையாளர் பணியாது பழியாள
ரெரிவாய நிரைவீழு மெளியார்க ளரியார்கள்
பரிவார்கள் பணிவார்கள் பதமீது பரமான
வரிதாய சிவலோக மெளிதாக வடைவாரே.

எ-து. அப்பசுக்களை யோம்பாமலுந் தொழாமலு மிருக்கிற பழியாளராகிய பகையாளர்கள் தீவாய்நரகத்தில் விழுதற் கெளியராயு மந்நரகத்தினின்றுங் கரையேறுதற் கரியராயும் பொருந்துவர். அவற்றை யோம்புவோரும் பாதங்களிற் றொழுவோர்களு மேலான வருமையாகிய சிவலோகத்தை யெளிதாகப் பொருந்துவர். எ-று. (௱௯௧)

வேறு.

வலஞ்செய் தாக்களை வாழ்த்தி வணங்கியே
நலஞ்செய் தார்புல்லு நாவிற் கொடுத்துடல்
விலங்கை விட்டும் விமலன் புரத்துளே
யிலங்கிச் சுற்றத் தொடுமிருப் பார்களே.

எ-து. அப் பசுக்கட்குப் புற்களை நாவிற்கொடுத்து வலஞ்செய்து வாழ்த்தி வணங்கிப் பூசைசெய்வோர் யாக்கைக்கு விலங்காகிய இருவினைகளை நீங்கியு மச் சிவலோகத்திற் சுற்றத்தாரோடும் விளங்கி யிருப்பர். எ-று.

பருகி னார்கபி லைத்திகழ் பாலினை
யெரிவ ரோயெரி வாய்நிர யத்தெழிற்

பரம னுக்கபி டேகமும் பண்ணினர்
விரவு வார்கள் விமலன் புரத்துளே.

எ-து. அப்பசுக்களின் விளங்கிய பாலினைப் புசித்தோர் தீவாய்நரகத் தெரிவர். அப்பாலை யழகாகிய சிவபெருமானுக் கபிடேகமுஞ் செய்தோர் அந் நிருமல னுலகத்தினுட் சேர்வர். எ-று. (௱௯௩)

தீண்டப் பாவங்க டேய்ந்தறு நல்வினை
யீண்டும் புற்றனை யீய விரங்கியே
வேண்டு நற்பொருள் வேறிலை யானலாற்
காண்ட கைப்பொரு டானுங் கருதினே.

எ-து. அப்பசுக்களை கையாற் றீண்டினவுடன் எல்லாப்பாவங்களுங் குறைந்து கெடும், மனமிரங்கிப் புல்லைக் கொடுத்தவுடன் நல்வினையாலாகிய புண்ணியங்களெல்லாம் பொருந்தும், ஆதலா லெண்ணுங் காலத்தில் யாவரும் விரும்பும் நன்மையான பொருளுங் காணுந் தகுதியையுடைய பொருளு மப்பசுக்க ளல்லது வேறில்லை. எ-று. (௱௯௪)

இங்கு மின்சுவை யீயு மிறைஞ்சுவார்க்
கங்கு மின்ப மடைகைக்குக் காரணம்
பொங்கு தண்புன லுண்டுபுற் றின்றுநன்
மங்க லந்தருங் கோவெனும் வான்பொருள்.

எ-து. பொலிவாகிய குளிர்ச்சியினையுடைய நீரைப் பருகிப் புல்லைத் தின்று யாவருக்கு நல்ல மங்களங்களைக் கொடுக்கும் பசுக்களென்று சொல்லப்படும் பெருமையினையுடைய பொருள் தொழுது பூசிப்போர்க் கிவ்வுலகில் இனிமையான சுவையையுடைய பால் முதலியவற்றைக்கொடுக்கும், அவையல்லாமல் அச்சிவலோகத்தில் நிரதிசயானந்தம் பெறுகைக்குங் காரணமாகும். எ-று. (௱௯௫)

பசுக்கள் வசிக்குங் கொட்டில்கட்டி யலங்கரிக்குந் தன்மையை
யொன்பது செய்யுளா லுணர்த்துகின்றார்.

இட்டி காதியிற் சாலை யியற்றுக
விட்டு வாய்தலும் பூருவ மேவவே
குட்டி கைப்புற நான்கிலுங் கோலுக
விட்ட தேவர்க் கிசைந்த விடங்களே.

எ-து. கீழ்த்திசையில் வாயில் பொருந்த விட்டுச் செங்கல் முதலியவற்றா லான் கொட்டிலாகிய கோபுரத்தைச் செய்க. அக்கொட்டிலிற் சிறிய சுவர்ப்புறத்து நாற்றிசையிலும் பொருத்தமான தேவர்கட் கிசைந்த விடங்களை வளைக்க. எ-து. (௱௯௬)

கொற்ற வைக்குறு கோட்டமும் பூருவஞ்
சொற்ற வைந்திற்குந் தொக்கிடந் தக்கண

மொற்றைக் கொம்பனுக் குன்னதஂமேற்றிசை;
மற்றைச் சோமற்கு நந்திக்கு மற்றிடம்.

எ-து. கோபுரமாகிய ஆன்கொட்டிற்குக் கீழ்த்திசையில் துர்க்கைக்குப் பொருந்திய கோயிலும், தென்றிசையின் முன்சொல்லிய லவந்திற்குத் தொகுத்த விடமும், மேற்றிசையிற் கணபதிக் குன்னதமான கோயிலும், வடதிசையிற் சந்திரனுக்கு நந்திக்குங் கோயிலுஞ் செய்க. எ-று.

முன் சொல்லிய லைந்தாவன பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்க. இப்பெற்றி நோக்கியே ஆளுடைய வரசும் 'ஆவினுக்கருங்கலமானைஞ்சாடுதல்' என்றருளிச் செய்வர். (௱௯௭)

பூர்வ வாய்தற் புறத்திரு பாகத்து
மார்வங் கூர விருவரை யாக்குக
வார பாலகர் நந்திமா காளரை
யேரு றச்செய்க மீதுவெள் ளேற்றையே.

எ-து. கிழை வாய்தலிற் கடுத்த விருபக்கத்திலு நந்தி மாகாளரென்று சொல்லுந் துவாரபால ரிருவரையு மனவிருப்ப மிகும்படி பிரதிட்டை செய்க. திருமதிலின்மேல் வெள்ளிய விடங்களை யழகாகச் செய்க. எ-று.

உத்த மத்த நதியின்மண் ஞெடைமண்
வித்த கத்தநல் வில்லத் தடியின் மண்
பொத்தைப் புற்றின்மண் போதியின் கீழ்மணென்
றித்த கைத்தநற் கவ்வியத் தேய்க்கவே.

எ-து. உத்தமமான நதி மிருத்திகை, ஓடை மிருத்திகை, வித்தகத் தன்மையையுள்ள நல்ல வில்வத்தடி மிருத்திகை, மலையை யொத்த புற்று மிருத்திகை, அரசடிமிருத்திகை என்று சொல்லும் இத்தகுதியையுடையனவற்றை நல்ல கௌவியத்தா லிசைவிக்க. எ-று. (௱௯௮)

குயிற்றி முன்சொன்ன கோல மனைத்தையும்
பயிற்றி யாங்கவர்க் கெய்தநற் பால்களின்
முயற்சி யோடய னரியர் மூவர்க்கு
மயர்ச்சி தீரவுள் ளர்ச்சனை யாக்கவே.

எ-து. முன்சொன்ன மிருத்திகையாலும் கௌவியத்தாலும் எல்லா வழகும் பொருந்த அவ்வான்கொட்டிலைச் செய்து விதிப்படி அயனரியரனாகிய மூத்தேவருக்கும் அவரவர்க்குரியபடி நல்ல விடங்களிலே தாபித்துச் சோர்வு பொருந்தாமல் அருச்சிக்க. எ-று. (௱௯௯)

கற்றி னங்களுந் தங்கிடங் கட்டுக
மற்றி டங்குழக் கன்றுகள் வைகவு

முற்ற நோய்க ளொடுங்கு மிடங்களு
முற்று மாசெய்க் முற்று முயற்சியால்.

எ-து. ஆகமத்திற் சொல்லி முடிந்த வழிப்பால் முதிர்ந்த கன்றுக் கூட்டங்கள் தங்கு மிடங்களுங் கட்டுக. இளங்கன்றுகள் தங்கும் வேறிடங்களும் அப்பசுக்கள் முதலியவற்றைப் பொருந்திய நோய்கள் நீங்கு மிடங்களுங் குறைவின்றிச் செய்க. எ-று.

முற்றுமா என்புழி றவ்வீறு தொகுத்தல் பெற்றது. இதனைக், "கற்றவாசுடவேன்" என்புழிக் கற்றவாறு எனப் பொருள் கொண்டு றவ்வீறு தொகுத்தலாகக் கொள்வர் பேராசிரியரும். (௱௯௪)

செய்க வேறிடஞ் சீர்மைய தாகவே
வெய்ய நோய்கள் விரவிடி லாக்களைப்
பைய வங்க ணுறுகணைப் பாற்றுக
மைய றீர மருந்து மருத்தியே.

எ-து. அப்பசுக்களைக் கொடுமையான நோய் பொருந்தினு லழலாக வேறிடத்தைச் செய்து அதிற் கட்டுக. அப்பசுக்களின் மயக்க நோய்தீர மருந்து கொடுத்து விரைவில்லாமல் அவ்விடத்துப் பொருந்து நோய் தீர்க்க.

கண்ணி வாய்தலு நாற்றிசை காணவே
பண்ணிக் கோமயம் பற்றுக நீற்றினுற்
றிண்ணி தாகவுஞ் சோதனை செய்தபி
னண்ணி டாமன் மசகமு நாடொறும்.

எ-று. நோய் தீரச் செய்த வான்கொட்டிற்கு நாற்றிசையிலும் வாயில்கள் விதிப்படி கருதிச்செய்து சுண்ணநீற்று லழகாக நீவுதல் செய்து அதன்பின்பு தினந்தோறுங் கொசுதுகளும் பொருந்தாமற் கோமயங்களூ நீக்குக. எ-று.

மசகமுமென்ற வும்மையாற் புழுவு மீயுமா மென்க. (௱௯௫)

தூபந் தன்னைத் துதைக்க துலங்கவே
தீபந் தானுஞ் சிறக்கச் செறிக்கநற்
பூவி னற்றொடை யெங்கணும் பூட்டுக
கோவி னைப்புகச் செய்க குறிப்பொடே.

எ-து. அக்கொட்டிலில் அகிற்றூபங்களை விளங்க நிறைக்க, தீபங்களையும் விளங்க நிறைக்க. மங்கல மலராற் கட்டிய மாலைகளை யெவ்விடத்துந் தூக்குக. பின்பு எண்ணத்துட னப்பசுக்களை யுட்புகுத்துக, எ-று.

பசுவைக் கொட்டிலிற் புகுவிக்குந் தன்மையை
யுணர்த்துகின்றார்.

சொல்லி மெல்லச் சுவத்தி யெனுஞ்சொலை
மெல்ல மெல்லச் செலுத்துக மேவிட

வல்லி தாம்வளைப் பாயலும் வாய்க்கவே
நல்ல புல்லுங் கொடுக்க நயந்தொடே.

எ-து. சுவத்தி யென்று சொல்லும் வாக்கியத்தை மெல்லச் சொல்லிக் கொட்டிவிற் பையப்பையப் போக்குக. வலிமையான வள்ளைக்கொடியாற் செய்த பாயும் தகுதியாகச் செய்க. அன்புட னல்ல வறுகம்புல்லையு மிசைவிக்க. எ-று.

சுவத்தி எ-து. மங்கலமொழி-வடசொல். (௱௬௫)

பசுவைப் பூசிக்கு முறையை யுணர்த்துகின்றார்.

ஆட்டி மஞ்சன மட்டமி தோறும்பூச்
சூட்டி யோதன மாதியுந் தோயமு
மூட்டி யாக்களை யோகை யுறுத்துக
காட்டித் தூபமுந் தீபமுங் காதலால்.

எ-து. ஆதரவா லட்டமிதோறு மஞ்சனங்கொண் டபிடேகஞ் செய்து பூவா லருச்சித்துத் தூபமுந் தீபமுங் காட்டி யன்ன முதலிய நிவேதனமுந் தண்ணீரு மூட்டி யப்பசுக்களை யுவகை பொருந்துக. எ-று. (௱௬௬)

பசுக்கள் வசிக்குங் கொட்டில் கட்டினவர் பெறும்பயனை
நான்கு செய்யுளா லுணர்த்துகின்றார்

சாலை யானினந் தங்கச் சமைத்தவர்
கால காலன் புரத்தைக் கலப்பர்தா
மேல வேண்டிய யாவையு மின்புறும்
வேலை வெங்கதி ரோற்கும் விதித்ததே.

எ-து. பசுவினினம் வசிக்கக் கொட்டிலைச் செய்து அவர்கள் வெவ்விய சூரியனுக்கு விதித்த காலம் வரையு மின்பம் பொருந்து மெல்லாப் போகங்களும் விரும்பியபடி புசிக்கச் சிவலோகத்திற் சேர்வார்கள். எ-று.

முடிய நாளு முகுந்தன் புரத்தினை
யடைவர் மற்றைய ராளும் புரிகளும்
வடவ ரைக்கண் மருவிக் குருவெனும்
படியைப் பற்றிப்பின் பாரதம் பற்றுவார்.

எ-து. முன் வரையறுத்த நாளு முடிவாகப் பின்பு திருமால் பிரமனிந்திரன் முதலியோ ருலகத்தில் அப்போகந் துய்த்துப் பின்பு மேருவரையைச் சேர்ந்து குருகண்டத்தில் வந்து அப்பயன் நுகர்ந்து பின்பு பாரத கண்டத்திற் பிறப்பார்கள். எ-று. (௱௬௭)

பண்டை வாதனைப் பாங்குற வோங்கிய
மண்ட பத்தை வகுப்பர் வரமுற
மண்டு காதலி னானினம் வைகவே
யண்டர் நாயகற் கர்ச்சனை யாகவே.

எ-து. பழைய வாசனையி னுரிமை பொருந்த நிறைந்த வாதரவால் அப்பாரத கண்டத்திற் கோவினங்கள் தங்கவுந் தேவதேவனாகிய சிவபெருமானுக் கருச்சனை நடக்கவு முன்னதமான மண்டபங்களை மேன்மையாகப் பொருத்துக. எ-று. (௱௪௯)

ஆட்டிப் பான்முத லைந்து மரன்முடிக்
கூட்டிப் பாயத மன்பர்க்கு மோகையி
னோட்டி முன்னைய வூன முலகினுட்
டேட்ட றச்சிவ மாகத் தெருள்வரே.

எ-து. சிவபெருமான் திருமுடிக்குப் பசுவின் பான் முதலியவற்றை யபிடேகஞ் செய்து உவகையின லடியார்களுக்குப் பாயசத்துட னமுதூட்டிப் பழைய சஞ்சித முதலிய குற்றங்களை யோட்டி யுலகினுள்ள வாஞ்சை நீங்கச் சிவசாயுச்சியம் பெற்று விளங்குவர் எ-று. (௱௫௰)

பசுவைக் காக்கும்படி செய்த அரச னடையும் பலத்தை
யுணர்த்துகின்றார்.

ஆக்க டம்மை யருமறை நான்முறை
காக்க காக்கி லாரையக் காசினி
காக்குங் காவலன் காய்ந்துகாப் பித்திடி
னாக்கி யேசிவ லோகத் துறைவனே.

எ-து. அப்பசுக்களை யரிய வேதநூல் விதிப்படி யுலகிலுள்ளார் காக்கக் கடவர். அப்படிக் காவாதவர்களை யவ்வுலகத்தைக் காக்கு மரசன் கோபித்துக் காக்கும்படி செய்தாற் சிவலோகத் துயர்ந்து வாழ்வான். எ-று. ()

அரசன் தண்டியாதொழிற் பசுவைக் காவாதா ரடையும்
பலத்தை யுணர்த்துகின்றார்.

காக்கி லாரையுங் காக்கு மவரையு
நோக்கு நாடொறு நோக்கில னாகினுங்
காக்கி லாரைக் கடிகில னாகினுந்
தீக்குக் காட்ட மெனக்கனல் சேர்வனே.

எ-து. பசுவைக் காவாதவரையுங் காப்பவரையு மரசன் நாடோறும் பார்ப்பான். அப்படிப் பாராதவனா யிருந்தாலும், அப்பசுவைக் காவாதாரைத் தண்டியாதவனா யிருந்தாலு மக்கினிக்கு விறகு பொருத்தமா யிருப்பது போல் தீக்குழி நரகத்திற்குப் பொருத்தமாய்ச் சேர்வான். எ-று. (௱௫௨)

பசுவைக் கால மறிந்து காக்குந் திற மிரண்டு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

தழைத்த சோலைத் தடத்தி னடத்துக
பழுத்த வேனிற் பருவத்தி லாக்களை

மழைக்கு மாமலைச் சாரல் வனத்திடை
யொழிக்க வச்ச முதுத்தி முழுவையே.

எ-து. அப்பசுக்களை முதுவேனிற் காலத்திற் குளிர்ச்சி யுள்ள பெரியமலைப் பக்கமாகிய காட்டினிடத்துத் தழைத்திருக்குஞ் சோலைப் பரப்பில் மேய்க்க. அதுவல்லாமல் அவற்றைக் கொல்லவரும் புலியைச் செகுக்க.

முதுவேனில் எ-து. ஆனி, ஆடி எனக் கொள்க. (௩௰௧)

இமத்தில் வெய்யில் வெளியி லியக்குக
வமைக்க மற்றும் பருவத் தலைத்த
தமக்கு நல்லன தாமறி வார்கடாஞ்
சமைக்க நல்லன சாருந் தகையெலாம்.

எ-து. தமக்கு நல்வினை யிவையென் றறியு மறிவுடையோர்கள் அப்பசுக்களை முன்பனி பின்பனியாகிய காலத்திற் சூரியகிரணம் பரந்தவெளிப் பரப்பில் மேய்க்க. மற்றைக் கார்காலமுதலிய காலங்களிலுந் துன்பநீங்கத் தக்க விடங்களில் மேய்க்க. அதுவல்லாமல் நன்மைபெறுதற்குத் தகுதியான தொழில்களையெல்லாஞ் செய்க. எ-று. (௩௰௨)

பசுவைக் காப்பாரும் காவாதாரும் அடையும் பலனை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஆக்க டம்மை யலைவற வன்புடன்
காக்குங் காவலர் செய்த கடுவினை
போக்கித் தேசன் புரத்தி லிருந்தவர்
வாக்கி னுன்னா யாத மகிழ்ச்சியே.

எ-து. அப்பசுக்களைத் துன்பநீக்க வன்போடுங் காத்தளிக்கும் அரசர் தாங்கள் செய்த தீவினைகளைக் கெடுத்துச் சிவலோகத்தில் வாக்கினாற் சொல்லவொண்ணாத வானந்த மனுபவிப்பார்கள். எ-று. (௩௰௩)

ஆக்க ளாலை யிறவளி யார்க்கரும்
பூக்க ளாற்புரி யார்களும் பூசனை
காக்கி லாருங் கழித்து கடும்பினி
நீக்குங் காட்ட மென்கனல் சேர்வரே.

எ-து. அப்பசுக்களைத் துன்ப நீக்கக் காவாதவரும் பலவிதக் கிருச்சினை செய்யாதவரும், அவ்வினையான் கோயிலிற்றா முள்ள குருவித் தீர்தவரும் அக்கினிக்கு விறகு உரிமையினால் நீக்கமுடியாத நரகத்துக் குரியவராவார்கள்.

ஆனிக்குச் சுறி கட்டவரும் சொதாஜ முசெய்தவரும் அடையும்
பலனை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஆவு ரிஞ்சுகன் றொட்டறைய வைத்திவர்
கோவி லைப்பா மற்றுக் கொடுத்தவர்

தேவ தேவன் புரத்திற் றிளைப்பர்க
ளாவி ஞலுரை யாத நலத்தையே.

எ-து. பசுக்கள் தினவுக்கு உரிஞ்சுங் கற்றூணை மந்தை முதலிய விடங்களில் ஆதரவாய் நட்டவர்களும், பசுக்களைச் சிவபெருமானுக்குத் தானங் கொடுத்தவர்களும், தேவதேவன்வாழும் சிவலோகத்தில் வாக்காற் சொல்லவொண்ணாத நிரதிசயானந்த மனுபவிப்பார்கள். எ-று. (ாருஎ)

கொடுத்துச் சங்கரற் கன்பொடு கோதன
மெடுத்து முய்யக்கொள் ளென்றுமு னேத்தினர்
விடுத்து முன்செய்த தீய வினைவிதம்
விடைக்குப் பாகன் புலத்தினை மேவியே.

எ-து. சிவபெருமானுக் கன்பாய்ப் பசுக்களைக்கொடுத்து யானுய்யும் வண்ண மங்கீகரித்துக்கொள்ளென்று சந்நிதிமுன்பு நின்று துதித்தவர்கள், முற்காலத்திற்செய்த தீவினையின் றிறங்களை நீக்கி விடையிலெழுந்தருளு மப்பெருமா னுலகத்திற் றங்கி. எ-று. (ாருஅ)

ஒப்பில் போக மருந்தி யுறைவர்கள்
கற்ப மும்பதி னாயிரங் காணவே
யிப்ப லத்தினை யெய்துவ ரானினைத்
தப்பில் போதகன் பாலளித் தாருமே.

எ-து. பதினாயிரம் பிரமகற்ப மொப்பில்லாத போகங்களை யனுபவித்துறைவார்கள். குற்றமில்லாத வாசிரியனிடத்தில் அப்பசுக்களைக் கொடுத்தவர்களு மிந்தப் பலன்களைப் பொருந்துவார்கள். எ-று. (ாருகூ)

சிவபெருமானுக்கா னேறுதானஞ் செய்தவரடையும் பலனை
யிரண்டுசெய்யுளா லுணர்த்துகிறார்.

ஊன மற்ற வுறுப்புறு மொள்ளிய
வான வேற்றை யசனது சந்நிதித்
தானஞ் செய்க சமைத்த வணியுடன்
கான மாடி புரத்துறுங் காதலார்.

எ-து. மாலயன் மாண்ட மயானத்தி லாடிய சிவபெருமா னுலகத்தில் வாழுங் காதலையுடையவர் அவன் சந்நிதியிற் குற்றமில்லாத அவயவங்களை யுடைய நல்ல வொளிபெற்ற ஆனேற்றைத் தானஞ் செய்க. எ-று.

உற்ற பெற்றத் துரோமத்தி னென்றற்கு
மற்றைத் தேவர் வருடமொ ராயிரம்
பெற்ற வந்தப் புரத்திற் பெறுவர்கண்
முற்ற வேறறு வாரறு மோதமே.

எ-து. தானஞ்செய்து பொருந்திய ஆனேற்றின் உரோம மொன்றுக்குத் தான் பெற்ற வச்சிவலோகத்தில் ஆயிரந்தேவவருடம் போகந் துய்ப்பார்கள். அப்போகந் துய்த்து முடியவே மோக நீங்கி யொப்பில்லாதவராவார்கள். எ-று. (ராகூக)

சிவபெருமானது பசுநிரைகளில் ஆனேறும் பசுவுந் தானஞ்
செய்து விட்டவ ரடையும் பலனை யுணர்த்துகின்றார்.

இத்த கைத்த பலத்தினை யெய்துவர்
வித்த கத்த விடையுமோர் தேனுவு
நித்த னுக்க ணிரையி னிறுத்தினு
ருத்த ரப்பிர சைப்பலத் தோடுமே.

எ-து. சிவபெருமானது பசுநிரைகளில் நல்ல ஆனேறு மொப்பற்ற பசுவுந் தானஞ் செய்து நிறுத்தினவர்கள் மேன்மேலும் புத்திரபவித்திரரோடு இத்தன்மையவென்று முற்கூறிய பலன்களைப் பெறுவார்கள். எ-று. (ராகூஉ)

ஆனேறு முதலியவற்றிற்கு வருத்தஞ் செய்தவனை அரசன்
தண்டஞ் செய்தலாலும் செய்யாமையாலும் வருவனவற்றை
மூன்று செய்யுளா லுணர்த்துகின்றார்.

இடப மூருந ரெய்துவர் வெய்யதீக்
கடிக மன்னவன் காய்ந்த வரத்தினு
னடைவன் மேலை யமருல கந்தனைத்
தடைசெய் யாமன்னன் றீக்குழிச் சார்வனே.

எ-து. வாகனமாக வேறி யிடபங்களைச் செலுத்துகிறவர்கள், வெவ்விய தீநரகத்தைச் சேர்வார்கள். ஆதலா லவற்றி லேறிச் செலுத்தாது மன்னவ னொறுத்தல் செய்க. அத்தன்மையி னொறுத்த சிறப்பினை யுடைய அம்மன்னவன் மேலாகிய தேவலோகத்தினைச் சேர்வான். அவ்விடபமூருதலைத் தடைபடுத்தாத மன்னவன் றீக்குழி நரகத்தைச் சேர்வான். எ-று. (ராகூரு)

பாவ காரிகள் வந்தைப் பசுவினைச்
சேவு யர்த்த சிவனிட பத்தினைக்
காவு விக்கிற் கனத்தையக் காசினிக்
காவ லாள னவனையுங் காய்கவே.

எ-து. பாவ வான்மாக்கள் மலட்டுப் பசுவை யாயினும் விடைக்கொடியை யுடைய சிவபெருமா னிடபங்களை யாயினும் பாரமான பண்டங்களைச் சுமக்கும்படி செய்வித்தா லப்பாவிகளையும் அவ்வுலகத் தரசன் றண்டனை செய்க. எ-று. (ராகூச)

காய்ந்த மன்னன் கடிய வினையினைத்
தீர்ந்து சேர்வன் சிவபுரந் திண்ணமே

யோர்ந்தெ நா றப்பவர் தம்மை யொறுமனன்
கூர்ந்த தீநிர யக்குழி கூடுவான்.

எ-து. அப்பாவிகளைத் தண்டஞ்செய்த அரசன் கடுமையான தீவினைகளை நீங்கி யுறுதி யாகவே சிவலோகத்தைச் சேர்வான். அப்பசுக்களை வருத்துவோர்களை வருத்தஞ் செய்யாத அரசன் மிகுந்த தீக்குழி நரகத்தில் விழுவான். எ-று. (௱௬௫)

ஆனேற்றிற் பாரங்களை யேற்றிற் பரிகார முணர்த்துகின்றார்

பரிப்பித் தாரிட பத்திடைப் பாரத்தை
யரிக்கப் பாவமு மாறுட னேந்துற
வுரத்த வெள்விடை யீசர்க் குதவுக
விரிந்த வானினங் காக்கவோர் வற்சரம்.

எ-து. அவ்விடபத்தின் மேற் பாரங்களைச் சுமத்தினோர் அப்பாவங் கெடச் சிவபெருமானுக்கு வலியினையும் வெண்மையினையு முடைய பதினொரு இடபங்களைத் தானஞ் செய்க. அதுவுமல்லாமல் நியமித்த பசு நிரையையு மொருவருட மேய்க்க. எ-று. (௱௬௬)

ஆலயப்பணிக் கானேறுதவினோர் பலத்தை யுணர்த்துகின்றார்.

ஈடு பெற்ற வெருத்தினை யீபவர்
பாடு பெற்ற சகடை பரிக்கவு
மாடுங் கூத்த னமலன் பணிக்கவ
ணூடு பெற்று நலத்தை நவில்வரே.

எ-து. சிற்சபையி னிருத்தஞ்செய்யு நின்மலனதாலயப் பணிவிடைக்குரிய பெருமை தங்கிய பண்டிகளைச் சுமந் திழுக்கும்படி யாற்றலையுடைய விடபங்களைத் தானஞ்செய்தவ ரவனுலகில் நிரதிசயானந்தம் பெற்று அவனுமங்களைத் துதித்திருப்பர். எ-று. (௱௬௭)

இளைத்த பசுவை வளர்த்தவன் பலத்தை யுணர்த்துகின்றார்.

இளைத்த வாவினைக் கண்டு ளிரங்கியே
தளர்ச்சி தீர்க்கத் தருகென வாங்கியே
வளர்த்த வன்சிவ லோக மருவியே
யுளத்தா னோகை யுறைய வுறையவே.

எ-து. உடம்பிளைத்த பசுக்களைப்பார்த்து மனமிரங்கி யிவற்றின் மெலிவைத் தீர்க்கத் தாவென்று கேட்டுவாங்கி யவற்றை வளர்த்தவன் சிவலோகத்தைச் சேர்ந் துள்ளத்து ஞவகையாக விருப்பான். எ-று. (௱௬௮)

பசுவில் பால்கறக்கு முறையை இரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

சேர்வ ராதி சிவபுரங் கன்றினை
யார மாத மிரண்டு மருத்தியே

நீரின் வாய்நுரை நீக்கிக் கறந்திறைத்
தீர நெஞ்சமொ டாட்டின ரெண்ணியே.

எ-து. கன்றுகட் கிரண்டொரு தம் வயிறுநிறையப் பால் குடிக்கும்படி செய்து பின்பு அவற்றின் வாய் நுரைகளை நீராற்கழுவிப் பசுவின்பாலைக் கறந்து சிவபெருமானுக்குக் கருதி யன்பான நெஞ்சோடும் அபிடேகஞ் செய்தோர் சிவலோகத்திற் சேர்வார்கள். எ-று. (௱௬௯)

ஆரக் கன்று மருந்தி முலையினைத்
தீரும் வேலை தெரிந்து கறந்தவர்
சேரு மெல்லைமுன் சொன்ன சிவபுரந்
தீரு மெல்லையு மண்ணிது திண்ணமே.

எ-து. கன்றுகளுந் தாய் முலைப்பாலை வயிறு நிறையக் குடித்து நீங்குங்காலந் தெரிந்து அப்பாலைக் கறந்தவர்க ளுறுதியாகச் சேருமிடமியாதெனின் முற்கூறிய சிவலோகமே; நீங்குமிடமு மியாதெனி னிம் மண்ணுலகே. எ-று. (௱௭௰)

கன்றுக்கு வயிறுநிறைய வூட்டாது பால்கறந்தவர் அடையுந்
தீங்கை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

உற்ற வாசையிற் கன்றுக் கொறுப்புறப்
பற்றி யான்முலைப் பால்கொளும் பாதகர்
முற்றித் தீயுத ரத்தினு மூளவே
பற்று மின்று நரகிற் படிவரே.

எ-து. உள்ளத்திற் பொருந்திய ஆசையாற் கன்றுக்குப் பால் குறைவாகப் பசுவைப்பிடித் தப்பாலைக் கறந்துகொள்ளும் பாதகர், வயிற்றினின் றும் பசியாகிய தீ மிகுந்து மூளப் பற்றொன்று மில்லையாய் நரகின் முழுகுவர். எ-று. (௱௭௧)

தொலைந்த பின்னுந் தொடுத்த வுடலெலாங்
கலந்து நின்று கடும்பசி காயவே
யுலர்ந்து மானிட யோனியி லுற்பவித்
திலங்க வோடு மிரப்ப ரிளைப்பரே.

உ-து. நரகத்தின் முழுகுதல் தொலைந்தபின்பு மப்பாவத்தாற் றொடுத்து வருகின்ற சரீரங்களெல்லாங் கடுமையான பசிப்பிணி சேர்ந்து நின்று வருத்த அதனால் வாடிப் பின்பு மானிடயோனியிற் பிறந்து வீடுதோறு மிரப்பார்கள்;இரந்தும் பிச்சை கிடையாததனா லுடல் மெலிவார்கள். எ-று.

ஆன்கொட்டிலிற் புகுஞ் சண்டாளர்தன்மை யுணர்த்துகின்றார்.

புலைய ரானினச் சாலைபுட் புக்கிடி
லெலையில் கால மெரிநிர யக்குழி

தொலைவி லாத்துயர் தொக்குச் சுழல்வர்க
ளிலைய வர்க்குப் பரிகார மெண்ணிலே.

எ-து. சண்டாளர்கள் ஆனினங்களைக் கட்டுங் கொட்டிலுட் புகுந்தா லளவில்லாதகாலந் தொலைவில்லாத துன்பங்களுடன்கூடித் தீக்குழி நரகத்திற்கலங்குவார்கள் கருதுங்கா லவர்களுக்குப் பரிகாரங்களேயில்லை. எ-று.

பகைவர் கவரும் பசுக்களைக் காப்பார் தன்மை யுணர்த்துகின்றார்.

ஆக்க ளைக்கவ ரின்னடை யார்சென்று
காக்க காக்க வரிதெனிற் றம்முயிர்
போக்கி யும்புக ழாக்கிய புண்ணியர்
தேக்கு நீர்ச்சடை யான்புரஞ் சேர்வரே.

எ-து. பகைவர்கள்வந்து பசுக்களைத் திருடவரின் விரைந்து காக்க. அதுவு மரிதானாற் றங்களுயிரைக் கொடுத்தானாலுங் கீர்த்தியை யாக்கின புண்ணியர் நிறைந்த கங்கையணிந்த சடாமகுடத்தையுடைய எழுந்தருளிய சிவலோகத்திற் சேர்வார்கள். எ-று. (௱எ௪)

புண்ணியபேதங்களின் வகையும் பலமும் பதினேழு
செய்யுளாலுணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இருவிதந் தரும நீதி யெனவறிந் திடுக யார்க்கு
மொருவிதம் புலன்க ளைந்து மொடுக்கியு ளரனை யுன்னல்
பரிவுடன் பசுக்க டம்மைப் பசுபதிக் கன்பர் தம்மை
யுரிமையிற் புரிக பூசை யெனுமிஃ தொழிந்த வொன்றே.

எ-து. யார்க்குந் தருமத்தின் முறைமை யிரண்டுவகையென் றறிக. அவற்றுளைம்புலன்களையு முள்ளத்தொடுக்கிச் சிவபெருமானைத் தியானஞ் செய்த லொருவகை, அன்புட னுக்களையும் பசுபதியி னடியார்களையும் விதிப்படி பூசைசெய்கவென்று சொல்லு மிது மற்றொருவகை. எ-று. (௱எ௫)

ஆதலாற் பசுக்க டம்மை யரனடிக் கன்பர் தம்மைக்
காதலாற் புரிக பூசை கடுவினை களைய வெண்ணின்
மீதுல கடைய வேண்டின் மிடியரு முடலி னாலு
மேதெனு மியன்ற தொன்றை யியற்றுதல் கடனே யென்றும்.

எ-து. வகையாகுதலாற் கடுமையான தீவினைகளை நீக்கக் கருதினாலுமேலுலகைச் சேரவிரும்பினாலும் பசுக்களுக்குஞ் சிவனடியார்களுக்கு மாதாவாற் பூசைசெய்க. தரித்திரர்களுந் தங்கள் ஆக்கையினாலும் யாதாயினும் பொருந்திய தொருபணியை எக்காலமுஞ்செய்தல் கடன். எ-று. (௱எ௬)

பூசையோ யெனு மீசன் பொலன்கழ லடியிற் பீந்தி
நிலையோ லவர்க்குப் பூசை நிகழ்த்துத னெறியே யென்றுந்

தலையரே யேனு மீசன் றமலைத் தாளி னேச
மிலரெனி னியற்றும் பூசைப் பலந்தரு வாரே யாரே.

எ-து. சண்டாளராலுஞ் சிவபெருமானது பொன்னூற்செய்த வீரக்கழலை யணிந்த பாதத்திற் புத்தியை நிறுத்துந் தன்மையராலவர்க்குப் பூசைசெய்த லொழுங்கேயென்க. எக்காலமு முதன்மையான சாதியராலும் அச்சிவபெருமானது தாமரைமலர்போன்ற பாதத்தில் அன்பிலரா னவர்க்குச் செய்யும் பூசாபலனை யார்தருவா ரொருவருமின்று. எ-று.

திருப்பதி வணங்க வென்று சென்றுறுஞ் சிவனே சர்க்கு
மருத்தியாற் கங்கை யாதி யாடிட காதி னோர்க்கு
மருத்துக வன்ன பான மவரவர்க் குபயோ கங்கள்
பொருத்துக வூனைப் போக்கிச் சிவபுரம் புகுவார் தாமே.

எ-து. ஊனுடலை நீக்கிச் சிவலோகத்திற் சேரும் எண்ணமுடையார் திருப்பதியாகிய சிவாலயங்களை வணங்கவேண்டு மென்று சென்றுபொருந்துஞ் சிவனடியார்களுக்கும், கங்கை முதலிய தீர்த்தங்களி லாசையுடன் முழுகச் செல்லுகிறவர்க்கும் அமுது முதலிய உணவுகளைப் புசிப்பிக்க; மற்றும் வேண்டும் பொருளும் பொருத்துக. எ-று. (௭௮)

கலிவிருத்தம்.

பிரம சாரியைப் போற மோம்பிடுங்
கிருக சாரியை யூட்டிய கேண்மையர்
விரவி யேசிவ லோகம் விரும்பிய
பரம போக மனைத்தும் பயில்வரே.

எ-து. பிரமசரிய விரத மனுட்டிப்போனையும் பெரிய தருமங்களைக் காத்தல் செய்யு மில்வாழ்வோனையும் அன்ன முதலியவற்றை யுண்ணும்படி செய்த வுரிமையை யுடையவர் சிவலோகத்தைச் சேர்ந்து தாம் விரும்பிய மேலான போகங்களை யெல்லாம் பொருந்துவர். எ-று. (௭௯)

வனத்தின் வைகிய மாதவ ரங்கையிற்
புனத்திற் காய்கனி யாதி புரிவொடுந்
தினக்கொ டுத்தவர் சேர்ந்து சிவபுர
மனத்தில் வேண்டும் விமானத்தில் வாழ்வரே.

எ-து. காட்டிற் றங்கிய மாதவராகிய வானப்பிரத்தரது அழகிய கையிற் காட்டிலுண்டான காய்கனி முதலியவைகளை யன்பாய்ப் புசிக்கக் கொடுத்தவர்கள் சிவலோகத்தைச்சேர்ந்து மனத்தில் விரும்பும் விமானங்களில் வாழ்வார்கள். எ-று. (௮௰)

பரிந்து பாசு பதரையும் பண்புற
வருந்து வித்தவர் தாமு மான்புரி

பொருந்தி வாழ்வர் புரிவுடன் பிச்சையை
யருந்த மாவிர தர்க்களித் தாருமே.

எ-து. பாசுபத வேடத்தரையும் பண்பாக விரும்பித் திருவமு துண்ணும்படி செய்தவர்களும் மாவிரத வேடத்தருக்கு விரும்பித் திருவமுதுண்ணக் கொடுத்தவர்களும் சிவலோகத்தைச் சேர்ந்து வாழ்வார்கள். எ-று.

பாசுபதம், மாவிரதம் என்பன—அகச்சமைய மாறினு ளமைந்தன என்க. (௱௮௧)

திகழும் வெண்பிறைச் செஞ்சடைத் தேவர்க்குக்
கமழக் கல்ல வட்டமிடு வார்களை
மகிழ வூட்டிட வல்லவர் தாமுமண்
புகழ வேசிவ லோகம் புகுவரே.

எ-து. ஒளிவிடும் வெண்மதியை யணிந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானுக்கு வாசனை யுண்டாகக் கல்லவட மிடுவோர்களை யுள்ள மகிழும் வண்ணந் திருவமுது செய்விக்க வல்லவர்களும் மண்ணுலகோர் புகழச் சிவலோகத்தைச் சேர்வார்கள். எ-று. (௱௮௨)

அனக ரான வருந்தவர் கையுறக்
கனக பாத்திரங் காதலொ டுந்தவ
ரனக லோகத் தமர்வர்கள் கற்பமுஞ்
செனக னுக்கொரு கோடி செறியவே.

எ-து. பாவச் செய்கை யில்லாத அருந்தவத்தர் கையிற் பொருந்தப் பொற்பாத்திரத்தை யன்புடனே கொடுத்தவர்கள் பிதாவுடன் ஒருகோடி கற்பகாலம் வரையும் சிவலோகத்தி லிருப்பார்கள். எ-று. (௱௮௩)

இத்த கைத்த பலத்தினை யெய்துவர்
பத்த ரங்கைப் பரிக்கப் பலாசுறு
பத்தி ரத்திற் புடகம் பரிவுற
வைத்த வுத்தமர் தாமு மகிழவே.

எ-து. சிவபத்தர்கள் அழகிய கையிற் றங்கப் பலாச விலையினாற் பாத்திரஞ் சமைத்து அன்புடன் கொடுத்த வுத்தமர்கள் மேற் சொல்லுந் தகுதியான பலத்தை மகிழும்படி பெறுவார்கள். எ-று. (௱௮௪)

நாத்த ழும்புற நாதனை நாடொறு
மேத்து வார்கரத் தேந்திடத் தாமிர
பாத்தி ரங்கொடுத் தார்முனைப் பாவமுந்
தீர்த்துச் செஞ்சடை யான்புரி சேர்வரே.

எ-து. நாள்தோறும் நாவில் தழும்பு பொருந்தும் வண்ணஞ் சிவபெருமானைத் துதிக்கு மடியார் கையி லேந்தச் செப்புப் பாத்திரங்களைக் கொடுத்

தவர்கள் முற்பிறப்பி லீட்டிய பாவங்க‌ளீங்கி அச் சிவலோகத்திற் சேர்வா ர்கள். எ-று. (௱அ௫)

தெத்தி யோதனம் பாத்திரஞ் சேர்த்தியே
யுத்த மத்தவர் கையி னுதவினர்
வித்த கன்புரி வாழ்வர் விபுதர்க்கு
வைத்த கோடி வருடமும் வாய்க்கவே.

எ-து. தயி ரன்னத்தைப் பாத்திரத்தில் வைத்து முதன்மையான சிவனடியார் கையிற் கொடுத்தவர்கள் தேவருக்கு நியமித்த கோடிவருடம் வரையும் அச்சிவலோகத்தில் வாழ்வார்கள். எ-று. (௱அ௬)

முற்றக் கால முறையுறப் பாரதம்
பற்றிப் பார்த்திவ ராய்ப்பசு பாசமு
மற்றுச் சங்கர னோடமர் வாரவர்
பெற்ற பேறது பேசப் படுவதே.

எ-து. கோடி தேவவருட முறைமையாக முடியப் பாரத கண்டத்தி லரசனாய்ப் பிறந் தாண்டுள்ள போகம் புசித்துப் பசுபாசமுங் கழன்று சிவபெருமானுடன் கூடி வாழ்வார்கள், அவர்கள் பெற்றபேறு பேசுந்தரம ன்று. எ-று. (௱அ௭)

இந்த கைத்த பலத்தினை யெய்துவர்
முந்த னைப்பசு பாச முருக்கியைச்
சித்தம் வைத்தவ ரங்கைச் செறித்தவர்
சுத்த தோய கரகந் துலங்கவே.

எ-து. அநாதிமலமுத்தனும் பசுவினதுபாசங்களைக் கெடுக்கப் பட்ட வனுமாகியபரமனைச்சித்தத்திற் றியானித்த வடியார்க ளழகிய கையிற் றூ யதான நீர்க்கமண்டலம் கொடுத்தவர்க ளித்தன்மையான முற்கூறிய பலத் தைப் பெறுவார்கள். எ-று. (௱அ௮)

ஊட்டி னார்க ளுதவிய தேதெனுங்
காட்டு ளாடி கழறங் கருத்தினு
ளோட்டி னைத் தமைநலி யும்வினை
யோட்டி யேசிவ லோகத் துறைவரே.

எ-து. சுடலையி லாடுஞ் சிவபெருமானது பாதங்களைத் தங்கள் கரு த்தில் இருத்தினோர்க்குத் தம்பா லமைந்த பொருள் யாதொன்றேனும் புசிப் பித்தவர்கள் தங்களைவருத்துந் தீவினைகளை யோட்டிச் சிவலோகத்துள் வாழ் வார்கள். எ-று. (௱அ௯)

மாத வர்க்குற வற்கலை யீந்தவர்
சீத வாரித வாடையுஞ் சேர்த்தினர்

கோதி லாவசி னுதியுங் கோல்வளை
மாதொர் பாகன் புரத்தினுள் வாழ்ந்தபின்.

எ-து. மாதவத்தினர்க்குப் பொருந்த மரவுரி கொடுத்தவர்களும், குளிர்ச்சியினை யுடைய மேகம் போன்ற வெண்மையான வாடைகளையு மான்றோல் முதலியவைகளையுங் கொடுத்தவர்களும், தேவி பாகனாகிய சிவபெருமானுடையவுலகில் வாழ்வார்கள்; மேற்கூறியபடி வாழ்ந்தபின்பு. எ-று. (௱௰)

நண்ணிப் பாரத நான்மறை யாறங்க
மெண்ணிப் பாச விருளறத் தேசிகன்
கண்ணி னாற்கரு தற்கரி தாகிய
வுண்மை தன்னொ டிரண்டற வொன்றுவார்.

எ-து. பாரதகண்டத்தில் தோன்றி நான்கு வேதமும் ஆறுசாத்திரமுங் கற்றொழுகி யாசிரிய னதருட்கண்ணா லிருவினைப் பாசமாகிய மயக்கங் கெட நினைத்தற் கரிய வுண்மையைச் சிவத்துட னிரண்டறப் பொருந்துவார்கள். எ-று. (௱௰௧)

மகாசிவலோக முதலியன விருக்குந் தானமு மவற்றை யடையும்
தன்மை முதலியனவும் பதினொரு செய்யுளா
லுணர்த்துகின்றார்.

ஆக்க ளெல்லை யறைந்தனு பாடணத்
தாக்க ளைந்து மமலன் றிருமுடிக்
காக்கு மன்பர்க்கும் பூசை யறைந்தினி
மீக்கு ணச்சிவ லோகம் விளம்புவாம்.

எ-து. பசுக்களுறையு மெல்லையைச் சொல்லிப் பின்பு இனிமையான வசனத்தால் அப்பசுக்களிடத் துண்டாகிய கௌவியங்க ளைந்தையும் நிருமலனது திருமுடிக்கு அபிடேகஞ்செய்யும் அடியார்களுக்குச் செய்யும் பூசையைச்சொல்லி யினி மேலான தன்மையை யுடைய மகா சிவலோகத்தைச் சொல்லுவாம். எ-று. (௱௰௨)

ஐந்து பூதத்து மற்றகங் காரத்தும்
புந்தி தன்னிலு மண்டம் பொருந்திடும்
முந்திச் சொன்ன முறையுறு மூலத்தும்
பந்தித் தெட்டு முறையுறும் பாங்கினால்.

எ-து. நில முதலாகிய ஐந்து பூதத்திலும், அதற்குமேலாகிய வகங்கார தத்துவத்திலும், புத்தி தத்துவத்திலும், அண்ட மொன்றுக்கொன்று விரிவுயர்ச்சி பொருந்தும், அவையல்லாமல் முன்சொன்ன முறையிற் பிரகிருதி தத்துவத்திலும் அண்டங்கள் பொருந்தும், ஆகவிப் பகுப்பிற் சேர்ந்து எட்டுவிதமான அண்டங்களும் பொருந்தும். எ-று.

அவையாவன பூமியிற் காலாக்கினி முதலான புவனம் நூற்றெட்டு. அப்புவில் அமரேசன் முதலிய குய்யாட்டகரும் தேயுவில் அரிச்சந்திரன் முதலிய குய்யாட்டகரும், வாயுவில் தேயைமுதலிய குய்யாட்டகரும், ஆகாசத்தில் வத்திரபாதாதி முதலிய பவித்திராட்டகரும், அகங்கார தத்துவத்திற் சகலண்டாதி முதலிய தானுவாட்டகரும், புத்தியிற் பைசாசியான அட்டகரும், பிரகிருதியில் அகிருதாதியான புவனட்டகரும், ஆகத் தத்துவமெட்டிலும் புவனாதிபர்களும் நூற்றறுபத்து நால்வரிருப்பார்கள். இப்படி அங்கங்கே யநேககோடி அண்டங்க ளுண்டெனவறிக. (௲௯௩)

பேசு மூலப் பிரகிரு திக்குளே
மூசு மண்ட கடாக முகட்டினுள்
ஈசன் றேவி யிளைய னரியயன்
வாச தேசமோ ராந்தும் வகுப்பமே.

எ-து. அசுத்தமாயா காரணமாகிய மூலப்பகுதி யிடத்தில் நெருங்கியிருக்கின்ற அண்டகடாக முகட்டை அடுத்து அதனுள்பிரமன் முதலிய ஐவர்வசிக்கும் புரத்தை மேற்சொல்வாம். எ-று. (௲௯௪)

காட வண்ட கடாக முகட்டினுட்
கூடும் வேதற்குக் கோயி லதற்குமேற்
கூடு மாலுக்குங் கோயி லதற்குமேற்
கூடும் வென்றிக் குமாற்குக் கோயிலே.

எ-து. அம்மூலப்பகுதிக் கிடமாய வண்டகடாகத்தைத் தீண்டியிருக்கின்ற அகிருதைமுதலிய புவனட்டகத்துக்குமேற்பதுமராகநிறம்போன்ற பிரமலோக மிருக்கும், அதற்குமேல் மாயனுக் கிந்திரநீலநிறம்போன்று மகத்தாகியபோகங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றவிட்டுணுலோக மிருக்கும், அதற்குமேல் வெற்றிப்பாட்டையுடைய குமாரசுவாமிக்கு மூத்தின் பிரபைபோன்றுசிறந்தபோகங்களுடனுங் கூடியிருக்கின்ற கௌமாரபுரியிருக்கும். எ-று. (௲௯௫)

அதற்கு மேலுமை யாள்புர மற்புத
மதற்கு மேற்சிவ லோகமென் றுய்கவே
யதற்கு றும்வளம் வாக்கி னடங்கிடா
அதற்குப் புக்கவர் மீள்பவ ரல்லரே.

எ-து. அக் கௌமார புரிக்குமேல் உமாதேவியினுடைய புரி பலவகைஆச்சரியத்துடன் பொருந்தும், அதற்கு மேற்கோடி சூரியப் பிரகாசம் போன்று அளவிடப்படாத வளத்தையு முடைத்தா யுவமையில்லாததாய் அரிய விரணியகர்ப்பன், அட்டவசுக்கள், உருத்திரர்கள், சூரியர் முதலாயினர்களாலே சேவிக்கப்பட்டுக்கொண்டு சிகண்ட பரமேசுர னெழுந்தருளியிருக்கு மகாசிவலோகம் பொருந்தும், அச் சிவலோகத்தின் வளத்தை அள

விட் டொழிக்கப்படாது. அப் பிரகிருதிச் சிவலோகத்தை ஞானயோகத்தி ஞலே அடைந்தவர்கள் மீளார்கள். எ-று.

சிலகாலம் ஞானநிட்டையை அனுட்டித்திருந்தவர்கள் உமாதேவியு லகத்திலே பதிஞயிரங் கற்பமடைந்து அங்குள்ள போகம்புசித்துத் தொலை ந்தவாறே பிருதிவிச் சிவலோகம் வந்து பின்பு கிரமத்தில் வந்து பூமியை அடைந்து சிவயோகியா யச் சரீரமொழிந்தவாறே மேலைச் சிவலோகத்தி லுண்டான போகம் புசித்திருப்பர்களென்று அறிக. (௱௬௬)

விடுத்து வாழ்க்கையை மெய்யுணர்ந் தையமுங்
கொடுக்கு மிற்றொறுஞ் கொண்டுண்டு கோவணா
முடிப்புப் பாரி லுறவு பகையினை
கெடுத்த கேள்விய ரவ்விடங் கிட்டுவார்.

எ-து. இல்லறவாழ்க்கையை நீங்கி மெய்ப்பொருளையுணர்ந் தில்ல ந்தோறுங் கொடுக்கும் பிச்சையையு மேற்றுண்டு கோவணத்தை யுடுத்துப் பூமியிலுள்ள பொருள்களி லுறவையும் பகையையுங் கெடுத்த கேள்வியினை யுடையரோ அச்சிவலோகத்திற் பொருந்தி வாழ்வார்கள். எ-று.

தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. (௱௬௭)

முற்றக் காலமு முன்னுடல் பின்னிடப்
பெற்று மேற்பதம் பெற்றது மற்றிட
வெற்றிப் பாச விருள்வலி யீடறத்
துற்று வார்கள் சொரூப சுகோதயம்.

எ-து. அப் பிரகிருதி சிவலோகத்திலிருந்து முந்திய பிரளயமளவாக வாண்டுள்ள போகங்களைத் திளைத்து அப்பிரகிருதி சம்பந்தமான சரீரத்தை விட்டு மேற்பதமான சுத்த தத்துவ புவனங்களையடைந்திருந்து ஆண்டுள்ள போகம் புசித்துத் தொலைந்தவாறே மகா சங்கார காலத்திலேயயிந்தவபா சமாகிய தேகத்தையும் விட்டு வெற்றிப்பாடுடைய வாணவாதிகளின் சத் திகெடப் பரமேசுரன் றிருக்கண்சாத்தி யருள முத்திபதமாகியசிவனுடைய சீபாதத்தை யடைந்திருந்து தங்களிடத் துண்டாகிய சிவனந்தானுபூதியிற் றிளைப்பார்கள். எ-று.

திரிசிரபுரம்-பண்-நட்டராகம்.

கோலமாகரி யுரித்தவ ரரவொடு மேனக் கொம் பிளவாமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய சங்கரனார் தம்மை
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந் தொழவினை நில்லாவே.

என்னும் ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த திருக்கடைக் காப் பானும், (௱௬௮)

சித்தியார் சுபக்ஷம் எட்டாஞ் சூத்திரம் கவி—உ௫.

தானம் யாகந் தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்தி விரதங் கன்ம யோகங்கள் சரித்தோ, ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ ரீசன் யோகக் கிரியாசரியையினின் முயன்றோ, ரூனமிலாமுத்திபதம்பெற் றுலக மெல்லா மொடுங்கும்போ தரன்முனிலா தொளியி னுற்பவித்து, ஞானநெறி யடைந்திடுவர் சிவனையங்கு நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றவோ, என்பதனானுமுணர்க.

ஈச னேவ விசைத்த வியற்பொருட்
டேசு ணர்ந்த வருஞ்செறி வாரங்க
வாச கத்தை நமுன் சொன்ன வடிவுற
வாசை முற்று மறுத்த வளவிலே.

எ-து. எல்லா வாசைகளையுங் கெடுத்தகாலத்தி லேறியதாகு மிவை யென்று சிவபெருமா னருளிச்செய்ய அதனால் யான்சொல்லிய அவ்வாகமப் பொருட் டெளிவை அறிந்தவரும் அவ்வாகம வாக்கியத்தின் முன்சொல்லிய சாரூபம்பொருந்த அச்சிவலோகத்தில் வாழ்வார்கள். எ—று.

ஐகாரம்-சாரிகை. (ஈகூகூ)

சிறந்த தேசத்துச் சித்திரை மாதமுன்
பிறந்த வாரத்துட் பெற்றுச் சிரத்தையு
நிறைந்த நெய்யினை நின்மலர்க் காட்டிமுன்
கறந்த பான்முதன் மற்றுங் களிப்பொடே.

எ-து. மூர்த்தி விசேடமுதலிய முச்சிறப்பும் பெற்ற தலங்களிற் சித்திரைமாதம் ஆதிவாரத்தில் அன்பையு முள்ளத்தமைத்துக் களிப்புடன் நின்மலனை சிவபெருமானுக்கு முன்கறந்த பால் வாசனைநிறைந்த நெய் முதலிய கௌவியங்களையும் மற்றுந் திரவியங்களையும் அபிடேகஞ்செய்து.

செய்து மற்ற வினைகளுஞ் செய்தபின்
துய்ய பாயத மாகிய சொன்றியு
மும்ப வாயிரம் பத்தரை யூட்டியுண்
மைய நீர்ந்த பதின்மரும் வாய்க்கவே.

எ-து. மற்ற உபசாரக் கிரியைகளையுஞ்செய்து அதற்குப் பின்புமுள்ளத்தின் மயக்கநீங்கின ஆயிரம் பத்தர்களுக்கு மாட்சிமையாக பரிசுத்தமான பாயச முதலிய வன்னங்களையும் படைத்தருத்தி. எ-று.

ஆயிரம் என்றது இங்கு பலவையெனக் குறித்து நின்ற தென்க.

அற்றை வாரத் தானுக்கோ ராயிரம்
பெற்றம் பாதி கருவுட் பிறங்கவே
வெற்றி வெள்விடை பத்தொடும் விட்டவர்
பற்று வாரச் சிவபுரம் பாங்கொடே.

எ-து. அவ் வாதிவாரத்தில் வெற்றியினையுடைய வெண்மையான வானேறு பத்துடன் ஆயிரம் பசுக்களைப் பாதிக் கருப்பம் வயிற்றுள் விளங் கும்படி சிவபெருமானுக்குத் தானங்கொடுத்தவர்கள் உரிமையாகச் சிவலோ கத்தைப் பெறுவார்கள். எ-று. (௨௱௨)

ஆக்களின் மகிமையுணர்த்துகின்றார்.

ஆக்கண் முத்தி யடைவிக்குங் காரண
மாக்க ளாதலி னற்றுணை யாயின
வாக்க ளாக்கையி னோயு மறுந்திடு
மாக்க ளேயிரு ணோய்க்கு மவுடதம்.

எ-து பசுக்களே முத்தியைச் சேரும்படிசெய்யுங் காரணமாகும். பசு க்களே பிறந் திறக்கு முடலினோயைக்கெடுத்தல் செய்யும். பசுக்களே மயக் கத்தால் வரு மிருவினை நோய்க்கு மருந்தாகு மாதலா லப்பசுக்களே சிற்று யிர்க்கு நற்றுணையாயின. எ-று. (௨௱௩)

இதற்குப்பின் இதனைச்சொன்னோமென் றுணர்த்துகின்றார்.

பத்தர் காருக பத்தியர் தாங்களு
முத்தி யெய்தும் வழியு மொழிந்தனஞ்
சித்தந் தன்னைச் சிறந்த பொருடனில்
வைத்த சித்தர் பலத்தை வகுத்தபின்.

எ-து. பத்தியையுடைய வடியார்களுங் காருக பத்தியமாகிய வேதா க்கினியை யுடைய வந்தணரும், சித்தத்தைச் சிறப்பான பரம்பொருளிடத் து வைத்த சித்தர்களும் பொருந்தும் பலத்தை வகுத்துச் சொல்லிய பின்பு முத்தியைச் சேரும் வழியுஞ் சொன்னோம். எ-று. (௨௱௪)

ஞானிகள் ஒழுக்கந் தவறினு மிழுக்குறாதொன் றுணர்த்துகின்றார்.

மெய்யு ணர்ந்த சிவாகம வேதகர்
கையி ழந்திடிற் போகக் கருத்தினு
லைய மின்றி யவரு மடைவாங்
குய்வர் மேலை யுலக மொடுங்குநாள்.

எ-து. சிவாகமங்களைக் கற் றுண்மை யறிந்த ஞானிக ளொருகாற் போகத்தி லிச்சை வைத்த கருத்தினு லொழுக்கந் தவறினுஞ் சந்தேக மில் லாம லந்த ஞானிகளு மப்போகத்தை யனுபவிப்பார்கள். அது தொலையு நாண் மேலைச் சிவலோகத்தைப் பொருந்தி யுய்வார்கள். எ-று. (௨௱௫)

ஒரு பகற் பொழுது மெய்ப்பொருளைத் தியானஞ் செய்தோர்
பலத்தை யிரண்டு செய்யுளா லுணர்த்துகின்றார்.

உன்னி னொரு மொருபக லுண்மையை
யன்னை யாளும் புரத்தை யடைந்ததன்
மன்னு போக விதத்தை மருவியே
துன்னு கற்ப வயுதந் தொலையவே.

எ-து. ஒருநாள் பகற்பொழுது மெய்ப்பொருளைத் தியானஞ்செய்தவர்களும் உலகமாதா வாண்டருளுஞ் சத்தியுலகத்தைச் சேர்ந்த தனது போகப்பகுப்பை நெருங்கிய பதினுயிரம் பிரமகற்பம் வரையும் புசித்துத் தொலைந்துபோகப் பின்பு. எ-று. (உ௱௬)

குமரன் வாழ்திருக் கோயி ஞெடங்கியே
யமர்வர் பொன்னச லாந்தத் தமர்ந்தபி
னிமையத் தென்றிசைப் பாரத மெய்துவர்
தமையு ணர்ந்தம லன்பதஞ் சாரவே.

எ-து. குமாரக்கடவுள் வாழுந் திருக்கோயிலாகிய கந்தவுலகு முதல் மேருவரை யந்தமுண்டான போகங்களை அங்கமர்ந்து புசித்தபின் தம்மையறிந்து நின்மலஞன தலைவன் சிபாதங்களைச் சார்ந்து பொருந்த விமயகிரிக்குத் தென்றிசையிலுள்ள பாரதகண்டத்திற் பிறப்பார்கள். எ-று. (உ௱௭)

இந்நூலைப் படித்தவரும் அவருடன் கூடினவரும் பெறும்
பலத்தை இரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

கரும யோகத்தைக் கற்பனை நீங்கிய
பரம யோகத்தைப் பாவ விதத்தினைத்
தரும பேதத்தைப் பேற்றினைச் சாற்றுமித்
தரும் வுத்தரங் கற்றவர் தாமுமே.

எ-து. கருமயோகங்களையுங் கற்பனையில்லாத பரமயோகங்களையும் பாவத்திறங்களையும் புண்ணியத்திறங்களையும் அவற்றின் பலன்களையுங் கூறும் இச்சிவதருமோத்தர நூலைப் படித்தவர்களும். எ-று. (உ௱௮)

விட்டு முன்னைய தீய வினையினை
யட்ட மூர்த்தி யமருமந் தப்புரத்
திட்ட போக விதத்தொ டிருப்பர்க
ளொட்டி னுரு மவருட னுண்மையே.

ஏ-து. அவர்களுடன் கூடினவர்களும், மெய்யாக முற்பிறப்புகடோறும் ஈட்டிய தீவினைகளைக் கெடுத் தெட்டுருவாகி எழுந்தருளுஞ் சிவபெருமான தழகிய உலகத்தி லமைத்த போகப்பகுப்புடன் வாழ்ந்திருப்பார்கள்.

அட்டமூர்த்தி என்றது 'எட்டுமூர்த்தியாய் நின் றியலுந் தொழில்' என ஆளுடைய வாசும் அருளிச்செய்வதனுனு மறிக. (உ௱௯)

இந்நூல்விதியை அனுட்டித்தவர் முதலியோர் பலத்தை
இரண்டு செய்யுளாலுணர்த்துகின்றார்.

இந்த நான்மறை நீதி யியற்றின
ரந்த நீதி தனையறி வித்தவர்

சிந்தை கூர்தரச் செய்வித்த தெள்ளிய
ரிந்த மூவகை யாருமங் கெய்தியே.

எ-து. இச்சிவதருமோத்தர நூலிற் கூறியபடி நீதிகளைச் செய்யுஞ் சன்மார்க்கரும், அந்நீதிகளை யுலகிலுள்ளோருக் கறிவித்த புலவரும், அதிற் புத்திமிகுந்து புகும்படி செய்வித்த தெள்ளிய வுணர்வினையுடைய வாசிரியருமாகிய மூப்பகுப்பினரும் அச்சிவலோகத்திற் சேர்ந்து. எ-று. (௨௱௰)

அருந்தி யங்குள போக மனைத்தையும்
பிரிந்தி டாதுறப் பேணிய சுற்றமும்
பரிந்த பாசங்கள் பாற்றித் திளைப்பர்க
ளொருங்கு நாளுல கின்புதஞ் சத்தியுள்.

எ-து. விரும்பிய சுற்றத்தார்களுந் தன்னைப் பிரியாமற் பொருந்த அச்சிவலோகத்திலுள்ள எல்லாப் போகங்களையும் புசித்து தம்மை விடாமற் பற்றிய பாசங்களைக்கெடுத் தெல்லா வுலகமு மொருங்குசேரு நாற் சிவசத்தியிலுண்டாரனப்ப தெரிசனமாகிய வின்பத்தையனுபவிப்பார்கள். எ-று.

இந்நூலைச் சிவதீர்த்தக்கரையிற் படிப்பித்தோர்
பலத்தையுணர்த்துகின்றார்.

அருத்த மீந்து மமலன் றிருவெலைத்
திருக்கு ளத்துமொய்த் தீர்த்தத்தி னுடொறுந்
தெரித்த விந்தச் சிவதரு மோத்தரம்
விரிப்பிப் பார்களு முற்பல மேவுவார்.

எ-து, பொன்னைக் கொடுத்து நிருமலனது சிவாலயத்திருவெல்லைக்குள் இருக்குந்திருக்குளத்தில் அழகார்ந்த கரையிற் றினந்தோறும் யாந்தெரிவித்த இச்சிவதருமோத்தர நூலைவிரித்து அருத்தஞ் சொல்லும்படி செய்விப்பவர்களு முற்கூறிய பலத்தைப் பொருந்துவார்கள். எ-று.

அருத்தமீந்து மென்றவும்மை-நிலமுதலியவற்றைக் கொடுத்துமென்க.

இந்நூல் வாசித்து முடிக்குந் தன்மையை
நான்கு செய்யுளாலுணர்த்துகின்றார்.

அந்தந் தன்னி லவனி தலத்துக்கு
நந்த நன்மைக ளுடி நவிற்றுக
பந்த பாசம் பறிக்கும் பரமனைச்
சிந்தை செய்து கதிவிதஞ் செப்பியே.

எ-து. இந்நூல் முடிவுபெறுநாளிற் பூமியிலுள்ளார்க்கு மங்கலங்கள் மேன்மேலும்பெருகத் தெரிந்துசெய்க. அதுவல்லாமல் தொன்றுதொட்டடர்ந்த பாசங்களைக் கெடுக்குஞ் சிவபெருமானைப் பலவகையான துதிகளைக்கூறித் தியானிக்க. எ-று. (௨௰௩)

பேசு நூலியன் முற்றுதல் பெற்றபின்
கோசந் தன்னையு முன்சொன்ன கொள்கையிற்
பூசை சாலப் புரிக பரிவுடன்
வாச மாமல ராதி மலியவே.

எ-து. யாவரும் புகழும் இச்சிவதருமோத்தர நூலினியல்கள் முடிவுபெற்றபின் அந்நூலையும் முன்சிவஞானதான வியலிற்கூறிய விதிப்படி மணம்நிறைந்த மலர்மாலைமுதலியவை பெருகும்படி பூசையைச் சிறப்புமிகச்செய்க. எ-று. (உாயச)

தேச னுக்குமெய்த் தேசிகற்கு மியல்
வாச கற்கு மறையறை வார்கட்கும்
மீச னேசர்க்குங் கால்கணி லார்கட்கும்
பூசை முன்சொன் முறையிற் புரிகவே

எ-து. ஞானவொளியாகிய சிவபெருமானுக்கு முண்மையை உபதேசஞ்செய்யும் ஆசிரியனுக்கும்,இந்நூலிற் பொருளைச்சொல்லும் வாக்கினையுடையோனுக்கும் வேதமுணர்ந்த அந்தணர்க்குஞ் சிவனடியார்கட்குங் கால்கண்முதலிய உறுப்பில்லார்கட்கும் இந்நூல் முடியுங்காலத்தில் முன்சொன்ன விதிப்படி பூசிக்க. எ-று. (உாயரு)

இந்த வாறு புரியி விடரிலை
தந்து நன்மைக ளோடொறு நாடொறு
மந்த ராழ்வ ருயர்வர் மதியுளா
ரந்த மேனுல காள்கையு மாகுமே.

எ-து. இத்தன்மையாகப் பூசைசெய்தாற் றுன்பங்களில்லை. எல்லாநாட்டிலுந் தினந்தோறு மங்களங்கள் பெருகுங் கூரிய புத்தியில்லாதவர் குறைவர் ; கூரிய புத்தியுள்ளவருயர்வர். அதுவல்லாமல் அம்மேலுலகை யாளுந் தன்மையும் பொருந்தும். எ-று. (உாயசு)

ஆகமநூன் முதலியவற்றைப் பூசிப்போரும் பூசியாதோரும்
பெறும்பலனை இரண்டுசெய்யுளா லுணர்த்துகின்றார்.

புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தாத் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நீங்குவ தன்றியுங்
கொத்தை போநிர யக்குழி கூடுவார்.

எ-து. சித்தத்தில் அன்பு மிகுதியாய்ச் சிவாகமநூலையும் ஆசிரியனையும் பூசைசெய்யாதவர்கள் மேற்கூறிய தகுதியான பலனை நீங்குவார்கள். அதுவல்லாமலும் பழுதானபாவிகளைப்போல நரகக்குழியினிடத்திலும் வீழ்வார்கள். எ-று. (உாயஎ)

உம்மை விகாரத்தாற் றொக்கது.

ஆத லாற்புந்த காதி யருச்சனை
சாத லாற்செய்க காமுறு வார்பலம்
வேத னுநர கக்குழி வேண்டிலா
ரேமெ னுந்தம சத்திக் கிசையவே.

எ-து. இத்தன்மையான தான மேலான பலனை விரும்புவோர்களுந் துன்பமிகு நரகக்குழியை விரும்பாதவர்களுந் தங்கள் சத்திக்குப் பொருந்தும் வகை யெவ்வாறாயினும் ஆகமநூல் முதலியவைகட்கு அருச்சனையை யாசையாய்ச் செய்க. எ-று. (௨௱௰௮)

ஆகமநூலை யெழுதுந்தன்மை யுணர்த்துகின்றார்.

வேறு.

அக்கரமொன் றினுக்கொன்று டகப்பணம்வை யாரியன்மு
னக்கரமொன் றினுக்குமிடி யாளன்செம் பாங்காசொன்
றக்கரமொன் றினுக்கவிழொன் றருந்துவிக்க வாசையிலா
னிக்கணக்குத் தமம்பதத்துக் கிடைகடைபாட் டினுக்கியற்றின்.

எ-து. இவ்வாகமநூலை யெழுதவேண்டினாற் பொருளுடையோன் இதையெழுதும் வல்லமையுடைய நல்லோர்பா லொழுத்துக்கொரு பொற்காசாகவும், வறிஞரானோர் எழுத்துக்கொரு செம்புக்காசாகவும், விருப்பற்ற மெய்ஞ்ஞானியோ ரெழுத்துக்கோ ரவிழாகவுங் கொடுத்தும் புசிப்பித்து மெழுதுக. இக்கணக்காற் செய்தலுத்தமம். அதுவல்லாமல் இந்நூலிலொருபதத்துக் கிவ்வாறு கொடுத்தெழுதல் மத்திமம், அதுவல்லாமல் இந்நூற் கவியொன்றுக் கிவ்வாறு கொடுத்தெழுத லதமமாகும். எ-று. (௨௱௰௯)

ஆசிரியன் ஆகமநூலை யறிவிக்குந் தன்மையு மாணாக்கன்
கேட்குந் தன்மையு முணர்த்துகின்றார்.

ஆரியனும் பலன்கருதா தறிவிக்க வாராயுங்
கூரியனு மிதற்கிதுகைம் மாறென்று குறியற்க
மாரியினுக் குண்டோகைம் மாறிந்த வையகத்து
ளாரியனுக் கடிமையலா லாடகங்கைம் மாறாமோ.

எ-து. ஆசிரியனும் ஒருபலத்தைப் பெறவேண்டுமென்று நினையாது சீடனுக்கு ஆகமநூலை உபதேசிக்க. அவ்வுபதேசத்தை ஆராய்ந்து கேட்குங் கூரிய புத்தியையுடையவனும் இவ்வுபதேசத்துக்கிப்பொருளே கைம்மாறென்று குறித்தலையொழிக. மேகத்துக்குக் கைம்மாறு இப் பூமிக்குளுண்டோ அதுபோல ஆசிரியனுக் கடிமையாத லல்லாமல் பொன்னுதவுதல் கைம்மாறாமோ வாகாது. எ-று, (௨௨௰)

இந்நூலியலின் பகுப்புணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பரம தரும முபதேசம் பஞ்ச மகநற் பலகாணந்
தருமங் கரிசு தற்பலங்கள் சாத மறுமை சேடவிதப்

பரம யோகம் பரிகாரம் பசுக்க ளிலவும் பதமுமென
விருமூன் றிருமூன் றியலாகித் தருமோத் தரநூலிலங்கிடுமே.

எ-து. பரமதருமாதியியல், சிவஞானதானவியல், ஐவகையாகவியல், பலவிசிட்டகாரணவியல், சிவதருமவியல், பாவவியல், சுவர்க்கநரகவியல், சனனமரணவியல், சுவர்க்கநரகசேடவியல், சிவஞானயோகவியல், பரிகாரவியல், கோபுரவியல் என்று சொல்லப்பட்ட பன்னிரண்டியலுடன் பொருந்தி இச்சிவதருமோத்தரமென்னும் ஆகமம் விளங்கும். எ-று. (உ௨௧)

முடிந்தது முடித்தலென்னுந் தந்திர வுத்தியா
லுணர்த்துகின்றார்.

கலிவிருத்தம்.

என்றுசுர பிக்குமுறு மெல்லையு மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்யவினை யைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

(உ௨௨)

எ-து. வெளி.

சிவத்துதி நான்கு செய்யுளா லுணர்த்துகின்றார்.

கட்டளைக் கலிப்பா.

மேலை யாரிடர் போக்கிய வில்லனே
விரும்பு வாருள மேவிய வில்லனே
கால னாருயிர் போக்கிய காலனே
களைந்து காப்புல காக்கிய காலனே
யால நீழ லறஞ்சொன்ன வாதியே
யன்ற யன்சிர மொன்றற வாதியே
சூலி நீலியொ டாடிய சோதியே
தொடர்ந்த வெங்கள் பிறப்பறச் சோதியே.

எ-து. அந்தரத்தின்மே லுலவுந் திரிபுராதிகளைக் கெடுத்த மேருவா
கிய வில்லை யுடையவனே, தன்னை விரும்பு மடியவர்க ளுள்ளத்தை யெப்
பொழுதுந் தங்கிய திருக்கோயிலாக வுடையவனே, காலனுயிரைக் கெடுத்த
பாதத்தை யுடையவனே, உலகத்தைக் காத்துச் சங்கரித்து மீண்டு முண்
டாக்குங் காலதத்துவத்தை யுடையவனே, கல்லாலநிழற் கீழிருந்து சனகா
தியருக் கறநூலை யுபதேசித்த வாதியே, அக் காலத்துப் பிரமன் சிர மைந்தி
னு ளொன் றறும்படி வருத்தஞ் செய்தவனே, சூலத்தை யுடையவளாகிய
நீலநிறத்தை யுடையவளாகியு மிருக்கின்ற காளியோடு நடனஞ்செய்த சோ
தியே, தொடர்ச்சியாய் வந்த எங்கள் பிறப் பறும்படி சோதிக்க. எ-று.

சங்கை தீர்த்திட வானவர் தம்மையே
யைய னைய வருந்திய தம்மையே

யங்கி யாகி யளத்தற் கரியனே
  யணுக்கள் செய்யுஞ் செயலிற் கரியனே
பங்க யத்தயன் பாம்பணைப் பள்ளியான்
  பயிலு மெல்லைத் திரிசிராப் பள்ளியா
னெங்கள் பாச மிரிக்கும் விருப்பமே
  யாங்கள் பேரின் பிலங்க விருப்பமே.

எ-து. தேவர்கள் தம்மையடையுமச்சத்தைத் தீர்த்திடவு முமாதேவி மனை நையவு முண்டது அவ்விடமே, அழலுருவாகி யயனு மரியு மளப்பதற் கருமையானவனே, ஆன்மாக்கள் செய்யுங் கன்மங்களுக்குச் சான்முயிருப்பவனே, தாமரையில் வாழும் பிரமனும் பாம்பணையிற் பள்ளிகொள்ளுந் திருமாலும் பணிவிடை செய்யு மெல்லையாகிய திரிசிராப்பள்ளி யென்னுந் திருப்படை வீட்டை யுடையவனே, எங்க ளிருவினைப் பாசங்களைக்கெடுக்கும் விருப்ப முனக்குடைமையால் யாங்கள் நிரதிசயாநந்தத்தி லென்றும் விளங்க விருப்போம். எ-று. (உஉசு)

எனக்குண் மாசை யிரித்த வியலனே
  யியலு மேயமு மான வியலனே
மனத்தி னுலு மதிக்க வரியனே
  மயக்க மன்பர்க் கரிக்கு மரியனே
தனக்குத் தானிணை யான தமியனே
  சசித னைப்பதத் தாலே தமியனே
பனைக்கை யானை யுரித்த பலத்தனே
  பாதஞ் செய்யுந் திருவம் பலத்தனே.

எ-து. என் குற்றத்தை யோட்டிய வியல்பை யுடையவனே, உவமானமும் உவமேயமுமான பொருள் விரிவை யுடையவனே, மனத்தினுலுந் தியானிக்க வருமையானவனே, அன்பர்கள் மயக்கமாகியஆணவ விருளைக் கெடுக்கு ஞானசூரியனே, தனக்குத்தானே யொப்பானவொருவனே, சந்திரனைப் பாதத்தாற் றேய்த்துக் கிரணங்களைப் போக்கிவறுமைப் படுத்தினவனே, பனைபோன்ற புழைக்கையை யுடைய யானையை யுரித்த வலியை யுடையவனே, சீபாதங்களாற் பரதவிதிப்படி நடனஞ் செய்யுந் தில்லைச்சிற்றபல முடையவனே. எ-று.

பாதஞ் செய்யுந் திருவம்பலத்தனே யென்று பாடமாகுல் அடியவர்களுக்குச் சீபாதங்களா லருள் செய்யுஞ் சிறப்பான வழகிய சாயுச்சியத்தை யுடையவனெனக் கூறுக. (உாஉரு)

வஞ்சித்துறை.

காலமே கோலமே—சீலமே பாலமே
மேலபா மேலசீ—மேலகோ மேலகா.

எ - து. முக்காலமென்னும் பொருளே, அழகென்னும் பொருளே, முக்குணமென்னும் பொருளே, மழுவைக் கரத்திலேந்தும் பொருளே, அன்

பான உள்ளத்தின் மேல்வாழும் பொருளே, உபநிடதமாகிய பாவின்மேல் விளங்கும் பொருளே, எல்லாச்சிறப்புகளிலுஞ் சிறப்பான பொருளே, இடபத்தின்மேல் எழுந்தருளும் பொருளே, என்னைக் காக்க. எ-று.

இதனைமாலைமாற்று என்ப. அது ஒருசெய்யுளை யீறுமுதலாக வாசித்தாலும் அச்செய்யுளேயாவது என்க. இதுமிறைக்கவியுள் ஒன்றென்பதைக்

'கோமூத்திரியேகூட சதுக்கமாலைமாற்றே' என்பதனானு முணர்க.

குமரன்றுதி யுணர்த்துகின்றார்.

கலிநிலைத்துறை.

இருவினை யாலே யிருநிதி யூர்பே ரினமேயோ
மருவலர் மாநோய் மரணமெ னுமேவ் வருபேதம்
பரிபுர பாதா பனுவல வேதா பரனேயோ
சரவண சாதா வறுமுக நாதா தணிநீயே.

எ-து. சிலம்பணிந்த பாதங்களை யுடையவனே, ஆகமமும் வேதங்களையு முடையவனே, பரனே, சரவணப்பொய்கையிற் பிறந்தவனே, ஆறுமுகத்தையுடைய நாதனே, இருவினைகளாற் பொருந்திப் பெருஞ்செல்வங்களென்றும் ஊரென்றும் பெயரென்றும் இனங்களென்றும் பகைவரென்றும் பெரியநோயென்றும் மரணமென்றும்வருகின்ற பேதங்களை நீயேபோக்குக.

கலிநிலைத்துறை என்றார் - 'நேரடிநான்காய் நிகழ்வது கலித்துறை' என்பவாகலின்.

அகத்தியர்துதி யுணர்த்துகின்றார்.

விதிதிகழ் வேதா கமவுணர் வாயே வினைதீரக்
கதமுக மாமோ கமுமுக மாயா கருவேயோ
மதகரி பேழ்வாய் வலிமுக மாமா மணிவாழும்
பொதிமலை மீதே புரிமுனி தாளே புகழ்வாமே.

எ-து. மதத்தையுடைய யானையும் பிளந்த வாயையுடைய குரங்குங் காட்டுப் பசுவு மனைமிருகமும் வாழ்கின்ற பொதியமலையில் எழுந்தருளியிருந்து தவஞ்செய்யும்செந்தமிழாசிரியராகிய அகத்தியமுனிவர் பாதத்தையிருவினைதீரவுங் கோபமொழியவும் பெரியமோகமு மாயைக்கருவுங்கெடவும் விதிவிலக்குகள்விளங்கும் வேதாகமத்தி னறிவால் துதிப்பாம். எ-று.

ஏகார வோகாரங்கள்-இசைநிறை. (௨௨௮)

பன்னிரண்டாவது,

## கோபுரவியல்

முற்றிற்று.